தனதந்தன தந்தன தந்தன தனதான.

11. சருவும்படி §வந்தன னிங்கித
மதனின்றிட அம்புலி யுஞ்சுடு
தழல்கொண்டிட மங்கையர் கண்களில் வசமாகிச்
சயிலங்கொளு மன்றல்பொ ருந்திய
பொழிலின்பயில் தென்றலு மொன்றிய
தடவஞ்சுனை துன்றியெ ழுந்திட இருமாவே

*எந்தன், இது என்றன் என்பதன் மரூஉ. †என்றும்படி-எப்போதும் போல். ‡அன்பன்-நக்கீரர். §வந்தனன்-வந்து; முற்றெச்சம்.

இரவும்பக லந்தியு நின்றிடு
குயில்வந்திசை தெந்தென வென்றிட
இருகண்கள்து யின்றிட லின்றியும் அயர்வாகி
இவணெஞ்சு *ப தன்பத னென்றிட
மயல்கொண்டுவ ருந்திய வஞ்சகன்
இனியுன்றன்ம லர்ந்தில கும்பதம் அடைவேனோ
திருவொன்றிவி ளங்கிய †அண்டர்கள்
மனையின்தயி ருண்டவ னெண்டிசை
திகழும்புகழ் கொண்டவன் ‡வண்டமிழ் பயில்வோர்பின்
திரிகின்றவன் மஞ்சுநி றம்புனை
பவன்மிஞ்சுதி றங்கொள வென்றடல்
செயதுங்கமு குந்தன் மகிழ்ந்தருள் மருகோனே
மருவுங்கடல் துந்துமி யுங்குட
முழவங்கள்கு மின்குமி னென்றிட
வளமொன்றிய செந்திலில் வந்தருள் முருகோனே
மதியுங்கதி ரும்புய லுந்தின
‖மறுகும்படி அண்டமி லங்கிட
வளர்கின்றப ரங்கிரி வந்தருள் பெருமாளே (கo)

தனத்தனந் தந்ததான தனத்தனந் தந்ததான
தனத்தனந் தந்ததான தனதான.

12. வரைத்தடங் கொங்கையாலும் வளைப்படுஞ் செய்கையாலும்
மதர்த்திடுங் கொண்டையாலும் §அனைவோரும்

---

*பதன்பதனென்றிட-பதை பதைக்க. †அண்டர்-இடையர்.
‡வண்டமிழ் பயில்வோர்பின் திரிகின்றவன் என்றது,

"கணிவண்ணன் போவென்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டாம்—துணிவொன்றிச
சென்னாப் புலவன்யான் செல்கின்றே னீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்" என்ற திருமழிசையாழ்வார்
பின்சென்றதை. ‖மறுகும்படி - சுழலும்படி. §அனைவோரும் வடுச்
செய்யுந்தொண்டை - பலராலும் வடுப்படுத்தப்படும் கொவ்வைக்கனியிதழ்.

வடுச்செயுந்தொண்டையாலும் *விரைத்திடுங்கொண்டையாலும்
மருட்டிடுஞ் சிந்தைமாதர் வசமாகி
எரிப்படும் பஞ்சுபோல மிகக்கெடுந் தொண்டனேனும்
†இனற்படுந் தொந்தவாரி கரையேற
இசைத்திடுஞ் சந்தபேத மொலித்திடும் தண்டைசூழும்
இணைப்பதம் புண்டரீகம் அருள்வாயே
சுரர்க்குவஞ் சஞ்செய்சூரன் ‡இளக்ரவுஞ் சந்தனோடு
துளக்கெழுந் தண்டகோளம் அளவாகத்
துரத்தியன் றிந்த்ரலோகம் அழித்தவன் சம்ப்ரதாயங்
கெடப்பெருஞ் சண்டவேலை விடுவோனே
செருக்கெழுந் தும்பர்சேனை துளக்கவென் றண்டமூடு
தெழித்திடுஞ் சங்கபாணி மருகோனே
தினைப்புனஞ் சென்றுலாவு குறத்தியின் பம்பராவு
திருப்பரங் குன்றமேவு பெருமாளே. (கக)

தனத்தனந் தந்தன தனத்தனந் தந்தன
தனத்தனந் தந்தன தந்ததான.

13. பொருப்புறுங் கொங்கையர் பொருட்கவர்ந் தொன்றிய
பிணக்கிடுஞ் சண்டிகள் வஞ்சமாதர்
§புயற்குழன் றங்கமழ்‖அறற்குலந் தங்கவிர்
முருக்குவண் செந்துவர் தந்துபோகம்
அருத்திடுஞ் சிங்கியர் தருக்கிடுஞ் செங்கயல்
அறச்சிவந் ¶தங்கையில் அன்புமேவும்
அவர்க்குழன் றங்குழ மறத்தளர்ந் தென்பயன்
அருட்*பதம் பங்கய மன்புறுதே தா
இருத்தணம் பங்கய னலர்க்கணன் சங்கரர்
விதித்†தெணுங் கும்பிடு கந்தவேளே

---

*விரை—மணம். †இனற்படுந்தொந்தவாரி-துன்பப்படுகின்ற வினைத்தொடர்புள்ள பிறவிக்கடல். ‡இள-இளமையாகிய. §புயல்குழன் றங்கம் கமழ் எனப்பிரிக்க. ‖அறல்-கருமணல். ¶கையில் கைப்பொருளில். *பதபங்கயமெனற்பாலது சந்தநோக்கி இயல்பாயிற்று †எணும்-எண்ணும்.

இடுக்கண்உந் துஞ்சமணரைப்பெருந் திண்கழு
மிசைக்கிடுஞ் செந்தமிழ் அங்கவாயா
செருக்குதண் சண்பகவனத்திடங் கொங்கொடு
திறற்செழுஞ் சந்தகில் துன்றிநீடு
தினைப்புனம் பைங்கொடி தனத்துடன் சென்றணை
திருப்பரங் குன்றுறை தம்பிரானே. (கஉ)

தனத்தத் தந்தனந் தனத்தத் தந்தனந்
தனத்தத் தந்தனந் தனதான.

14. நடைக்கைப் பங்கயங் கொடைக்குக் கொண்டல்தண்
டமிழ்க்குத் தஞ்சமென் றுலகோரைத்
தவித்துச் சென்றிரந் துளத்திற் புண்படுந்
தளர்ச்சிப் பம்பரந் தனையூசற்
*கடத்தைத் துன்பமண் சடத்தைத் துஞ்சிடுங்
கலத்தைப் பஞ்சஇந் த்ரியவாழ்வைக்
கணத்திற் சென்றிடந் திருத்தித் தண்டையங்
கழற்குத் தொண்டுகொண் டருள்வாயே
படைக்கப் பங்கயன் துடைக்கச் சங்கரன்
புரக்க†கஞ்சைமன் பணியாகப்
பணித்துத் தம்பயந் தணித்துச் சந்ததம்
பரத்தைக் கொண்டிடுந் தனிவேலா
குடக்குத் தென்‡பரம் பொருப்பிற் றங்குமங்
குலத்திற் கங்கைதன் சிறியோனே
குறப்பொற் கொம்பைமுன் புனத்திற் செங்கரங்
குவித்துக் கும்பிடும்; பெருமாளே.

தந்தனந் தந்தத் தனதான.

15. சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டுகொண் டன்புற் றிடுவேனோ

*கடம்-கயிறு. † கஞ்சைமன்-திருமால். ‡பரம்பொருப்பு-திருப்பரங்கிரி.

*தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் †சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே (கரு)

தனதந்தன தந்தன தந்தன
தனதந்தன தந்தன தந்தன
தனதந்தன தந்தன தந்தன தனதான.

16. கனகந்திரள் கின்றபெ ருங்கிரி
தனில்வந்துத கன்தக னென்றிடு
கதிர்மிஞ்சிய ‡செண்டையெ றிந்திடு கதியோனே
§கடமிஞ்சிய னந்தவி தம்புணர்
கவளந்தனை யுண்டுவ ளர்ந்திடு
கரியின்றுணை யென்றுபி றந்திடு முருகோனே
||பனகந்துயில் கின்றதி றம்புனை
கடல்முன்புக டைந்தப ரம்பரர்
படரும்புய லென்றவ ரன்புகொள் மருகோனே
பலதுன்பமு ழன்றுக லங்கிய
சிறியன்புலை யன்கொலை யன்புரி
பவமின்றுக ழிந்திட வந்தருள் புரிவாயே
அனதன்பெயர் நின்றுரு ளுந்திரி
புரமுந்திரி வென்றிட இன்புடன்
அழலுந்த ×நகுந்திறல் கொண்டவர் புதல்வோனே
அடல்வந்துமு ழங்கியி டும்பறை
டுடுடுண்டுடு டுண்டுடு டுண்டென
அதிர்கின்றிட அண்டநெ ரிந்திட வருசூரர்
மனமுந்தழல் சென்றிட அன்றவர்
உடலுங்குட லுங்கிழி கொண்டுட
மயில் ¶வென்றனில் வந்தருளுங்கன பெரியோனே

---

* தந்தியின் கொம்பு-தெய்வயானை. † சிவை பார்வதி ‡ செண்டை-செண்டாயுதத்தை. § கடம்-மதம். || பனகம்-பன்னகம், பாம்பு. × நகும்-சிரிக்கும். திரிபுரத்தைச் சிரித்தெரித்ததை. ¶ வென்-வெந், முதுகு.

மதியுங்கதி ருந்தட வும்படி
உயர்கின்றவ னங்கள்பொ ருந்திய
வளமொன்றுப ரங்கிரி வந்தருள் பெருமாளே. (கசு)

தானன தந்தன தந்தனந் தந்தன
தானன தந்தன தந்தனந் தந்தன
தானன தந்தன தந்தனந் தந்தன தனதான.

17. காதட ருங்கயல் கொண்டிசைந் தைம்பொறி
வாளிம யங்கம னம்பயந் தந்திருள்
கால்தர இந்துவி சும்பிலங் கும்பொழு தொருகோடி
காய்கதி ரென்றொளிர் செஞ்சிலம் புங்கணை
யாழியு டன்கட கந்துலங் கும்படி
காமனை நிஞ்சிலை கொண்டடர்ந் தும்பொரு மயலாலே
வாதுபு ரிந்தவர் செங்கைதந் திங்கித
மாகந டந்தவர் பின்திரிந் துந்தன
மார்பில ழுந்தவ ணைந்திடுந் துன்பம துழலாதே
வாசமி குந்தக டம்பமென் கிண்கிணி
மாலைக ரங்கொளு மன்பர்வந் தன்பொடு
வாழ்நி தப்புனை யும்பதந் தந்துன தருள்தாராய்
போதிலு றைந்தருள் கின்றவன் செஞ்சிர
மீதுத டிந்துவி லங்கிடும் புங்கவ
*போதவ ளஞ்சிவ சங்கரன் கொண்டிட மொழிவோனே
பூகமு டன்திகழ் †சங்கினங் கொண்டகி
ரீவம டைந்தபு ரந்தரன் தந்தருள்
பூவைக ருங்குற மின்கரந் தங்குப னிருதோளா
நீதக மொன்றினர் வஞ்சகந் துஞ்சியி
டாதவர் சங்கரர் தந்தவன் பும்பல
சேர்நிரு தன்குல மஞ்சமுன் சென்றிடு திறலோனே
சீதள முந்தும ணந்தயங் கும்பொழில்
சூழ்தர விஞ்சைகள் வந்திறைஞ் சும்பதி
தேவர்ப ணிந்தெழு தென்பரங் குன்றுறை பெருமாளே.

*போதம்-ஞானம் †சங்கினங்கொண்ட கிரீவம்-சங்கின் அம்[அழகு] கொண்ட, அல்லது சங்கு இனங்கொண்ட கழுத்து. கருங்குறமின்-வள்ளி,

இரண்டாவது

திருச்செந்தூர்.

இது திருநெல்வேலிக்குக் கிழக்கே 30மயில் தூலவில் இருக்கிறது இங்கே ரயில்வே ஸ்டேஷன் உண்டு. முருகக்கடவுளின் ஆறு படைகளில்

இரண்டாம் படைவீடு,

தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன—தனதான

18. கமல மாதுடன் இந்திரை யுஞ்சரி
சொலவொ ணாதம டந்தையர் சந்தன
களப சீதள கொங்கையில் அங்கையில் இருபோ*தேய்

களவு நூல்தெரி வஞ்சனை அஞ்சன
விழியில் மோகித கந்தசு கந்தரு
கரிய வோதியில் இந்துமு கந்தனில் மருளாதே

அமல மாகிய சிந்தைய டைந்தகல்
தொலைவி லாதஅ றப்பொரு ளின்பமும்
அடைய வோதியு ணர்ந்து †த ணந்தபின் அருள்தானே

அறியு மாறுபெ றும்படி அன்பினின்
இனிய நாதசி லம்பு புலம்பிடும்
அருண ஆடக கிண்கிணி தங்கிய அடிதாராய்

குமரி காளிப யங்கரி சங்கரி
கவுரி நீலிப ரம்பரை அம்பிகை
குடிலை யோகினி சண்டினி குண்டலி எமதாயி

குறைவி லாளுமை மந்தரி அந்தரி
வெகுவி தாகம சுந்தரி தந்தருள்
குமர மூஷிக முந்திய ஐங்கர கணராயன்

‡மமவி நாயக னஞ்சுமிழ் §கஞ்சுகி
அணிக ஜானன விம்பனொ ரம்புலி
மவுலி யானுறு சிந்தையு கந்தருள் இளையோனே

---

*ஏய்-பொருந்து. † தணந்த-பிரிந்த. ‡மம-என்னுடைய. §கஞ்சுகி-பாம்பு.



திருச்செந்தூர் கோவில்.

வளரும் வாழையு மஞ்சளும் இஞ்சியும்
இடைவி டாதுநெ ருங்கிய மங்கல
மகிமை மாநகர் செந்திலில் வந்துறை பெருமாளே. (உ)

19. *அளக பாரம் அலைந்து குலைந்திட
வதனம் வேர்வு துலங்கி நலங்கிட
அவச மோகம்வி ளைந்து தளர்ந்திட அணைமீதே

அருண வாய்நகை சிந்திய சம்ப்ரம
அடர்ந கதுதி பங்கவி தஞ்செய்து
அதர பானம் அருந்தி மருங்குற முலைமேல்வீழ்ந்

துளமும் வேறுப டும்படி ஒன்றிடு
மகளிர் தோதக இன்பின் முயங்குதல்
ஒழியு மாறுதெ ளிந்துள மன்பொடு சிவயோகத்

துருகு ஞானப ரம்பர தந்திர
அறிவி னோர்கரு தங்கொள்சி லம்பணி
உபய சீதள பங்கய மென் †கழல் தருவாயே

இளகி டாவளர் சந்தன குங்கும
களப பூரண கொங்கைந லம்புனை
இரதிவேள்பணி தந்தையும் அந்தண மறையோனும்

இனிது றுதெதி ரிந்திர னண்டரும்
அரக ராசிவ சங்கர சங்கர
எனமி காவரு நஞ்சினை உண்டவர் அருள்பாலா

வளர்கி ராசரர் தங்கள்சி ரம்பொடி
படவி ரோதமி டுங்குல சம்ப்ரமன்
மகர வாரிக டைந்தநெ டும்புயல் மருகோனே

மதுர வாசக மிஞ்சிய கிஞ்சுக
இதழி மாதுமை மைந்த இரும்பொழில்
மயிலின் மீதினில் வந்துறை செந்தியின் பெருமாளே(உ)

*அளகம்-கூந்தல், †கழல்-திருவடி = ஆகுபெயர்,

தந்த தானன தனதன தனதன
தந்த தானன தனதன தனதன
தந்த தானன தனதன தனதன தனதான.

20. பஞ்ச பாதக முறுபிறை *யெயிறெரி
குஞ்சி கூர்விட மதர்விழி †பிலவக
பங்க வாண்முக முடுகிய நெடுகிய திரிசூலம்

பந்த பாசமு மருவிய கரதல
மிஞ்சி நீடிய கருமுகி லுருவொடு
பண்பி லாதொரு பகடது முதுகினில் யமராஜன்

அஞ்ச வேவரு மவசர மதிலொரு
தஞ்ச மாமென வழிவழி அருள்பெறும்
அன்பி னுனை தடிபுக ழடிமையென் எதிரேநீ

அண்ட கோளகை வெடிபட இடிபட
எண்டி சாமுக மடமட நடமிடும்
அந்த ‡மோகர மயிலினி லியலுடன் வரவேணும்

மஞ்சு போல்வள ரளகமு மிளகிய
ரஞ்சி தாம்ருத வசனமு நிலவென
வந்த தூயவெண் முறுவலு மிருகுழை யளவோடும்

மன்றல் வாரிச நயனமு மழகிய
குன்ற வாணர்த மடமகள் தடமுலை
மந்த ராசல மிசைதுயி லழகிய மணவாளா

செஞ்சொல் மாதிசை வடதிசை குடதிசை
விஞ்சு கீழ்திசை சகலமு மிகல்செய்து
திங்கள் வேணியர் பல§தளி தொழுதுயர் மகமேரு

செண்டு மோதின ரரசரு ளதிபதி
தொண்ட ராதியும் வழிவழி நெறிபெறு
செந்தில் மாநக ரினிதுறை அமரர்கள் பெருமாளே.

---

*எயிறு-பற்கள். †பிலவகம்-குரங்கு. ‡மோகரம் பராக்ரமம் §தளி-கோயில்.

தனனதன தனனதன தந்தத் தந்தத்
தனனதன தனனதன தந்தத் தந்தத்
தனனதன தனனதன தந்தத் தந்தத் தனதான.

21. * அமுதுததி விடமுமிழ் செங்கட் டிங்கட்
†பகவியொளிர் வெளிறெயிறு துஞ்சற் குஞ்சித்
தலையுமுடை யவனரவ தண்டச் சண்டச் சமனோலை

அதுவருகு மளவிலுயி ரங்கிட் டிங்குப்
பறைதிமிலை திமிர்தமிகு ‡ தம்பட் டம்பற்
கரையவுற வினரலற உந்திச் சந்தித் தெருவூடே

எமதுபொரு ளெனுமருளை யின்றிக் குன்றிப்
பிளவளவு தினையளவு பங்கிட் டுண்கைக்
கிளையமுது வசைதவிர இன்றைக் கன்றைக் கெனநாடா

திடுககடி தெனுமுணர்வு பொன்றிக் கொண்டிட்
டுடுடுடுடு டுடுடுடுடு டுண்டுட் டுண்டுட்
டெனவகலு நெறிகருதி நெஞ்சத் தஞ்சிப் பகிராதோ

குமுதபதி வகிரமுது சிந்தச் சிந்தச்
சரணபரி புரசுருதி கொஞ்சக் கொஞ்சக்
குடிலசடை §பவுரிகொடு தொங்கப் பங்கிற் கொடியாட

||குலதடினி அசையஇசை பொங்கப் பொங்கக்
கழலதிர டகுடகுட டங்கட் டங்கத்
தொகுகுகுகு தொகுகுகுகு தொங்கத் தொங்கத் தொகுதீதோ

திமிதமென முழவொலிமு ழங்கச் செங்கைத்
¶தமருகம ததிர்சதியொ டன்பர்க் கின்பத்
திறமுதவு பரதகுரு வந்திக் குஞ்சற் குருநாதா

திறலுமணி தரளமுயர் தெங்கிற் றங்கிப்
புரளஎறி திரைமகர சங்கத் துங்கத்
திமிரசல நிதிதழுவு செந்திற் கந்தப் பெருமாளே.(ச)

---

* அமுத உததி-பாற்கடல். † பகவு-பிளவு. ‡ தம்பட்டம் பல் கணைய-தம்பட்டம் முதலிய பல வாத்தியங்கள் சப்திக்க. § பவுரி-கூத்து || தடினி-ஆறு. குலதடினி - சிரேஷ்டமான கங்கையாறு ¶ தமருகம் - உடுக்கை.

தனனதன தனனதன தந்தனந் தந்தனந்
தனனதன தனனதன தந்தனந் தந்தனந்
தனனதன தனனதன தந்தனந் தந்தனந் தந்ததான.

22. கொடியனைய இடைதுவள அங்கமும் பொங்கஅங்
குமுதஅமு திதழ்பருகி இன்புறுஞ் சங்கையன்
குலவியணை முகிலளக முஞ்சரிந் தன்பினின் பண்புலாவக்

கொடியவிரல் நகநுதிசெய் புண்படுஞ் சஞ்சலன்
குறுகியவ ருடனினிது சம்ப்ரமங் கொண்டுளங்
குரலழிய அவசமுறு குங்குமன் கொங்கவிழ்ந் தொன்றுபாய்மேல்

விடமனைய விழிமகளிர் கொங்கையின் பம்பெறும்
வினையனியல் பரவுமுயிர் வெந்தழிந் தங்கமும்
மிதமொழிய அறிவில்நெறி பண்பிலண் டுஞ்சகன் செஞ்செநீடும்

வெருகனக ஒளிகுலவும் அந்தமன் செந்திலென்
றவிழுஉள முருகிவரு மன்பிலன் * தந்திலன்
விரவுமிரு சிறுகமல பங்கயந் தந்துகந் தன்புறுமோ

படமிலகு மரவினுட லங்கமும் பங்கிடந்
துதறுமொரு † கலபிமிசை வந்தெழுந் தண்டர்தம்
பகையசுர ரனைவருடல் சந்துசந் துங்கதஞ் சிந்தும்வேலா

படியவரு மிமையவரும் நின்றிறைஞ் சென்குணன்
பழையஇறை உருவமிலி அன்பர்பங் கன்பெரும்
‡பருவரல்செய் புரமெரிய விண்டிடுஞ் செங்கணன் கங்கைமான்வாழ்

சடிலமிசை அழகுபுனை கொன்றையும் பண்புறும்
தருணமதி யினமுறைசெய் § துண்டமுஞ் செங்கையொண்
சகலபுவ னமுமொழிக தங்||குறங் கங்கியும் பொங்கிநீடும்

சடமருவு விடையரவர் துங்கஅம் பங்கினின்
றுலகுதரு கவுரியுமை கொங்கைதந் தன்புறும்
தமிழ்விரக உயர்பரம சங்கரன் கும்பிடுந் தம்பிரானே. (௫)

---

*தந்திலன் - சாஸ்திர ஆராய்ச்சியில்லாதவன். † கலபி - மயில்.
‡பருவரல் - துன்பம், § துண்டம்-முகம். ||குறங்கங்கி-இடையாபரணம்.

தனனதன தனனதன தனனதன தனனதன
தனனதன தனனதன தனதான.

23. அறிவழிய மயல்பெருக உரையுமற விழிசுழல
அனலவிய மலமொழுக அகலாதே
அனையுமனை அருகிலுற வெருவியழ உறவுமழ
அழலினிகர் மறலியெனை அழையாதே
செறியுமிரு வினைகரண மருவுபுல னொழியஉயர்
திருவடியி லணுகவரம் அருள்வாயே
சிவனைநிகர் பொதியவரை முனிவனக மகிழஇரு
செவிகுளிர இனியதமிழ் பகர்வோனே
நெறி தவறி* அலரிமதி நடுவன்மக பதி†முளரி
நிருதிநிதி பதிகரிய வனமாலி
நிலவுமறை யவனிவர்க ளலைய அர சுரிமைபுரி
நிருதனுர மறஅயிலை விடுவோனே
‡மறிபரசு கரமிலகு பரிமனுமை இருவிழியும்
மகிழவடி மிசைவளரும் இளையோனே
§மதலை தவ ழுததியிடை வருதரள மணி||புளின
மறையஉயர் கரையிலுறை பெருமாளே. (௬)

தனத்தந்தந் தனத்தந்தந்
தனத்தந்தந் தனத்தந்தந்
தனத்தந்தந் தனத்தந்தந் தனதான.

24. கரிக்கொம்பந் தனித்தங்கந்
குடத்தின்பந் தனத்தின்கண்
கறுப்புந்தன் சிவப்புஞ்செம் பொறிதோள்சேர்
கணைக்கும்பண் டிழைக்கும்பங்
களிக்கும்பண் பொழிக்குங்கண்
கழுத்துஞ்சங் கொளிக்கும்பொன் குழையாடச்

*அலரி சூரியன். †முளரி - அக்கினி. ‡மறி பரசு - மான் மழு.
§மதலை - மரக்கலம். ||புளினம் - மணலிடுற் சூழப்பட்ட மேடு.

சரக்குஞ்சம் புடைக்கும்பொன்
துகிற்றந்தந் தரிக்குந்தன்
சடத்தும்*பண் பிலுக்குஞ்சம் — பளமாதர்
சலித்தும்பின் சிரித்துங்கொண்
டழைத்துங்கண் பசப்பும்பெண்
தனத்தன்பந் தவிப்புண்டிங் — குழல்வேனோ
சுரர்ச்சங்கந் துதித்தந்தஞ்
செழித்தின்பங் களித்துண்பன்
சுகத்துய்ந்தின் பலர்ச்சிந்தந் — சுகராரைத்
துவைத்தும்பந் தடித்துஞ்சங்
கொலித்துங்குன் றிடித்தும்பண்
சுகித்துங்கண் களிப்புங்கொண் — டிடும்வேலா
சிரப்பண்புங் கரப்பண்புங்
கடப்பந்தொங் கலிற்பண்புஞ்
சிவப்பண்புந் தவப்பண்புந் — தருவோனே
திளைத்தொந்தந் குறப்பெண்பண்
சகிப்பெண்கொங் கையிற்றஞ்சுஞ்
செழிக்குஞ்செந் திலிற்றங்கும் — பெருமாளே. (எ)

25. கருப்பந்தங் கிரத்தம்பொங்
†கரைப்புண்கொண் டிருக்கும்பெண்
களைக்கண்டங் கவர்ப்பின்சென் — றவரோடே
கலப்புண்டுஞ் ‡சிறப்புண்டுந்
துவக்குண்டும் பிணக்குண்டுங்
கலிப்புண்டுஞ் சலிப்புண்டுந் — தடுமாறிச்
செருத்தண்டந் தரித்தண்டம்
புகத்தண்டந் தகற்கென்றுந்
திகைத்தந்தின் செகத்§தஞ்சுங் — கொடுமாயும்
தியக்கங்கண் டுயக்கொண்டென்
பிறப்பங்கஞ் சிறப்பங்கஞ்
சிதைத்தன்றன் பதத்தின்பந் — தருவாயே

*பண்பிலுக்கல் - தகுதியாகிய வஸ்துக்களைக்கொண்டு ஆடம்பரமாக அலங்கரித்தல் †அரைப்புண் அல்குல். ‡சிறப்பு - இகழ்வு. §அஞ்சு - பஞ்சேந்திரியம்.

அருக்கன்சஞ் சரிக்குந்தெண்
டிரைக்கண்சென் றரக்கன்பண்
பணைத்தும்பொன் றிடக்கன்றுங் கதிர்வேலா
அணிச்சங்கங் கொழிக்குந்தண்
டலைப்பண்பெண் டிசைக்குங்கொந்
தளிக்குஞ்செந் திலிற்றங்குங் குமரேசா
புரக்குஞ்சங் கரிக்குஞ்சங்
கரர்க்குஞ்சங் கரர்க்கின்பம்
புதுக்குங்கங் கையட்குந்தஞ் சுதனாய்
புனக்குன்றந் தினைக்குஞ்செந்
தினைப்பைம்பொன் குறக்கொம்பின்
புறத்தண்கொங் கையிற்றுஞ்சும் பெருமாளே. (அ)

26. குழைக்குஞ்சந் தனச்செங்குங்
குமத்தில்சந் தநற்குன்றங்
குலுக்கும்பைங் கொடிக்கென்றிங் கியலாலே
குழைக்குஞ்செங் குமிழ்க்குஞ்சென்
றுரைக்குஞ்செங் கயற்கண்கொண்
டழைக்கும்பண் தழைக்குஞ் * சிங் கியராலே
உழைக்குஞ்சங் கடத்துன்பஞ்
சகப்பண்டஞ் சகித்துண்டுண்
டுடற்பிண்டம் பருத்தின்றிங் குழலாதே
உதிக்குஞ்செங் கதிர்ச்சிந்தும்
† ப்ரபைக்கொன்றுஞ் சிவக்குந்தண்
டியர்க்குங்கிண் கிணிச்செம்பஞ் சடிசேராய்
தழைக்குங்கொன் றையைச்செம்பொன்
சடைக்கண்டங் கியைத்தங்குந்
தரத்தஞ்செம் ‡ புயத்தொன்றும் பெருமானார்
தனிப்பங்கின் புறத்தின்செம்
பரத்தின்பங் கயத்தின்சஞ்
சரிக்குஞ்சங் கரிக்கென்றும் பெருவாழ்வே

* சிங்கியர்-விஷத்தன்மையுள்ளபெண்கள். † ப்ரபை-ஒளி ‡ புயம்-தோள்.

கழைக்கும்*குஞ் சரக்கொம்புங்
†கலைக்கொம்புங் கதித்தென்றுங்
கயற்கண்பண் பளிக்குந்திண் புயவேளே
கறுக்குங்கொண் டலிற்பொங்குங்
கடற்சங்கங் கொழிக்குஞ்செந்
திலிற்கொண்டன் பினிற்றங்கும் பெருமாளே. (௨௬)

---

27. ‡மனத்தின்பங் கெனத்தங்கைம்
புலத்தென்றன் குணத்தஞ்சிந்
த்ரியத்தம்பந் தனைச்சிந்தும் படிகாலன்
மலர்ச்செங்கண் கனற்பொங்குந்
திறத்தின்தண் டெடுத்தண்டந்
திழித்தின்றிங் குறத்§தங்கும் பலவோரும்
எனக்கென்றிங் குனக்கென்றங்
கினத்தின்கண் கணக்கென்றன்
றினைத்தன்புங் கொடுத்தங்கங் கழியாமுன்
இசைக்குஞ்செந் தமிழ்க்கொண்டங்
கிரக்கும்புன் றொழிற்பங்கங்
கெடுத்துன்பங் கழித்தின்பந் தருவாயே
கனைக்குந்தண் கடற்சங்கங்
கரத்தின்கண் தரித்‖தெங்குங்
கலக்கஞ்சிந் திடக்கண்டுஞ் சிடுமாலும்
¶கதித்தொண்பங் கயத்தன்பண்
பனைத்துங்குன் றிடச்சந்தங்
களிக்குஞ்சம் புவுக்குஞ்செம் பொருளீவாய்
தினைக்குன்றந் தனிற்றங்குஞ்
சிறுப்பெண்குங் குமக்கும்பத்
திருச்செம்பொன் புயத்தென்றும் புணர்வோனே

---

*குஞ்சரக்கொம்பு-தெய்வயானை. †கலைக்கொம்பு-வள்ளி ‡மனத்தின் பங்கெனத் தங்கு ஐம்புலன்-மனம் செல்வதற்கு வேறு வேறு வாயில்களாகப் பொருந்தியிருக்கும் ஐம்புலன். §தங்கும் பலவோர் - தத்துவக்கூட்டம். ‖எங்கும் கலக்கம் சிந்திடக் கண்துஞ்சிடுமால்-சர்வான்மாக்களும் கலக்க மற்றுச் சுகமுற அனந்தல்கொள்ளுந் திருமால். ¶கதித்தொண்பங்கயத்தன் - கதித்த + ஒண் + பங்கயத்தன் - தாமரையிலுதித்த பிரமதேவன்.

செழிக்குங்குண் டகழ்ச்சங்கங்
கொழிக்குஞ்சந் தனத்தின்மைம்
பொழிற்றண்செந் திலிற்றங்கும் பெருமாளே (ய)

தனத்தந்தத் தனத்தந்தத்
தனத்தந்தத் தனத்தந்தத்
தனத்தந்தத் தனத்தந்தத் —தனதான.

28. பருத்தந்தத் தினைத்தந்திட்
டிருக்குங்கச் சடர்த்துந்திப்
பருக்கும்பொற் ப்ரபைக்குன்றத் தனமாதர்
பரிக்குந்துச் சரக்கொன்றத்
தினைத்தங்குற் பலப்பண்டைப்
பரக்குஞ்சக் கரத்தின்சத் தியைநேரும்
துரைச்செங்கட் கடைக்கொன்றிப்
பெருத்தன்பற் றினைத்தங்குத்
துணிக்கும்புத் தியைச்சங்கித் தறியேனை
துணைச்செம்பொற் பதத்தின்புற்
றெனக்கென்றப் பொருட்டங்கத்
தொடுக்குஞ்சொற் றமிழ்த்தந்திப் படியாள்வாய்
*தருத்தங்கப் பொலத்தண்டத்
தினைக்கொண்டச் சுரக்கஞ்சத்
தடத்துன்பத் தினைத்தந்திட் டெதிர்சூரன்
சமர்க்கஞ்சிப் படித்துஞ்சக்
கதிர்த்துங்கத் தயிற்கொண்டத்
தலத்தும்பர்ப் பதிக்கன்புற் றருள்வோனே
திருக்கஞ்சத் தனைக்கண்டித்
துறக் †கங்குட் டிவிட்டுஞ்சற்
சிவற்கன்றப் பொருட்கொஞ்சிப் பகர்வோனே
செயத்துங்கக் கொடைத்துங்கத்
திருத்தங்கித் ‡தரிக்கும்பொற்
றிருச்செந்திற் பதிக்கந்தப் பெருமாளே. (கக)

---

*தரு தங்கு அ பொலத்து அண்டத்தினை-கற்பக விருக்ஷம் தங்கிய அந்தப் பொன்னுலகத்தை. † கம்-தலை ‡ தரிக்கும்-நிலைத்திருக்கும்.

தனதன தந்தாத் தந்தத்
தனதன தந்தாத் தந்தத்
தனதன தந்தாத் தந்தத் தனதான.

29. *அவனிபெ றுந்தோட் டம்பொற்
குழையட ரம்பாற் புண்பட்
டரிவையர் தம்பாற் கொங்கைக் கிடையேசென்

றணைதரு பண்டாட் டங்கற்
றுருகிய கொண்டாட் டப்பொற்
றழிதரு திண்டாட் டஞ்சற் றொழியாதே

பவமற நெஞ்சாற் சிந்தித்
திலகுக டம்பார்த் தண்டைப்
பதயுக ளம்போற் றுங்கொற் றமுநாளும்

பதறிய அங்காப் பும்பத்
தியுமறி வும்போற் சங்கைப்
படுதுயர் கண்பார்த் தன்புற் றருளாயோ

தவநெறி குன்றுப் பண்பிற்
றுறவின ருந்தோற் றஞ்சத்
தனி†மல ரஞ்சார்ப் புங்கத் தமராடித்

தமிழினி‡தென்காற் கன்றிற்
றிரிதரு கஞ்சாக் கன்றைத்
தழலெழ வென்றார்க் கன்றற் புதமாகச்

சிவவடி வங்காட் டிஞ்சற்
குருபர தென்பாற் சங்கத்
திரள்மணி சிந்தாச் சிந்தாக் கரைமோதும்

தினகர திண்டேர்ச் சண்டப்
பரியிட றுங்கோட்§டிஞ்சித்
திருவளர் செந்தூர்க் கந்தப் பெருமானே. (௧௨)

*அவனி பெறும தோட்டு அம்பொற்குழை - பூமியை விலைமதிக்கும்படியான தோடாகிய அழகிய பொற்குழை. † மலர் அஞ்சு ஆர் புங்கத்து - ஐந்துவகைப் புஷ்ப பாணத்தால். ‡ தென்காற்கன்றின் - இளந்தென்றற் காற்றில்; கஞ்சாக்கன்று - மன்மதன். §இஞ்சி - திருமதில்.

30. தொடரிய மண்போற் றாங்கப்
படையவ ளாந்தோட் டுக்*தட்
டரையின ருந்தோட் கொங்கைக் — கிடமாயத்
துகில்விழ வுஞ்சேர்த் தங்கத்
துளைவிர குஞ்சூழ்த் தண்டித்
துயர்வினை யுஞ்சூட் டின்பத் — தொடுபாயற்
இடைகொடு சென்றீட் டும்பொற்
†பணியரை மென்றேற் றங்கற்
றனையென இன்‡றூட் டென்§றற் — கிடுமாதர்க்
கினிமையி லொன்றாய்ச் சென்றட்
படுமன மொன்றாட் கன்புற்
றியலிசை கொண்டேத் தென்றட் — டருவாயே
நெடிதுத வங்கூர்க் குஞ்சற்
புருடரும் நைந்தேக் கம்பெற்
றயர்வுற நின்றார்த் தங்கட் — கணையேயும்
நிகரில்ம தன்தேர்க் குன்றற்
றெரியில்வி ழுந்தேர்ப் பொன்றச்
சிறிதுநி னைந்தாட் டங்கற் — றிடுவார்முன்
திடமுறு மன்பாற் சிந்தைக்
|| கறிவிட முஞ்சேர்த் தும்பர்க்
கிடர்களை யும்போர்ச் செங்கைத் — திறல்வேலா
தினவரி வண்டார்த் தின்புற்
றிசைகொடு வந்தேத் திஞ்சித்
திருவளர் செந்தூர்க் கந்தப் — பெருமாளே. (௩௰)

தந்தன தந்தனத் தந்தன தந்தனத்
தந்தன தந்தனத் தனதான.

31. சங்குபோல் மென்கழுத் தந்தவாய் தந்தபற்
சந்தமோ கின்பமுத் — தெனவானில்
தங்குகார் பைங்குழற் கொங்கைநீள் தண்பொருப்
பென்றுதாழ் வொன்றறுத் — துலகோரைத்

*தட்டரை-தட்டர்க்கு; †பணியர்க்கு, இது உருபு மயக்கம் ‡ஓட்டென்று. ஓடென்று. §அற்கிடும்-அல்கிடும், அன்புசுருக்கிடும் || அறிவிடம்-தெளிவு-

துங்கவேள் செங்கைபொற் கொண்டல்நீ என்றுசொற்
கொண்டு *தாய் நின்றுரைத் துழலாதே
துன்பநோய் சிந்தநற் கந்தவே ளென்றுனைத்
தொண்டினு †லொன்றுரைக் கருள்வாயே
வெங்கண் ‡வ்யா ளங்கொதித் தெங்கும்§வே மென்றெடுத்
துண்டுமே லண்டருக் கமுதாக
விண்டநா தன்திருக் கொண்டல்பா கன்செருக்
குண்டுபே ரம்பலத் தினிலாடி
‖செங்கண்மால் பங்கயக் கண்பெறா தந்தரத்
தின்கணு டுந்திறற் கதிராழித்
திங்கள்வா ழுஞ்சடைத் தம்பிரா னன்புறச்
செந்தில்வாழ் செந்தமிழ்ப் பெருமாளே. (௩௧)

32 பங்கமே வும்பிறப் பந்தகா ரந்தனிற்
பந்தபா சந்தனிற் றடுமாறி
பஞ்சபா ணம்படப் புண்படா வஞ்சகப்
பண்பிலா டம்பரப் பொதுமாதர்
தங்களா லிங்கனக் கொங்கையா கம்படச்
சங்கைமால் கொண்டிளைத் தயராதே
தண்டைசூழ் கிண்கிணிப் புண்டரீ கந்தனைத்
தந்துநீ அன்புவைத் தருள்வாயே
அங்கைவேல் கொண்டரக் கன்ப்ரதா பங்கெடுத்
தண்டவே தண்டமுட் படவேதான்
அஞ்சவே திண்டிறற் ¶கொண்டலா கண்டலற்
கண்டலோ கங்கொடுத் தருள்வோனே. (௩௨)

---

* தாய்-தாவி. † ஒன்று-பொருந்திய ‡ வியாளம்-பாம்பு. இங்கே அதனிடத்திருந்து எழுந்த விஷத்தைக்குறித்தது. § வேம் - வேகச்செய்யு மென்று ‖ செங்கண்மால் கண்பெறாது நாடும் தம்பிரான் எனமுடிக்க. ¶ கொண்டல் ஆகண்டலற்கு-மேகவாகனனாகிய தேவேந்திரனுக்கு.

திங்களார் கொன்றைமத் தந்துளாய் துன்றுபொற்
செஞ்*சடா பஞ்சரத் துறுதோகை
சிந்தையேய் தென்றிசைத் தென்றல்வீ சும்பொழிற்
செந்தில்வாழ் செந்தமிழ்ப் பெருமாளே. (சுரு)

தந்தா னந்தா தந்தா னந்தா
தந்தா னந்தத் தனதான.

33\. தண்டே னுண்டே வண்டார் வஞ்சேர்
† தண்டார் மஞ்சுக் குழல்மாதர்
தம்பா லன்பார் நெஞ்சே கொண்டே
சம்பா வஞ்சொற் றடிநாயேன்
மண் ‡ டோ யந்தீ மென்கால் விண்டோய்
வண்கா யம்பொய்க் குடில்வேறாய்
வன்கா னம்போ யண்டா முன்பே
வந்தே நின்பொற் கழல்தாராய்
கொண்டா டும்பேர் கொண்டா டுஞ்சூர்
கொன்றாய் வென்றிக் குமரேசா
கொங்கார் வண்டார் பண்பா டுஞ்சீர்
குன்று மன்றற் கிரியோனே
§ கண்டா கும்பா லுண்டா யண்டார்
கண்டா || கந்தப் புயவேளே
¶ கந்தா மைந்தா ரந்தோள் மைந்தா
கந்தா செந்திற் பெருமாளே

சடாபஞ்சரத்துறுதோகை-சடையாகிய கூட்டிலிருக்கும் கங்கை ‡ தண்டார்மஞ்சுக்குழல்-குளிர்ந்த மாலையணிந்த மேகம்போன்ற குழல்.

†தோயம்-நீர் § கண்டாகும்பால்-கற்கண்டுபோலும் இனிமையுள்ள பால், அதாவது உமாதேவியார் பொற்கிண்ணத்துக் கறந்து ஊட்டிய திருமுலைப்பால். || கந்தப் புயம்-வாசனை தங்கிய புயம்.

¶ கந்து ஆம் மைந்து ஆர் அம் தோள் மைந்தா-கம்பத்துக்குச் சமானமாகி வலிமை பொருந்திய அழகிய தோள்களையுடைய பராக்கிரமனே.

34. வெங்கா ளம்பா ணஞ்சேல் கண்பால்
மென்பா கஞ்சொற் குயில்*மாலை
மென்கே சந்தா னென்றே கொண்டார்
மென்றே ளொன்றப் பொருள்தேடி.
வங்கா ளஞ்†சோ னஞ்சீ னம்போய்
வன்பே துன்பப் படலாமோ
‡மைந்தா ருந்தோள் மைந்தா அந்தா
வந்தே இந்தப் பொழுதாள்வாய்
கொங்கார் பைந்தே னுண்டே வண்டார்
குன்றாள் கொங்கைக் கினியோனே
குன்றா டுஞ்சூழ் §அம்பே ழுஞ்சூ
ரும்போய் மங்கப் பொருகோபா
கங்கா ளஞ்சேர் மொய்ம்பா ரன்பார்
கன்றே உம்பர்க் கொருநாதா
‖கம்பூர் சிந்தார் தென்பால் வந்தாய்
கந்தா செந்திற் பெருமானே. (௩௭)

தனதான தந்த தனதான தந்த
தனதான தந்த தனதான.

35. விதிபோலு ¶முந்த விழியாலு மிந்து
நுதலாலு $மொன்றி இளைஞோர்தம்
விரிவான சிந்தை உருவாகி நொந்து
விறல்வேறு சிந்தை வினையாலே
இதமாகி இன்ப மதுபோத உண்டுள்
இனிதாகு மென்று மொழிமாதர்
இருளாய துன்ப மருள்மாய பந்தம்
எனையீர்வ தென்றும் ஒழியாதோ
மதிசூடி அண்டர் பதிவாழ அண்டி
வருமால முண்டு விடையேறி

* மாலை - இருள். † சோனம் - சோனகம். ‡ மைந்து - வலிமை. § அம்பேழும் குரும்-ஏழுகடலும் சூரும். ‖ கம்பு ஊர் சிந்து - சங்குகள் தவழும் சமுத்திரம். ¶ உந்தவிழி - உந்து + அ + விழி; அந்த என்பதின் குறுக்கம். $ 'ஒன்றி...உருவமும் நொந்து...மொழிமாதர்' எனக் கூட்டுக.

மறவாத சிந்தை அடியார்கள் பங்கில்
வருதேவ சம்பு தருபாலா
அதிமாய மொன்றி வருசூரர் பொன்றி
அயில்வேல்கொ டன்று பொரும்வீரா
அழகான செம்பொன் மயில்மே லமர்ந்து
அலைவாயு கந்த பெருமாளே. (கஅ)

36. விறல்மார னைந்து மலர்வாளி சிந்த
மிகவானி லிந்து வெயில்காய
மிதவாடை வந்து தழல்போல வொன்ற
வினைமாதர் தந்தம் வசைகூறக்
குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட
கொடிதான துன்ப மயல்தீரக்
குளிர்மாலை யின்க ணணிமாலை தந்து
குறைதீர வந்து குறுகாயோ
மறிமானு கந்த இறையோன்ம கிழ்ந்து
வழிபாடு தந்த மதியாளா
* மலைமாவு சிந்த அலைவேலை அஞ்ச
வடிவேலெ றிந்த அதிதீரா
அறிவால றிந்து னிருதாளி றைஞ்சும்
அடியாரி டைஞ்சல் களைவோனே
அழகான செம்பொன் மயில்மே லமர்ந்து
அலைவாயு கந்த பெருமாளே. (கக)

தந்ததன தான தனதத் தான
தந்ததன தான தனதத் தான
தந்ததன தான தனதத் தான தனதான.

37. சந்தனச வாது நிறைகற் பூர
குங்குமப டீர விரைகத் தூரி
தண்புழுக ளாவு களபச் சீத வெகுவாசச்

* மலை மாவுசிந்த - கிரௌஞ்சகிரியும் (சூரனுடைய) மாமரமுஞ் சிந்த.

சண்பக * கலார வகுளத் தாம
வம்புதுகி லார வயிரக் கோவை
தங்கியக ரோ தரவித் தார பரிதான

மந்தரம தான தனமிக் காசை
கொண்டுபொருள் தேடி மதிகிட் டோ
வஞ்சகவி சார இதயப் பூவை அனையார்கள்

† வந்தியிடு மாய விரகப் பார்வை
அம்பிலுளம் வாடு மறிவற் றேனை
வந்தடிமை யாள இனிஎப் போது நினைவாயே

இந்த்ரபுரி காவல் முதன்மைக் கார
சம்ப்ரமம யூர துரகக் கார
என்றுமக லாத இளமைக் கார குறமாதின்

இன்பஅனு போக சரசக் கார
வந்தஅசு ரேசர் கலகக் கார
எங்களுமை சேயெ னருமைக் கார மிகுபாவின்

செந்தமிழ்சொல் நாலு கவிதைக் கார
குன்றெறியும் வேலின் வலிமைக் கார
செஞ்சொலடி யார்கள் எளிமைக் கார எழில்மேவும்

‡ திங்கள்முடி நாதர் சமயக் கார
மந்த்ரஉப தேச மகிமைக் கார
செந்தில்நகர்வாழும் அருமைத்தேவர் பெருமாளே(௨௰)

தந்ததன தான தானத் தான
தந்ததன தான தானத் தான
தந்ததன தான தானத் தான தனதான.

38. முந்துதமிழ் மாலை கோடிக் கோடி
சந்தமொடு நீடு பாடிப் பாடி
§ முஞ்சர்மனை வாசல் தேடித் தேடி உழலாதே

---

* கலாரம்-கல்லாரம், செங்குவளை. † வந்தியிடும்-வருத்தத்தை உண்பெண்ணும். ‡ திங்கள் முடிநாதர் சமயம்-சைவசமயம் § முஞ்சர்-சாவார்.

முந்தைவினை யேவ ராமற்போக
மங்கையர்கள் காதல் தூரத்தேக
முந்தடிமை யேனை யாளத் தானு முனைமீதே
திந்திதிமி தோதி தீதித் திதி
தந்ததன தான தானத் தான
செஞ்சணகு சேகு தாளத் தோடு நடமாடும்
செஞ்சிறிய கால்வி சாலத்தோகை
துங்கஅநு கூல பார்வைத் தீர
செம்பொன்மயில் மீதி லேயெப் போது வருவாயே
அந்தண்மறை வேள்வி காவற் கார
செந்தமிழ்சொல் பாவின் மாலைக் கார
அண்டருப கார சேவற் கார முடிமேலே
அஞ்சலிசெய் வோர்கள் நேயக் கார
குன்றுருவ ஏவும் வேலைக் கார
அந்தம்வெகு வான ரூபக் கார எழிலான
*சிந்துரமின் மேவு போகக் கார
விந்தைகுற மாது வேளைக் கார
செஞ்சொலடி யார்கள் வாரக் கார எதிரான
செஞ்†சமரை மாயு மாயக் கார
துங்கரண சூர சூறைக் கார
செந்தில்நகர் வாழு மாண்மைக் கார பெருமாளே.(௨௧)

தந்தத் தனனத் தந்தத் தனனத்
தந்தத் தனனத் தனதான.

39. ‡அம்பொத் தவிழித் தந்தக் கலகத்
தஞ்சிக் கமலக் கணையாலே
அன்றிற் குமனற் றென்றற் குமிளைத்
தந்திப் பொழுதிற் பிறையாலே

---

*சிந்துரமின் - தெய்வானை. † சமரைமாயும் - யுத்தத்தில் (பகைவரை) மாய்க்கும். ‡ அம்பு ஒத்த விழித் தந்தக் கலகத்து-அம்பு போன்ற கண்களாலும், தந்தம்போன்ற (தனங்களாலும்) விளைந்த கலகத்தினுக்கு.

எம்பொற் கொடி*மற் றுன்பக் கலனற்
றின்பக் கலவித் துயரானுன்
என்பெற் றுலகிற் பெண்பெற் றவருக்
கின்பப் புலியுற் றிடலாமோ
கொம்புக் கரிபட் டஞ்சப் பதுமக்
கொங்கைக்†குறவிக் கினியோனே
கொன்றைச் சடையர்க் கொன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழைப் பகர்வோனே
செம்பொற் சிகரப் பைம்பொற் கிரியைச்
சிந்தக் கறுவிப் பொரும்வேலா
செஞ்சொற் புலவர்க் கன்புற் றதிருச்
செந்திற் குமரப் பெருமாளே. (உஉ)

40. கொங்கைப் பணியிற் செம்பொற் செறிவிற்
கொண்டற் குழலிற் கொடிதான
கொன்றைக் கணையொப் பந்தக் கயலிற்
கொஞ்சுக் கிளியுற் றுறவான
‡சங்கத் தொனியிற் சென்றிற் கடையிற்
சந்திப் பவரைச் சருவாதே
சந்தப் படியுற்§றென் றற் றலையிற்
சந்தப் பதம்வைத் தருள்வாயே
அங்கப் படைவிட் டன்றைப் படுகைக்
||கந்திக் கடலிற் கடிதோட
¶அந்தப் பொழிலிற் $ சந்துத் தலையுற்
றஞ்சப் பொருதுற் றொழியாத
செங்கைக் கதிருற் றொன்றக் கடலிற்
**சென்றுற் றவர்தற் பொருளாறுய்
சிந்தைக் கனிவைத் தந்தப் பொழிலிற்
செந்திற் குமரப் பெருமாளே. (உ௩)

*மன் துன்ப கலன் அற்று-தரித்திருக்கின்ற துன்பத்தைச் செய்யும் ஆபரணங்களை அறவிடுத்து. †குறவி-குறத்தி, வள்ளிநாயகி.

‡சங்கம்-சங்குபோன்ற கண்டம். §என் றற்றலை-என் றன் தலை. ||அந்திக்கடல்-செந்திலுக்கும் மகேந்தரபுரிக்கும் இடைச்சந்தியாகவுள்ள கடல். ¶அந்தப்பொழில்-அந்தப்பூமியாகியமகேந்திரத்தில். $ சந்துத் தலையுற்று-தூதாகச்சென்று. **சென்றுற்றவர்-போய்வந்தவராகிய வீரவாகுதேவர்.

தானதா னந்தனந் தானதா னந்தனந்
தானதா னந்தனந் தனதான.

41. காலனார் வெங்கொடுந் தூதர்பா சங்கொடென்
காலி*னார் தந்துடன் கொடுபோக
காதலார் மைந்தருந் தாயரா ருஞ்சுடுங்
கானமே பின்தொடர்ந் தலறாமுன்
சூலம்வாள் கண்டுசெஞ் செவல்கோ தண்டமுஞ்
சூடுதோ ளுந்தடந் திருமார்பும்
தூயதாள் தண்டையுங் காணஆர் வஞ்செயுந்
தோகைமேல் கொண்டுமுன் வரவேணும்
ஆலகா லப்பரன் பாலதா கஞ்சிடுந்
தேவர்வா ழன்றுகந் தமுதீயும்
ஆரவா ரஞ்செயும் வேலைமீ கண்†டுயின்
றாதிமா யன்றனன் மருகோனே
சாலிசேர் சங்கினம் வாவிசூழ் பங்கயஞ்
சாரலார் செந்திலம் பதிவாழ்வே
தாவுசூ ரஞ்சிமுன் சாயவே சம்பெறுந்
தாரைவே லுந்திடும் பெருமாளே. (௨௪)

தந்தனா தந்தனா தந்தனா தந்தனா
தந்தனா தந்ததான.

42. சங்கைதா னொன்றுதா னின்றியே நெஞ்சிலே
சஞ்சலா ரம்பமாயன்
சந்தொடே குங்குமா லங்க்ருதா டம்பரா
சம்ப்ரமா னந்தமாயன்
மங்கைமார் கொங்கைசேர் அங்கமோ கங்களால்
வம்பிலே துன்புறாமே
வண்குகா நின்சொரூ பப்ப்ரகா சங்கொடே
வந்துநீ அன்பிலாள்வாய்

* ஆர்தந்து-கட்டி, † துயின்றாதி - துயின்ற ஆதி; அ-தொக்கது,

கங்கைகு டும்பிரான் மைந்தனே அந்தனே
கந்தனே விஞ்ஞையபூரா
கம்பியா திந்த்ரலோ கங்கள் * கா வென்றவா
கண்டலே சன்சொல்வீரா
செங்கைவேல் வென்றிவேல் கொண்டுசூர் பொன்றவே
சென்றமோ தும்ப்ரதாபா
செங்கண்மால்† பங்கஜா னன்தொழா னந்தவேள்
செந்தில்வாழ் தம்பிரானே. (உரு)

தந்த தந்தன தானு தானு
தந்த தந்தன தானு தானு
தந்த தந்தன தானு தானு தனதானு.

43. அங்கைமென்குழ லாய்வார் போலே
சந்தி நின்றய லோடே போவார்
அன்பு கொண்டிட நீரோ போரீர் அறியீரோ
அன்று வந்தொரு நாள்நீர் போனீர்
பின்பு கண்டறி யோநா மீதே
அன்று மின்றுமொர் போதோ போகா துயில்வாரா
எங்க ளந்தரம் வேறு ரோர்வார்
பண்டு தந்தது போதா தோமேல்
இன்று தந்துற வோதா னீதே னிதுபோதா
திங்கு நின்றதென் வீடே வாரீர்
என்றி ணங்கிகள் மாயா லீலா
இன்ப சிங்கியில் வீணே வீழா தருள்வாயே
மங்கு லின்புறு வானுய் வானூ
டன்றரும்பிய காலாய் நீள்கால்
மண்டு றும்புகை நீறு வீறு எரிதீயாய்
வந்தி ரைந்தெழு நீராய் நீர்சூழ்
அம்ப ரம்புனை பாராய் பாரேழ்
மண்ட லம்புகழ் நீயாய் நானுய் மலரோனுய்

---

* கா என்று அ ஆகண்டலேசன் எனப்பிரித்துப்பொருள்கொள்க.
† பங்கஜாலயனன் என்பது பங்கஜானன் எனக்குறுகி விகாரமாயிற்று.

உங்கள் சங்கரர் தாமாய் நாமார்
அண்ட பங்திகள் தாமாய் வாளுய்
ஒன்றி னுங்கடை தோயா மாயோன் மருகோனே

ஒண்த டம்பொழில் நீடூர் கோடூர்
செந்தி லம்பதி வாழ்வே வாழ்வோர்
உண்ட நெஞ்சறி தேனே வானோர் பெருமாளே. (௨௬)

தந்தன தனந்தனந் தனதனத்
தந்தன தனந்தனந் தனதனத்
தந்தன தனந்தனந் தனதனத் தனதான.

44. அந்தகன் வருந்தினம் *பிறகிடச்
சந்தத மூவந்துகண் டரிவையர்க்
கன்புரு கு†சங்கதந் தவிரமுக் குணமாள

‡அந்திப கலென்றிரண் டையுமொழித்
திந்திரி யசஞ்சலங் களையறுத்
தம்புய பதங்களின் பெருமையைக் கவிபாடிச்

செந்திலை உணர்ந்துணர்ந் துணர்வுறக்
§கந்தனை அறிந்தறிந் தறிவினிற்
சென்றுசெ ருகுந்தடந் தெளிதரத் தணியாத

சிந்தையு மவிழ்ந்தவிழ்ந் துரையொழித்
தென்செய லழிந்தழிந் தழியமெய்ச்
சிந்தைவ ரவென்றுநின் தெரிசனைப் படுவேனே

கொந்தவிழ் சரண்சரண் சரணெனக்
கும்பிடு புரந்தரன் பதிபெறக்
குஞ்சரி குயம்புயம் பெறஅரக் கருமாளக்

குன்றிடி யவம்பொனின் திருவரைக்
கிண்கிணி கிணின்கிணின் கிணினெனக்
குண்டல மசைந்திளங் குழைகளிற் ப்ரபைவீசத்

---

*பிறகிட - நெருங்கிக்கொண்டு வருகிற. †சங்கதம்-நட்பு. ‡ அந்திபகல் - கேவலசகலம். § கந்தனை-கந்தனுகிய நின்னை; இது இடவழுவமைதி.

தந்தன தனந்தனந் தனவெனச்
செஞ்சிறு சதங்கைகொஞ் சிடமணித்
தண்டைகள் கலின்கலின் கலினெனத் திருவான

சங்கரி மனங்குழைந் துருகமுத்
தந்தர வருஞ்செழுந் தளர்நடைச்
சந்ததி சகந்தொழுஞ் சரவணப் பெருமாளே. (௨௭)

தனனதன தான தானன தனனதன தான தானன
தனனதன தான தானன தந்தத் தந்தத் தனதான.

45. அருணமணி மேவு பூஜித*ம்ருகமத படீர லேபன
†அபினவவி சால பூரண அம்பொற் கும்பத் தனமோதி

அளிகுலவு மாதர் லீலையின் முழுகியபி ஷேக மீதெனை
அறவுமுற வாடி நீடிய அங்கைக் கொங்கைக் கிதமாகி

‡இருணிறைய மோதி மாலிகை சருவியுற வான வேளையில்
இழைகலைய மாத ரார்வழி இன்புற் றன்புற் றுரியாநீள்

இரவுபகல் மோக மேகொடு படியில்மடி யாமல் யானுமுன்
இணையடிகள் பாடி வாழஎன் நெஞ்சிற் செஞ்சொற் றருவாயே

தருணமணி யாட ராவணி குடிலசடி லாதி யோதிய
சதுர்மறையி னாதி யாகிய சங்கத் துங்கக் குருநாயாளர்

தருமுருக மேக சாயலர் §தமரமக ராழி சூழ்புவி
தனைமுழுதும் வாரி யேயமு துண்டிட் டண்டர்க் கருள்கூரும்

செருமுதலி மேவு மாவலி அதிமதக போல மாமலை
தெளிவினுடன் மூல மேயென முந்தச் சிந்திக் கருள்மாயன்

திருமருக சூரன் மார்பொடு சிலையுருவ வேலை யேவிய
செயசரவ ணாம னோகர செந்திற் கந்தப் பெருமாளே. (௨௮)

---

*மிருகமதம் - கஸ்தூரி. படீரம்-சந்தனம். † அபிநவம் - அதிசயம்.
‡இருள் நிறை அம் ஓதி-கருமை நிறைந்த அழகிய கூந்தல். §தமரம் - ஒலி.

தனத்தந் தானன தானன தானன
தனத்தந் தானன தானன தானன
தனத்தந் தானன தானன தானன தனதான.

46. அனிச்சங் * கார்முகம் வீசிட மாசறு
துகட்பஞ் சானத டாகம்வி டாமட
அனத்தின் தூவிகு லாவிய *சீறடி மடமாதர்

அருக்கன் போலொளி வீசிய மாமர
கதப்பைம் பூணணி வார்முலை மேல்முகம்
அழுத்தும் பாவியை ஆவி†இ டேறிட நெறிபாரா

வினைச்சண் டாளனை வீணனை நீணிதி
தனைக்கண் டாணவ மானமிர் மூடனை
‡விடக்கன் பாய்நுகர் பாழனை யோர்மொழி பகராதே

விகற்பங் கூறிடு மோக விகாரனை
அறத்தின் பாலொழு காதமு தேவியை
விளித்துன் பாதுகை நீதர நானருள் பெறுவேனோ

முனைச்சங் கோலிடு நீலம கோததி
அடைத்தஞ் சாதஇ ராவண னீள்பல
முடிக்கன் றோர்கணை ஏவுமி ராகவன் மருகோனே

மூளைக்குஞ் சீதநி லாவொட ராவிரி
திரைக்கங் காநதி § தாதகி || கூவிள
முடிக்குஞ் சேகரர் பேரரு ளால்வரு முருகோனே

தினைச்செங் கானக வேடுவ ரானவர்
திகைத்தந் தோவென வேகணி யாகிய
திறற்கந் தாவளி நாயகி காமுறும் எழில்வேலா

திறக்குந் தாமரை யோடையில் மேடையில்
நிறக்குஞ் சூல்வளை பால்மணி வீசிய
திருச்செந் தூர்வரு சேவக னேசுரர் பெருமாளே. (உசு)

கார்முகம் - மஞ்சுகொட்டும் வில். * சீறடி-சிற்றடி. † இடேறிட - ஈடேறிட. ‡ விடக்கு - மாமிசம். § தாதகி-ஆத்தி. || கூவிளம் - வில்வம்.

தனதனன தந்த தந்த தனதனன தந்த தந்த
தனதனன தந்த தந்த தனதான.

47. அனைவருமரு ண்ட ருண்டு கடிதெனவெ குண்டி யம்ப
அமரஅடி பின்தொடர்ந்து பிணநாறும்
அழுகுபிணி கொண்டு விண்டு புழுவுடனெ லும்ப லம்பும்
அவலவுட லஞ்சு மந்து தடுமாறி
மனைதொறுமி தம்ப கர்ந்து வரவரவி ருந்த ருந்தி
மனவழிதி ரிந்து மங்கும் வசைதீர
மறைசதுர் விதந்தெ ரிந்து வகைசிறுச தங்கை கொஞ்சு
மலரடிவ ணங்க என்று பெறுவேனோ
தினைமிசை *சு கங்க டிந்த புனமயிலி ளங்கு ரும்பை
திகழிருத னப்பு ணர்ந்த திருமார்பா
செகமுழுது முன்பு தும்பி முகவனொடு தந்தை முன்பு
திகிரிவலம் வந்த செம்பொன் மயில்வீரா
இனியகனி மந்தி சிந்து மலைகிழவ செந்தில் வந்த
இறைவகுக கந்த என்றும் இளையோனே
எழுகடலு மெண்சி லம்பும் நிசிசரரும் அஞ்ச அஞ்சும்
இமையவரை அஞ்ச லென்ற பெருமாளே (௩ ௰)

தனனதன தந்த தந்தன தனனதன தந்த தந்தன
தனனதன தந்த தந்தன தனதான.

48. இருகுழையெ றிந்தகெண்டைகள் ஒருகுமிழ டர்ந்து வந்திட
இணைசிலைநெ றிந்தெ ழுந்திட அணைமீதே
இருளளக பந்தி வஞ்சியி லிருகலையு டன்கு லைந்திட
இதழமுத ருந்து சிங்கியின் மனமாய
முருகொடுக லந்த சந்தன † அளறுபடு குங்கு மங்கமழ்
முலைமுகடு கொண்டெ ழுந்தொறு முருகார
முழுமதிபு ரிந்த சிந்துர அரிவையரு டன்க லந்திடு
‡முகடியுந லம்பி றந்திட அருள்வாயே

* சுகங்கடிந்த-கிளிகளையோட்டிய † அளறு-சேறு. ‡முகடி-மூதேவி. முகடியும்-முகடிக்கும்; நான்காம் வேற்றுமை உருபு தொக்கது.

எரிவிடநி மிர்ந்த குஞ்சியி னிலவொடுமெ ழுந்த கங்கையு
மிதழியொ டணிந்த சங்கரர் களிகூரும்

இமவரைத ருங்க ருங்குயில் மரகதநி றந்த ருங்கிளி
எனதுயிரெ னுந்த்ரி யம்பகி பெருவாழ்வே

அடைவடம லம்பு கிண்கிணி பரிபுரநெ ருங்கு தண்டைகள்
அணிமணிச தங்கை கொஞ்சிட மயில்மேலே

அகமகிழ்வு கொண்டு சந்ததம்வருகுமர முன்றி லின்புறம்
அலைபொருத செந்தில் தங்கிய பெருமாளே. (௩௧)

தனதன தனன தனத்தத் தாத்தன
தனதன தனன தனத்தத் தாத்தன
தனதன தனன தனத்தத் தாத்தன தந்ததான

49. இருள்விரி குழலை விரித்துத் தூற்றவும்
இறுகிய துகிலை நெகிழ்த்துக் காட்டவும்
இருகடை விழியு முறுக்கிப் பார்க்கவும் மைந்தரோடே

இலைபிள வதனை மடித்துக் கேட்கவும்
மறுமொழி பலவு மிசைத்துச் சாற்றவும்
இடையிடை சிறிது நகைத்துக் காட்டவும் எங்கள்வீடே

வருகென வொருசொ லுரைத்துப் பூட்டவும்
விரிமல ரமளி அணைத்துச் சேர்க்கவும்
வருபொரு ளளவி லுருக்கித் தேற்றவும் நிந்தையாலே

வனைமனை *புகுதி லடித்துப் போக்கவும்
ஒருதலை மருவு புணர்ச்சித் தூர்த்தர்கள்
வசைவிட நினது பதத்தைப் போற்றுவ தெந்தநாளோ

குருமணி வயிர மிழித்துக் கோட்டிய
கழைவட உருவு வெளுத்துத் தோற்றிய
†குளிறிசை அருவி கொழித்துத் தூற்றிய மண்டுநீ ‡ளூர்

குழிபடு § கலுழி வயிற்றைத் தூர்த்தெழு
திடர்மண லிறுகு || துருத்திக் காப்பொதி
குளிர்நிழ லருவி கலக்கிப் பூப்புனை வண்டலாடா

---

*புகுதில்-புகுந்தால். †குளிறு - சப்திக்கின்ற. ‡ஊர்-செல்லுகின்ற. § கலுழி - கான்யாறு. || துருத்தி கா - திட்டினிடத்துள்ள சோலை.

முருகவிழ் துணர்க ளுருத்துக் காய்த்தினை
விளை நடு *இதணி லிருப்பைக் காட்டிய
முகிழ்முலை இளைய குறத்திக் காட்படு செந்தில்வாழ்வே
மூளையிள மதியை யெடுத்துச் சாத்திய
சடைமுடி இறைவர் தமக்குச் சாத்திர
முறையருள் முருக தவத்தைக் காப்பவர் தம்பிரானே (௪௯)

தனனதன தந்த தானதன
தனனதன தந்த தானதன
தனனதன தந்த தானதன தந்ததான.

50. உததியறல் மொண்டு சூழ்கரு
முகிலெனஇ ருண்ட நீலமிக
ஒளிதிகழு மன்ற லோதிநரை பஞ்சுபோலாய்
உதிரமெழு துங்க வேலவிழி
மிடைகடையொ துங்கு பீளைகளு
முடைதயிர்பி திர்ந்த தோஷமென வெம்புலாலாய்
மதகரட தந்தி வாயினிடை
செருகுபிறை தந்த சூதுகளின்
வடிவுதரு கும்ப மோதிவளர் கொங்கைதோலாய்
†வனமழியு மங்கை மாதர்களி
னிலைதனையு ணர்ந்து தாளிணையு
வழியடிமை அன்பு கூருமது சிந்தியேனோ
இதழ்பொதிஅ விழ்ந்த தாமரையின்
மணவறைபு குந்த நான்முகனும்
எறிதிரைய லம்பு பாலுததி நஞ்சராமேல்
இருவிழிது யின்ற நாரணனும்
உமைமருவு சந்த்ர சேகரனும்
இமையவர்வ ணங்கு வாசவனும் நின்றுதாழும்
முதல்வசுக மைந்த பீடிகையில்
அகிலசக அண்ட நாயகிதன்
முகிழ்முலைசு ரந்த பாலமுதம் உண்டவேளே

---

*இதண்-பரண். †வனம்-அழகு.

முளைமுருகு சங்கு விசி அலை
மூடுகி *மைதவழ்ந்த வாபெருகி
முதலிவரு செந்தில் வாழ்வுதரு தம்பிரானே. (௫௫)

தத்ததன தத்தத் தனந்தந் தனந்ததன
தத்ததன தத்தத் தனந்தந் தனந்ததன
தத்ததன தத்தத் தனந்தந் தனந்ததன தனதான.

51. கட்டழகு விட்டுத் தளர்ந்தங் கிருந்துமுன
மிட்டபொறி தப்பிப் பிணங்கொண் டதின்சிலர்கள்
கட்டணமெ டுத்துச் சுமந்தும் பெரும்பறைகள் முறையோடே

வெட்டிவிட வெட்டக் கிடஞ்சங் கிடஞ்சமென
மக்களொரு மிக்கத் தொடர்ந்தும் புரண்டும்வழி
விட்டுவருமித்தைத் தவிர்ந்துன் பதங்களுறஉணர்வேனோ

பட்டுருவி நெட்டைக் க்ரெளஞ்சம் பிளந்துகடல்
முற்றமலை வற்றிக் குழம்புங் குழம்பஅனை
பட்டஅயில் தொட்டுத் திடங்கொண் டெதிர்ந்தவுணர்முடிசாயத்

துட்டழிய வெட்டிக் கவந்தம் பெருங்கழுகு
நிர்த்தமிட ரத்தக் குளங்கண் டுமிழ்ந்துமணி
சற்சமைய வித்தைப் பலன்கண் டுசெந்திலுறை பெருமாளே (௫௬)

தந்ததன தந்த தந்த தந்ததன தந்த தந்த
தந்ததன தந்த தந்த தனதான.

52. கண்டுமொழி †கொம்பு கொங்கை வஞ்சியிடை அம்பு நஞ்சு
கண்கள் குழல் கொண்ட லென்று பலகாலும்

கண்டுளம்வ ருந்தி நொந்து மங்கையர்வ சம்பு ரிந்து
கங்குல்பக லென்று நின்று விதியாலே

பண்டைவினை கொண்டு ழன்று வெந்துவிழு கின்றல் கண்டு
பங்கயப தங்கள் தந்து புகழோதும்

---

*மை தவழ்ந்தவா-மேகம் தவழ்ந்ததுபோல. †கொம்பு-யானைக்கொம்பு.

பண்புடைய சிந்தை யன்பர் தங்களினு டன்க லந்து
 பண்புபெற அஞ்ச லஞ்சல் எனவாராய்

வண்படு கின்ற தொங்கல் கொண்டறநெ ருங்கி விஞ்ச
 வம்பினைய டைந்து *சந்தின் மிகமூழ்கி

†வஞ்சியைமு னிந்த கொங்கை மென்குறம டந்தை செங்கை
 வந்தழகு டன்க லந்த மணிமார்பா

திண்டிறல்பு னைந்த அண்டர் தங்களப யங்கள் கண்டு
 செஞ்‡ சமர் புனைந்து துங்க மயில்மீதே

சென்றசுர ரஞ்ச வென்று குன்றிடைம ணம்பு ணர்ந்து
 செந்தில்நகர் வந்த மர்ந்த பெருமாளே. (௫௨)

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன தனதான.

53. களப மொழுகிய புளகித முலையினர்
 கடுவு மமிர்தமும் விரவிய விழியினர்;
 கழுவு சரிபுழு கொழுகிய குழலினர் எவரோடும்

கலக மிடுகய லெறிகுழை விரகியர்
 பொருளி லளவுரை வழிகொடு மொழிகொடு
 தளர விடுபவர் தெருவினி லெவரையும் நகையாடிப்

பிளவு பெறிலதி லளவள வொழுகியர்
 நடையி லுடையினி லழகொடு திரிபவர்
 பெருகு பொருள்பெறி லமளியி லிதமொடு குழைவோடே

பிணமு மணைபவர் §வெறிதரு புனலுணும்
 அவச வனிதையர் முடுகொடு மணைபவர்
 ||பெருமை உடையவர் உறவினை விடஅருள் புரிவாயே

* சந்து-சந்தனம் †வஞ்சியை முனிந்த - கொடிபோலும் இடையை வருத்துகின்ற ‡ சமர்புனைந்து - போர்க்கோலங்கொண்டு. § வெறிதரு புனல் - குடிவகை. || பெருமை - இவண் சிறுமைப் பொருள் தரும்.

*அளையி லுறைபுலி பெறு †மக வயிறரு
பசுவி னிரைமுலை அமுதுண ‡நிரைமகள்
§வசவ னெடுபுலி முலையுண மலையுடன் உருகாநீள்

அடவி தனிலுள ||உலவைகள் தளிர்விட
மருள மதமொடு களிறுகள் பிடியுடன்
அகல வெளியுயர் பறவைகள் நிலம்வர விரல்சே¶ரேழ்

துளைகள் விடுதழை விரன்முறை தடவிய
இசைகள் பலபல தொனிதரு கருமுகில்
சுருதி உடையவ னெடியவன் மனமகிழ் மருகோனே

துணைவ குணதர சரவண பவநம
முருக குருபர வளரறு முககுக
துறையி லலையெறி திருநகருறைதரு பெருமாளே (௫௩)

தனந்த தந்த தந்தனந் தனந்த தந்த தந்தனந்
தனந்த தந்த தந்த தந்த தனதான.

54. கனங்கள் கொண்ட குந்தளங் களுங்குலைந்த லைந்துவிஞ்
சுகண்க ளுஞ்சி வந்த யர்ந்து களிகூரக்
கரங்க ளுங்கு விந்துநெஞ் சகங்க ளுங்க சிந்திடுங்
கறங்கு பெண்க ளுட்பி றந்து விலைகூறிப்
பொனின்கு டங்க ளஞ்சுமென் தனங்க ளும்பு யங்களும்
பொருந்தி அன்பு நண்பு பண்பு முடனேகப்
புணர்ந்து டன்பு லர்ந்துபின் கலந்த கங்கு ழைந்தவம்
புரிந்து சந்த தந்தி ரிந்து படுவேனோ
அனங்க னைந்து நைந்துவெந் துகுந்து சிந்த அன்றுகண்
திறந்தி ருண்ட கண்டர் தந்த அயில்வேலா
அடர்ந்த டர்ந்தெ திர்ந்துவந் தவஞ்ச ரஞ்ச வெஞ்சமம்
புரிந்த அன்ப ரின்ப நண்ப உரவோனே

---

*அளை - மலைக்குகை. † மகவயிறரு - மகவு + அயில்தரு; அயில்தரல்-குடித்தல். ‡நிரைமகள்-பசுவின் பெண்கன்று. §வசவன்-ஆண்கன்று. || உலவைகள்-மரங்கள்-¶ எழ்துளைகள் விடுதழை - புல்லாங்குழல்.

சினங்கள் கொண்டி லங்கைமன் சிரங்கள் சிந்த வெஞ்சரந்
தெரிந்த வன்ப ரிந்த இன்ப மருகோனே
சிவந்த செஞ்ச தங்கையுஞ் சிலம்பு தண்டை யும்புனைந்
துசெந்தில் வந்த கந்த எங்கள் பெருமாளே. (௫௪)

தந்ததன தந்ததன தந்ததன தந்ததன
தந்ததன தந்ததன தந்ததான.

55. கொங்கைகள்கு லுங்கவளை செங்கையில்வி ளங்கஇருள்
கொண்டலைய டைந்தகுழல் வண்டுபாடக்
கொஞ்சிய *வ னங்குயில்கள் †பஞ்சநல்வ னங்கிளிகள்
கொஞ்சியதெ னுங்குரல்கள் ‡கெந்துபாயும்
வெங்கயல்மி ரண்டவிழி அம்புலிய டைந்தநுதல்
விஞ்சையர்கள் தங்கள்மயல் கொண்டுமேலாய்
வெம்பிணியு ழன்ற §பவ சிந்தனைகி லைந்துனது
மின்சரண பைங்கழலொ டண்டஆளாய்
சங்கமுர சந்திமிலை துந்திமித தும்பவளை
தந்தனத னந்தவென வந்தசூரர்
சங்கைகெட மண்டுதிகை எங்கணுமடி ந்திடவொர்
தண்கடல்கொ ளுந்தநகை கொண்டவேலா
சங்கரனு கந்தபரி வின்குருவெ னுஞ்சுருதி
தங்களின்ம கிழ்ந்துருகு மொங்கல்கோவே
சந்திரமு கஞ்செயல்கொள் சுந்தர‖கு றப்பெணொடு
சப்புபுகழ் செந்தில்மகிழ் தம்பிரானே. (௫௫)

தந்தன தானன தானன
தந்தன தானன தானன
தந்தன தானன தானன தனதான.

56. கொம்பனை யார்காது மோதிரு
சண்களி லாமோத சீதள
குங்கும பாடீர பூஷண நகமேவு

*வனங்குயில்-அழகிய குயில்கள். †பஞ்ச நல்வனம் கிளிகள் நல்ல பஞ்சவர்ணக் கிளிகள். ‡கெந்துபாயும் - தெளிந்துபாயும். §பவசிந்தனை - பிறவிக்கடலில் அலைபவனை. ‖குறம்பெண் - குறப்பெண், விகாரம்.

திருச்செந்தூர்.

கொங்கையில் * நீராவி மேல்வளர்
செங்கழு நீர்மாலை சூடிய
கொண்டையி லாதார சோலையில் மருளாதே

உம்பர்கள் சாமீந மோநம
எம்பெரு மானேந மோநம
ஒண்டொடி மோகாந மோநம என நாளும்

உன்புக ழேபாடி நானினி
அன்புட னாசார பூஜைசெய்
துய்ந்திட வீணாள்ப டாதருள் புரிவாயே

பம்பர மேபோல ஆடிய
சங்கரி வேதாள நாயகி
பங்கய சீபாத நூபுரி கரசூலி

† பங்கமி லாநீலி மோடிப
யங்கரி மாகாளி யோகினி
பண்டசு ராபான சூரனொ டெதிர்போர்கண்

டெம்புதல் வாவாழி வாழியெ
னும்படி வீறான வேல்தர
என்றுமு ளானேம னோகர வயலூரா

இன்சொல்வி சாகாக்ரு பாகர
செந்திலில் வாழ்வாகி யேஅடி
யென்றனை ஈடேற வாழ்வருள் பெருமாளே. (௩௯)

தத்ததன தானதன தத்தான
தத்ததன தானதன தத்தான
தத்ததன தானதன தத்தான தனதான.

7. சத்தமிகு மேழுகட லைத்தேனை
உற்றமது தோடுகணை யைப்போர்கொள்
சத்திதனை மாவின்வடு வைக்காவி தனைமீறு

* நீர் ஆவி - நீர்த்தடாகம். † பங்கம் குற்றம்.

தக்கமணம் வீசுகமலப்பூவை
மிக்கவிளை வானகடு வைச்*சீறு
தத்துகளும் வாளையடு மைப்பாவு விழிமாதர்
மத்தகிரி போலுமொளிர் வித்தார
முத்துவட மேவுமெழில் மிக்கான
வச்சிரகி ரீடகிரி செப்பான தனமீதே
வைத்தகொடி தானமயல் விட்டான
பத்திசெய ஏழையடி மைக்காக
வஜ்ரமயில் மீதினிலி எப்போது வருவாயே
சித்ரவடி வேல்பனிரு கைக்கார
பத்திபுரி வோர்கள்பனு வற்கார
திக்கினுமந டாவுபுர விக்கார குமாரா
சித்தஅறு நாககல விக்கார
துட்டஅசு ரேசர்கல கக்கார
சிட்டர்பரி பாலலளி தக்கார அடியார்கள்
முத்திபெற ‡வேசொல்வச னக்கார
தத்தைதிகழ் தூயவனி தைக்கார
முச்சகர்ப ராவுசர ணக்கார இனிதான
முத்தமிழை ஆயும்வரி சைக்கார
பச்சைமுகில் தாவுபுரி சைக்கார
முத்துலவு வேலைநகர் ‡முத்தேவர் பெருமாளே (௫௦)

தனனதன தாந்த தந்தத்
தனனதன தாந்த தந்தத்
தனனதன தாந்த தந்தத் தனதான.

58. †தகரநறை பூண்ட விந்தைக்
குழலியர்கள் தேய்ந்த இன்பத்
தளருமிடை ஏந்து தங்கத் தனமாலும்
தமைமனதில் வாஞ்சை பொங்கக்
கலவியொடு சேர்ந்து மந்த்ரச்
சமயசெப நீங்கி இந்தப் படிநாளும்

*சீறு உதைத்து கோபிக்கின்ற யுத்தத்தில். †தகரம் - மயிர்ச்சாந்து.

புகலரிய தாந்த்ரி சங்கத்
*தமிழ்பனுவ லாய்ந்து கொஞ்சிப்
புவியதனில் வாய்ந்து வஞ்சித் துழல்மூடர்
புனிதமிலி மாந்தர் தங்கட்
புகழ்பகர்தல் நீங்கி நின்பொற்
புளகமலர் பூண்டு வந்தித் திடுவேனோ
தகுடதகு தாந்த தந்தத்
திகுடதிகு தீந்த திந்தித்
தகுகணக தாங்க ணாங்கத் தனதான
தனனதன தாந்த தந்தத்
தெனநடன மார்ந்த துங்கத்
தனிமயிலை ஊர்ந்த சந்தத் திருமார்பா
திகையசுரர் மாண்ட மூழ்ந்தத்
திறலயிலை வாங்கு செங்கைச்
சிமையவரை ஈன்ற மங்கைக் கொருபாலா
திகழ்வயிர மேந்து கொங்கைக்
குறவனிதை காந்த சந்த்ரச்
சிகரமுகி லோங்கு செந்திற் பெருமாளே. (௪௧)

தந்ததன தந்தனந் தந்ததன தந்தனந்
தந்ததன தந்தனந் தந்ததான,

59. தண்டையணி வெண்டையங் கிண்கிணிச தங்கையும்
தண்கழல்சி லம்புடன் கொஞ்சவேநின்
தந்தையினை முன்பரிந் தின்†பவுரி கொண்டுநன்
‡சந்தொடம ணைந்துநின் றன்புபோலக்
கண் $ டுறகடம்புடன் சந்தமகு டங்களும்
கஞ்சமலர் செங்கையுஞ் சிந்துவேலும்
கண்களுமு கங்களுஞ் சந்திர §நி றங்களுங்
கண்குளிர என்றன்முன் சந்தியாவோ

* தமிழ் பனுவல், $ உறகட்டிப சந்தம் நோக்கி மிகாதபடி இயல்பாயின,
† பவுரி-கூத்து. ‡ சந்தொடம் - சந்தோஷம். § நிறம் - காந்தி.

புண்டரிக ரண்டமுங் கொண்டபகி ரண்டமும்
பொங்கிஎழ வெங்களங் கொண்டபோது

*பொன்கிரியெ னஞ்சிறந் தெங்கணும்வ ளர்ந்துமுன்
புண்டரிகர் தந்தையுஞ் சிந்தைகூரக்

கொண்டநட னம்பதஞ் செந்திலிலு மென்றன்முன்
கொஞ்சிநட னங்கொளுங் கந்தவேளே

கொங்கைகுற மங்கையின் சந்தமணமுண்டிடுங்
கும்பமுனி கும்பிடுந் தம்பிரானே (௪௨

தனத்த தத்தத் தனத்தன
தனத்த தத்தத் தனத்தன
தனத்த தத்தத் தனத்தன தந்ததானதனன

60. தெருப்பு றத்துத் துவக்கியாய்
முலைக்கு வட்டைக் குலுக்கியாய்ச்
சிரித்து ருக்கித் தருக்கியே பண்டைகூளமெனவாழ்

சிறுக்கி ரட்சைக் கிதக்கியாய்
மனத்தை வைத்துக் கனத்தபேர்
தியக்க முற்றுத் தவிக்கவே கண்டுபேசியுடனே

இருப்ப கத்துத் தளத்துமேல்
விளக்கெ டுத்துப் படுத்துமேல்
இருத்தி வைத்துப் பசப்பியே கொண்டுகாசுதனியா

திதுக்க துக்குக் †கடப்படா
மெனக்கை கக்கக் கழற்றியே
இளைக்க விட்டுத் துரத்துவார் தங்கள்சேர்வைதவிராய்

பொருப்பை ஒக்கப் பணைத்ததோர்
இரட்டி பத்துப் புயத்தினை
பொறுத்த பத்துச் சிரத்தினை மண்டுகோபமுடனே

பொரப்பொ ருப்பிற் கதித்தபோர்
அரக்கர் பட்டுப் பதைக்கவே
புடைத்து முட்டத் துணித்தமால் அன்புகூருமருகா

---

*பொன்கிரியென் அம்சிறந்து. †கடப்படாம் - கடமைப்படாம்;

வரப்பை எட்டிக் குதித்துமேல்
இடத்தில் வட்டத் தளத்திலே
மதர்த்தமுத்தைக் *குவட்டியேநின்றுசேலினினம்வாழ்
வயற்பு றத்துப் புலிக்குணீள்
திருத்த ணிக்குட் சிறப்பில்வாழ்
வயத்தபித்தத் துவத்தனே செந்தில்மேவுகுகனே. (சரு)

தந்த தனன தனனு தனனதன
தந்த தனன தனனு தனனதன
தந்த தனன தனனு தனனதன தனதான.

61\. தொந்தி சரிய மயிரே வெளிற†நிரை
தந்த மசைய முதுகே வளையஇதழ்
தொங்க ஒருகை தடிமேல் வரமகளிர் நகையாடித்

தொண்டு கிழவ னிவனு ரெனஇருமல்
கிண்கி ணெனமு னுரையே குழறவிழி
துஞ்சு குருடு படவே செவிடுபடு செவியாகி

வந்த பிணியு மதிலே ‡மிடையுமொரு
பண்டி தனுமெ யுறவே தனையுமிள
மைந்த ருடைமை கடனே தெனமுடுகு துயர்மேவி

மங்கை அழுது விழவே யமபடர்கள்
நின்று சருவ மலமே ஒழுகவுயிர்
மங்கு பொழுது கடிதே மயிலின்மிசை வரவேணும்

எந்தை வருக ரகுநா யகவருக
மைந்த வருக மகனே இனிவருக
என்கண் வருக எனதா ருயிர்வருக அபிராம

இங்கு வருக அரசே வருகமுலை
உண்க வருக மலர்சூ டிடவருக
என்று பரிவி னொடுகோ சலைபுகல வருமாயன்

சிந்தை மகிழு மருகா குறவரிள
வஞ்சி மருவு மழகா அமரர்சிறை
சிந்த அசுரர் கிளைவே ரொடுமடிய அடுதீரா

*குவட்டி - திரட்டி. †நிரை - வரிசை. ‡மிடையும - நெருங்கும்.

திங்க ளரவு நதிசூ டியபரமர்
தந்த குமர அலையே கரைபொருத
செந்தி னகரி லினிதே மருவிவளர் பெருமாளே. (௪௪)

தானன தானன தானன தந்தத்
தானன தானன தானன தந்தத்
தானன தானன தானன தந்தத் தனதானா.

62. தோலொடு மூடிய கூரையை நம்பிப்
பாவையர் தோதக லீலைநி ரம்பிச்
சூழ்பொருள் தேடிட ஓடிவ ருந்திப் புதிதான

தூதொடு நான்மணி மாலைப்ர பந்தக்
கோவையு லாமடல் கூறிய மூந்தித்
*தோமுறு லோபியர் வாசல்தொ றும்புக் †கலமாருங்

காலனை வீணனை நீதிகெ டும்பொய்க்
கோளனை மானமி லாவழி நெஞ்சக்
காதக கோபவ்ரு தாவனை நிந்தைப் புலையேனைக்

காரண காரிய லோகப்ர பஞ்சச்
சோகமெ லாமற வாழ்வுற ‡நம்பிற்
காசறு வாரிமெய்ஞ் ஞான தவஞ்சற் றருளாதோ

§பாலன மீதும ணன்முக செம்பொற்
பாலனை மோ‖தப ராதன பண்டப்
பாரிய மாருதி தோள்மிசை கொண்டுற் றமராடிப்

பாவியி ராவண னார்தலை சிந்திச்
சீரிய வீடணர் வாழ்வுற மன்றற்
பாவையர் தோள்புணர் மாதுலர் சிந்தைக் கினியோனே

சீலமு லாவிய நாரதர் வந்துற்
றீதவள் வாழ்புன மாமென முந்தித்
தேமொழி பாளித கோமள இன்பக் கிரிதோய்வாய்

* தோம்-குற்றம். † அலமரும்எனற்பாலது அலமாரும்என நீண்டது. ‡ நம்பில் - விருப்பத்தினால். நம்பு-விருப்பம் § பால் அனம் மீது மன் நான்முக எனப்பிரிக்க. ‖ அபராதன-குற்றத்திற்குத் தண்டஞ்செய்தவனே.

சேலொடு வாளைவ ரால்கள்கி ளம்பித்
தாறுகொள் பூகம ளாவிய இன்பச்
சீரலை வாய்நகர் மேவிய கந்தப் பெருமாளே. (௬௨)

தான தந்த தான தான தான தந்த தான தான
தான தந்த தான தான தனதான.

63. நாலு மைந்து வாசல் கீறு தூறு டம்பு கால்கை யூாகி
நாரி யென்பி லாகு மாக மதனூடே
நாத மொன்ற ஆதி வாயில் நாட கங்க ளான ஆடி
நாட றிந்தி டாம லேக வளராமுன்
ஞால நந்த கோடி தேடி மால்மி குந்து பாரு ளோரை
நாலு செஞ்சொல் கூறி மாறி வினைதீமை
நோய்க லந்த வாழ்வு ருமல் நீக லந்து ளாகு ஞான
நூல டங்க வோத வாழ்வு தருவாயே
காலன் வந்து *பால னாவி காய வென்று பாசம் வீசு
காலம் வந்த ஓல மோல மெனுமாதி
காம னைந்து பாண மோடு †வேமி னென்று காணு மோனர்
காள கண்ட ரோடு வேத மொழிவோனே
ஆல மொன்று வேலை யாகி ஆனை அஞ்சல் தீரு மூல
ஆழி அங்கை ஆயன் மாயன் மருகோனே
ஆர ணங்கள் தானை நாட ‡வார ணங்கை மேவு மாதி
ஆன செந்தில் வாழ்வ தான் பெருமாளே. (௬௩)

தனத்தத் தந்தனந் தனத்தத் தந்தனந்
தனத்தத் தந்தனந் தனதான.

64. நிதிக்குப் §பிங்கலன் பதத்துக் கிந்திரன்
நிறத்திற் ||கந்தனென் றினைவோரை
நிலத்திற் றன்பெரும் பசிக்குத் தஞ்சமென்
றாற்றித் துன்பநெஞ் சினில்நாளும்

---

* பாலன் - மார்க்கண்டன். †வேமின் - சாபம்லாப்போ ‡ வாரணம் - கோழிக்கொடி. § பிங்கலன் - குபேரன். || கந்தன் - மன்மதன்.

புதுச்சொற் சங்கமொன் றுரைத்துச் சங்கடம்
புகட்டிக் கொண்டிடம் பழிமாயும்
புலத்திற் சஞ்சலங் குலைத்திட் டின்பதம்
புணர்க்கைக் கன்புதந் தருள்வாயே
மதித்துத் திண்புரம் சிரித்துக் கொன்றிடும்
*மறத்திற் றந்தைமன் றினிலாடி
மழுக்கைக் கொண்டசங் கரர்க்குச் சென்றுவண்
டமிழ்ச்சொற் சந்தமொன் றருள்வோனே
குதித்துக் குன்றிடந் தழைத்துச் செம்பொனுங்
கொழித்துக் கொண்டசெந் திலின்வாழ்வே
குறப்பொற் கொம்பைமுன் புனத்திற் செங்கரங்
குவித்துக் கும்பிடும் பெருமாளே. (சஎ)

தனதனன தான தான தந்தன
தனதனன தான தான தந்தன
தனதனன தான தான தந்தன தந்ததான.

65. படர் புவியின் மீது மீறி வஞ்சர்கள்
வியனினுரை பானு வாய்வி யந்துரை
பழுதில்பெரு சீல நூல்க ளுந்தெரி சங்கபாடல்
பனுவல்கதை காவ்ய மாமெ ணெண்கலை
திருவளுவ தேவர் வாய்மை யென்கிற
பழமொழியை ஓதி யேயு ணர்ந்துபல் சந்தமாலை
மடல்பரணி கோவை யார்க லம்பக
முதலுளது கோடி. கோள்ப்ர பந்தமும்
வகைவகையி லாசு சேர்பெ ருங்கவி சண்டவாயு
மதுரகவி ராச னானென் வெண்குடை
விருதுகொடி தாள மேள தண்டிகை
வரிசையொடு லாவு மால கந்தைத விர்ந்திடாதோ
அடல்பொருது †பூச லேவி ளைந்திட
எதிர்பொருவொ ணாம லேகை சங்கர
அரகரசி வாம கா‡தெ வென்றுனி அன்றுசேவித்

* மறம், வீரம். † பூசல் - போர். ‡ தெவென்று - தேவென்று.

தவனிவெகு கால மாய்வ ணங்கியுள்
உருகிவெகு பாச கோச சம்ப்ரம
அதிபெலக டோர மாச லந்தர ணெந்துவீழ
உடல்தடியு மாழி *தாவெ னம்புய
மலர்கள்தச நூறு தாளி டும்பகல்
ஒருமலரி லாது †கோவ ணிந்திடு செங்கண்மாலுக்
குதவியம கேசர் பால இந்திரன்
மகளை மண மேவி வீறு செந்திலில்
உரியவடி யேனை ஆள வந்தருள் தம்பிரானே (௬அ)

தனத்தத்தந் தனத்தத்தந் தனத்தத்தந் தனத்தத்தந்
தனத்தத்தந் தனத்தத்தந் தனதான.

66. பெருக்கச்சஞ் சலித்துக் ‡கந் தலுற்றுப்புந் தியற்றுப்பின்
பிழைப்பற்றுங் குழைப்புற்றும் பொதுமாதர்
ப்ரியப்பட்டங் கழைத்துத்தங் கலைக்குட்டங் கிடப்பட்சம்
பிணித்துத்தந் தனத்தைத்தந் தணையாதே
§புரக்கைக்குன் பதத்தைத்தந் தெனக்குத்தொண் டுறப்பற்றும்
புலத்துக்கண் செழிக்கச்செந் தமிழ்பாடும்
புலப்பட்டங் கொடுத்தற்குங் கருத்திற்கண் படக்கிட்டும்
புகழ்ச்சிக்குங் க்ருபைச்சித்தம் புரிவாயே
தருக்கிக்கண் களிக்கத்தெண் டனிட்டுத்தண் புனத்திற்செங்
குறத்திக்கன் புறச்சித்தந் தளர்வோனே
சலிப்புற்றங் குரத்திற்சம்ப்ரமித்துக்கொண் டலைத்துத்தன்
சமர்த்திற்சங் கரிக்கத்தண் டியசூரன்
சிரத்தைச்சென் றறுத்துப்பந் தடித்துத்திண் குவட்டைக்கண்
டிடித்துச்செந் திலிற் ||றக்குங் குமரேசா
சிறக்கற் ¶கஞ் செழுத்தத்தந் திருச்சிற்றம் பலத்தத்தன்
செவிக்குப்பண் புறச்செப்பும் பெருமாளே. (௬௯)

---

* தாவெனம்புய - தா x என + அம்புய. † கோ - கண். ‡ கந்தலுற்று - கேடுகெட்டு. § புரக்கை - ஆளுகை || தக்கும் - தங்கும். ¶ அஞ்செழுத்து அத்தம் - பிரணவமந்திரமாகிய பஞ்சாக்ஷரப் பொருள்.

தந்த தந்தன தந்தன தந்தன
தந்த தந்தன தந்தன தந்தன
தந்த தந்தன தந்தனதந்தன தந்ததான.

67. மஞ்செ னுங்குழ லும்பிறை யம்புரு
வங்க ளென்சிலை யுங்கணை யங்கயல்
வண்டு புண்டரி கங்களை யும்பழி சிந்துபார்வை

மண்ட லஞ்சுழ லுஞ்செவி யங்குழை
தங்க வெண்டர ளம்பதி யும்பனு
*மண்ட லந்திக ழுங்கமு கஞ்சிறு கண்டமாதர்

கஞ்சு கங்குர லுங்கழை யம்புய
கொங்கை செங்கிரி யும்பவ ளம்பொறி
கந்த சந்தன மும்பொலி யுந்துகில் வஞ்சிசேரும்

கஞ்ச மண்டளி னின்றிர சம்புகு
கண்ப டர்ந்திட ரம்பையெ னுந்தொடை
கண்கை அஞ்சர ணஞ்செயல் வஞ்சரை நம்புவேனோ

கஞ்ச கஞ்சக ணஞ்சக டுண்டுடு
டுண்டு டிண்டிமி டண்டம டுண்டுடு
தந்த னந்தன திந்திமி சங்குகள் பொங்குதாரை

சம்பு வின்கும ரன்புல வன்பொரு
கந்த னென்றிடு துந்துமி யுந்துவ
சங்க ளங்கொளி ருங்குடை யுந்திசை விஞ்சவேகண்

டஞ்சி வஞ்சக ரன்திர ளுங்குவ
டன்ற டங்களும் வெந்துபொ ரிந்திட
அண்ட ரிந்திர னுஞ்சர ணம்புக வென்றவேளே

†அம்பு யந்தண ரம்பைகு றிஞ்சியின்
மங்கை யங்‡குடில் மங்கையொ டன்புடன்
அண்டருந்தொழு செந்திலி லின்புறு தம்பிரானே.(௫௦)

*மண்டலம் - மண் தலம். † அம்புய அமதண அரமபை எனப்பிரிக்க.
‡குடில் - ஆகாயம்:—அதரவலுலின்னுலகு; குடில்மங்கை - தெய்வயானை.

தான தானன தந்தன தந்தன
தான தானன தந்தன தந்தன
தான தானன தந்தன தந்தன தனதான.

68. மாய வாடைதி மிர்ந்திடு கொங்கையில்
மூடு சீலைதி றந்தம ழுங்கிகள்
வாசல் தோறுந டந்துசி ணுங்கிகள் பழையோர்மேல்

வால நேசநி னைந்தழு வம்பிகள்
ஆசை நோய்கொள்ம ருந்திடு சண்டிகள்
*வாற பேர்பொருள் கண்டுவி ரும்பிகள் எவரேனும்

நேய மேகவி கொண்டுசொல் மிண்டிகள்
காசி லாதவர் தங்களை அன்பற
நீதி போலநெ கிழ்ந்தப ழம்பிகள் அவர்தாய்மார்

நீலி நாடக மும்பயில் மண்டைகள்
†பாளை யூறுக ளுண்டிடு தொண்டிகள்
நீச ரோடுமி ணங்குக டம்பிகள் உறவாமோ

பாயு மாமத தந்திமு கம்பெறும்
ஆதி பாரத மென்ற பெருங்கதை
பார மேருவி லன்று வரைந்தவன் இளையோனே

பாவை யாள்குற மங்கை செழுந்தன
பார மீதில ணைந்து முயங்கிய
பாக மாகிய சந்தன குங்கும மணிமார்பா

‡சீய மாயுரு வங்கொடு வந் § தசு
ரேசன் மார்பை ‖இ டந்து பசுங்குடர்
சேர வாரிய ணிந்த நெடும்புயல் மருகோனே

தேனு லாவுக டம்ப மணிந்தசி
ரீட சேகர சங்கரர் தந்தருள்
தேவநாயக செந்திலு வந்தருள் பெருமாளே. (௬௮)

* 'வருகிற' என்பது 'வாற' என்று மருவிற்று. † பாளையூறு - மது. ‡ சீயம் - நரசிங்கம். § அசுரன் - இரணியன். ‖ இடந்து - இடந்தாக்கிழித்து.

தனதானன தனனந் தாத்த
தனதானன தனனந் தாத்த
தனதானன தனனந் தாத்த தனதான.

69. முகிலாமெனு மளகங் காட்டி
மதிபோலுயர் நுதலுங் காட்டி
முகிழாகிய நகையுங் காட்டி அமுதூறு

மொழியாகிய மதுரங் காட்டி
விழியாகிய கணையுங் காட்டி
*முகமாகிய கமலங் காட்டி மலைபோலே

வகையாமிள முலையுங் காட்டி
இடையாகிய கொடியுங் காட்டி
வளமானகை வளையுங் காட்டி இதமான

மணிசேர்கடி தடமுங் காட்டி
மிகவேதொழி லதிகங் காட்டு
மடமாதர்கள் மயலின் சேற்றில் உழல்வேனோ

நகையால்திரி புரமுந் † தீத்த
சிவனாருள் சுதனென் றூர்க்கு
நலனேயரு ளமர்செந் தூர்க்குள் உறைவோனே

நவமாமணி வடமும் பூத்த
தனமாதெனு ‡மிபமின் சேர்க்கை
நழுவாவகை பிரியங் காட்டு முருகோனே

அகமேவிய நிருதன் போர்க்கு
வரவேசமர் புரியுந் தோற்றம்
அறியாமலு மபயங் காட்டி முறைகூறி

அயிராவத முதுகின் §தோற்றி
அடையாமென இனிதன் பேத்தும்
அமரேசனை முழுதுங் காத்த பெருமாளே. (௬௨)

* முகிழ் - அரும்பு. † புரமும் - உம்மை உயர்வு. தீத்த - தீயச்செய்த; ‡ இபமின் - தெய்வயானை. § தோற்றி - ஏறிச் செல்லுபவன்.

தானதன தான தானந்த தானந்த
தானதன தான தானந்த தானந்த
தானதன தான தானந்த தானந்த தனதான.

0. மூளும்வினை சேர மேல்கொண்டி டாவைந்து
பூதவெகு வாய மாயங்கள் தானெஞ்சில்
மூடிநெறி நீதி ஏதுஞ்செ யாவஞ்சி அதிபார

மோகவினை வான போகஞ்செய் வேணண்டர்
தேடவரி தாய* ஞேயங்க ளாய்நின்ற
மூலபர யோக மேல்கொண்டி டாநின்ற துளதாகி

நாளுமதி வேக கால்கொண்டு தீமண்ட
வாசியன லூடு போயொன்றி வானின்கண்
நாமமதி மீதி லூறுங்க லாவின்ப அமுதூறல்

நாடியதன் மீது போய்நின்ற ஆநந்த
மேலைவெளி ஏறி நீயின்றி நானின்றி
நாடியினும் வேறு தானின்றி வாழ்கின்ற தொருநாளே

காளவிட மூணி மாதங்கி வேதஞ்சொல்
பேதைநெடு நீலி பாதங்க ளால்வந்த
காலன்விழ மோது சாமுண்டி பாரம்பொ டனல்வாயு

காதிமுதிர் வான மேதங்கி வாழ்வஞ்சி
ஆடல்விடை ஏறி பாகங்கு லாமங்கை
காளிநட மாடி நாளன்பர் தாம்வந்து தொழுமாது

வாளமுழு தாளு மோர்தண்டு மூாய்தங்கு
சோதிமணி மார்ப †மாலின்பி னளின்சொல்
வாழுமுமை மாத ராள்மைந்த னேயெந்தை இளையோனே

மாசிலடி யார்கள் வாழ்கின்ற வூர்சென்று
தேடிவிளை யாடி யேயங்ங னேநின்று
வாழுமயில் வீர னேசெந்தில் வாழ்கின்ற பெருமாளே.

---

*ஞேயம - ஞானத்தினால் அறிபொருள். †மாலின்பினள் - உமை.

தந்தந்தந் தந்தன தானன
தந்தந்தந் தந்தன தானன
தந்தந்தந் தந்தன தானன தனதான.

71. *வஞ்சங்கொண் டுந்திட ராவண
னும்பந்தென் திண்பரி தேர்கரி
மஞ்சின்பண் புஞ்சரி யாமென வெகுசேனை

வந்தம்பும் பொங்கிய தாகவெ
திர்ந்துந்தன் சம்பிர தாயமும்
வம்புந்தும் பும்பல பேசியு மெதிரேகை

மிஞ்சென்றுஞ் சண்டைசெய் போதுகு
ரங்குந்துஞ் சுங்கனல் போலவெ
குண்டுங்குன் றுங்கர டார்மர மதும்வீசி

மிண்டுந்துங் கங்களி னாலெத
கர்ந்தங்கங் கங்கர மார்பொடு
மின்சந்துஞ் சிந்திநி சாசரர் வகைசேர

வுஞ்சண்டன் தென்றிசை நாடிவி
ழுந்தங்குஞ் சென்றெம தூதர்கள்
உந்துந்துந் தென்றிட வேதசை நிணமூளை

உண்டுங்கண் டுஞ்சில கூளிகள்
டிண்டிண்டென் றுங்குதி போடவு
யர்ந்தம்பங் கொன்றுகொள் மாதவன் மருகோனே

தஞ்சந்தஞ் சஞ்சிறி யேன்மதி
கொஞ்சங்கொஞ் சந்துரை யேயருள்
தந்தென்றின் பந்தரு வீடது தருவாயே

சங்கங்கஞ் சங்கயல் சூழ்தடம்
எங்கெங்கும் பொங்கம காபுனி
தந்தங்குஞ் செந்தியில் வாழ்வுயர் பெருமாளே. (ரு௪

*வஞ்சம் கொண்டும் திடராவணனும் எனப்பிரித்துக்கொள்க.

தந்ததந்த தந்ததந்த தந்ததந்த தந்ததந்த
தந்ததந்த தந்தநந்த தந்ததான.

72. வந்துவந்து முன்தவழ்ந்து * வெஞ்சுகந்த யங்கநின்று
† மொஞ்சிமொஞ்சி என்றழுங்கு முந்தையோடு
மண்டலங்கு லுங்குஅண்டர் விண்டலம்பி ளந்தெழுந்த
செம்பொன்மண்ட பங்களும்ப யின்றவீடு
கொந்தளைந்த குந்தளந்த ழைந்துகுங்கு மந்தயங்கு
கொங்கைவஞ்சி தஞ்சமென்று மங்குகாலம்
‡ கொங் § கடம்பு ‖ கொங்குபொங்கு பைங்கடம்புதண்டைகொஞ்சு
செஞ்ச தங்கை தங்குபங்க யங்கள்தாராய்
சந்தடர்ந்த மூந்தரும்பு ¶ மந்தரஞ்செ ழுங்கரும்பு
$ கந்தரம்பை ℴ சேண்பதங்கொள் செந்தில்வாழ்வே
தண்கடங்க டந்துசென்று ** பண்கடங்க டர்ந்த †† இன்சொல்
திண்புனம்பு குந்துகண்டி றைஞ்சுகோவே
அந்தகன்க லங்கவந்து ‡‡ கந்தரங்க லந்த §§ சிந்து
ரஞ்சிறந்து வந்தலம்பு ரிந்தமார்பா
அம் ‖‖ புனம்பு குந்தநண்பர் சம்புநம்பு ரந்தரன் ¶¶ த
ரம்பலும்பர் $$ கும்பர்நம்பு தம்பிரானே. (௫௫)

தந்த தானன தானன தந்த தானன தானன
தந்த தானன தானன தனதான.

73. ℴℴ வெஞ்ச ரோருக மோகநி நஞ்ச மோகய லோநெடு
வின்பசாகர யோவடு வகிரோமுன்
வெந்து போனபு ராதன *** சம்ப ராரிபு ராரியை
வென்ற ††† சாயக மோகரு விழியோகண்

---

*வெஞ்சுகம்-விருப்பமாகியஇன்பம். †மொஞ்சி-பாலுக்கு ஆகுபெயர். ‡கொங்கு-கோங்கு. §அடம்பு-ஓர்வித கொடிப்பூ. ‖கொங்குபொங்கு-வாசனை மிகுந்த. ¶மந்தரம்-மந்தாரம் $கந்தரம்பை-கந்த அரம்பை,கிழங்கோடு கூடிய வாழை. ℴசேண்-சேண். **பண்கடங் கடர்ந்த-பண்கள் + தங்கு-அடர்ந்த †இன்சொல்-இன்சொலுடைய வள்ளியம்மை. ‡‡கந்தரம் (அன்பர்கள் மனமாகிய) குகை. §§ சிந்துரம்-தெவ்வயானையம்மை. ‖‖ புனம்புகுந்தநண்பர்-முனிவர்கள் ¶¶ தரம்பலும்பர்தரம் + பல்உம்பர்-தரம்பெற்ற பலதேவர்கள். $$ கும்பர்-கும்பமுனி ℴℴவெஞ்சரோருகம்-விரும்பத்தக்க தாமரை. *** சம்பராரி-மன்மதன். ††† சாயகம்-அம்பு.

தஞ்ச மோயம தாதுவர் நெஞ்ச மோவெனு மாமத
சங்க மாதர்ப யோதர மதில்சூழ்கு
சங்கை * யோவிரு கூதளா சந்த மாலிகை தோய்தரு
தண்டை சேர்கழ லீவது மொருநாளே
பஞ்ச பாதக தாருக தண்ட னீறெழ வானவர்
பண்டு போலம ராவதி குடியேறப்
பங்க யாசனர் கேசவ ரஞ்ச லேயென மால்வரை
பங்க நீறெழ வேல்விடும் இளையோனே
செஞ்ச டாடவி மீமிசை கங்கை மாமதி தாதகி
திங்கள் சூடிய நாயகர் பெருவாழ்வே
செண்ப காடவி நீடிய துங்க மாமதில் சூழ்தரு
செந்தில் மாநகர் மேவிய பெருமாளே (நிரு)

தனன தன தனன தந்தத் தனதான.

74. இயலிசையி லுசித வஞ்சிக் கயர்வாகி
இரவுபகல் மனது சிந்தித் துழலாதே
உயர்கருணை புரியு மின்புக் கடல்மூழ்கி
உனையெனது ளறியு மன்பைத் தருவாயே
‡ மயில்தகர்க லிடைய ரந்தத் தினைகாவல்
வனசகுற மகளை வந்தித் தணைவோனே
கயிலைமலை யனையசெந்திற் பதிவாழ்வே
கரிமுகவ னிளைய கந்தப் பெருமாளே. (நிஎ)

தந்தனந் தந்தனந் தந்தனந் தந்தனந்
தந்தனந் தந்தனந் தனதான.

75. இன்பமுந் துன்பமுஞ் சந்ததங் கொண்டுசென்
றிங்குமன் குஞ்சுழன் றிடுமாயத்
துன்பவெண் கும்பியங் கந்தவிர்ந் தன்பெருந்
தொண்டனென் றுய்ந்துளங் களியேனோ

* ஓவிரு - ஓவ + இரு; ஓவ - நீங்க. ‡ மயில் தகர் கலிடையர் - மயிலி னங்களும் ஆடும் நிறைந்த குன்றினிடத்தில் வசிக்கும் வேடுவர்.

புன்குருந் தூந்தியஞ் சந்தனஞ் சிந்திமுன்
பொங்கிவெண் சங்கெறிந் தலைவீசும்
தன்*பொருந் தம்பசும் பொன்சொரிந் தெங்கணுந்
தந்திடுஞ் செந்திலம் பெருமாளே. (ருஅ)

தானன தானன தானன தானன
தானன தானன தனதான.

†ஏவினை நேர்விழி மாதரை மேவிய
ஏதனை மூடனை நெறிபேணா
ஈனனை வீணனை ஏடெழு தாமுழு
ஏழையை மோழையை அகலாநீள்
மாவினை மூடிய நோய்பிணி யாளனை
வாய்மையி லாதனை இகழாதே
மாமணி நூபுர சீதள தாள்தனில்
வாழ்வுற ஈவதும் ஒருநாளே
நாவலர் பாடிய நூலிசை யால்வரு
நாரத னார்புகல் குறமாதை
நாடியெ கானிடை கூடிய சேவக
நாயக மாமயில் உடையோனே
தேவிம னோன்மணி ஆயிப ராபரை
தேன்மொழி யாள்தரு சிறியோனே
சேணுயர் சோலையி னீழலி லேதிகழ்
சீரலை வாய்வரு பெருமாளே. (ருசு)

தானா தந்தத் தானா தந்தத்
தானா தந்தத் தனதான.

77. ஓரா தொன்றைப் பாரா தந்தத்
தோடே வந்திட் டியிர்சோர
ஊடா நன்றாற் றார்போல் நின்றெட்
டாமால் தந்திட் டிழல்மாதர்

பொருந்தம் - தாமிரபர்ணியாறு †ஏவு - அம்பு.

கூரா வன்பிற் சேரா நின் *றக்
கோயா நின்றுட் குலையாதே
கோடார் செம்பொற் றோளா நின்சொற்
†கோடா தென்னைக் கருள்தாராய்
‡ தோரா வென்றிப் போரா மன்றற்
றோளா குன்றைத் துளையாடு
சூதா யொண்டிக் கேயா வஞ்சச்
சூர்மா அஞ்சப் பொரும்வேலா
சீரார் கொன்றைத் தார்மார் பொன்றச்
சேவே றெந்தைக் கினியோனே
தேனே அன்பர்க் கேயா மின்சொற்
சேயே செந்திற் பெருமானே. (௭௭)

தந்ததன தான தந்ததன தான
தந்ததன தான தனதான.

78. கன்றிலுறு மானை வென்ற விழியாலெ
கஞ்சமுகை மேவு முலையாலே
கங்குல்செறி கேச மங்குல்குலை யாலை
கந்தமலர் சூடு மதனாலே
நன்றுபொருள் தீர வென்றுவிலை பேசி
நம்பவிடு மாதர் உடனாடி
§ நஞ்சுபுசி தேரை அங்கமது வாக
நைந்துவிடு வேனை அருள்பாராய்
குன்றிமணி போல்வ செங்கண்வரி || போகி
கொண்டபடம் வீசு மணிசூர்வாய்
கொண்டமயி லேறி அன்றசுரர் சேனை
கொன்றகும ரேச குருநாதா
மன்றல்கமழ் பூசு தெங்குதிரள் சோலை
வண்டுபடு வாவி புடைசூழ

*க்கு - எலும்போடுகூடிய சரீரம். †கோடாது-மாறாது. ‡தோரா-தோலா, தோற்காத. §நஞ்சுடைய பாம்பு, இஃது ஆகுபெயர். || போகி பாம்பு.

மந்திநட மாடு செந்திநகர் மேவு
மைந்தஅம ரேசர் பெருமாளே. (சுக)

தனன தானனத் தனதன தனனத்
தந்தத் தந்தத் தனதான.

79. * குகர மேவுமெய்த் துறவினின் மறவாக்
கும்பிட் டுந்தித் தடமூழ்கிக்
குமுத வாயின்முற் றமுதினை நுகராக்
கொண்டற் கொண்டைக் குழலாரோ
† டகரு தூளிகர்ப் புரதன இருகோட்
டன்புற் றின்பக் கடலூடே
அமிழு வேனைமெத் தெனவொரு கரைசேர்த்
தப்பொற் றண்டைக் கழல்தாராய்
ககன கோளகைக் கணவிரு மளவாக்
கங்கைத் துங்கப் புனலாடும்
‡ கமல வாதனற் களவிட முடியாக்
கம்பர்க் கொன்றைப் புகல்வோனே
சிகர கோபுரத் தினுமதி லினுமேற்
செம்பொற் கம்பத் தளமீதும்
தெருவி லேயு § நித் திலமெறி அலைவாய்ச்
செந்திற் கந்தப் பெருமாளே. (சுஉ)

தனதன தந்த தனதன தந்த
தனதன தந்த தானந்தனன.

80. குடர்நிண மென்பு சலமல மண்டு
குருதிந ரம்பு சீயூன்பொதிதோல்
குலவுகு ரம்பை முருடசு மந்து
|| குனகிம கிழ்ந்து நாயேன்தளரா

---

* குகரம் - மலைக்குகை. † அகருதூளி- அகிற்பொடி. ‡ கமலவாதனர்- பிரமன். § நித்திலம் - முத்து. || குனகி-குனக்கி என்பதன் மரூஉ.

அடர்மத னம்பை அனையக ருங்கண்
அரிவையர் தங்கள் தோடோய்ந்தயரா
அறிவழி கின்ற குணமற உன்றன்
அடியிணை தந்து நீயாண்டருள்வாய்
தடவியல் செந்தி லிறையவ நண்பு
தருகுற மங்கை வாழ்வாம்புயனே
சரவண கந்த முருகக டம்ப
தனிமயில் கொண்டு பார்சூழ்ந்தவனே
சுடர்படர் குன்று தொளைபட அண்டர்
தொழவொரு செங்கை வேல்வாங்கியவா
*துரிதப தங்க இரதப்ர சண்ட
சொரிகடல் நின்ற சூராந்தகனே. (௮௰)

தனதன தனதன தனதன தனதன
தந்தத் தனதானா.

81. கொலைமத கரியன ம்ருகமத மொழுகிய
கும்பத் தனமாதர்
குமுதவ முதவிதழ் பருகியு ருகிமயல்
கொண்டுற் றிடுநாயேன்
நிலையழி கவலைகள் கெடவுன தருள்வழி
நின்றுற் றிடவேதான்
நினதிரு வடிமல ரிணைமன தினிலுற
நின்பற் றடைவேனோ
சிலையென வடமலை உடையவ ரருளிய
செஞ்சொற் சிறுபாலா
திரைகட லிடைவரு மசுரனை வதைசெய்த
செந்திற் பதிவேலா
†விலைநிகர் நுதலிப மயில்குற மகளும்வி
ரும்பிப் புணர்வோனே

*துரிதபதங்க இரத ப்ரசண்ட - வேகத்தோடு செல்லும் மயிலாகிய (இ)ரதத்தையுடையபிரசண்டனே. †விலை-வில்லை; இடைகுறைந்து நின்றது.

விருதணி மரகத மயில்வரு குமரவி
டங்கப் பெருமாளே (சுச)

தானத் தானன தானத் தானன
தானத் தானன தந்ததான.

82. சேமக் கோமள பாதத் தாமரை
சேர்தற் கோதும நந்தவேதா
நீதத் தேயவி ரோதத் தேகுண
சீலத் தேமிக அன்புறுதே
காமக் ரோதவு லோபப் பூதவி
காரத் தேயழி கின்றமாயா
காயத் தேபசு பாசத் தேசிலர்
காமுற் றேயும தென்கொலோதான்
நேமிச் சூரொடு மேருத் தூளெழ
நீளக் காளபு யங்ககால
நீலக் ரீபக லாபத் தேர்விடு
நீபச் சேவக செந்தில்வாழ்வே
ஓமத் தீவழு வார்கட் கூர்சிவ
லோகத் தேதரு மங்கைபாலா
யோகத் தாறுப தேசத் தேசிக
ஊமைத் தேவர்கள் தம்பிரானே. (சுரு)

தந்த தனதனன தந்த தன தனன
தந்த தனதனன தனதான.

83. தந்த பசிதனைய றிந்து முலைபமுது
தந்து முதுகுதட வியதாயார்
தம்பி பணிவிடைசெய் தொண்டர் பிரியமுள
தங்கை மருகருயி ரெனவேசார்
மைந்தர் மனைவியர்*க டும்பு கடனுதவு
மந்த வரிசைமொழி †பகர்கேடா

*கடும்பு - சுற்றம் †பகர்கேடா - வார்த்தைகெட்டு.

வந்து * தலைநவிர விழ்ந்து தரைபுகம
யங்க ஒரு † மகிட மிசையேறி
அந்த கனுமெனை யடர்ந்து வருகையினில்
அஞ்ச லெனவலிய மயில்மேல்நீ
அந்த மறலியொடு கந்த மனிதனம
தன்ப னெனமொழிய வருவாயே
சிந்தை மகிழுமலை மங்கை நகிலிணைகள்
சிந்து ‡ பயமயிலு மயில்வீரா
திங்க ளரவுநதி துன்று சடிலரருள்
செந்தி னகரிலுறை பெருமாளே. (அ௩)

தனத்தந்தன தனத்தந்தன தனத்தந்தன தனதான.

84. தரிக்குங்கலை நெகிழ்க்கும்பர நவிக்குங்கொடி மதனேவில்
தகைக்குந்தனி திகைக்குஞ்சிறு தமிழ்த்தென்றலி னுடனேநின்
றெரிக்கும்பிறை எனப்புண்படு மெனப்புன்கவி சிலபாடி
இருக்குஞ்சிலர் திருச்செந்திலை யுரைத்துய்ந்திட அறியாரே
அரிக்குஞ்சதுர் மறைக்கும்பிர மனுக்குந்தெரி வரிதான
அடிச்செஞ்சடை முடிக்கொண்டிடு மரற்கும்புரி தவபாரக்
கிரிக்கும்பநன் முநிக்குங்க்ருபை வரிக்குங்குரு பரவாழ்வே
கிளைக்குந்திற லரக்கன்கிளை கெடக்கன்றிய பெருமாளே ()

தனனத் தனன தனனத் தனன
தனனத் தனன தனதான.

85. நிலையாப் பொருளை § உடலாக் கருதி
நெடுநாட் பொழுதும் அவமேபோய்
நரைபோய்ச் செவிடு குருடாய்ப் பிணிகள்
நிறைவாய்ப் பொறிகள் தடுமாறி
மலநீர்ச் சயன மிசையாய்ப் பெருகி
மடிவேற் குரிய நெறியாக

* தலைநவிர்-தலைமயிர். † மகிடம்-எருமை. ‡ பயம் பால். § உடல்-பொன்.

மறைபோற் றரிய ஒளியாய்ப் பரவு
மலர்தாட் கமலம் அருள்வாயே
கொலைகாட் டவுணர் கெடமாச் * சலதி
குளமாய்ச் † சுவற முதுசூதம்
குறிபோய்ப் பிளவு படமேற் கதுவு
கொதிவேற் படையை விடுவோனே
அலைவாய்க் கரையின் மகிழ்சீர்க் குமர
அழியாப் புநித வடிவாகும்
அரனார்க் கதிக பொருள்காட் டதிப
அடியார்க் கெளிய பெருமாளே. (சுஅ)

தனதன தனதன தந்தத் தந்தத் தனதானா.

86. பரிமள களபசு கந்தச் சந்தத் தனமானார்
படையம படையென ‡ அந்திக் குங்கட் கடையாலே
வரியளி நிரைமுரல் கொங்குக் கங்குற் குழலாலே
மறுகிடு மருளனை இன்புற் றன்புற் றருள்வாயே
அரிதிரு மருகக டம்பத் தொங்கற் றிருமார்பா
அலைகுமு குமுவென வெம்பக் கண்டித் தெறிவேலா
திரிபுர தகனரும் வந்திக் குஞ்சற் குருநாதா
செயசெய ஹரஹர செந்திற் கந்தப் பெருமாளே. (சுகூ)

தனனத் தந்தத் தனனத் தந்தத்
தனனத் தந்தத் தனதானா.

87. புகரப் புங்கப் பகரக் குன்றிற்
புயலிற் றங்கிப் பொலிவோனும்

---

* சலதி - கடல் † சுவற - வற்ற. ‡ அந்திக்கும் - சந்திக்கும்.

பொருவிற் றஞ்சச் சுருதிச் சங்கப்
    பொருளைப் பண்பிற்   புகல்வோனும்
திகிரிச் செங்கட் செவியிற் றுஞ்சத்
    திகிரிச் செங்கைத்   திருமாலும்
திரியப் பொங்கித் திரையற் றண்டிட்
    டெளிதற் கொன்றைச்   சரவோனும்
* தகரத் தந்தச் சிகரத் தொன்றித்
    † தடநற் கஞ்சத்   துறைவோனே
தருணக் கொங்கைக் ‡ குறவிக் கின்பத்
    தையளித் தன்புற்   றருள்வோனே
பகரப் பைம்பொற் சிகரக் குன்றைப்
    படியிற் சிந்தத்   தொடும்வேலா
பவளத் துங்கப் புரிசைச் செந்திற்
    பதியிற் கந்தப்   பெருமாளே. (எ௭)

தந்த தனன தந்த தனன
தந்த தனன   தனதான.

88. மங்கை சிறுவர் தங்கள் கிளைஞர்
    வந்து கதற   உடல்தீயின்
மண்டி எரிய விண்டு புனலில்
    வஞ்ச மொழிய   விழவாவி
வெங்கண் மறலி தன்கை மருவ
    வெம்பி இடறும்   ஒருபாச
விஞ்சை விளையு மன்று னடிமை
    வென்றி அடிகள்   தொழவாராய்
சிங்க § முழுவை தங்கு மடவி
    சென்று || மறமி   னுடன்வாழ்வாய்

---

* தகரத்து அந்தச்சிகரம் - தகர ஆகாயத்தின் முடியாகிய உச்சி. † தடநற் கஞ்சம் - இருதயகமலம். ‡ குறவி - குறத்தியாகிய வள்ளிநாயகி. § உழுவை-புலி. || மறமின் - வேடர் குலத்துதித்த வள்ளிநாயகி.

சிந்தை மகிழ அன்பர் புகழு
செந்தி லுறையு முருகோனே
எங்கு மிலகு திங்கள் கமல
மென்று புகலு முகமாதர்
இன்பம் விளைய அன்பி னணையும்
என்று மிளைய பெருமாளே. (௭௧)

தனதனன தந்த தனதனன தந்த
தனதனன தந்த தனதான.

88. மனைகனக மைந்தர் தமதழகு பெண்டிர்
வலிமைகுல நின்ற நிலையூர்பேர்
வளரிளமை தஞ்ச முனைபுனைவ ளங்கள்
வரிசைதம ரென்று வருமாய
கனவுநிலை இன்ப மதனையென தென்று
கருதிவிழி இன்ப மடவார்தம்
கலவிமயல் கொண்டு பலவுடல்பு ணர்ந்து
கருவில்விழு கின்ற இயல்போதான்
நினையுநின தன்பர் பழவினைக ளைந்து
நெடுவரைபி ளந்த கதிர்வேலா
நிலமுதல்வி ளங்கு நலமருவு செந்தில்
நிலைபெறவி ருந்த முருகோனே
புனைமலர்பு னைந்த புனமறம டந்தை
புளகவிரு கொங்கை புணர்மார்பா
பொருதுடனெ திர்ந்த நிருதர்மகு டங்கள்
பொடிபடந டந்த பெருமாளே. (௭௨)

தனன தந்த தந்த தனன தந்த தந்த
தனன தந்த தந்த தனதான.

90. முலைமு கந்தி மிர்ந்த கலவை யுந்து லங்கு
முறுவ லுஞ்சி வந்த கனிவாயும்

முருக விழ்ந்து திர்ந்த மலர்க ளுஞ்ச ரிந்த
முகிலு மின்ப சிங்கி விழிவேலும்
சிலைமு கங்க லந்த திலத முங்கு ளிர்ந்த
திருமு கந்த ழும்பு குறுவேர்வும்
தெரிய வந்து நின்ற மகளிர் பின்சு ழன்று
செயல ழிந்து ழன்று திரிவேனோ
* மலைமு கஞ்சு மந்த புலவர் †செஞ்சொல் கொண்டு
வழிதி றந்த செங்கை வடிவேலா
வளர்பு னம்ப யின்ற குறம டந்தை கொங்கை
மணிவ டம்பு தைந்த புயவேளே
அலைமு கந்த வழ்ந்து சிணைமு திர்ந்த சங்கம்
அலறி வந்து கஞ்ச மலர்மீதே
அளிக லந்தி ரங்க இசையு டன்று யின்ற
அரிய செந்தில் வந்த பெருமாளே. (௯௧)

தாத்தத் தத்தன தாத்தத் தத்தன
தாத்தத் தத்தன தனதான.

91. மூப்புற் றுச்செவி கேட்பற் றுப்பெரு
மூச்சுற் றுச்செயல் தடுமாறி
மூர்க்கச் சொற்குரல் காட்டிக் கக்கிட
மூக்குக் குட்சளி ‡இளையோடும்
கோப்புக் கட்டி§யி றுப்பிச் செற்றிடு
கூட்டிற் $ புக்குயிர் அலையாமுன்

---

* மலைமுகம் சுமந்த புலவர்-கற்கிமுகி என்னும் பூதத்தால் மலைக்குகையில் அடைக்கப்பட்ட நக்கீரர். † செஞ்சொல் - அவரால் துதிக்கப்பட்ட திருமுருகாற்றுப்படை. ‡இளை - ஈளை, கோழை. § இறுப்பிச்சு எற்றிடு கூட்டில் - துன்பம் சிதைத்து வருந்து முடலில். $ புக்கு உயிர் அலையா முன் - புகுந்திருக்கிற உயிரானது அலைமோதிப் பிரியாமுன்.

* கூற்றத் தத்துவ நீக்கிப் பொற்கழல்
கூட்டிச் சற்றருள் புரிவாயே
காப்புப் பொற்கிரி கோட்டிப் பற்றலர்
காப்பைப் † கட்டவர் குருநாதா
காட்டுக் குட்குற வாட்டிக் குட்பல
காப்புக் கு திர மொழிவோனே
வாய்ப்புற் றத்தமிழ் மார்க்கத் திட்பொருள்
வாய்க்குச் சித்திர முருகோனே
வார்த்தைச் சிற்பர தீர்த்தச் சுற்றலை
வாய்க்குட் பொற்பமர் பெருமாளே. (௭௪)

தந்தத் தனதன தந்தத் தனதன
தந்தத் தனதன தனதான.

92. வஞ்சத் துடனொரு நெஞ்சிற் பலநினை
வஞ்சிக் கொடியிடை மடவாரும்
‡ வந்திப் புதல்வரும் § அந்திக் கிளைஞரு
மண்டிக் கதறிடு வகைகூற
|| அஞ்சக் கலைபடு பஞ்சிப் புழுவுடல்
அங்கிக் கிரையென உடன்மேவ
அண்டிப் பயமுற வென்றிச் சமன்வரும்
அன்றைக் கடியிணை தரவேணும்
கஞ்சப் பிரமனை அஞ்சத் துயர்செய்து
கன்றச் சிறையிடு மயில்வீரா
கண்டொத் தனமொழி அண்டத் திருமயில்
¶ கண்டத் தழகிய திருமார்பா
செஞ்சொற் புலவர்கள் சங்கத் தமிழ்தெரி
செந்திற் பதிநகர் உறைவோனே

* கூற்றத்தத்துவம் - உடல் வேறு உயிர் வேறாகக் கூறுபடுத்தும் யம வேதனைத் தன்மை. † கட்டவர் - களைந்தவர். ‡ வந்தி - வணங்கும். § அந்தி - நெருங்கிய. || அஞ்சக் கலைபடு, அம்சம் கலைபடு - தத்துவப்பகுதிகள் பிரிபட்டுப்போகின்ற. ¶ கண்டத்து - கண் தத்து; தத்து - நடத்தும்.

செம்பொற் குலவட குன்றைக் கடலிடை
சிந்தப் பொரவல பெருமாளே. (எரு)

தனஞ தனந்த தனதான.

93. வரியார் கருங்கண் மடமாதர்
மகவா சைதொந்த மதுவாகி
இருபோ துநைந்து மெலியாதே
இருதா ளினன்பு தருவாயே
பரிபா லனஞ்செய் தருள்வோனே
பரமே சுரன்ற னருள்பாலா
அரிகே சவன்றன் மருகோனே
அலைவா யமர்ந்த பெருமாளே. (எக)

தந்தன தான தந்தன தான
தந்தன தான தனதான.

94. விந்ததி னூறி வந்தது காயம்
வெந்தது கோடி இனிமேலோ
விண்டுவி டாம லுன்பத மேவு
விஞ்சையர் போல அடியேனும்
வந்துவி நாச முன்கலி தீர
வண்சிவ ஞான வடிவாகி
வன்பத மேறி யென்களை யாற
வந்தருள் பாத மலர்தாராய்
எந்தனு ளேக செஞ்சுட ராகி
என் கணி லாடு தழல்வேணி
எந்தையர் தேடு மன்பர்ச காயர்
எங்கள் சுவாமி அருள்பாலா
சுந்தர ஞான மென்குற மாது
தன்றிரு மார்பி லணைவோனே
சுந்தர மான செந்திலில் மேவு
கந்தசு ரேசர் பெருமாளே. (எஎ)

தந்தந்தந் தந்த தனந்தன
தந்தந்தந் தந்த தனந்தன
தந்தந்தந் தந்த தனந்தன தனதான.

95. துன்பங்கொண் டங்க மெலிந்தற
நொந்தன்பும் பண்பு மறந்*தொளி
துஞ்சும்பெண் சஞ்ச லமென்பதில் அணுகாதே

இன்பந்தந் தும்பர் தொழும்பத
கஞ்சந்தந் தஞ்ச லெனும்வழி
என்றென்றுந் தொண்டு செயும்படி அருள்வாயே

கின்பங்கொன் றுங்கு றமின்சர
ணங்கண்டுந் தஞ்ச மெனும்படி
நின்றன்பின் றன்ப டிகும்பிடும் இளையோனே

பைம்பொன்சிந் தின்று றைதங்கிய
குன்றெங்குஞ் சங்கு வலம்புரி
†பம்புந்தென் செந்திலில் வந்தருள் பெருமாளே. (எஅ)

தனன தனதனந் தந்தத் தந்தத்
தனன தனதனந் தந்தத் தந்தத்
தனன தனதனந் தந்தத் தந்தத் தனதான.

96. பதும விருசரண் கும்பிட் டின்பக்
கலவி நலமிகுந் துங்கக் கொங்கைப்
‡பகடு புளகிதந் துன்றக் கன்றிக் கயல்போலும்

பரிய கரியகண் செம்பொற் கம்பிக்
குழைகள் பொரமருண் டின்சொற் கொஞ்சிப்
பதற விதமுறுங் கந்தக் கொந்துக் குழல்சாயப்

---

* ஒளி - அறிவு. † பம்பும் - நிரம்பும். ‡ பகடு - மலை.

புதுமை நுதிநகம் பங்கத் தங்கத்
தினிது வரையவெண் சந்தத் திந்துப்
புருவ வெயர்வுடன் பொங்கக் கங்கைச் சடைதாரி

பொடிசெய் தருள்மதன் தந்த்ரப் பந்திக்
கறிவை *இழவிடும் பண்புத் துன்பப்
பொருளின் மகளிர்தம் மன்புப் பண்பைத் தவிரேனோ

திதிதி ததததந் திந்தித் தந்தட்
டிடிடி டடடடண் டிண்டிட் டண்டத்
தெனன தனதனந் தெந்தத் தந்தத் தெனனானா

திகுர்தி தகிர்ததிந் திந்தித் திந்தித்
திரிரி தாரவென் றென்றுப் பின்றித்
திமிலை பறையறைந் தெண்டிக் கண்டச் சுவர்சோரச்

சதியில் வருபெருஞ் சங்கத் தொங்கற்
புயவ சுரர்வெகுண் டஞ்சிக் குஞ்சித்
தலைகொ டடிபணிந் தெங்கட்குன் †கட் க்ருபைதாவென்

சமர குமரகஞ் சஞ்சுற் றுஞ்‡செய்ப்
பதியில் முருகமுன் பொங்கித் தங்கிச்
சலதி அலைபொருஞ் செந்திற் கந்தப் பெருமாளே.(௭௬)

தானன தான தந்த தானன தான தந்த
தானன தான தந்த தானன தான தந்த
தானன தான தந்த தானன தான தந்த தனதான.

97. பூரண வார கும்ப சீதப டீர கொங்கை
மாதர்வி கார வஞ்ச லீலையி லேயு ழன்று
§போதவ மேயி ழந்து போனது மான மென்ப தறியாத

பூரிய னாகி நெஞ்சு காவல்ப டாத பஞ்ச
பாதக னாய றஞ்செ யாதடி யோடி றந்து
போனவர் வாழ்வுகண்டு மாசையி லேயுழன்று மயல்தீரக்

---

* இழவிடும் - இழந்துபோமாறு செய்யும். † கட் க்ருபை-கடாட்சப் பார்வை. ‡ செய்ப்பதி - வயலூர். § போதவம் - பொருந்திய தவம்.

காரண காரி யங்க ளானதெ லாமொ ழிந்து
* யானெனு மேதை விண்டு பாவக மாயி ருந்து
காலுட னூடி அங்கி நாசியின் மீதி ரண்டு விழிபாயக்
காயமு நாவு நெஞ்சு மோர்வழி யாக அன்பு
காயம்வி டாம லுன்றன் நீடிய தாள்நி னைந்து
காணுதல் கூர்த வஞ்செய் யோகிகளாய்வி ளங்க அருள்வாயே
ஆரண சார மந்த்ர வேதமெ லாம்வி ளங்க
ஆதிரை யானு நின்று தாழ்வனெ னவ ணங்கும்
ஆதர வால்வி ளங்கு பூரண ஞான மிஞ்சும் உறவோனே
ஆர்கலி யூடெ ழுந்து மாவடி வாகி நின்ற
சூரனை மாள வென்று வானுல காளு மண்ட
ரானவர் கூர ரந்தை தீரமு னாளம கிழ்ந்த முருகேசா
வாரண மூலமென்ற போதினி லாழி கொண்டு
வாவியின் மாடி டங்கர் பாழ்பட வேயெ றிந்த
மாமுகில் போலி ருண்ட மேனிய னமு குந்தன் மருகோனே
†வாலுக மீது ‡ வண்ட லோடிய காலில் வந்து
சூல்நிறை வான சங்கு மாமணி ஈன உந்து
வாரிதி நீர்ப ரந்த சீரலை வாயு கந்த பெருமாளே. (௯௦)

தனதன தனதன தனதன தனதன
தத்தத் தத்தன தத்தத் தத்தன — தந்ததான.

98. படிதனி லுறவெனு மனைவர்கள் பரிவொடு
பக்கத் திற்பல கத்திட் டுத்துயர் கொண்டுசோரப்
பனைமர விறகிட அழலிடை உடலது
பற்றக் கொட்டுகள் தட்டிச் சுற்றிடு துன்பமேவிக்
கடிசம னுயிர்தனை இருவிழி அனலது
கக்கச் சிக்கென முட்டிக் கட்டவு டைந்துபோமுன்
§கதிதரு முருகனு மெனநினை பவரொடு
கற்பிற் புக்கறி வொக்கக் கற்பது தந்திடாயோ

---

* யானெனு மேதைவிண்டு-நானேபிர்ம மென்றுணர்ந்து †வாலுகம்-மணல். ‡ வண்டல்-நீர்ச்சுழி. §'கதிதரவறமுக' எனவும் பாடம்.

வடகிரி தொளைபட அலைகடல் சுவறிட
மற்றெத் திக்கினு மெட்டுத் திக்கினும் வென்றிவாழ

வலியுட னெதிர்பொரு மசுரர்கள் பொடிபட
வட்டத் திட்டியர் வெற்பைக் குத்தும லைந்தவேலா

அடர்சடை மிசைமதி அலைசல மதுபுனை
அத்தற் குப்பொருள் கற்பித் துத்தரு செந்தில்வாழ்வே

அடிமுதன் முடியினும் வடிவொடு தொழுமவு
னத்திற் பத்திகொள் நித்தச் சுத்தர்கள் தம்பிரானே (௮௯)

தனத்த தந்தனந் தனத்த தந்தனந்
தனத்த தந்தனந் தனதான.

99. புரக்க வந்தநங் குறக்க ரும்பைமென்
புனத்தி லன்றுசென் றுறவாடிப்

புடைத்த லங்கிர்தம் படைத்தெ ழுந்ததண்
புதுக்க ரும்பைதின் புயமீதே

செருக்கு நெஞ்சகங் களிக்கு மன்புடன்
தினைக்கு நின்றிறம் புகழாதிந்

த்ரியக்க டஞ்சுமந் தலக்கண் மண்டுமென்
றியக்க மென்றொழிந் திடுவேனோ

குரக்கி னங்கொணர்ந் தரக்கர் தண்டமுங்
குவட்டி லங்கையுந் துகளாகக்

கொதித்து வெம்பியங் கதிர்த்து வந்துடன்
குதித்த கொண்டலின் மருகோனே

துரக்க வும்பரும் பரப்பு சண்டசிந்
துரத்த னும்பிறந் திறவாத

சுகத்து ளன்பருந் துதித்த செந்தில்வந்
துதிக்கு மும்பர்தம் பெருமானே. (௯௰)

தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன தனதான.

100. புகரில் சேவல செங்கர சங்கம
திருதர் கோபக்ர வுஞ்சநெ டுங்கிரி
பொருத சேவக குன்றவர் பெண்கொடி மணவாளா

புனித பூசுர ருஞ்சுர ரும்பணி
புயசு பூதர வென்றிரு கண்புனல்
பொழிய மீமிசை அன்புது ளும்பிய மனதாகி

அகில பூதவு டம்பு முடம்பினில்
அமரு மாருயி ருங்கர ணங்களும்
மவுன வார்வமி குந்தொரு மூந்தனி உணர்வாலே

அகில வாதிக ளுஞ்சம யங்களும்
அடைய ஆமென அன்றென நின்றதை
அறிவி லேனறி யும்படி என்றருள் புரிவாயே

மகர கேதன முந்திகழ் செந்தமிழ்
மலையின் மாருத மும்பல வும்பரி
மள*சி லீமுக மும்பல † மஞ்சரி வெறியாடும்

‡மதுக ராரவ சிஞ்சினி யுங்கன
§மதுர கார்முக மும்பொர வந்தெழு
மதன ராசனும் வெந்து விழும்படி முனி‖பால

முகுள்¶வி லோசன முஞ்சிறு திங்களு
முதுபகீரதி யும்புனை யுஞ்சடை
முடியர் பாதியு டம்பில்வி ளங்கிய அபிராமி

முகர நூபுர பங்கய சங்கரி
கிரிகு மாரியெ னம்பிகை தந்தருள்
முருகனேவளர் செந்திலில்வந்தருள் பெருமாளே. (அரு)

---

* சிலீமுகம் அம்பு. † மஞ்சரி-பூங்கொத்து. ‡ மதுகராரவசிஞ்சினி-மதுகர அரவ சிஞ்சினி, வண்டு ஆகிய ஒலிக்கின்ற நாண் §மதுரகார்முகம்-இனியவில், கரும்புவில. ‖பாலம்-நெற்றி ¶முகுள்விலோசனம்-நெற்றிக்கண்

உ

மூன்றாவது

திருவாவினன்குடி-பழநி.

இது திண்டுக்கல்லிலிருந்து மேற்கே 36 மைல் துலைவிலிருக்கிறது.

இது முருகக்கடவுளது மூன்றாம் படைவீடு.

தான தந்தன தானான தானன
தான தந்தன தானான தானன
தான தந்தன தானான தானன தனதான.

101 நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித சாமீ நமோநம வெகுகோடி

நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பரசூரர்

சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம *கிரிராஜ

தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்

ஈத லும்பல†கோலா லபூஜையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
‡ஈர முங்குரு சீபாத சேவையு மறவாத

ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மனோகர
ராஜ||கெம்பிர நாடாளு நாயக வயலூரா

ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி

ஆதி அந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்ந னாடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே. (க)

---

* கிரிராஜன்-குறிஞ்சிவேந்தன். †கோலாலம்-கோலாகலம்; கோலாகலம்-சம்ப்ரமம். ‡ஈரம்-காருண்யம். || கெம்பிர-கெம்பீர.

ஜைன முனி



102\. * போத கந்தரு கோவே நமோநம
நீதி தங்கிய தேவா நமோநம
பூத லந்தனை யாள்வாய் நமோநம பணியாவும்
பூணு கின்றபி ரானே நமோநம
வேடர் தங்கொடி மாலா நமோநம
போத வன்புகழ் சாமீ நமோநம அரிதான
வேத மந்திர ரூபா நமோநம
† ஞான பண்டித நாதா நமோநம
வீரகண்டைகொள் தாளா நமோநம அழகான
மேனி தங்கிய வேளே நமோநம
‡ வான பைந்தொடி வாழ்வே நமோநம
வீறு கொண்டவி சாகா நமோநம அருள்தாராய்
பாத கஞ்செறி சூரா திமாளவெ
கூர்மை கொண்டயி லாலே § பொ ராடியெ
பார அண்டர்கள் வானுடு சேர்தர அருள்வோனே
பாதி சந்திர னேசூடும் வேணியர்
சூல சங்கர னார்கீத நாயகர்
பார திண்புய மேசேரு சோதியர் கயிலாயர்
ஆதி சங்கர னார்பாக மாதுமை
கோல அம்பிகை மாதா மனோன்மணி
ஆயி சுந்தரி தாயான நாரணி அபிராமி
ஆவல் கொண்டு || விரும்பலே ¶ சீராடவெ
கோம ளம்பல சூழ்கோ யில்மீறிய
ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே. (உ)

103\. வார ணந்தனை நேரான மாமுலை
மீத ணிந்திடு பூணார மாரொளி
வால சந்திர னோராக மாமுகன் எழில்கூர

---

* போதகம் - ஞானோபதேசம். † ஞானபண்டிதன்-ப்ரணவமானவன். ‡ வானபைந்தொடி - தெய்வயானை § போராடி, || விரும்பலே, ¶ சீராட.

* வார ணங்கிடு சேலான நீள்விழி
ஓலை தங்கிய வார்காது † வாவிட
‡ வான இன்சுவை மேலான வாயிதழ் அமுதூறுந்

தோர ணஞ்செறி தார்வாழை யெய்தொடை
மீதில் நின்றிடை நூல்போது லாவியெ
தோகை என்றிட வாகாக ஊரன நடையாளர்

தோத கந்தனை மாமாயை யேவடி
வாக நின்றதெ னவாய வேர்வது
தோணி டும்படி நாயேனுள் நீயருள் தருவாயே

கார ணந்தனை ஓராதி சாசரர்
தாம டங்கலு மீறாக வானவர்
காவ லிந்தர னுடாள வேயயில் விடும்வீரா

கார்வி டந்தனை ஊணாக தானவர்
வாழ்த ரும்படி மேனாளி லேமிசை
காள கண்டம காதேவ னார்தரு முருகோனே

ஆர ணன்றனை வாதாடி ஓருரை
§ ஓது கின்றென வாராதெ னாவவன்
ஆண வங்கெட வேகாவ லாமதில் இடும்வேலா

ஆத வன்கதி ரோவாது லாவிய
கோபு ரங்களின் மாமாது மேவிய
ஆவி னன்குடி யோனேசு ராதிபர் பெருமாளே. (௩)

தான தந்தன தான தந்தன
தான தந்தன தான தந்தன
தான தந்தன தான தந்தன தனதான.

104. மூல மந்திர மோத லிங்கிலை
ஈவ திங்கிலை நேய மிங்கிலை
மோன மிங்கிலை ஞான மிங்கிலை மடவார்கள்

* வார் அணங்கு இடு பெரிய துன்பஞ் செய்கின்ற. † வாவிட-தாவ. ‡ வான இன்சுவை - தேவாமிருதம். § ஓதுகின்றென - ஓதுக இன்று என.

மோக முண்டதி தாக முண்டப
சார முண்டப ராத முண்டிடு
மூக னென்றொரு பேரு முண்டருள் பயிலாத

கோல முங்குண வீன துன்பர்கள்
* வார்மை யும்பல வாகி வெந்தெழு
கோர கும்பியி லேவி ழுந்திட நினைவாகிக்

கூடு கொண்டுழல் வேளை அன்பொடு
ஞான நெஞ்சினர் பாலி ணங்கிடு
கூர்மை தந்தினி யாள வந்தருள் புரிவாயே

பீலி வெந்துய ராவி வெந்தவ
சோகு வெந்தமண் மூகர் நெஞ்சிடை
† பீதி கொண்டிட வாது கொண்டருள் எழுதேடு

பேணி யங்கெதி ராறு சென்றிட
‡ மாற னும்பிணி தீர வஞ்சகர்
பீறு வெங்கழு வேற வென்றிடு முருகோனே

ஆல முண்டவர் சோதி யங்கணர்
பாக மொன்றிய வாலை யந்தரி
ஆதி யந்தமு மான சங்கரி குமரேசா

ஆர ணம்பயில் ஞான புங்கவ
சேவ லங்கொடி யான பைங்கர
ஆவி னன்குடி வாழ்வு கொண்டருள் பெருமாளே. (௪)

105\. வேயி சைந்தெழு தோள்கள் தங்கிய
மாதர் கொங்கையி லேமு யங்கிட
வீணி லுஞ்சில பாத கஞ்செய அவமேதான்

வீறு கொண்டட னேவ ருந்தியு
மேயு லைந்தவ மேதி ரிந்துள
மேக வன்றறி வேக லங்கிட வெகுதூரம்

போய லைந்துழ லாகி நொந்துபின்
வாடி நைந்தென தாவி வெம்பியெ
பூத லந்தனி லேம யங்கிய மகிபோகப்

* வார்மை - ஒழுக்கம். † பீதி-பயம். ‡ மாறன் - கூனபாண்டியன்.

போது கங்கையி னீர்சொ ரிந்திரு
பாத பங்கய மேவ ணங்கிய
பூசை யுஞ்சில வேபு ரிந்திட அருள்வாயே

தீயி சைந்தெழ வேயி லங்கையில்
ராவ ணன்சிர மேய ரிந் * தவர்
சேனை யுஞ் செல மாள வென்றவன் மருகோனே

தேச மெங்கணு மேபு ரந்திடு
சூர்ம டிந்திட வேலின் வென்றவ
தேவர் தம்பதி யாள அன்புசெய் திடுவோனே

ஆயி சுந்தரி நீலி பிங்கலை
போக அந்தரி சூலி குண்டலி
ஆதி அம்பிகை வேத தந்திரி இடமாகும்

ஆல முண்டரா னரி றைஞ்சவொர்
போத கந்தனை யேயு கந்தருள்
ஆவி னன்குடி மீதி லங்கிய பெருமாளே. (ரு)

தனதான தந்தனத் தனதானா.

106\. † அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே

உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருட் பெறுவேனோ

இபமாமு கன்றனக் கிளையோனே
இமவான்ம டந்தையுத் தமிபாலா

செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே. (சு)

தவர்-இலிந்து ஒருமையிற் பன்மை †'அபசாரநிந்தை' என்றும்பாடம்.

தனனா தனந்தனத் தனனா தனந்தனத்
தனனா தனந்தனத் தனதான.

107. கனமா யெழுந்துவெற் பெனவே உயர்ந்துகற்
புர * மா ரணந்துளிர்த் திடுமோனார்
கனிவா யுகந்துசிக் கெனவே அணைந்துகைப்
பொருளே இழந்துவிட் டயர்வாயே
மனமே தளர்ந்துவிக் கலுமே எழுந்துமட்
டறவே உலர்ந்துசுக் கதுபோல
வசமே அழிந்துவுக் கிடுநோய் துறந்துலைப்
பெனவே நினைந்துனைப் புகழ்வேனோ
புனவேடர் தந்தபொற் குறமாது இன்புறப்
புணர்காதல் கொண்டவக் கிழவோனே
புனலே ழுமங்கவெற் பொடுசூர் சிரங்கள்பொட்
டெழவே லெறிந்தவுக் கிரவீரா
தினமேவு குங்குமப் புயவாச கிண்கிணிச்
சிறுகீத செம்பதத் தருளாளா
சிவலோக சங்கரிக் கிறைபால † பைங்கயத்
திருவா வினன்குடிப் பெருமாளே. (எ)

தானனந் தனனத் தானனந் தனனத்
தானனந் தனனத் தனதான.

108. காரணிந் தவரைப் பாரடர்ந் துவினைக்
காதல்நெஞ் சயரத் தடுமாறிக்
கானரம் புதிரத் தோல்வழும் புறுபொய்க்
காயமொன் றுபொறுத் தடியேனும்
தாரணங் குகுழற் கூரணிந் தவிழிச்
சாபமொன் றுறுதற் கொடியார்தம்

* மாரணம் மந்திர வித்தையால் மரணத்தைஉண்டுபண்ணஎழும்கொலைக் கருவி, இங்கு இது கொங்கையைக்குறித்தது. † பைங்கயம்-அழகியகுளம்.

தாள்பணிந் தவர்பொற் றோள்விரும் பிமிகத்
  தாழ்வடைந் துலையத் சுகுமோதாக
சூரனங் கம்விழத் தேவர்நின் றுதொழத்
  தோயமுஞ் சுவறப் பொரும்வேல
தூய்மைகொண் டகுறத் தோகைநின் றபுனச்
  சூழ்பெருங் கிரியிற் றிரிவோனே
ஆரணன் கருடக் கேதனன் தொழமுற்
  றலமுண் டவருக் குரியோனே
ஆலையும் பழனச் சோலையும் புடைசுற்
  றுவினன் குடியிற் பெருமானே. (அ

தனதான தந்ததன தனதான தந்ததன
தனதான தந்ததன தனதான.

109. சிவனார்ம னங்குளிர உபதேச மந்த்ரமிரு
  செவிமீதி லும்பகர்செய் குருநா
சிவகாம சுந்தரிதன் வரபால கந்தநின
  செயலேவி ரும்பியுளம் நினையாம
அவமாயை கொண்டுலகில் விருதாவ லைந்துழலும்
  அடியேனை அஞ்சலென வரவேணு
அறிவாக மும்பெருக இடரான துந்தொலைய
  அருள்ஞான இன்பமது புரிவாயே
*நவநீத முந்திருடி உரலோடெ ஒன்றுமரி
  ரகுராமர் சிந்தைமகிழ் மருகோனே
நவலோக முங்கைதொழு நிசதேவ லங்கிருத
  நலமான விஞ்சைகரு விநோதனே
†தெய்வயானை அங்குறமின் மணவாள சம்ப்ரமுறு
  திரள்வீர மிஞ்சுகதிர் வடிவேல
திருவாவி னன்குடியில் வருவேள்ச வுந்தரிய
  செகமேல்மெய் கண்டவிறல் பெருமானே (சி

---

*நவநீதம்-வெண்ணெய். †தெய்வயானை - தேவயானையம்மை.

தனதத்தன தானதந்தன தனதத்தன தானதந்தன
தனதத்தன தானதந்தன தனதான.

110. பகர்தற்கரி தானசெந்தமி ழிசையிற்சில பாடலன்பொடு
பயிலப்பல காவியங்களை உணராதே

பவளத்தினை வீழியின்கனி அதனைப்பொரு வாய்மடந்தையர்
பசலைத்தன மேபெறும்படி விரகாலே

சகரக்கடல் சூழுமம்புவி மிசையிப்படி யேதிரிந்துழல்
சருகொத்துள மேயயர்ந்துடல் மெலியாமுன்

தகதித்திமி தாகிணங்கிண எனவுற்றெழு தோகையம்பரி
தனிலற்புத மாகவந்தருள் புரிவாயே

நுகர்வித்தக மாகுமென்றுமை மொழியிற்பொழி பாலையுண்டிடு
நுவல்மெய்ப்புள பாலனென்றிடும் இளையோனே

நுதிவைத்தக ராமலைந்திடு களிறுக்கரு ளேபுரிந்திட
நொடியிற்பரி வாகவந்தவன் மருகோனே

* அகரப்பொரு ளாதியொன்றிடு முதலக்கர மானதின்பொருள்
அரனுக்கினி தாமொழிந்திடு குருநாதா

அமரர்க்கிறை யேவணங்கிய பழநித்திரு வாவினன்குடி
அதனிற்குடி யாயிருந்தருள் பெருமாளே. (௰)

தனதன தனத்த தந்த தனதன தனத்த தந்த
தனதன தனத்த தந்த தனதான.

111. களபமு கையைத்தி றந்து தவளந கையைக்கொ ணர்ந்து
கயலொடு பகைத்த கண்கள் குழைதாவக்

கரியகு ழலைப்ப கிர்ந்து மலர்சொரு கு† கொப்ப விழ்ந்து
கடியிரு ளுடுக்கு லங்கள் எனவீழ

முழுமதி எனச்சி றந்த நகைமுக மினுக்கி இன்ப
முருகிதழ் சிவப்ப நின்று விலைகூறி

முதலுள துகைப்பு குந்து அழகுது கிலைத்தி றந்து
முடுகும வருக்கி ரங்கி மெலிவேனோ

* அகரப் பொருளாதி ஒன்றிடு முதலக்கரம் - அகார உகார மகாராதிகள் அடங்கிய பிரணவமந்திரம். † கொப்பு - கோப்பு, குறுக்கல்விகாரம்.

இளமதி கடுக்கை தும்பை அரவணி பவர்க் கிசைந்த
இனியபொ ருளைப்ப கர்ந்த குருநாதா
இபமுக வனுக்கு கந்த இளையவ மருக்க டம்ப
எனதுத லையிற்ப தங்கள் அருள்வோனே
*குழகென எடுத்து கந்த உமைமுலை பிடித்த ருந்து
குமர†சி வவெற்பமர்ந்த குகவேலா
குடிலொடு மிகச்செ றிந்த இதணுள புனத்தி ருந்த
குறவர்ம களைப்பு ணர்ந்த பெருமாளே. (கக)

தனனத் தனதன தனதன தந்தத்
தனனத் தனதன தனதன தந்தத்
தனனத் தனதன தனதன தந்தத் தனதான.

112. புடவிக் கணிதுகி லெனவள ரந்தக்
‡கடலெட் டிறை§யறல் குடிமுநி எண்கட்
புதிதச் சததள நிலைகொள்சு யம்புச் சதுர்வேதன்
புரமெட் டெரியெழ விழிகனல் சிந்திக்
கடினத்தொடுசில சிறுநகை கொண்டற்
புதகர்த் தரகர பரசிவ னிந்தத் தனிமூவர்
இடசித் தமுநிறை தெளிவுற வும்பொற்
செவியுட் பிரணவ ரகசிய மன்புற்
றிடவுற் பனமொழி உரைசெய்கு ழந்தைக் குருநாதா
எதிருற் றசுரர்கள் படைகொடு சண்டைக்
கிடம்வைத் திடவவர் குலமுழு தும்பட்
டிடவுக் கிரமொடு வெகுளிகள் பொங்கக் கிரியாவும்
பொடிபட் டுதிரவும் விரிவுறு வண்டச்
சுவர்விட் டதிரவு முகடுகி ழிந்தப்
புறமப் பரவெளி கிடுகிடெ னுஞ்சத் தமுமாகப்
‖பொருதுற் கையினுள அயில்கிணை முண்கக்
குருதிப் புனலெழு கடலினு மிஞ்சப்
புரவிக் கனமயில் நடவிடும் விந்தைக் குமரேசா

குழகென-குழகனென. † சிவவெற்பு என்பது பழநி. ‡கடல்எட்டு-எட்டுத்திக்கிலுமுள்ள கடல். § அறல்-நீர் ‖ பொருதுற்கை-பொருது உன் கை.

படியிற் பெருமித தகவுயர் செம்பொற்
கிரியைத் தனிவலம் வரவர னந்தப்
*பலனைக் கரிமுகன் வசமரு ளும்பொற் பதனாலே
பரன்வெட் கிடவுள மிகவும்வெ குண்டக்
கனியைத் தரவிலை யெனவருள் செந்திற்
†பழநிச் சிவகிரி தனிலுறை கந்தப் பெருமாளே (கஉ)

தான தனனதன தான தனனதன
தான தனனதன தான தனனதன
தான தனனதன தான தனனதன தனதான.

113. கோல மதிவதனம் வேர்வு தரவளக
பாரம் நெகிழவிழி வேல்கள் சுழலநுவல்
கோவை இதழ்வெளிற வாய்மை பதறியிள முகையான
கோக னகவுபய மேரு முலை யசைய
நூலி னிடைதுவள வூறு பறவைவகை
கூற இனியகள மோல மிடவளைகள் கரமீதே
காலி னணிகனக நூபு ரமுமொழிகள்
ஓல மிடவதிக போக மதுமருவு
காலை வெகுசரச லீலை யளவுசெய மடமாதர்
காதல் புரியவறு போக நதியினிடை
வீழு கினுமடிமை மோச மறவுனது
காமர் கழலிணைக ளானவொருசிறிது மறவேனே
ஞால முழுதுமம ரோர்கள் புரியுமிக
லாக வருமவுணர் சேர உததியிடை
நாச முறவமர்செய் வீர தரகுமர முருகோனே
நாடி ஒருகுறமின் மேவு தினைசெய்புன
மீதி லியலகல்கல் மீழ லிடைகிலவி
நாணம் வரவிரக மோது மொருசதுர புரிவேலா
மேலை அமரர்தொழு மானை முகரனை
ஓடி வலம்வருமுன் மோது திரைமகர
வேலை உலகைவல மாக வருதுரக மயில்வீரா

---

*பலன்-பழம். †அரன் கந்தனைப்பார்த்து "அப்பா பழம்நீ; நீயே பழம்" என்றதால் இத்தலத்திற்குப் பழநி யெனப்பேர் வந்ததென்ப.

வீறு:* கலிசைவரு சேவ கனதிதய
மேவு முதல்வயல் வாவி புடைமருவு
விரை வருபழநி ஞான மலையில்வளர் பெருமாளே.(கரு)

தான தனனதன தான தனனதன
தான தனனதன தனதான.

114. சிற லசடன்வினை காரன் முறைமையிலி
தீமை புரிகபடி பலநோயே
தேடு பரிசிகன நீதி நெறிமுறைமை
சீர்மை சிறிதுமில எவரோடுங்
கூறு மொழியதுபொ யான கொடுமையுள
கோள னறிவிலியுன் அடிபேணாக்
கூள னெனினுமெனை நீயு னடியரொடு
கூடும் வகையையருள் புரிவாயே
மாறு படுமவுணர் மாள அமர்பொருது
வாகை உளமவுலி புனைவோனே
மாக முகடதிர வீசு சிறைமயிலை
† வாசி எனவுடைய முருகோனே
வீறு கலிசைவரு சேவ கனதிதய
மேவு மொருபெருமை உடையோனே
விரை உறைகுமர தீர தரபழநி
வேல இமையவர்கள் பெருமாளே. (கச)

தானதன தந்த தானதன தந்த
தானதன தந்த தானதன தந்த
தானதன தந்த தானதன தந்த தனதான.

115. சீயுதிர மெங்கு மேய்புழுநி ரம்பு
மாயமல பிண்ட நோயிடுகு ரம்பை
தீநரிகள் ‡ கங்கு காகமிவை தின்ப தொழியாதே

* கலிசைவருசேவகனென்பதும், காவேரிச்சேவகன் என்றுபின்வரும் செய்யுட்களில் வருவனவும் கலிசையென்னும் பதியில் அக்காலத்து அதிபனாயிருந்த ஓரன்பன். † வாசியென-வாகனமாய். ‡கங்கு-கழுகு.

தீதுளகு ணங்க ளேபெருகு தொந்த
மாயையில்வ ளர்ந்த தோல்தசையெ லும்பு
சேரிடுந ரம்பு தானிவைபொ திந்து நிலைகாணா

ஆயதுந மன்கை போகவுயி ரந்த
நாழிகையில் விஞ்ச ஊசிடுமி டும்பை
ஆகியவு டம்பு பேணிநிலை என்று மடவார்பால்

ஆசையைவி ருப்பி யேவிரக சிங்கி
தானுமிக வந்து மேவிட மயங்கும்
ஆழ்துயர் விழுந்து மாளுமெனை அன்பு புரிவாயே

மாயைவல கஞ்ச னுய்விடவெ குண்டு
பார்முழுது மண்ட கோளமுந டுங்க
வாய்பிளிறி நின்று மேகநிகர் தன்கை அதனாலே

வாரியுற அண்டி வீறுடுமு ழங்க
நீரைநுகர் கின்ற கோபமொடெ திர்ந்த
வாரணவி ரண்டு கோடொடிய வென்ற நெடியோனும்

வேயினிசை கொண்டு கோநிரைபு ரந்து
மேயல்புரி செங்கண் மால்மருக துங்க
வேலகிர வுஞ்ச மால்வரையி டிந்து பொடியாக

வேலைவிடு கந்த காவிரிவி ளங்கு
கார்கலிசை வந்த சேவகன்வ ணங்க
வீரைநகர் வந்து வாழ்பழநி அண்டர் பெருமாளே. (௧௫)

தானதன தானதன தானான தானதன
தானதன தானதன தானான தானதன
தானதன தானதன தானான தானதன தனதான

116. தோகைமயி லேகமல மானேயு லாசமிகு
காமதுரை யானமத வேள்பூவை யேயினிமை
தோயுமநு போகசுக லீலாவி நோதமுழு துணர்தேனே

சூதனைய சிதவிள நீரான பாரமுலை
மீதணைய வாருமிதழ் தாரீரெ னாணைமொழி
சோர்வதிலை யானடிமை யாவேனு மாணைமிக மயலானேன்

ஆகமுற வேகமதாலே விடாதவடை
யாளமிட வாருமென வேமாதரார்களுடன்
ஆசைசொலி யேயுழலு மாபாதனீதியிலி உனையோதேன்

ஆமுனது நேயவடி யாரோடு கூடுகிலன்
நீறுநுதல் மீதிடலி லாமூட னேதுமிலி
ஆயினுமி யானடிமை ஈடேற வேகழல்கள் தருவாயே

மாகமுக டோடகில பாதாள மேருவுட
னேசுழல வாரியது வேதாழி யாவமரர்
வாலிமுத லானவர்க ளேமேனர்க ளாலமுது கடைநாளில்

வாருமென வேயொருவர் நோகாம லவிடம்
ஈசர்பெறு மாறுசவியேதேவர் யாவர்களும்
வாழவமு தேபகிரு மாமாய னரினிய மருகோனே

மேகநிக ரானகொடை மானுப காதிபதி
வாரிகலி மாருதக ரோபாரி மாமதன
வேள்கவிசை வாழவரு காவேரி சேவகன தளமேவும்

வீரவதி சூரர்கிளை வேர்மாள வேபொருத
தீரகும ராகுவளை சேரோடை சூழ்கழனி
வீரைநகர் வாழ்பழநி வேலாயு தாவமரர்பெருமாளே.()

தானதான தனத்தந்த தானன
தானதான தனத்தந்த தானன
தானதான தனத்தந்த தானன தனதான.

117. பாரியான கொடைக்கொண்ட லேதிரு
வாழ்விசால தொடைத்திண்பு யாவெழு
பாருமேரு புகழ்க்கொண்ட நாயக அபிராம

பாவலோர்கள் கிளைக்கென் றும் வாழ்வருள்
சீலஞால விளக்கின்ப சீவக
பாகசாத னகத்துங்க மாதன எனவோதிச்

சீரதாக எடுத்தொன் று மாகவி
பாடினு மிரக்கஞ்செ யாதுரை
சீறுவார்க டையிற்சென் று தாமயர் வுறவினை

சேயபாவ கையைக் கொண்டு போயறி
யாமலேக மிரிற்சிந்து வார்சிலர்
சேயனுர்ம னதிற்சிந்தி யாரரு குறலாமோ
ஆருநீர்மை மடுக்கண்க ராநெடு
வாயினேர்ப டவுற்றன்று மூலமெ
னுரவார மதத்தந்தி தானுய அருள்மாயன்
ஆதிநார ணனற்சங்க பாணியன்
ஓதுவார்க ளுளத்தன்பன் மாதவன்
ஆனநான்மு கனற்றந்தை சீதரன் மருகோனே
வீரசேவ கவுத்தண்ட தேவகு
மாரஆறி ருபொற்செங்கை நாயக
வீசுதோகை மயிற்றுங்க வாகனம் உடையோனே
வீறுகாவி ரியுட்கொண்ட சேகர
னுனசேவ கனற்சிந்தை மேவிய
வீரைவாழ்ப ழநித்துங்க வானவர் பெருமாளே. (கஎ)

தானு தனதன தானு தனதன
தானு தனதன தனதானு

18. ஆதா ளிகள்புரி கோலா கலவிழி
யாலே அமுதெனு மொழியாலே
ஆள்சீ ரிளநகை யாலே துடியிடை
யாலே மணமலி குழலாலே
சூதா ரிளமுலை யாலே அழகிய
தோடா ரிருகுழை அதனாலே
சோரா மயல்தரு மானு ருறவிடர்
சூழா வகையருள் புரிவாயே
போதா ரிருகழல் சூழா ததுதொழில்
பூணு தெதிருற மதியாதே
போரா டியவதி சூரா பொறுபொறு
போகா தெனவடு திறலோனே
வேதா உடனெடு மாலா னவனறி
யாதா ரருளிய குமரேசா
வீரா புரிவரு கோவே பழநியுள்
வேலா இமையவர் பெருமாளே. (கஅ)

தனனத் தனனத் தனனத் தனனத்
தனனத் தனனத் தனதான.

119. இருசெப் பெனவெற் பெனவட் டமுமொத்
திளகிப் புளகித் திடுமாதர்
*இடையைச் சுமையைப் பெறுதற் குறவுற்
றிறுகக் குறுகிக் குழல்சோரத்
தருமெய்ச் சுவையுற் றிதழைப் பருகித்
தழுவிக் கடிசுற் றணைமீதே
† சருவிச் சருவிக் குனகித் தனகித்
தவமற் றுழலக் கடவேனோ
அரிபுத் திரசித் தசனுக் கருமைக்
குரிமைத் திருமைத் துனவேளே
அடல்குக் குடநற் கொடிபெற் றெதிருற்
றசுரக் கிளையைப் பொருவோனே
பரிவுற் றரனுக் கருணற் பொருளைப்
பயனுற் றறியப் பகர்வோனே
‡பவனப் புவனச் செறிவுற் றுயர்மெய்ப்
பழநிக் குமரப் பெருமாளே. (௧௧)

---

120. தகைமைத் தனியிற் பகைகற் றறுகைத்
தறுமுட் டவளைப் பவனாலே
தரளத் திரளிற் புரளக் கரளத்
தமரத் திமிரக் கடலாலே
§உகைமுத் தமிகுத் ததெனப் பகல்புக்
கொளிமட் குமிகைப் பொழுதாலே

---

* இடையைச் சுமை - இடை அழகிய. † சருவி - சரசஞ்செய்து. ‡ பவனப் புவனம் - வாயுமண்டலம். § உகைமுத்த மிகுத்த தெனப் பகல் புக்கு ஒழிமட்கும் மிகைப் பொழுதாலே-எறிந்த முத்துக்கள் மிக்கதுபோல் இரவியும் வந்து ஒளிமழுங்க வருத்தத்தைத் தரத்தக்க இருட்காலத்தாலே. முத்துக்களின் ஒளிபோல் இரவிஒளிமட்கத்தக்க இருள் எனவே அதன்வலி கூறியவாறும். இது"கொள்ளிக்கும்விள்ளாத கூரிருள்"என்றதுபோலும்.

உரையற் றுணர்வற் றுயிரெய்த் தகொடிக்
குனநற் *பிணையற் றரவேணும்

†திகைபத் துமுகக் கமலத் தனைமுற்
சிறைபட் டபகைத் திறல்வீரா

திகழ்கற் பகமிட் டவனக் ‡கனத்
திருவுக் குருகிக் குழைமார்பா

பகலக் கிரணப் §பரணச் சடிலப்
பரமற் கொருசொற் பகர்வோனே

பவனப் புவனச் செறிவுற் றுயர்மெய்ப்
பழநிக் குமரப் பெருமாளே. (உ0)

---

121. அணிபட் டணுகித் தணிபட் டமனத்
தவர்விட் டவிழிக் கணையாலும்

அரிசுற் றுகழைத் தவர்பெற் றவளத்
தவன்விட் டமலர்க் கணையாலும்

பிணிபட் டுணர்வற் றவமுற் றியமற்
பெறுமக் குணமுற் றுயிர்மாளும்

பிறவிக் கடல்விட் டுயர்நற் கதியைப்
பெறுதற் கருளைத் தரவேணும்

‖கணிநற் சொருபத் தையெடுத் துமலைக்
கனியைக் ¶கணியுற் றிடுவோனே

கமலத் தயனைப் ரணவத் துரையைக்
கருதிச் சிறைவைத் திடுவோனே

$பணியப் பணியப் பரமர்ப் பரவப்
பரிவுற் றொருசொற் பகர்வோனே

பவளத் தவளக் கனகப் புரிசைப்
பழநிக் குமரப் பெருமாளே. (உக)

பிணையல் - மாலை. † திகைபத்து முக - திகைபத்தும் உக - பத்துத் திக்கும் கலங்க. ‡ கனத்திரு - தெய்வயானை. § பரணம் - பாரம். ‖ கணி - வேங்கைமரம். ¶ கணி - கன்னி - கருதி. $ பணி அப்பு - அணி அப்பரமர்.

122. புடைசெப் பெனமுத் தணிகச் சறவுட்
பொருமிக் கலசத்   திணையாய
புளகக் களபக் கெருவத் தனமெய்ப்
புணரத் தலையிட்   டமரேசெய்
அடைவிற் றினமுற் றவசப் படுமெற்
கறிவிற் பதடிக்   கவமான
அசடற் குயர்வொப் பதில்நற் க்ருபையுற்
றடிமைக் கொருசொற்   புகல்வாயே
குடமொத் த*கடக் கரடக் †கலுழிக்
குணமெய்க் களிறுக்   கிளையோனே
குடிபுக் கிடமிட் டசுரப் படையைக்
குறுகித் தகரப்   பொரும்வேலா
படலைச் செறிநற் கதலிக் குலையிற்
பழமுற் றொழுகப்   புனல்சேர்நீள்
பழனக் கரையிற் கழைமுத் தருநற்
பழநிக் குமரப்   பெருமாளே. (உஉ)

தனன தனன தனன தனன தனன தனன   தனதான.

123. கரிய பெரிய எருமை கடவு கடிய கொடிய   திரிசூலன்
கருவி இறுகு கயிறொ டுயிர்கள் கழிய முடுகி   எழுகாலம்
திரியு நரியு மெரியு முரிமை தெரிய விரவி   அணுகாதே
செறிவு மறிவு முறவு மனைய திகழு மடிகள்   தரவேணும்
பரிய ‡வரையி னரிவை மருவு பரம ரருளு   முருகோனே
பழன முழவர் கொழுவி லெழுது பழைய பழநி   அமர்வோனே
அரியு மயனும் வெருவ உருவ அரிய கிரியை   எறிவோனே
அயிலு மயிலு மறமு நிறமு மழகு முடைய   பெருமாளே.

---

124. தமரு மமரு மனையு மினிய தனமு மரசும்   அயலாகத்
§தறுகண் மறலி முறுகு கயிறு தலையை வளைய   எறியாதே

* கடக்கரடம்-மதயானை. † கலுழிக்குணம் - ஆறுபோன்ற கருணைக்குணம். ‡ வரையினரிவை - பார்வதிதேவி. § தறுகண் - அஞ்சாமை.

கமல விமல மரக தமணி கனக மருவும் இருபாதம்
கருத அருளி எனது தனிமை கழிய அறிவு தரவேணும்
குமர *சமர முருக பரம குலவு பழநி மலையோனே
†கொடிய பகடு முடிய முடுகு குறவர் சிறுமி மணவாளா
அமர ரிடரும் அவுண ருடலும் அழிய அமர்செய் தருள்வோனே
அறமு நிறமும் அயிலு மயிலும் அழகு முடைய பெருமாளே.

125. ‡திமிர உததியனைய நரக செனன மதனில் விடுவாயேல்
செவிடு குருடு வடிவு குறைவு சிறிது மிடியும் அணுகாதே
அமரர் வடிவு மதிக குலமு மறிவு நிலையும் வரவேநின்
அருள தருளி எனையு மனதொ டடிமை கொளவும் வரவேணும்
சமர முகவெ லசுரர் தமது தலைக ளுருள மிகவேநீள்
சலதி அலற நெடிய பதலை நகர அயிலை விடுவோனே
§வெமர வணையி லினிது துயிலும் விழிகள் நளினன் மருகோனே
மிடறு கரியர் குமர பழநி விரவும் அமரர் பெருமாளே. (௨௫)

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன தனதான.

126. தகர நறுமலர் பொதுளிய குழலியர்
கலக கெருவித விழிவலை படவிதி
தலையி லெழுதியு மனைவயி னுறவிடு அதனாலே
தனயர் அனைதமர் மனைவியர் சினெகிதர்
சுரபி திரவிய வகையென நினைவுறு
||தவன சலதியின் முழுகியெ இடர்படு துயர்தீர
அகர முதலுள பொருளினை அருளிட
இருகை குவிசெய்து ளுருகிட உருகியெ
அரக ரெனவல னிடமுற எழிலுன திருபாதம்

* 'சமர புரியின் முருக' என்றும் பாடம். †கொடிய பகடு-மதயானை.
‡ திமிரவுததி-இருட்கடல். § வெம் அரவணை. || தவனம்-ஆசை.

அருள அருளுடன் மருளற இருளறு
கிரண அயில்கொடு *குருகணி கொடியொடு
அழகு பெறமர கதமயில் மிசைவர இசைவாயே

†சிகர குடையினி ‡னிரைவர இசைதெரி
சதுரன் விதுரனில் வருபவன் அளையது
திருடி அடிபடு சிறியவ னெடியவன் மதுசூதன்

திகிரி வளைகதை வசிதனு உடையவன்
எழிலி வடிவினன் §அரவுபொன் முடிமிசை
திமித திமிதிமி எனநட மிடுமரி மருகோனே

பகர புகர்முக மதகரி ||உழைதரு
வனிதை வெருவமுன் வர அருள் புரிகுக
பரம குருபர இமகிரி தருமயில் புதல்வோனே

பலவின் முதுபழம் விழைவுசெய் தொழுகிய
நறவு நிறைவயல் கமுகடர் பொழில்திகழ்
பழநி மலைவரு புரவல அமரர்கள் பெருமாளே. (௨௬)

127. முருகு செறிகுழல் முகிலென ¶நகில்நறு
முளரி முகையென இயலென மயிலென
முறுவல் $தளவென நடைமட அனமென இருபார்வை

முளரி மடலென இடைதுடி யதுவென
அதர மிலவென அடியிணை மலரென
மொழியு மமுதென முகமெழில் மதியென மடமாதர்

உருவ மினையன எனவரு முருவக
உரைசெய் தவர்தரு கலவியி னிலவிய
உலையின் மெழுகென உருகிய கசடனை யொழியாமல்

உவகை தருகலை பலவுணர் பிறவியின்
உவரி தனிலுறு மவலனை அசடனை
உனது பரிபுர கழலிணை பெறவருள் புரிவாயே

*குருகு-கோழி. †சிகரம்-கோவர்த்தனம். ‡நிரை-பசு. §அரவு-காளிங்கன்.
||உழைதரு வனிதை-வள்ளியம்மை. ¶நகில்-தனம். $தளவு-முல்லையரும்பு.

அரவ மலிகடல் விடமமு தடனெழு
அரிய யனுசுரரை இபன்முத லினைவரும்
அபய மிகவென அதையயி னிமையவன் அருள்பாலா

அமர்செய் திசிசர ருடலவை துணிபட
அவனி இடிபட அலைகடல் பொடிபட
அமரர் சிறைவிட அடலயில் நொடியினில் விடுவோனே

பரவு புனமிசை உறைதரு குறமகள்
பணைகொ ளணிமுலை முழுகுப னிருபுய
பணில சரவணை தனில்முளை ரியில்வரு முருகோனே

பரம குருபர எனுமுறை பரசொடு
பரவி அடியவர் துதிசெய மகிதவழ்
பழநி மலைதனி னினிதுறை அமரர்கள் பெருமாளே.(உ௭)

தனத்ததனத் தனத்ததனத்
தனத்ததனத் தனத்ததனத்
தனத்ததனத் தனத்ததனத் தனதான.

28. கனத்திறுகிப் பெருத்திளகிப்
பணைத்துமணத் திதத்துமுகக்
கறுப்புமிகுத் தடர்த்துநிகர்த் தலமேராய்

கவட்டையுமெத் தடக்கிமதர்த்
தறக்கெருவித் திதத்திடுநற்
கலைச்சவுரித் தலைக்குலவிக் கனிகூரும்

தனத்தியர்கட் கிதத்துமிகுத்
தனற்குண்மெழுக் கெனப்புவியிற்
றவித்திழிசொற் பவக்கடலுற் றயர்வாலே

சலித்தவெறித் துடக்குமனத்
திடக்கனெனச் சிரிக்கமயற்
சலத்தின்வசைக் கிணக்கமுறக் கடவேனோ

ஐராபதன்-வெள்ளையானையை வாகனமாயுடைய தேவேந்திரன்.

புனத்தின்மலைக் குறத்தியுயர்த்
திருக்குதனக் குடத்தினைறைப்
புயத்தவநற் கருத்தையுடைக் குகவீரா

பொருப்பரசர்க் கிரக்கமொடுற்
றறற்சடிலத் தவச்சிவனிற்
*புலச்சிதனக் கிதத்தைமிகுத் திடுநாதா

சினத்தெதிர்துட் டரக்கர்தமைத்
திகைத்துவிழக் கணப்பொழுதிற்
சிதைத்திடுநற் கதிர்க்கைபடைத் துடையோனே

செருக்கொடுநற் றவக்கமலத்
தயற்குமரிக் கருட்புரிசைத்
திருப்பழநிக் கிரிக்குமரப் பெருமாளே. (உஅ)

129. குறித்தமணிப் பணித்துகிலைத்
திருத்தியுடுத் திருட்குழலைக்
குலைத்துமுடித் திலைச்சருளைப் பிளவோடே

†குதட்டியதுப் புதட்டைமடித்
‡தயிர்ப்பயிலிட் டழைத்துமருட்
கொடுத்துணர்வைக் கெடுத்துநகக் குறியாலே

பொறித்ததனத் தணைத்துமனச்
செருக்கினர்கைப் பொருட்கவரப்
புணர்ச்சிதனிற் பிணிப்படுவித் திடுமாதர்

புலத்தலையிற் செலுத்துமனப்
ப்ரமத்தையறப் ப்ரசித்தமுறப்
புரித்தருளித் திருக்கழலைத் தருவாயே

பறித்ததலைத் திருட்டமணக்
குருக்களசட் டுருக்களிடைப்
பழுக்களுகக் கழுக்கள்புகத் திருநீறு

---

* புலச்சி-ஞானமயமானவள், † குதட்டிய, துப்ப, உதட்டை எனப் பிரித்துப்பொருள்கொள்க. ‡ அயிர்ப்பயிலிட்டு மயங்கும்படி அழகு காட்டி.

பரப்பிய *தத் திருப்பதிபுக்
கனற்புனலிற் கனத்தசொலைப்
பதித்தெழுதிப் † புகட்டதிறற் கவிராச

செறித்தசடைச் ‡ சசித்தரியத்
தகப்பன் §மதித் துகப்பனெனச்
||சிறக்கவெழுத் தருட்கருணைப் பெருவாழ்வே

திகழ்ப்படுசெய்ப் பதிக்குளொளைத்
தடுத்தடிமைப் படுத்தவருட்
டிருப்பழநிக் கிரிக்குமரப் பெருமாளே. (உகூ)

தனதன தத்தத் தனந்த தந்தன
தனதன தத்தத் தனந்த தந்தன
தனதன தத்தத் தனந்த தந்தன தனதான.

130. கலவியி லிச்சித் திரங்கி நின்றிரு
கனதனம் விற்கச் சமைந்த மங்கையர்
கயல்கள்சி வப்பப் பரிந்து நண்பொடும் இன்பமுறிக்

கனியித ழுற்றுற் றருந்தி அங்குறும்
அவச மிகுத்துப் பொருந்தி இன்புறு
கலகம் விளைத்துக் கலந்து மண்டணை ¶அங்கமீதே

குலவிய நற்கைத் தலங்கொ டங்கணை
கொடியிடை மெத்தத் துவண்டு தண்புயல்
குழலளை கக்கட் டவிழ்ந்து பண்ணையில் அங்கம்வேறுய்க்

குறிதரு வட்டத் தடர்ந்த சிந்துர
முகதல முத்துப் பொலிந்தி லங்கிடு
கொடியம யற்செய்ப் பெருந்த டந்தனில் மங்கலாமோ

---

*தத் திருப்பதி-அந்தத் திருப்பதி-மதுரை †புகட்ட-புகவிட்ட என்பதன் தொகை ‡ சசித்தரி சந்திரனைச் சடாபாரத்தி லணிந்திருக்கின்ற. § மதித்து, உகப்பன், என, என்று பிரித்துக் கொள்க || சிறக்க எழுத்து அருள்-சிறப்புறும்படி பிரணவத்தை உபதேசஞ்செய்த ¶அங்கம்-கட்டில்.

இலகிய சித்ரப் புனைந்த ளிந்துறை
குறமகள் கச்சுக் கிடந்த கொங்கையின்
இனிதுறு பத்மப் பதம்ப ணிந்தருள் கந்தவேளே

ஏழுகடல் வற்றப் பெருங்கொ டுங்கிரி
இடிபட மிக்கப் ரசண்டம் விண்டுறும்
* இகலர்ப தைக்கத் தடிந்தி லங்கிய செங்கைவேலா

பலவித நற்கற் படர்ந்த சுந்தரி
பயில்தரு வெற்புத் தருஞ்செ ழுங்கொடி
பணைமுலை மெத்தப் பொதிந்து பண்புறு கின்றபாலை

பலதிசை மெச்சத் தெரிந்த செந்தமிழ்
பகரென இச்சித் துகந்து கொண்டருள்
பழநியில் வெற்பிற் றிகழ்ந்து நின்றருள் தம்பிரானே. ()

---

131. முகிலளகத்திற் கமழ்ந்த வண்பரி
மளவலர் துற்றக் கலந்தி டந்தரு
முகிழ்துதி தைத்துத் துயர்ந்த மங்கையர் அங்கமீதே

முகம்வெயர் வுற்றுப் பரந்து செங்கயல்
விழியிணை செக்கச் சிவந்து குங்கும
ம்ருகமத மத்தத் தனங்க ளின்மிசை எங்குமேவி

உகவுயி ரொத்துப் புயங்க ளின்புற
உறவிணை உற்றுத் திரண்டு கொங்கள
வுறுமணை உற்றுத் திரங்கு மஞ்சமில் ஒன்றிமேவி

ஒளிதிகழ் பத்மக் கரங்க ளின்புறம்
உறவளை யொக்கக் கலின்க லென்கவும்
உயர்மய லுற்றுற் றிரங்கு மன்பதொ ழிந்திடாதோ

செகமுழு தொக்கப் பயந்த சங்கரி
அடியவர் சித்தத் துறைந்த சம்ப்ரம
சிவனொரு பக்கத் துறைந்த மங்கைச மங்கைநீடு

* இகலர் - பகைவர்.

திகழ்வன பச்சைப் பசுங்கி*அம்பண
காதலி கச்சுற் றிலங்கு கொங்கையள்
திருவரு ணற்பொற் பரந்தி டும்பரை   அண்டமீதே
பகலிர வற்றிட் டுயர்ந்த அம்பிகை
திரிபுர முற்றிட் டிரண்டொ டொன்றலர்
பரிவுற வொக்கச் செயும்ப ரம்ப்ரமி   அன்புகூரும்
பதிவ்ரதை மிக்கச் சிரந்தெ ரிந்தருள்
பகிரதி வெற்பிற் பிறந்த பெண்தரு
பழநியில் வெற்பிற் றிகழ்ந்து நின்றருள்   தம்பிரானே

தனனதன தான தந்த தனனதன தான தந்த
தனனதன தான தந்த   தனதான.

132. அவனிதனி லேபி றந்து மதலையென வே†த வழ்ந்து
அழகுபெற வேந டந்து   இளைஞோனாய்
அருமழலை யேமி குந்து குதலைமொழி யேபு கன்று
அதிவிதம தாய்வ ளர்ந்து   பதினாறாய்
சிவகலைக ளாக மங்கள் மிகவுமறை யோது மன்பர்
திருவடிக ளேநி னைந்து   துதியாமல்
தெரிவையர்க ளாசை மிஞ்சி வெகுகவலை யாயு ழன்று
திரியுமடி யேனை உன்றன்   அடிசேராய்
மவுனவுப தேச சம்பு மதியறுகு வேணி தும்பை
மணிமுடியின் மீத ணிந்த   மகதேவர்
மனமகிழ வேய ணைந்து ஒருபுறம தாக வந்த
மலைமகள்கு மார துங்க   வடிவேலா
பவனிவர வேயு கந்து மயிலின்மிசை யேதி கழ்ந்து
படியதிர வேந டந்த   கழல்வீரா
பரமபத மேசெ றிந்த முருகனென வேயு கந்து
பழநிமலை மேல மர்ந்த   பெருமாளே. (ந௨)

*அம்பணம்-ஒருவகை யாழ். †தவழ்ந்து-அழகு. "உயிர்வரினுக்குறள் மெய்விட்டோடும்" என்றபடி தவழ்ந்தழகு எனப்புணராது உகரம்நின்று இயல்பாயிற்று. இந்நூலிற் பல இடங்களில்இவ்வாறு வருவதுகாணலாம்.

133. கருவினுரு வாகி வந்து வயதளவி லேவ ளர்ந்து
கலைகள் பல வேதெ ரிந்து மதனாலே
கரியகுழல் மாதர் தங்கள் அடிசுவடு மார்பு தைந்து
கவலைபெரி தாகி நொந்து மிகவாடி
அரகரசி வாய வென்று தினமுநினை யாமல் நின்று
அறுசமய நீதி ஒன்றும் அறியாமல்
அசனமிடு வார்கள் தங்கள் மனைகள் தலை வாசல்நின்று
அநுதினமும் நாணமின்றி அழிவேனோ
உரகபட மேல்வ ளர்ந்த பெரியபெரு மாள ரங்கர்
உலகளவு மால்ம கிழ்ந்த மருகோனே
உபயகுல தீப துங்க விருதுகவி ராஜ சிங்க
உறை*புகலி யூரி லன்று வருவோனே
பரவைமனை மீதி லன்று ஒருபொழுது தூது சென்ற
பரமனரு ளால்வ ளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனை கொன்று அமரர்சிறை மீள வென்று
பழநிமலை மீதில் நின்ற பெருமாளே. (௩௩)

தனதனன தந்த தந்த தனதனன தந்த தந்த
தனதனன தந்த தந்த தனதான.

134. மருமலரி னன்று ரந்து விடவினைய ருந்தி அந்த
†மதியொடுபி றந்து முன்பெய் வதையாலே
வகைதனைம றந்தெ ழுந்து முலைதனைய ருந்தி அந்த
மதலையென வந்து குன்றின் வடிவாகி
இருமயல்கொ டுந்து வண்டு பொருதுவைய ரகம்பு குந்து
இரவுபகல் கொண்டொ டுங்கி அசடாகும்
இருவினைபொ திந்த இந்த ஜனனமர ணந்து றந்துன்
இணையடிவ ணங்க என்று பெறுவேனோ
திருவொடுபெ யர்ந்தி ருண்ட வனமிசைந டந்தி லங்கை
திகழெரியி டுங்கு ரங்கை ‡நெகிழாத

---

*புகலியூர்-சீர்காழி. †மதியொடு-மதிபோல. ‡நெகிழாத-நெகிழவிடாத.

திடமுளமு குந்தர் கஞ்சன் வரவிடுமெல் வஞ்ச கங்கள்
செறிவுடனெ றிந்து வென்ற பொறியாளர்
பரிவொடுமெ கிழ்ந்தி றைஞ்ச மருதிடைத வழ்ந்து நின்ற
பரமபத நண்ப ரன்பின் மருகோனே
பதுமமிசை வண்ட லம்பு கணைபலவி ளங்கு துங்க
பழநிமலை வந்த மர்ந்த பெருமாளே. (௩௪)

தனனதன தனன தந்த தனனதன தனன தந்த
தனனதன தனன தந்த தனதான.

135. விரைமருவு மலர ணிந்த கரியபுரி குழல்ச ரிந்து
விழவதன மதிவி ளங்க அதிமோக
விழிபுரள முலைகு லுங்க மொழிகுழற அணைபு குந்து
விரகமயல் புரியு மின்ப மடவார்பால்
இரவுபக லணுகி நெஞ்ச மறவழிய உருகு மந்த
இருளகல உனது தண்டை அணிபாதம்
எனதுதலை மிசைய ணிந்து அழுதழுது னருள்விரும்பி
இனியபுகழ் தனைவி ளம்ப அருள்தாராய்
அரவில்விழி துயில்மு குந்த னலர்கமல மலர்ம டந்தை
அழகினொடு தழுவு கொண்டல் மருகோனே
அடலசுர ருடல்பி ளந்து நிணமதனில் முழுகி அண்ட
அமரர்சிறை விடுதி ரண்ட வடிவேலா
பரவைவரு விடம ருந்து மிடறுடைய கடவுள் கங்கை
படர்சடையர் விடைய ரன்பர் உளமேவும்
பரமரு ளியக டம்ப முருகவறு முகவ கந்த
பழநிமலை தனில மர்ந்த பெருமாளே. (௩௫)

தனன்தன தானன தானதன தந்த
தனன்தன தானன தானதன தந்த
தனன்தன தானன தானதன தந்த தனதான.

136. இருகனக மாமேரு வோகளப துங்க
கடகடின பாடீர வாரமுத கும்ப
மிணைசொலிள நீரோக ராசலவி ரண்டு குவடேயோ

இலகுமல ரேவாளி யாகியவ னங்கன்
அணிமகுட மோதானெ னுமிகவ ளர்ந்த
இளமுலைமி னார்மோக மாயையில்வி ழுந்து தணியாமல்

பெருகியொரு காசேகொ டாதவரை யைந்து
தருவைநிக ரேயாக வேயெதிர்பு கழ்ந்து
பெரியதமி ழேபாடி நாடொறுமி ரந்து நிலைகாணுப்

பிணியினக மேயான பாழுடலை நம்பி
உயிரையவ மாய்நாடி யேயவ நிரம்பு
பிறவிதனி லேபோக மீளவு முழன்று திரிவேனோ

கருணையுமை மாதேவி காரணிய நந்த
சயனகளி கூராய சோதரி * பு ரந்த
கடவுளுடன் வாதாடு காளிமலை மங்கை அருள்பாலா

† கருடனுடன் வீறுன ‡ கேதனமி லங்கு
மதிலினொடு மாமாட மேடைகளு லங்கு
கலிசைவரு காவேரி சேவகனொ டன்பு புரிவோனே

பரவையிடை யே § பாத காசுரர்வி ழுந்து
கதறியிட வேபாக சாதனனு நெஞ்சு
|| பலிதமென வேயேக வேமயிலில் வந்த குமரேசா

பலமலர்க ளேதூவி ஆரணந வின்று
பரவியிமை யோர்சூழ நாடொறுமி சைந்து
பழநிமலை மீதோர்ப ராபரனி றைஞ்சு பெருமாளே ()

தனதனன தானந்த தத்ததன தானதன
தனதனன தானந்த தத்ததன தானதன
தனதனன தானந்த தத்ததன தானதன தனதான.

137. சுருதிமுடி மோனஞ்சொல் சிற்பரம ஞானசிவ
சமயவடி வாய்வந்த அத்துவித மானபர
சுடரொளிய தாய்நின்ற நிட்களசொ ரூபமுதலொருவார்த்தே

---

* புர அந்தக் கடவுள் என்பது புரந்த கடவுள் என்றாயிற்று. †கருடக்கொடி, ‡ வீரக்கொடி. § பாதகாசுரர்-அசுரர் || பலிதம் - அநுகூலம்.

துரியமிலே யேகண்ட மூத்தரித யாகமல
மதனில்விளை யாநின்ற அற்புதசு போதசுக
சுயபடிக மாவின்ப பத்மபத மேவடைய உணராதே

கருவிலுரு வேதங்கு சுக்கிலநீ தானவளி
பொருமவதி லேகொண்ட முக்குணவி பாகநிலை
கருதவறி யாவஞ்ச கக்கபட மூடியுடல் வினைதானே

கலகமிட வேபொங்கு குப்பைமல வாழ்வுநிச
மெனவுழலு மாயஞ்செ னித்தகுகை யேயுறுதி
கரு*தசுழ மாமிந்த மட்டைதனையாளவுன தருள்தாராய்

ஒருநியம மேவிண்ட சட்சமய வேதவடி
முடிநடுவு மாயண்ட முட்டைவெளி யாகியுயிர்
உடலுணர்வதாயெங்கு†முற்பனமதாகவமருளவோனே

‡உததரிச மாமின்ப புத்தமிர்த போகசுகம்
உதவுமம லாநந்த சத்திகர §மேவுணர
உருபிரண மாமந்த்ர கர்த்தவிய மாகவரு குருநாதா

பருதிகதி ரேகொஞ்ச நற்சரண நூபுரம
தசையநிறை பேரண்ட மொக்கநட மாடுகன
பதகெருவிதாதுங்கவெற்றிமயிலேறுமொருதிறலோனே

பணியுமடி யார்சிந்தை மெய்ப்பொருள தாகநவில்
சரவணப வாவொன்று || வற்கரமு மாகிவளர்
பழநிமலை மேனின்ற சுப்ரமணி யாவமரர் பெருமானே.

தனன தனதனன தனன தனதனன
தனன தனதனன தனதான.

138. கடலை பொரியவரை பலக னிதழைநுகர்
கடின குடவுதர விபரீத

* அசுழம் - நாய், † உற்பனம் -தோற்றம் ‡ உததரிசம்-ஜலத்தோற்றம் §மேவு உணர் அ உருபிரணமா மந்த்ரம்-பொருந்திய அறிவுருவமாகிய அந்தப் பிரணவ மந்த்ரம் ||வற்கரமுமாகி-வன்மையும் ஒளியும் உடையதாகி;

கரட தடமுமத நளின சிறுநயன
* கரிணி முகவரது துணைவோனே
வடவரையின்முகடு அதிர ஒருநொடியில்
வலம்வருமரகத மயில்வீரா
மகபதிதருசுதை குறமினொடிருவரு
மருவு சரசவித மணவாளா
அடல சுரர்கள்குல முழுது மடியவுயர்
அமரர் சிறையைவிட எழில்மீறும்
அருண கிரணவொளி ஒளிரு மயிலைவிடும்
அரக ரசரவண பவலோலா
படல † உடுபதியை இதழி அணிசடில
பசுபதிவரநதி அழகான
பழநி மலையருள்செய் மழலை மொழிமதலை
பழநி மலையில்வரு பெருமாளே. (௩௮)

தனன தனதன தனன தனதன
தனன தனதன தனதான.

139. குழல டவிமுகில் பொழில் ‡வி ரவிநுதல்
குமுத வதரமு றுவலாரம்
குழைமகரம் §வளை மொழிகு யிலமுது
குயமு ளரிமுகை கிரிசூது
விழிக யலயில்ப கழி ||வ ருணிகரு
விளைகு வளைவிடம் எனநாயேன்
மிகவ ரிவையரை அவநெ றிகள்செறி
வெறிது ளம்விதனம் உறலாமோ
$ கழல்ப ணியவினை ¶ கழல்ப ணியையணி
கழல்ப ணியவருள் மயில்வீரா

*கரிணி-யானை, உடுபதியையிதழி - சந்திரனையும் அழகான கொன்றையையும் † விர வில் - வீர வில். ‡வளை-வள்ளை, ஓர்விரத்தண்டு, § வருணி-கடல். ||கழல் பணிய வினை-பண்ணிய வினை கழல, $கழல் பணியையணி-வீரக்கழலையும்,தண்டை, சிலம்பு முதலியஆபரணங்களையு மணிந்த.

கமலை திருமரு க*மலை நிருதரு
  கமலை துளைசெய்த கதிர்வேலா

†பழனி ‡மலைவரு பழநி மலைதரு
  பழநி மலைமுருக கவிசாகா

§பரவு பரவைகொல் ||பரவை வணவரி
  பரவு மிமையவர் பெருமானே.(ருக)

தனன தானன தாந தாந
தனன தானன தாந தாந
தனன தானன தாந தாந தனதான.

140. கலக வாள்விழி வேலோ சேலோ
  மதுர வாய்மொழி தேனோ பாலோ
  கரிய வார்குழல் காரோ காநோ துவரோவாய்

¶களமு நீள்கமு கோதோள் வேயோ
  உதர மானது மாலோ பாயோ
  களப வார்முலை மேரோ கோடோ இடைதானும்

இலைய தோமலர் வேதா ஆநோன்
  எழுதி நுணிலை யோவாய்பேசீர்
  இதென மோனமி நுரே பாரீர் எனமாதர்

இருகண் மாயையி லேழும் காதே
  உனது காவிய நூலா ராய்வேன்
  இடர்ப டாதருள் வாழ்வே நீயே தரவேணும்

அலைவி லாதுயர் வாநோ ராநோர்
  நிலைமை யேகுறி வேலா சீலா
  அடியர் பாலரு ளீவாய் ✕நீபார் மணிமார்பா

---

* மலை நிருத ருக-எதிர்த்த அசுரர் உதிர்ந்துபோக. † பழனி-கனியை யொத்தவள். ‡ மலைவரு பழநிமலை-மலையரசனுக்குப் புத்திரியாக வந்த பழயநிர்மலி, § பரவு பரவை கொல்-பரவிய சமுத்திரத்தின் மீது பாண மெய்து வருத்திய. || பரவை வண அரி-கடல் வண்ணத்தையுடைய விட்டுணு.பரவு-மெச்சும் ¶களம்-கழுத்து. ✕ நீபார்-நீபம்ஆர்-நீபம்-கடப்பமலர்.

15

அழகு லாவுவி சாகா வாகா
இபமின் மகிழ் கேள்வா *தாழ்வார்
அயிலு லாவிய சீலா கோலா கலவீரா

†வலவை கேள்வர்பி ரானைக் காணார்
குறவர் மாதும ணாளா நாளார்
‡வனச மேல்வரு தேவா மூவா மயில்வாழ்வே

மதுர ஞானவி னோதா நாதா
பழநி மேவுகு மாரா தீரா
மயுர வாகன தேவா வானோர் பெருமாளே. (௬௰)

தந்தத் தனதன தனன தனன
தந்தத் தனதன தனன தனன
தந்தத் தனதன தனன தனன தனதான.

141. கொந்துத் தருகுழ லிருளோ புயலோ
விந்தைத் திருநுதல் சிலையோ பிறையோ
கொஞ்சிப்பயில்மொழி அமிர்தோ கனியோ விழிவேலோ

கொங்கைக் குடமிரு கரியோ கிரியோ
வஞ்சிக் கொடியிடை துடியோ பிடியோ
கொங்குற் றுயர§ரது அரவோ ரதமோ எனுமாதர்

திந்தித் திமிதிமி திமிதா திமிதோ
தந்தித் திரிகிட கிடதா எனவே
சிந்திப் படிபயில் நடமா டியபா விகள்பாலே

சிந்தைத் தயவுகள் புரிவே னுனையே
வந்தித் தருள் தரு மிருசே வடியே
சிந்தித் திடமிகு மறையா கியசீர் அருள்வாயே

வெந்திப் புடன்வரு மவுணோ சனையே
துண்டித் திடுமொரு கதிர்வே லுடையாய்
வென்றிக் கொருமலை எனவாழ் மலையே தவவாழ்வே

---

*தாழ்வார்-நீட்சிபொருந்திய. † வலவைகேள்வர்-விநாயகர். ‡வனசம்-சரவணப் பொய்கையிலுள்ள பதுமப்பூவாயல், §அது-இடக்கரடக்கல்.

விஞ்சைக் குடையவர் தொழவே வருவாய்
கஞ்சத் தயனுடன் அமரே சனுமே
விந்தைப்பணிவிடை புரிபோ தவர்மேல் அருள்கூர்வாய்

தொந்திக் கணபதி மகிழ்சோ தரனே
செங்கட் கருமுகில் மருகா குகனே
சொந்தக் குறமகள் கணவா திறல்சே கதிர்காமா

*சொம்பிற் பலவள முதிர்சோ லைகள்சூழ்
இஞ்சித் திருமதில் புடைசூ ழருள்சேர்
துங்கப் பழநியில் முருகா இமையோர் பெருமாளே. ()

தனதன தத்தா தத்தன
தனதன தத்தா தத்தன
தனதன தத்தா தத்தன தனதான.

142. அகல்வினை உட்சார் சட்சம
யிகளொடு†வெட்கா தட்கிடும்
அறிவிலி வித்தா ரத்தன மலிகாரம்

அகில்கமழ் கத்தூ ரித்தனி
அணைமிசை ‡ கைக்கா சுக்கள
வருள்பவர் நட்பே கொட்புறும் ஒருபோதன்

பகலிர விற்போ திற்பணி
பணியற விட்டா ரெட்டிய
பரமம யச்சோ திச்சிவ மயமாகின்

பழநித னிற்போ யுற்பவ
வினை § விள கட்சேர் வெட்சிகு
ரவுபயில் நற்றாள் பற்றுவ தொருநாளே

புகலிவ னப்பே றப்புகல்
மதுரைமன் வெப்பா றத்திகழ்
||பொடிகொடு புற்பாய் சுற்றிகள் கழுவேறப்

---

* சொம்பில்-இனத்தில். †வெட்கா x தட்கிடும்-அஞ்சாது தடுத்து வாதஞ்செய்யும். ‡ கைக்காசுக்களவருள்பவர் - ஈந்த பணத்துக்குகந்தப்படி பிரியங்காட்டுபவர். § விள-விள்ள, நீங்க. || பொடி - திருநீறு.

பொருதச மர்த்தா குத்திர
    *தாரகமு கக்கோ தைக்கிடை
    புலவரில் நக்கீ ரர்க்குத வியவேளே

இகல்படு நெட்டூர் பொட்டெழ
    இளநகை இட்டே சுட்டருள்
    எழுபுவி துய்த்தார் மைத்துனர் மதலாய்†வென்

றிடரற முப்பால் செப்பிய
    கவிதையின் ‡மிக்கா ரத்தினை
    எழுதி §வனத்தே எற்றிய பெருமாளே. (சஉ)

தனன தனனதன தந்தத்த தந்ததன
தனன தனனதன தந்தத்த தந்ததன
தனன தனனதன தந்தத்த தந்ததன தந்ததான.

143. அதல விதலமுத லந்தத்த லங்களென
    அவனி எனவமரர் அண்டத்த கண்டமென
    அகில சலதியென எண்டிக்குள் விண்டுவென அங்கியானு

அமுத கதிர்களென அந்தித்த மந்த்ரமென
    அறையு மறையெனவ ருந்தத்து வங்களென
    அணுவிலணுவெனநிறைந்திட்டுநின்றதொருசம்ப்ரதாயம்

உதய மெழவிருள்வி டிந்தக்க ணந்தனிலி
    ருதய கமலமுகி ழ்ங்கட்ட விழ்ந்துணர்வில்
    உணரு மநுபவம னம்பெற்றி டும்படியை வந்துநீமுன்

உதவ இயலினியல் செஞ்சொற்ப்ர பந்தமென
    மதுர கவிகளில்ம னம்பற்றி ருந்துபுகழ்
    உரிய அடிமையுனை அன்றிப்ர பஞ்சமதை நம்புவேனோ

தத்த தததத தந்தத்த தந்ததத
    திதித் திதிதிதி திந்தித்தி திந்திதிதி
    தகுகு தகுதகுகு தந்தத்த தந்தகுகு திந்திதோதி

---

* தாரகமுகக் கோதை - கற்கிமுகி என்கின்ற ஓர் பூதம். † வென்று இடர்அற எனப்பிரிக்க. ‡ மிக்க ஆரத்தினை - மேலாகிய தேவாரத்தை. § வனத்தே எற்றிய - வைகைநதி ஜலத்தில் எதிரேறும்படி விட்ட.

சகக சகெகணக தந்தத்த குங்கெணக
டிடிடி டிடிடிடிடி டிண்டிட்டி டிண்டிடிடி
தகக தகதகக தந்தத்த தந்தகக என்றுதாளம்

பதலை திமிலைதுடி தம்பட்ட மும்பெருக
அகில நிசிசரர்நடுங்கக்கொ டுங்கழுகு
பரிய குடர்பழுவெ லும்பைப்பி டுங்கரண துங்ககாளி

பவுரி இடநரிபு லம்பப்ப ருந்திறகு
கவரி இடவிகலை வெண்டிச்சி * கண்டிதனில்
பழநிமலையின்மிசைவந்துற்ற இந்திரர்கள்தம்பிரானே()

தனதன தானத் தான தனத்தத்
தனதன தானத் தான தனத்தத்
தனதன தானத் தான தனத்தத் தனதான.

144. † அரிசன வாடைச் சேர்வை குளித்துப்
பலவித கோலச் சேலை உடுத்திட்
டலர்குழல் கோதிக் கோதி முடித்துச் சருளோடே

அமர்பொரு காதுக் கோலை திருத்தித்
திருநுதல் நீவிப் பாளித பொட்டிட்
டகில்புழு காரச் சேறு தனத்திட் டலர்வேளின்

சுரத விநோதப் பார்வை மையிட்டுத்
தருணக லாரத் ‡ தோடைத ரித்துத்
தொழிலிடு தோளுக் கேறவ ரித்திட் டிளைஞோர்மார்

துறவினர் சோரச் சோரந கைத்துப்
பொருள் கவர் மாதர்க் காசைய ளித்தற்
றுயரற வேபொற் பாதமெ னக்குத் தருவாயே

கிரியலை வாரிச் சூரி ரத்தப்
புணரியின் மூழ்கிக் கூளிக ளிக்கக்
கிரணவை வேல்புத் தேளிர்பி ழைக்கத் தொடுவோனே

---

*சிகண்டி - மயில் † அரிசனம் மஞ்சள். ‡ தோடை-தொடை, மாலை.

கருவித கோலப் பாரத னத்துக்
குறமகள் பாதச் சேகர சொக்கக்
கிளிதெய்வ யானைக் கேபுய வெற்பைத் தருவோனே

பரிமள நீபத் தாரொடு வெட்சித்
தொடைபுனை சேவற் * கேதன துத்திப்
பணியகல் பீடத் தோகைம யிற்பொற் பரியோனே

பனிமல ரோடைச் சேலுக ளித்துக்
ககனம ளாவிப் போய்வரு வெற்றிப்
பழநியில் வாழ்பொற் கோமள சத்திப் பெருமாளே. ()

தான தானன தத்தன தத்தன
தான தானன தத்தன தத்தன
தான தானன தத்தன தத்தன தனதான.

145. ஆல காலமெ னக்கொலை முற்றிய
வேல தாமென மிக்கவி ழிக்கடை
யாலு மோகம்வி ளைத்துவி தத்துடன் இளைஞோரை

ஆர வாணமெ யிட்டும றித்துவி
கார மோகமெ ழுப்பிய தற்குற
வான பேரைய கப்படு வித்தறி விதமாகச்

சால மாலைய ளித்தவர் கைப்பொருள்
மான வேசிலு கிட்டும ருட்டியெ
சாதி பேதம லத்தழு வித்திரி மடமாதர்

தாக போகமொ ழித்துனி னைக்கடி
யானென் † வேள்விமு கத்தவ முற்றிரு
தாளை நாளும்வ ழுத்திநி னைத்திட அருள்வாயே

வால மாமதி மத்தமெ ருக்கறு
காறு பூளைத ரித்தச டைத்திரு
வால வாயன ளித்தரு ளற்புத முருகோனே

---

*கேதனம் - கொடி. † வேள்வி - ஆராதனை.

மாய மாஞெடு ரக்கரை வெற்றிகொள்
வாளி மார்பிதொ ளைத்திட விற்கொடு
வானி யேவிய மற்புய னச்சுதன் மருகோனே

நாலு வேதந விற்றுமு றைப்படியில்
வீணை நாதனு ரைத்தவ னத்தட
நாடி யோடுகு றத்தித னைக்கொடு வருவோனே

நாளி கேரம் வருக்கைக ப ழுத்துதிர்
சோலை சூழ்பழ நிப்பதி யிற்றிரு
ஞான பூரண சத்தித ரித்தருள் பெருமாளே. (சரு)

தத்தா தனத்தனன தத்தா தனத்தனன
தானத் தனந்தனன தானத் தனந்தனன தனதனதான.

146. இத்தா ரணிக்குள்மனு வித்தாய் முளைத்தழுது
மேவிக் கிடந்துமடி மீதிற் றவழ்ந்தடிகள்

தத்தா தனத்ததன இட்டே தெருத்தலையில்
ஓடித் திரிந்துநவ கோடிப் ரபந்தகலை

இச்சீர் பயிற்றவய தெட்டோடு மெட்டுவர
வாலக் குணங்கள் பயில் கோலப் பெதும்பையர்கள் உடலுறவாகி

இக்கார் சரத்துமத னுக்கே இளைத்துவெகு
வாகக் கலம்பவகை பாடிப் புகழ்ந்துபல

திக்கோடு திக்குவரை மட்டோடி மிக்கபொருள்
தேடிச் சுகந்தவணை மீதிற் றுயின்றுசுகம்

இட்டா தரத்துருகி வட்டார் முலைக்குளிடை
மூழ்கிக் கிடந்துமய லாகித் துளைந்துசில பிணியதுமுடிச்

சத்தான புத்தியது கெட்டே கிடக்கநமன்
ஓடித் தொடர்ந்துசயி றுடிக் கொளும்பொழுது

பெற்றோர்கள் சுற்றியழ உற்றோர்கள் மெத்தவழ
ஊருக் கடங்கலிலர் காலற் கடங்கவுயிர்

தக்கா திவர்க்குமய னிட்டான் விதிப்படியின்
ஓலைப் பழம்படியி னலிற் றிறந்ததெனா எடுமெனவோடி

சட்டா நவப்பறைகள் கொட்டா வரிச்சுடலை
ஏகிச் சடம்பெரிது வேகப் புடஞ்சமய
இட்டே அனற்குளெரி பட்டா ரெனத்தழுவி
நீடிற் படிந்துவிடு பாசத் தகன்றுனது
சற்போ தகப்பதும முற்றே தமிழ்க்கவிதை
பேசிப் பணிந்துருகு நேசத் தையின்றுதர இனிவரவேணும்
திக்தா திரித்திகுட தத்தா தனத்தகுத
தாகத் தனந்ததனன தானந் தனந்ததன
செச்சே செகுச்செகுகு திக்கா திகுந்திகு
தாதத் தசெந்திகுத தீகத் தசெந்தரிக
திக்தா கிடக்கணக டக்கா குகுக்குகுகு
தோரக் கணங்கணக கூகுக் கிணங்கிணென ஒருமயிலேறித்
*திட்டே ரதத்தசுரர் பட்டே விழப்பொருது
வேலைத் துளைந்துவரை ஏழைப் பிளந்துவரு
சித்தா பரத்தமரர் கத்தா குறத்திமுலை
மீதிற் புணர்ந்துசுக லீலைக் கடம்பமணி
சுத்தா உமைக்குமொரு முத்தாய் முளைத்தகுரு
நாதக் குழந்தையென வோடிக் கடம்பமலர் அணிதிருமார்பா
†மத்தா மதக்களிறு பிற்றா னுதிக்குக
னேதத் திலங்கையினி லாதிக் கழுண்டதொரு
முட்டா ளரக்கர்தலை இற்றே விழக்கணைக
ளேதொட் டகொண்டலுரு வாகிச் சமந்திதிக
மட்டார் மலர்க்கமல முற்றுச் சனத்திருவை
மார்பிற் புணர்ந்தரகு ராமற் குமான்புடைய மருமகனாகி
வற்றா மதுக்கருணை உற்றே மறைக்கலைகள்
ஓதித் தெரிந்துதமிழ் சோதித் தலங்கலணி
அத்தா பரத்தையறி வித்தாவி சுற்றுமொளி
ஆகிப் ரபந்தமணி வேல்தொட் டமைந்தபுய
வர்க்கா மருப்புழுகு முட்டா திருப்பழநி
வாழ்வுக் குகந்தடிய ராவிக்குள் நின்றுலவி வருபெருமாளே. (௬௯)

* திட்டேரதம்-திண், தேர், ரதம். † மத்தா-களிப்பையுடையவனே.

தனதனன தனதனன தானான தனதனன
தனதனன தனதனன தானான தனதனன
தனதனன தனதனன தானான தனதனன தனதான,

147. இரவியென வடவையென ஆலால விடமதென
உருவுகொடு ககனமிசை மீதேகி மதியும்வர
இரதிபதி கணைகளொரு நாலேவ இருகுயி லதுகூவ
எழுகடலின் முரசினிசை வேயோசை விடையின் மணி
இசைகுறுகி இருசெவியு நாராச முறுவதென
இகல்புரிய மதன*குரு வோராத அனையர்கொடு வசைபேச
அரஹரென வனிதைபடு பாடோத அரிதரிது
அமுதமயி லதுகருதி யாரோடு மிகல்புரிவள்
அவசமுற அவசமுற ஆ†ரோமல் தரவுமிக மெலிவாளே
‡அகுதியிவள் தலையில்விதி ஆனாலும் விலகரிது
அடிமைகொள உனதுபர மாருத ஒருதனிமை
அவளையணை தரவினிதி§னோகார பரியின்மிசை வருவாயே
||நிரைபரவி வரவரையு ளோர்சீத ¶மருதினொடு
பொருசகடு உதையதுசெய் தாமாய மழைசொரிதல்
நிலைகுலைய மலைகுடைய தாவேகொள் கரகமலன் மருகோனே
திருமலிய திரிநயனி வாள்வீச வருகுமரி
கவுரிபயி ரவியரவ பூணாரி திரிபுவனி
நிபுணமலை அரசனருள் வாழ்வான புரணவுமை அருள்பாலா
பரவைகிரி அசுரர்திரள் மாசேனை தவிடுபொடி
படவமரர் துயரகல மேலேவி அமர்பொருத
பதுமகர தலமுருக நால்வேத கரணிகர மயில்வீரா
பனிதருக மதகளப சேறார வளருமுலை
வனிதைகுற மகள்மகிழும் லீலாவி தரமதுர
பனுவல்தரு பழநிவரு கோலாக லாவமரர் பெருமாளே ()

---

* குரு - பாரம். † ஓமல் - ஊர்ப்பேச்சு. ‡ அகுதி - திக்கற்றவள். § ஓகாரம் - ஓகரம், மயில். || நிரை - பசுக்கூட்டம் ¶ மருதினொடுபொருசகடு - கம்சனாலேவப்பட்டு மருதமரமும் சக்கரமுமாய் வந்த அசுரர்கள்.

தனதன தனதன தந்த தானன
தனதன தனதன தந்த தானன
தனதன தனதன தந்த தானன தனதான.

148. இலகிய களபசு கந்த வாடையின்
ம்ருகமத மதனைம கிழ்ந்து பூசியெ
இலைசுருள் பிளவைய ருந்தி யேயதை இதமாகக்
கலவியி லவரவர் தங்கள் வாய்தனில்
இடுபவர் பலபல சிந்தை மாதர்கள்
*நசனையை விடுவது மெந்த நாளது பகர்வாயே
சிலைதரு குறவர்ம டந்தை நாயகி
தினைவன மதனிலு கந்தநாயகி
திரள்தன மதனில ணைந்த நாயக சிவலோகா
கொலைபுரி அசுரர்கு லங்கள் மாளவெ
†அயிலைவி லதனையு கந்த நாயக
குருபர பழநியி லென்றுமேவிய பெருமாளே. (சஅ)

தனத்தான தனதனன தனத்தான தனதனன
தனத்தான தனதனன தனதான.

149. உயிர்க்கூடு விடுமளவு முமைக்கூடி பருவுதொழில்
ஒருக்காலு நெகிழ்வதிலை எனவேசூள்
உரைத்தேமுன் மருவினரை வெறுத்தேம திரவியம
துடைத்தாய்பின் வருகுமவர் எதிரேபோய்
பயிற்பேசி இரவுபகல் அவர்க்கான ‡பதமைபல
படப்பேசி உறுபொருள்கொள் விலைமாதர்
படப்பார வலைபடுதல் தவிர்த்தாள மணிபொருவு
பதத்தாள மயிலின்மிசை வரவேணும்
தயிர்ச்சோர னெனுமவுரை வசைக்§கோவ வனிதையர்கள்
தரத்தாடல் புரியுமரி மருகோனே
தமிழ்க்காழி மருதவன மறைக்காடு திருமருகல்
தநுக்கோடி வருகுழகர் தருவாழ்வே

---

* நசனை - ஈரம், அன்பு. † அயிலயில் - கூர்மையான வேலாயுதம். ‡ பதமை - வார்த்தைகளை, பதங்களை. § கோவவனிதையர் - கோபிகாஸ்திரீகள்.

*செயிற்சேல்†வி ணூடுவிடுநெடு பொரப்போய்‡வி மமர்பொருது
செயித்தோடி வருபழநி அமர்வோனே
தினைக்காவல் புரியவல குறப்பாவை யொடுதழுவு
திருத்தோள அமரர்பணி பெருமாளே. (சகூ)

தான தான தனத்த தனத்தன
தான தான தனத்த தனத்தன
தான தான தனத்த தனத்தன தனதான.

150. ஓடி ஓடி அழைத்து வரச்சில
சேடி மார்கள் பசப்ப அதற்குமுன்
ஓதி கோதி முடித்த விலைச்சுருள் அதுகோதி
நீடு வாச நிறைத்த அகிற்புழு
கோட மீது திமிர்த்த தனத்தினில்
நேச மாகி அணைத்த சிறுக்கிகள் உறவாமோ
§நாடி வாயும் வயற்ற லையிற்புனல்
ஓடை மீதினி||லத்த திவட்கையின்
¶நாத கீத மலர்த்து ளிபெற்றளி இசைபாடும்
கோடு லாவி யமுத்துதி ரைத்தவை
காவர் நாட தனிற்பழ நிப்பதி
கோதி லாத குறத்திய ணைத்தருள் பெருமாளே. (நுய)

தனனத் தனனத் தனனத் தனனத்
தனனத் தனனத் தனனத் தனனத்
தனனத் தனனத் தனனத் தனனத் தனதான.

151. கடலைச் சிறைவைத் துமலர்ப் பொழிலிற்
ப்ரமரத் தையுடற் பொறியிட் டுமடுக்
கமலத் தைமலர்த் திவிடத் தையிரப் பவனூணுக்

* செய்யில்சேல்-வயல்களிலிருக்கும் கெண்டைமீன்கள். †விண்ணூடு-வான்மீன்கள். ‡ விமமர் - விம்மு அமர் § நாடி - பூந்தாள் || அத்த திவட்கையின் - அர்த்தம் விளக்கும்படி. ¶நாதகீத மலர்த்துளி பெற்றளி இசைபாடும் - அளி மலர்த்துளி பெற்று நாதகீத இசைபாடும் எனக்கூட்டுக.

கருதிச் சருவிக் கயலைக் கயமுட்
படுவித் துழைபைக் கவனத் தடைசிக்
கணையைக் கடைவித் துவடுத் தனையுப் பினில்மேவி

அடலைச் செயல்சத் தியையக் கிளியிற்
புகுவித் துயமப் ப்ரபுவைத் துகைவித்
தரிகட் கவ்விதிர்த் துமுறித் துமதித் தசகோரம்

அலறப் பணிரத் னமணிக் குழையைச்
சிலுகிட் டுமையிட் டொளிவிட் டுமருட்
டுதலுற் றபொறிச் சியர்கட் சடையிற் படுவேனை

சடிலத் தவனிட் டவிசிட் டகுலத்
தொருசெட் டியிடத் திறுதித் தருள்வித்
தகருத் ரஜன்மப் பெயர்செப் பியிடப் பரிவாலே

*சனகர்க் குமகஸ்த் யபுலஸ்த் யசனற்
குமரர்க் குமநுக் க்ரக†மெய்ப் பலகைச்
‡சதுபத் துநவப் புலவர்க் குப்§விபந் தியில்ஞான

படலத் துறுலக் கணலக் ய‖தமிழ்த்
த்ரயமத் திலகப் பொருள்வ்ருத் தியினைப்
¶பழுதற் றுணர்வித் தருள்வித் தகசற் குருநாதா

பவளக் கொடிசுற் றியபொற் கமுகிற்
றலையிற் குலையிற் பலமுத் துதிர்செய்ப்
பழநிப் பதிவெற் பினில்நற் குமரப் பெருமாளே. (௬௧)

தனதன தத்த தானன தனதன தத்த தானன
தனதன தத்த தானன தனதான.

152. கதிரையி லக்கு மாதர்கள் புதியவி ரத்ந பூஷண
கனதன வெற்பு மேல்மிகு மயலான

கவலைம னத்த னாகிலும் உனதுப்ர சித்த மாகிய
கனதன மொத்த மேனியும் முகமாறும்

---

*சனகர்க்கும் என்பது முதலாகக்கூறிய இவர்களே சனகாதிநால்வர். †மெய்ப்பலகை-சங்கப்பலகை. ‡சதுபத்துநவப்புலவர் - சங்கத்தார் நாற்பத்தொன்பதின்மர் § விபந்தியில் - வேற்றுமை இல்லாத. ‖ தமிழ்த்த்ரயமத்தில் - தமிழ்த்திரயம் அதில். ¶பழுதற்று - பழுதற; வினையெச்சத் திரிபு.

அதிபல வஜ்ர வாகுவும் அயில்நுனை வெற்றி வேலதும்
அரவுபி டித்த தோகையும் உலகேழும்

அதிரவ ரற்று கோழியும் அடியர்வ ழுத்தி வாழ்வுறும்
அபிநவ பத்ம பாதமும் மறவேனே

*இரவிகு லத்தி ராசத மருவியெ திர்த்து வீழ்கடு
ரணமுக சுத்த வீரிய குணமான

இளையவ னுக்கு நீண்முடி அரசது பெற்று வாழ்வுற
இதமொட ளித்த ராகவன் மருகோனே

பதினொரு ருத்தி ராதிகள் தபனம்வி ளக்கு மாளிகை
பரிவொடு நிற்கு மீசுர சுரலோக

பரிமள கற்ப காடவி வரியளி சுற்று பூவுதிர்
பழநிம லைக்குள் மேவிய பெருமாளே. (௫௨)

தனன தந்தன தந்த தானன
தனன தந்தன தந்த தானன
தனன தந்தன தந்த தானன தந்ததான.

153. கனக கும்பமி ரண்டு நேர்மலை
எனநெ ருங்குகு ரும்பை மாமணி
கதிர்சி றந்தவ டங்கு லாவிய முந்துசூதம்

†கடையில் நின்றுப ரந்து நாடொறும்
இளகி விஞ்சியெ ழுந்த கோமள
களப குங்கும கொங்கை யானையை இன்பமாக

அனைவ ருங்கொளு மென்று மேவிலை
இடும டந்தையர் தங்கள் தோதகம்
அதின்ம ருண்டுது வண்ட வாசையில் நைந்துபாயல்

அவச மண்கொளு மின்ப சாகர
முழுகும் வஞ்சக நெஞ்சை யேயொழி
தருப தங்கதி எம்பிரானருள் தந்திடாயோ

*இர என்பது எதுகை வழு அன்று, இவ் எதுகை ஆரிடத்தை ஒத்து தண்டியலங்கார ஒழிபியலிற் கூறிய வழுவமைதியானது. †கடை-வாயில்.

தனத னந்தன தந்த னென்ன
டிகுகு டிங்குகு டிங்கு பேரிகை
தகுதி திந்திகு திந்த தோவென உந்துதாளந்

தமர சஞ்சலி சஞ்ச லாவென
முழவு டுண்டுடு டுண்டு டூவென
தருண கிண்கிணி கிண்கி ணாரமு முந்தவோதும்

பணிப தங்கய மெண்டி சாமுக
கரிய டங்கலு மண்ட கோளகை
பதறி நின்றிட நின்று தோதக என்றுதோகை

பவுரி கொண்டிட மண்டி யேவரு
நிசிச ரன்கிளை கொன்ற வேலவ
பழநி யங்கிரி யின்கண் மேவிய தம்பிரானே. (ருரு)

தனதத்தத் தனதத் தத்தத்
தனதத்தத் தனதத் தத்தத்
தனதத்தத் தனதத் தத்தத்
தனதத்தத் தனதத் தத்தத்
தனதத்தத் தனதத் தத்தத்
தனதத்தத் தனதத் தத்தத் தனதான.

154. சகடத்திற் குழைவிட் டெற்றிக்
குழலுக்குச் சரம்வைத் தெற்றிப்
புளகித்துக் குவளைக் கட்பொற்
கணையொத்திட் டுழலச் சுத்தித்
தரளப்பற் பவளத் தொட்டக்
*களபப்பொட் டுதலிட் டத்திக் குவடான

தனதுத்திப் படிகப் பொற்பிட்
டசையப் †பெட் பகளைத் துப்புக்
கொடியொத்திட் டிடையிற் பட்டைத்
தகையிற்றெட் ‡டுகளப் பச்சைச்

களப அப்பு ஒட்டுதல் இட்ட அத்திக் குவடான எனப் பிரித்துப் பொருள் கொள்க. †பெள்-விரும்பத்தக்க. ‡உகளம்-இரண்டு.

சரணத்துக் கியலச் சுற்றிச்
சுழலிட்டுக் கடலைப் பற்றிக் — கொளுமாதர்

சுகமுற்றுக் கவலைப் பட்டுப்
பொருள் கெட்டுக் கடைகெட் டுச்சொற்
குளறிட்டுத் தடிதொட் டெற்றிப்
பிணியுற்றுக் *கசதிப் பட்டுச்
சுகதுக்கத் திடர்கெட் டுற்றுத்
தளர்பட்டுக் கிடைபட் டுப்பிக் — †கிடைநாளில்

சுழலச்சக் கிரியச் சுற்றிட்
டிறுகக்கட் டுயிரைப் பற்றிக்
கொளுகப்‡பற் பலரைக் கட்டிக்
கரம்வைத்துத் தலையிற் குத்திச்
சுடுகட்டைச் சுடலைக் கட்டைக்
கிரையிட்டுப் பொடிபட் டுக்கிச் — சடமாமோ

திகுடத்திக் குகுடட் டுட்டுட்
டமடட்டட் டமடட் டிக்குட்
டிமிடிட்டிட் டிமிடிட் டிக்குத்
தொகுதொக்குத் தொகுதத் தொக்குச்
செகணக்கச் செகணச் செக்குத்
தகுடத்தத் தகுடத் தட்டுட் — டிடிபேரி

திமிலைக்கைத் துடிதட் டெக்கைப்
பகடிட்டுப் பறையொத் தக்§கட்
டிகையெட்டுக் கடல்வற் றித்||தித்
தரவுக்கக் கிரியெட் டுத்தைத்
தியருக்குச் சிரமிற் றுட்கச்
சுரர்¶பொற்புச் சொரியக் கைத்தொட் — டிடும்வேலா

பகலைப்பற் சொரியத் தக்கற்
பதிபுக்கட் டழலிட் டுத்திட்
புரமட்கிக் கழைவிற் புட்பச்

* கசதி-கசது, வருத்தம். † கிடைநாள்-கிடக்கின்ற நாள். ‡ பற்பலரை-பற்பலர் ஐ-சாரியை § கண்டிகை எட்டு-இடமகன்ற எட்டுத் திக்கும். || தித்தா-தித்தா, தியைத்தா. ¶ பொற்பு-பொற்பூ, கற்பகப் பூமாரி,

சரணைச்சுட் டயனைக் கொத்திப்
பரிவுக்கொட் பரமர்க் குச்சற்
குருவொத்துப் பொருளைக் கற்பித் தருள்வோனே

பவளப்பொற் கிரிதுத் திப்பொற்
றனகொச்சைக் கிளிசொற் பற்றிப்
பரிவுற்றுக் கமலப் புட்பத்
திசழ்பற்றிப் புணர்சித் ரப்பொற்
படிகத்துப் பவளப் பச்சைப்
பதமுத்துப் பழநிச் சொக்கப் பெருமாளே. (நிச)

தந்தன தானன தத்தத் தந்தன
தந்தன தானன தத்தத் தந்தன
தந்தன தானன தத்தத் தந்தன தனதான.

155. சிந்துர கூரம ருப்புச் செஞ்*சரி
செங்கைகு லாவந டித்துத் தென்பயில்
செண்பக மாலைமு டித்துப் பண்புள செருமுடே

சிந்துகள் பாடிமு ழக்கிச் செங்கயல்
அம்புகள் போலவிழித்துச் †சிங்கிடை
செம்பவ ளாடைது லக்கிப் பொன்பறி விலைமாதர்

வந்தவ ரரொன ழைத்துக் கொங்கையை
அன்புற மூடிநெ கிழ்த்திக் கண்பட
மஞ்சணி ராடிமி னுக்கிப் பஞ்சணை தனிலேறி

மந்திர மோகமெ ழுப்பிக் கெஞ்சிட
முன்றலை வாயில டைத்துச் சிங்கிகொள்
மங்கைய ராசைவி லக்கிப் பொன்பதம் அருள்வாயே

இந்திர நீலவ னத்திற் செப்புவி
அண்டக டாகம ளித்திட் டண்டர்கள்
‡எண்படு §சூரைய ழித்துக் கொண்டருள் ஒருபேடி

* சரி வளையல். † சிங்கிடை - சிங்கி இடை, சிங்கி-வியப்பு. § சூர்-துன்பம்.

இன்கன தேரை நடத்திச் செங்குரு
மண்டல நாடும ளித்துப் பஞ்சவர்
இன்புறு * தோழ்மை யுடைக்கத் தன்திரு மருகோனே

சந்திர சூரியர் திக்கெட் டும்புகழ்
அந்தமில் வாழ்வது பெற்றுத் தங்கிய
சங்கர னூர்செவி புக்கப் பண்பருள் குருநாதா

சம்ப்ரம மானகு றத்திக் கின்புறு
கொங்கையின் மேவுச மர்த்தச் சுந்தர
தண்டமிழ் சேர்பழ நிக்குட் டங்கிய பெருமாளே. (ருரு)

தனனதன தனனதன தத்தத் தனத்ததன
தனனதன தனனதன தத்தத் தனத்ததன
தனனதன தனனதன தத்தத் தனத்ததன தனதான.

156. சிறுபறையு முரசுதுடி சத்தக் கணப்பறையு
மொகுமொகென அதிரவுட னெட்டிப் பிடித்துமுடி
சிறுகயிறு கொடுதுகொடு கட்டிட் டிழுக்கவினி அணுகாதே

சிலதமர்க ளுறவுகிளை கத்திப் பிதற்றியெடு
சுடலைதனி லிடுகனலை இட்டுக் கொளுத்துபுனல்
திரைகடலில் முழுகெனவு ரைக்கப் படிக்†குடிலை ஒழியாதே

மறைமுறையி னிறுதிநிலை முத்திக் கிசைத்தபடி
உடலுயிர்கள் கரணவெளி பட்டுக் குணத்திரயம்
வழிபடவும் நினதடிமை இச்சைப் படுத்துவதும் ஒருநாளே

வருதுரக மயில்மணிகள் சத்திக்க நிர்த்தமிட
ஒருபதுட னிருபுயமு மட்டுத் தொடைக்கிசைய
மனமகிழ இனியமொழி செப்பிச் சிவத்தபதம் அருள்வாயே

நறையிதழி அறுகுபல புட்பத் திரட்களொடு
சிறுபிறையு மரவுமெழி லப்புத் திருத்தலையில்
நளினமுற அணிசடையர் மெச்சிப் ரியப்படவு மயிலேறி

நவநதிகள் குமுகுமென வெற்புத் திரட்சுழல
அகிலமுத லெழுபுவன மெத்தத் திடுக்கிடவும்
நவமணிகள் உரகனுடல் கக்கத் துரத்திவரு முருகோனே

* தோழ்மை - தோழமை. † குடில் - குடியிருப்பு ஐ - சாரியை.

குறவர்மூனை கெடமனாறு வெட்கப் படக்குடிலில்
மலையிலெழு தினை *யிதணில் வைத்துச் சிறுக்கியிரு
குவிமுலையு மணியிடையுமெச்சிப் புணர்ச்சிசெயு மணவாளா

குறமுநிவ னிருபொழுது மர்ச்சித்து முத்திபெற
அறிவுநெறி தவநிலைகள் செப்புத் தமிழ்க்கினிய
குருகுமர பழநிவளர் வெற்புத் தனிற்†றிகழு பெருமாளே()

தானந்த தனன தான தானந்த தனன தான
தானந்த தனன தான தனதான.

157\. ஞானங்கொள் பொறிகள் கூடி வானிந்து கதிரி லாத
நாடண்டி நமசி வாய வரையேறி

நாவின்ப ரசம தான ஆநந்த அருவி பாய
நாதங்க ளோடுகு லாவி விளையாடி

ஊனங்க ளுயிர்கள் மோக நானென்ப தறிவிலாமல்
ஓமங்கி உருவ மாகி இருவோரும்

ஓரந்த மருவி ஞான மாவிந்தை முதுகி னேறி
‡லோகங்கள் வலம தாட அருள்தாராய்

தேனங்கொ ளிதழி யான தாரிந்து §சலில வேணி
||சீரங்க னெனது தாதை ஒருமாது

சேர்பஞ்ச வடிவி மோகி யோகங்கொள் மவுன சோதி
சேர்பங்கி னமல நாதன் அருள்பாலா

கானங்கள் வரைகள் தீவு ¶ஓதங்கள் பொடிய நீற
$காடந்த மயிலி லேறு முருகோனே

ஏமன்கை மலர்கள் நாண வேடப்பெ ணமளி சேர்வை
காணெங்கள் பழநி மேவு பெருமாளே. (ருஎ)

---

* இதண் - பரண். † திகழு - உச்சரிப்பவர். ‡ லோகங்கள் - புவனங்கள். §சலிலம் - கங்கை. || சீரங்கன் - சீரிய அங்கத்தை யுடையவன், அங்கம்-எலும்பு; எலும்பைக் கோத்தணிந்த சிவபிரான். ¶ ஓதங்கள்-கடல்கள். $ காடந்த-காடு அந்த-வனத்திலுள்ள அழகிய.

தனதன தனத்தான தானன தானதன
தனதன தனத்தான தானன தானதன
தனதன தனத்தான தானன தானதன தனதான.

158. தலைவலி மருத்தீடு காமாலை சோகைசுரம்
விழிவலி வறட்சூலை காயாசு வாசம்வெகு
சலமிகு விஷப்பாக மாயாவி காரபிணி அணுகாதே

தலமிசை அதற்கான பேரோடு கூறியிது
பரிகரி எனக்காது கேளாது போலுமவர்
சரியும்வய துக்கேது தாரீர்சொ லீரெனவும் விதியாதே

உலைவற விருப்பாக நீள்காவின் வாசமலர்
வகைவகை எடுத்தே * தொ டாமாலி காபரணம்
உனதடி யினிற்சூட வேநாடு மாதவர்கள் இருபாதம்

உளமது தரித்தேவி னாவோடு பாடியருள்
வழிபட எனக்கேத யாவோடு தாருதவ
உரகம தெடுத்தாடு † மேகார மீதின்மிசை வரவேணும்

அலைகட லடைத்தேம காகோர ராவணனை
மணிமுடி துணித்தாவி யேயான சானகியை
அடலுடனழைத்தேகொள் மாயோனை மாமனெனுமருகோனே

அறுகினை முடித்தோனை ஆதார மானவனை
மழுவுழை பிடித்தோனை மாகாளி நாணமுனம்
அவைதனில்நடித்தோனை மாதாதை யேயெனவும்வருவோனே

பலகலை படித்தோது பாவாணர் நாவிலுறை
இருசர ணவித்தார வேலாயு தாவுயர்செய்
பரண்மிசை குறப்பாவை தோள்மேவு மோகமுறு மணவாளா

பதுமவ யலிற்பூக மீதேவ ரால்கள் துயில்
வருபுனல் பெருக்காறு காவேரி சூழவளர்
பழநிவ ருகற்பூர கோலாக லாவமரர் பெருமாளே. (ருஅ)

---

* தொடா - தொடுத்து † மேகாரம் - மயில்,

தனனதன தந்த தத்த தானன
தனனதன தந்த தத்த தானன
தனனதன தந்த தத்த தானன தனதான.

159. * நிகமமெனி லொன்று மற்று நாடொறு
† நெருடுகவி கொண்டு வித்தை பேசிய
நிழலர்சிறு புன்சொல் கற்று வீறுள பெயர்கூறு

நெளியமுது ‡ தண்டு சத்ர சாமரம்
§ நிபிடமிட வந்து கைக்கு மோதிரம்
நெடுகியதி குண்ட லப்ர தாபமும் உடையோராய்

முகமுமொரு சம்ப மிக்க நூல்களும்
முதுமொழியும் வந்தி ருக்கு மோவெனில்
முடிவிலவை ஒன்று மற்று வேறொரு நிறமாகி

முறியுமவர் தங்கள் வித்தை தானிது
முடியவுனை நின்று பத்தி யாலமிக
மொழியும்வளர் செஞ்சொல் வர்க்க மேவர அருள்வாயே

திருகுதிகென மண்ட விட்ட தீயொரு
செழியனுடல் சென்று பற்றி யாருகர்
திகையினமண் வந்து விட்ட போதினும் அமையாது

சிறியகர பங்க யத்து நீறொரு
திணையளவு சென்று பட்ட போதினில்
தெளியவுடன் வென்றி விட்ட மோழைகள் கழுவேற

மகிதலம ணைந்த || அத்த மாதரை
வரைவறம ணந்து நித்த நீடருள்
வகைதனைய கன்றி ருக்கு மூடனை மலரூபம்

வரவரம னந்தி கைத்த பாவியை
வழியடிமை கொண்டு மிக்க மாதவர்
வளர்பழநி வந்த கொற்ற வேலவ பெருமாளே. (ருசு)

---

* நிகமம் - வேதம். † நெருடு - நூலிழையைப் பொருத்துதல் போலச் சேர்க்கின்ற. ‡ தண்டு - சிவிகை. § நிபிடமிட - நெருங்க. || அத்த - அத்தனே.

தத்தன தத்தன தனத்த தானன
தத்தன தத்தன தனத்த தானன
தத்தன தத்தன தனத்த தானன தனதான.

160. செற்றிவெ யர்த்துளி துளிக்க வேயிரு
குத்துமு லைக்குட மசைத்து வீதியில்
நிற்பவர் மைப்படர் விழிக்க லாபியர் மொழியாலே

நித்தம யக்கிகள் மணத்த பூமலர்
மெத்தையில் வைத்ததி விதத்தி லேயுடல்
நெட்டிவ ரத்தொழில் கொடுத்து மேவியும் உறவாடி

உற்றவ கைப்படி பொருட்கள் யாவையு
மெத்தவு நட்பொடு பறித்து நாடொறும்
உற்பன வித்தைகள் தொடுக்கு மாதர்கள் உறவாமோ

உச்சித மெய்ப்புற அனைத்த யாவுடன்
மெய்ப்படு பத்தியி னிணக்க மேபெற
உட்குளிர் புத்தியை எனக்கு நீதர வருவாயே

* கற்றத மிழ்ப்புல வனுக்கு மேமகிழ்
வுற்றொரு † பொற்கொடி களிக்க வேபொரு
கற்பனை நெற்பல அளித்த காரணன் அருள்பாலா

‡ கற்பக கர்க்கனி றளித்த மாதனை
பொற்புய மைப்புயல் பிறத்த வானவர்
கட்சிறை உட்கிட அருட்கிரு பாகர எனநாளும்

நற்றவ ரர்ச்சனை இடத்த யாபர
வத்துவெ னப்புவி இடத்தி லேவளர்
நத்தணி § செக்கரன் மகிழ்ச்சி கூர்தரு மருகோனே

நட்டுவர் மத்தள மிலக்க மாமென
மைக்குல மெத்தவு முழக்க மேதரு
நற்பழ நிப்பதி செழிக்க மேவிய பெருமாளே. (கூய)

---

* கற்றதமிழ்ப் புலவன்-சுந்தர மூர்த்தி சுவாமிகள். † பொற்கொடி-பரவை நாச்சியார். ‡ கற்பகர் - தேவலோகம். § செக்கரன்-செங்கரன்.

தந்த தானனந் தானதன தானதன
தந்த தானனந் தானதன தானதன
தந்த தானனந் தானதன தானதன தனதான.

161. பஞ்ச பாதகன் பாவிமூ டன்வெகு
வஞ்ச லோபியன் சூதுகொலை காரன்மதி
பண்கொ ளாதவன் பாவகட லூடுறழை பவுஷாசா

பங்கன் மோகியம் பாழ்நரகில் வீழவுறு
பெண்டிர் வீடுபொன் தேடிநொடி மீதில்மறை
பஞ்ச மாபலம் பாசமொடு கூடிவெகு சதிகார

அஞ்சு பூதமுண் டாகடிய கோரரிவர்
தங்கள் வாணிபங் காரியம லாமலருள்
அன்பர் பாலுடன் கூடியறி யாத*புகழ்* *அடியேனை

அண்டர் மாலயன் தேடியறி யாதவொளி
சந்த்ர சேகரன் பாவைவிளை யாடு†படி
கந்த நாடுடன் கூடிவிளை யாடவருள் புரிவாயே

வஞ்ச மாசுரன் சேனைகட லோடுருவ
டுண்க வேயினன் போலவொளிர் வேலைவிடு
வண்கை யாடகம் பேடுதொடையாடுமுடி முருகோனே

மங்கை மோகசிங் காரரகு ராமரிட
தங்கை சூலியங் காளியுமை ‡சனுபுகழ்
மங்க ளாயிசந் தானசிவ காமியுமை அருள்பாலா

கொஞ்சு மா§சுகம் போலமொழி நீலவிழி
பெண்கள் நாயகந் தோகைமயில் போலிரச
கொங்கைமால்குறம்பாவை||யவல் நிரவரஅணைவோனே

கொண்டல் சூழுமஞ் சோலைமலர் வாவிகயல்
கந்து பாயநின் றுடு¶துவர் பாகையுதிர்
+கந்தி யோடகஞ் சேர்பழநி வாழ்குமர பெருமாளே()

புகழ்-இழிவுசிறப்பு. *அடியேனை-அடியேன். ஐ, சாரியை. †படிக அந்த நாடு-படிகம்போல் தாவள்ளியமான நாடு, ‡சனு-சன்ற§சுகம்-கிளி. || அவல்-ஆவல், ¶ துவர்பாகு-துவர்த்த பாக்கு. + கந்தி-கமுகமரம்.

தனதன தனதன தந்த தானன
தனதன தனதன தந்த தானன
தனதன தனதன தந்த தானன தனதான.

162. பெரியதோர் கரியிரு கொம்பு போலவெ
வடிவமார் புளகித கும்ப மாமுலை
பெருகியே ஒளிசெறி தங்க வாரமு மணியான

பிறையதோ வெனுநுதல் துங்க பீறு*வை
அழலதோ வெனுமிரு கண்க ளாரவெ
பிறகெலாம் விழுகுழல் சங்கு லாரவெ வருமானார்

உரியதோர் பொருள்கொடு வந்த பேர்களை
மனையிலே வினவியெ கொண்டு போகியெ
உளவிலே மருவிய வஞ்ச மாதர்கள் மயலாலே

உருகியே உடலற வெம்பி வாடியெ
வினையிலே மறுகியெ நொந்த பாதகன்
உனதுதாள் தொழுதிட இன்ப ஞானம தருள்வாயே

அரியதோ ரமரர்க ளண்ட மேறவெ
கொடியதோ ரசுரர்க ளங்க மாளவெ
அடலதோ டமர்புரி கின்ற கூரிய வடிவேலா

அரகரா எனமிக அன்பர் சூழவெ
கடியதோர் பயில்மிசை அன்றை ஏறியெ
அவனியோர் நொடிவரு கின்ற காரண முருகோனே

பரியதோர் கயிறனை கொண்டு வீசவெ
† உறியதோய் தயிர்தனை உண்டு நாடியெ
பசியதோ கெடவருள் கொண்டமாயவன் மருகோனே

பரமமா நதிபுடை கொண்‡ டணுவவெ
வனசமா மலரினில் வண்டு லாவவெ
பழநிமா மலைதனி லென்று மேவிய பெருமாளே. (கூஉ)

---

* வை-கூர்மை. † உறிய-உறியினிடத்துள்ள. ‡ அணுவ-நெருங்க.

தனதன தந்தத் தனத்த தானன
தனதன தந்தத் தனத்த தானன
தனதன தந்தத் தனத்த தானன தனதான.

163. மலரணி கொண்டைச் சொருக்கி லேயவள்
சொலுமொழி இன்பச் செருக்கி லேகொடு
மையுமடர் நெஞ்சத் * திருக்கி லேமுக மதியாலே

மருவுநி தம்பத் தடத்தி லேநிறை
பரிமள கொங்கைக் குடத்தி லேமிக
வலியவும் வந்தொத் திடத்தி லேவிழி வலையாலே

நிலவெறி அங்கக் குலுக்கி லேயெழில்
வளைபுனை செங்கைக் கிலுக்கி லேகன
நிதிபறி அந்தப் பிலுக்கி லேசெயும் ஒயிலாலே

நிதமிய லுந்தூர்க் குணத்தி லேபர
வசமுட னன்புற் றிணக்கி லேயொரு
நிமிஷமி ணங்கிக் கணத்தி லேவெகு மதிகேடாய்

அலையநி னைந் † துற் பனத்தி லேயனு
தினமிகு மென்சொற் பனத்தி லேவர
அறிவும ழிந் ‡ தற் பனத்தி லேநிதம் உலைவேனோ

அசடனை வஞ்சச் சமர்த்த னாகிய
கசடனை உன்சிற் கடைக்க னாடியும்
அலர்கொடு நின்பொற் பதத்தை யேதொழ அருள்தாராய்

பலபல பைம்பொற் பதக்க மாரமும்
அடிமைசொ லுஞ்சொற் றமிழ்ப்ப னீரொடு
பரிமள மிஞ்சக் கடப்ப மாலையும் அணிவோனே

பதியினில் || மங்கைக் கதித்த மாமலை
யொடுசில குன்றிற் றரித்து வாழ்வுயர்
பழநியி லன்புற் றிருக்கும் வானவர் பெருமாளே. (௬௩)

---

* திருக்கு-திருகுதாளம். † உற்பனம் - தோற்றம். ‡ அற்பனத்திலே- அற்பன் அதிலே. || மங்கைக்கதித்த மாமலை - வள்ளிமலை.

தன தனன தனதான தனதனன தனதான
தனதனன தனதான தனதான.

164. முகைமுளரி ப்ரபைவீசும் எழில்கனக மலைபோலு
முதிர்விளை தனபார மடவார்தோள்
முழுகியமி ழநுபோக விழலனென உலகோர்கள்
மொழியுமது மறியாது தலைகீழ்வீழ்ந்
தகமகிழ விதமான நகையமுத மெனவூறல்
அசடரக மெழவாகி மிகவேயுண்
டழியுமொரு தமியேனு மொழியுமுன திருதாளின்
அமுதுபரு கிடஞானம் அருளாயோ
மகரமெறி திரைமோது பகரகடல் தடவாரி
மறுகுபுனல் கெடவேலை விடுவோனே
வரிசையவுண் மகசேனை யுகமுடிய மயிலேறி
வருபனிரு கரதீர முருகோனே
பகர்வரிய ரெனலாகு முகைகொழுந ருளமேவு
பரமகுரு வெனநாடும் இளையோனே
பணிலமணி வெயில்வீசு மணிசிகர மதிசூடு
பழநிமலை தனில்மேவு பெருமாளே. (கசச)

தனன தனன தனத்த தனன தனன தனத்த
தனன தனன தனத்த தனதான.

165. முதிர உழையை வனத்தில் *முடுகி வடுவை அழித்து
முதிர கயல்கள் கயத்தி னிடையோடி
முரண வளரும் விழிக்குள் மதன விரகு பயிற்றி
முறைமை கெடவு மயக்கி வருமாதர்
மதுர அமுத மொழிக்கு மகுட களப முகைக்கு
வலிய அடிமை புகுத்தி விடுமாய
மனதை உடைய அசட்டு மனிதன் முழுது புரட்டன்
மகிழ உனது பதத்தை அருள்வாயே

*முடுகி-முடுக்கி, துரத்தி.

சதுரன் வரையை எடுத்த நிருத னுடலை வதைத்தொர்
சகடு மருத முதைத்த தகவோடே
தழையு மரமு நிலத்தில் மடிய அமரை விளைத்த
தநுவை உடைய சமர்த்தன் மருகோனே
அதிர முடுகி எதிர்த்த அசுர ருடலை வதைத்தும்
அமரர் சிறையை விடுத்தும் வருவோனே
அரிய புகழை அமைத்த பெரிய பழநி மலைக்குள்
அழகு மயிலை நடத்து பெருமாளே. (௬௫)

தத்தத்தத் தத்தத் தத்தன
தத்தத்தத் தத்தத் தத்தன
தத்தத்தத் தத்தத் தத்தன தனதான.

166. முத்துக்குச் சிட்டுக் குப்பிமு
டித்துச்*சுக் கைப்பிற் சுற்றியு
முற்பக்கத் திற்பொற் புற்றிட காதல்பீதே
முக்யப்பச் சைப்பொட் டிட்டணி
ரத்னச்சுட் டிப்பொற் புற்றிட
முச்சட்டைச் சித்ரக் கட்டழ கெழிலாடத்
தித்திக்கச் சொற்சொற் றுப்பிதழ்
நச்சுக்கட் †கற்புச் சொக்கியர்
செப்புக்கொக் கக்கச் சுப்பெறு தனமேரு
திட்டத்தைப் பற்றிப் பற்பல
லச்சைக்குட் பட்டுத் தொட்டுயிர்
சிக்கிச்சொக் கிக்கெட் டிடபடி உறல்வேனோ
‡மெத்தத் துக் கத்தைத் தித்தியி
னிச்சித்தத் திற்பத் தத்தொடு
மெச்சிச்சொர்க் கத்திற் சிற்பரம் அருள்வாயே
வித்தைக்குக் கர்த்தத் தற்பர
முக்கட்சித் தர்க்குப் புத்திர
விச்சித்ரச் செச்சைக் §கந்திகை புனைவோனே

---

*சுக்கை-பூமாலை †கற்பு-கற்பனை ‡மெத்த துக்கத்தை நித்தியினி சித்தத்தில் பத்தத்தொடு என்று பிரித்துக் கொள்க §கந்திகை-பூமாலை.

நித்யக்கற் பத்திற் சித்தர்கள்
எட்டுத்திக் குக்குட் பட்டவர்
நிஷ்டைக்கற் புற்றப் பத்தர்கள் அமரோரும்
நெட்டுக்குப் புட்பத் தைக்கொடு
முற்றத்துற் றர்ச்சிக் கப்பழ
நிக்குட்பட் டத்துக் குற்றுறை பெருமாளே. (கசசு)

தனனதன தனனதன தனனதன தனனதன
தனனதன தனனதன தனதான.

167. முருகுசெறி குழலவிழ முலைகபுளக மெழநிலவு
முறுவல்தர விரகமெழ அநுராகம்
முதிரவச மறவிதரி* எழுகைவளை கலகலென
முகநிலவு குறுவெயர்வு துளிவீச
அருமதுர மொழிபதற இதழமுது பருகிமிக
அகமகிழ இருகயல்கள் குழையேற
† அமளிபடு மமளிமல ரணையின்மிசை துயிலுகினும்
அலர்கமல மலரடியை மறவேனே
நிருதனொடு வருபரியும் அடுகரியும் ரதநிரையும்
நெறுநெறென முறியவிடும் வடிவேலா
நிகளசகள‡ குருநிருபகுரு பரகுமர
நெடியநெடு ககனமுக டுறைவோனே
வருமருவி நவமணிகள் மலர்கமுகின் மிசைசிதற
மதுவினிரை பெருகு||வளி மலைமீதே
வளர்குறவர் சிறுமிசிறு வளர்தனமு மிருபுயமு
மருவிமகிழ் பழநிவரு பெருமாளே. (கஅ)

தானந்தன தானன தானன
தானந்தன தானன தானன
தானந்தன தானன தானன தனதான.

168. மூலங்கிள ரோருரு வாய்§நடு
நாலங்குல ¶மேனடு வேரிடை
மூள்பிங்கலை நாடியொ டாடிய முதல்வோர்கள்

---

* விதரி - பிளவுபட்டுள்ள விரல்கள் † அமளிபடும் - ஒலிதருகின்ற அல்லது, பள்ளியறையிலுள்ள. ‡ அகளசகள குருநிருப - அருவமாகியும் உருவமாகியும் உள்ள குருராஜனே. § வளிமலை-வள்ளிமலை || நடு - சரீர மத்திய ஸ்தானம். ¶ மேல் நடுவேர் - சுழுமுனை என்னுமிடம்.

மூணும்பிர காசம தாயொரு
  சூலம்பெற வோடிய வாயுவை
  *மூலந்திகழ் தூண்வழி யேயள விடவோடி

†பாலங்கிள ராறுசி காரமொ
  டாருஞ்சுட ராடுப ராபர
  பாதம்பெற ஞானச தாசிவ மதின்மேவிப்

பாடுந்தொனி நாதமு நூபுரம்
  ஆடுங்கழ லோசையி லேபரி
  வாகும்படி யேயடி யேனையும் அருள்வாயே

சூலங்கலை மான்மழு வோர்துடி
  வேதந்தலை யோடும ராவிரி
  தோடுங்குழை சேர்பர னார்தரு முருகோனே

சூரன்கர மார்சிலை வாளணி
  தோளுந்தலை தூள்பட வேயவர்
  சூழுங்கெட வேல்விடு சேவக மயில்வீரா

காலின்கழ லோசையு நூபுர
  வார்வெண்டைய ஓசையு மேயுக
  காலங்களி னோசைய தாநட ...றிடுவோனே

கானங்கலை மான்மக ளார்தமை
  நாணங்கெட வேயணை வேள்பிர
  காசம்பழ னாபுரி மேவிய பெருமாளே. (ரு.௪)

தானந் தத்தன தானன தானன
தானந் தத்தன தானன தானன
தானந் தத்தன தானன தானன தனதான.

169. வாதம் பித்தமி டாவயி றீளைகள்
  சீதம் பற்சனி சூலைம கோதர
  §மாசங் கட்பெரு மூலவி யாதிகள் குளிர்காசம்

மாறுங் கக்கலொ டேசில நோய்பிணி
  யோடுந் தத்துவ காரர்தொ ணூறறு
  வாருஞ் சுற்றினில் வாழ்சதி காரர்கள் வெகுமோகர்

---

* மூலந்திகழ் தூண் வழி-சுழுமுனை மார்க்கம் †பாலங்கிளராறு-புருவ மத்தியஸ்தான வழி ‡'மாசங்கண்' என்பதை 'அங்கண்மாசு' எனமாற்றுக. அங்கண்மாசு என்பது நேத்திர ரோகம்.

சூழ்துன் சித்ர*க பாவையழ வாசைகொ
டேதுஞ் சற்றுண ராமலெ மாயைசெய்
சோரம் பொய்க்குடி லேசுக மாமென இதில்மேவித்

தூசின் பொற்சர மோடுகு லாயுல
கேழும் பிற்பட வோடிடு மூடனை
†தூவஞ் சுத்தடி யாரடி சேரநின் அருள்தாராய்

தீதந் தித்திமி தீதக தோதிமி
டூடூண் டுட்டுடு டூடுடூடுடு
சேசெஞ் செக்கெண தோதக தீகுட வெனபேரி

சேடன் சொக்கிட வேலைக டாகமெ
லாமஞ் சுற்றிட வேயசு ரார்கிரி
தீவும் பொட்டெழ வேயனல் வேல்விடு மயில்வீரா

வேதன் பொற்சிர மீது ‡க டாவிந
லீசன் சற்குரு வாயவர் காதினில்
மேவும் § பற்றிலர் பேறரு ளோதிய முருகோனே

||வேஷங் கட்டியு மேகி × ம காவளி
மாலின் பித்துற வாகிவி ளோர்பணி
வீரங் கொட்பழ ஞபுரி மேவிய பெருமாளே. (சுகூ)

தனன தந்தன தானன தானன
தனன தந்தன தானன தானன
தனன தந்தன தானன தானன தனதான.

170. விதமி சைந்தினி தாமலர் மாலைகள்
குழல ணிந்தது ராகமு மேசொலி
விதர ணஞ்சொலி வீறுக ளேசொலி அழகாக

விரிகு ரும்பைக ளாமென வீறிய
கனக சம்ப்ரம மேருவ தாமதி
விரக ¶ மொங்கிய மாமுலை யாலெதிர் அமர்நாடி

*சாய் - கவசம், தேகம். † தூவஞ் சுத்தடியார் - தூ அம சுத்த அடியார் - தூய்மை வாய்ந்த அழகிய சுத்த அடியார். ‡ கடாவி - பிரயோகித்து, குட்டி. § பற்றிலர் பேறருள் - பற்றற்றவர்பெறத்தக்க அருளாகிய பிரணவப்பொருள். ||வேஷங்கட்டி-விருத்தாப்பியமான வேஷங்கொண்டு. × மகாவளி - மகிமைதங்கிய வள்ளிநாயகி. ¶ மொங்கிய - பருத்த.

இதமி சைந்தன டாமென வே*யின
நடைந டந்தனர் வீதியி லேவர
எவர்க ளுஞ்†சித மால்கொளு மாதர்கண் வலையாலே

எனது சிந்தையும் வாடிவி டாவகை
அருள்பு ரிந்தழ காகிய தாமரை
இருப தங்களி லெனை யாள்வதும் ஒருநாளே

மிதமி சைந்தெதி ரேபொரு சூரனை
உடலி ரண்டு‡ கு றாய்விழ வேசின
வடிவு தங்கிய வேலினை யேவிய அதிதீரா

மதுர இன்சொலி மாதுமை நாரணி
கவுரி அம்பிகை யாமளை பார்வதி
மவுன சுந்தரி காரணி யோகினி சிறுவோனே

மதமி சைந்தெழு லோகமு மேவலம்
நொடியில் வந்திடு மாமயில் மீதொரு
பவனி வந்தக்ரு பாகர சேவக விறல்வீரா

பருதி யின்ப்ரபை கோடிய தாமெனும்
வடிவு கொண்டருள் காசியின் மீறிய
பழநி யங்கிரி மீதினில் மேவிய பெருமாளே. (எ0)

தனத்த தானன தனதன தனதன தனதான.

171. அருத்தி வாழ்வொடு§ தனகிய மனைவியும் நறவோரும்
அடுத்த பேர்களு மிதமுறு மகவொடு வளநாடும்

தரித்த வூரு||மெ யெனமன நினைவது நினையாதுன்
தனைப்ப ராவியும் வழிபடு தொழிலது தருவாயே

எருத்தி லேறிய இறையவர் செவிபுக உபதேசம்
இசைத்த நாவின இதணுறு குறமகள் இருபாதம்

பரித்த சேகர மகபதி தரவரு தெய்வயானை
பதிக்கொ ளாறிரு புயபழ நியிலுறை பெருமாளே.(எக)

---

* இன நடை - விதம் விதமான நடை. † சிதம் - சித்தம். ‡கூறாய் என்பது குறாய் என்றாயிற்று. § தனகிய-சரசமாகப் பேசிய. || மெயென-மெய்யென

தனதன தனதத்த தனதன தனதத்த
தனதன தனதத்த தனதான.

172\. அறமிலா நிலைகற்ற கொடியவேல் விழிவிட்டு
எறிவுதா னறவைத்து விலைபேசி
அமளிமீ தினில்முத்து பவளவா யமுதத்தை
அதிகமா வுதவிக்கை வளையாலே
உறவினு முடலத்தை இறுகவே தழுவிக்கொ
ளுலையிலே மெழுகொத்த மடவாரோ
டுருகியே யுருபெற்றி மதனநா டகபித்தும்
ஒழியுமா றொருமுத்தி தரவேணும்
மறவர்மா தொருரத்ந விமலகோ கநகத்தி
மயிலனாள் புணர்செச்சை மணிமார்பா
மருள்நிசா சரன்வெற்பி னுருகிவீழ் வுறமிக்க
மயிலிலே றியவுக்ர வடிவேலா
பறைகள்பே ணியருத்ரி கரியகா ளராத்தி
பரமர்பா லுறைசத்தி எமதாயி
பழையபார் வதிகொற்றி பெரியநா யகிபெற்ற
பழநிமா மலையுற்ற பெருமாளே. (எஉ)

தனனதன தந்த தனனதன தந்த
தனனதன தந்த தனதான.

173\. இலகுகனி மிஞ்சு மொழியிரவு தஞ்ச
மிருவிழியெ னஞ்ச முகமீதே
இசைமுரல்க ரும்பு மிளமுலைய ரும்பும்
இளகியக ரும்பு மயலாலே
நிலவிலுடல் வெந்து கரியஅல மந்து
நெகிழுமுயிர் நொந்து மதவேளால்
நிலையழிவு நெஞ்சி லவர்குடிபு குந்த
நினைவொடுமி றந்து படலாமோ
புலவினைய ளைந்து படுமணிக லந்து
புதுமலர ணிந்த கதிர்வேலா

புழுகெழும ணந்த குறமகள்கு ரும்பை
பொரமுலையு டைந்த   தொடைமார்பா
பலபிறவி டைந்த விழுசிறைய லர்ந்த
பருமயில டைந்த   குகவீரா
*பணைபணிசி றந்த தரளமணி சிந்து
பழநிமலை வந்த   பெருமாளே. (எங)

தனனதன தான தந்த   தனதான.

174. உலகபசு பாச தொந்த   மதுவான
உறவுகிளை தாயர் தந்தை   மனைபாலர்
மலசலசு வாச சஞ்ச   லமதாலென்
மதிநிலைகெ டாம லுன்றன்   அருள்தாராய்
சலமருகு பூளை தும்பை   அணிசேயே
சரவணப வாமு குந்தன்   மருகோனே
பலகலைசி வாக மங்கள்   பயில்வோனே
பழநிமலை வாழ வந்த   பெருமாளே. (எச)

தனதனன தனதனன தானத் தானத்   தனதான.

175. ஒருபொழுது மிருசரண நேசத் தேவைத்   துணரேனே
உனதுபழ நிமலையெனு மூரைச் சேவித்   தறியேனே
பெருபுவியி லுயர்வரிய வாழ்வைத் தீரக்   குறியேனே
பிறவியற நினைகுவனெ னாசைப் பாடைத்   தவிரேனோ
துரிதமிடு நிருதர்புர சூறைக் காரப்   பெருமாளே
தொழுதுவழி படுமடியர் காவற் காரப்   பெருமாளே
விருதுகவி விதரணவி நோதக் காரப்   பெருமாளே
விறன்மறவர் சிறுமிதிரு வேளைக் காரப் பெருமாளே. (எரு)

தனதன தனன தான தனதன தனன தான
தனதன தனன தான   தனதான.

176. ஒருவரை ஒருவர் தேறி அறிகிலர் மதவி காரர்
ஒருகுண வழியு றாத   பொரிவியாளர்

---

*பணை - மூங்கில்.

உடலது * சதமெ னுடி களவுபொய் கொலைக ளாடி
உறநம னரகில் விழ்வர் அதுபோ

வருமொரு வடிவ மேவி இருவினை அலையு ளாடி
மறைவரி னனைய கோல மதுவாக

மருவிய பரம ஞான சிவகதி † பெறுக நீறு
வடிவுற உதவு பாதம் அருள்வாயே

திரிபுர மெரிய ‡ வேழ சிலைமத னெரிய மூரல்
திருவிழி அருள்மெய்ஞ் ஞான குருநாதன்

திருசரஸ் வதிம யேசு வரியிவர் தலைவ ரோத
திருநட மருளு நாதன் அருள்பாலா

சுரர்பதி அயனு மாலு முறையிட அசுரர் கோடி
துகளெழ விடுமெஞ் ஞான அயிலோனே

சுககுற மகள்ம ணாள னெனமறை பலவு மோதி
தொழமுது பழநி மேவு பெருமாளே. (எசு)

தனதனத் தானனத் தனதனத் தானனத்
தனதனத் தானனத் தனதான.

177. கரியிணைக் கோடெனத் தனமசைத் தாடிநற்
கயல்விழிப் பார்வையிற் பொருள்பேசிக்

கலையிழுத் தேகுலுக் கெனநகைத் தே § மயற்
கலதியிட் டேயழைத் தணையூடே

செருமிவித் தாரசிற் றிடைதுடித் தாடமற்
றிறமளித் தேபொருட் பறிமாதர்

செயலொழுக் காமலிக் கலியுகத் தேபுகழ்ச்
சிவபதத் தேபதித் தருள்வாயே

திரிபுரக் கோலவெற் பழல்கொளச் சீர்நகைச்
சிறிதருட் டேவருட் புதல்வோனே

---

*சதமெ னுடி-சதம் என நாடி; அகரம் தொக்கது. †பெறுக-பெற.
‡ வேழசிலை - கரும்பாகிய வில். § மயற்கலதி-காதலெனும் மூதேவி.

திரைகடற் கோவெனக் குவடுகட் டொ்படத்
திருடர்கெட் டோடவிட் டிடும்வேலா

பரிமளப் * பாகலிற் கனிகளைப் பிறிகற்
படியினிட் டேகுரக் கினமாடும்

பழநியிற் சீருறப் புகழ்குறப் பாவையைப்
பரிவுறச் சேர்மணப் பெருமாளே. (எஎ)

தனதன தந்த தனதன தந்த
தனதன தந்த தனதான.

178. † கருகிய கன்று வரிசெறி கண்கள்
கயல்நிக ரென்று துதிபேசிக்

கலைசுரு ளொன்று மிடைபடு கின்ற
கடிவிட முண்டு பலநாளும்

விரகுறு சண்ட வினையுடல் கொண்டு
விதிவழி நின்று தளராதே

விரைகமழ் தொங்கல் மருவிய துங்க
விதபத மென்று பெறுவேனோ

முருகக டம்ப குறமகள் பங்க
முறையென அண்டர் முறைபேச

முதுதிரை ஒன்ற வருதிறல் வஞ்ச
‡ முரணசுர் வென்ற வடிவேலா

பரிமள இன்ப மரகத துங்க
§ பகடித வென்றி மயில்வீரா

பறிதலை குண்டர் கழுநிரை கண்டு
பழநிய மர்ந்த பெருமாளே. (எஅ)

* பாகல்-பலா. † 'கருமுகில் கொண்ட' என்றும் பாடம். ‡ முரணசுர்-மாறுபாடுள்ள அசுரர். § பகடிதவென்றி பெருமையும் வெற்றியுமுள்ள.

தனதனன தான தந்த தனதனன தான தந்த
தனதனன தான தந்த தனதான.

179. சுருளளக பார கொங்கை மகளிர்வச மாயி சைந்து
சுரதவகை யால்வி ளங்கு மதனாலே
சுருதியென வேதி னைந்து அறிவிலிக ளோடி ணங்கு
தொழிலுடைய யானு மிங்குன் அடியார்போல்
அருமறைக ளோதி னைந்து மனுநெறியி லேந டந்து
அறிவையறி வால றிந்து நிறைவாகி
அகிலபுவ னாதி எங்கும் வெளியுறமெய்ஞ் ஞான இன்ப
அமுதையொழி யாத ருந்த அருள்வாயே
பருதிமகன் வாசல் மந்த்ரி அநுமனொடு நேர்ப ணிந்து
பரிவினமை யாமுன் வந்து பரிவாலே
பரவியவி பீஷ ணன்பொன் மகுடமுடி சூட நின்ற
படைஞரொடு ராவ ணன்றன் உறவோடே
எரிபுகுத மாறி லண்டர் குடிபுகுத மாறு கொண்ட
ரகுபதியி ராம சந்த்ரன் மருகோனே
இளையகுற மாது பங்க பழநிமலை நாத கந்த
இமயவள்த னல்ம கிழ்ந்த பெருமாளே. (எசு)

தனதனதத் தனதனதத் தனதனதத் தனதான.

180. இடமிசைச் குணமிலிநற் றிறமிலியற் புதமான
செயலிலிமெய்த் தவமிலிநற் செபமிலிசொர்க் கமுமீதே
இடமிலைக் கொடையிலிசொற் கியல்பிலிநற் றமிழ்பாட
இருபதமுற் றிருவினையற் றியல்கதியைப் பெறவேணும்
கெடுமதியுற் றிடுமசுரக் கிளை மடியப் பொரும்வேலா
கிரணகுறைப் பிறையறுகக் கிதழ்மலர்கொக் கிறகோடே
படர்சடையிற் புனைநடனப் பரமர்தமக் கொருபாலா
பலவயலிற் றரளநிரைப் பழநிமலைப் பெருமாளே. (அ0)

தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன தந்ததான.

181. ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்றுபூதி
ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள்பத மேதுணைய தென்றுநாளும்
ஏறுமயில் வாகனகு காசரவ ணாவெனது
ஈசவென மானமுற என்றுமோதும்
ஏழைகள்வி யாகுலமி தேதெனவி னாவிலுனை
ஏவர்புகழ் வார்மறையும் என்சொலாதோ
நீறுபடு *மாழைபொரு மேனியவ வேலவணி
நீலமயில் வாகவுமை தந்தவேளே
நீசர்கட மோடெனது தீவினையெ லாமடிய
நீடுதனி வேல்விடும டங்கல்வேலா
சீறிவரு மாறவுண னாவியுணு மானைமுக
தேவர்துணை வாசிகரி அண்டகூடம்
சேருமழ கார்பழநி வாழ்குமர னேபிரம
தேவர்வர தாமுருக தம்பிரானே. (௧௮)

தனதனன தாத்த தனதான.

182. †வசனமிக வேற்றி மறவாதே
மனதுதுய ராற்றி லுழலாதே
இசைபயில்ச டாக்ஷ ரமதாலே
இகபரசெள பாக்யம் அருள்வாயே
‡பசுபதி§சி வாக்யம் உணர்வோனே
பழநிமலை வீற்ற ருளும்வேலா
அசுரர்கிளை வாட்டி மிகவாழ
அமரர்சிறை மீட்ட பெருமாளே. (௧௨)

மாழை-பொன். † வசனமேற்றல்-உருவேறச் செபித்தல். ‡ பசுபதிவாக்யம்-வேதசிவாகமங்கள். §சி-ஸ்ரீ என்பது சீ என்றுநின்று, சி எனக்குறுகியது.

தனனா தனனா தனதான.

183\. வரதா மணிநீ எனவோரில்
வருகா தெதுதான் அதில்வாரா
திரதா திகளால் நவலோகம்
இடவே கரியாம் இதிலேது
சரதா மறையோ தயன்மாலும்
சகலா கமநூல் அறியாத
பரதே வதையாள் தருசேயே
பழனா புரிவாழ் பெருமாளே. (அரு)

தந்தந் தந்தந் தந்தந் தந்தந்
தனதன தனதன தனதன தனதன தனதான.

184\. * குன்றுங் குன்றுஞ் செண்டுங் கன்றும்
படிவளர் முலையினில் ம்ருகமத மெழுகியர்
இந்துஞ் சந்தந் தங்குந் தண்செங்
கமலமு மெனவொளிர் தருமுக வநிதையர்
கொஞ்சுங் கொஞ்சுஞ் † செஞ்சும் வஞ்சஞ்
சமரச முறவொரு தொழில்வினை புரிபவர் விரகாலும்
கும்பும் பம்புஞ் சொம்புந் தென்புங்
குடியென வளர்தரு கொடியவர் கடியவர்
எங்கெங் கெம்பங் கென்றென் றென்றுந்
தனதுரி மையதென நலமுட னணைபவர்
கொஞ்சந் தங்கின் பந்தந் தென்றன்
பொருளுள தெவைகளு நயமொடு கவர்பவர் மயலாலும்
என்றென் றுங் ‡ கன் றுந்துன் புங்கொண்
டுனதிரு மலரடி பரவிட மனதினில்
நன்றென் றுங்கொண் டென்றுஞ் சென்றுந்

---

* குன்றுங்குன்றும்படி, செண்டுங்கன்றும்படி எனத் தனித்தனி கூட்டுக † செஞ்சும் செய்தும். ‡கன்றுதலையும் துன்பத்தையுங்கொண்டேன்.

தொழுமகி மையினிலே உணர்வினி னருள்பெற
இன்பும் பண்புந் தென்புஞ் சம்பந்
தமுமிக வருள்பெற விடைதருவிதமினி அருள்வாயே

* எங்குங் கஞ்சன் வஞ்சன் கொஞ்சன்
அவன்விடு மதிசய வினையுறு † மலகையை
வென்றுங் கொன்றுந் துண்டந் துண்டஞ்
செயுமரி யொருமுறை இரணிய வலனுயிர்
நுங்குஞ் சிங்கம் ‡ வங்கந் தன்கண்
துயில்பவ § னெகினனை உதவிய கருமுகில் மருகோனே

|| ஒன்றென் றென்றுந் துன்றுங் குன்றுந்
துளைபட மதகரி முகனுடல் நெரிபட
டிண்டிண் டிண்டிண் டிண்டிண் டிண்டிண்
டிடியென விழுமெழு படிகளு மதிர்பட
ஒண்சங் கஞ்சஞ் சஞ்சஞ் சஞ்சென்
றொலிசெய மகபதி துதிசெய அசுரரை அடுவோனே

உன்றன் தஞ்சந தஞ்சந் தஞ்சஞ்
சிவனருள் குருபர எனமுநி வரர்பணி
யுந்தொந் தந்தொந் தந்தொந் தந்தென்
றொலிபட நடமிடு பரனரு ளறுமுக
உண்கண் வண்டுங் கொண்டுந் தங்கும்
விரைபடு குரவல ரலர்தரு மெழில்புனை புயவீரா

¶ அன்றென் றுன்றுங் கொண்டன் பின்றங்
கடியவர் தமையிகழ் சமணர்கள் கழுவினில்
அங்கஞ் சிந்தும் பங்கந் துஞ்சும்
படியொரு தொகுதியி னுரைநதி எதிர்பட
அண்பின் பண்பெங் குங்கண் டென்பின்
அரிவையை எதிர்வர விடுகவி புகல்தரு திறலோனே

---

* எங்கும் என்பது குறுகிற்று. † அலகை-பூதகி. ‡ வங்கம் - தோணி; தோணிபோற்கடலிற்கண்வளர்பவன். § எகினன - அன்னவூர்தியாகிய பிரமன். || ஒன்றென்றனென்றுந்துன்றுங்குன்று-ஒன்றாகிய சூரியமண்டலத்தை யளாவுங் கிரவுஞ்சகிரி. ¶ அன்றென்ற ஒன்றுங்கொண்டு அன்பின்று-பிற மதங்கள் முத்திவழிஅன்று என்றஒன்றைமாத்திரங்கொண்டு அன்பில்லாமல். அத்தி நாத்தியென்ற ஒன்றையே கொண்டென்றாலும் பொருந்தும்.

அண்டங் கண்டும் பண்டுண் டும்பொங்
கமர்தனில் விஜயவ னிரதமை நடவிய
அங்கன் *வஞ்சன் சங்கன் தங்கைக்
கொருமகன் முனிதழல் வருதகர் †இவர்வல
அங்கந் ‡ கஞ்சஞ் சங்கம் பொங்குந்
நயனிறை வளமுறு சிவகிரி மருவிய பெருமாளே. (அச)

தனத்ததன தனத்ததன தனத்ததன தனத்ததன
தனத்ததன தனத்ததன
தனத்தன தனதன தனதான

185. கருப்புவிலில் மருப்பகழி தொடுத்துமதன் விடுத்தனைய
கடைக்கணொடு சிரித்தணுகு
கருத்தினால் விரகுசெய் மடமாதர்
§ கதக்களிறு திடுக்கமுற மதர்த்துமிக எதிர்த்துமலை
கனத்தவிரு தனத்தின்மிசை
கலக்குமோ கனமதில் மருளாமே
ஒருப்படுதல் விருப்புடைமை மனத்தில்வர நினைத்தருளி
உனைப்புகழு மெனைப்புவியில்
ஒருத்தனும் வகைதிரு வருளாலே
உருத்திரனும் விருத்திபெற வனுக்கிரகி எனக்குறுகி
உரைக்கமறை அடுத்தபொருள்
உணர்த்துநா ளடிமையு முடையேனோ
பருப்பதமு முருப்பெரிய அரக்கர்களு மிரைக்குமெழு
படிக்கடலு மலைக்கவல
பருத்ததோ கையில்வரு முருகோனே
பதித்தமர கதத்தினுட னிரத்நமணி நிரைத்தபல
பணிப்பணிரு புயச்சயில
பரக்கவே இயல்தெரி வயலூரா

*வஞ்சன் வாட்படையை உடையவன். †இவர்வல ஏறிநடத்தவல்ல.
‡ கஞ்சம்-அன்னம். §கதம்-கோபம்.

திருப்புகழை உரைப்பவர்கள் படிப்பவர்கள் மிடிப்பகைமை
செயித்தருளு மிசைப்பிரிய
திருத்தமா தவர்புகழ் குருநாதா

சிலைக்குறவ ரிலைக்குடிலில் புகைக்கழுக முகிற்புடைசெல்
திருப்பழநி மலைக்குளுறை
திருக்கைவே லழகிய பெருமாளே. (அரு)

தான தந்தன தத்தன தத்தந்
தான தந்தன தத்தன தத்தந்
தான தந்தன தத்தன தத்தந் தனதான

186. கோல குங்கும கற்புர மெட்டொன்
றுன சந்தன வித்துரு மத்தின்
கோவை செண்பக *தட்பம திழ்ச்செங் கழுநீரின்

கோதை சங்கிலி உற்றக முத்தும்
பூஷ ணம்பல ஒப்பனை மெச்சுங்
கூறு கொண்டப ணைத்தனம் விற்கும் பொதுமாதர்

பாலு டன்கனி சர்க்கரை கந்தந்
தேனெ னும்படி மெத்தரு சிக்கும்
பாத கம்பகர் சொற்களி விட்டம் பயிலாமே

பாத பங்கய முற்றிட உட்கொண்
டோது கின்றதி ருப்புகழ் நித்தம்
பாடு மென்பது செய்ப்பதி யிற்றந் தவளியே

தால முன்புப டைத்தப்ர புச்சந்
தேக மின்றிம திக்கவ திர்க்குஞ்
சாக ரஞ்சுவ றக்கிரி எட்டுந் தலைசாய

* சாடு குன்றது பொட்டெழ மற்றுஞ்
சூர னும்பொடி பட்டிட யுத்தஞ்
சாத கஞ்செய்தி ருக்கைவி திர்க்குந் தனிவேலா

ஆல முண்டகு ழுத்தினி லக்குந்
தேவ ரென்புமெ ரித்தெரி யிற்சென்
றுடு கின்றத கப்பனு கக்குங் குருநாதா

ஆட கம்புனை பொற்குடம் வைக்குங்
கோபு ரங்களி னுச்சியு டுத்தங்
காவி னன்குடி வெற்பினில் நிற்கும் பெருமாளே. (௮௬)

தனதன தனதன தத்தத் தத்தத் தாந்தாந் தனதான.

187\. கொடியன பிணிகொடு விக்கிக் கக்கிக்
கூன்போந் தசடாகும்

குடிலுற வருமொரு வித்தைச் சித்தக்
† கோண்மூடர்ந் தமையாதே

பொடிவன பரசம யத்துத் தப்பிப்
போந்தேன் தலைமேலே

பொருளது பெறவினி நட்புச் சற்றுப்
பூண்டாண் டருள்வாயே

துடிபட அலகைகள் கைக்கொட் டிட்டுச்
சூழ்ந்தாங் குடனாடத்

தொகுதொகு திகுதிகு தொக்குத் திக்குத்
தோந்தாந் தரி ‡ தாளம்

படிதரு பதிவ்ரதை ஒப்பச் சுத்தப்
பாழ்ங்கான் தனிலாடும்

பழநியுள் குமரகு றத்தத் தைக்குப்
பாங்காம் பெருமாளே. (௮௭)

---

* சாடுகுன்று-மோதியடித்தமலை. † கோண்-மாறுபாடு. ‡ தாளம் படிதரு பதிவ்ரதை ஒப்ப-படிதரு பதிவ்ரதை தாளம் ஒப்ப எனக்கூட்டுக.

தனதன தனனத் தனனத் தனதன தனனத் தனனத்
தனதன தனனத் தனனத் தனதான.

188. கொலைவிழி சுழலச் சுழலச் சிலைநுதல் குனியக் குனியக்
கொடியிடை துவளத் துவளத் தனபாரக்
குவடணி சிதறச் சிதறக் கரவளை கதறக் கதறக்
குயில்மொழி பதறப் பதறப் ப்ரியமோகக்
கலவியி லொருமித் தொருமித் திலகிதழ் பருகிப் பருகிக்
கரமொடு தழுவித் தழுவிச் சிலநாளிற்
கையிலுள பொருள்கெட் டருள்கெட் டனைவரும் விடுசிச் சியெனக்
கவலைகள் பலபெற் றுலகிற் றிரிவேனோ
சலநிதி சுவறச் சுவறத் திசைநிலை பெயரப் பெயரத்
தடவரை பிதிரப் பிதிரத் திடமேருத்
தமனிய நெடுவெற் பதிரக் கணபண சிரம்விட் டகலச்
சமனுடல் கிழியக் கிழியப் பொருசூரன்
பெலமது குறையக் குறையக் கருவிகள் * பறையப் பறையப்
பெருநரி தொடரத் தொடரத் திரள்கூகை
பெடையொடு குழறக் குழறச் சுரபதி பரவச் சமரப்
பிரபல பழநிக் குமரப் பெருமாளே. (௮௮)

தானன தனன தானன தனன
தானன தனன தனதான.

189. தோரண கனக வாசலின் முழவு
தோன்முர சதிர முதிராத
தோகையர் கவரி வீச †வயிரியர்
தோள்வலி புகழ மதகோப
வாரண ரதப தாகினி துரக
மாதிர நிறைய அரசாகி
வாழினும் வறுமை கூரினு முனது
வார்கழ லொழிய மொழியேனே

பறைதல் ஒழிதல் †வயிரியர்-புகழ்ந்து பாடுவோர்.

பூரண புவன காரண * சவரி
பூதர களப தனபார
பூஷண நிருதர் தூஷண விபுதர்
பூபதி நகரி குடியேற
ஆரண வரத ‡ நீரிரு குடுமி
ஆனனன் வெருவ மயிலேறும்
ஆரிய பழநி வாழ்குக அழகும்
ஆண்மையு முடைய பெருமாளே. (அகூ)

தனதன தனதனத் தனதன தனதனத்
தனதன தனதனத் தனதான.

190. பரிமள மலரடுத் தகில்மண முழுகிமைப்
பரவிய ம்ருகமதக் குழல்மானார்
பருமணி வயிரமொத் திலகிய குழையினிற்
படைபொரு வனவிழிக் கயலாலே
எரியுறு மெழுகெனத் தனிமன மடையநெக்
கினிமையொ டுருவவிட் டவமேயான்
இருவினை நலியமெய்த் திறலுட னறிவுகெட்
டிடர்படு வதுகெடுத் தருள்வாயே
சொரிமத வருவிவிட் டொழுகிய புகர்முகத்
தொலைபடு கரமலைக் கிளையோனே
துடியிடை ஒருகுறக் குலமயில் தனையணைத்
தருண்மிகு பழநியுற் றிடுவோனே
அரியய னமரருற் றிடுதுய ரறவுடுக்
கையுமொரு மொருவெனச் சதகோடி
அலகையு முடனடித் திடவடி அயிலெடுத்
தமர்செயு மறுமுகப் பெருமாளே. (கூ0)

---

* சவரி-குறத்தி, வள்ளிநாயகி. ‡ நீரிருகுடுமி-கங்கை தங்குஞ் சடை.

நான்காவது.

திருவேரகமென்னும்

சுவாமிமலை.

இது தும்பகோணத்துக்கு மேற்கே 4-மைல் தூலைவிலிருக்கிறது.
இது முருகக்கடவுளது நான்காம் படை வீடு.

தனனதன தனனதன தனனு தனத்ததன
தனனதன தனனதன தனனு தனத்ததன
தனனதன தனனதன தனனு தனத்ததன தனதான.

91. குமரகுரு பரமுருக குகனே குறச்சிறுமி
கணவசர வணநிருதர் கலகா பிறைச்சடையர்
குருவெனஅ னுரையுதவு மயிலா எனத்தினமும் உருகாதே
குயில்மொழிநன் மடவியர்கள் விழியா லுருக்குபவர்
தெருவி * லன வரதமன மெனவே நடப்பர்நகை
கொளுமவர்களுடைமைமனமுடனேபறிப்பவர்கள்அனேவோரும்
தமதுவச முறவசிய முகமே மினுக்கியர்கள்
முலையினுறு துகில்சரிய நடுவீ திநிற்பவர்கள்
தனமிலியர் மனமுறிய நழுவாஉழப்பியர்கண்வலையாலே
சதிசெய்தவ ரவர்மகிழ அணைமீ துருக்கியர்கள்
வசமொழுகி அவரடிமை எனமா தரிட்டதொழில்
தனிலுழலு மசடனையு னடியே வழுத்தவருள் தருவாயே
சமரமொடு மசுரர்படை களமீ தெதிர்த்தபொழு
தொருநொடியி லவர்கள்படை கெடவே லெடுத்தவனி
தனில்நிருதர் சிரமுருள ரணதூள் படுத்திவிடு செருமீதே
† தவனமொடு மலைகைநட மிடவீர பத்திரர்கள்
அதிரநிண மொடுகுருதி குடிகாளி கொக்கரிசெய்
தசையுணவு தனின்மகிழ விடுபேய் நிரைத்திரள்கள் பலகோடி
திமிதமிட நரி‡கொடிகள் கழுகா டரத்தவெறி
வயிரவர்கள் சுழலவொரு தனியா யுதத்தைவிடு
திமிரதின கரவமரர் பதிவாழ்வுபெற்றுலவு முருகோனே
திருமருவு புயனயனெ டயிரா வதக்குரிசில்
அடிபரவு பழநிமலை கதிர்காம முற்றுவளர்
சிவசமய அறுமுகவ திருவே ரகத்திலுறை பெருமாளே.

---

* அனவரதம்-எப்போதும். † தவனம்-தாகம். ‡ கொடிகள்-காகம்.

தனன தனதன தனன தனதன
தனன தனதன தனதான.

192\. குமர குருபர முருக சரவண
குகசண் முககரி பிறகான
குழக சிவசுத சிவய நமவென
குரவ னருள் குரு மணியேயென்
றமுத இமையவர் திமிர்த மிடுகட
லதென அநுதினம் உனையோதும்
அமலை அடியவர் கொடிய வினைகொடும்
அபய மிடுகுரல் அறியாயோ
*திமிர எழுகட லுலக முறிபட
திசைகள் பொடிபட வருசூரர்
சிகர முடியுடல் புவியில் விழ†வுயிர்
திறைகொ டமர்பொரு மயில்வீரா
நமனை உயிர்கொளு மழலி னிணைகழல்
நதிகொள் சடையினர் குருநாதா
நளின ‡குருமலை மருவி அமர்தரு
நவிலு மறைபுகழ் பெருமாளே.(உ)

தானன தத்தன தத்தன தத்தன
தானன தத்தன தத்தன தத்தன
தானன தத்தன தத்தன தத்தன தனதான.

193\. கோமள வெற்பினை ஒத்தத னத்தியர்
காமனை ஒப்பவர் சித்தமு ருக்கிகள்
கோவையி தழ்க்கனி நித்தமு விற்பவர் மயில்காடை
§கோகில நற்ட ற வத்தொடு குக்குட
||ஆரணி அப்புள்வ கைக்குரல் கற்றவர்
கோலவி ழிக்கடை இட்டும ருட்டிகள் விரகாலே

*திமிர-இருண்ட †உயிர்திறைகொள்-உயிர்வதை செய்கின்ற.
‡குருமலை என்பது சுவாமிமலை §கோகிலம்-கிளி. || ஆரணிபப்புள்-குயில்;

தூமம லர்ப்பளி மெத்தைப டுப்பவர்
யாரையு மெத்திம னைக்குள ழைப்பவர்
சோலைவ னக்கிளி ஒத்தமொ ழிச்சியர் நெறிகூடா

தூசுநெ கிழ்த்தரை சுற்றியு டுப்பவர்
காசுப றிக்கம றித்துமு யக்கிகள்
தோதக வித்தைப டித்துந டிப்பவர் உறவாமோ

*மாமர மொத்துவ ரிக்குள்நெ ருக்கிய
சூரனை வெட்டிநி ணக்குட லைக்கொடி
வாரண மெச்சவ ளித்தவ யிற்குக கதிர்காம

மாமலை யிற்பழ நிப்பதி யிற்றணி
மாகிரி யிற்றணி கைக்கிரி யிற்பர
மாகிரி யிற்றிரை சுற்றிவ ளைந்திடும் அலைவாயில்

ஏமவெ யிற்பல வெற்பினி னற்பதி
ஞானுல கத்தினி லுற்றுறு பத்தர்கள்
ஏதுநி னைத்தது மெத்தவ ளித்தருள் இளையோனே

ஏரக வெற்பெனு மற்புத மிக்கசு
வாமிம லைப்பதி மெச்சிய சித்தவி
ராஜத லக்ஷண லக்ஷுமி பெற்றருள் பெருமாளே.(௫)

தானன தத்தன தத்தன தத்தன
தானன தத்தன தத்தன தத்தன
தானன தத்தன தத்தன தத்தன தந்ததான.

194. வார்குழ லைச்சொரு கிக்†கரு‡விற்குழை
காதொடி ணைத்தசை யக்கதிர் பற்கொடு
வாயிதழ் §பொற்பம லர்க்குமி ழொத்துள தூண்டக்ரீவ

வார்கமு கிற்புய நற்கழை பொற்குவ
டாமெனு மற்புத பொற்குட மொத்திணை
மார்பழ கிற்பொறி முத்தொளிர் சித்திர ரம்பைமாதர்

---

*மாமரம் ஒத்துஉவரிக்குள் நெருங்கிய எனப்பிரிக்க; உவரி சமுத்திரம்.
† கரு-பெரிய. ‡ வில்-பிரகாசம் பொருந்திய § பொற்ப-அழகு செய்ய.

காருறும் * வித்திடை யிற்கத லித்தொடை
சேர்தரு நற்பிர சத்தட முட்கொடு
கால்மறை யத்துவ ளச்செறி பொற்கலை ஒண்குலாவக்

கார்குயி லைக்குர லைக்கொடு நற்றெரு
மீதில்நெ ளித்துந கைத்துந டிப்பவர்
காமனு கப்பம ளிச்சுழல் குத்திரர் சந்தமாமோ

சூரர்†ப தைக்கர வுட்கிநெ ளித்துயர்
ஆழியி ரைப்பநி ணக்குட லைப்புடை
சூழந ரிக்கெரு டற்‡கொடி பற்பல சங்கமாகச்

சூழ்கிரி யைக்§கைத டித்தும லைத்திகை
யானையு ழக்கிந டுக்கிம தப்பொறி
சோரந கைத்தயி லைக்கொடு விட்டருள் செங்கைவேலா

ஏரணி நற்குழ லைக்கக னச்சசி
மோகினி யைப்புணர் சித்தவொ ரற்புத
வேடமு தச்சொரு பத்தசு றத்திம ணங்கொள்வோனே

ஏரக வெற்பெனு மற்புத மிக்கசு
வாமிம லைப்பதி நிற்குமி லக்ஷண
ராஜத லக்ஷண லக்ஷ்மி பெற்றருள் தம்பிரானே. (௪)

தனதான தத்த தனதான தத்த
தனதான தத்த தனதான.

195 செகமாயை உற்றெ னகவாழ்வில் வைத்த
திருமாது கெர்ப்பம் உடலூறித்

தெசமாத முற்றி வடிவாயி லத்தில்
திரமாய ளித்த பொருளாகி

|| மகவாவி னுச்சி விழியான னத்தில்
மலைநேர்பு யத்தில் உறவாடி

---

*வித்து-மின்னல். †பதைக்கரவுட்கி-பதைக்க அரவு உட்கி. ‡கொடி-காகம். §கைதடித்து-அவயவச்சிதவுசெய்து. ||மகவாவின்-மக அவாவின்.

மடிமீத டுத்து விளையாடி நித்த
மணிவாயில்*முத்தி தரவேணும்
முகமாய மிட்ட குறமாதி னுக்கு
முலைமேல ணைக்க வருநீதா
முதுமாம றைக்கு ளொருமாபொ ருட்கு
மொழியேயு ரைத்த குருநாதா
தகையாதெ னக்கு னடிகாண வைத்த
தனியேர கத்தில் முருகோனே
தருகாவி ரிக்கு வடபாரி சத்தோர்
சமர்வேலெ டுத்த பெருமாளே. (௫)

196. மருவே செறித்த †குழலார் மயக்கி
மதனு கமத்தின் விரகாலே
மயலே யெழுப்பி இதமே ழருத்த
மலைபோல் முலைக்குள் உறவாகிப்
பெருகாத லுற்ற தமியேனை நித்தல்
பிரியாது பட்ச மறவாதே
பிழையேபொ றுத்து னிருதாளி லுற்ற
பெருவாழ்வு பற்ற அருள்வாயே
குருவா யரற்கு முபதேசம் வைத்த
குகனே குறத்தி மணவாளா
குளிர்காவி ரிக்கு வளர்பூக மெத்து
குடகா விரிக்கு வடபாலார்
திருவே ரகத்தி லுறைவா யுமைக்கொர்
சிறுவா கரிக்கும் இளையோனே
திருமால் தனக்கு மருகா அரக்கர்
சிரமே துணித்த பெருமாளே. (௧)

*முத்தி - முத்தம். †குழலார் - குழலோடுகூடிய பெண்கள்.

தனனதன தானந் தனனதன தானந்
தனனதன தானந் தனதான.

197. இராவினிருள் போலும் பராவுகுழ லாலும்
இராமசர மாரும் விழியாலும்

இராகமொழி யாலும் பொருதமுலை யாலும்
இராதவிடை யாலும் இளைஞோர்நெஞ்

சராவியிரு போதும் பராவிவிழ வேவந்
தடாதவிலை கூறும் மடவாரன்

படாமலடி யேனும் சுவாமியடி தேடும்
அநாதிமொழி ஞானந் தருவாயே

குராவினிழல் மேவுங் குமாரனென நாளும்
குலாவியினி தோதன் பினர்வாழ்வே

*குணலமிடு சூரன் பணமுடிக டோறுங்
குடாவியிட வேலங் கெறிவோனே

†துராலுமிகு தீமன் பிராதவகை போலும்
தொடாமல்வினை ஓடும் படிநாளும்

‡சுபானமுறு ஞானந் தபோதனர்கள் சேருஞ்
சுவாமிமலை வாழும் பெருமாளே. (எ)

---

198. கடாவினிடை வீரங் கெடாமலினி தேறுங்
கடாவினிக ராகுஞ் சமனாரும்

கடாவிவிடு தூதன் கெடாதவழி போலுங்
கனவில்வினை யாடுங் கதைபோலும்

§இடாதுபல தேடுங் கிராதர்பொருள் போலிங்
கிராமலுயிர் சோரும் படிமாள்வேன்

இதாமெனிரு போதுஞ் சதாவின்மொழி யாலின்
றியானுமுனை ஓதும் படிபாராய்

---

* குணலம்-குணலை,வீராவேசத்தாற்கொக்கரித்தல். †துரால்-துரும்பு. ‡ சுபானம் - நன்மையாக உட்கொளல். § இடாது பல தேடுங்கிராதர்-கொடாது பல பொருளைத் தேடி வைக்குங் கொடிய உலோபியர்.

விடாதுாட நாளும் பிடாரியுட னாடும்
வியாகரண ஈசன் பெருவாழ்வே
விகாரமுறு சூரன் *பகாரமுயிர் வாழ்வும்
விகாதமுற வேலங் கெறிவோனே
தொடாதுநெடு தூரந் தடாதுமிக வோடுஞ்
சுவாசமது தானும் புலனோடும்
சுபானமுறு ஞானந் தபோதனர்கள் சேருஞ்
சுவாமிமலை வாழும் பெருமாளே. (அ)

தனன தனத்த தந்த தனன தனத்த தந்த
தனன தனத்த தந்த தனதான.

199. கடிமா மலர்க்கு ளின்ப முளவே ரிகக்கு நண்பு
தருமா கடப்ப மைந்த தொடைமாலை
கனமேரு வொத்தி டும்ப னிருமா புயத்த ணிந்த
கருணா கரப்ர சண்ட கதிர்வேலா
வடிவார் குறத்தி தன்பொ னடிமீ துநித்த முந்தன்
முடியான துற்று கந்து பணிவோனே
வளவாய்மை சொற்ப்ர பந்த முளகீர னுக்கு கந்து
மலர்வாயி லக்க ணங்கள் இயல்போதி
அடிமோனை சொற்கி ணங்க †உலகாமு வப்ப என்றும்
அருளா ‡லளிக்கு கந்த பெரியோனே
அடியே னுரைத்த புன்சொ லதுமீ துநித்த முந்தன்
அருளே தழைத்து கந்து வரவேணும்
§செடிநே ருடற்கு டம்பை தனின்மே வியுற்றி டிந்த
படிதா னலக்க ணிங்ஙன் உறலாமோ
திறமா தவர்க்க ணிந்து னிருபாத பத்ம முந்து
திருவே ரகத்த மர்ந்த பெருமாளே. (௯)

---

* பகாரம்-பகரம், அலங்காரம். †உலகம் என்பது உலகாமென்றாயிற்று. 'உலகம் உவப்ப என்று உன் அருளால் அளிக்க" என்றது நக்கீரர்முருகக் கடவுளின் அருள்பெற 'உலகம் உவப்பவலனேர்புதிரிதரு' என்றெடுத்து அருளிச்செய்த திருமுருகாற்றுப்படையைக் குறித்தது. ‡அளிக்க-உகந்த எனப்பிரிக்க. § செடிநேருடற் குடம்பை- அற்பாயுளோடு கூடிய சரீரம்.

200. விழியால் மருட்டி நின்று முலைநூ சகற்றி மண்டு
* விரகான லத்த ழுந்த நகையாடி
விலையா கமிக்க செம்பொன் தரவே பரப்பி வஞ்ச
விளையா டலுக்கி சைந்து சிலநாள்மேல்
மொழியா தசொற்கள் வந்து சிலுகாகி விட்ட தொந்த
முழுமாயை யிற்பி ணங்கள் வசமாகி
முடியா துபொற்ச தங்கை தருநீத வெட்சி துன்று
முதிரா தரற்ப தங்கள் தருவாயே
பொழிகார் முகிற்கி ணைந்த யமராஜ னுட்க அன்று
பொருதா னெடுத்த தந்தை மகிழ்வோனே
புருகூ தனுட்கு ளிர்ந்த கனகா புரிப்ர சண்ட
புனிதா †மருகக்க ரும்பு புணர்மார்பா
செ‡ழுவா ரிசத்தி §லொன்று முதுவே தன்வெட்க அன்று
திருவாய் மைசெப்பி நின்ற முருகோனே
திரளா மணிக்கு லங்கள் அருணோ தயத்தை வென்ற
திருவே ரகத்த மர்ந்த பெருமாளே. (௪௦)

தனதனன தானதன தானதன தானதன
தானதன தானந் தனதானா.

201. அவாமருவி னாவுசுதை காணுமட வாரெனும
|| வார்கனலில் வாழ்வென் றுணராதே
அராநுகர வாதையுறு தேரைகதி நாடுமறி
வாகியுள மால்கொண் டதனாலே
சிவாயமெனு நாமமொரு காலுநினை யாத¶திமி
ராகரனை வாவென் றருள்வாயே
திரோதமல மாறுமடி யார்களரு மாதவர்தி
யானமுறு பாதந் தருவாயே

---

* விரக அனலம்-விரகாக்கினி. † மருகக் கரும்பு-மான் மகளாகிய வள்ளியம்மை. ‡ வாரிசம் - தாமரை. § ஒன்று - உகிக்கின்ற. || அவார் - அவர் - அல்லது அ, ஆர் எனப்பிரித்து அந்த நிறைந்த எனக்கொள்ளினும் பொருந்தும். ¶ திமிராகரன் - திமிர ஆகரன், இருட்கிட மானவன்.

உவாவினிய காவினிறு லாவுமயில் வாகனமு
லாசமுட னேறுங் கழலோனே
உலாவுதய பானுசத கோடியுரு வானவொளி
வாகுமயில் வேலங் கையிலோனே
துவாதசபு யாசலச டானனவ ராசிவசு
தாவெயினர் மானின் புடையோனே
சுராதிபதி மாலயனு மாலொடு சலாமிடுசு
வாமிமலை வாழும் பெருமாளே. (கக)

தனதன தனந்த தான தனதன தனந்த தான
தனதன தனந்த தான தனதான.

202. *இருவினை புனைந்து ஞான விழி†முனை திறந்து நோயின்
‡இருவினை இடைந்து போக மலமூட
இருளற விளங்கி ஆறு முகமொடு கலந்து பேதம்
இலையென இரண்டு பேரும் அழகான
§பரிமள சுகந்த வீத மயமென மகிழ்ந்து தேவர்
பணியவிண் மடந்தை பாத மலர்தூவப்
பரிவுகொ டநந்த கோடி முனிவர்கள் புகழ்ந்து பாடு
பருமயி லுடன்கு லாவி வரவேணும்
அரியய னறிந்தி டாத அடியிணை சிவந்த பாதம்
அடியென விளங்கி யாடு நடராஜன்
அழகுறு மிரும்பின் மேனி மகிழ்மர கதம்பெ ணுகம்
‖அயலணி சிவன்பு ராரி அருள்சேயே
மருவலர் கடிண்ப ணூர முடியுடல் நடுங்க ஆவி
மறவியு ணவென்ற வேலை உடையோனே
வளைகுல!மலங்கு காவி ரியின்வட புறஞ்சு வாமி
மலைமிசை விளங்கு தேவர் பெருமாளே. (கஉ)

---

*இருவினை-பெருஞ்செயல், சிவயோகம். †முனை-லலாட சந்திச்சுழி ‡ இருவினை-புண்ணியபாவங்கள். §பரிமளசுகந்த வீதம்மயம்என மலரும்அதன் மணமும்கலந்திருக்குந்தன்மையென்று சொல்லும்படி. ‖அயல்-அருகுற.

தந்தத் தனதன தனதன தனதன
தந்தத் தனதன தனதன தனதன
தந்தத் தனதன தனதன தனதன தனதான.

203. எந்தத் திகையினும் அலையினும் உவரியின்
எந்தப் படியினு முகடினு முளபல
எந்தச் சடலமும் *உயிரியை பிறவியின் உழலாதே

இந்தச் சடமுட னுயிர்நிலை பெறநனி
னம்பொற் கழலிணை களில்மரு மலர்கொடு
என்சித் தமுமன முருகிநல் சுருதியின் முறையோடே

சந்தித் தரகர சிவசிவ சரணென
கும்பிட் டிணையடி அவையென தலைமிசை
தங்கப் புளகித மெழவிரு விழிபுனல் குதிபாயச்

சம்பைக் கொடியிடை விபுதையி னழகுமு
னந்தத் திருநட மிடுசர ணழகுற
சந்தச் சபைதனி லெனதுள முருகவும் வருவாயே

தொந்தத் திகுதுட தகுகுட டிமுடிமி
தந்தத் தனதன டுடுடுடு டமடம
துங்கத் திசைமலை உவரியு மறுக†ச லரிபேரி

‡துன்றச் சிலைமணி கலகல கலினென
சிந்தச் சுரர்மல ரயன்மறை புகழ்தர
துன்புற் றவுணர்கள் நமனுல குறவிடும் அயில்வேலா

கந்தைச் சடைமுடி கனல்||வடி வடலணி
எந்தைக் குயிரெனு மலைமகள் மரகத
கந்தப் பரிமள தனகிரி உமையருள் இளையோனே

கஞ்சப் பதமிவர் திருமகள் குலமகள்
அம்பொற் கொடியிடை புணரரி மருகநல்
கந்தப் பொழில்திகழ் குருமலை மருவிய பெருமாளே. ()

* உயிரியை - உயிரிசைந்த. † சலரி - சல்லரி, பம்பை என்னும் மேளம். ‡ துன்ற - நெருங்க. || வடிவடல்-வடிவு அடல். அடல், வெற்றி.

தனதனன தனதனன தான தந்தனந்
தனதனன தனதனன தான தந்தனந்
தனதனன தனதனன தான தந்தனந் தனதான.

204. ஒருவரையு மொருவரறி யாம லுந்திரிந்
திருவினையி னிடர்கலியொ டாடி நொந்துநொந்
துலையிலிடு மெழுகதென வாடி முன்செய்வஞ் சனையாலே

ஒளிபெறவெ *எழுபு†மர பாவை துன்றிடுங்
கயிறுவித மெனமருவி ஆடி விண்பறிந்
தொளிருமின லுருவதென ஓடி அங்கம்வெந் திடுவேனைக்

கருதியொரு பரமபொரு ளீது என்றுவென்
செவியிணையி னருளியுரு வாகி வந்தவென்
கருவினையொ டருமலமு நீறு கண்டுதண் டருமாமென்

கருணைபொழி கமலமுக மாறு மிந்துளந்
தொடைமகுட முடியுமொளிர் நூபு ரஞ்சரண்
கலகலென மயிலின்மிசை ஏறி வந்துகந் தெனையாள்வாய்

திரிபுரமும் மதனுடலும் நீறு கண்டவன்
தருணமழ விடையனட ராஜ னெங்களுந்
திகழருண கிரிசொருப னாதி அந்தமங் கறியாத

சிவயநம நமசிவய கார ணன்சுரந்
தமுதமதை அருளியமை ஆளு மெந்தைதன்
திருவுருவின் மகிழெனது தாய்ப யந்திடும் புதல்வோனே

குருகுகொடி உடன்மயிலி லேறி மந்தரம்
புவனகிரி சுழலமறை யாயி ரங்களும்
குமரகுரு எனவலிய சேட னஞ்சவந் திடுவோனே

குறமகளி னிடைதுவள பாத செஞ்சிலம்
பொலியிடொரு சசிமகளொ டேக லந்துதிண்
குருமலையின் மருவுகுரு நாத உம்பர்தம் பெருமானே.

---

* எழுபு-எழுந்து. † மரப்பாவை என்பது சந்தம் நோக்கி இயல்பாயிற்று.

தனதனன தந்த தான தனதனன தந்த தான
தனதனன தந்த தான தனதான.

205. கதிரவனெ ழுந்து லாவு திசையளவு கண்டு மோது
கடலளவு கண்டு மாய மருளாலே
கணபணபு யங்க ராஜன் முடியளவு கண்டு தாள்கள்
கவினறந டந்து தேயும் வகையேபோய்
இதமிதமி தென்று நாளு மருகருகி ருந்து கூடும்
இடமிடமி தென்று சோர்வு படையாதே
இசையொடுபு கழ்ந்த போது நழுவியப்ர சண்டர் வாசல்
இரவுபகல் சென்று வாடி உழல்வேனோ
மதுகரமி டைந்து வேரி தருநறவ முண்டு பூசு
மலர்வளநி றைந்த பாளை மலரூடே
வகைவகையெ ழுந்து சாம வதிமறை*வி யந்து பாட
மதி†நிழலி டுஞ்சு வாமி மலைவாழ்வே
அதிரவரு சண்ட வாயு எனவருக ருங்க லாப
அணிமயில்வி ரும்பி ஏறும் இளையோனே
அடைவொடுல கங்கள் யாவு முதவிநிலை கண்ட பாவை
அருள்புதல்வ அண்ட ராஜர் பெருமானே. (௧௫)

தனதனன தந்த தானனத்
தனதனன தந்த தானனத்
தனதனன தந்த தானனத் தனதான

206. கறைபடுமு டம்பி ராதெனக்
கருதுதலொ ழிந்து வாயுவைக்
‡கருமவச னங்க ளால்மறித் §தனலூதிக்
கவலைபடு கின்ற யோககற்
பனைமருவு சிந்தை போய்விடக்
கலகமிடு மஞ்சும் வேரறச் செயல்மாளக்

* வியந்து-வியக்க. † நிழலிடும்-குளிர்ச்சியைத்தரும். ‡ கருமவசனம்-மந்திரங்கள். § அனலூதல்-வாயுவால் மூலாக்கினியை எழுப்புதல்.

குறைவறநி றைந்த மோனநிற்
குணமதுபொ ருந்தி வீடுறக்
குருமலைவி ளங்கு ஞானசற் குருநாதா

குமரசர ணென்று கூதளப்
புதுமலர்சொ ரிந்து கோமளப்
பதயுகள புண்ட ரீகமுற் றுணர்வேனோ

சிறைதளவி ளங்கு பேர்*முடிப்
புயலுடன டங்க வேயிழைத்
திமையவர்கள் தங்க ளூர்புகச் சமராடித்

திமிரமிகு சிந்து வாய்விடச்
சிகரிகளும் வெந்து நீறெழத்
†திகிரிகொள நந்த சூடிகைத் திருமாலும்

பிறைமவுலி மைந்த கோவெனப்
பிரமனைமு னிந்து காவலிட்
டொருநொடியில் மண்டு சூரனைப் பொருதேறிப்

பெருகுமத கும்ப ‡லாளிதக்
கரியுதவு மண்டர் வாரணப்
பிடிதனைம ணந்த சேவகப் பெருமாளே. (க௬)

தனதனன தான தத்த தனதனன தான தத்த
தனதனன தான தத்த தனதான.

207. சரணகம லால யத்தை அரைநிமிஷ நேர மட்டில்
தவமுறைதி யானம் வைக்க அறியாத

சடகசட மூட மட்டி பவவினையி லேச னித்த
தமியன்மிடி யால்ம யக்கம் உறுவேனோ

கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளை செப்பு
கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே

கடகபுய மீதி ரத்ந மணியணிபொன் மாலை செச்சை
கமழுமணி மார்க டப்ப மணிவோனே

---

* முடிப்புயல்-இந்திரன். † திகிரி-சக்கரம். ‡ லாளிதம்-லளிதம், அழகு.

* தருணமிதை யாமி குத்த கனமதாறு நீள்ச வுக்ய
சகலசெல்வ யோக மிக்க பெருவாழ்வு

தகைமைசிவ ஞான முத்தி பரகதியு நீகொ டுத்து
தவிபுரிய வேணு மெய்த்த வடிவேலா

அருணதள பாத பத்ம மதுநிதமு மேது திக்க
அரியதமிழ் தான ளித்த மயில்வீரா

அதிசயம நேகமுற்ற பழநிமலை மீது
அழகதிரு வேரகத்தின் முருகோனே. (கள)

தத்ததன தத்ததன தத்ததன தத்ததன
தத்ததன தத்ததன தத்ததன தத்ததன
தத்ததன தத்ததன தத்ததன தத்ததன தந்ததான.

208\. † சுத்தியந ரப்புடனெ லும்புறுத சைக்குடலொ
டப்புடனி ணச்சளிவ ளிப்புடனி ரத்தகுகை
சுக்கிலம்வி ளைப்புழுவொ டக்கையுமு ழுக்குமயிர் சங்குழுளை

துக்கம்வினை வித்தபிணை யற் ‡ கறைமு னைப்பெருகு
குட்டமொடு விப்புருதி புற்றெழுதல் முட்டுவலி
துச்சிபிள வெப்பொருமல் பித்தமொடு றக்கமிக அங்கமூடே

எத்தனைநி னைப்பையும்வி னைப்பையும யக்கமுறல்
எத்தனைச லிப்பொடுக ளிப்பையுமி டற்பெருமை
எத்தனைக சத்தையும லத்தையுமடைத்தகுடில் பஞ்சபூதம்

எத்தனையு ருக்கையுமி னுக்கையுமு னக்கவலை
எத்தனைக வட்டையுமு டக்கையுமு யிர்க்குவரும்
எத்தனைபி றப்பையுமி றப்பையுமெடுத்துலகில் மங்குவேனோ

தத்தனத னத்தனத னத்தனவெ னத்திமிலை
ஒத்தமுர சத்துடியி டக்கைமுழு வப்பறைகள்
சத்தமறை யத்தொகுதி ஒத்தசெனி ரத்தவெள மண்டியோடச்

§ சக்கிரிநெ ளிப்பவவு ணப்பிணமி தப்பமரர்
கைத்தலமி ரித்தரஹ ரச்சிவமி சைத்தமென
சக்கிரகி ரிச்சுவர்க ளக்கணமெ பக்குவிட வென்றவேலா

---

* தருணமிதையா-தருணம் இது ஐயா. † சுத்திய-இது சுற்றிய என்பதன் மரூஉ. ‡ கறைமுனை-அருவருக்கத்தக்க ரத்தநீர் § சக்கிரி-சேடன்.

சித்தமகிழ் வெற்றிசெ குத்தலங்கி ரித்தட னை
ழித்தவன சத்தனைம ணிக்குடுமி பற்றிமலர்
சித்திரக ரத்தலம்வ லிப்பமிசை குட்டிடட னங்கொள்வேளே

செட்டிவடி வைக்கொடுதி னைப்புனமி தித்திருகு
றப்பெணம ளிக்குள்மகிழ் செட்டிகுரு வெற்பிலுறை
சிற்பரம ருக்கொருகு ருக்களென முத்தர்புகழ் தம்பிரானே.()

தானதன தந்த தத்த தானதன தந்த தத்த
தானதன தந்த தத்த தனதான.

209\. சேலுமயி லுங்க ரித்த வாளையட ருங்க டைக்கண்
மாதரைவ சம்ப டைத்த வசமாகிச்

சீலமறை யும்பணத்தி லாசையிலெ பெண்*று வந்தை
வேலையுமு டன்கி டக்கும் அவர்போலே

‡காலுமயி ரும்பி டித்து மேவுபிணு ருபி ணைக்கும்
காலனுடல் நின்று லைந்து விடாமல

காமகல கம்பி ணித்து மோகமெ ரிந்து வந்து
லேபடிமை யுங்க லக்கம் உறுவனோ

ஏலமில வங்க வர்க்க நாபமரு வப்ப டப்பை
பூகமரு ந்த ழைத்த குவிராம்

பாவுமலை கொண்டு கைத்த காவிரிபு ரம்பு கற்றும்
ஏரகம மர்ந்த பச்சை மயில்வீர

சோலைமடல் கொண்டுசக்ர மால்மைய மிர்த வஜ்ர
பாணியர்கொ ழுந்தி ருக்கை வடிவேலா

†சூர்முநிர்க்ர வஞ்ச வெற்பும் வேலைநில மும்ப ழைந்த
சூரனுட லுந்து ணித்த பெருமாளே. (கக)

---

*அவத்தை வேலையும் சித்திரைப்போதும் † சூர் - அச்சம். ‡சிலுகி ஞல் காலப்பிடித்தலும், பிணக்கிஞல் மயிர்பிடித்தலும் அவர் குணம்.

தனதனன தான தந்த தனதனன தான தந்த
தனதனன தான தந்த தனதான.

210. தருவரிவ ராகு மென்று பொருணசையி னூடிவண்டு
நனைவிடுசொல் தூது * தண்ட முதலான
சரசகவி மாலை சிந்து கலிநிலைக ளேச லின்ப
† தருமுதல தான செஞ்சொல் வகையாடி
மருவுமையு மோதி நொந்து அடிகள்முடி யேதெ ரிந்து
வரினுமிவர் வீத மெங்கள் இடமாக
வருகுமது போது மென்ற ஒருபணமு தாசி னஞ்சொல்
மடையரிட மேந டந்து மனம்வேறாய்
உருகிமிக ஆகம் வெந்து கவிதைசொலி யேநி ரிந்துள்
உழல்வதுவு மேத விர்ந்து விடவேநல்
உபயபத ‡ மால்வி ளங்கி இகபரமு மேவ இன்பம்
உதவியெனை யாள அன்பு தருவாயே
குருகினொடு நாரை அன்றில் இரைகள்மிக நாடு டங்கள்
குதிகொளிள வாளை கண்டு பயமாகக்
குரைகடல்க ளேய திர்ந்து வருவதென வேலி ளங்கு
குருமலையின் மேல மர்ந்த பெருமாளே. (௨௦)

தானன தான தத்த தானன தான தத்த
தானன தான தத்த தனதான.

211. நாவேறு பாம ணத்த § பாதார மேநி னைந்து
‖ நாலாறு நாலு பற்று வகையான
¶ நாலாரு மாக மத்தி னூலாய ஞான முத்தி
நாடோறு நானு ரைத்த நெறியாக

---

* தண்டம் - தண்டகம். † தருபதகீர்த்தனாதி இசைப்பாட்டு. ‡ மால் - ஆசை § பாதாரம் - பாதாரவிந்தம். ‖ நாலாறு நாலுபற்று வகையான ஆகமம் - இருபத்தெட்டு சிவாகமங்கள். ¶ நாலாரும் - சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாலு பாதங்கள் பொருந்தியுள்ளனவான.

நீவேறெ னாதி ருக்க நான்வேறெ னாதி ருக்க
நேராக வாழ்வ தற்குன் அருள்கூர

நீடார்*ச டாதா ரத்தின் மீதேப ராப ரத்தை
நீகாணெ னா†வ னைச்சொல் அருள்வாயே

சேவேறு மீசர் சுற்ற மாஞான போத புத்தி
சீராக வேயு ரைத்த குருநாதா

தேரார்கள் நாடு சுட்ட சூரார்கள் மாள வெட்டு
தீராகு காகு றத்தி மணவாளா

காவேரி நேர்வ டக்கில் வேலாவி பூம ணத்த
காவார்சு வாமி வெற்பின் முருகோனே

கார்போலு மேனி பெற்ற மாகாளி வாலை சத்தி
காமாரி வாமிபெற்ற பெருமாளே. (உக)

தனதன தான தந்த தனதன தான தந்த
தனதன தான தந்த தனதான.

212. நிலவினி லேயி ருந்து வயலைய லேசெ றிந்து
நிறைகுழல் மீத ணிந்து குழையூடாடும்

நிகரறு வேலி னங்கள் வரிபர வாசை கங்கள்
நினைவற வேயொ ழிந்து பதநாலின்

கலபம ரேக யங்க ளவற வேயு ரிந்து
கனியித ழேய ருந்தி அநுராக

கலவியி லேமு யங்கி வனிதையர் பால்ம யங்கு
கபடனை யாள உன்றன் அருள்கூராய்

உலகமொ ரேழு மண்டர் உலகமும் ஈசர் தங்கு
முயர்கயி லாய முர்பொன் வரைதானும்

உயிரொடு பூதமைந்து பொருளுமு லாவி நின்ற
உமையரு ளால்வ ளர்ந்த குமரேசா

* சடாதாரம்-மூலாதாரம் முதலிய ஆறாதாரம். † அனைசொல்-ஐக்கிய பதம்.

குலைபடு சூர னங்க மழிபட வேலெறிந்த
குமாரக டோர அங்கண் மயில்வாழ்வே
கொடுமுடி யாய்வ ளர்ந்து புயனிலை போயுயர்ந்து
குருமலை மீது மர்ந்த பெருமாளே. (௨௨)

தனதன தானன தனதன தானன
தனதன தானன தனதான.

213. பரவரி தாகிய வரையென நீடிய
பணைமுலை மீதினி லுருவான
பணிகளு லாவிட இழையிடை சாய்தரு
பயிலிகள் வாள்விழி அயிலாலே
*நிரவரி யோடியல் குழல்களி னுள்மலர்
நிரைதரு மூரலின் நகைமீது
நிலவியல் சேர்முக மதிலுயர் மாமயல்
நிலையெழு வேமலை வதுவாமோ
† அரவணை யார்குழை பரசிவ ஆரண
அரனிட பாகம துறைசோதி
அமையுமை டாகினி திரிபுரை நாரணி
அழகிய மாதருள் புதல்வோனே
குரவணி பூஷண சரவண தேசிக
குககரு ணாநிதி அமரேசா
குறமக ளானமின் மருவிய பூரண
குருகிரி மேவிய பெருமாளே. (௨௩)

தனன தான தத்த தனன தான தத்த
தனன தான தத்த தனதான.

214. மகர கேத னத்த னுருவி லானெ டுத்து
மதுர நாணி இட்டு நெறிசேர்வார்
மலைய வேவ ளைத்த சிலையி னூடெ டாவி த்த
வலிய ‡ சாய கக்கண் மடமாதர்

* நிரவரியோடு - நிரம்பிய வண்டுகளோடு. † அரவணையார் குழை- விஷ்ணுவானவர் மனங்குழைந்து அன்பு செய்யப்பட்ட. ‡ சாயகம்- அம்பு.

இகழ வாச முற்ற தலையெ லாம்வெ ளுத்தும்
இளமை போயொ ளித்தும் விடயா றும்

இடைவி டாதெ டுத்த பிறவி வேர றுத்துன்
இனிய தாள ளிப்ப தொருநாளோ

அகில மேழு மெட்டு வரையின் மீது முட்ட
அதிர வேந டத்து மயில்வீரா

அசுரர்சேனை கெட்டு முறிய வான வர்க்கு
அடைய வாழ்வ ளிக்கும் இளையோனே

மிகநி லாவெ றித்த * அமுத வேணி நிற்க
விழைசு வாமி வெற்பில் உறைவோனே

விரைய ஞான வித்தை அருள்செய் தாதை கற்க
வினவ ஓது வித்த பெருமாளே. (உ [illegible])

தனன தான தனன தந்த
தனன தான தனன தந்த
தனன தான தனன தந்த தனதான.

215. முறுகு காள விட†ம யின்ற
இருகண் வேலி னுளைய யங்கி
முளரி வேரி முகைய டர்ந்த முலைமீதே

முழுகு காதல் தனைம றந்து
பரம ஞான ஒளிசி றந்து
முகமொ ராறு மிகவி ரும்பி அயராதே

அறுகு தாளி நறைய விழ்ந்த
குவளை வாச மலர்க ரந்தை
அடைய வாரி மிசைபொ ழிந்துன் அடிபேணி

அவச மாகி உருகு தொண்ட
ருடன தாகி விளையு மன்பின்
அடிமை யாகு முறைமை யொன்றை அருள்வாயே

அமுதவேணி - சிவபெருமான் † அயின்ற உண்ட.

குறுகண் வீரர் குலைய ரிந்து
பொருதசூர னுடல்பி ளந்து
குமர வேலை சுவற வென்ற வடிவேலா
தரள மூர லுமைப டந்தை
முலையி லார வமுத முண்டு
தரணி ஏழும் வலம்வ ருந்திண் மயில்வீரா
மறுவி லாத தினைவி ளைந்த
புனம்வி டாம லிதணி ருந்து
வலிய காவல் புனைய ணங்கின் மணவாளா
மருவு *ஞாழ லணிசெ ருந்தி
அடவி †சூத வனநெ ருங்கி
வளர்சு வாமி மலைய மர்ந்த பெருமாளே. (௨௫)

தான தத்த தந்த தான தத்த தந்த
தான தத்த தந்த தனதான.

216. வார முற்ற பண்பின் மாத முற்ற நண்பின்
ஈடு மெய்த்து யர்ந்து வயதாகி
வாலை யிற்றி ரிந்து கோல மைக்கண் மங்கை
மார்க ளுக்கி சைந்து பொருள்தேடி
ஆர மிக்க பொன்க ளால மைத்த மர்ந்த
மாப ணிக்கள் விந்தை அதுவான
‡ஆட கொப்ப மைந்த ஓலை முத்த முங்கொ
டாவி பெத்த நொந்து திரிவேனோ
சூரனைத்து றந்து வேர றப்பி ளந்து
சூழ்சு ரர்க்க னன்பு செயும்வீரா
சூக ரத்து ரம்பு நாலெ டுத்து வந்த
சூத னுக்கி சைந்த மருகோனே
ஏரெ திர்த்து வந்து நீர்கள் கட்டி அன்று
தானி றைக்க வந்த தொரு§சாலி
ஏமி குத்து யர்ந்த மாவ யற்கள் மிஞ்சும்
ஏர கத்த மர்ந்த பெருமாளே. (௨௬)

* ஞாழல் - குங்குமமாம் † சூதவனம்-பவளவனம். ‡ ஆடகொப்பு-ஆடககொப்பு, பொன்னாலாகிய காதணி § சாலி - நெற்பொதி.

தனனதன தான தனதன தந்தன
தனனதன தான தனதன தந்தன
தனனதன தான தனதன தந்தன தனதான.

217. விடமும் *வடி வேலு மதனச ரங்களும்
வடுவுநிக ரான மகரநெ டுங்குழை
விரவியுடன் மீளும் விழிகளு மென்புழு கதுநாறும்

ம்ருகமதப டீர பரிமள குங்கும
மணியுமிள நீரும் வடகுல குன்றமும்
வெருவுவன பார புளகத னங்களும் வெருகாம

நடனபத நூபு ரமுமுகில் கெஞ்சிட
மலர்சொருகு கேச †பரமுமி லங்கிய
நளினமலர் சோதி மதிமுக விம்பமும் அநேகாம

நடையும்நளிர் ‡மாதர் §நிலவுதொ ழுந்தனு
முழுதுமபி ராம மணியொளி துன்றிய
நகையுமுள மாதர் கலவியி னைந்துரு கிடலாமோ

வடிவுடைய மாது மிகல்கர னுந்திகழ்
எழுவகைம ராம ரமுநிக ரொன்றுமில்
வலியதிறல் வாலி உரமுநெ டுங்கடல் அவையேழும்

மறநிருதர் சேனை முழுதுமி லங்கைமன்
வகையிரவி போலு மணியும லங்கிரு
மணிமவுலி யான வொருபதும் விழ்ந்திரு பதுதோளும்

அடைவலமு மாள விடுசர அம்புடை
தசரதகு மார ரகுகுல புங்கவன்
அருள்புனைமு ராரி மருகவி ளங்கிய மயிலேறி

அடையலர்கள் மாள வொருநொடி டந்தனில்
உலகைவல மாக நொடியினில் வந்தருள்
அழகியசு வாமி மலையில மர்ந்தருள் பெருமாளே. (உஎ)

---

* வடி - கூர்மை † பரம் - பாரம் ‡ மாதர் - அழகிய. § நிலவு தொழல் - நல்ல நாயகன் கிடைக்கவேண்டுமென்று சந்திரனைத்தொழுதல்.

தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன தனதான.

218. விரித்த பைங்குழ லொளிர்மல ரளிதன
தனத்த னந்தன தனதன வெனவொலி
விரிப்ப வண்கயல் விழியுறை குழையொடு மலைபாய
மிகுத்த வண்சிலை நுதல்மிசை திலதமொ
டசைத்த பொன்குழை அழகெழ முகவொளி
வெயிற்ப ரந்திட *நகையிதழ் முருகலர் வரிபோதத்
தரித்த தந்திரி மறிபுய மிசைபல
பணிக்கி லங்கிய பரிமள குவடிணை
தனக்கொ ழுந்துகள் நகைபடு கொடியிடை படுசேலை
தரித்த சுந்தர மிகவடர் பரிபுர
பதச்சி லம்பொடு நடமிடு கணிகையர்
சழக்கர் வஞ்சையர் மயல்களின் முழுகுவ தொழியாதோ
உரித்த வெங்கய மறியொடு புலிகலை
தரித்த சங்கரர் மதிநதி சடையினர்
ஒருத்தி பங்கின ரவர்பணி குருபர முருகோனே
உவட்டி வந்திடு மவுணரொ டெழுகடல்
குவட்டை யும்பொடி படமிக முடிவுற
உழைத்த இந்திரர் சிறமை மகிழ்வுற விடும்வேலா
வரித்த ருந்துள வணிதிரு மருவிய
§உரத்த பங்கயர் மாகத மழகிய
வனத்த ரம்பையர் முறைவிடு கணையினர் மருகோனே
வனத்தில் வந்தொரு பழையவ னெனவொரு
குறத்தி மென்புன மருவிய கிளிதனை
மயக்கி மந்திர குருமலை தனிலமர் பெருமாளே. (உஅ)

---

*நகை இதழ் முருகு அலர் வரி போத - தந்தங்களும் அதரமும் பொருந்திய வாசனையுள்ள ஆம்பல் மலரை யொத்த வாயினின்றும் இசைப் பாட்டுகள் எழ; வரி-இசைப்பாட்டு. §உரத்த பங்கயர்-திருமருவுதலால் மார்பின் கண் தாமரையை அல்லது மார்பாகிய தாமரையையுடையவர்.

தான தத்த தந்த தனதான.

219. காமி யத்த ழுந்தி இளையாதே
காலர் கைப்ப டிந்து மடியாதே
ஓமெ ழுத்தி லன்பு மிகவூறி
ஓவி யத்தி லந்தம் அருள்வாயே
தூம மெய்க்க ணிந்த சுகலீலா
சூர னைக்க டிந்த கதிர்வேலா
ஏம வெற் புயர்ந்த மயில்வீரா
ஏர கத்த மர்ந்த பெருமாளே. (௨௧)

தனதன தனனா தனனா தனந்த னத்த தனதானா.

220. தெருவினில் நடவா மடவார் திரண்டொ றுக்கும் வசையாலே
தினகர னெனவே லையிலே சிவந்து திக்கும் மதியாலே
பொருசிலை வளையா இளையா மதன்தொ டுக்குங் கணையாலே
புளகித முலையா ளலையா மனஞ்ச லித்தும் விடலாமோ
ஒருமலை இருகூ றெழவே உரம்பு குத்தும் வடிவேலா
ஒளிவளர் திருவே ரகமே உகந்து நிற்கும் முருகோனே
அருமறை தமிழ்நூ லடைவே தெரிந்து ரைக்கும் புலவோனே
*அரியரி பிரமா திபர்கால் விலங்க விழ்க்கும் பெருமாளே.

தானதந் தனதனன தனனதா னத்த சந்த தனதான.

221. நாசர்தங் கடையதனில் விரவிநான் மெத்த நொந்து தடுமாறி
ஞானமுங் கெடவடைய வழுவியா முத்த முத்தி பெறவியாதே
பாசகந் தொழுமுனது புகழிலோர் சொற்ப கர்ந்து கதிமேவி
மாமணங் கமழுமிரு காலபா தத்தை நின்று பணிவேனோ
வாசகம் புகலவொரு பரமர்தா மெச்ச நின்ற குருநாதா
வாசவன் தரு† திருவை ஒருதெய்வா னைக்கி ரங்கு மணவாளா
‡கீசகஞ் சூழ்தருவு மகிழுமா வத்தி சந்து புடைசூழுந்
கேசவன் பரவுகுரு மலையில்யோ கத்த மர்ந்த பெருமாளே
(௩௧)

* அரி-தேவேந்திரன். † திருவை-திரு, ஐ சாரியை. ‡ கீசகம்-மூங்கில்.

தனதன தனதன தனதான.

222. நிறைமதி முகமெனும் ஒளியாலே
நெறிவிழி கணைபுரி *நிகராலே
உறவுகொள் மடவர்கள் உறவாமோ
உனதிரு வடியினி அருள்வாயே
மறைபயி லரிதிரு மருகோனே
மருவல ரசுரர்கள் குலகாலா
குறமகள் தனைமணம் அருள்வோனே
குருமலை மருவிய பெருமாளே. (௩௨)

தான தனதன தான தனதன
தான தனதன தனதான.

223. பாதி மதிநதி போது வணிசடை
நாத ரருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
†பாதம் வருடிய மணவாளா
காதுமொருவிழி காக முறவருள்
மாய னரிதிரு மருகோனே
கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதி அயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா
ஆடு மயிலினி லேறி அமரர்கள்
சூழ வரவரும் இளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனில் உறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே. (௩௩)

*நிகர்-போர். † 'பாதம் வருடிய குறமகளுக்கு' எனப்பிரிக்க.

தானதன தந்த தானன தானதன தந்த தானன
தானதன தந்த தானன தனதான.

224. ஆனனமு கந்து தோளொடு தோளிணைக லந்து பாலன
ஆரமுது கண்டு தேனென இதழூறல்
ஆதரவி னுண்டு வேல்விழி பூசலிட நன்று காணென
ஆணையிட வெங்கு போதிட அபிராம
மானனைய மங்கை மார்மடு நாபியில்வி ழுந்து வாவியில்
மாயமனு விஸ்ப வாதைய துறுவேனுன்
வாரிசப தங்கள் நாயடி யேன்முடிபு னைந்து போதக
வாசகம்வ ழங்கி யாள்வது மொருநாளே
ஈனவதி பஞ்ச பாதக தானவர்ப்ர சண்ட சேனைகள்
ஈடழிய வென்று வானவர் குலசேனை
ஏவல்கொளு மிந்த்ர லோகவ சீகரவ லங்க்ரு தாகர
ராசத மறிந்த கோமள வடிவோனே
‡சோனைசொரி குன்ற வேடுவர் பேதைபயில் கின்ற ஆறிரு
தோளுடைய கந்த னேவய லியில்வாழ்வே
†சூளிகையு யர்ந்த கோபுர மாளிகைபொ லிந்து சூழ்தரு
ஸ்வாமிமலை நின்று லாவிய பெருமாளே. (௩௪)

தானன தனதனத் தான தனதன
தானன தனதனத் தான தனதன
தானன தனதனத் தான தனதன தனதான.

225. ஆனாத பிருதிவிப் பாச நிகளமும்
மாமாய விருளுமற் றேகி பவமென
ஆகாச பரமசிற் சோதி பரையையடைந்துளாமே
*ஆறாறி னதிகமக் ராய மனுதினம்
யோகீச ரெவருமெட் டாத பராபரி
யாதீத மகளமெப் போது முளபய னந்தயோகப்

---

*ஆறாறினதிகமக் ராயும் முப்பத்தாறு ஞான தத்துவங்கட்கும் மேற்பட்ட தலைமையிடம். †சூளிகை-அரமனை ‡சோனை-அடிக்கடி பெய்மழை.

வாருதி சகலவிஸ் தார விபவாம்
லோகாதி முடிவுமெய்ப் போத மலரயன்
மாலீச னெனுமவர்க் கேது விபுலம சங்கையால்நீள்

மாளாத தனிசமுற் றுய துரியநி
ராதார மூலவிற் சோதி நிருபம
மாருத சுகவெளித் தாணுவுடனினி தொன்றுசேர்வேன்

நாலுவி தகருவிச் சேனை வகைவகை
சூழ்போது பிரபலச் சூரர் கொடுநெடு
நாவாய்செல் கடலடைத் தேறி நிலையயி லங்கைசாய

நாலாறு மணிமுடிப் பாவி தலையடு
சீராமன் மருகமைக் காவில் பரிமள
நாவீசு வயலியக் கீசர் குமரக டம்பவேலா

காலூரு மெயினர்தற் சாதி வளர்குற
மானோடு மகிழ்கருத் தாகி மருடரு
காதாடு முனைதுகட் பாண மெனதுடை நெஞ்சுபாய்தல்

காணாது மமதைவிட் டாவி உயவருள்
பாராயெ னனவெகுப் பீதி இலையவ
காவேரி வடகரைச் சாமி மலையுறை தம்பிரானே. (௩௫)

தானதன தான தந்த தானதன தான தந்த
தானதன தான தந்த தனதான.

226. வாதமொடு சூலை கண்ட மாலைசூலை நோவு சந்து
மாவலிவி யாதி குன்ம மொடுகாசம்

வாயுவிட னேப ரந்த நோயதிக பீன சம்பின்
மாதர் தரு பூஷ ணங்கள் எனவாகும்

பாதகவி யாதி புண்கள் ஆனதுட னேதொ டர்ந்து
பாயலைவி டாது மங்க இவையால்நின்

பாதமல ரான திவ்ய ஞேயமற வேமறந்து
பாவமது பால முண்டு வெறிமுடி

ஏகமுறு பாச பந்த மானவலை யோடு மூன்று
ஏனமிரு சாதி யின்க ணாதிலையான்
ஈடழிந்த லான நின்பின் மூடனென வோதுமுன்பு
ஈரவருள் கூர வந்து னையாள்வாய்
ஆகமகிழ் பாலை தெங்கு தாறுவளர் சோலை முன்பு
ஆழமதில் தாவி மஞ்சின் அலைவாகத்
தோரணநன் மாடமெங்கு நீடுகொடி யேறு மைந்த
ஸ்வாமிமலை வாழ வந்த பெருமாளே. (௨௨௬)

தனனத்தானன தாத்தத்தனதன
தனனத்தானன தாத்தத்தனதன
தனனத்தானன தாத்தத்தனதன தனதான.

227. வறுமைப்பாழ்பிணி ஆற்றப்படாதுளம்
உருகிப்போனது தேற்றப்படாதினி
மகிமைக்கேடுகள் பார்க்கப்படாதென அழியாயோ
வலியப்போயுடல் கூச்சப்படாமையும்
இடியப்பேசிய நாச்சிக்கலாமையும்
மறுசொற்காதுகள் கேட்கப்படாமையும் வரலாமோ
கறுவிப்பாய்புலி வேட்டைக்குளேவரு
பசுவைப்போல்மிடி யாற்பட்டபாடெழு
கதையைப் பாரினி லார்க்குச்சொல் வேனினம் அறியாயோ
கவலைச்சாகர நீச்சுக்குளேயுயிர்
தவறிப்போமென ஓட்டத்திலோடியெ
கருணைத்தோணியி லேற்றிக்கொள்வாயினி அலையாதே
குறைபட்டேயுயிர் காத்துக்கொள்வாயென
முறையிட்டோர்கரி கூப்பிட்டநாளொரு
குரலிற்போயுயிர் காத்துக்கொள்வோர்திரு மருகோனே
குளிர்முத்தாவணி மூக்குத்தியோடணி
களபப்பூண்முலை பார்த்துப்பெண்போகிலி
குவளைப்பார்வையில் மாட்டிக்கொளாதருள் குருநாதா

நிறையத்தேன்விழு பூக்கொத்திலேகனி
கிழியத்தான்விழு காய்க்கொத்திலேமயில்
நடனக்கால்படு தோப்புக்குளேவயல் கயலாடே
நதியைக்காவிரி யாற்றுக்குளேவரு
வளமைச்சோழநன் னாட்டுக்குளேரக
நகரிற்சீர்பெறு கோட்டத்தையேதரு பெருமாளே. ()

தனதான தத்த தனதான தத்த
தனதான தத்த தனதான.

228. ஒழுகூனி ரத்த மொடுநாறு டுக்கி
உயர்கால்க ரத்தின் உருவாகி
ஒருதாய்வ யிற்றி னிடையேயு தித்துள்
உழல்மாய மிக்கு வருகாயம்
பழுசாவி னைப்பொ டிணையாவி ருத்த
பரிதாப முற்று மடியாமுன்
பரிவாலு னத்தின் முருகாவெ னச்சொல்
பகர்வாழ்வெ னக்கு மொழிவாயே
எழுவான கத்தி லிருநாலு திக்கில்
இமையோர்த மக்கும் அரசாகி
எதிரேறு மத்த மதவார ணத்தின்
இனிதேறு கொற்ற முடன்வாழுஞ்
செழுமாம ணிப்பொ னகராயு தித்த
திருவேர கத்தில் உறைவோனே
திடமோட ரக்கர் கொடுபோய டைத்த
சிறைமீள விட்ட பெருமாளே. (உஉஅ)

தானதனத் தனதான தானதனத் தனதான.

229. காலனிடத் தணுகாதே காசினியிற் பிறவாதே
சீலவகத் தியஞான தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியானே மாதவரைப் பிரியானே
சோலைமலைக் குரியானே ஸ்வாமிமலைப் பெருமானே. (உஉ௯)

உ

ஐந்தாவது

குன்றுதோறாடல்

தந்தன தான தான தந்தன தான தான
தந்தன தான தான தன தான.

230. வஞ்சக லோப மூடர் தம்பொரு ளூர்கள் தேடி
மஞ்சரி கோவை தூது பலபாவின்
வண்புகழ் *பாரி காரி என்றிசை வாதுகூறி
†வந்தியர் போல வீணில் அழியாதே
செஞ்சர ணாத கீத கிண்கிணி நீப மாலை
திண்டிறல் வேல்மயூர முகமாறும்
செந்தமிழ் நாளு மோதி உய்ந்திட ஞான மூறு
செங்கனி வாயி லோர்சொல் அருள்வாயே
‡பஞ்சவ னீடு கூனு மொன்றிடு தாபமோடு
பஞ்சற வாது கூறு சமண்மூகர்
பண்பறு பீலியோடு வெங்கழு வேறவோது
பண்டித ஞான நீறு தருவோனே
குஞ்சரம் யாளிமேவு பைம்புன மீது லாவு
குன்றவர் சாதி கூடி வெறியாடிக்
கும்பிட நாடி வாழ்வு தந்தவ ரோடு வீறு
குன்றுதொ றாடல் மேவு பெருமாளே. (க)

தனனந் தனன தந்த தனதான.

231. அதிருங் கழல்ப ணிந்துன் அடியேனுன்
அபயம் புகுவ தென்று நிலைகாண
இதயந் தனிலி ருந்து க்ருபையாகி
இடர்சங் கைகள்க லங்க அருள்வாயே
எதிரங் கொருவ ரின்றி நடமாடும்
இறைவன் தனது பங்கில் உமைபாலா
பதிபெங் கிலுமி ருந்து விளையாடிப்
பலகுன் றிலும மர்ந்த பெருமாளே. (உ)

* பாரி - கடையெழுவள்ளல்களி லொருவன். காரி - இவனும் அவர்களி லொருவன். † வந்தியர் - புகழ்ந்து கூறுவோர். ‡ பஞ்சவன் - பாண்டியன்.

தனதன தனன தனதன தனன
தனதன தனன தனதான.

232. எழுதிகழ் புவன நொடியள வதனில்
இயல்பெற மயிலில் வருவோனே
இமையவர் பரவி அடிதொழ அவுணர்
மடிவுற விடுவ தொருவேலா
*வழுதியர் தமிழி †னொருபொரு ளதனை
வழிபட மொழியு முருகேசா
மலரடி பணியு மடமகள் பசலை
மயல்கொடு தளர்வ தழகோதான்
முழுகிய புனலி னினமணி தரள
§முறுகிடு பவள மிகவாரி
முறையொடு குறவர் மடமகள் சொரியு
முதுமலை அழக குருநாதா
பழகிய வினைகள் பொடிபட அருளில்
படிபவ ரிதயம் உறுகோவே
பருவரை துணிய வொருகணை ‡தெரிவ
பலமலை உடைய பெருமாளே. (௩)

தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன தந்ததான.

233. தறையின் மானுட ராசையி னால்மடல்
எழுது மாலருள் மாதர்கள் தோதக
சரசர் மாமல ரோதியி னூலிரு கொங்கையாலும்

---

* வழுதியர்தமிழ்-பாண்டியர்களால் விருத்தி செய்யப்பட்ட தமிழ். †ஒருபொருளதனை வழிபட மொழியும் முருகேசன் என்றது இறையனு ரகப்பொருளுக்குச் சங்கப்புலவர்பலரும்செய்துவந்த உரைகளையெல்லாம் தனித்தனி கேட்டு ஒரோரிடங்களிற் சிரக்கம்பஞ் செய்து, நக்கீரர் செய்த உரையை முற்றும் வியந்து சிரக்கம்பஞ் செய்து ஸ்தாபித்தருளிய உருத்திர சன்மனா. §முறுகிடு-முதிர்ந்து விளைகிற. ‡தெரிவ-தெரியவனே.

தளர்மி னேரிடை யாலுடை யால்நடை
அழகி னூல்மொழி யால்விழி யால்மருள்
சவலை நாயடி யேன்மிக வாடிம யங்கலாமோ

பறவை யானமெய்ஞ் ஞானிகள் மோனிகள்
அணுகொ ணாவகை நீடு*மி ராசிய
பவன பூரக வேகிக மாகிய விந்துநாதம்

பகரொ ணாதது சேரவொ ணாதது
நினைவொ ணாதது வானத யாபர
பதிய தானச மாதிம னோலயம் வந்துதாராய்

சிறைவி டாதநி சாசரர் சேனைகள்
மடிய நீலக லாபம தேறிய
திறல்வி நோத†ச மேளத யாபர அம்புராசி

திரைகள் போலலை மோதிய சீதள
குடக காவிரி நீளலை சூடிய
திரிசி ராமலை மேலுறை வீரகு றிஞ்சிவாழும்

மறவர் நாயக ஆதிவி நாயகர்
இளைய நாயக காவிரி நாயக
வடிவி னாயக ‡ஆனைந னாயக எங்கள்மானின்

மகிழ்ந நாயக தேவர்கள் நாயக
கவுரி நாயக னார்குரு நாயக
வடிவ தாமலை யாவையு மேவிய தம்பிரானே. (௪)

கயிலைமலை.

இது இமயமலையின் மீதுள்ளது.

தனதன தனனத் தான தனதன தனனத் தான
தனதன தனனத் தான தனதான.

234. திருநில மருவிக் காவி §யிருவழி அடைபட் டோடி
சிலவழி உடனுற் றேக பாமீதே

சிவசுட ரதனைப் ||பாவை மணமென மருவிக் கோல
¶திரிபுர மெரியத் தீயில் நலைகமேவி

---

*இராசியம் - இரகசியம். †சமேளம் - சமேளனம், கலப்பு. ‡ஆனை-தெய்வானை. §இருவழி-இடைகலை பிங்கலை மார்க்கம். ||பாவை மணம் என மருவல்-பதுமை விவாகம்போலப் பாவித்தல். ¶திரிபுரம்-மும்மலம்.

இருவினை பொரியக் கோல திருவரு ளுருவத் தேகி
　　இருள்கதி ரிலிபொற் பூமி　　　　தவசூடே

இருவருஞ் முருகிக் காய நிலையென மருவித் தேவர்
　　இளையவ னெனவித் தாரம்　　　　அருள்வாயே

பரிபுர கழ*லெட் டாசை செவிடுகள் படமுத் தேவர்
　　பழமறை மணியச் சூல　　　　மழுமானும்

பரிவொடு சுழலச் சேடன் முடிநெறு நெறெனக் †கோவு
　　பரியினை மலர்விட் டாடி　　　　அடியோர்கள்

‡அரஹர வுருகிச் சேசெ எனதிரு நடனக் கோலம்
　　அருள்செயு முறையிற் பாகர்　　　　அருள்பாலா

அலரணி குழல்பொற் பாவை §திருமக ளமளிப் போரொ
　　டடியவர் கயிலைக் கான　　　　பெருமானே. (ரு)

தானந்த னத்ததன தானந்த னத்ததன
தானந்த னத்ததன　　தனதான.

235. தேனுந்து முக்கனிகள் பால்செங்க ருப்பிளநிர்
　　சீரும்ப ழித்தசிவம்　　　　அருளூறத்

தீதும்பி டித்தவினை ஏதும்பொ டிப்படவு
　　சீவன்சி வச்சொருபம்　　　　எனநாடி

நானென்ப தற்றுயிரொ டேனென்ப தற்றுவெளி
　　நாதம்ப ரப்பிரம　　　　ஒளிமீதே

ஞானஞ்சு ரப்பமகி ழாநந்த சித்தியொடெ
　　நாளுங்க ளிக்குநிலை　　　　அருள்வாயே

வானந் தழைக்கவடி யேனுஞ்செ ழிக்கவயன்
　　மாலும்பி ழைக்கவலை　　　　விடமான

வாருங்க ரந்தமொளமை ஆளுந்த கப்பன்பழ
　　மானின்க ரத்தனருள்　　　　முருகோனே

---

*எட் டாசை-அஷ்டதிக்கு. †கோவு பரியினை மலர்விட்டு-இடபமாகிய பரியைப் பூமியில் விட்டு. ‡அரஹர உருகி-அரஹர என உருகி; என-சொல்லெச்சம். §திரு மகள்-இலக்குமியின் புத்திரியாகிய வள்ளியம்மை.

தானந்த னத்ததன ஞுவண்டு சுற்றிமது
தானுண்க டப்பமலர் அணிமார்பா
தானங்கு றித்துவெமை யாளுந்தி ருக்கயிலை
சாலுங்கு றத்திமகிழ் பெருமாளே. (சு)

தனத்த தனத்த தனத்த தனத்த
தனத்த தனத்த தனதான.

236. நகைத்து ருருக்கி விழித்து மிரட்டி
நடித்து விதத்தில் அதிமோகம்
நடத்து சமத்தி முகத்தை மினுக்கி
நலத்தி லணைத்து மொழியாலும்
திகைத்த வரத்தி லடுத்த பொருட்கை
திரட்டி எடுத்து வரவேசெய்
திருட்டு முலைப்பெண் மருட்டு வலைக்குள்
தெவிட்டு கலைக்குள் விழுவேனோ
பகைத்த அரக்கர் சிரத்தை அறுத்த
படர்ச்சி கறுத்த மயிலேறிப்
பணைத்த கரத்த குணத்த மணத்த
பதத்த கனத்த தலைமாதை
மிகைத்த புனத்தி லிருத்தி யணைத்து
*வெளுத்த பொருப்பில் உறைநாதா
விரித்த சடைக்கு ளொருத்தி இருக்க
†மருகக்கை கொளத்தர் பெருமாளே. (எ)

தன்ன தந்தன தானன தனதனன
தனன தந்தன தானன தனதனன
தனன தந்தன தானன தனதனன தனதான.

237. பனியின் விந்‡துளி யாகவே கருவினூறும்
அளவி லங்கொரு §குசமாய் மிளகு ||துவர்
பனைதெ னங்கனி போலவே ¶பலகனியின் வயிறுகிப்

---

*வெளுத்த பொருப்பு-வெள்ளிமலை, கயிலை. †மருகக்கை கொளத்தர்-மானேந்திய கையையுடைய சிவபெருமான். ‡உளியாக-இடமாக. §குசம்-குறி. ||துவர்-பாக்கு; ஆகுபெயர். ¶பலகனி-பலாக்கனி.

பருவ முந்தலை கீழதாய் நழுவிநில
மருவி ஒன்பது வாசல்சே ருருவமுள
பதுமை யின்செயல் போலவே வளிகயிறின் உடனாடி

மனவி தந்தெரி யாமலே மலசலமொ
டுடல்ந கர்ந்தழு தாறியே அனைமுலையின்
மயம யின்றொரு பாலனா யிகமுடைய செயல்மேவி

வடிவ முன்செய்த தீமையா *லெயுமுனையும்
அறம றந்†தக மீறுபோய் அநுதினமு
மனம ழிந்துடல் நாறினோ னிரியுனது கழல்தாராய்

தனன தந்தன தானனா தனதனன
தினன திந்தன தீதகோ திகுததிகு
தகுத குந்ததி தாகுதோ வெனமுழவு வளைபேரி

தவில்க ணம்பறை காளமோ டிமிலையொலி
இனமு ழங்கெழு வேலைபோ லதிரவொரு
சமர்மு கந்தனின் மேவியே விருதுசொலும் அவுணோர்கள்

சினம ழிந்துறு தேர்கள்‡தோ லரியரிகள்
குருதி எண்டிசை மூடவே அலகைநரி
சிறையி னங்களி கூரவே நகையருளி விடும்வேலா

சிவன்ம கிழ்ந்தரு ளானைமா முகன்மருவி
மனம கிழ்ந்தருள் கூரவோர் கயிலைமகிழ்
திகழ்கு றிஞ்சியின் மாதுமால் மருவுபுகழ் பெருமாளே ()

தனனதனத் தனதான தனனதனத் தனதான.

238. §புமியதனிற் ப்ரபுவான புகலியில்வித் தகர்போல
அமிர்தகவித் தொடைபாட அடிமைதனக் கருள்வாயே
சமரி‖லெதிர்த் தசுர்மாளத் தனியயில்விட் டருள்வோனே
நமசிவயப் பொருளானே ¶ரசதகிரிப் பெருமாளே, (௯)

---

* எயு முனையும்-எயும் உனையும். † அகம்-பாவம். ‡ தோல் யானை. புமி-பூமி. ‖ எதிர்த்த சுர்-எதிர்த்த சூரன். ¶ ரசதகிரி-வெள்ளியங்கிரி.

தனத்தத் தனத்த தத்த தனத்தத் தனத்த தத்த
தனத்தத் தனத்த தத்த தனதான.

239. முகத்தைப் பிலுக்கி மெத்த மினுக்கித் துடைத்து ரத்ந
முலைக்கச் சவிழ்த்த சைத்து முசியாதே
முழுக்கக் கழுப்பி எத்தி மழுப்பிப் பொருட்ப றித்து
மொழிக்குட் படுத்த ழைத்து மனிமீதே
நகைத்திட் டழுத்தி முத்தம் அளித்துக் களித்து மெத்த
நயத்திற் கழுத்தி றுக்கி அணைவார்பால்
நடுக்குற் றவர்க்கு மெத்த மனத்தைப் பெருக்க வைத்து
நயத்துத் தியக்கி நித்தம் அழிவேனோ
செகக்கச் செகக்க செக்க தரிக்கத் தரிக்க தக்க
திமித்தித் திமித்தி தித்தி யென ஆடும்
செகத்துக் கொருத்தர் புத்ர நினைத்துத் துதித்த பத்த
செனத்துக் கினித்த சித்தி அருள்வோனே
மிகுத்துத் திடத்தொ டுற்று மலைத்துப் பொறுத்த ரக்கன்
மிதித்துப் பெயர்த்தெ டுத்த கயிலாய
மிசைக்குற் றடுத்துயர்த்த பொருப்பைப் பொடித் திடித்து
மிகுத்துத் துகைத்து விட்ட பெருமாளே. (ங)

தனனதன தனனதன தனனதன தனனதன
தனனதன தனனதன தனதான.

240. குதறுகுர வறிவுகொடு பதறியெதிர் கதறிமிகு
குழறியிடு பரசமயம் ஒருகோடி
குருடர்தெரி வரியதொரு பொருடெரிய நிகழ்மனது
கொடியவிரு வினையெனு* ம ளறுபோக
உதறிவிசி றியசரண மரணமற விரணமற
உருகியுரை பருகியநு திருஞானம்
உணர்வுகதி பெறவுனது மிருகமத வெழிலொளிர
உபயபத முணருமவகை அருள்வாயே

* மளறு - பிறவித்துன்பமாகிய குற்றம்.

சிதறிவெளி முழுதுமொளி திகழுமுடு படலமவை
சிறுபொறிக ளெனவுரக பிலமேழுஞ்
செகதலமு முருகவிக ரிகள்குலவு கஜபுயக
திசையுமுட னுருகவரு கடைநாளிற்
கதறுமெழு கடல்பருகி வடவைவிடு கரியபுகை
எனமுடிவில் ககனமுக டதிலோடுங்
கலபமயில் மிசையசுரர் கலகமற அமர்பொருது
கயிலைமலை தனில்மருவு பெருமாளே. (௧௧)

ஸ்ரீ சைலம்.

தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன தனதான.

241. ஒருபது மிருபது மறுபது முடனறும்
உணர்வுற இருபதம் உளநாடி
உருகிட முழுமதி தழலென ஒளிதிகழ்
வெளியொடு மொளிபெற விரவாதே
தெருவினில் மரமென எவரொடு முரைசெய்து
திரிதொழி லவமது புரியாதே
திருமகள் மருவிய திரள்புய அறுமுக
தெரிசனை பெறவருள் புரிவாயே
பரிவுட னழகிய பழமொடு கடலைகள்
பயறொடு சிலவகை பணியாரம்
பருகிடு பெருவயி றுடையவர் *பழமொழி
எழுதிய கணபதி இளையோனே
பெருமலை உருவிட அடிமலர் பணிபவர்
பிணிகெட அருள்தரு குமரேசா
பிடியொடு களிறுகள் நடைபயில் கலைதிரள்
பிணையமர் திருமலை பெருமாளே. (௧௨)

---

*பழமொழி-பாரதம். திருமலை என்பது ஸ்ரீசைலத்துக்கோர் பெயர்.

திருவேங்கடம்.

இது திருப்பதி ஸ்டேஷனுக்கு வடமேற்கே 4 மயில் துலைவிலிருக்கிறது.
இது முருகக்கடவுளது ஐந்தாம் படைவீடு.

தனதாந்தன தானன தானன
தனதாந்தன தானன தானன
தனதாந்தன தானன தானன தனதான.

242. வரிசேர்ந்திடு சேல்கய லோவெனு
முழைவாழ்ந்திடு வேலையு நீலமும்
வடுவாங்கிடு வாள்விழி மாதர்கள் வலையாலே

வளர்கோங்கிள மாமுகை யாகிய
தனவாஞ்சையி லேமுக மாயையில்
வளமாந்தளிர் போல்நிற மாகிய வடிவாலே

இருள்போன்றிடு வார்குழல் நீழலில்
மயல்சேர்ந்திடு பாயலின் மீதுற
இனிதாங்கனி வாயமு தூறல்கள் பருகாமே

* எனதாந் தன தானவை போயற
மலமாங்கடு மோகவி காரமும்
இவைநீங்கிட வேயிரு தாள்மலர் அருள்வாயே

கரிவாம்பரி தேர்திரள் சேனையும்
உடனாந்துரி யோதன னாதிகள்
களமாண்டிட வேயொரு பாரதம் அதிலேகிக்

கனபாண்டவர் தேர்தனி லேயெழு
பரிதூண்டிய சாரதி யாகிய
கதிரோங்கிய நேமிய னாமரி ரகுராமன்

திரைநீண்டிரை வாரியும் வாலியும்
நெடிதோங்குமராமர மேழொடு
தெசமாஞ்சிர ராவண னார்முடி பொடியாகச்

சிலைவாங்கிய நாரண னார்மரு
மகனாங்குக னேபொழில் சூழ்தரு
திருவேங்கிட மாமலை மேவிய பெருமாளே. (கரு)

---

* எனதாந்தன தானவை-என்னது நின்னது என்னும் ஆசாபாசம்.

தாந்தன தானதன தாந்தன தானதன
தாந்தன தானதன தனதான.

243. கோங்கிள நீரளக வீங்குப யோதரமும்
வாங்கிய வேல்விழியும் இருள்கூரும்
கூந்தலும் நீள்வளைகொள் காந்தளு நூலிடையும்
மாந்தளிர் போல்வடிவும் மிகநாடிப்
பூங்கொடி யார்கலவி நீங்கரி தாகிமிகு
தீங்குட னேயுழலும் உயிர்வாழ்வு
பூண்டடி யேனெறியில் மாண்டிட னேநரகில்
வீழ்ந்தலை யாமலருள் புரிவாயே
பாங்கியும் வேடுவரும் ஏங்கிட மாமுனியும்
வேங்கையு மாய்மறமின் உடன்வாழ்வாய்
பாண்டவர் தேர்கடவும் நீண்டபி ரான்மருக
பாண்டிய னீறணிய மொழிவோனே
வேங்கையும் வாரணமும் வேங்கையும் மானும்வளர்
வேங்கிட மாமலையில் உறைவோனே
வேண்டிய போதடியர் வேண்டிய போகமது
வேண்டவெ றாதுதவு பெருமாளே. (௧௪)

---

244. சாந்தமில் மோகவெறி காந்தி[*]ய வாவநில
மூண்டவி யாதசம யவிரோத
சாங்கலை வாரிதியை நீந்தவொ ணாதுலகர்
தாந்துணை யாவரென மடவார்மேல்
ஏந்திள வார்முளரி சாந்தணி மார்பினொடு
தோய்ந்துரு காவறிவு தடுமாறி
ஏங்கிட ஆருயிரை வாங்கிய காலன் வசம்
யான்தனி போய்விடுவ தியல்போதான்
காந்தளி னனகர மான்தரு கானமயில்
காந்தவி சாகசர வணவேளே

அவாவநிலம்-ஆசைக்காற்று.

காண்டகு தேவர்பதி ஆண்டவ னேசுருதி
ஆண்டகை யேயிபமின் மணவாளா
வேந்தகு மாரகுக சேந்தம யூரவட
வேங்கட மாமலையில் உறைவோனே
வேண்டிய போதடியர் வேண்டிய போகமது
வேண்டவெ றாதுதவு பெருமாளே. (கரு)

தனத்ததன தனன தனந்த தனத்ததன தனன தனந்த
தனத்ததன தனன தனந்த தனதான.

245. கறுத்ததலை வெளிறு மிகுந்து மதர்த்தவிணை விழிகள்குழிந்து
*கதுப்பிலுறு தசைகள் வறண்டு செவிதோளாய்க்
கழுத்தடியு மடைய வளைந்து கனத்தநெடு முதுகு குனிந்து
கதுப்புறுப லடைய விழுந்†து தடுநீர்சோர்
உறக்கம்வரு மளவி லெலும்பு குலுக்கிவிடு மிருமல் தொடங்கி
உரத்தகன குரலு நெரிந்து தடிகாலாய்
உரத்தநடை தளரு முடம்பு பழுத்திடுமுன் மிகவும் விரும்பி
உனக்கடிமை படுமவர் தொண்டு புரிவேனோ
சிறுத்த‡செலு வதனு ளிருந்து பெருத்ததிரை உததி கரந்து
செறித்தமறை கொணரு நிவந்த செயமா§லே
செறித்தவளை கடலில் வரம்பு புதுக்கியிளை யவனொ டறிந்து
செயிர்த்தவரு மனையு முகந்து படையோடு
மறப்புரிசை வளையு மிலங்கை அரக்கனொரு பதுமு டிசிந்த
வளைத்தசிலை விஜய முகுந்தன் மருகோனே
மலர்க்கமல வடிவு ளசெங்கை அயிற்குமர ||குகைவழி வந்த
மலைச்சிகர வடமலை நின்ற பெருமாளே. (கசா)

* கதுப்பு - கன்னம். † உதடு நீர்சோர் - உறக்கம் வருமளவில் எனப் பிரிக்க ‡ செலு - மீன்சிறை. § வ செறித்து அ வளை கடலில் - பாணப் பிரயோகஞ் செய்து அந்த வளைந்த கடலில். என்று பிரிக்க.

|| 'அண்டமன் னுயி ரீன்றவ ளுடன் முனி வாகித்
தொண்ட கஞ்செழு சுவாமிதன் மால்வரை துறந்து
மண்டு பாதலத் தேகியே யோர்குகை வழியே
பண்டு தான்வரு வேங்கட கிரியையும் பார்த்தான்" என்று கந்த புராணம் வழிநடைப் படலத்திற் கூறி யிருத்தலை உணர்க.

தனதன தத்தன தனதன தத்தன
தனதன தத்தன தனதான.

246. கலகலெ னச்சில கலைகள்பி தற்றிடு
கசடர்கள் பக்கம — தணுகாதே
கருவின் வழிப்படு மிருவினை உட்படு
கடுநர குக்கிடை — படியாதே
உலகுத னிற்பல பிறவித ரித்தற
உழல்வது விட்டினி — அடிநாயேன்
உனதடி மைத்திர ளதனினு முற்பட
உபயம லர்ப்பதம் — அருள்வாயே
குலகிரி பொட்டெழ வலைகடல் வற்றிட
நிசிசர னைப்பொரும் — அயில்வீரா
குணதர வித்தக எழில்வன மிக்குற
குறமக ளைப்புணர் — மணிமார்பா
அலைபுன லிற்றவழ் வளைநில வைத்தரும்
அலைசெய்தி ருப்பதி — உறைவோனே
அடியவ ரிச்சையி லெவையெவை யுற்றன
அவைதரு வித்தருள் — பெருமாளே. (௧௭)

திருத்தணிகை.

இது தொண்டைநாட்டின்கண் திருத்தணிகை என்னும் ஸ்டேஷனிலிருந்து ஒரு மைல் துலைவிலிருக்கிற சுப்பிரமணிய க்ஷேத்திரம்.

தனனத் தனனத் தனனத் தனனத்
தனனத் தனனத் தனதான.

247. அமைவுற் றடையப் பசியுற் றவருக்
கமுதைப் பகிர்தற் — கிசையாதே
அடையப் பொருள்கைக் கிளமைக் கெனவைத்
தருள்தப் பிமதத் — தயராதே
தமர்சுற் றியழப் பறைகொட் டியிடச்
சமனெட் டுயிரைக் — கொடுபோகுஞ்
*சரிரத் தினைநிற் குமெனக் கருதித்
தளர்வுற் றொழியக் — கடவேனோ

* சரிரம்-சரீரம்; சந்தம் நோக்கிக் குறுகிற்று.

இமயத் துமயிற் கொருபக் கமளித்
தவருக் கிசையப் புகல்வோனே

*இரணத் தினிலெற் றுவரைக் கழுருக்
கிரையிட் டிடுவிக் ரமவேலா

†சமயச் சிலுகிட் டவரைத் தவறித்
தவமுற் றவருட் புகநாடும்

‡சடுபத் மமுகக் குகபுக் ககனத்
தணியிற் குமரப் பெருமாளே. (கஅ)

---

248. பொரியப் பொரியப் பொலிமுத் துவடத்
துகளிற் புதையத் தனமீதே

புரளப் புரளக் கறுவித் தறுகட்
பொருவிற் சுறவக் கொடிவேள்§டோ ரள்

தெரிவைக் ||கரிவைப் பரவைக் குருகிச்
செயலற் றனள்கற் பழியாதே

செறிவுற் றணையிற் றுயிலுற் றருமைத்
தெரிவைக் குணர்வைத் தரவேணும்

சொரிகற் பகநற் பதியைத் தொழுகைச்
சுரருக் கருளைப் புரிவோனே

சுடர்பொற் கயிலைக் கடவுட் கிசையச்
சுருதிப் பொருளைப் பகர்வோனே

¶தரிகெட் டசுரப் படைகெட் டொழியத்
தனிநெட் டயிலைத் தொடும்வீரா

தவளப் பணிலத் தரளப் பழனத்
தணிகைக் குமரப் பெருமாளே. (ககூ)

---

*இரணம்-யுத்தம் †சமயச்சிலுகு-மதச்சண்டை. ‡சடுபத்மம்-ஆறுதாமரை §தோள்தெரிவை கைதெரிந்தெய்யும் சூரியபாணம். ||அரிவைப்பரவைக்கு-பெண்களாகிய சேனசமுத்திரத்துக்கு ¶தரிகெட்டு-தரிப்பின்றி.

249. குவளைக் கணைதொட் டவனுக் குமுடிக்
குடையிட் டகுறைப் பிறையாலே
குறுகுற் றலர்த் தெரிவைக் குமொழிக்
குயிலுக் குமினித் தளராதே
இவளைத் துவளக் கலவிக் குநயத்
திறுகத் தழுவிப் புயமீதே
இணையற் றழகிற் புனையக் கருணைக்
கினிமைத் தொடையைத் தரவேணும்
கவளக் களக் கரியெட் டலறக்
கனகக் கிரியைப் பொருவேலா
கருதிச் செயலைப் புயனுக் குருகிக்
கலவிக் கணயத் தொழுமார்பா
பவளத் தரளத் திரளக் குவைவெற்
பவைபொப் புவயற் புறமீதே
பணிலத் திரள்மொய்த் ததிருத் தணிகைப்
பதியிற் குமரப் பெருமாளே, (உ०)

தனத்தனத் தனத்தனத் தனத்தனத் தனத்தனத்
தனத்தனத் தனத்தனத் தனதான.

150. கடற்செகத் தடக்கிமற் றடுத்தவர்க் கிடுக்கணைக்
கடைக்கணிற் கொடுத்தழைத் தியல்காமக்
கலைக் கதற் றறைத்தபுட் குரற்கள்விட் டுளத்திணைக்
கரைத்துடுத் தபட்டவிழ்த் தணைமீதே
சடக்கெனப் புகத்தனத் தணைத்திதழ்க் கொடுத்துமுத்
தமிட்டிருட் குழற்பிணித் துகிரேகை
சளப்படப் புதைத்தடித் திலைக்குணக் கடித்தடத்
தலத்தில்வைப் பவர்க்கிதப் படுவேனோ

அலர்த்தெரிவை-பழிதூற்றும் பெண். செயலை-அசோகு. செயலைப் புயன்-அசோகமலர்க் கணையைக் கையிலுடைய மன்மதன். கதற்று-கதறுதலுடைய. இலைக்குணம்-அரசிலையின் தன்மையை யொத்ததான.

‡இடக்கடக் குயெய்ப்பொருட் டிருப்புகழ்க் குயிர்ப்பளித்
தெழிற்றினைக் கிரிப்புரித் துறைவேலா

இகற்செருக் கரக்கரைத் தகர்த்தொலித் துரத்துபச்
சிறைச்சியைப் பசித்திரைக் கிசைகூவும்

பெடைத்திரட் களித்தருக் குடக்கொடிக் கரத்தபொய்ப்
பிதற்றறப் படுத்துசற் குருவாய்முன்

பிறப்பிலிக் குணர்த்துசித் தவுற்றநெற் பெருக்குறப்
பெருக்குசெய்த் திருத்தணிப் பெருமாளே. (௨௧)

---

251. கனத்தறப் பணைத்தபொற் கழைப்புயத் தனக்கிரிக்
§கனத்தையொத் தமொய்த்தசைக் குழலார்தங்

கறுத்தமைக் கயற்கணிற் கருத்தவைத் தொருத்தநிற்
கழற்பதத் தடுத்திடற் கறியாதே

இனப்பிணிக் கணத்தினுக் கிருப்பெனத் துருத்தியொத்
திசைத்தசைத் தசுக்கிலத் தசைதோலால்

எடுத்தபொய்க் கடத்தினைப் பொறுக்குமிப் பிறப்பறுத்
தெனக்குநித் தமுத்தியைத் தரவேணும்

||பனைக்கரச் சினத்திபத் தனைத்துரத் தரக்கனைப்
¶பயத்தினிற் பயப்படப் பொரும்வேலா

பருப்பதச் செருக்கறத் துகைக்குமுட் பதத்தினைப்
படைத்தகுக் குடக்கொடிக் குமரேசா

தினைப்புனப் பருப்பதத் தினிற்குடிக் குறத்தியைச்
செழுக்குறத் திருப்புயத் தணைவோனே

திருப்புறப் புறத்தியற் றிருத்*தகுத் தநித்திலத்
திருத்திசைத் திருத்தணிப் பெருமாளே. (௨௨)

---

‡இடக்கு-குதர்க்கம். §கனம்-மேகம். ||பனைக்கரச்சினத்திபத்தன்-தேவேந்திரன். ¶பயம்-(சமுத்திரமாகிய) ஜலம். *தகுத்த-தகுந்த.

252. பருத்தபற் சிரத்தினைக் குருத்திறக் கரத்தினைப்
பரித்தவப் பதத்தினைப் பரிவோடே

படைத்தபொய்க் குடத்தினைப் பழிப்பவத் திடத்தினைப்
பசிக்குடற் கடத்தினைப் பயமேவும்

பெருத்தபித் துருத்தனைக் கருத்திமத் துருத்தியைப்
பிணித்த*முக் குறத்தொடைப் புலனாலும்

பிணித்தவிப் பிணிப்பையைப் பொறுத்தமிழ்ப் பிறப்பறக்
குறிக்கருத் தெனக்களித் தருள்வாயே

கருத்திலுற் றுரைத்தபத் தரைத்தனிக் கிருக்கறக்
கழித்தமெய்ப் பதத்தில்வைத் திடுவீரா

கதித்தநற் றினைப்புனக் கதித்தநற் குறத்தியைக்
கதித்தநற் றிருப்புயத் தணைவோனே

செருத்தெறுத் தெதிர்த்தமுப் புரத்துரத் தரக்கரைச்
சிரித்தெரித் தசித்தர்பொற் குமரேசா

சிறப்புறப் பிரிக்கறத் திறத்தமிழ்க் குயர்த்திரைச்
சிறப்புடைத் திருத்தணிப் பெருமாளே. (௨௫)

தனத்தன தானந் தனத்தன தானந்
தனத்தன தானந் தனதான.

253. எனக்கென யாவும் படைத்திட நாளும்
இளைப்பொடு காலந் தனிலேயா

எடுத்திடு காயந் தனைக்கொடு மாயும்
இலச்சையி லாதென் பவமாற

உனைப்பல நாளுந் திருப்புக ழாலும்
உரைத்திடு வார்தங் குழுமேவி

உணர்த்திய போதந் தனைப்பிரி யாதொண்
பொலச்சர ணானுந் தொழுவேனோ

வினைத்திற மோடன் றெதிர்த்திடும் வீரன்
விழக்கொடு வேல்கொண் டவனீயே

---

*முக்குறத்தொடைப்புலனாலும்-முக்குற்றத்தோடு ஐம்புலனாலும்.

*விளப்பென †வேழொன் றிடக்கய னரும்
விருப்புற வேதம் புகல்வோனே
சினத்தொடு சூரன் தனைப்பொரு போரின்
சிரத்தினை ‡மாறும் முருகோனே
தினைப்புன மேவுங் குறக்கொடி யோடுந்
திருத்தணி மேவும் பெருமாளே. (உச)

254. பெருக்கவு பாயங் கருத்துடை யோர்தம்
ப்ரபுத்தன பாரங் கனிலேசம்
ப்ரமத்துட னாளும் ப்ரமித்திருள் கூரும்
ப்ரியக்கட லூடுந் தணியாத
கருக்கட லூடுங் கதற்றும நேகங்
கலைக்கடலூடுஞ் சுழலாதே
கடப்பலர் சேர்கிண் கிணிப்ரபை வீசுங்
கழற்புணை நீதந் தருள்வாயே
தருக்கிய வேதன் சிறைப்பட நாளுஞ்
சதுர்த்தச லோகங் களும்வாழச்
சமுத்திர மேழுங் குலக்கிரி யேழுஞ்
சளப்பட மாவுந் தனிவீழத்
திருக்கையில் வேலொன் றெடுத்தம ராடுஞ்
செருக்குமு யூரந் தனில்வாழ்வே
சிறப்பொடு ஞானம் தமிழ்த்ரய நீடும்
திருத்தணி மேவும் பெருமாளே. (உரு)

255. மருக்குல மேவும் குழற்கனி வாய்வெண்
மதிப்பிள வாகும் நுதலார்தம்
மயக்கினி லேநண் புறப்படு வேனுன்
மலர்க்கழல் பாடுந் திறம்நாடாத்

*விளப்பென - விளம்பென. †வெழொன்றிடக்கயன் எண்கண்ணன், பிரமன். ‡மாறும்-மாற்றும் தன்வினை பிறவினைப்பொருளில் வந்தது.

தருக்கனு தாரந் துணுக்கிலி லோபன்
சமத்தறி யாவன் பிலிமுகன்
கலத்தினி லேவந் துறப்பணி யாதன்
தனக்கினி யார்தஞ் சபைதாராய்
குருக்குல ராஜன் தனக்கொரு தூதன்
குறட்பல மாயன் நவநீதம்
குறித்தயில் நேயன் திருப்பயில் மார்பன்
குணத்ரய நாதன் மருகோனே
திருக்குள நாளும் பலத்திசை மூளுஞ்
சிறப்புத ருவெண் டிசையோடும்
திரைக்கடல் சூழும் புவிக்குயி ராகுந்
திருத்தணி மேவும் பெருமாளே. (௨௫)

---

256. வினைக்கின மாகுந் தனத்தினர் வேளம்
பினுக்கெதி ராகும் விழிமாதர்
மிகப்பல மாயந் தனிற்புகு தா*வெஞ்
சமத்திடை போய்வெந் துயர்மூழ்கிக்
கனத்தவி சாரம் பிறப்படி தோயுங்
கருக்குழி தோறுங் கவிழாதே
கலைப்புல வோர்பண் படைத்திட ஓதுங்
கழற்புக ழோதுங் கலைதாராய்
புனத்திடை போய்வெஞ் சிலைக்குற வோர்வஞ்
சியைப்புணர் வாகம் புயவேளே
பொருப்பிரு கூறும் படக்கடல் தானும்
பொருக்கெழ வானும் புகைமூளச்
சினத்தொடு சூரன் கனத்திணி மார்பந்
திறக்கம ராடுந் திறல்வேலா
திருப்புக ழோதுங் கருத்தினர் சேருந்
திருத்தணி மேவும் பெருமாளே. (௨௭)

---

*வெஞ்சமம் - வெம்மையாகிய போர்.

தனத்தன தனத்தந் தனத்தன தனத்தந்
தனத்தன தனத்தந் தனதான.

257. கரிக்குழல் விரித்தும் புறக்கயல் விழித்துங்
கரிக்குவ டிணைக்குந் தனபாரக்
கரத்திடு வளைச்சங் கிலிச்சர மொழித்துங்
கலைத்துகில் மினுக்கும் பணிவாரைத்
தரித்துள மழிக்கும் * கவட்டர்க ளிணக்கந்
தவிர்த்துன துசித்தங் களிகூரத்
தவக்கடல் குளித்திங் குனக்கடி மையுற்றுன்
தலத்தினி லிருக்கும் படிபாராய்
புரத்தையு மெரித்தங் கயத்தையு முரித்தோன்
†பொடிப்பணி யெனப்பன் குருநாதா
புயப்பணி கடப்பந் தொடைச்சிக ரமுற்றின்
புகழ்ச்சிய முகத்திண் புலவோனே
திரட்பரி கரிக்கும் பொடிப்பட வுணர்க்குந்
தெறிப்புற விடுக்குங் கதிர்வேலா
சிறப்பொடு குறப்பெண் களிக்கும்வி சயத்தென்
திருத்தணி இருக்கும் பெருமாளே. (௨அ)

---

258. சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்கும்
செகுத்தவ ருயிர்க்குஞ் சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் றறிவோம்யாம்
நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும்
நிசிக்கரு வறுக்கும் பிறவாமல்
நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்
நிறைப்புக ழுரைக்குஞ் செயல்தாராய்

---

*கவட்டர்கள் - வஞ்சிகள். †பொடி பணி என் அப்பன் எனப் பிரித்து, திருநீற்றினையும் பாம்பினையும் அணிந்த என் ஐயன் எனக்கொள்க.

தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
 தகுத்தகு தகுத்தந் — தனபேரி
தடுட்டுடு டுடுட்டுண் டௌத்துடி முழுக்கும்
 தளத்துட னடக்கும் — கொடுசூரர்
சினத்தையு முடற்*சங் கரித்தம லைமுற்றுஞ்
 சிரித்தெரி கொளுத்துங் — கதிர்வேலா
தினைக்கிரி குறப்பெண் தனத்தொடு சுகித்†தொண்
 திருத்தணியிருக்கும் — பெருமாளே. (உ௯)

தத்தனத் தனன தத்தனத் தனன
தத்தனத் தனன — தனதான.

259. தொக்கறுக் குடில சுத்தமேற் றசுக
 துக்கமாற் கடமு — மலமாயை
துற்றகாற் பதலை சொற்படாக் குதலை
 துப்பிலாப் பலச — யநூலைக்
கைக்கொளாக் கதறு கைக்கொளாக் கையவு
 லப்புலாற் றசைகு — ருதியாலே
கட்டுகூட் டுருவ ருப்புவேட் டுழல
 சட்டவாக் கழிவ — தொருநாளே
அக்கராப் பொடியின் மெய்க்கிடாக் குறவர்
 அர்ச்சியாய்த் தொழுமு — திவனாய
அப்பபோர்ப் பணிரு ‡வெற்பபூத் தணியல்
 §வெற்பபார்ப் பதிர — திருமாரா
இக்கிறுற் குளம்வெ துப்பநோக் குறுத
 வத்திஞேர்க் குதவும் — இளையோனே
‖எத்திடார்க் கரிய முத்தபாத் தமிழ்கொ
 ¶டெத்திஞேர்க் கெளிய — பெருமாளே. (௨௫)

---

*சங்கரித்து அம்மலை முற்றும் எனப் பிரிக்க. † ஒண்-பொருந்திய. ‡வெற்ப-மலைபோன்றபுயங்களுடையவனே §வெற்பமலையிலிருப்பவனே ‖எத்திடார்க்கு-ஏத்திடார்க்கு ¶எத்திஞேர்க்கு-ஏத்தினேர்க்கு.

260. வட்டவாட் டனமனைச்செபாற் குதலை
மக்கள்தாய்க் கிழவி பதிநாடு
வைத்ததோட் டமனை அத்தமீட் டுபொருள்
மற்றகூட்ட மதி வயலாக
முட்டவோட் டமிக வெட்டுமோட் டெருமை
முட்டர்பூட் டியெனை அழையாமுன்
முத்திவீட் டணுக முத்தராக் குசரு
திக்குராக் கொளிரு கழல்தாராய்
பட்டநாற் பெரும ருப்பினாற் கரவி
பத்தின்வாட் பிடியின் மணவாளா
பச்சைவேய்ப் *பணவை கொச்சைவேட் டுவர்ப
திச்சிதோட் புணர்த ணியில்வேளா
எட்டுநாற் கர†வொ ருத்தல்மாத் திகிரி
எட்டுமாக் குலைய எறிவேலா
எத்திடார்க் கரிய முத்தபாத் தமிழ்கொ
டெத்தினார்க் கெளிய பெருமாளே. (௩௧)

தனத்த தத்தன தனதன தனதன
தனத்த தத்தன தனதன தனதன
தனத்த தத்தன தனதன தனதன தனதான.

261. ‡சினத்தி லத்தினை சிறுமண லளவுடல்
செறித்த தெத்தனை சிலைகட லினிலுயிர்
செனித்த தெத்தனை திரள்கய லெலாபல வறுபோதா
சென்மித்த தெத்தனை மலைசுனை உலகிடை
செழித்த தெத்தனை சிறுதன மயல்கொடு
செடத்தி லெத்தனை நமனுயிர் பறிகொள்வ தளவேதோ
மனத்தி லெத்தனை நினைகவ டுகள்குடி
கெடுத்த தெத்தனை மிருகம தெனவுயிர்
வதைத்த தெத்தனை அளவிலை விதிகரம் ஒழியாமல்

---

*பணவை-பரண். †ஒருத்தல்-யானை. ‡சினதிலம் தினை-சிறியஎள்ளு, தினை.

வருத்த தெத்தனை மசகனை முருடனை
மடைக்கு லத்தனை மதியழி விரகனை
மலர்ப் பதத்தினி லுருகவு மினியருள் புரிவாயே

தனத்த தத்தன தனதன தனதன
திமித்தி மித்திமி திமிதிமி திமிதிமி
தகுத்த தத்தகு தகுதகு தகுதகு தகுதிதோ
தரித்த ரித்தரி தரிரிரி ரிரிரிரி
தடுட்டு டுட்டுடு டடுடுடு டுடுடு
தமித்த மத்தள தமருக விருதொலி கடல்போலச்

சிலர்த்த மார்க்கள மிசைதிகழ் குருநிய
திமிழ்த்தி டக்கரி அசுரர்கள் பரிசிலை
தெறித்த டக்கழு நரிதின நிணமிசை பொரும்வேலா

செழிக்கு முத்தம சிவசர ணர்கள்தவ
முநிக்க ணத்தவர் மதுமலர் கொடுபணி
திருத்த ணிப்பதி மருவிய குறமகள் பெருமாளே. (௬௨)

---

262. தொடத்து வக்கிகள் அபகட நினைவிகள்
குருட்டு மட்டைகள் குமரிகள் கமரிகள்
சுதைச்சி றுக்கிகள் *குசலிக †ளிசலிகள் முழுமோசம்

துறுத்த மட்டைகள் அசடிகள் கசடிகள்
முழுப்பு ரட்டிகள் நழுவிகள் ‡மழுவிகள்
§துமித்த மித்திரர் விலைமுலை இனவலை புகுதாமல்

அடைத்¶த வர்க்கியல் சரசிகள் விரசிகள்
தரித்த வித்ரும நிறமென வரவுடன்
அழைத்து சக்கர கிரிவளை படிகொடு விளையாடி

---

* குசலிகள்-தந்திரவாதிகள். † இசலிகள்-பிணங்கிகள். ‡ மழுவிகள்-(தங்கள்சூது வெளியாகாமல்) மழுப்புவோர் § துமித்த மித்திரர் - நட்பு அற்றவர். ¶ அவர்க்கியல்.... விளையாடி-அப்பொதுமாதர்கட்குச் சமானமாக இயல்கின்ற சரசிகளும் விரசிகளும் ஆகிய அணிமாதி அஷ்டசித்திகளும் பவளம் போலும் சிவந்த நிறத்துடன் வரும்படி அழைப்பித்து அவர்களோடு) சக்ரவாளகிரியாற் சூழப்பட்ட, இப்பூமியில் விளையாடச்செய்து,

* அவத்தை தத்துவ மழிபட †இருளறை
விலக்கு வித்தொரு சுடரொளி பாவகல்
அருட்பு கட்டியு னடியிணை அருளுவ தொருநாளே

படைத்த னைத்தையும் வினையுற நடனொடு
துடைத்த பத்தினி மரகத சொருபியோர்
பரத்தி னுச்சியி னடநவி லுமையருள் இளையோனே

பகைத்த ரக்கர்கள் யமனுல குறவமர்
தொடுத்த சக்கர வளைகர மழகியர்
படிக்க டத்தையும் வயிறடை நெடியவர் மருகோனே

திடுக்கி டக்கட லசுரர்கள் முறிபட
கொளுத்தி சக்கிரி பொடிபட சுடரயில்
திருத்தி விட்டொரு நொடியினில் வலம்வரு மயில்வீரா

தினைப்பு னத்திரு தனகிரி குமரிநல்
குறத்தி முத்தொடு சசிமக ளொடுபுகழ்
திருத்த ணிப்பதி மலைமிசை நிலைபெறு பெருமாளே ()

தனதன தான தனதன தான
தனதன தான தனதான.

263. இருமலு ரோக முயலகன் வாதம்
எரிகுண நாசி விடமேநீ

ரிழிவுவி டாத தலைவலி சோகை
எழு‡கள மாலை இவையோடே

பெருவயி றீளை எரிகுலை சூலை
பெருவலி வேறு முளநோய்கள்

பிறவிக டோறு மெனைநலி யாத
படியுன தாள்கள் அருள்வாயே

வருமொரு கோடி அசுரர்ப தாதி
மடியவ நேக இசைபாடி

---

*அவத்தை தத்துவமழிபட-ஜாக்கிராதி மலாவஸ்தைகளும், தத்துவச் சேட்டைகளும் ஒடுங்க. †இருளறை-ஆணவமலம். ‡களமாலை-கண்டமாலை.

வருமொரு கால வயிரவ ராட
வடிசுடர் வேலை விடுவோனே
தருநிழல் மீதி லுறைமுகி லூர்தி
தருதிரு மாதின் மணவாளா
சலமிடை பூமி நடுவினில் வீறு
தணிமலை மேவு பெருமாளே. (ருச)

தனதன தானந் தனதன தானந்
தனதன தானந் தனதான.

264. கலைமட வார்தஞ் *சிலையத னாலுங்
கனவளை யாலுங் கரைமேலே
கருகிய காளம் பெருகிய தோயங்
கருதலை யாலுஞ் †சிலையாலும்
கொலைதரு காமன் பலகணை யாலுங்
கொடியிடை யாள்நின் றழியாதே
குரவணி நீடும் புயமணி நீபங்
குளிர்தொடை நீதந் தருள்வாயே
சிலைமகள் நாயன் கலைமகள் நாயன்
திருமகள் நாயன் தொழும்வேலா
தினைவன மானுங் ‡கநவன மானுஞ்
செறிவுடன் மேவுந் திருமார்பா
§தலமகள் மீ¶தெண் புலவரு லாவுந்
தணிகையில் வாழ்செங் கதிர்வேலா
தனியவர் கூறுந் தனிகெட நாளுந்
தனிமயி லேறும் பெருமாளே. (ருரு)

---

*சிலை - ஒலி. † சிலை ஆலும் - வில்லினிடத்து அசைகின்ற ‡ கந வனமான் - தெய்வானை, கநம்வனம் - பொன்மயமாகிய கற்பகவனம். § தலமகள் - பூமிதேவி. ¶ எண் புலவர் - மதிக்கப்படும் தேவர்கள்.

தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன தனதான.

265. அரகர சிவனரி அயனிவர் பரவிமுன்
அறுமுக சரவண பவனேயென்
றநுதின மொழிதர அசுரர்கள் கெடவயில்
அனலென எழுவிடு மதிவீரா
பரிபுர கமலம தடியிணை அடியவ
ருளமதி லுறவருள் முருகேசா
பகவதி வரைமகள் உமைதர வருகுக
பரமன திருசெவி களிகூர
உரைசெயு மொருமொழி பிரணவ முடிவதை
உரைதரு குருபர உயர்வாய
உலகம னலகில உயிர்களு மிமையவர்
அவர்களு முறுவர முநிவோரும்
பரவிமு னநுதின மனமகிழ் வுறவணி
பணிதிகழ் தணிகையில் உறைவோனே
பகர்தரு குறமகள் தருவமை வனிதையும்
இருபுடை உறவரு பெருமாளே. (௩௬)

தனத்தன தனத்தன தனத்தன தனத்தன
தனத்தன தனத்தன தனதான.

266. *இருப்பவல் திருப்புகழ் விருப்பொடு படிப்பவர்
இடுக்கினை அறுத்திடும் எனவோதும்
இசைத்தமிழ் †நடத்தமி ழெனத்துறை விருப்புடன்
இலக்கண இலக்கிய கவிநாலும்
தரிப்பவ ருரைப்பவர் நினைப்பவர் மிகச்சக
தலத்தினில் நவிற்றுதல் அறியாதே
தனத்தினில் முகத்தினில் மனத்தினி லுருக்கிடு
சமர்த்திகள் மயக்கினில் விழலாமோ

*இருப்பவல் - இரும்பாலாகிய அவல். † நடத்தமிழ் - நாடகத்தமிழ்.

கருப்புவில் வளைத்தணி மலர்க்கணை தொடுத்தியல்
களிப்புட னெளித்தெய்த மதவேளைக்
கருத்தினில் நினைத்தவ னெருப்பெழ நுதற்படு
கனற்கணி லெரித்தவர் கயிலாயப்
பொருப்பினி லிருப்பவர் பருப்பத வுமைக்கொரு
புறத்தினை யளித்தவர் தருசேயே
புயற்பொழில் வயற்பதி நயப்படு திருத்தணி
பொருப்பினில் விருப்புறு பெருமாளே. (௩௭)

தனன தான தானன தனன தான தானன
தனன தான தானன தனதான.

267. உடலி னூடு போய்மீளு முயிரி னூடு மாயாத
உணர்வி னூடு வானூடு முதுதீயுள்
உலவை யூடு நீரூடு புவியி னூடு வாதாடு
மொருவ ரோடு மேவாத தனிஞானச்
சுடரி னூடு நால்வேத முடியி னூடு மூடாடு
துரிய வாகு லாதீத சிவரூபம்
தொலைவி லாத பேராசை துரிச றாத வோர்பேதை
தொடுமு பாய மேதோசொல் அருள்வாயே
மடல றாத *வாரீச அடவி சாடி மாறான
வரிவ ரால்†குவால்சாய அமராடி
மதகு தாவி மீதோடி உழவ ரால டாதோடி
மடையை மோதி யாறூடு தடமாகக்
கடல்பு காம காமீனை முடுகி வாளை தான்மேவு
கமல வாவி மேல்வீழு மலர்வாவி
கடவுள் நீல மாறாத தணிகை காவ லாவீர
கருணைமேரு வேதேவர் பெருமாளே. (௩௮)

* வாரீசஅடவி-தாமரைக்குவியல். † குவால்-கூட்டம்.

தனன்தன தான தனனதன தான
தனனதன தான தனதான.

268. உடையவர்க ளேவ ரெவர்களென நாடி
உளமகிழ ஆசு கவிபாடி
உமதுபுகழ் மேரு கிரியளவு மான
தெனவுரமு மான மொழிபேசி
நடைபழகி மீள வறியவர்கள் நாளை
நடவுமென வாடி முகம்வேறாய்
நலியுமுன மேயுன் அருணவொளி வீசு
நளினவிரு பாதம் அருள்வாயே
விடைகொளுவு பாகர் விமலர்கிரி சூலர்
விகிர்தர்பர யோகர் நிலவோடே
விளவுசிறு பூளை நகுதலையொ டாறு
விடவரவு சூடும் அதிபாரச்
சடையிறைவர் காண உமைமகிழ ஞான
தளர் நடையி டாமுன் வருவோனே
*தவமலரு நீல மலர்சுனைய நாதி
தணிமலையு லாவு பெருமாளே. (௩௧)

தையதா னத்தனன தையதா னத்தனன
தையதா னத்தனன தனதான.

269. உய்யஞா னத்துநெறி கைவிடா தெப்பொழுது
முள்ளவே தத்துறைகொ டுணர்வோதி
உள்ளமோ கத்திருளை விள்ளமோ கப்பொருளை
உள்ளமோ கத்தருளி உறவாகி
வையமே ழுக்குநிலை செய்யுநீ திப்பழைய
வல்லமீ †துற்பலச யிலமேவும்
வள்ளியா நிற்புதிய வெள்ளில்தோய் முத்தமுறி
கிள்ளிவீ சிற்றுமலர் பணிவேனோ

* வ-மிருதி. † உற்பலசயிலம்-திருத்தணிகை.

பையரா வைப்புனைபு பையர்பா கத்தலைவி
துய்யவே ளிப்புகிர திருமாரா

பையமால் பற்றிவளர் சையமேல் வைக்குமுறு
*நெய்யனே சுற்றியகு றவர்கோவே

செய்யமால் வெற்புருவ வெய்யவேல் சுற்றிவிடு
கையமால் வைத்ததிரு மருகோனே

†தெய்வயா னைக்கிளைய வெள்ளையா னைத்தலைவ
தெய்வயா னைக்கினிய பெருமாளே. (௪0)

தனத்த தானன தத்தன தத்தன
தனத்த தானன தத்தன தத்தன
தனத்த தானன தத்தன தத்தன தனதான.

270. எலுப்பு நாடிக ளப்பொடி ரத்தமொ
டழுக்கு மூளைகள் மச்சொடு கொட்புழு
விருக்கும் வீடிதி லெத்தனை தத்துவ சதிகாரர்

இறப்பர் சூதக வர்ச்சுத ரப்பதி
உழப்பர் பூமித ரிப்பர்பி றப்புடன்
இருப்பர் வீடுகள் கட்டிய லட்டுறு சமுசாரம்

கெலிப்பர் மால்வலை பட்டுறு துட்டர்கள்
அழிப்பர் மாதவ முற்றுநி னைக்கிலர்
கெடுப்பர் யாரையு மித்திர குத்திரர் கொலைகாரர்

‡கிருத்தர் கோளகர் பெற்றுநி ரிக்கள
வரிப்பர் சூடக ரெத்தனை வெப்பிணி
கெலிக்கும் வீடதை நத்திடெ டுத்திவண் உழல்வேனோ

ஒலிப்பல் பேரிகை உக்ரவ மர்க்களம்
எதிர்த்த சூரரை வெட்டியி ருட்கிரி
உடைத்து வானவர் சித்தர்து தித்திட விடும்வேலா

---

* நெய்யனே-நேயனே † தெய்வயானை-விநாயகர் ‡ கிருத்தர்-செருக்கர்.

உலுத்த ராவண னைச்சிர மிற்றிட
 வளைத்து மாபலி யைச்சிறை வைத்தவன்
 *உலக்கை ராவி நடுக்கடல் விட்டவன் மருகோனே

வலிக்க வேதனை எற்றிந டித்தொரு
 செகத்தை ஈனுமெம் பச்சைநி றத்தியை
 மணத்த தாதைப ரப்ரம ருக்கருள் குருநாதா

வனத்தில் வாழுமை யிற்குல மொத்திடு
 குறத்தி யாரைம யக்கிய ணைத்துள
 மகிழ்ச்சி யோடுதி ருத்தணி பற்றிய பெருமாளே. (சக)

தனன தந்த னத்த தனன தந்த னத்த
தனன தந்த னத்த தனதான.

271. எனைய டைந்த குட்டம் விலைமி குந்த பித்த
 பெரிவ ழங்கு வெப்பு வலிபேசா

இகலி நின்ற லைக்கு முபல கன்கு லைப்பொ
 டிருமல் என்று ரைக்கும் இவையோடே

மனைகள் பெண்டிர் மக்கள் தமைநி னைந்து சுத்த
 மதிம யங்கி விட்டு மடியாதே

மருவி இன்றெ னக்கு மரக தஞ்சி றக்கு
 மயிலில் வந்து முத்தி தரவேணும்

நினைவ ணங்கு பத்த ரனைவ ருந்த ழைக்க
 நெறியில் நின்ற வெற்றி முனைவேலா

நிலைபெ றுந்தி ருத்த ணியில்வி ளங்கு சித்ர
 நெடிய குன்றில் நிற்கு முருகோனே

தினைவி ளங்க லுற்ற புனவி ளங்கு றத்தி
 செயல றிந்த ணைக்கு மணிமார்பா

திசைமு கன்தி கைக்க அசுர ரன்ற டைத்த
 சிறைதி றந்து விட்ட பெருமாளே. (சஉ)

*உலக்கைபோலும் பருத்த உருக்குத் துண்டத்தை அராவிப் பாணமாக்கி.

தான தத்தன தான தத்தன
தான தத்தன தான தத்தன
தான தத்தன தான தத்தன தந்ததான.

272. ஏது புத்தியை யாவெ னக்கினி
யாரை நத்திடு வேன வத்தினி
லேயி றத்தல்கொ லோவெ னக்குநி தந்தைதாயென்

றேயி ருக்கவு நானு மிப்படி
யேத வித்திட வோச கத்தவர்
ஏச லிற்பட வோந கைத்தவர் கண்கள்காணப்

பாதம் வைத்திடை யாத ரித்துன
தாளில் வைக்கநி யேம றந்திடல்
பார்ந கைக்குமை யாத கப்பன்முன் மைந்தனோடிப்

பால்மொ ழிக்குர லோல மிட்டிடில்
யாரெ டுப்பதெ னாவெ றுப்பொடு
பார்வி டுப்பர்க ளோவெ னக்கிது சிந்தியாதோ

ஓத முற்றெழு பால்கொ தித்தது
போல எட்டிகை நீச முட்டரை
ஓட வெட்டிய பாநு சத்திகை எங்கள்கோவே

ஓத மொய்ச்சடை ஆட உற்றமர்
மான்ம ழுக்கர மாட நற்கழல்
ஓசை பெற்றிட வேந டித்தவர் தந்தவாழ்வே

மாதி னைப்புன மீதி ருக்குமை
வாள்வி ழிக்குற மாதி னைத்திரு
மார்ப ணைத்தம யூர அற்புத கந்தவேளே

மாரன் வெற்றிகொள் பூமு டிக்குழ
லார்வி யப்புற நீடு மெய்த்தவர்
வாழ்தி ருத்தணி மாம லைப்பதி தம்பிரானே. (௪௩)

தான தத்தன தத்தன தத்தன
தான தத்தன தத்தன தத்தன
தான தத்தன தத்தன தத்தன தனதான.

273. ஓலை இட்டகு ழைச்சிகள் சித்திர
ரூப மொத்தநி றத்திகள் விற்கணை
யோடி ணைத்தவி ழிச்சிகள் சர்க்கரை அமுதோடே

ஊறி ஒத்தமொ ழிச்சிகள் புட்குர
லோடு வைத்துமி ழற்று மிடற்றிகள்
ஓசை பெற்றநு டிக்கொளி டைச்சிகள் மணம்வீசும்

மாலை இட்டக ழுத்திகள் முத்தணி
வார ழுத்துத னத்திகள் குத்திர
மால்வி ளைத்தும னத்தை அழித்திடு மடமாதர்

மார்ப சைத்தும ருட்டியி ருட்டறை
வாவெ னப்பொருள் பற்றிமு யக்கிடு
*மாத ருக்குவ ருத்தமி ருப்பது தணியாதோ

வேலை வற்றிட நற்கணை தொட்டலை
மீத டைத்துமு னைப்படை விட்டுற
வீற ரக்கன்மு டித்தலை பத்தையு மலைபோலே

மீத றுத்துநி லத்தில டித்துமெய்
வேத லட்சுமி யைச்சிறை விட்டருள்
வீர அச்சுத னுக்குந லற்புத மருகோனே

நீவி நிட்கள நிர்க்குணி நித்தில
வாரி முத்துந கைக்கொடி சித்திர
நீல ரத்தின மிட்டவ றக்கினி புதல்வோனே

நீற திட்டுநி னைப்பவர் புத்தியில்
நேச மெத்தவ ளித்தருள் சற்குரு
நீலமுற்றநி ருத்தணி வெற்புறை பெருமாளே. (௪௪)

---

* மாதருக்கு வசப்படு புத்திகள் தவிரேனோ என்றும் பாடம்.

தத்தன தனதன தத்தன தனதன
தத்தன தனதன தனதான.

274. கச்சணி இளமுலை முத்தணி பல்வகை
கைச்சரி ஒலிவர மயல்கூறிக்
கைப்பொருள் கவர்தரு மைப்பயில் விழியினர்
கட்செவி நிகர்குறி மடமாதர்
இச்சையி னுருகிய கச்சைய னறிவிலி
எச்சமி லொருபொருள் அறியேனுக்
கிப்புவி மிசைகமழ் பொற்பத மலரிணை
இப்பொழு தணுகவுன் அருள்தாராய்
கொச்சையர் மனையிலி டைச்சியர் தயிர்தனை
நச்சியெ திருடிய குறையாலே
குற்றுர லொடுபிணி நற்றிற வகையறி
கொற்ற*வு வணமிசை வருமாயன்
அச்†சுதை நிறைகடல் நச்சர வணைதுயில்
அச்சுதன் மகிழ்தரு மருகோனே
அப்பணி சடையரன் மெச்சிய தனிமலை
அப்பென அழகிய பெருமாளே. (சரு)

தனதத்த தத்தனத் தனதத்த தத்தனத்
தனதத்த தத்தனத் தனதான.

275. கவடுற்ற சித்தர்சட் சமயப்ர மத்தர்நற்
கடவுட்ப்ர திஷ்டைபற் பலவாகக்
கருதிப்பெ யர்க்குறித் துருவர்க்க மிட்டிடர்க்
கருவிற்பு கப்பகுத் தழல்வானேன்
‡சவடிக்§கி லச்சினைக் கிருகைச்ச ரிக்குமிக்
கசரப்ப ளிக்கெனப் பொருள்வீவார்
சகலத்து ||பொற்றைபட் டயல்பட்டு நிற்குநிற்
சரணப்ர சித்திசற் றுணராரோ

* உவணம்-கருடன். †சுதை-பால். ‡ சவடி-ஓர்வித ஆபரணம். §இலச்சினை-முத்திரைமோதிரம். || ஒற்றைபட்டு-ஏகபாவமாக வியாபித்து.

குவடெட்டு மட்டுநெட் டுவரிக்க ணத்தினைக்
குமுறக்க லக்கிவிக் ரமருகன்
குடலைப்பு யத்திலிட் டுடலைத்த றித்துருக்
துதிரத்தி னிற்குளித் தெழும்வேலா
சுவடுற்ற அற்புதக் *கவலைப்பு னத்தினிற்
றுயரற்ற டுத்துநிற் பவள்நாணத்
தொழுதெத்து முத்தபொற் புரிசைத் திருத்தணிச்
†சுருதித்த மிழ்க்கவிப் பெருமாளே. (௪௬)

தனத்த தத்தனத் தந்த தாத்தன தந்ததானை.

276. கனைத்த திர்க்குமிப் பொங்கு கார்க்கடல் ஒன்றினாலே
கறுத்த றச்சிவத் தங்கி வாய்த்தெழு திங்களாலே
தனிக்க ருப்புவிற் கொண்டு வீழ்த்தச ரங்களாலே
தகைத்தொ ருத்தியெய்த் திங்கு யாக்கைக சங்கலாமோ
தினைப்புனத் தினைப் பண்டு காத்தம டந்தைகேள்வா
திருத்த ணிப்பதிக் குன்றின் மேற்றிகழ் கந்தவேளே
பணைக்க ரக்கயத் தண்டர் போற்றிய மங்கைபாலா
படைத்த ளித்தழிக் குந்த்ரி மூர்த்திகள் தம்பிரானே. ()

தனன தானன தனதன தனதன
தனன தானன தனதன தனதன
தனன தானன தனதன தனதன தனதான.

277. கிரியுலாவிய முலைமிசை துகிலிடு
கபட நாடக விரகிக ளசடிகள்
கெடுவி யாதிக ளடைவுடை உடலினர் விரகாலே
க்ருபையி னொடு மணமிசை நழுவிகள்
முழுது நாறிக ளிதமொழி வசனிகள்
கிடையின் மேல்மன முருகியெ தழுவிகள் பொருளாலே.

* கவலை-செந்தினை. † சுருதித்தமிழ்-தமிழ் வேதமாகிய தேவாரம்.

பரிவி லாமயல் கொடுசமர் புரிபவர்
அதிக மாவொரு பொருள்தரு பவரொடு
பழைய பேரென இதமுற அணைபவர் விழியாலே
பகழி போல்விடு வினைகவர் திருடிகள்
தமையெ ணுவகை உறுகதி பெறும்வகை
பகர மாமயில் மிசைவர நினைவது மொருநாளே
அரிய ராதிபர் மலரய னிமையவர்
நிலைபெ றுதிடர் படவுடன் முடுகியெ
அசுரர் தூள்பட அயில்தொடு மறுமுக இளையோனே
அரிய கானக முறைகுற மகளிட
கணவ னுகிய அறிவுள விதரண
அமரர் நாயக சரவண பவதிறல் உடையோனே
தரும நீதியர் மறையுளர் பொறையுளர்
சரிவு றுநிலை பெறுதவ முடையவர்
தளர்வி லாமன முடையவ ரறிவினர் பராபரர்
சகல லோகமு முடையவர் நினைபவர்
பரவு தாமரை மலரடி உறவளர்
தணிகை மாமலை மணிமுடி அழகியல் பெருமாளே. (௬௪)

தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத் தனதான.

278. கிறிமொழிக் கிருதரைப் பொறிவழிச் செறிஞரைக்
கெடுபிறப் பறவிழிக் கிறபார்வைக்
கெடுமடக் குருடரைத் திருடரைச் சமயதர்க்
கிகள்தமைச் செறிதலுற் றறிவேதும்
அறிதலற் றயர்தலுற் றவிழ்தலற் றருகலுற்
றறவுநெக் கழிகருக் கடலூடே
அமிழ்தலற் றெழுதலுற் றுணர்தலுற் றுயர்தலுற்
றடியிணைக் கணுகிடப் பெறுவேனோ

கிறிமொழிக்கிருதர் - பொய்சொல்லும் தொழிலுடையோர்

பொறியுடைச் செழியன்வெப் பொழிதரப் பறிதலைப்
பொறியிலிச் சமணரத் தனைபேரும்

பொடிபடச் சிவமணப் பொடிபரப் பியதிருப்
புகலியிற் கவுணியப் புலவோனே

தறிவளைத் துறநகைப் பொறியெழப் புரமெரித்
தவர்திருப் புதல்வரற் சுனைமேவுந்

தனிமணக் குவளைநித் தமுமலர்த் தருதிருத்
தணியினிற் சரவணப் பெருமாளே. (௨௬௯)

தனனந் தனனத் தனனந் தனனத்
தனனந் தனனத் தனதான.

279. குயிலொன் றுமொழிக் குயினின் றலையக்
கொலையின் பமலர்க் கணையாலே

குளிருந் தவளக் குலசந் த்ரவொளிக்
கொடிகொங் கையின்முத் தனலாலே

புயல்வந் தெறியக் கடலின் றலறப்
பொருமங் கையர்ருக் கலராதே

புயமொன் றமிகத் தளர்கின் றதனிப்
புயம்வந் தணையக் கிடையாதோ

சயிலங் குலையத் தடமுந் தகரச்
சமனின் றலையப் பொரும்வேலா

தருமங் கைவனக் குறமங் கையர்மெய்த்
தனமொன் றுமணித் திருமார்பா

பயிலுங் ககனப் பிறைதண் பொழிலிற்
பணியுந் தணிகைப் பதிவாழ்வே

பரமன் பணியப் பொருளன் றருளிற்
பகர்செங் கழுநிப் பெருமாளே. (௨௭0)

* மொழி-மொழியை யுடையவள் † அலைய-அலைக்க ‡ உக்க அலரலே-தூற்றிய அலர் மொழியினாலே; இதில் அகரந்தொகுத்தல். § சமன்-யமன். || கழுநி-இது கழுநீர் என்பதன் மரூஉ.

தனன தனத்தன தனன தனத்தன
தனன தனத்தன தனன தனத்தன
தனன தனத்தன தனன தனத்தன தனதான.

280. குருவி எனப்பல கழுகு நரித்திரள்
அரிய வனத்திடை மிருக மெனப்புழு
குறவை எனக்கரி மாமு மெனத்திரி உறவாகா

குமரி கலித்துறை முழுகி மனத்துயர்
கொடுமை எனப்பிணி கலக மிடத்திரி
குலைய னெனப்புலை கலிய னெனப்பலர் நகையாமல்

மருவு புயத்திடை பணிக ளெனப்பல
கரிப ரிசுற்றமெய் கலைகள் தரித்தொரு
மதன சரக்கென ஒளிசெய் மலக்குட னதுதேடேன்

வரிய பதத்தினி னருவி இருப்பிடம்
அமையு மெனக்கிட முனது பதச்சரண்
மருவு திருப்புக ழருள எனக்கினி அருள்வாயே

விருது தனத்தன தனன தனத்தன
விதமி திமித்திமி திமித திமித்திமி
விகிர்த டடுட்டுடு ரிரிரி எனக்குகு வெகுதாளம்

வெருவ முகிழ்த்திசை உரகன் முடித்தலை
நெறுநெ றெனத்திசை அதிர அடைத்திட
மிகுதி கெடப்பொரு மசுரர் தெறித்திட விடும்வேலா

அரிய திரிப்புர மெரிய விழித்தவன்
அயனை முடித்தலை அரியு மழுக்கையன்
அகில மனைத்தையு முயிரு மளித்தவன் அருள்சேயே

அமண ருடற்கெட வசியி லழுத்திவிண்
அமரர் கொடுத்திடு மரிவை குறத்தியொ
டமரு திருத்தணி மலையில் நடித்தருள் பெருமாளே. ()

வசி - சமணர் தாங்களே ஏற்படுத்திக் கொண்ட கழுமரம்.

தனத்ததனத் தனத்ததனத்
தனத்ததனத் தனத்ததனத்
தனத்ததனத் தனத்ததனத் தனதான.

281. குலைத்துமயிர்க் கலைத்துவளைக்
கழுத்துமணித் தனத்தின்மிசைக்
குறித்தவிழிக் கயற்சுழலப் பிறைபோலக்

குளித்தநுதற் புரட்டிநகைத்
துருக்கிமயற் கொளுத்தியிணைக்
குழைச்செவியிற் றழைப்பமணத் தனபாரப்

பொலிப்புமதத் தெடுத்தகரிக்
குவட்டுமுலைப் பசப்புமிகப்
புனைத்ததுகிற் பிடித்தவிடைப் பொதுமாதர்

புயத்தில்வளைப் பிலுக்கில்நடைக்
குலுக்கிலறப் பசப்பிமயற்
புகட்டிவிடுத் தழிப்பவருக் குறவாமோ

தலத்தனுவைக் குனித்தொருமுப்
புரத்தைவிழக் கொளுத்திமழுத்
தரித்துவலிக் கரித்துகிலைப் பரமாகத்

தரித்துதவச் சுரர்க்குலமுற்
பிழைக்கமிடற் றடக்குவிடச்
சடைக்கடவுட் கினித்தபொருட் பகர்வோனே

சிலுத்தசுரர்க் கெலித்துமிகக்
கொளுத்திமறைத் துதிக்கவதிற்
செழிக்கவருட் கொடுத்தமணிக் கதிர்வேலா

தினைப்புனமிற் குறத்திமகட்
டனத்தின்மயற் குளித்துமகிழ்த்
திருத்தணியிற் றரித்தபுகழ்ப் பெருமாளே. (ருஉ)

பொலிப்பு - பொலிவு.

தாந்த தனத்தன தத்தன தத்தன
தாந்த தனத்தன தத்தன தத்தன
தாந்த தனத்தன தத்தன தத்தன தனதான.

282. கூந்த லவிழ்த்தமு டித்தும யக்கிகள்
பாய்ந்து விழிக்குழை இட்டும ருட்டிகள்
*கோப்பு படைத்தமொ ழிச்சொல்ப ரத்தையர் புயமீதே

கோங்கு படைத்தத னத்தைய ழுத்திகள்
வாஞ்சை உறத்தழு விச்†சிலு கிட்டவர்
‡கூன்பிறை ஒத்தந கக்குறி வைப்பவர் பலநாளும்

ஈந்த பொருட்பெற இச்சை உரைப்பவர்
ஆந்துணை அற்றழு கைக்குர லிட்டவர்
ஈங்கிசை §உற்றவ லக்குண மட்டைகள் பொருள்தீரில்

ஏங்கி இடைக்கடை யிற்றளி வைப்
பாங்க கலக்கரு ணைக்கழல் பெற்றிட
ஈந்திலை எப்படி நற்கதி புக்கிடல் அருள்வாயே

காந்தள் மலர்த்தொடை இட்டெதிர் விட்டொரு
||வேந்து குரக்கர ணத்தொடு மட்டிடு
காண்டிப அச்சுத னுத்தம சற்குணன் மருகோனே

$காங்கி சைமிக்கம றக்கொடி வெற்றியில்
வாங்கி யழுக்கனி சர்க்கரை மொக்கிய
கான்க னிமுற்கியல் கற்பக மைக்கரி இளையோனே

தேங்கி னைவித்தினை முற்றிட வெற்றிலை
வேங்கை மரத்தெழி லைக்கொடு நிற்பவ
தேன்சொலி யைப்புண ரப்புன முற்¶றுறை குவைவானந்

தீண்டு கழைத்திர ளேற்றது துற்றிடு
வேங்கை தனிற்குவ ளைச்சுனை சுற்றலர்
சேர்ந்த திருத்தணி கைப்பதி வெற்புறை பெருமாளே (௫௯)

---

*கோப்பு-சினக்குறிப்பு. †சிலுகு-துன்பம். ‡கூன்-வளைந்த §உற்றவலக்குணம்-உற்ற + அவலம் + குணம். ||வேந்துகுரக்கு-குரங்கரசாகிய வாலி. அரணம்-கவசம் $காங்கிசை-விருப்பம் ¶உறைகுவை-உறைபவனே.

தானு தனத்ததன தானு தனத்ததன
தானு தனத்ததன் தனதான.

283. கூர்வேல் பழித்தவிழி யாலே மருட்டியிரு
கோடா லழைத்துமலர் அணைமீதே

*கோபா விதழ்ப்பருக மார்போ டணைத்துவிழி
கோல்போல் சுழற்றியிடை உடைநாணக்

கார்நேர் குழற்சரிய வேவா யதட்டியிரு
காதோலை இற்றுவிழ விளையாடுங்

காமா மயக்கியர்க ளூடே களித்துநலி
காமா துரக்கலகம் ஒழியாதோ

†வீரா ணம்வெற்றிமுர சோடே தவிற்றிமிலை
வேதாக மத்தொலிகள் கடல்போல

வீறாய் முழக்கவரு சூரா ரிறக்கவிடும்
வேலா திருத்தணியில் உறைவோனே

‡மாரோ னிறக்கவிழி தாதா திருச்செவியில்
மாபோ தகத்தையருள் குருநாதா

மாலோ னளித்தவளி யார்மால் களிப்பவெகு
மாலோ டணைத்துமகிழ் பெருமாளே. (௩௪)

தனன தனனத் தனன தனனத்
தனன தனனத் தனதான.

284. சொரியு முகிலைப் பதும நிதியைச்
சுரபி தருவைச் சமமாகச்

சொலியு மனமெட் டனையு நெகிழ்விற்
§சுமட ரருகுற் றியல்வாணர்

தெரியு மருமைப் பழைய மொழியைத்
திருடி நெருடிக் கவிபாடித்

---

*கோபா-வில்லைப்போன்று வளைந்த அழகான †வீரணம் என்பது ஓர் வித வாத்தியம். ‡மாரோன்; மதன. §சுமடர்-அறிவிலாதவர்.

திரியு மருள்விட் *டுனது †குவளைச்
சிகரி பகரப் பெறுவேனோ

கரிய புருவச் சிலையும் வளையக்
கடையில் விடமெத் தியநீலக்

கடிய கணைபட் டுருவ வெருவிக்
கலைகள் பலபட் டனகானிற்

குரிய குமரிக் கபய மெனநெக்
குபய சரணத் தினில்வீழு

‡ உமையின் மகளைத் தழுவ மயலுற்
றுருகு முருகப் பெருமாளே. (௫௫)

தாத்தன தத்தன தானன தானன
தாத்தன தத்தன தானன தானன
தாத்தன தத்தன தானன தானன தனதான.

285. தாக்கம ருக்கொரு சாரையை வேறொரு
சாக்ஷிய றப்பசி யாறியை நீறிடு
சாஸ்த்ரவ ழிக்கதி தூரனை யோர்வி தவழுழ்கும்

தாற்பர்ய மற்றுழல் பாவியை நாவலர்
போற்பரி வுற்றுனை யேகரு தாதிகல்
சாற்றுத மிழ்க்குரை §ஞாளியை நாள்வரை தடுமாறிப்

போக்கிட மற்றவரு தாவன ஞானிகள்
போற்றுத லற்றது ரோகியை மாமருள்
பூத்தம லத்ரய பூரியை||நேரிய புலையேனைப்

போக்கிவி டக்கட னோநர கோகதி
போய்ப்பெறு கைக்கிலை யோகதி யானது
போர்ச்சட வஜ்ரவை வேல்மயி லாவருள் புரிவாயே

மூக்கறை மட்டைம காபல காரணி
சூர்ப்பந கைப்படு மூளியு தாசனி
மூர்க்கரு லத்திவி பீஷணர் சோதரி முழுமோடி

---

* 'உனது புகழைத் தினமு முரை' எனவும் பாடம். †குவளைச்சிகரி-திருத்தணி. ‡உமையின் மகள்-வள்ளி § ஞாளி-குக்கல். || நேரிய-ஒத்த.

மூத்தவ ரக்கனி ராவணை னேடியல்
போற்றிவி டக்கம லாலய சீதையை
மோட்டன்வளைத்தொருதேர்மிசையேகொடு முகிலேதோய்

மாக்கன சித்திர கோபுர நீள்படை
வீட்டிலி ருத்திய நாளவன் வேரற
மார்க்கமு டிக்கவி லாளிகள் நாயகன் மருகோனே

வாச்சிய மத்தள பேரிகை போல்மறை
வாழ்த்தம லர்க்கழு நீர்தரு நீள்சுனை
வாய்த்ததி ருத்தணி மாமலை மேவிய பெருமாளே. (௫௬)

தத்தா னத்தா தத்தா னத்தா
தத்தா தனனத் தனதான.

286. துப்பா ரப்பா டற்றீ மொய்க்கால்
சொற்பா வெளிமுக் குணமோகப்

துற்றா யப்பீ றற்றோ லிட்டே
சுற்றா மதனப் பிணிதோயும்

இப்பா வக்கா யத்தா சைப்பா
*டெற்றே உலகிற் பிறவாதே

†எத்தார் வித்தா ரத்தே கிட்டா
எட்டா அருளைத் தரவேணும்

தப்பா மற்பா டிச்சே விப்பார்
தத்தாம் வினையைக் களைவோனே

தற்கா ழிச்சூர் செற்றாய் மெய்ப்போ
தத்தாய் தணிகைத் தனிவேலா

அப்பா கைப்பா லைப்போற் சொற்கா
வற்பா வைதனத் தணைவோனே

அத்தா நித்தா முத்தா சித்தா
அப்பா குமரப் பெருமாளே. (௫௭)

---

* எற்றே - எத்தன்மைத்து † எத்தார் - ஏமாற்றுபவர்.

தனதான தனத்தன தான
தனதான தனத்தன தான
தனதான தனத்தன தான தனதான.

287. நிலையாத சமுத்திர மான
சமுசார துறைக்கணின் மூழ்கி
நிசமான தெனப்பல பேசி அதனூடே
நெடுநாளு முழைப்புள தாகிப்
பெரியோர்க ளிடைக்கா வாகி
நினைவால்நி னடித்தொழில் பேணித் துதியாமல்
தலையான உடற்பிணி ஊறிப்
பவநோயி லலைப்பல வேகிச்
சலமான பயித்திய மாகித் தடுமாறித்
தவியாது பிறப்பையு நாடி
அதன்வேரை அறுத்துனை ஓதித்
தலமீது பிழைத்திட வேநின் அருள்தாராய்
கலியாண சுபுத்திர னாகக்
குறமாது தனக்கு விநோதக்
கவினூறு புயத்திது ளாவி விளையாடிக்
களிகூரு முனைத்துணை தேடு
மடியேனு னருட்பெற வேவை
கடனாகு முனக்கரு ளான முருகோனே
பலகாலு முனைத்தொழு வோர்கள்
மறவாது திருப்புகழ் கூறிப்
படிமீது துதித்துடன் வாழ அருள்வேளே
பதியான திருத்தணி மேவு
சிவலோக மெனப்பரி வேறு
பவரோக வயித்திய நாத பெருமாளே. (௫அ)

தனத்த தத்ததனத் தனதான.

288. நினைத்த தெட்டனையில் தவறாமல்
நிலைத்த புத்திதனைப் பிரியாமல்

கனத்த தத்துவமுற் றழியாமல்
கதித்த நித்தியசித் தருள்வாயே
மனித்தர் பத்தர்தமக் கெளியோனே
மதித்த முத்தமிழிற் பெரியோனே
செனித்த புத்திரரிற் சிறியோனே
திருத்த ணிப்பதியிற் பெருமாளே. (ருகூ)

தனன தானனந் தனன தானனந்
தனன தானனந் தனதான.

289. பகலி ராவினுங் கருவி யாலனம்
பருகி ஆவிகொண் டுடல்பேணிப்
பழைய வேதமும் புதிய நூல்களும்
பலபு ராணமுஞ் சிலவோதி
அகல நீளமென் றளவு கூறரும்
பொருளி லேயமைந் தடைவோரை
அசடர் மூகரென் றவல மேமொழிந்
தறிவி லேனழிந் திடலாமோ
சகல லோகமும் புகல நாடொறுஞ்
சருகி லாதசெங் கழுநீரும்
தளவு நீபமும் புனையு மார்பதென்
தணிகை மேவுசெங் கதிர்வேலா
சிகர பூதரந் தகர நான்முகன்
சிறுகு வாசவன் சிறைமீளத்
திமிர சாகரங் கதற மாமருஞ்
சிதற வேல்விடும் பெருமாளே. (உ௱)

தனன தத்தன தத்தன தத்தன
தனன தத்தன தத்தன தத்தன
தனன தத்தன தத்தன தத்தன தனதான.

290. பழமை செப்பிய ழைத்தர மிக்குடன்
முறைமை சக்கிய ணைத்துந கக்குறி
படவ ழுத்துமு கத்தைமு கத்துற உறவாடிப்

பதறி எச்சிலை இட்டும ருத்திடு
விரவு குத்திர வித்தைகளி லேப்பவர்
பலவி தத்திலு மற்பரெ னச்சொலு   மடமாதர்

அழிதொ ழிற்குவி ழிப்பொடு நத்திய
அசட னைப்பழி உற்றவ வத்தனை
அடைவு கெட்டபு ரட்டனை *முட்டனை   அடியேனை

அகில சத்திய மெட்டுறு சித்திய
மெளிதெ னப்பெரு வெட்டவெ ளிப்படும்
அருணை பொற்பத முற்றிட வைப்பதும்   ஒருநாளே

குழிவி ழிப்பெரு நெட்டல கைத்திரள்
கரண மிட்டுந டித்தமி தப்படு
†குலிலி இட்டக ளத்திலெ திர்த்திடும்   ஒருசூரன்

குருதி கக்கிய திர்த்துவி ழப்பொரு
நிசிச ரப்படை பொட்டெழ விக்ரம
குலிச சத்தியை விட்டருள் கெர்ச்சித   மயில்வீரா

தழையு டுத்தகு றத்திப தத்துணை
வருடி வட்டமு கத்தில தக்குறி
தடவி வெற்றிக தித்தமு லைக்குவ   டதன்மீதே

‡தரள பொற்பணி கச்சுவி சித்திரு
குழைதி ருத்திய ருக்கிமி குத்திடு
தணிம லைச்சிக ரத்திடை உற்றருள்   பெருமாளே. (உக)

தனதன தத்தத் தனதன தத்தத்
தனதன தத்தத்   தனதான.

291. புருவநெ றித்துக் குறுவெயர் வுற்றுப்
புளகித வட்டத்   தனமாதர்
பொருவிழி யிற்பட் டவரொடு கட்டிப்
புரளும சட்டுப்   புலையேனைக்

* முட்டன் - முட்டாள். † குலிலி - வீராவேச ஒலி. ‡ 'சதிர்பெ றத் தழு விப்புணர் வித்தக முனிவர் சித்தர் கணத்தர் துதித்திடு தலைமை பெற் றருணைப்பதி யிற்றிகழ் பெருமாளே' என்றும் பாடம்.

கருவிழி உற்றுக் குருமொழி அற்றுக்
கதிதனை விட்டிட் டிடுதீய
கயவனை வெற்றிப் புகழ்நிகழ் பக்மக்
கழல்கள்து திக்கக் கருதாயோ
செருவசு ரப்பொய்க் குலமது கெட்டுத்
திரைகட லுட்கப் பொரும்வேலா
நினைவன முற்றுக் குறவர் மடப் * பைக்
கொடிதனை வெற்பைப் புணர்மார்பா
பெருகிய நித்தச் சிறுபறை †கொட்டிப்
‡பெரிகை முழக்கப் புவிமீதே
பிரபல சுத்தத் தனியமலை உற்றுப்
ப்ரியமிகு சொக்கப் பெருமாளே. (௩௨)

தானனத் தத்ததத்த தானனத் தத்ததத்த
தானனத் தத்ததத்த தனதான.

292. பூசலிட் டெச்சரத்தை நேர்கழித் தப்பொருத்த
போர்விடத் தைக்கெடுத்து வடிகூர்வாள்
போலமுட் டிக்குழைக்கு ளோடிவெட் டித்திளைத்த
போகமிக் குப்பரிக்கும் விழியார்மேல்
ஆசைவைத் தாக்கலக்க மோகமுற் றுத்துயர்க்கு
ளாகிமெத் தக்களைத்துள் அழியாமே
ஆரணத் தாக் § கணத்து ணண்மலர்ப் பொற்பதத்தை
யான்வழுத் திச்சுகிக்க அருள்வாயே
வாசமுற் றுத்தழைத்த சாளிணைப் பத்த || ரத்த
மாதர்கட் தச்சிறைக்குள் அழியாமே
வாழ்வுறப் புத்திரத்ன பேதையொக் கச்சிறக்கு
மாமயிற் பொற்கழுத்தில் வரும்வீரா

* பைக்கொடி-பைங்கொடி †கொட்டப் பெருகி யசத்தப்புவியோனே என்றும் பாடம். ‡ பெரிகை - பேரிகை § கணம் - கூட்டம். || அத்த மாதர்கள்-பொருள் பறிக்கும் பெண்டிர்.

வீசுமுத் துத்தெறிக்க ஓலைபுக் குற்றிருக்கும்
வீறுடைப் பொற்குறத்தி கணவோனே
வேலெடுத் துக்கரத்தில் * நீலவெற் பிற்றழைத்த
வேளெனச் சொற்கருத்தர் பெருமாளே. (௧௫)

தனனத் தந்ததனத் தனனத் தந்ததனத்
தனனத் தந்ததனத் தனதான.

293. † பொருவிக் கந்தொடரச் ‡ செருவிக் கன்றொடுமிப்
புதுமைப் புண்டரிகக் கணையாலே
புளகக் கொங்கையிடந் திளகக் § கொங்குதழுந்
பொழியத் தென்றலுலாக் குதலாலே
தெருவிற் பெண்கள்மிகக் கறுவிச் சண்டையிடத்
திரியத் திங்களுதிப் பதனாலே
செயலற் றிங்கணையிற் றுயிலற் றஞ்சியயர்த்
தெரிவைக் குன் || குரவைத் தரவேணும்
அருவிக் குன்றடையப் பரவிச் செந்தினைவித்
தருமைக் குன்றவருக் கெளியோனே
அசுரர்க் கங்கயல்பட் டமரர்க் கண்டமளித்
தயில்கைக் கொண்டநிறக் குமரேசா
தருவைக் கும்பதியிற் றிருவைச் சென்றணுகித்
தழுவிக் கொண்டபுயத் திருமார்பா
தரளச் சங்குவயற் றிரளிற் றங்குதிருத்
தணிகைச் செங்கழுநிப் பெருமாளே. (௧௬)

தத்த தத்த தத்த தத்த
தத்த தத்த தத்த தத்த
தத்த தத்த தத்த தத்த தனதான.

294. பொற்ப தத்தி னைத்து தித்து
நற்ப தத்தி லுற்ற பத்தர்
பொற்பு ரைத்து $ நெக்கு ருக்க அறியாதே

* நீலவெற்பு - திருத்தணிகை. † பொருவிக்கம் - வருத்தும் விக்கல். ‡ செரு இக்கன் - கரும்பு வில்லையுடைய மன்மதன். § கொங்கு-பூந்தாது. || குரவு - திருமணம். $ நெக்குருக்க - மனமானது நெகிழ்ந்துருக.

புத்த கப்பி தற்றை விட்டு
வித்த கத்து னைத்து திக்க
புத்தி யிற்க லக்க மற்று நினையாதே
முற்ப டத்த லத்து தித்து
பிற்ப டைத்த கிர்த்ய முற்றி
முற்க டைக்க வித்து நித்த முழல்வேனை
முட்ட விக்க டைப்பி றப்பி
னுட்கி டப்ப தைத்த விர்த்து
முத்தி சற்றெ னக்க ளிப்ப தொருநாளே
வெற்ப ளித்த தற்ப ரைக்கி
டப்பு றத்தை உற்ற ளித்த
வித்த கத்தர் பெற்ற கொற்ற மயில்வீரா
வித்தை தத்வ முத்த மிழ்ச்சொ
லத்த சத்தம் வித்த ரிக்கு
மெய்த்தி ருத்த ணிப்பொ ருப்பில் உறைவோனே
கற்ப கப்பு னக்கு றத்தி
கச்ச டர்த்த சித்ர முற்ற
கற்பு றத்தி ருத்த னத்தில் அணைவோனே
கைத்த ரக்கர் கொத்து கச்சி
னத்து *வஜ்ர னுக்க மைத்த
கைத்தொ ழுத்த நித்து விட்ட பெருமாளே. (௩௫)

தனதனத்தன தனதனத்தன
தனந்தந்தந் தனந்தா
தனதனத்தன தனதனத்தன
தனந்தந்தந் தனந்தா
தனதனத்தன தனதனத்தன
தனந்தந்தந் தனந்தா தனனதா தனனா.

295\. விலையிறுக்கவு முலைமருட்டவு
மணைந்துன் றுஞ் செழுந்தார்
புனைமுகிற்குழ றனையவிழ்க்கவும்
விடங்கஞ்சஞ் சாஞ்சேர்

* வஜ்ரன் - இந்திரன். † கைத்தொழு - விலங்கு.

விழிவெருட்டவு மொழிபுரட்டவு
நினைந்தொன்றுஞ் சிலம்பார் — அரியபூணுடனே

வெளியிலிறக்கவும் வலியமுட்டரை
எதிர்ந்தும்பின் தொடர்ந்தே
இலைசுணப்பொடி பிளவளித்திடு
திரும்பும்பண் பரன்றே
எனவுரைத்தவர் தமைவரப்பணி
உடன்கொண்டன் புடன்போய் — சயனபாயலிலே

கலைநெகிழ்க்கவு மயல்விளைக்கவும்
நயங்கொண்டங் கிருந்தே
அணுகியிட்டுள பொருள்பறித்தற
முனிந்துங்கண் சிவந்தே
கலகமிட்டென மிகநடித்தபின்
வருந்தொந்தங் கடந்தார் — புதியபேருடனே

கதைகள்செப்பவு மெனதுபுத்திகள்
மனங்கொன்றுந் துலங்கா
மனைதனிற்சிறு பொழுதிருக்கினும்
நினைந்துங்கொண் டிருந்தே
கடிமலர்ப்பத மனுகுதற்கறி
விலன்பங்கன் பெரும்பா — தகனைநீயருள்வாய்

சிலைகணைக்கொடு மிகநடத்தெவ
தனந்தந்தந் தனந்தா
திரிபுரத்தெரி புகநகைத்தருள்
சிவன்பண்டங் கிருந்தே
மலர்வனப்பிர மனைநடுத்தலை
அரிந்துங்கொண் டிருந்தோன் — அருளுமாமுருகா

செருவிடத்தலை களையுறுக்கிய
தினந்தொந்தொந் தினந்தோ
மெனவுடுக்கைகள் மணிகளப்பறை
டகுண்டங்குண் டகுண்டா
டிகுகுடிக்குகு டிகுகுடிக்குகு
டிகுண்டிங்குண் டிகுண்டீ — எனவிராவணனீள்

மலையெனத்திகழ் முடிகள்பத்தையு
 *மிரண்டஞ்சொன் பதொன்றேய்
 பணைபுயத்தையு மொருவகைப்பட
 வெகுண்டம்பொன் றெறிந்தோன்
 †மகனன்மைத்துன னசுரரைக்குடல்
 குலைந்தங்கம் பிளந்தே மயிலின்மேல்வருவாய்

வயல்முதுக்கய லினமதர்த்தெழு
 வரம்பின்கண் புரண்டே
 பெருகடத்திடை செலவுநித்திலம்
 நிறைந்தெங்குஞ் சிறந்தே
 வரிசைபெற்றுயர் தணிமலைப்பதி
 புரந்தென்பங் கிருந்தாய் இளையவாபெருமாளே. (௨௯௫)

தான தத்தன தானன தானன
தான தத்தன தானன தானன
தான தத்தன தானன தானன தனதான.

296. ஓதி வைத்தவர் கூலிகொ டாதவர்
 மாத வர்க்கதி பாதக மானவர்
 பூசை யிற்கன லாயெரி காளையர் மறையோர்கள்
ஊர்த லக்கிட ரேசெய்வ ரேழையர்
 ஆர்த னக்குமு தாசின மானவர்
 ஓது முத்தமி ழீதலை நாடிலர் இரவோருக்
கேது மித்தனை தானமி டாதவர்
 பூத லத்தினி லோபம தானவர்
 ஏதி னிற்சிவ ஞானியை மோனியை இகழ்வோரும்
ஏக சித்தறி ஞானமி லாதவர்
 யோக மற்றிடு போகிக மீறினர்
 ஈன ரித்தனை பேர்களு மேழ்நர குழல்வாரே
தாத தத்தத தாதத தாதத
 தூது துத்துது தூதுது தூதுது
 சாச சச்சச சாசச சாசச சசசாச

* இரண்டஞ்சொன்பதொன்றேய் இருபது புயங்கள். †மகன்-மன்மதன்.

டாட டட்டட டாடட டாடட
டேடு டெட்டுடு டேடுடு டேடுடு
டூடு டுட்டுடு டூடுடு டூடுடு டுடுடூடு
தீதி தித்திதி தீதிதி தீதிதி
தோதி குத்திகு தோதிகு தோதிகு
சேகு செக்குகு சேகுகு சேகுகு செகுசேகு
சேயெனப்பல ராடிட மாகலை
ஆயு முத்தமர் கூறிடும் வாசகர்
சேர் திருத்தணி மாமலை மேவிய பெருமாளே. (௩௬)

தனதனத்தன தனதனத்தன தனதனத்தன தனதான.

297. மலைமுலைச்சியர் கயல்விழிச்சியர் மதிமுகத்தியர் அழகான
மயில்நடைச்சியர் குயில்மொழிச்சியர் மனதுருக்கிகள் அணைமீதே
கலைநெகிழ்த்தியெ உறவணைத்திடு கலவியிற்றுவள் பிணிதீராக்
கசடனைக்குண அசடனைப்புகல் கதியில்வைப்பதும் ஒருநாளே
குலகிரிக்குல முருவவிட்டமர் குலவுசத்தி முனைவேலா
குறவர்பெற்றிடு சிறுமியைப்புணர் குமரசற்குண மயல்வீரா
தலமதிற்புக லமரருக்கிடர் தனையகற்றிய அருளாளா
தருநிரைத்தெழு பொழில்மிகுத்திடு தணிமலைக்குயர் பெருமாளே.

தனத்த தனத்தன தனதன தனதன
தனத்த தனத்தன தனதன தனதன
தனத்த தனத்தன தனதன தனதன தனதான.

298. முகத்தை மினுக்கிக ளசடிகள் கபடிகள்
விழித்து மருட்டிகள் கெருவிகள் திருடிகள்
மொழிக்குள் மயக்கிகள் வகைதனில் நகைதனில் விதமாக
முழித்து மயற்கொளு மறிவிலி நெறியிலி
புழுக்கு டலைப்பொரு ளெனமிக எணியவர்
முயக்க மடுத்துழி தருமடி யவனிடர் ஒழிவாக
மிகுத்த முகைப்பெறு மறுமுக சரவண
புயத்தி ளகிக்கமழ் நறைமலர் தொடைமிக
விசைக்கொ டலைப்பெறு மரகத கலபியும் வடிவேலும்

வெளிப்ப டவுற்றினி இரவொடு பகலற
விருப்பொ டுனைப்புக ழுமுறியல் கவிசொல
விதித்த னெழுத்தினை தரவருமொருபொரு ளருளாயே

புதைத்த முலைக்கொடு திரிபுர மெரிபட
நகைத்த வருக்கிட முறைபவள் அலைமகள்
பொருப்பி லிமக்கிரி பதிபெறு மிமையவள் அபிராமி

†பொதுற்று திமித்திமி நடமிடு பகிரதி
எழுத்த றிருக்கிரி பகவதி கவுரிகை
பொருட்ப யனுக்குரை எனுநிலை சமைபவள் அமுதாகச்

செகத்தை அளப்பவர் நெடியவர் ‡கடையவள்
அறத்தை வளர்த்திடு பரிவை குலவதி
திறத்த மிழைத்தரு பழையவ ளருளிய சிறியோனே

செருக்கு மரக்கர்கள் பொடிபட வடிவுள
காத்தி லயிற்கொடு பொருதிமை யவர்பணி
திருத்த ணிகைப்பதி தனில்மயில் நடவிய பெருமாளே.

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன தனதான.

299. முகிலு மிரவியு முழுகதிர் தாளமு
முடுகு சிலைகொடு கணைவிடு மதனனு
முடிய வொருபொரு ளுதவிய புதல்வனும் எனநாளு

முதிய §கனனென தெய்வதரு நிகரென
முதலை படுவினி ||லதவிய புயலென
முகமு மறுமுக முடையவ னிவனென வறியோரைச்

சகல பதவியு முடையவ ரிவரென
வலிய சுறுவல விஜயவ னிவனென
தபனன் வலம்வரு கிரிதனை நிகரென இசைபாடித்

இனைதர-மெலிய. †பொது உற்று. பொது-அம்பலம். ‡கடையவள்-தங்கை. §கனன்-கர்ணன். ||அதவிய-சம்மாரஞ்செய்

*சயில பகலவ ரிடைதொறும் நடைசெயும்
இரவு தவிரவெ இருபத மடையவெ
†சவித வடியவர் தவமறில் வரவருள் புரிவாயே

அகில புவனமு மடைவினி லுலவிய
இமய கிரிமயில் குலவரை தருமென
அதிர வருபுர நொடியினி லெரிசெய்த அபிராமி

அமரு மிடமென வெனுமொரு வடிவுடை
யவ‡னி லுரையவன் முதுதமி ழுடையவன்
அரியொ டயனுல கரியவ னடனவில் சிவன்வாழ்வே

தகிரி திசிசரர் தடமுடி பொடிபட
வலைக ளெறிகடல் சுவறிட களமிசை
திரடு குறடுகள் புரள்வெகு குருதிகள் பெருகாருச்

சிகர கிரிநெரி படவலி கொடுபொரு
திமிர தினகர குருபர இளமையில்
சிவணி வருமொரு தணிகையில் நிலநிகழ் பெருமாளே.

தனத்த தனதன தனத்த தனதன
தனத்த தனதன தனதான.

300\. முடித்த குழலினர் வடித்த மொழியினர்
முகத்தி லிலகிய விழியாலும்
முலைக்கி ரிகள்மிசை அசைத்த துகிலினும்
இளைத்த இடையினு மயலாகிப்
படுத்த அணைதனி லணைந்து அவரொடு
படிக்கு ளநுதினம் உழலாதே
பருத்த மயில்மிசை நினைந்த பொழுதுன
பதத்து மலரிணை அருள்வாயே
துடித்தொர் தசமுகன் முடித்தலைகள் விழ
எடுத்த சரம்விடு ரகுராமன்

*சயில பகலவர் - கற்பினவை ஒத்தவர். † சவித-இதத்தொடு கூடிய ‡இல் உரையவன் - உரையிறந்தவன், வாக்குக் கெட்டாதவன்.

துகைத்தி உலகையொ ரடிக்கு ளளவிடு
  துலக்க அரிதிரு மருகோனே

தடைத்து ஞறையகல் வயற்கு ளெதிர்படு
  தழைத்த கதலிகள் அவைசாயத்

தருக்கு மெழினுறு திருத்த ணிகைமிசை,
  தழைத்த சரவண பெருமாளே. (௭௫)

தத்தத் தனத்ததன தத்தத் தனத்ததன
தத்தத் தனத்த தனதான.

301. முத்துத் தெறிக்கவள ரிக்குச் சிலைக்கைமதன்
  முட்டத் தொடுத்த மலராலே

முத்தத் திருச்சலதி முற்றத் *துதித்தியொளி
  முற்பட் டெறிக்கு நிலவாலே

எத்தத் தையர்க்குமிக மிக்குப் பெருக்கமணி
  இப்பொற் கொடிச்சி தளராதே

எத்திக் குமுற்றபுகழ் வெற்றித் திருத்தணியில்
  இற்றைத் தினத்தில் வரவேணும்

மெத்தச் சினத்துவட திக்குக் குலச்சிகர
  வெற்பைத் தொளைத்த கதிர்வேலா

மெச்சிக் குறத்திதன மிச்சித் தணைத்தருகு
  மிக்குப் பணைத்த மணிமார்பா

மத்தப் ரமத்தரணி †யத்தச் சடைப்பரமர்
  சித்தத்தில் வைத்த குருநாதா

வட்டத் திரைக்கடலில் மட்டித் தெதிர்த்தவரை
  வெட்டித் துணித்த பெருமாளே. (௭௬)

* உதித்தி - உதி, தீ. உதி - உலைத்துருத்தி †மத்தம் - ஊமத்தம்.

தனதனன தனதந்த தனதனன தனதந்த
தனதனன தனதந்த தனதான.

302, முலைபுளக மெழவங்கை மருவுசரி வளைகொஞ்ச
முகிலளக மகிழ்பொங்க அமுதான
மொழிபதற அருமந்த விழிகுவிய மதிகொண்ட
முகம்வெயர்வு பெறமன்றல் அணையூடே
கலைநெகிழ வளர்வஞ்சி இடைதுவள உடலொன்று
படவுருகி இதயங்கள் ப்ரியமோகமுற
கலவிகளை அழிபின்ப அலையிலலை படுகின்ற
கவலைகெட நினதன்பு பெறுவேனோ
அலையெறியு மெழில்சண்ட உததிவயி றழல்மண்ட
அதிரவெடி படவண்டம் இமையோர்கள்
அபயமென நடுநின்ற அசுரர்பட அடியுண்டு
அவர்கள்முனை கெடநின்று பொரும்வேலா
தலைமதிய நதிதும்பை இளவறுகு கமழ்கொன்றை
சடைமுடியி லணிகின்ற பெருமானார்
தருகுமர *விடவைந்து தலையரவர் தொழுகின்ற
தணிமலையி லுறைகின்ற பெருமாளே. (எரு)

தந்தந் தனதன தந்தந் தனதன
தந்தந் தனதன தனதான.

303. வங்கம் பெறுகட லெங்கும் பொருதிரை
வந்துந் தியதிரு மதனாலே
வஞ்சம் பெறுதிட நெஞ்சந் தழலுற
†வஞ்சம் பதும்விடு மதனாலே
பங்கம் படுமென தங்கந் தனிதுதி
பண்பொன் றியவொரு கொடியான
பஞ்சொன் றியபயில் நெஞ்சொன் றிடுமுறல்
பொன்றுந் தனிமையை நினையாயோ

*விடஐந்து தலைஅரவர் - ஆதிசேடன் †அஞ்சம் பதும் - அஞ்சு அம்பு அதும்.

தெங்கந் திரளுட னெங்குங் கதலிகள்
சென்றொன் றியபொழில் அதனூடே
தெந்தெந் தெனதென என்றண் டறவளி
நின்றுந் திகழ்வொடு மயிலாடப்
பொங்குஞ் சுனைகளி லெங்குங் குவளைக
ளென்றும் புகழ்பெற மலரீனும்
பொன்றென் றணிகையில் நின்றங் கெழுபுவி
என்றுஞ் செயவல பெருமாளே. (௯௩)

தானத்தன தானன தந்தன
தானத்தன தானன தந்தன
தானத்தன தானன தந்தன தனதான.

304, வாருற்றெழு பூண்முலை வஞ்சியர்
காருற்றெழு நீள்குழல் மஞ்சியர்
வாலக்குயில் போல்மொழி கொஞ்சியர் தெருமீதே
மாணுற்றெதிர் மோகன விஞ்சையர்
சேலுற்றெழு நேர்விழி விஞ்சியர்
வாகக்குழை யாமப மஞ்சியர், மயலாலே
சீருற்றெழு ஞானமு டன்கல்வி
நேரற்றவர் மால்கொடு மங்கியெ
சேருற்றறி வானது ழிந்துயிர் இழவாமுன்
சேவற்கொடி யோடுசி கண்டியின்
மீதுற்றறி ஞோர்புகழ் பொங்கிய
தேசக்கதிர் கோடியெ னும்படும் அருள்வாயே
போருற்றிடு சூர்சி ரங்களை
வீரத்தொடு பாரில ரிந்தெழு
*பூதக்கொடி சோரிய ருந்திட விடும்வேலா
பூதக்குலை பேயிழ மெய்கயல்
தாவக்குலை வாழைக ளுஞ்செறி
போகச்செநெ லேயுதி ருஞ்செய்கள் அலைமோதி

*பூதக்கொடி-பூதங்களும் காக்கைகளும். கொடி-காக்கை

சாரற்கிரி தோறுமெ ழும்பொழில்
தூரத்தொழு வார்வினை சிந்திடு
*தாதுற்றெழு கோபுர மண்டபம் அவைகளும்

கார்மெத்திய தோரண மென்தெரு
தேர் சுற்றிய வார்பதி அண்டர்கள்
தாமெச்சிய நீள்தணி யம்பதி பெருமாளே.(எஎ)

தத்ததன தத்ததன தத்ததன தத்ததன
தத்ததன தத்த தனதான.

305. வெற்றிசெய உற்றகழை விற்குதைவ ளைத்துமதன்
விட்டகணை பட்ட விசையாலே

வெட்டவெளி யிற்குமுறி இட்ட†பணை யிற்கனல்வி
ரித்தொளிப ரப்பு மதியாலே

பற்றிவகை கற்றபல தத்தையர்த மக்குள்‡இசை
பட்ட§திகி ரிக்கும் அழியாதே

பத்தியையெ னக்கருளி முத்தியைய ளித்துவளர்
பச்சைமயி லுற்று வரவேணும்

நெற்றிவிழி பட்டெரிய நட்டமிடு முத்தமர்தி
னைக்குமன மொத்த கழல்வீரா

நெய்க்கமல மொக்குமுகை மெய்க்குறவி இச்சையுற
நித்தமிறு கத்த முவுமார்பா

எற்றியதி ருச்சலதி சுற்றியதி ருத்தணியி
லெப்பொழுது நிற்கு முருகோனே

எட்டசல மெட்டுநில முட்டமுடி நெட்டசுர
ரிட்டசிறை விட்ட பெருமாளே.(எஅ)

---

*தாது-பொன். †பணை-பறை ‡இசைபட்டதிகிரி-புல்லாங்குழல்.

தனத்தனத் தனத்தனத் தனத்தனத் தனத்தனத்
தனத்தனத் தனத்தனத் தனதான.

306. அருக்கிமெத் தெனச்சிரித் தருக்கியிட் டுளக்கருத்
தழித்தறக் கறுத்தகட் டயிலாலே
அழைத்தகப் படுத்தியொட் டறப்பொருட் பறிப்பவர்க்
கடுத்தபத் தமுற்றுவித் தகர்போலத்
தரிக்கும்வித் தரிக்குமிக் ககத்துவப் பசித்தியெத்
தலத்துமற் றிலைப்பிறர்க் கெனஞானம்
சமைத்துரைத் திமைப்பினிற் சடக்கெனப் படுத்தெழுச்
சறுக்குமிப் பிறப்புமற் றிடலாமோ
பொருக்கெழக் கடற்பரப் பரக்கர்கொத் திறப்புறப்
பொருப்பினிற் பெருக்கவுற் றிடுமாயன்
புடைத்திடித் தடற்கரத் துறப்பிடித் தகப்பகப்
புரிக்கிரக் கம்வைத்தபொற் கதிர்வேலா
திருத்தமுத் தமிழ்க்கவிக் கொருத்தமைக் குறத்தியைத்
தினைப்புனக் கிரித்தலைத் திடைதோயும்
சிவத்தருக் குடக்கொடிச் செருக்கவுற் பலத்தனைச்
சிறப்புடைத் திருத்தணிப் பெருமாளே.(௩0௬)

தனதனன தனதனன தத்தத்த தத்ததன
தனதனன தனதனன தத்தத்த தத்ததன
தனதனன தனதனன தத்தத்த தத்ததன தனதான.

307. மொகுமொகென நறைகொண்மலர் வற்கத்தி னற்புடைய
முளரிமயி லனையவர்கள் மெய்த்தாக்க மத்தமைய
முகிலனைய குழல்சரிய ஒக்கக்க ளத்துவளர் அதிபார
முலைபுளக மெழவளைகள் சத்திக்க முத்தமணி
முறுவலிள நிலவுதர மெத்தத்த வித்தசில
மொழிபதற இடைதுவள வட்டச்சி லைப்புருவ இணைகோட
அகில்மிருக மதசலிலம் விட்டுப் பணித்தமல
ரமளிபட ஒழிவிரவு ரத்னப்ர பைக்குளுமொ
டமர்பொருத நெடியவிழி செக்கச்சி வக்கமத மதமீறி

அடல்வடிவு நலமிதனில் மட்கச்செ ருக்கியுள
முருகுகரை பெருகவுட லொக்கப் பழுத்துவிழு
மளவிலொரு பரமவொளி யிற்புக்கிருக்கவினை நினையாதோ

செகுதகெண கெணசெகுத செக்குச்செ குச்செகுத
கிருதசெய செயகிருத தொக்குத்தொ குத்தொகுத
டிமிடடிமி டிமிடமிட டிட்டிட்டி டிட்டிமிட டிடிதிதோ

திரிகடக கடகதிரி திக்திக்ர திக்ரிகட
திமிர்தகிமி கிமிர்தகிமி திக்கிக்கி திக்கிகிகி
செணுசெணுத தணசெணுத தத்தித்தி குத்ரிகுட தகிதிதோ

தகுடதிகு திகுடதிமி தக்தக்த திக்திகுட
குகுகுகுகு குகுகுகுகு குக்குக்கு குக்குகுக
தரரர ரிரிரிரிரி திற்றிக்க திற்றிரிரி எனவேநீள்

*சதிமுழவு பலவுமிரு பக்கத்தி சைப்பமுது
சமையபயி ரவிபிதம முட்கிப்ர மிக்கவுயர்
தணிகைமலை தனில்மயிலி னிர்த்தத்தி னிற்கவல பெருமாளே.

தத்தத்த தனத்தன தானன
தத்தத்த தனத்தன தானன
தத்தத்த தனத்தன தானன தனதான.

308. இத்தித்த மொழிச்சிகள் பாவனை
ஒத்†தொத்த னைத்திகள் காமிய
ரெத்தத்தை யிகழ்த்திகள் காதன பலபேர்கள்

சித்தத்தை மயக்கிகள் யாரையு
மிச்சித்து முயக்கிகள் மோகமெ
ரிச்சிச்சி ரிறுக்கிகள் தோதக வசமாகி

முத்தத்து முயற்சிக ளாடிய
பித்தத்து மெனக்குநி நீடிய
முத்தாய்த்த பதத்திணை யேதர வருவாயோ

---

* சதிமுழவு-தாளத்தோடுகூடிய பறை. † ஒத்த - சமானித்த.

முற்பட்ட *இலக்கண நூலிடை
†தப்புற்ற கவிக்கென வே ‡அவை
முற்பட்டு §புதுத்துறை மாறிய — புலவோனே

சத்திக்க சமுத்திர பேரொளி
யுத்தத்து ளரக்கர்கள் மாளவெ
தத்வத்து மிருக்கயி லேவிடு — புயவீரா

தத்திக்கொ மெனப்புரி மாநட
னத்தத்த னருட்செவி ஓதிய
கற்கித்த வயற்றிர போதிய — குருநாதா

பத்தெத்து முடித்தலை ராவணன்
¶வத்தித்து நிலத்தி லிராவணம்
$பத்தர்த்து வதைத்திடு ராகவன் — மருகோனே

பக்கத்து பதத்தர்க ளுடனெ
சொக்கத்து சுயப்பொரு ளாகவெ
பட்சத்து திருத்தணி மேவிய — பெருமாளே. (௩௬)

தனத்ததன தனதான தனத்ததன தனதான
தனத்ததன தனதான தனதான.

309. வரிக்கலையி னிகரான விழிக்கடையி லிளைஞோரை
வயக்கியிடு மடவார்கள் — மயலாலே

மதிக்குளறி யுளகாசு மவர்க்குதவி மிடியாகி
வயிற்றிலெரி மிகமூள — அதனாலே

ஒருத்தருட னுறவாகி ஒருத்தரொடு பகையாகி
ஒருத்தர்தமை மிகநாடி — அவரோடே

‖உணக்கையிடு படுபாவி யெனக்குனது கழல்பாட
உயர்ச்சிபெறு குணசீலம் — அருள்வாயே

விரித்தருண கிரிநாத னுரைத்ததமி ழெனுமாலை
மிகுத்தபல முடனோத — மகிழ்வோனே

---

* இலக்கணம் - குமாரகம். † தப்புற்றகவி - கந்தபுராணக் காப்பு.
‡ அவை - சங்கம். § புதுத்துறை - வீரசோழியம் ¶ வத்தித்து - நிலைத்து.
$ பத்தத்து உண்மையில். ‖ உணக்கையிடு உண்ண + கை + இடு.

வெடித்தமணர் கழுவேற *ஒருத்திகண வனுமீள
 விளைத்தசொரு தமிழ்பாடு புலவோனே
செருக்கியிடு பொருசூரர் குலத்தையடி அறமோது
 திருக்கையினில் வடிவேலை உடையோனே
திருக்குலவு மொருநீல மலர்ச்சுனையி லழகான
 திருத்தணிகை மலைமேவு பெருமாளே. (௮௨)

வள்ளிமலை.

தையதன தான தையதன தான
தையதன தானத் தனதான.

310. அல்லில்விழி யாலு முல்லைநகை யாலு
 மல்லல்பட ஆசைக் கடலீயும்
அள்ளவினி தான நள்ளிரவு போலு
 முள்ளவினை யாரத் தனமாரும்
இல்லுமிளை யோரு மெல்லவய லாக
 வல்லெருமை மாயச் சமனாரும்
எள்ளியெனை நாவி கொள்ளைகொளு நாளி
 லுய்யவொரு நீபொற் கழல்தாராய்
தொல்லைமறை தேடி இல்லையெனு நாதர்
 சொல்லுமுப தேசக் குருநாதா
துள்ளிவிளை யாடு புள்ளி †யுழை மேவு
 வெள்ளிவன மீதுற் றுறைவோனே
வல்லசுரர் மாள நல்லசுரர் வாழ
 வல்லவடி வேலைத் தொடுவோனே
வள்ளிபடர் சாரல் வள்ளிமலை மேவு
 வள்ளிமண வாளப் பெருமாளே. (௮௩)

---

*ஒருத்திகணவன் - மங்கையர்க்கரசியாருடைய கணவனாகிய கூன்பாண்டியன். † உழை-புள்ளிமான் கூட்டங்கள்.

311. ஐயமுறு நோயு மையலுமு வாவி
ஐவருமு பாயப் பலகாலின்

அல்லல்கட வாது துள்ளியதில் மாயு
முள்ளமுமில் வாழ்வைக் கருதாசைப்

பொய்யுமக லாத மெய்யைவள ராவி
உய்யும்வகை யோகத் தணுகாதே

புல்லறிவு பேசி அல்லல்படு வேனை
நல்லவிரு தாளிற் புணர்வாயே

வெய்யபொழில் நீடு கையிலை * மூ நாலு
செய்யபுய மீதுற் றணைவோனே

வெள்ளையிப ரேறு வள்ளலெதிரோ வாழு
† வெள்ளமுது மாவைப் பொருதோனே

வையமுழு தாழு மையபதியில் வீர
வல்லமுரு காமுத் தமிழ்வேளே

வள்ளிபடர் சாரல் வள்ளிமலை மேவு
வள்ளிமண வாளப் பெருமாளே. ([illegible])

தையத்த தான தந்த தையத்த தான தந்த
தையத்த தான தந்த தனதான.

312. கையொத்து வாழுமிந்த மெய்யொத்து வாழ்வுகந்து
பொய்யொத்த வாழ்வுகண்டு மயலாகிக்

கல்லுக்கு நேரும் வஞ்ச உள்ளத்தர் மேல்விழுந்து
கள்ளப்ப யோதரங்கள் உடன்மேவி

உய்யப்ப டாமல்நின்று மையர்க்கு பாயமொன்று
பொய்யர்க்கு மேயயர்ந்தும் உடைநாயேன்

உள்ளத்தி னூடு நின்று பொய்யப்ப டாமலென்று
‡ முள்ளத்தின் மாய்வொழான்றை மொழியாயோ

---

* மூநாலு - பன்னிரண்டு. † வெள்ளமுதுமாவை - சமுத்திரத்திலுள்ள பழையமாமரத்தை ‡ உள்ளத்தின் மாய்வு மனோலயம்.

அய்யப்ப டாத *ஐந்து பொய்யற்ற சோலைதங்கு
தெய்வத்தெய் வானைகொங்கை புணர்வோனே
அல்லைப்பொ ருமுழங்கு சொல்லுக்ர சேவலொன்று
வெல்லப்ப தாகைகொண்ட திறல்வேலா
† வையத்தை ஓடியைந்து கையர்க்கு வீசுதந்தை
மெய்யொத்த நீதிகண்ட பெரியோனே
வள்ளிக்கு ழாமடர்ந்த வள்ளிக்கல் மீதுசென்று
வள்ளிக்கு ‡ வேடைகொண்ட பெருமானே. (௧௫)

313. முல்லைக்கு மாரனங்கை வில்லுக்கு மாதர்தங்கள்
§ பல்லுக்கும் வாடியிப்ப முயலாநீள்
முள்ளுற்ற கால்மடிந்து கொள்ளிக்குள் மூழ்கிவெந்து
பள்ளத்தில் வீழ்வதன்றி ஒருஞான
எல்லைக்கு மாரணங்கள் சொல்லித்தொ ழாவணங்கு
மெல்லைக்கும் வாவிநின்றன் அருள்நாமம்
எள்ளற்கு மாலயர்ந்து உள்ளத்தி லாவவென்றும்
உள்ளப்பெ ரு‖கிணங்கை ஒழிவேனோ
அல்லற்ற ஆனைதந்த வல்லிக்கு மார்பிலங்கு
அல்லிப்பொன் மார்பலங்கல் புனைவோனே
அள்ளற்ப டாதகங்கை வெள்ளத்து வாவிதங்கி
மெள்ளச்ச ரோருகங்கள் பயில்நாதா
வல்லைக்கு மாரகந்த தில்லைப்பு ராரிமைந்த
மல்லுப்பொ ராதிரண்டு புயவீரா
வள்ளிக்கு ழாமடர்ந்த வள்ளிக்கல் மீதுசென்று
வள்ளிக்கு வேடைகொண்ட பெருமானே. (அ௱)

*ஐந்து சோலை - ஐவகைத் தெய்வதருக்கள் நிறைந்த சோலை. †விநாயகர் பழம்பெற்றதையூகிக்கப்பாலது ‡வேடை - ஆசை §பல்லுக்கும் - நகைக்கும். ‖இணங்கை - இணக்கத்தை. ¶ அல்லற்ற - ஒளிவிளங்கிய.

தையத்த தாத்த தையத்த தாத்த
தையத்த தாத்த தனதான.

314. கள்ளக்*குவாற்பை தொள்ளைப்புலாற்பை
†துள்ளிக்கணார்க்க வருபோக
கல்வைத்த தோற்பை ‡பொள்ளுற்ற காற்பை
கொள்ளைத் ||துராற்பை பசுபாச
அள்ளற்பை மாற்பை §ஞெள்ளற்பை பிப்பை
வெள்ளிட்ட சாப்¶பி சிதம்பால்
அள்ளச் +சுவாக்கள் சள்ளிட்டு ஊர்ப்பல்
கொள்ளப்ப டாக்கை தவிர்வேனோ
தெள்ளத்தி சேர்ப்ப **வெள்ளத்தி மாற்கும்
††வெள்ளுத்தி மாற்கும் மருகோனே
‡‡சிள்ளிட்ட காட்டி னுள்ளுற்ற ராக்கொல்
○○புள்ளச்வ மேற்று வருவோனே
வள்ளிச்சன் மார்க்கம் §§விள்ளைக்கு நோக்க
வல்லைக்கு மேற்று பிளையோனே
வள்ளிக் குழாத்து வள்ளிக்கல் காத்த
வள்ளிக்கு வாய்த்த பெருமாளே. (அ)

தையதன தந்த தையதன தந்த
தையதன தந்த தனதான.

315. அல்லிவிடைய டைந்த வில்லடல னங்கன்
அல்லிமல ரம்பு தனையேவ
அள்ளியெரி சிந்து பிள்ளைமதி தென்ற
லையமுது கிண்ட அணையூடே

---

* குவால்-கூட்டம். † துள்ளிக்கண் எனப்பிரிக்க ‡ பொள்ளுற்ற-பொள்ளெனவுற்ற, விரைந்து செல்லும் || துரால்-துன்பம § ஞெள்ளல்-தவறு ¶ பிசிதம்-இறைச்சி + சுவாக்கள்-நாய்கள் ** வெள்ளத்திமால் - வெள்ளையானையையுடைய இந்திரன் †† வெள்ளுத்திமால்-வெள்ளுந்திமால், திருப்பாற்கடலையுடையவிஷ்ணு, உந்தி-கடல் ‡‡ சிள் ஒலிக்குறிப்பு ○○ புள்ளசவம்-மயிற்குதிரை §§ விள் ஐக்கு - வினவிய தாதைக்கு.

சொல்லுமா விந்த வல்லிதனி நின்று
  தொல்லைவினை என்று   முனியாதே
அப்பவரி வண்டு செப்பமது உண்டு
  அள்ளியக டம்பு   தரவேணும்
* கல்வசல மங்கை எல்லையில்வி ரிந்த
  கல்விகரை கண்ட   புலவோனே
கள்ளொழுகு கொன்றை வள்ளல்தொழ அன்று
  கல்லலற ஒன்றை   அருள்வோனே
வல்லசுர ரஞ்ச நல்லசுரர் விஞ்ச
  வல்லமைதெ ரிந்த   மயில்வீரா
வள்ளிபடர் கின்ற வள்ளிமலை சென்று
  வள்ளியைம ணந்த   பெருமாளே. (௮௮)

தனதன தனதன தனதன தனதன
தையத் தனத்த   தனதான.

316. ககனமு † மனிலமு மனல்புனல் நிலமமை
  கள்ளப் புலாற்கி   ருமிவீடு
கலைவெழு மொழிதரு வினைமென மருவிரு
  கள்ளைத் தடோற்றை   சுமவாதே
உகவிறு திகளிலு மிறுதியி லொருபொருள்
  உள்ளக் கணேக்கு   மறிவூறி
ஒளிதிக ழுருவரு வெறுமறை இறுதியில்
  உள்ளத் தைநோக்க   அருள்வாயே
பகுமுக பரிமள விகசித ‡ நளினநன்
  வெள்ளைப் பிராட்டி   இறைகாண
விடநா குழலசை டிலமிசை வெருமுக
  வெள்ளைத் தைவெற்ற   பதிவாழ்வே

சுப்பிரமணிய பராக்ரமம் சகலகலா வல்லப மூர்த்தி சரித்திரம் இங்கே கவனிக்கத்தக்கது. † அனிலம்-காற்று ‡ நளினநன் வெள்ளைப்பிராட்டி இறை-சரஸ்வதி தேவியின் நாயகனுன பிரமதேவன்.

வகுளமு முகுளித *வழைகளு மலிபுன
வள்ளிக் † குலாத்தி — கிரிவாழும்
வனசரர் மாபினில் வருமொரு மாகத
வள்ளிக்கு வாய்த்த — பெருமாளே. (௩௧௬)

[இப்பாடலில் ஒவ்வோரடியினும் இறுதியிலுள்ள பாகத்தை எடுத்தமைக்கப் பின் வருமாறு பிறிதொருபாடலாம்]

கள்ளப்புலாற்கி — ருமிவீடு
கள்வைத்த தோற்பை — சுமவாதே
உள்ளக்கணுக்கும் — அறிவூறி
உள்ளத்தை நோக்க — அருள்வாயே
வெள்ளைப்பிராட்டி — இறைகாணு
வெள்ளத்தை ஏற்ற — பதிவாழ்வே
வள்ளிக்குலாத்தி — கிரிவாழும்
வள்ளிக்கு வாய்த்த — பெருமாளே.

தனதந்த தந்தனந் தனதந்த தந்தனந்
தனதந்த தந்தனந் தனதான.

317. சிரமங்க மங்கைகண் செவிவஞ்ச நெஞ்சு *செஞ்
சலமென்பு திண்பொருந் — திடமாயம்
சிலதுன்ப மின்ப †மொன் றிறவந்து பின்புசெந்
தழலின்கண் வெந்துசிந் — திடலாவி
விரைவின்க ணந்தகன் பொரவந்த தென்றுவெந்
துயர்கொண்ட லைந்துலைந் — தழியாமுன்
வினையொன்று மின்றிநன் றியலொன்றி நின்பதம்
வினவென்று ளன்புதந் — தருள்வாயே
அரவின்கண் முன்துயின் றருள்கொண்ட லண்டர்கண்
டமரஞ்ச மண்டிவந் — திடுசூரன்

---

* வழை-சுரபுன்னை. † குலத்திகிரி-குலாத்திகிரி வள்ளிக்குலத்திகிரி-சிரேஷ்டமாகியவள்ளிமலை. *செஞ்சலம்-இரத்தம். †ஒன்றிற-ஒன்றி†இற.

அகலம்பி ளந்தணைந் தகிலம்ப ரந்திரங்
கிடவன்று டன்றுகொன் றிடும்வேலா
மறைவெங்க யப்பொருந் திடவண்டி னங்குவிந்
திசைபொன்ற பந்திசந் தடனுடும்
வரையின்கண் வந்துவண் குறமங்கை பங்கயம்
வரநின்று கும்பிடும் பெருமாளே. (௯0)

தனதன தந்தன தந்த தந்தன
தனதன தந்தன தந்த தந்தன
தனதன தந்தன தந்த தந்தன தனதான.

318. வரையில்பொய் மங்கையர் தங்க ளஞ்சன
விழியையு கந்துமு கந்து கொண்டடி
வருடியு ணைந்துமு கந்து தெந்தென அளிகாடை
மயில்குயி லன்றிலெ னும்பு ளின்பல
குரல்செய்தி ருந்துபி னுந்தி யென்கிற
படுவில்வி ழுந்துகி டந்து செந்தழல் மெழுகாகி
உருகியு கந்திதழ் தின்று பொன்றுகை
அடியில கங்கள்வ ரைந்து குங்கும
உபயத னங்கள்த தும்ப அன்புடன் அணையாமஞ்
சுலவிய கொண்டைகு லைந்த லைந்தெழ
அமளியில் மின்சொல்ம ருங்கி லங்கிட
உணர்வழி இன்பமா றந்து நின்றனை நினைவேனோ
விரவிநெ ருங்குகு ரங்கி னங்கொடு
மொகுமொகெ னுங்கட லுங்க டந்துறு
விசைகொடி லங்கைபு குந்த ருந்தவர் களிகூர
வெயில்நில வும்பரு மிம்ப ருப்படி
செயசெய என்றுவி டுங்கொ டுங்கணை
விறல்நிரு தன்தலை சிந்தி னன்திரு மருகோனே
அருகர்க ணங்கள்பி ணங்கி டும்படி
மதுரையில் வெண்பொடி யும்ப ரந்திட
அரகர சங்கர என்று வென்றருள் புகழ்வேலா

அறம்வளர் சுந்தரி மைந்த தண்டலை
வயல்கள் பொருந்திய சந்த வண்கரை
* அரிவை விலங்கலில் வந்து கந்தருள் பெருமாளே. ()

திருக்கழுக்குன்றம்.

இது செங்கல்பட்டிலிருந்து கிழக்கே ஒன்பது மைல் தூலையிலிருக்கிறது.

தனத்த னத்தந் தத்தன தானன
தனத்த னத்தந் தத்தன தானன
தனத்த னத்தந் தத்தன தானன தனதான.

319. அகத்தி னைக்கொண் டிப்புவி மேல்சில
நினைத்து மற்றொன் றுற்றறி யாதுபின்
அவத்துள் வைக்குஞ் சித்தச னூடு கணையாலே
அசுத்த மைக்கண் கெட்புறு பாவையர்
புகைத்து ளைக்கும் பொய்க்கடல் மூழ்கியெ
அலக்க ணிற்பொன் றித்திடு மாறிய லைநாய்போய்
இகத்தை மெய்க்கொண் டிப்புவி பாலர்போல்
மயக்கி லுற்றும் பற்றைவி டாதுட
லிளைப்†பி னைப்பும் பித்தமு மாய்நரை முதிர்வாயே
எமக்க யிற்றின் சிக்கினி லாமுனுன்
மலர்ப்ப தத்தின் பத்திவி டாமன
நிருக்கு நற்றொண் டர்க்கிணை யாகவுந் அருள்தாராய்
புகழ்ச்சி லைக்கந் தர்ப்பனு மேபொடி
படச்சி ரித்தம் முப்புரம் நீறுசெய்
புகைக்க ணற்கண் பெற்றவர் காதலி அருள்பாலா
புவிக்குள் யுத்தம் புத்திரர் சேயர
சனைத்து முற்றுஞ் செற்றிட வேபகை
புகட்டி வைக்குஞ் சக்கர பாணிதன் மருகோனே
திகழ்க்க டப்பம் புட்பம தார்புய
மறைத்து ருக்கொண் டற்புத மாகிய
தினைப்பு னத்தின் புற்றுறை பாவையை அணைசீலா

---

* அரிவை விலங்கல் - வள்ளிமலை. † இளைப்பு - ஓர்வகை நோய்.

செகத்தி லுச்சம் பெற்றம ராவதி
அதற்கு மொப்பென் றுற்றழ கேசெறி
திருக்க ழுக்குன் றத்தினில் மேவிய பெருமாளே. (௬௨)

தான தத்த தனந்த தனு தனுதன
தான தத்த தனந்த தனு தனுதன
தான தத்த தனந்த தனு தனுதன தனனதான.

320. ஓல மிட்ட சுரும்பு தனு தனுவென
வேசி ரத்தில் விழுந்*கை பளீர் பளீரென
ஓசை பெற்ற சிலம்பு கலீர் கலீரென விரகலீலை

ஓர்மி டற்றி லெழும்புள் குகூ குகூவென
வேர்வை மெத்த வெழுந்து சலா சலாவென
உரோமகுச்சு நிறைந்து சிலீர் சிலீரென அமுதமாரன்

†ஆல யத்து ளிருந்து குபீர் குபீரென
வேகு நிக்க உடம்பு விரீர் விரீரென
ஆர முத்த மணிந்து அளா அளாவென மருவுமாதர்

ஆசை யிற்கை கலந்து சுமா சுமாபவ
சாக ரத்தி லெழுந்தி எழா எழாதுளம்
ஆறெழுத்தை நினைந்து குகா குகாவென வகைவாராதோ

மாலையிட்ட சிகண்கள் செவேல் செவேலென
வேலெ ழுச்சி தரும்பல் வெளேல் வெளேலென
வாகைபெற்ற புயங்கள் கறேல் கறேலென எதிர்கொள்சூரன்

மார்பு மொக்க நெரிந்து கரீல் கரீலென
பேய்கு நிக்க நிணங்கள் குழூ குழூவென
வாய்பு தைத்துவிழுந்து ஐயோஐயோவென உதிரமாறாய்

வேலை வற்றி வரண்டு சுறீல் சுறீலென
மாலைவெற்பு மிடிந்து நிடேர் நிடேரென
மேன்மைபெற்ற ஜனங்கள் ஐயாஐயாவென இசைகள்கூற

* கை - ஒழுங்கு † ஆலயம் - மார்பகம்.

வேலெடுத்து நடந்த நிவா காசல
வேடுவப்பெண் மணந்த புயா சலாதமிழ்
*வேத வெற்பி லமர்ந்த க்ருபா காரிவ   குமாரவேளே

தனனதன தான தனனதன தான
தனனதன தான   தனதான.

321. †எழுகுநிறை நாபி அரிபிரமர் சோதி
இலகுமரன் மூவர்   முதலானோர்
இறைவியெனு மாதி பரை முலையி லூறி
எழுமமிர்த நாறு   கனிவாயால்
புழுகொழுகு ‡காழி கவுணியரில் ஞான
புநிதனென ஏடு   தமிழாலே
புனலிலெதி ரேற அமணர்கழு வேற
அமர்பொருத வீர   குருநாதா
மழுவுழைக பால வலியதிரி சூல
மணிகரயி நேதர்   அருள்பாலா
மலயனை நீடு சிறைகொடவன் வேலே
வளமைபெற வேசெய்   முருகோனே
கழுகுதொழு வேத கிரிசிகரி வீறு
கதிருலவு வாசல்   நிறைவானோர்
கடலொலிய தான தமிழ்பறைக ளோத
‖கதலிவன மேவு   பெருமாளே. (௩௨௧)

மயிலம்.

மயிலம் ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கு 3 மைல் தொலைவிலிருக்கிறது.

தனதந்த தானன தான தான
தனதந்த தானன தான தான
தனதந்த தானன தான தான   தனதான.

322. கொலைகொண்ட போர்விழி §கோலோ வாளோ
விடமிஞ்சு பாதக வேலோ சேலோ
குழைகொண்டு லாவிய மீனோ மானோ   எனுமாதர்

---

* வேதவெற்பு - திருக்கழுக்குன்றம். † எழுகு-எழுலகம். ‡ காழி-சீகாழி. ‖ கதலிவனம்-திருக்கழுக்குன்றம். § கோல்-அம்பு.



குயில்தங்கு மாமொழி யாலே நேரே
இழைதங்கு நூலிடை யாலே மீதூர்
குளிர்கொங்கை மேருவி னாலே நாளு விதமாகி
உலைகொண்ட மாமெழு காயே மோகா
வலையம்பு ராசியி னூடே மூழ்கா
உடல்பஞ்ச பாதக மாயா நோயால் அழிவேனோ
உறுகண்ட பாசமொ டாரா வாரா
எனையண்டி யேகம னூர்தூ தாளோர்
உயிர்கொண்டு போய்விடும் நாள்நீ மீதா யருள்வாயே
அலைகொண்ட வாரிதி கோகோ கோகோ
எனநின்று வாய்விட வேநீள் மாசூர்
அணியஞ்ச மாசலம் வேறாய் நீறா யிடவேதான்
அகிலின்ற சோலைய வானார் தீஞ்சீர்
அலைகங்கை வேல்விடும் வீரா தீரா
அருமந்த ரூபக ஏகா வேறோர் வடிவாகி
மலைகொண்ட வேடுவர் கானூ டேபோய்
குறமங்கை யாளுட னேமா லாயே
மயல்கொண்டு லாவியவர் தாள்மீ தேவீழ் குமரேசா
மதிசிந்து சோபித மேலா ஆளா
மகிழ்சம்பு வேதியர் பாதா நாதா
மயிலந்தண் மாமலை வாழ்வே வானோர் பெருமானே. ()

திரிசிராப்பள்ளி.

இது திரிசிராப்பள்ளி ஸ்டேஷனிலிருந்து கிழக்கே அரைமைல் துலைவிலிருக்கிறது.

தந்த தாத்தன தத்தத் தானன
தந்த தாத்தன தத்தத் தானன
தந்த தாத்தன தத்தத் தானன தனதான.

23. அங்கை நீட்டிய ழைத்துப் பாரிய
கொங்கை காட்டிம றைத்துச் சீரிய
அன்பு போற்பொய்ந டித்துக் காசள வுறவாடி

* சராசனம்-வில் † உலாய்-உலாவி.

அம்பு தோற்றகண் ணிட்டுத் தோதக
இன்ப சாத்ரமு ரைத்துக் கோகிலம்
அன்றில் போற்குர லிட்டுக் கூரிய நகைமேகை
பங்க மாக்கிய லைத்துச் சாதனை
கொண்டு வேட்கையெ ழுப்பிக் காமுகர்
பண்பில் வாய்க்கம யக்கிக் கூடுதல் இயல்பாகும்
பண்டி ராப்பகல் சுற்றுச் சூளைகள்
தங்கள் மேற்பரமை விட்டுப் பார்வதி
பங்கர் போற்றிய பத்மத் தாள்தொழ அருள்வாயே
எங்கு மாய்க்குறை வற்றுச் சேதன
அங்க மாய்ப்பரி சுத்தத் தோர்பெறும்
இன்ப மாய்ப்புகழ் முப்பத் தாறினின் முடிவேறாய்
இந்த்ர கோட்டிம யக்கத் தான்மிக
மந்த்ர மூர்த்தமெ டுத்துத் தாமத
மின்றி வாழ்த்திய சொர்க்கக் காவல வடிவேலா
செங்கை வேற்கொடு துட்டச் சூரனை
வென்று தோற்பறை கொட்டக் கூளிகள்
தின்று கூத்தந டிக்கத் தோகையில் வரும்வீரா
செம்பொ னாற்றிகழ் சித்ரக் கோபுர
மஞ்சி ராப்பகல் மெத்தச் சூழ்தரு
தென்சி ராப்பளி வெற்பிற் றேவர்கள் பெருமாளே. ([illegible])

தந்தானன தானன தாத்தன
தந்தானன தானன தாத்தன
தந்தானன தானன தாத்தன தனதான.

324\. அந்தோமன மேமம தாக்கையை
நம்பாதெளி தாகிய சூக்கும
மம்போருக ணூடுய பூட்டிடு இனிமேல்நாம்
அஞ்சாதமை யாகிரி யாக்கையை
பஞ்சாடிய வேலவ னார்க்கிய
லங்காகுவம் வாவினி தாக்கையை ஒழியாமல்

வந்தோமிது வேகதி யாட்சியு
மிந்தாமயில் வாகனர் சீட்டிது
வந்தாளுவம் நாமென வீக்கிய சிவநீறும்

வந்தேவெகு வாநமை யாட்கொளும்
*வந்தார்மத மேதினி மேற்பட
மைந்தாகும ராவென வார்த்தைகள் மறவாதே

திந்தோதிமி தீதத மாத்துடி
தந்தாதன னாதன தாத்தன
செம்பூரிகை பேரிகை யார்த்தெழ மறையோதச்

செங்காடென வேவரு மூர்க்கர்கள்
சங்காரசி காமணி வேற்கொடு
திண்டாடிட மாமயில் மேற்கொளு முருகோனே

இந்தோடிதழ் நாக†மகாப்புனல்
கங்காளமி னார்சடை சூட்டிய
என்தாதைச தாசிவ கோத்திரன் அருள்பாலா

எண்கூடரு ளால்நெளி நோக்கியை
நன்பூமணை மேவுசி ராப்பளி
என்பார்மன மேதனி நோக்கிய பெருமாளே.(௬௭)

தனதன தந்தன தாத்தன தனதன தந்தன தாத்தன
தனதன தந்தன தாத்தன தனதான.

324. அரிவையர் நெஞ்சுரு காப்புணர் தருவிர கங்களி னாற்பெரி
தவசம்வி ளைந்துவி டாய்த்தடர் முலைமேல்வீழ்ந்
தகிலொடு சந்தன சேற்றினில் முழுகியெ முந்தெதிர் கூப்புகை
அடியின கம்பிறை போற்பட விளையாடிப்
பரிமளம் விஞ்சிய பூக்குழல் சரியம ருங்குடை போய்ச்சில
பறவைக ளின்குர லாய்க்கயல் விழிசோரப்
பனிமுக முங்குறு வேர்ப்பெழ இதழமு தூண்டிய வாய்ப்பகல்
பகடியி டும்படி தூர்த்தனை விடலாமோ

---

* வந்தார்-தென்றற்றேருடையார், மதன் †மகாப்புனல்-கங்கை.

சரியையு டன்கிரியை போற்றிய பரமப தப்பெரு வார்க்கருள்
தருகணன் ரங்கபு ரோச்சிதன் மருகோனே
சயிலமெ றிந்தகை வேற்கொடு மயிலினில் வந்தெனை யாட்கொளல்
சகமறி யும்படி காட்டிய குருநாதா
திரிபுவ னந்தொழு பார்த்திபன் மருவிய மண்டபகோட்டிகள்
தெருவில்வி ளங்குசி ராப்பளி மலைமீதே
திரியவி ருந்தப ராக்ரம உருவளர் குன்றுடை யார்க்கொரு
திலதமெ னும்படி தோற்றிய பெருமாளே.(௬௮)

தனதன தானன தானன தனதன தானனதானன
தனதன தானன தானன தந்ததான.

326. அழுதழு தாசாரேசமு முடையவர் போலேபொய் சூழ்வுறும்
அசடிகள் மாலான காமுகர் பொன்கொடாநாள்
அவருடன் வாய்பேசி டாமையு முனிதலுமாகுநதோஷிகள்
அறிவியில் காசாசை வேசைகள் நஞ்சுதோயும்
விழிகளி னல்மாட வீதியில் முலைகளை யாமலாமொடும்
விலையிடு மாமாய ரூபிகள் பண்பிலாத
விரகிகள் வேதாளபோலவல முறையிடு கோமாளிமூளிகள்
வினைசெய லாலேயெ னாவிம யங்கலாமோ
வழியினில் வாழ்ஞான போதக பரமசு வாமீவ ரோதய
வயலியில் வேலாயு தாவனை எங்குமானாய்
மதுரையின் மீதால வாயினில் எதிரம ணரோடெ திரியர்
மறிகழு மீதேற நீறுப ரந்தவாள்
செழியனு மாளாக வாதுசெய் கவிமத சீகாழி மாமுனி
சிவசிவ மாதேவ காவென வந்துபாடும்
திருவுடை யாய்தீதி லாதவர் உமையொரு பாலான மேனியர்
†சிரகிரி வாழ்வான தேவர்கள் தம்பிரானே.(௬௯)

---

*முனி-யானைக்கன்று, †சிரகிரி யென்பது, திரிச்சிராப்பள்ளிமலை.

தனதன தந்தத் தனதன தந்தத்
தனதன தந்தத் தனதான.

327. இளையவர் நெஞ்சத் †தளையமெ னுந்திற்
றிடைகொடு வந்திக் — கொடிபோல்வார்
இணையடி கும்பிட் டணியுடல் கம்பித்
திதழமு தூட்டித் — தணியாகக்
களபசு கந்தப் புளகித இன்பக்
கனதன கும்பத் — திடைமூழ்கும்
கலவியை நிந்தித் திலகிய நின்பொற்
கழல்தொழு மன்பைத் — தருவாயே
தளர்வறு மன்பர்க் குளமெனு மன்றிற்
சதுமறை சந்தத் — தொடுபாடத்
திரிகிட தந்தத் திரிகிட திந்தித்
தகுர்திமெ னுங்கொட் — டுடனாடித்
தெளிவுற வந்தற் றெளிசிவ னன்பிற்
சிறுவவ லந்தத் — திருமார்பா
செழுமறை அஞ்சொற் பரிபுர கொண்டற்
‡ எழுத்து - மந்திரம். § என் - என்னும். || ஓதி - ஒதியமரம்.

திருடி ஒருபடி நெருடி அறிவிலர்
செவியில் நுழைவன கவிபாடித்
திரியு மவர்சில புலவர் மொழிவது
சிறிது முணர்வகை அறியேனே
*வருடை இனமது முருடு படுமலில்
மரமு மருதமும் அடிசாய
மதுர மெனுநதி பெருகி இருகரை
வழிய வகைவகை குதிபாயும்
குருடி மலையுறை முருக குலவட
குவடு தவிடெழ மயிலேறும்
குமர குருபர திமிர தினகர
குறைவி லிமையவர் பெருமாளே. (௩௯௨)

தென்சேரிகிரி.

இது கோயமுத்தூர் பல்லடத்துக்குத்தெற்கே 12மைல் தூலவிலிருக்கிறது.

தந்தான தனதனன தந்தான தனதனன
தந்தான தனதனன தனதான.

390. எங்கேனு மொருவர்வர அங்கேக ணினிதுகொடு
இங்கேவ ருனதுமயல் தீராதெனா
திங்காலெ னினியவிதழ் தந்தேனை யுறவருவ
என்றாசை குழையவிழி பிணையாமுத்
தங்காம லவருடைய உண்டான பொருளுயிர்கள்
சந்தேக மறவெபறி கொளுமாதர்
சங்கீத கலவிநல மென்றேது முறநினிட
†தண்பாரு முனதருளை அருள்வாயே
சங்கோடு திகிரியது கொண்டேயு நிரைபிறகு
சந்தாரும் ‡வெதிருகுழ லதனூதித்
தன்காதல் தனை §உகள எண்றேழு மடவியர்கள்
தங்கூறை கொடுமரமி லதுவேறுந்

வருடை-மலைநாடு †தண்பு-தண்மை. ‡வெதிர்-மூங்கில். §உகள-கடக்க.

சிங்கார அரிமருக பங்கேரு கனுமருள
சென்றேயும் அமராரூறு சிறைமீளச்

செண்டாடி அசுரர்களை வென்றாடி அடியர்தொழ
தென்சேரி கிரியில்வளர் பெருமாளே. (௩௯௩)

தந்தானத் தந்த தனதன
தந்தானத் தந்த தனதன
தந்தானத் தந்த தனதன தனதான.

391. கொண்டாடிக் கொஞ்சு மொழிகொடு
கண்டாரைச் சிந்து விழிகொடு
கொந்தாரச் சென்ற குழல்கொடு வடமேருக்

குன்றோடொப் பென்ற முலைகொடு
விண்டாலிக் கின்ற மயிலென
கொம்பாயெய்ப் பண்டு விடைகொடு பலரோடும்

பண்டாடச் சிங்கி இடுமவர்
விண்டாலிக் கின்ற மயிலெல்ல
பண்பாலிட் டஞ்சொல் மருளது விடுமாறு

பண்டேசொற் றந்த பழமறை
கொண்டேதர்க் கங்க ளறவுமை
பங்காளற் கன்று பகர்பொருள் அருள்வாயே

வண்டாடத் தென்றல் தடமிசை
தண்டாதுப் புண்டரிகமலர்
மங்காமற் சென்று மதுவைசெய் வயலூரா

வங்காளக் கொண்டல் வடிவொரு
சங்க்ராமக் கஞ்சன் விழவுதை
மன்றாடக் கண்டு மகிழ்திரு மருகோனே

திண்டாடச் சிந்த கிரிசரர்
தொண்டாடக் கண்ட அமர்பொரு
செஞ்சேவற் செங்கை உடையசண் முகதேவே

சிங்காரச் செம்பொன் மதிலது
லங்காரச் சந்த்ர கலை தவழ்
தென்சேரிக் குன்றின் வினிதுறை பெருமாளே. (௩௯௧)

கொங்கணகிரி.

இது திருப்பூர் ஸ்டேஷனை அடுத்து 2 மைல் தூலைவிலிருக்கிறது.

தந்ததன தத்ததன தந்ததன தத்ததன
தந்ததன தத்ததன தனதான.

392. ஐங்கரனை யொத்தமன மைம்புலம கற்றிவளர்
அந்திபக லற்றநினை வருள்வாயே
அம்புவித னக்குள்வளர் செந்தமிழ்வ ழுத்தியுனை
அன்பொடுது திக்கமனம் அருள்வாயே
தங்கியத வத்துணர்வு தந்தடிமை முத்திபெற
சந்திரவெ ளிக்குவழி அருள்வாயே
தண்டிகைக னப்பவுசு எண்டிசைம திக்கவளர்
சம்ப்ரமவி தத்துடனெ அருள்வாயே
மங்கையர்சு கத்தைவெகு இங்கிதமெ னுற்றமனம்
முன்றனைநி * னைந்தமைய அருள்வாயே
மண்டலிக † ரப்பகலும் வந்தசுப ரட்சைபுரி
வந்தணைசு புத்தியினை அருள்வாயே
கொங்கிலுயிர் பெற்றுவளர் தென்கரையி லப்பரருள்
கொண்டுமுட லுற்றபொருள் அருள்வாயே
குஞ்சரமு கற்கிளைய கந்தனென வெற்றிபெறு
கொங்கணகி ரிக்குள்வளர் பெருமாளே. (௩௯௨)

கொடுங்குன்றம்.

இது அம்மயநாயக்கனூரிலிருந்து வடகிழக்கே 16 மைல் தூலைவிலிருக்கிறது.

தனந்த னந்தந் தந்தந் தந்தந் தந்ததான.

393. அனங்க னம்பொன் றஞ்சக் கொங்குங் கண்களாலே
அடர்ந்தெ ழும்பொன் குன்றங் குப்பங் கொங்கையாலே

* நினைத்து அமைய. † ராப்பகல் என்பது ரப்பகல் என்றாயிற்று.

முனிந்து மன்றங் கண்டுந் தண்டும் பெண்களாலே
முடங்கு மென்றன் தொண்டுங் கண்டின் றின்புறுதோ
தெனந்தெ னந்தென் தெந்தெந் தெந்தெந் தெந்தனனு
செறிந்த டர்ந்துஞ் சென்றும் பண்பின் தும்பிபாடக்
குனிந்தி லங்குங் கொம்புங் கொந்துந் துன்றுசோலைக்
கொழுங்கொ டுந்திண் குன்றந் தங்குந் தம்பிரானே. ()

தனதனன தன தனன
தத்தத் தனந்தன தத்தத் தனந்தன
தனதனன தன தனன
தத்தத் தனந்தன தத்தத் தனந்தன
தனதனன தன தனன
தத்தத் தனந்தன தத்தத் தனந்தன தனதான.

394. எதிர்பொருது கவிகடின
கச்சுக் களப்பொருது குத்தித் திறந்தமலை
இவைகளென வதிமருகம
தப்பட் டுகின்றெழுகி முத்துச் செறிந்தவட
மெனு* நிகள மவையறவு
கைத்திட்டணைந்துபிரிற்கொத்துமங்குசெருங்குபாகர்
எதிர்பரவு உரமிசைது
கைத்தாக் கிடந்தடல்ப ணைக்கைக் கடந்துமிக
இரதிபதி மயலிபவுலி
எற்றிக் கியப்பகறு முட்கத் திரண்டிளகி
இளைஞருயிர் கவளமென
மட்டித்துசைக்கெதிர்புடைத்துச்சினந்துபொருகொங்கையானை
பொதுவிலிலை இடுமகளிர்
பற்மக் காக்கழுவி ழுக்குத் தவண்டமளி
புகவிணைய வரிபரவு
கர்க்கக் கருங்கயல்கள் செக்கர் சிவந்தமுத
பொதுவிரிமொழி பகரவள
கல் | கற் றையுங்குலைய முத்துக் குடன்கருணை தந்துமேல்வீழ்

நிளகம் - யானைகட்டும் சங்கிலி † கற்றை-உரோமக்குவியல்,

புதுமைதரு கலவிவலை
யிற்பட் டழுந்தியுயிர் நட்டுப் படுந்துயர
புணரியுத தியில்மறுகி
மட்டற் றவித்தவிய சட்டைக் குரம்பையழி
பொழுதினிலும் அருள்முருக
கத்தக் கொடுங்கிரியி னிர்த்தச் சரண்களைம றந்திடேனே

திதிதிதிதி திதிதிதிதி
திக்திக் திதிந்திதிதி தத்தத் ததந்ததத
தெததததெத தெததததெத
தெத்தெதத் தெதந்ததெத திக்கட் டிகண்டிகட
ஜெகணகெண கெணஜெகுத
தெத்திக் ரியந்திரித தக்கத் தகுந்தகுர்த திந்திதிதோ

திகுடதிகு தொகுடதொகு
திக்கட் டிகண்டிகட டக்கட் டகண்டகட
டிடிடுடுடு டிடிடுடுடு
டிக்கட் டிகண்டிகட டுட்டுட் டுடுண்டுடுடு
திகுகுதிகு திகுகுகுகு
திக்குத் திகுந்திகுகு குக்குக் குகுங்குகுகு என்றுதாளம்

முதிர்திமிலை காடிகையி
டக்கைக் கொடுந்தாடிபு டுக்கைப் பெருப்பதலை
முழவுபல மொகுமொகென
ஒத்திக் கொடும்பிரம கத்திக் களும்பரவ
முகடுபுகு வெகுகொடிகள்
பக்கத் தெழுந்தலைய மிக்கக் கவந்தநிரை தக்கியாட

முதுகழுகு கொடிகருட
னெக்கத் திரண்டுவர டக்கப் பெருங்குருதி
முழுகியெழு பயிரவர்க
டிக்கிட் டகண்டமுப்பெ டிக்கத் தணிந்திர
முடுகிவரு நிசிசரரை
முட்டிச் சிரத்திருகி வெட்டிக் களம்பொருத தம்பிரானே. (௩௬௭)

குன்றக்குடி.

இது தஞ்சாவூர் ஸ்டேஷனிலிருந்து 23 மைல் தூலவிலிருக்கிறது.

தனதன தந்தத் தனதன தந்தத்
தனதன தந்தத் தனதான.

395. பிறர்புக ழின்சொற் பயிலுமி ளங்கைப்
பருவம தன்கைச் சிலையாலே
பிறவித ருஞ்சிக் கதுபெரு கும்பொய்ப்
பெருவழி சென்றக் குணமேவிச்
சிறுமைபொ ருந்திப் பெருமைமு டங்கிச்
செயலுமழிந்தற் பமதான
தெரிவையர் தங்*கட் கயலைவி ரும்பிச்
சிலசில பங்கப் படலாமோ
செறுவித வஞ்சக் கபடமொ டெண்டிக்
கிலுமெதிர் சண்டைக் கெழுசூரன்
கிளையுடன் மங்கத் தலைமுடி சிந்தக்
கிழிபட ஒன்றிப் பொருதோனே
†குறுமுனி இன்பப் பொருள்பெற அன்றுற்
பண ‡மனு வுஞ்சொற் குருநாதா
குலகிரி துங்கக் கிரியுயர் குன்றற்
குடிவளர் கந்தப் பெருமானே. (௩௫௮)

தனன தந்த தந்த தனன தந்த தந்த
தனன தந்த தந்த தனதான.

396. அழகெ றிந்த சந்த்ர முகவ டங்க லந்த
அமுத புஞ்ச இன்சொல் மொழியாலே
அடிது வண்ட தண்டை கலினெ னுஞ்சி லம்பொ
டணிச தங்கை கொஞ்சு நடையாலே

*கட்கயல்-சேலொத்தகண். †குறுமுனி-அகத்தியர். ‡மனு-மந்திரம்.

சுழியெ றிந்து நெஞ்சு சுழல நஞ்ச ணைந்து
தொடுமி ரண்டு கண்க ளதனாலே
துணைநெ ருங்கு கொங்கை மருவு கின்ற பெண்கள்
துயரை என்றொ ழிந்து விடுவேனோ
எழுது *கும்ப கன்பி னிளைய தம்பி நம்பி
எதிர டைந்தி றைஞ்சல் புரிபோதே
இதம கிழ்ந்தி லங்கை அசுர ரந்த ரங்க
மொழிய என்ற கொண்டல் மருகோனே
மழுவு கந்த செங்கை அரனு கந்தி றைஞ்ச
மனுவி யப்பி நின்ற குருநாதா
வளமி குந்த குன்ற நகர்பு ரந்த துங்க
மலைவி ளங்க வந்த பெருமாளே. (௩௯௬)

தனனதன தந்த தானன தனனதன தந்த தானன
தனனதன தந்த தானன தனதான.

397. கடினதட கும்ப மான வளருமிரு கொங்கை மேல்விழு
கலவிதரு கின்ற மாதரொ டுறவாடிக்
கனவளக பந்தி யாகிய நிழல்தனிலி ருந்து தேனுமிழ்
கனியிதழை மென்று தாடனை செயலாலே
துடியிடைநு டங்க வாள்விழி குழைபொருது லம்ப மூசிய
துகில்நெகிழ வண்டு கோகில மயில்காடை
தொனியெழவி ளைந்த கூரிய கொடுநகரி கைக்கு மோகித
துயில்வச இன்ப போகமது அழிவேனோ
இடிமுரச றைந்து பூசல்செய் அசுரர்கள்மு றிந்து தூளெழ
எழுகடல்ப யந்து கோவென அதிகோப
எமபடரு மஞ்சி யோமென நடுநடந டுங்க வேல்விடு
இரணமுக சண்ட மாருத மயிலோனே
வடிவுடைய அம்பி காபதி கணபதியி ருந்து வாழ்த்திட
வயலிநகர் குன்ற மாநகர் உறைவோனே
வகைவகைபு கழ்ந்து வாசவன் அரிபிரமர் சந்த்ர சூரியர்
வழிபடுதல் கண்டு வாழ்வருள் பெருமாளே. (௩௯௭)

* கும்பகன்பின் இளையதம்பி-கும்பகர்னன் தம்பியாகிய விபீஷணன்.

தனதனன தனதனன தனதனன தனதனன
தந்தத்த தத்ததன தந்தத்த தத்ததன தனதான.

398. *கருபநிலை குலையவிகல் மிருபகடின் வலியுடைய
தந்தத்தி னைத்தடிவ தொந்தத்தி ரத்தையுள
அகிலமறை புகழ்பாமர் நெகிழ்கல கலகலெனும்
அம்பொற்ப தத்தர்தனு வப்பொற்பொ ருப்படர்வ
களபபரி மளமொழுகும் எழிலொழு குவமுளரி
அஞ்சப்படைத்தெழுவ வஞ்சக்கருத்துமத னபிஷேகம்
கவடிபடு கொலையிடுவ கொடியமுக படமணிவ
வின்பச்சு டர்க்கனக கும்பத்த ரச்செருவ
பிறிதில்புள கிதசுகமு மிருதுளமும் வளரிளநீர்
புந்திக்கி டர்த்தருவ பந்தித்த கச்சடர்வ
கயல்மகர நிகரமிக வியன்மருவு நதியில்முதிர்
சங்கிப்பிழுத்தணிவபொங்கிக்கனத்தொளிர்வ முலைமாதர்
†வகுளமலர் குவளையிதழ் தருமணமு மிருகமத
மொன்றிக்க ருத்துமுகில் வென்றிட்டு நெய்த்தகுழ
லசையருசி யமிர்தக்ருத வரியமொழி மயில்குயிலெ
னும்பட்கு ரற்பகர வம்புற்ற மற்புரிய
வருமறலி அரணமொடு முடுகுசமர் விழியிணைகள்
கன்றிச்சி வக்கமகிழ் நன்றிச்ச மர்த்துநக நுதிரேகை
வகைவகைமெ யுறவளைகள் கழலவிடை துவளவிது
மூண்டிட்ப ரிக்கநகை கொண்டுற்ற ணைத்தவதி
செறிகலவி வலையிலெனை தறிவுடைய கலைபடுத
லுந்திப்பி றப்பறநி னைந்திட்ட முற்றுனடி
வயலிநகர் முருகசெரு முயல்பனிரு கரகுமர
நான்றட்டபிட்டகுணகுன்றக்குடிக்கதிப அருளாதோ
தகுகுதகு தகுதகுகு திகுகுதிகு திகுதிகுகு
தங்குத்த குத்தகுகு திங்குத்தி குத்திகுகு
சகணசக சகசகண செகணசெக செகசெகண
சங்கச்ச கச்சகண செங்கச்செ கச்செகண
தனனதன தனதனன தெனனதென தெனதெனன
தந்தந்த னத்தனன தெந்தந்தெ னத்தெனன தனனானா

* குயம் - இசை. † வகுளம் - மகிழ்.

தகுதகுகு தகுதகுதி திகுதிகுதி திகுதிகுதி
தங்குந்த குத்தகுகு திங்குக்தி குத்திகுகு
டணணடண டணடணண டிணிணிடிணி டிணிடிணிணி
டண்டட்ட டட்டடண டிண்டிட்டி டிட்டிடிணி
தாரதர தரதரர திரிரிதிரி திரிதிரிரி
தன்றத்த ரத்தரர தின்றிக்தி ரிக்திரிரி எனதாளந்

தொகுதிவெகு மூரிகர டிகைடமரு முழவுதவில்
தம்பட்ட மத்தளமி னம்பட்ட டக்கைபறை
பதலைபல திமிலைமுர லதிரவுதிர் பெரியதலை
மண்டைத்தி ரட்பருகு சண்டைத்தி ரட்கழுகு
தொடர்திமிட கருடனடர் குகரட மொகுமொகென
வந்துற்றி டக்குடர்தி ணைக்குற்றி சைத்திகிரி முதுபேய்கள்
*சுனகனரி நெறுநெறென இனிதினிது தினவினைசெய்
வெங்குக்கு டக்கொடி குங்குக்கு குக்குகென
†அடனமிடு திசைபரவி நடனமிட வடவிரவி
திங்கட்ப ரைக்கதிர்கள் மங்கப்ப ரித்துகில
தூரகஜ ரதகடக முரணரண நிருதர்விறல்
மிண்டைக்குலைத்தமர்செய்தண்டர்க்குரத்தையருள் பெருமாளே

தானான தனதான தானான தனதான
தானான தனதான தனதான.

399\. நாமேவு குயிலாலு மாமார னயிலாலு
நாடோறு மதிகாயும் வெயிலாலும்
நார்மாதர் வசையாலும் வேயூது மிசையாலும்
நாடாசை தருமோக வலையூடே
ஏமாறி முழுநாளு மாலாகி விருதாவி
லேவாடி விழியாதர் துயருடே
ஏகாம லழியாத மேலான பதமீதி
லேகியு னுடன்மேவ அருள்தாராய்
தாமோக முடனாறு பால்தோய வுரமூறு
தாளோடி விளையாடி அருபோதநில்

சுனகன் - நாய் † அடனமிடு - போகின்ற

தாயாக வருசோதை காணாது களவாடு
　தாமோத ரமுராரி மருகோனே

மாமாது வனமாது கார்மேவு சிலைமாது
　மாலாகி விளையாடு புயவீரா

வாழுடு புகழ்நாடு தேனூறு புடைசூழ
　*மாயூர கிரிமேவு பெருமாளே. (௩௯௯)

தானாதா தந்தன தத்தன
தானாதா தந்தன தத்தன
தானாதா தந்தன தத்தன தனதான.

400. நேசாசார டம்பர மட்டைகள்
　பேசாதேயே சுங்கள மட்டைகள்
　†சீசாளோடே யும்பழ கிக்கவர் பொருளாலே

நீயேநானே என்றொரு சத்தியம்
　வாய்கூசாதே தான்கப டத்திகள்
　நேராலேதா னின்றுபி லுக்கிகள் எவர்மேலும்

ஆசாபாசா தொந்தவை இட்டவர்
　மேல்வீழ்வார்பால் சண்டிகள் கட்டழ
　காயேமீதே தாவெங்கு மிறுக்கிகள் வெகுமோகம்

ஆகாதாவே சந்தரு திப்பொழு
　தேதோகோவாவா வென்று பகட்டிக
　ளாகாதோகா வம்பிகள் கிட்டிலும் உறவாமோ

பேசாதேபோய் நின்றுநி மிர்ந்துயிர்
　வாயாவாவா வென்றுகு டித்தருள்
　போராலேநீள் கஞ்சனை விட்டெதிர் வருதாதா

பேய்வாழ்வேதோ வாரக மட்டபகு
　வாய்நீள்பாறை சூர்ந்தசை யற்றொடு
　பேயோடேபோர் வென்றெறி யிட்டவன் மருகோனே

மாயூரகிரி என்பது-குன்றைக்குடி. † சீசாளோடேயும்-சீசரோடும்.

மாசூடாடா டும்பகை யைப்பகை
சூராளோடே வன்செரு வைச்செறு
மாசூராபா ரெங்கும ருட்பொலி முருகோனே
வாளுடேழ்நா டும்புகழ் பெற்றிடு
தோளுறேசூழ் தூங்கம லைப்பதி
மாயூராவாழ் குன்றைத ழைத்தருள் பெருமாளே. (௪௦௦)

பொதியமலை.

இது திருநெல்வேலிக்கு மேற்கே 35 மைல் தூலவிலிருக்கிறது.

தத்த தத்த தான தான தத்த தத்த தான தான
தத்த தத்த தான தான தனதான.

401. மைக்க ணிக்கன் வாளி போழ வுட்க ளத்தை யாறி நாடு
மட்டு முற்ற கோதை போது முடிசூடி
மத்த கத்தி னீடு கோடு வைத்த தொத்து மார்பி னோடு
வட்ட மிட்ட வாரு லாவு முலைமீதே
*இக்கு வைக்கு மாடை வீழ வெட்கி யக்க மான பேதை
எத்தி முத்த மாடும் வாயின் இதழூறல்
எட்டு துட்ட மாதர் பாய லிச்சை உற்றெ ழுக மாகி
எய்த்து நித்த மான வீனம் உறலாமோ
துர்க்கை † பக்க சூல காளி ‡ செக்கை புக்க தாள வோசை
தொக்க திக்க தோத கூத வெனவோதச்
சுற்றி வெற்றி யோடு தாள்கள் சுத்த நிர்த்த மாடு மாதி
சொற்கு நிற்கு § மாறு தார மொழிவோனே
திக்கு மிக்க வானி னோடு புக்க விக்க மூடு சூர்
|| திக்க முட்டி யாடு தீர வடிவேலா
செச்சை பிச்சி மாலை மார்ப இச்சை கொச்சை மாதி னோடு
¶ செப்பு வெற்பில் மேய தாள பெருமாளே. (௪௦௧)

---

* இக்கு வைக்கும் - தடையாக வைக்கும் † பக்க - முக்கிளையாகப் பகுப்புற்ற ‡ செக்கை - செங்கை § மாறுதாரம் - மறுஉத்தாரம். || திக்க - சிதற. ¶ செப்புவெற்பு - பொதியமலை, 'செம்புடைப் பொதிந்த தெய்வப் பொதியம்.

தனத்த தானன தனத்த தானன
தனத்த தானன தனத்த தானன
தனத்த தானன தனத்த தானன தந்ததான.

402. *வெடித்த வார்குழல் விரித்து வேல்விழி
விழித்து மேகலை பதித்து வார்தொடு
மிகுத்த மாமுலை அசைத்து நூலின்ம ருங்கிறுடை

மினுக்கி ஓலைகள் பிலுக்கி யேவளை
துலக்கி யேவிள நகைத்து வாள்விழி
மிரட்டி யாரையு மழைத்து மால்கொடு தந்தவாய்நீர்

குடித்து நாயென முடக்கு மேல்†பிணி
யடுத்து பாதிகள் படுத்த தாய்தமர்
குலத்தர் யாவரு நகைக்க வேயுடல் மங்குவேனைக்

குறித்து நீயரு கழைத்து மாதவர்
கணத்தின் பேவென அளித்து வேல்மயில்
கொடுத்து மோதக வொருத்த னுமென சிந்தைகூராய்

உடுட்டு டுடுடு டுடுட்டொ டோவென
திகுத்த தீதிகு திகுர்த்த தாவென
உடுக்கை பேரிகை தவிற்கு ழாமுமி ரங்குபோரில்

உலுத்த நீசர்கள் பதைப்ப மாகரி
துடிப்ப நீள்கட லெரித்து சூர்மலை
உடைத்து நீதிகள் பரப்பி யேயவ ரும்பராரை

அடைத்த மாசிறை விடுத்து வானுல
களிக்கு மாயிர திருக்க ஞனா
தளித்து நானுமெ னுளத்தி லேமகி ழுங்குமாரா

அளித்த தாதையு மிகுத்த மாமனும்
அனைத்து ளோர்களு மதிக்க வேமகிழ்
அகத்திய மாமுநி பொருப்பின் மேவிய தம்பிரானே. ()

---

* வெடித்த-நறுமணம் கமழ்கின்ற. †பிணி அடுத்து-உபாதிகள் படுத்த.

கழுகுமலை.

இது கோவிற்பட்டி ஸ்டேஷனுக்கு மேற்கே 12 மைல் தூரத்திலிருக்கிறது.

தனன தனதன தனத்த தானன
தனன தனதன தனத்த தானன
தனன தனதன தனத்த தானன தனதான.

403. குதலை மொழியினர் நிதிக்கொள் வாரணி
முலையை விலைசெய்வர் தமக்கு மாமயல்
கொடிது கொடிதுத னால்வ ருத்த மாயுறு துயராலே
குறுகி குறுகியே யிருக்க வாவொடு
பெரிய பிரபுர மிடத்தி லேபயி
குலைய அடிமையா யிருக்க லாகிய கொடுபாவி
மதலை மறுகிவா விபத்தி லேவெகு
பதகர் கொடியவ ரிடத்தி லேமிக
வறுமை புகல்வதே எனக்கு மோவினி முடியாதே
மருவு புலவனர் கவிக்கு ளோதுறு
வழுவ தறமகா சபைக்கு ளேமெய
வகைய பெயரதா †இலக்கண விதி மொழிவோனே
முதல வரிவிலோ டெதிர்த்த சூருடல்
மடிய அயிலையே விடுத்த வாகரு
முகிலை அனையதா நிறத்த மால்திரு மருகோனே
முளரி மலரனர் சிறைக்கு ளேபுக
நிறுவி பரமனர் செவிக்கு ளேயுறு
முடிவ தனைநுமா றுரைத்த வாவளி மணவாளா
கதறும் அடியரார் தமக்கெ ணுளமெ
உதவ விரைவிலே செலுத்து மாமயில்
கனக மயுரவா கனத்த னாகிய புயவீரா
கதலி கமுகுசூழ் வயற்கு ளேயெழி
இசையை முரலமா வனத்தில் மீறிய
கழுகு மலைமகா நகர்க்குள் மேவிய பெருமாளே. ([illegible])

---

* மருவு புலவனர் - கந்தபுராண கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள்.
† இலக்கணவிதி - இலக்கண + அ விதி; அ - அந்த என்பதின் குறுக்கம்.

தனதன தத்தத் தனத்த தானன
தனதன தத்தத் தனத்த தானன
தனதன தத்தத் தனத்த தானன தனதான.

404. முலையைம றைத்துத் திறப்ப ராடையை
நெகிழ உடுத்துப் படுப்பர் வாயிதழ்
முறைமுறை முத்திக் கொடுப்பர் பூமலர் அணைமீதே

அலைகுலை யக்*கொட் டணைப்ப ராடவர்
மனவலி யைத்தட் டழிப்பர் மால்பெரி
தவர்பொரு ளைக்கைப் பறிப்பர் வேசைகள் உறவாமோ

தலைமுடி பத்துத் தெறித்த ராவண
னுடல்துளை பட்டுத் துடிக்க வேயொரு
தநுவைவ ளைத்துத் தொடுத்த வாளியன் மருகோனே

கலைமதி அப்புத் தரித்த வேணிய
ருதவிய வெற்றித் திருக்கை வேலவ
கழுகும லைக்குட் சிறக்க மேவிய பெருமாளே. (௩௭௭)

தாந்த தனன தனன தாந்த தனன தனன
தாந்த தனன தனனந் தனதான.

405. கோங்கு முலையு மெலிய வீங்கு புளக களப
மோங்கு குவடு குழையும் படிகாதல்

கூர்ந்து குழையை அமளி தோய்ந்து குலவு மினிய
தேங்கு கலவி அமுதுண் டியல்மாதர்

வாங்கு பகழி விழியை மோந்து பகலு மிரவும்
வாய்ந்த துயிலை மிகவுந் தணியாது

வாஞ்சை உடைய அடிமை நீண்ட பிறவி அலையை
நீந்தி அமல அடிவந் தடைவேனோ

* கொட்டணைப்பர் கொண்டணைப்பர்.

*ஓங்க லனைய பெரிய சோங்கு தகர மகர
மேங்†கு ததியின் முழுகும் பொருசூரும்
ஓய்ந்து பிரமன் வெருவ வாய்ந்த குருகு மலையில்
ஊர்ந்து மயில தலவுந் தனிவேலா
வேங்கை அடவி மறவர் ஏங்க வனிதை உருக
வேங்கை வடிவு மருவுங் குமரேசா
வேண்டு மடியர் புலவர் வேண்ட அரிய பொருளை
வேண்டு மளவி லுதவும் பெருமாளே. (௩௭௮)

வள்ளியூர்.

இது நாங்கு நேரிக்குத் தென்கிழக்கு 5 மயில் தூலவிலிருக்கிறது.

தைய தானன தனதான தைய தானன தனதான.

406. அல்லில் நேருமின் அதுதானும் அல்ல தாகிய உடல்மாயை
கல்லி னேரவ வழிதோறும் கையு நானுமு லையலாமோ
சொல்லி னேர்படு முதுசூரர் தொய்ய வூர்கெட விடும்வேலா
வல்லி மாரிரு புறமாக வள்ளி யூருறை பெருமாளே (௩௭௯)

கதிர்காமம்.

இது இலங்கைத்தீவில் யாழ்ப்பாணத்திற்குத் தென்கிழக்கிலிருக்கிறது

தனதனன தான தனதனன தான
தனதனன தானத் தனதானா.

407. திருமகளு லாவு மிருபுயமு ராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி அணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்

*ஓங்கலனைய பெரியசோங்கு-மரக்கலம். †உததி-கடல்.

அருவரைகள் நீறு படவசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினையி லாத தருவினைவி டாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே. (௱௮௰)

தனன தான தானன தனன தான தானன
தனன தான தானன தனதான.

408. *அலகின் மாறு மாறுத †கலதி பூத வேதாளி
அடைவில் ‡ஞாளி கோமாளி அறமீயா
அழிவு கோளி நாணுது புழுகு பூசி வாழ்மாதர்
அருளி லாத தோடோய மருளாகி
பலக லாக ராமேரு மலைக ராச லாவீசு
பருவ மேக மேதாரு எனயாதும்
பரிவு றாத மாபாதர் வரிசை பாடி ஓயாது
பரிசில் தேடி மாயாத படிபாராய்
இலகுவேலை நீள் §வாடை எரிகொள் வேலை மாசூரி
லெறியும் வேலை மாறாத திறல்வீரா
இமய மாது பாகீர திநதி பால காசார
விறைவி கான மால்வேடர் சுதைபாகா
கலக வாரி போல்மோதி வடவை ஆறு சூழ்சீத
கதிர காம மூதூரில் இளையோனே
கனக நாடு வீடாய கடவுள் ||யானை வாழ்வான
கருணை மேரு வேதேவர் பெருமாளே. (௱௮௧)

* அலகின்மாறு - கூட்டுமாறு. † கலதி - மூதேவி. ‡ ஞாளி - நாய்.
§ வாடையெரி - வடவாமுகாக்கினி. || யானை - தெய்வயானை.

தனன தான தத்த தனதான தனன தான தத்த தனதான.

409. எதிரி லாத பத்தி தனைமேவி இனிய தாளி னைப்பை இருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி எனது ளேசி றக்க அருள்வாயே
கதிர காம வெற்பி லுறைவோனே கனக மேரு ஒத்த புயவீரா
மதுர வாணி உற்ற கழலோனே வழுதி கூனி மிர்த்த பெருமாளே. ()

தனதன தனதன தனதன தனதன
தானத் தனந்த தனதான.

410. கடகட வருவிகள் தப*வரி அதிர்கதிர்
காமத் தடங்க மலைவீரா
கன†கத நககுலி புணரித குவைகுக
‡காமத் தனஞ்சம் புயனோடே
வடசிக ரகிரித விடுபட§நடமிடு
மாவிற் புகுங்கந் த||வழாது
வழிவழி தமரென வழிபடு கில¶னென
வாவிக் கினைப்பொன் றிடுமோதான்
அடவியி ருடியபி நவகும ரியடிமை
யாயப் புனஞ்சென் றுயர்வோனே
அயிலவ**சபரிசெய் கவிபுகல் தருகவி
யாளப் புயங்கொண் டருள்வோனே
இடமொரு மாகத மயிலிசை வடிவுள
ஏழைக் கிடங்கண் டவர்வாழ்வே
இதமொழி பகிரிறு மதமொழி பகிரிறு
மேழைக் கிரங்கும் பெருமாளே. (ஈ.ய)

தன்னதன தானத்த தனனதன தானத்த
தன்னதன தானத்த தனதான தானனு.

411. சமரமுக வேலொத்த விழிபுரள வாரிட்ட
தனமசைய வீதிக்குள் மயில்போலு லாவியே,

---

* வரி-கீற்றுகளையுடையபுலி † கத நகம் - கோபத்தையுடைய மலையையொத்த யானை ‡ காம அத்தன்-மன்மதன் பிதாவாகிய விஷ்ணு 'காமத் தன் அஞ்சு அம்புயன் ஓட' எனப்பிரிக்க. அஞ்சு அம்புயன் - அரன். § நடமிடுமா - மயிற்குதிரை. || வழாது-வழுவாமல், ¶ எனவாவிக்கினம் - என் அவா விக்கினம், ** சபரிசெய்கவி - பூஜை செய்த நக்கீரர்.

சரியைக்ரியை யோகத்தின் வழிவருக்கு பாசுத்தர்
தமையுணர ராகத்தின் வசமாகமேவியே
உமதடியு ளுருக்கு மனுமரண மாயைக்கு
முரியவர்ம காதத்தை எனுமாயமாதரார்
ஒளிரமணி பீடத்தி லமடுபடு வேனுக்கு
முனதருள்க்ரு பாசித்தம் அருள்கூரவேணுமே
இமகிரிகு மாரத்தி அருபவைப ராசத்தி
எழுதரிய காயத்ரி உமையாள்குமாரனே
எயினர்மட மானுக்கு மடலெழுதி மோகித்து
இதணருகு சேவிக்கு முருகாவிசாகனே
அமரர்சிறை மீள்விக்க அமர்செய்துப்ர தாபிக்கு
மதிகவித சாமர்த்ய கவிராஜராஜனே
* அழுதுலகை வாழ்வித்த கவுணியகு லாதித்த
அரியகதிர் காமத்தில் உரியபிரமனே. (௩௮௪)

தனத்தா தனத்தா தனத்தா தனத்தா
தனத்தா தனத்தா தனதான.

412. சடத்தே உதித்தா யுடத்தே குதித்தே
சமர்த்தா எதிர்த்தே வருகூரைச்
சரிப்போ னமட்டே விடுத்தா யடுத்தாய்
தகர்த்தா யுடற்றுன் இருகூறுச்
செடத்தோ டுரத்தோ டடுத்தே குவித்தாய்
செருத்தாய் பலத்தார் விருதாகச்
சிறைச்சே வல்பெற்றாய்† வலக்கா ரமுற்றாய்
திருத்தா மரைத்தாள் அருள்வாயே
புரத்தார் ‡வரத்தார் சரச்சே கரத்தார்
பொரத்தா னெதிர்த்தே வருபோது

* இக்கருத்தை:—
"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப்புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்" என்னும் பெரிய புராணத் திருவிருத்தத்தாற் காண்க.
† வலக்காரம் - வென்றி. ‡ வரத்தார் - வரப்பிரசாதிகள்.

பொறுத்தார் பரித்தார் சிரித்தார் எரித்தார்
　　பொரித்தார் நுதற்பார் வையிலேயின்
கரித்தோ லுரித்தார் விரித்தார் தரித்தார்
　　கருத்தார் * மருத்தூர் மதனைக்
கரிக்கோ லவிட்டார் † கனுக்கா னமுத்தே
　　கதிர்க்காம முற்றூர் பெருமாளே. (௩௮௫)

தனதன தத்தனத் தனதன தத்தனத்
தனதன தத்தனத் தனதான.

413. சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
　　சகலயோ கர்க்குமெட் டரிதாய
சமயபே தத்தினுக் கணுகொணு மெய்ப்பொருட்
　　டருபரா சத்தியிற் பரமான
துரியமே லற்புதப் பரமஞா னத்தனிச்
　　சுடர்வியா பித்தநற் பதிநீடு
துகளில்சா யுச்சியக் கதியையீ றற்றசொற்
　　சுகசொரூ பத்தையுற் றடைவேனோ
புரிசைசூழ் செய்ப்பதிக் குரியசா மர்த்யசற்
　　புருஷவீ ரத்துவிக் ரமசூரன்
புரளவேல் தொட்டகைக் குமரமேன் மைத்திருப்
　　புகழையோ தற்கெனக் கருள்வோனே
‡ கரியபூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக்
　　கனிகள்பீ றிப்புரித் ததராடிக்
கதலிசூ தத்தினிற் பயிலுமீ ழத்தினிற்
　　கதிரகா மக்கிரிப் பெருமாளே. (௩௮௬)

தானதன தத்தத்த தானதன தத்தத்த
தானதன தத்தத்த தனதான.

414. பாரவித முத்தப்ப டாபுள கப்பொற் § ப
　　யோ தரநெ ருக்குற்ற இளமாலை

* மருத்தூர் - தென்றற்காற்றுகிய தேரை நடத்தும். † கனுக்கான - கன்னுக்கான. ‡ கரிய பூகம் - கருங்கமுகு. § பயோதரம் - தனம்.

பாகளவு நித்தித்த கீதமொழி யிற்புட்ப
பாணவிழி யிற்பொருந்தி விடுமாதர்
காரணிகு முற்கற்றை மேல்மகர மொப்பித்த
காதில்முக வட்டத்தில் அதிமோக
காமுகன கப்பட்ட ஆசையைம றப்பித்த
கால்களைம றக்கைக்கும் வருமோதான்
தேரிரவி உட்கிப்பு காமுதபு ரத்திற்றெ
சாசிரனை மர்த்தித்த அரிமாயன்
சீர்மருக அங்குக்ர யானைபடும் ரத்நத்ரி
கோணசயி லத்துக்ர கதிர்காம
வீரபுன வெற்பிற்க லாபியெயி னச்சிக்கு
மேகலையி டைக்கொர்த்தின் இருதாளின்
வேரிமழை யிற்† பச்சை வேயிலரு ணக்கற்றை
வேல்களில கப்பட்ட பெருமாளே. (௩௮௭)

தனதனு தத்த தனதனு தத்த
தனதனு தத்த தனதான.

415. மருவரு வெற்றி மலர் § தொடா விற்கை
வலிசெயா நிற்கு மதனாலும்
மதில்கள் தூர வுற்ற கலைபடா வட்ட
மதி ‡ சுடா நிற்கு மதனாலும்
இருகணுல் முத்த முதிரயா மத்தி
னிரவினால் நித்த மெலியாதே
இடருறு மெத்த மயல்கொளா நிற்கு
மிவளைவாழ் விக்க வரவேணும்
கரிகள்சேர் வெற்பி லரியவே டிச்சி
கலவிகூர் சித்ர மணிமார்பா
ககனமா னிக்க வடிவனே மிக்க
கதிர்கா மத்தில் உறவோனே

வேரிமழை-வாசனை தங்கிய மேகம்போன்ற குழல். †பச்சைவேய்-புசிய மூங்கிலை யொத்ததோள். § தொடா-தொடுத்து ‡சுடாநிற்கும்-சுடும்.

முருகனே பக்த ரருகனே மூர்த்தி
முதல்வனே பச்சை மயில்வீரா
முடுகிமே விட்ட கொடியசூர் கெட்டு
முறியவேல் தொட்ட பெருமாளே. (௩௮௮)

தானதன தானத் தனதான தானதன தானத் தனதான.

416. மாதர்வச மாயுற் றழல்வாரும் மாதவமெ ணாமற் றிரிவாரும்
தீதகல வோதிப் பணியாரும் தீரக மீதிற் றிகழ்வாரே
நாதவொளி யேநற் குணசீலா நாரியிரு வோரைப் புணர்வேலா
சோதிசிவ ஞானக் குமரேசா தோமில்கதிர் காமப் பெருமாளே ()

தனன தான தான தத்த தனன தான தான தத்த
தனன தான தான தத்த தனதான.

417. முதிரு*மார வார நட்பொ †டிலகு மார வார மெற்றி
முனியு மார வார முற்ற கடலாலே
முடிவி லாத தோர்‡வ டக்கில் எரியு §மால மார்பி டத்து
முழுகி ஏற மேலெ றிக்கு நிலவாலே
||வெதிரி லாயர் வாயில் வைத்து மதுர ராக நீடி சைக்கும்
வினைவி டாத தாய ருக்கு மழியாதே
வினையு மோக போக முற்றி அளவி லாத காதல் பெற்ற
விகட மாதை நீய ணைக்க வரவேணும்
கதிர காம மாந கர்க்கு ளெதிரி லாத வேல்த ரித்து
கடவு ளேக லாப சித்ர மயில்வீரா
கயலு லாம்வி லோச னாந்தி களப மார்ப யோத ரத்தி
ககன மேவு வா¶ ளொ ருத்தி மணவாளா
அதிர வீசி யாடும் வெற்றி விடை யி லேறு மீசர் கற்க
அரிய ஞான வாச கத்தை அருள்வோனே
அகில லோக மீது சுற்றி அசுர லோக நீறெ ழுப்பி
அமரர் லோகம் வாழ வைத்த பெருமாளே. (௩௮௯)

மார வார நட்பொடு-மாரனுக்கு உரிமையாகிய முதிர்ந்த நட்புடன். † இலகும் ஆர் அ ஆரம் எற்றி-பிரகாசிக்கின்ற அரிய அந்த முத்துக்களை எற்றி ‡ வடக்கில் எரி-வடவா முகாக்கினி. § ஆலம் ஆர்பு இடம் - கடல். || வெதிர் - மூங்கில் ¶ ஒருத்தி - தெய்வயானையம்மையார்.

அருக்கோணமலை.

தனத்த தானன தனத்த தானன
தனத்த தானன தனத்த தானன
தனத்த தானன தனத்த தானன தனதான,

418. கொடுத்த வாளென விழித்து மார்முலை
அசைத்து மேகலை மறைத்து மூடிகள்
அடித்து நேர்கலை நெகிழ்த்து மாவியல் கொளுமாதர்

சுகித்த றாவெனு நகைத்து மேல்விழு
முடித்த வார்குழல் விரித்து மேவிதழ்
*துவர்த்த வாய்சரு ளடக்கி மால்கொடு வழியேபோய்ப்

படுத்த பாயலி லணைத்து மாமுலை
பிடித்து மார்பொடு மழுத்தி வாயிதழ்
கடித்து நாணமு தழித்த பாவிகள் வலையாலே

படுத்து நோயொடு கிடத்து பாய்மிசை
வெளுத்து வாய்களு †மலத்தி னாயென
பரித்து தாகமு மெடுத்தி டாவுயிர் உழல்வேனோ

‡வெடுத்த தாடகை சினத்தை ஓர்கணை
விடுத்து யாகமும் நடத்தி யேயொரு
மிகுத்த வார்சிலை முறித்த மாயவன் மருகோனே

விதித்து நான்முக னளித்து வேதனை
அதிர்த்து மோர்முடி §கரத்தி லாயனல்
விழித்து மாமனை எரித்த தாதையர் குருநாதா

அடித்த ஆழிவி டப்ப ணாமுடி
நடுக்க மாமலை பிளக்க வேகவ
டாக்கள் மாமுடி பதைக்க வேயொரு மயில்வீரா

அறத்தில் வாழுமை சிறக்க வேயறு
முகத்தி லேறடி குறத்தி யானையொ
டருக்கொ ணாமலை தருக்கு லாவிய பெருமாளே. (௱௬௧)

---

* துவர்த்த - பவளமொத்த † மலத்தினாய் மலம் தின் நாய் ‡ வெடுத்த - வெடு வெடுத்த. § கரத்திலாய் - கரத்தில் வைத்துக்கொண்டிருப்பவனாய்.

திருக்கோணமலை.

இது யாழ்ப்பாணத்துக்குத் தென்கிழக்கே இருக்கிறது.

தனத்த தானன தனத்தான தானன
தனத்த தானன தனத்தான தானன
தனத்த தானன தனத்தான தானன தனதான.

419. விலைக்கு மேனியி லணிக்கோவை மேகலை
தரித்த ஆடையு மணிப்பூணு மாகவெ
மினுக்கு மாதர்க ளிடைக்காம மூழ்கியெ மயலூறி

மிகுத்த காமிய னெனப்பாரு ளோரெதிர்
நகைக்க வேயுட லெடுத்தேவி யாகுல
வெறுப்ப தாகியெ உழைத்தேவி டாய்படு கொடியேனைக்

கலக்க மாகவெ மலக்கூடி லேமிரு
பிணிக்கு ளாகியெ தவிக்காம லேயுனை
கவிக்கு ளாய்சொலி கடைத்தேற வேசெயு மொருவாழ்வே

கதிக்கு நாயக உனைத்தேடி யேபுக
ழுரைக்கு நாயெனை அருட்பார்வை யாகவெ
கழற்கு ளாகவெ சிறப்பான தாயருள் தரவேணும்

மலைக்கு நாயக சிவக்காமி நாயகர்
திருக்கு மாரனெ முகத்தாறு தேசிக
வடிப்ப மாதொரு குறப்பாவை யாள்மகிழ் குருவேளே

வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்
அகத்ய மாமுநி இடைக்காடர் கீரனும்
வருத்த மாவுறு பொருட்கோல மாய்வரு முருகோனே

நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கொ ணாமலை தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில் வருவோனே

நிகழ்த்து மேழ்பவ கடற்சூறை யாகவெ
எடுத்த வேல்கொடு பொடித்தூள தாகவெ
நினைத்த காரிய மநுக்கூல மேபுரி பெருமாளே. ([illegible])

புகழிமலை

தனதனன தான தனதனன தான
தனதனன தான தனதான.

420. மருவுமலர் வாச முறுகுழலி னாலும்
வரிவிழியி னாலு மதியாலும்
மலையினிக ரான இளமுலைக ளாலு
மயல்கள்தரு மாதர் வகையாலும்
கருதுபொரு ளாலு மனைவிமக வான
கடலலையில் மூழ்கி அலைவேனோ
கமலபத வாழ்வு தரமயிலின் மீது
கருணையுட னேமுன் வரவேணும்
அருமறைக ளோது பிரமன்முதல் மாலும்
அமரர்முனி ராசர் தொழுவோனே
அகிலமுல கோது நதிமருவு சோலை
அழகுபெறு போக வளநாடா
பொருதவரு சூரர் கிரியுருவ வாரி
புனல்சுவற வேலை எறிவோனே
புகலரிய தான தமிழ்முனிவ ரோது
புகழிமலை மேவு பெருமாளே. (௱௬௩)

தனிச்சயம்.

இது காவிரிநதி உற்பத்தியாகும் குடகுமலையிலிருக்கிறது

தனத்தனத் தனத்தனத் தனத்தனத் தனத்தனத்
தனத்தனத் தனத்தனத் தனதான.

421. இலைச்சுருட் கொடுத்திலைக் கலைத்திருத் திமட்டைகட்
கிதத்துடற் குறுற்களிட் டனுராகம்
எழுப்பியைக் கயற்கணைக் கழுத்தையுற் றமிட்டணைத்
தெடுத்திதழ்க் கடித்துதட் டிடைதாவி
அலைச்சலுற் றிளைப்பையுற் றழைப்பைபெற் றுழைத்துழைத்
தலக்கணுற் றுயிர்க்களைத் திடவேதான்
அறத்தவிர்த் திரைத்துறத் தனத்தினிற் புணர்ச்சிபட்
டயர்க்குமிப் பிறப்பினித் தவிராதோ

கொலைச்செருக் காக்கரைக் கலக்குமிக் கருக்குடைக்
கொடித்திருக் காத்தபொற் பதிபாடுங்
குறித்தநற் றிருப்புகழ்ப் ப்ரபுத்துவக் கவித்துவக்
குருத்துவத் தெனைப்பணித் தருள்வோனே
தலைச்சுமைச் சடைச்சிவற் கிலக்கணத் திலக்கியத்
தமிழ்த்ரயத் தகத்தியற் கறிவோதுஞ்
சமர்த்தரிற் சமர்த்தபச் சிமத்திசைக் குறுத்தமத்
தனிச்*சயத் திணிற்பிளைப் பெருமாளே. (௪௨௧)

பசுமலை.

இது மதுரைக்குத் தெற்கே மூன்றுமைல் துலைவிலுள்ளது.

தத்தானத் தாத்தத் தனதன
தத்தானத் தாத்தத் தனதன
தத்தானத் தாத்தத் தனதன தனதான.

422. சிற்றாயக் கூட்டத் தெரிவையர்
வித்தாரச் சூழ்ச்சிக் கயல்விழி
சற்றேறப் பார்த்துச் சிலபணி விடையேவிச்
சிற்றூபத் தாக்கைப் பொருள்கொடு
* பித்தேறிக் கூப்பிட் டவர்பறி
செட்டாமற் றூர்த்தத் தலைபடு சிறுகாலை
உற்றார்பெற் றோர்க்குப் பெரிதொரு
பற்றாயப் பூட்டிக் கயிறுகொ
டுச்சாயத் தாக்கைத் தொழிலொடு தடுமாறி
உக்காரித் தேக்கற் றுயிர்நழு
விக்காயத் தீப்பட் டெரியுட
லுக்கேன் †மெய்க் காட்டைத் தவிர்வதும் ஒருநாளோ
வற்றாமற் றூர்ப்பச் சிலைமலை
வெற்பால்கைப் பார்த்துத் தருமொரு
மைக்காமக் கோட்டிக் குலமயில் தருமானை

---

* பித்தேறி - பித்தேற்றி † மெய்க்காடு - பொய்ச்சடலம்.

மத்தோசைப் போக்கிற் றயிருறி
நெய்ப்பாலுக் காய்ச்சிக் கிருபதம்
வைத்தாடிக் காட்டிப் பருகரி மருகோனே
*கற்றூவிற் காட்டிக் †கரைதுறை
‡நற்றூயிற் காட்டிப் புகழ் §கலை
கற்றோர்சொற் கேட்கத் தனிவழி வருவோனே
கைச்சூலக் கூற்றைக்கடிபது
மத்தாளர்க் கேற்பக் கனல்மொழி
கற்||றூவுக் கோட்டுக் குருகிய பெருமாளே. (௪௨௨)

திருக்காளத்தி.

இது ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே 2 மைல் துலைவிலிருக்கிறது.

தனத்தா னத்தத் தனனு தந்தத்
தனத்தா னத்தத் தனனு தந்தத்
தனத்தா னத்தத் தனனு தந்தத் தனதான.

423\. ¶சாக்கே றித்தப் பதிவாழ் தொந்தப்
பரிக்கா யத்திற் பரிவோ டைந்துச்
சதிக்கா ரர்ப்புக் குலமே வித்தச் செயல்மேவிச்
சலித்தே யெத்துச் சமுசா ரம்பொற்
சுகித்தே சுற்றத் தவரோ டின்பத்
தழைத்தே மெச்சத் தயவோ டிந்தக் குடிபேணிக்
$குரக்கோ ணத்திற் கழுநா யுண்பக்
குழிக்கே வைத்துச் சவமாய் நந்திக்
குறிக்கே நத்திப் பழுதாய் மங்கப் படுவேனைக்
குறித்தே முத்திக் கு*மாறு இன்பக்
கடைக்கே பற்றிச் சகமா யம்பொய்க்
குலைக்கால் வற்றச் சிவஞா னம்பொற் கழல்தாராய்

---

* கல் தா வில் காட்டி - மலையை யொத்த வலியுள்ள வில்லைக் காட்டி. † கரை துறை - சொல்லுகின்ற துறையை. ‡ நற்றாயில் காட்டி புகழ் - நற்றாயிரங்கலாகப் "பொன்போலுங் கள்ளி" என்றெடுத்துக்காட்டிப்புகழ்ந்த. § கலைகற்றோர் - பொய்யாமொழிப்புலவர். || ஆவுக்கோடு பசுமலை. ¶ சாக்கு ஏறு இத்த பதி - பொருள்கள் மிகுந்த இப்புவியிடம், இத்த - இந்த. $ குரக்கோணத்திற்கழு - குளம்புத் தன்மையுள்ள மூக்கையுடைய கழு. * மறு - மாறு.

புரக்கா டற்றுப் பொடியாய் மங்கக்
கழைச்சா பத்*தைச் சடலா னுங்கப்
புகைத்தீ பற்றப் புரிவோ ரன்புற் றருள்வோனே
புடைத்தே எட்டுத் திசையோ ரஞ்சத்
தனிக்கோ லத்துப் புகுசூர் மங்கப்
புகழ்ப்பேர் சத்திக் கிரையா நந்தத் தருள்வோனே
திருக்கா னத்திற் பரிவோ டந்தக்
குறக்கோ லத்துச் செயலா னஞ்சத்
திகழ்ச்சீ ரத்திக் கு†ழல்வா வென்பப் புணர்வோனே
சிவப்பே றுக்குக் கடையேன் வந்தட்
புகச்சீர் வைத்துக் கொளுந்தோ னம்பொற்
றிருக்கா ளத்திப் பதிவாழ் கந்தப் பெருமாளே. ([illegible])

தனத்தானத்தத் தனதான தனத்தானத்தத் தனதான.

424. சிரத்தானத்திற் பணியாதே செகத்தோர் பற்றைக்குறியாதே
வருத்தா மற்றொப் பிலதான மலர்த்தாள் வைத்தெத் தனையாள்வாய்
நிருத்தா கர்த்தத் துவநேசா நினைத்தார் சித்தத் துறைவோனே
திருத்தாள் முத்தர்க் கருள்வோனே திருக்கா ளத்திப்பெருமாளே.()

தந்தன தானத் தனந்த தானன
தந்தன தானத் தனந்த தானன
தந்தன தானத் தனந்த தானன தனதான.

425. பங்கய னார்பெற் றிடுஞ்ச ராசர
அண்டம தாயுற் றிருந்த பார்மிசை
‡ பஞ்சவர் கூடித் திரண்ட தோர்நர உருவாகி
பந்தம தாகப் பிணிந்த ஆசையில்
இங்கித மாகத் திரிந்து மாதர்கள்
பண்பொழி சூதைக் கடந்தி டாதுழல் §படிறோடே
சங்கட னாகித் தளர்ந்து நோய்வினை
வந்துடல் மூடக் கலங்கி டாமதி
தந்தடி யேனைப் புரந்தி டாயுனை அருள்வாயே

* சடலான் - அழகிய தேகத்தையுடைய மன்மதன். † அழல்வா என்ப அழாதே, வா என்ன. ‡ பஞ்சவர் - ஐந்துபூதங்கள். § படிறு - வஞ்சகம்.

சங்கரர் வாமத் திருந்த நூபுர
சுந்தரி யாயித் தருஞ்*சுதாபத
சண்டைய னேகுக் குடம்ப தாகையின் முருகோனே
†திங்களு ராவப் பணிந்த வேணியர்
பொங்கர வாடப் புனைந்த மார்பினர்
திண்சிலை சூலத் தழுந்து பாணியர் நெடிதாழ்வார்
‡சிந்துவி லேயுற் றெழுந்த காளவி
டங்§கள மீதிற் சிறந்த சோதியர்
திண்புய மீதிற் றவழ்ந்து வீறிய குருநாதா
சிங்கம தாகத் திரிந்த மால்கெரு
வம்பொடி யாகப் பறந்து சீறிய
சிம்புள தாகச் சிறந்த காவென வருகோமுன்
செங்கதி ரோனைக் கடிந்த தீவினை
தந்திட வேதற் றவஞ்செய் தேறிய
||தென்கயி லாயத் தமர்ந்து வாழ்வருள் பெருமாளே. ()

திருவருணை.

இது திருவண்ணாமலையிலிருந்து அரைமைல் தூலவிலிருக்கிறது

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன தனதான.

426. குமர குருபர குணதர நிசிசர
திமிர திநகர சரவண பவகிரி
குமரி சுதபதி நிகளச கரபதி குலமானுங்
குறவர் சிறுமியு மருவிய திரள்புய
முருக சரவண உருகுதல் சிறிதுமில்
கொடிய வினையனை அவலனை அசடனை அதிமோகக்
காரில் விழுவிடு மழகுடை அரிவையர்
நாபி லெறிபொரு ளளவள வருளிய
கலவி அளறிடை துவளுறும் வெறிதனை இனிநாளக்

* சுதா-புதல்வனே. † திங்கள் உலவு அப்பு எனப்பிரிக்க. ‡ சிந்து-சமுத்திரம். § களம் - கண்டம் || தென்கயிலாயம்- திருக்காளத்தி.

கருணை அடியரொ டருணையி லொருவிசை
கருதி புடைதர வருமிரு பரிபுர
கமல மலரடி கனவிலு நனவிலு மறவேனே

தமர மிகுதிரை எறிவளை கடல்குடல்
மறுகி அலைபட விடநதி உமிழ்வன
சமுக முககண பணபணி பதிநெடு வடமாகச்

சகல உலகமு நிலைபெற நிறுவிய
கனக கிரிதிரி தரவெகு கரமலர்
தளர வினியதொ ரமுதினை ஒருதனி கடையாநின்

றமரர் பசிகெட உதவிய கிருபைமுகில்
அகில புவனமு மளவிடு குறியவன்
அளவு நெடியவ னளவிட அரியவன் மருகோனே

அரவு புனைதரு புனிதரும் வழிபட
மழலை மொழிகொடு தெளிதர வொளிதிகழ்
அறிவை அறிவது பொருளென அருளிய பெருமாளே.

427. அருவ மிடையென வருபவர் துவரிதழ்
அமுது பருகியு முருகியு ம்ருகமத
அளக மலையவு மணிதுகி லகலவும் அதிபார

அசல முலைபுள கிதமெழ அமளியில்
அமளி படவண வரதமு மவசமொ
டணையு மழகிய கலவியு *மலமலம் உலகோரைத்

தருவை நிகரிடு புலமையு மலமல
முருவு மிளமையு மலமலம் விபரித
சமய கலைகளு மலமல மலமுறும் வினைவாழ்வுந்

†சலில லிபியன சனனமு மலமல
மினியு னடியரொ டொருவழி படவிரு
தமர பரிபுர சரணமு மனமுறு மநுபவமே

உருவு கரியதொர் கணைகொடு பணிபதி
இருகு [illegible] [illegible]
துருளை இருசுடர் வெளிபட [illegible] [illegible]

* அலம் அலம் போதும் போதும். † சலில லிபி யன - நீர்மேலெழுத்தான.

உறுதி படுசுர தமிசை அடியிட
நெறுநெ றெனமுறி தலுநிலை பெறுதவம்
உடைய ஒருவரு மிருவரு மருள்பெற ஒருகோடி

தெருவு நகரியு நிசிசரர் முடியொடு
சடசெ டெனவடி படுவன புகைவன
திகுதி கெனவெரி வனவனல் நகைகொடு முனிவார்தஞ்

சிறுவ வனசரர் சிறுமியொ டுருகிய
பெருமை வருணையி லெழுநிலை திகழ்வன
சிகரி மிசையொரு கலபியி லுலவிய பெருமாளே. ()

428\. கருணை சிறிதுமில் பதிதலை *நிசிசரர்
பிசித அசனம றவர்முத லிய
கலக விபரித வெகுபர சமயிகள் பலர்கூடிக்

கலக மெனநெறி கெட முறை முறைமுறை
கதறி வதறிய குதறிய கலைகொடு
கருத வரியதை விழுபுனல் வடமொழி குளறுவன்

புருகி உனதருள் பரவுகை வரில்விர
கொழியி லுலவியல் பிணைவிட லுரைசெய
லுணர்வு கெடலுயிர் புணரிரு வினையள றதுபோக

உதறி யெனதுள மலமற அறிவினி
லொளிர்வ பெறவெளி மறைபறை அறைவதொ
ருதய மநாமயப் பொருளினை அருளுவ தொருநாளே

தருண சததள பரிமள பரிபுர
சரணி கமனிய சதுர்தளி திரிபுர
தகனி கவுரிப வதிபக வதியபி ராமிசூலி

சாமள குமரியு பணையுமை திரிபுரை
சகல புவனமு முதவிய பதிவ்ருதை
சமய முதல்வி தயாபரி ரதிசுத சதகோடி

அருண ரவியினு மழகிய ப்ரபைவிடு
கருணை வருணித தனுபர குருபர
அருணை நகருறை சரவண குகவணி புயவேளே

*நிசிசரர் பிசித அசன மறவர்-இராக்கதரையும் மறவரையும் ஒத்த சமணர்

அடவி சார்குல மாகத வனிதையு
மமரர் குமரியு மணவா தழுமரு
கழகு பெறநிலை பெறவ மருளிய பெருமாளே. ()

429. துகிலு ம்ருகமத பரிமள அளகமும்
நெகிழ இருதன கிரியசை தரவிடை
துவள மணிதரு மமரரு முநிவரு முடனேடித்

தொடர வனமணி மகரமி லகுகுழை
அடரு வனவிட மிளிர்வன ரதிபதி
சுருதி மொழிவன கயல்விழி புரள்தர நடுவாக

வகிரு மதிபுரை தருநுதல் பனிவர
வனச பதயுக பரிபுர மொலிபட
மறுகு தொறுமுலை விபனிய கலவியை விலைகூறும்

*வரைவி லரிவையர் தருகக சலதியி
லலையு மெனதுயி ரறுதினை நெறிதரு
மவுன சிவசுக சலதியில் முழுகுவ தொருநாளே

முகிலு மதியமும் ரவியெழு புரவியும்
நெடிய சுலைமிட றிடறமு துருகன
முகடு கிழிபட வளர்வன கமுகினை பிளவாகி

முடுகு கயலுகள் வயல்களு முருகவிழ்
தடமு முளரிய அகழியு மதில்களு
முழுது முடையதொ ரருணையி லுறைதரு [illegible]

அகிலு மருதமு முகுளித வகுளமு
மமுத கதலியு மருணமும் வருடையு
மபரி மிதமத கரிகளு மரிகளு முடனோடும்

டருவி இழிதரு மருவரை தனிலொரு
† சவர வனிதையை முனிதரு புனிதமதாய்
அவச முடன்மல ரடிதொழு தருளிய பெருமாளே ()

430. மகர மெறிகடல் விழியினு மொழியினு
மதுப முரல்குழல் வகையினு நகையினு
வளமை இனுமுக நிலவினு நினைவினு [illegible]

*வரைவிலரிவையர்-பொதுமாதர். † சவரர் வனத்தில் வசிக்கும் வேடர்.

மதுர இதழினு மிடையினு நடையினும்
மகளிர் முகுளித முலையினு நிலையினும்
வனச பரிபுர மலரினு முலரினும் — அவர்நாமம்

பகரு கினுமவர் பணிவிடை திரிகினு
முருகி நெறிமுறை தவறினு மவரொடு
பகடி இடுகினு மமளியி லவர்தரு — மநுராக

பறவை படியினும் வசமழி யினுமுத
லருணை நகர்மிசை கருணையொ டருளிய
பாத மொருவச னமுமிரு சரணமு — மறவேனே

ககன சுரபதி வழிபட எழுகிரி
கடக கிரியொடு பொடிபட வடகுல
கனக கனகுவ டடியொடு முறிபட — முதுசூதங்

கதறு சுழிகட லிடைகொடி படமிகு
கலக நிசிசரர் பொடிபட நடவிய
கலப மரகத துரகத பதகிரி — மயில்வாழ்வே

தகன கரதல சிவசுத கணபதி
சகச சரவண பரிமள சததள
சயன வனசரர் கதிபெற முனிபெறு — புனமானின்

தரள முகபட நெறிபட நிமிர்வளர்
தருண புளகித ம்ருகமத தனகிரி
தழுவ மயல்கொடு தனிமட லெழுதிய — பெருமாளே. ()

431. முகிலை இகல்பொரு முழுவிருள் குழலென
முதிய மதியது முகமென * நுதலிணை
† முரணர் வரிசிலை முறிபடு கணைவிழி — எனமூவர்

முளரி தனின்முகு ளிதமலர் முகையென
முறுவல் தனையிரு குழைமுதனை மொழிதனை
மொழிய வரியமொர் தெரிவையர் வினையென மொழிகூறிப்

பகலு மிரவினு மிகமன மருள்கொடு
பதியி லவர்வயி னுளதழு லெனவொரு
பழுது மறவவர் பரிவுற இதமது — பகாதே

* நுதல் - புருவம். † முரணர் - வலியவர்.

பகைகொ டெதிர்பொரு மசுரர்கள் துகைபட
விகட முடனடை பயில்மயில் மிசைவரு
பவனி தனையநு தினநினை எனவருள் பகர்வாயே

புகல வரியது பொருளிது எனவொரு
புதுமை இடவரி யதுமுத லெனுமொரு
பொதுவை இதுவென முதுதவ முநிவர்கள் புடைசூழும்

புரமு மெரியெழ நகையது புரிபவர்
புனலும் வளர்மதி புனைசடை யினரவர்
புடவி வழிபட ஒருபொருள் விரகொடு புகல்வோனே

அகில கலைகளு மறநெறி முறைமையு
மகில மொழிதரு புலவரு முலகிலி
லறிஞர் தவமுயல் பவர்களு மியலிசை அதனாலே

அறுவர் முலையுணு மறுமுக னிவனென
அரிய நடமிடு மடியவ ரடிதொழ
அருணை நகர்தனி லழகுடன் மருவிய பெருமாளே. ()

432. முருகு செறிகுழல் சொருகிய விரகிகள்
முலைக ளளவிடு முகபட பகடிகள்
முதலு முயிர்களு மளவிடு கசவியர் முழுநீல

முழுகு புழுககில் குழைவடி வழகியர்
முதிர வளர்கனி அதரக வரிகுழியர்
முனைகொ ளயிலென விழிவிழி கடையினர் முகமாயம்

மருவி அமளியி னலமிடு கலவியர்
மனது திரவிய மளவள வளவியர்
வசன மொருநொடி நிலைமையில் கபடிகள் வசமாகி

மருளு மறிவினன் அடிமுடி யறிகிலன்
அருணை நகர்மிசை கருணையொ டருளிய
மவுன வசனமு மிருபெரு சரணமு மறவேனோ

கருதி இருபது கரமுமொ ரிருபது
கனக மவுலிகொள் புயவரை யொருபது
கடிய வியனகர் * புகவரு † கனபதி கனல்மூழ்க

---

* புகவரு - புகுவதற்கு அரிதாகிய. † கனபதி - இலங்கை.

கவச அநுமனொ டெழுபது கவிவிழ
அணையி லலையெறி எதிரமர் பொருதிடு
* களரி தனிலொரு கணைவிடு மடலரி மருகோனே

சருவு மவுணர்கள் தளமொடு பெருவலி
அகல நிலைபெறு சயிலமு மிடிசெய்து
தருமன வர்பதி குடிவிடு பதவிசை மயில்வீரா

தருண மணியவை பலபல செருகிய
தலையள் ஆகிலிடை அழகிய குறமகள்
தனதுதனமது பரிவொடு தழுவிய பெருமாளே. ()

433. விடமு மமுதமு மிளிர்வன இணைவிழி
வனச மலர்தரு முகிழ்முகிய சரமென
விரைசெய் மருகமத அளகமு முகிலென ஒருஞான

விழியின் வழிகெட இருள்வதொ ரிருளென
மொழியு மமுதுகல் உயிர்கவர் வலையென
விலையு மிளநகை †தளவல களவென வியனுபித்

படமு மடுவல படுகுழி எனவிடை
துடியு மலமத னுருவென வளமுலை
சயில மலைகொலை யமனென முலைமிசை புரள்கோவை

துவள மனியல யமன்விடு கயிறென
மகளிர் மகளிரு மலபல வினைகொடு
சுமைய முருகுவெல உணர்வொடு புணர்வதும் ஒருநாளே

அடவி வனிதைய ரதனிரு பரிபுர
சரண மலரடி மலர்கொடு வழிபட
அசல மிசைவிளை புனமதி லினிதுறை தனிமானும்

அமர ரரிவையு மிருபுடை யினும்வர
‡ முகர முகபட கவளத வளகர
அசல மிசைவரு மயிரவ கலவியும் விளையாடும்

கடக புளகித புயகிரி சமுக §வி
கடக மதமத அமகத கிரிசர்
கடக ||பயிரவ ¶கயிரவ மலர்களும் எரிதீயுங்

---

*களரி-யுத்தகளம். †தளவு-முல்லை. ‡முகரம்-சங்கவடிவமான. §விகடக-விகடதக. ||பயிரவன் பயத்தைச்செய்வோன். ¶கயிரவம்-ஆம்பல்.

கருக ஒளிவிடு தனுபா கவுதம
புநித முநிதொழ அருணையி லுறைபவர்
கருணை உமைதரு சரவண சரபதி பெருமாளே. (௨௦௫)

தனன தனதன தனன தனதன
தனன தனதன தனன தனதன
தனன தனதன தனன தனதன தனதான.

434. *கமரி மலர்க்குழல் சரிய புளகித
கனக தனகிரி அசைய பொருவிழி
கணைக ளெனநுதல் புரளத் துகிலதை நெகிழ்மாதர்

கரிய மணிபுர ளரிய கதிரொளி
பரவ இணைகுழை அசைய நகைகதிர்
கனக வளைகல நடைகள் பழகிகள் மயில்போலத்

திமிரு மதபுழு கொழுக தெருவினி
லலைய விலைமுலை தெரிய மயல்கொடு
திலத மணிமுக அழகு சுழலிகள் இதழ்நல்

திரையி லமுதென கழைகள் பலசுளை
எனவு மவர்மயல் தழுவு மசடனை
திருகு புலைகொலை கலிகள் சிதறிட அருள்தாராய்

குமர குருபர குமர குருபர
குமர குருபர குமர குருபர
குமர குருபர குமர குருபர எனதாளம்

குரைசெய் முரசமொ டரிய விருதொலி
டமட டமடம டமட டமவென
குமுற திமிலைசு லிரிகி ளிரிமுதல் இசைபாட

அமரர் முநிவரு மயனு மனைவரு
மதுகை மலர்கொடு தொழுது பதமுற
அசுரர் பரிகரி இரத முனைபட அமர்வேளே

---

* கமரி - கம்அரி, மேகம்போன்ற வண்டுதங்கிய

அகில புவனமொ டடைய வொளிபெற
அழகு சரண்மயில் புறம தருளியொ
ரருணை கிரிகுற மகளை மருவிய பெருமாளே. (உ0௬)

தனதனத் தானனத் தனதனத் தானனத்
தனதனத் தானனத் தனதான.

435. கயல்விழித் தேனினைச் செயலழித் தாயெனக்
கணவகெட் டேனெனப் பெறுமாது
கருதுபுத் ராவெனப் புதல்வரப் பாவெனக்
கதறிடப் பாடையிற் றலைமீதே
பயில்குலத் தாரழப் பறையகட் பாரழப்
பறைகள் கொட் டாவரச் சமனாரும்
பரியகைப் பாசம்விட் டெறியுமப் போதெனைப்
பரிகரித் தாவியைத் தரவேணும்
அயிலறச் சேவல்கைக் கினிதரத் தோகையுற்
றருணையிற் கோபுரத் துறைவோனே
அமரரத் தாரிறக் குமரிமுத் தாரிவர்த்
தரியசொற் பாவலர்க் கெளியோனே
புயலினைப் பாறுமொற் சயிலமொய்ச் சாரலிற்
புனமறப் பாவையைப் புணர்வோனே
பொடிபடப் பூதரத் தொடுகடற் சூரனைப்
பொருதுமுச் சேவகப் பெருமாளே. (உ0எ)

436. கறுவுமிக் காளையைக் *கலகுமக் காலனைத்
திலருகட் சேல்களிற் புடைடக்
கருவிருப் பாடு†கட் டளையுடற் பேரியக்
கனவினிற் காமுறக் குறவாலுற்
துறுமலர்ப் பாயலிற் றுயர்விளைத் துடலுற்
றுயர்பொருட் கோதியுட் படுமாதர்

---

* கலகும் - கலக்கும் † கட்டளை உடல் - அளவான பொருள்.

ஒறுவினைக் கேயுளத் தறிவுகெட் டேனுயிர்ப்
புணையிணைத் தாள்தனைத் தொழுவேனோ

மறையெடுத் தோதிவச் சிரமெடுத் தானுமைச்
செறிதிருக் கோலமுற் றணைவானும்

‡ மறைகள்புக் காரெனக் குவடுகெட் டாழிவற்
றிடவடற் சூரனைப் பொரும்வேலா

அறிவுடைத் தாருமற் றடனுனைப் பாடலுற்
றருணையிற் கோபுரத் துறைவோனே

அடவியிற் றோகைபொற் றடமுலைக் காசையுற்
றயருமச் சேவகப் பெருமாளே. (௨.௦.௮)

437. பரியகைப் பாசம்விட் டெறியுமக் காலனுட்
பயனுயிர்ப் போயகப் படமோகப்

படியிலுற் றோரெனப் பலர்கள்பற் றுவடற்
படஎரிக் கூடுவிட் டலைமீறிற்

பிரியுமிப் பாதகப் பிறவியுற் றேமிகப்
பிணிகளுக் கேயிளைத் தயங்காயேன்

பிழைபொறுத் தாயெனப் பழுதறுத் தாளெனப்
பிரியமுற் றேயிடப் பெறுவேனோ

கரியமெய்க் கோலமுற் றரியினற் றூயவைக்
கமைவபற் றுசையக் கழுவேலார்முன்

கலைவருத் தோதிவெற் பதனதுளேத் தோளியற்
கடவுள்செச் சேவல்மாகக் கொடியோனே

அரியநற் பாடலைத் தெரியுமுற் றோர்சிலைக்
கருணையிற் கோபுரத் துறைவோனே

அடவியிற் றோகைபொற் றடமுலைக் காசையுற்
றயருமச் சேவகப் பெருமாளே. ([illegible])

---

* ஒறுவினை - தீராவினை ‡ மறைகள்புக்கார் என - அடைக்கலமுற்றோரென.

தனனதன தான தத்த தனனதன தான தத்த
தனனதன தான தத்த தனதான.

438\. தருணமணி வானி லத்தி லருணமணி யாலவிட்ட
தழலமணி மீதெ றிக்கு நிலவாலே
தலைமைதவி ராம னத்தி னிலைமையறி யாதெ திர்த்த
தறுகண்மத வேள்தொ டுத்த கணையாலே
வருணமட மாதர் கற்ற வசையின்மிகை பேத முற்று
மருவுமென தாவி சற்று மழியாதே
மகுடமணி வாரி சைக்கும் விகடமது லாவு சித்ர
மயிலின்மிசை ஏறி நித்தம் வரவேணும்
கருணையக லாவி ழிச்சி களபமழி யாமு லைச்சி
கலைவிதொலை யாம றத்தி மணவாளா
'கடுவுடைய ராநி ரைத்த சடிலமுடி மீது வைத்த
கடியமல ராத ரித்த கழல்வீரா
அருணமணி யால மைத்த கிரணமணி சூழும் வெற்றி
அருணைநகர் கோபுரத்தில் உறைவோனே
அசுரர்குலம் வேர றுத்து வட வனலை மீதெழுப்பி
அமரர்சிறை மீள விட்ட பெருமாளே. (உகல)

439\. முழுகிவட வாமு கத்தி னெழுகனலி லேயி றக்கு
முழுமதிநி லாவி னுக்கும் வசையாலும்
மொழியுமட மாத ருக்கு மினியதனி வேயி சைக்கு
முதியமத ராஜ னுக்கும் அழியாதே
புழுகுநிகழ் நீப மத்தி லழகியகு ராநி ரைத்த
புதுமையினி லாறி ரட்டி புயமீதே
புணரும்வகை தானி னைத்த துணரும்வகை நீல சித்ர
பொருமயிலி லேறி நித்தம் வரவேணும்
எழுமகர வாவி சுற்று பொழிலருணை மாந கர்க்கு
ளெழுதரிய கோபு ரத்தில் உறைவோனே

*கடுவுடை அரா-விடப்பாம்பு.

இடைதுவள வேடு வச்சி படமசைய வேக னத்த
இளமுலைவி டாத சித்ர மணிமார்பா
செழுமகுட நாக மொய்த்த ஒழுகுபுனல் வேணி வைத்த
சிவனைமுத லோது வித்த குருநாதா
திசைமுகன்மு ராரி மற்று மரியபல தேவ ருற்ற
சிறையடைய மீள விட்ட பெருமாளே. (௨௧௧)

தானதன தானத் தானதன தானத்
தானதன தானத் தந்ததான.

440 ஆலவிழி நீலத் தாலதர பானத்
தாலளக பாரக் கொண்டலாலே
ஆரநகை யால்விற் போர்நுதலி னால்வித்
தாரநடை யால்நற் கொங்கையாலே
சாலமய லாகிக் காலதிரி சூலத்
தாலிறுகு பாசத் துன்பமுழ்கித்
தாழ்விலுயிர் வீழ்பட் டூழ்வினைவி டாமற்
சாவதன்மு *னேவற் கொண்டிடாயோ
சோலைதரு கானிற் கோலமற மானைத்
தோளிலுற வாகக் கொண்டவாழ்வே
சோதிமுரு காநித் தாபழைய ஞானச்
சோணகிரி வீதிக் கந்தவேளே
பாலகக லாபக் கோமளம யூரப்
பாகவுமை பாகத் தன்குமாரா
பாதமலர் மீதிற் போதமலர் தூவிப்
பாடுமவர் தோழத் தம்பிரானே. (௨௧௨)

441. பேதகவி ரோதத் தோதகவி நோதப்
பேதையர்†கு லாவைக் கண்டுமாலின்
பேதைமைய ருமற் ‡றேதமக லாமற்
பேதவுடல் பேணித் தென்படாதே

* ஏவல் - அடிமை. † குலா - ஆடம்பரம். ‡ ஏதம் - துன்பம்.

*சாதகவி காரச் சாதலவை போகத்
தாழ்விலுயி ராகச் சிந்தையாலுன்

தாரைவடி வேலைச் சேவல்தனை யேனற்
சாரல்மற மானைச் சிந்தியேனோ

†போதகம யூரப் போதகக டாமற்
போதருணை வீதிக் கந்தவேளே

‡போதகக லாபக் கோதைமுது வானிற்
போனசிறை மீளச் சென்றவேலா

பாதகப தாதிச் சூரன்முதல் வீழப்
பாருலகு வாழக் கண்டகோவே

பாதமலர் மீதிற் போதமலர் தூவிப்
பாடுமவர் தோழத் தம்பிரானே. (உ௩௩)

தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன தனதான.

442. அமுத மூறுசொ லாகிய தோகையர்
பொருளு ளாரையெ ணுணையு ணுணையெ
னருகு வீடிது தானிதில் வாருமெ னுரைகூறும்

அசடு மாதர் ||குவாதுசொல் கேடிகள்
தெருவின் மீதுக லாவியு லாவிகள்
அவர்கள் மாயைப டாமல் கெடாமல்நி னருள்தாராய்

குமரி காளிவ ராகிம கேஸ்வரி
கவுரி மோடிசு ராரிநி ராபரி
கொடிய சூலிசு டாரணி யாமளி மகமாயி

---

*சாதக விகாரச் சாதல் - விகாரச்சாதக சாதல்; துன்பமான பிறப்பு இறப்பு. †போதக மயூரப்போது அக அகடு ஆமன் போது-யானை, மயில் இவைகளின்மேல் மலராசனமிட்ட மத்தியஸ்தானத்தி லெழுந்தருளிவருகின்ற. ‡போதககலாபக்கோதைமுதுவான் - தெய்வயானையம்மை அவதரித்த முதிய விண்ணுலகம். || குவாது - குதர்க்கம்,

குறளு ருபமு ராரிச கோதரி
உலக தாரியு தாரிப ராபரி
குருப ராரிவி காரிந மோகரி அபிராமி

சமர நீலிபு ராரித னாயகி
மலைகு மாரிக பாலிந னாரணி
சலில மாரிசி வாயம னோகரி பரையோகி

சவுரி வீரி*மு நீர்விட போஜனி
திகிரி மேவுகை யாளிசெ யாளொரு
சகல வேதமு மாயின தாயுமை அருள்பாலா

திமித மாடுசு ராரிநி சாசரர்
முடிக டோறு†க டாவியி டேயொரு
சிலப சாசு‡கு ணாலிநி ணாமுண விடும்வேலா

திருவு லாவுசொ ணேசர ணாமலை
முகிலு லாவுவி மானந வோநிலை
சிகர மீதுக லாவியு லாவிய பெருமாளே. (௨௧௪)

---

443. உருகு மாமெழு காகவு மேமயல்
பெருகு மாசையு ளாகிய பேர்வரி
துரிய மேடையில் வார்குழல் நீவிய ஒளிமானார்

உடைகொள் மேகலை யால்முலை மூடியு
நெகிழ நாடிய தோதக மாடியு
முவமை மாமயில் போல்நிற மேனியர் உரையாடுங்

கரவ தாமன மாதர்கள் நீள்வலை
கலக வாரியில் வீழடி யேனெறி
கருதொ ணாவதி பாதக னேசம தறியாத

கசட மூடனை ஆளவு மேயருள்
கருணை வாரிதி யேயிரு நாயகி
கணவ னேயுன தாளிணை மாமலர் தருவாயே

---

*முநீர்விடம் - கடலிலெழுந்த நஞ்சு. †கடாவி யிடேய் - கடாவி யிட்டு ஏய். ‡குணாலிநிணாம் உண - குணலையிட்டு நிணம் உண்ண.

சுருதி மாமொழி வேதியன் வானவர்
பரவு *கேசனை ஆயுத பாணிநல்
துளப மாலையை மார்பணி மாயவன் மருகோனே

தொலைவி லாவசு ரேசர்க ளானவர்
துகளா தாகவு மேயெதி ராடிடு
சுடரின் வேலவ னேயுல கேழ்வலம் வருவோனே

†அருணர் கோடியி னொளி வீசிய
தருண வாண்முக மேனிய னேயரன்
அணையு நாயகி பாலக னேநிறை கலையோனே

அணிபொன் மேருயர் கோபுர மாமதில்
அதிரு மாரண வாரண வீதியுள்
அருணை மாநகர் மேவியு லாவிய பெருமாளே. (௨௧௫)

தனதன தனன தனந்த தானன
தனதன தனன தனந்த தானன
தனதன தனன தனந்த தானன தந்ததான.

444. கரியுரி அரவ மணிந்த மேனியர்
கலைமதி சலமு நிறைந்த வேணியர்
கனல்மழு ‡உழையு மமர்ந்த பாணியர் கஞ்சமாதின்

கனமுலை பருகி வளர்ந்த காமனை
முனிபவர் கயிலை அமர்ந்த காரணர்
கதிர்விரி மணிபொ னிறைந்த தோளினர் கண்டகாள

விரிவென வயிர முகந்த வேலென
மிகவிரு குழையு மடர்ந்து வேளினை
அனையவ ருயிரை விழுங்கி மேலும்வெ குண்டுநாடும்

வினைவிழி மகளிர் தனங்கள் மார்புற
விதமிகு கலவி பொருந்தி மேனியு
மெழில்கெட நினைவு மழிந்து மாய்வதொ ழிந்திடாதோ

---

*கேசன் - கேசவன். † அருணர் - சூரியன். ‡ உழை - மான்.

எரிசொரி விழியு மிரண்டு வாளெயி
றிருபிறை சயில மிரண்டு தோள்முகி
லெனவரு மசுரர்சி ரங்கள் மேருவி டிந்துவீழ்வ

தெனவிழ முதுகு பிளந்து காளிக
ளிடுபலி எனவு நடந்து தாள்தொழ
எதிர்பொரு துதிர முகந்த வேகமு கைந்தவேலா

அரிகரி உழுவை அடர்ந்த வாண்மலை
அருணையி லறவு முயர்ந்த கோபுர
மதிலுறை குமர அனந்த வேதமொ ழிந்துவாழும்

அறுமுக வடிவை ஒழிந்து வேடர்கள்
அடவியி லரிவை *குயங்கள் தோய்புய
அரியர பிரம புரந்த ராதியர் தம்பிரானே. (உகசு)

---

445. கனைகடல் வயிறு குழம்பி வாய்விட
வடதம னியகி ரிகம்ப மாய்நட
†கணபண பரித கவிந்த காளபு யங்கராஜன்

கயிறென அமர ரனந்த கோடியு
முறைமுறை அமுது கடைந்த நாளொரு
கதியற உலகை விழுங்கு மேகவொ ழுங்குபோல

வினைமத கரிக ளுமெண்டி சாமுக
கிரிகளு முருகி டவண்ட கோளகை
வெடிபட எவரை யும்விஞ்சி மேலிடு நஞ்சுபோல

விடுகுழை அளவு மளந்து காமுக
ருயிர்பலி கவர்வு றுபஞ்ச பாதக
விழிவலை மகளி ரொடன்பு கூர்வதொ ழிந்திடாதோ

முனைபெற வளைய அணைந்த மோகர
நிசிசரர் கடக முறிந்து தூளெழ
முகிலென உருவ மிருண்ட தாருகன் அஞ்சமீன

முழுகிய திமிர தரங்க சாகர
முறையிட இமைய வர்தங்க ளூர்புக
முதுகிரி உருவ முனிந்த சேவக செம்பொன்மேரு

---

*குயங்கள் - தனங்கள் †கணபணம் - ஆதிசேடன்.

அனையன கனவி தசண்ட கோபுர
அருணையி லுறைபு மருந்து ணுமுலை
அபிநவ வனிதை தருங்கு மாரநெ ருங்குமால்கொண்
டடவியில் வடிவு கரந்து போயொரு
குறமகள் பிறகு திரிந்த காமுக
அரியர பிரம புரந்த ராதியர் தம்பிரானே. (உகஎ)

தனதன தனன தனதன தனன
தனதன தனதன தந்ததான.

446. இடமடு சுறவை முடுகிய மகா
மெறிகட லிடையெழு திங்களாலே
இருவினை மகளிர் மருவிய தெருவி
லெரியென வருசிறு தென்றலாலே
தடநடு வுடைய கடிபடு கொடிய
சரம்விடு தறுகண னங்கனாலே
சரிவளை கழல மயல்கொளு மரிவை
தனிமல ரணையில்ந லங்கலாமோ
வடகுல சயில நெடுவுட லசுரர்
மணிமுடி சிதறவெ றிந்தவேலா
மறமக ளமுத புளகித களப
வளரிள முலைமண ணந்தமார்பா
அடலணி விகட மரகத மயிலி
லழகுட னருணையில் நின்றகோவே
அருமறை *விததி முறைமுறை பகரு
மரியர பிரமர்கள் தம்பிரானே. (உகஅ)

தனதன தனனந் தனதன தன்னந்
தனதன தனனந் தனதான.

447. இரவியு மதியுந் தெரிவுற எழுமம்
புவிதனி லினமொன் றிடுமோதும்
எழில்புதல் வருநின் றழுதுள முருகும்
இடர்கொடு †நடலம் பலகூறக்

விததி - சமூகம் † நடலம் - துன்பமொழி.

கருகிய உருவங் கொடுகனல் விழிகொண்
டுயிரினை நமனுங் கருதாமுன்
கலைகொடு பலதுன் பமுமக விடநின்
கழலிணை கருதும் படிபாராய்
திருமரு வியதிண் புயனயன் விரியெண்
டிசைகிடு கிடவந் திடுசூரன்
திணிபுய மதுசிந் திடவலை கடலஞ்
சிடவலி யொடுகன் றிடும்வேலா
அருமறை யவரந் தரமுறை பரவன்
புடையவ *ருயவன் றறமேவும்
அரிவையு மொருபங் கிடமுடை யவர்தங்
கருணையி லுறையும் பெருமாளே. (உகக)

448. விரகொடு வளைசங் கடமது தருவெம்
†பிணிகொடு விழிவெங் கனல்போல
வெறிகொடு சமனின் றுயிர்கொளு நெறியின்
றெனவிதி வழிவந் திடுபோதிற்
கரவட மதுபொங் கிடுமன மொடுமங்
கையருற வினர்கண் புனல்பாயுங்
கலகமும் வருமுன் குலவினை களையுங்
கழல்தொழு மியல்தந் தருள்வாயே
பரவிடு மவர்சிந் தையர்விட முமிழும்
படவர வணைகண் டுயில்‡மாலம்
பழமறை மொழிபங் கயனிமை யவர்தம்
பயமற விடமுண் டருநேறி
அரவொடு மதியம் பொதிசடை மிசைகங்
கையுமுற அனலங் கையில்மேவ
அரிவையு மொருபங் கிடமுடை யவர்தங்
கருணையில் மருவும் பெருமாளே. (உஉ0)

* யு-உய்ய. † பிணி-பாசக்கயிறு. ‡மால் அம்பழமறை மொழிபங்கயன்.

தனதன தனனு தனதன தனனு
தனதன தனனு தனதான.

449. கெஜநடை மடவார் வசமதி லுருகா
கிலெசம துறுபாழ் வினையாலே
கெதிபெற நினையா துதிதனை அறியா
கெடுசுக மதிலாழ் மதியாலே
தசையது மறுவீ வசையுட லுடனே
தரணியில் மிகவே உலேவேனோ
சததள மலர்வார் புனைநின கழலார்
தருநிழல் புகவே தருவாயே
திசைமுக வனைநீள் சிறையுற விடுவாய்
திருநெடு கருமால் மருகோனே
திரிபுர தகனு ரிடமதில் மகிழ்வார்
திரிபுரை அருள்சீர் முருகோனே
நிசிசர ருறைமா கிரியிரு பிளவா
நிறைபயில் முடுகா விடுவோனே
நிலமிசை புகழார் தலமெனு *மருணு
நெடுமதில் வடசார் பெருமாளே. (௨௨௧)

தனத்த தானன தத்தன தத்தன
தனத்த தானன தத்தன தத்தன
தனத்த தானன தத்தன தத்தன தனதான.

450. திருட்டு வாணிப விக்ரம துட்டிகள்
மதத்த ரூபிகள் தூர்ச்சன பொட்டிகள்
செகத்து நீலிகள் கெட்டப ரத்தைகள் மிகநாணூர்
சிலேக்கு நேர்புரு வப்பெரு நெற்றிகள்
எடுப்பு மார்பிக ளெச்சிலு தட்டிகள்
சிரித்து மாறுடர் சித்தமு ருக்கிகள் விழியாலே
வெருட்டி மேல்விழு †பப்பர மட்டைகள்
மிகுத்த பாவிகள் வட்டமு கத்தினை
மினுக்கி ஓலைகள் பித்தளை யிற்பணி மிகநீறூல்

* அருணு - அருணை. † பப்பர - பெருத்த.

விளக்கி யேகுழை இட்டபு ரட்டிகள்
தமக்கு மால்கொடு நிறகும ருட்டனை
விடுத்து நானொரு மித்திரு பொற்கழல் பணிவேனோ
தரித்த தோகண தக்கண செக்கண
குகுக்கு கூகுகு குக்குகு குக்குகு
தகுத்த தீதிகு தக்குகு திக்குகு என தாளம்
தடக்கை தாளமு மிட்டியல் மத்தள
மிடக்கை தாளமு மொக்கந டித்தொளி
தரித்த கூளிகள் தத்திமி தித்தென கணபூதம்
அருக்க னொளி யிற்பரவை உற்றிடு
மிரத்ன மாமுடி யைக்கொடு கக்கழ
வடக்கை யாடிநி ணத்தையெ டுத்துண அறவேதான்
அரக்கர் சேனைகள் பட்டுவி ழச்செறி
திருக்கை வேல்தனை விட்டரு ளிப்பொரும்
அருட்கு காவரு ணைப்பதி உற்றருள் பெருமாளே. ()

தனத்த தத்தன தான தனதன
தனத்த தத்தன தான தனதன
தனத்த தத்தன தான தனதன தந்ததான.

451. முகத்து லக்கிக *ளாசா ரவினிகள்
விலைச்சி றுக்கிகள் நேரா அசடிகள்
முழுச்ச மர்த்திகள் காமா விரகிகள் முந்துகூது
மொழிப்ப ரத்தைகள் காசா சையில்முலை
பலர்க்கும் விற்பவர் நாண அநுபவ
முயற்று பொட்டிகள் மோகா வலமுறு கின்றமூடர்
செகத்தி லெத்திகள் சார்வாய் †மயலிகள்
திருட்டு மட்டைகள் மாயா சொரூபிகள்
சிரித்து ருக்கிகள் ஆகா எனநகை சிந்தைமாயத்
திரட்பொ றிச்சிகள் மாபா விகளப
கடத்த சட்டைகள் மூதே விகளொடு
$ இளைத்த லற்றிரு சீபா தமுமினி என்றுசேர்வேன்

*ஆசாரவினிகள்-ஆசார ஈனிகள்; ஒழுக்கவீனமுள்ளவர்கள். †மயலிகள்-மயக்கிகள். $ இளைத்தல் - அழுந்திக்கிடத்தல்.

தொகுத்தொ குத்தொகு தோதோ தொகுதொகு
செகுச்செ குச்செகு சேசே செககண
தொகுத்தொகுத்தொகு தோதோ தொகுதொகுதொந்ததிதோ

டுடுட்டு டுட்டுடு டுடு டுடுடுடு
திகுத்த குத்திகு திதோ எனவொரு
துவக்க நிர்த்தன மாடா உறைபவர் தொண்டர்பேணும்

அகத்தி யப்பனு மால்வே தனுமறம்
வளர்த்த கற்பக மாஞா லியுமகி
ழுவுற்ற நித்தபி ரானே அருணையில் நின்றகோவே

அமர்க்க ளத்தொரு சூரே சனைவிழ
முறித்து முக்கிய வானோர் குடிபுக
அமர்த்தி விட்டசு வாமீ அடியவர் தம்பிரானே. (௨௨௫)

தானதன தானதத்த தானதன தானதத்த
தானதன தானதத்த தனதான.

452. *கேதகைய பூமுடித்த மாதர்த‡ம யாலினுற்று
கேவலம தான அற்ப நினைவாலே
கேள்வியதி லாதிருக்கு மூழ்வினையி னல்மிகுத்த
கேடுபெற வேநினைக்கும் வினையாலே
வேதனையி லேமிகுத்த பாதகனு மாயவத்தில்
மேதினியெ லாமுழற்று மடியேனை
வீடுதவி யாளவெற்றி வேல்கரம தேயெடுத்து
வீறுமயில் மீதினுற்று வருவாயே
நீதிநெறி யேயழிக்க தாருகனை வேரறுத்து
நீடுபுகழ் தேவ‖ ரிற்கள் குடியேற
நீடருளி னல்விடுத்த பாலகும ராசெழித்த
நீலநிற மால்தனக்கு மருகோனே

கேதகையபூ - தாழையின்பூ ‡மயால்-மயக்கம் ‖இல்-இருப்பிடம்,

சோதியன லாவுதித்த சோணகிரி மாமலைக்குள்
*சோலைவட கோபுரத்தில் உறைவோனே
சோனைமழை போலெதிர்த்த தானவர்கள் மாளவெற்றி
தோளின்மிசை வேலெடுத்த பெருமாளே. (உஉச)

தானதன தத்த தத்த தானதன தத்த தத்த
தானதன தத்த தத்த தனதான.

453. கோடுசெறி மத்த கக்கை வீசுகரி யைப்ப குத்த
கூறுசெய்த ழித்து ரித்து நடைமாறூர்
கோளுலவு முப்பு ரத்தை வாளெரிகொ ளுத்தி விட்ட
† கோபநுத லத்த ரத்த குருநாதா
நீடுகன கத்த லத்தை ஊடுருவி மற்ற வெற்பு
நீறெழமி தித்த நித்த மனதாலே
‡நீபமலர் பத்தி மெத்த ஓதுமவர் சித்த மெத்த
நீலமயில் தத்த விட்டு வரவேணும்
ஆடலணி பொற்சி லைக்கை வேடுவர்பு னக்கு றத்தி
ஆரமது மெத்து சித்ர முலைமீதே
ஆதரவு பற்றி மெத்த மாமணிநி றைத்த வெற்றி
ஆறிருதி ருப்புயத்தில் அணைவீரா
தேடிமையொர் புத்தி மெத்த நீடுறநி னைத்த பத்தி
சீருறவு ளத்தெ ரித்த சிவவேளே
தேறருணை யிற்ற ரித்த சேண்முகடி டத்த டர்த்த
தேவர்சிறை வெட்டி விட்ட பெருமாளே. (உஉரு)

தனத்தா தனத்தத் தனத்தா தனத்தத்
தனத்தா தனத்தத் தனதான.

454. §அருக்கார் நலத்தைத் திரிப்பார் மனத்தைக்
கடுத்தா சைபற்றித் தளராதே
அடற்கா லனுக்குக் ||கடைக்கால் மிதித்திட்
டறப்பே தகப்பட் டழியாதே

* சோலை-அழகு ஒளி. † கோபநுதல்-கோபங்குறித்த ‡ நீபமலர்பத்தி-நீபமலர்சூடுபத்தி § அருக்கு-அருமை || கடைக்கால்மிதித்திட்டு-அடிமைப்பட்டு.

*கருக்கா ரர்நட்டைப் பெருக்கா சரித்துக்
கலிச்சா கரத்திற் பிறவாதே
கருத்தா லெனக்குத் திருத்தா ளளித்துக்
கலைப்போ தகத்தைப் புகல்வாயே
ஒருக்கால் நினைத்திட் †டிருக்கால் மிகுத்திட்
டுரைப்பார் கள்சித்தத் துறைவோனே
உரத்தோ ளிடத்திற் குறத்தே னைவைத்திட்
டொளித்தோ டும்வெற்றிக் குமரேசா
செருக்கா தருக்கிச் ‡சுரர்ச்சூர் நெருக்கச்
செருச்சூர் மரிக்கப் பொரும்வேலா
திறப்பூ தலத்திற் றிறட்§சோ ணவெற்பிற்
றிருக்கோ புரத்திற் பெருமாளே. (உஉ௬)

தனனா தனனத் தனனா தனனத்
தனனா தனனத் தனதான.

455. அருமா மதனைப் பிரியா தசரக்
கயலார் நயனக் கொடியார்தம்
அழகார் புளகப் புழுகார் சயிலத்
தணையா வலிகெட் டுடல்தாழ
இருமா நடைபுக் குறைபோ யுணர்வற்
றினையா உளமுக் குயிர்சோரா
எரிவாய் நரகிற் புகுதா தபடிக்
கிருபா தமெனக் கருள்வாயே
ஒருமால் வரையைச் சிறுதூள் படவிட்
டுரமோ டெறிபொற் கதிர்வேலா
||உறைமா னடவிக் குறமா மகளுக்
குருகா திருபொற் புயவீரா

*கருக்காரர்-பிறவிக்குரியவர். †இருக்கால்-இரண்டுதிருவடிகளையும். ‡சுரர்ச்சூர் நெருக்கு-சுரர்களாகிய தெய்வத் தன்மையோரை ஒடுக்கிய. §சோணவெற்பு-திருவண்ணாமலை. ||உறைமான்-மான் உறை.

திருமால் கமலப் பிரமா விழியிற்
றெரியா அரனுக் கரியோனே
செழுநீர் வயல்சூற் றருணை புரியிற்
றிருவீ தியினிற் பெருமாளே. (௨௨௭)

தனதன தானனத் தனதன தானனத்
தனதன தானனத் தனதான.

456. அழுதுமா வாவெனத் தொழுதுமூ டேநெக்
கவசமா யாதரக் கடலூடுற்
றமைவில்கோ லாகலச் சமயமா பாதகர்க்
கறிவொணா மோனமுத் திரைநாடிப்
பிழைபடா ஞானமெய்ப் பொருள்பெறா தேவினைப்
பெரிய*வா தேசபுற் புதமாய
பிறவிவா ராகரச் சுழியிலே போய்விழப்
பெறுவதோ நானினிப் புகல்வாயே
பழையபா கீரதிப் படுகைமேல் வாழ்வெனப்
படியு†மா றாயினத் ‡தனசாரம்
பருகுமா றானனச் சிறுவசோ ணாசலப்
பரமமா யூரவித் தகவேளே
பொழுதுசூழ் போதுவெற் பிடிபடா பார்முதற்
பொடிபடா ஓடமுத் தெறிமீனப்
§புணரிகோ கோவெனச் சுருதிகோ கோவெனப்
பொருதவே லாயுதப் பெருமாளே. (௨௨௮)

தானதனத் தானதனத் தானதனத் தானதனத்
தானதனத் தானதனத் தனதான.

457. ஆனைவரிக் கோடிளநிர்ப் பாரமுலைச் சாரசைபட்
டாடைமறைத் தாடுமலர்க் குழலார்கள்
ஆரவடத் தோடலையப் பேசிநகைத் தாசைபொருட்
டாரையுமெத் தாகமயக் கிடுமோகர்

---

* ஆதேசம் - தாங்கப்படுவது. † ஆறுஆய்- (கார்த்திகை மாதர்களாகிய) ஆறு தாய்மார். ‡தனசாரம் - முலைப்பால். § புணரி-கடல்.

சோனமழைப் பாரவிழித் தோகைமயிற் சாதியர்கைத்
தூதுவிடுத் தேபொருளைப் பறிமாதர்
தோதகமுற் றேழ்நரகிற் சேருமழுற் காயனையுட்
சோதியொளிப் பாதமளித் தருள்வாயே
தானதனத் தீதிமிலைப் பேரிகைகொட் டாசமரிற்
சாயகடற் சூரைவதைத் திடுவோனே
தாளவியற் சோதிநிறக் காலினெழுக் கோலியெடுத்
தாபரம்வைத் தாடுபவர்க் கொருசேயே
தேனிரசக் கோவையிதழ்ப் பூவைகுறப் பாவைதனத்
தேயுருகிச் சேருமணிக் கதிர்வேலா
சீருணைக் கோபுரமுற் றுனவினைத் தேமருவு
தேவமகட் கோர்கருணைப் பெருமாளே. (௨௨௬)

தனனத் தனனதன தனனத் தனனதன
தனனத் தனனதன தனதான.

458. இடருக் கிடாகிய கொடுமைக் கணைமேல்வரு
மிறுதிச் சிறுகால்வரு மதனாலே
இயலைத் தருகானக *முயலைத் தருமேனியி
லெரியைத் தருமாமதி நிலவாலே
தொடரக் கொடுவாதையி லடையக் கரைமேலலை
தொலையத் தலைவீசிய கடலாலே
துணையற் றணிபூமல ரணையிற் றனியேனுயிர்
துவளத் தகுமோதுயர் தொலையாதோ
வடபொற் குலமேருவின் முடுகிப் பொருசூரனை
மடியச் சுடவேவிய வடிவேலா
மறவக் குலமாமொரு குறமெய்த் திருமாமகள்
மகிழப் புனமேவிய மயில்வீரா

*முயலைத்தருமேனி - முயற்களங்கத்தைக்காட்டும் வடிவும்.

அடரப் படர்*கேதகை மடலிற் றழைசேர்வய
லருணைத் திருவீதியி லுறைவோனே
அவனித் திருமாதொடு சிவனுக் கிமையாவிழி
அமரர்க் கரசாகிய பெருமாளே. (உ௩௦)

தனதானன தான தனத்தந் தனதான.

459. †இமராஜனி லாவ தெரிக்குங் கனலாலே
இளவாடையு மூரு மொறுக்கும் படியாலே
சமராடிய மார னெடுக்குங் கணையாலே
தனிமானுயிர் சோரு மதற்கொன் றருள்வாயே
குமராமுரு காச டிலத்தன் குருநாதா
குறமாமக ளாசை தணிக்குந் திருமார்பா
அமராவதி வாழ்வ மரர்க்கன் றருள்வோனே
அருணைபுரி வீதி யினிற்கும் பெருமாளே. (உ௩௧)

தனதனதனதன தனதானதத்த தனதானதந்த
தனதனதனதன தனதானதத்த தனதானதந்த
தனதனதனதன தனதானதத்த தனதானதந்த
தனதனத் தனதான

460. இரவசுரதமுலை களுமார்புகுத்த நுதல்வேர்வரும்ப
அமுதநிலையில்விர லுகிரேகைதைக்க மணிபோல் விளங்க
‡இசலியிசலி§புப ரிதலீலையுற்று இடைநூல் நுடங்க
உளமகிழ்ச் சியினோடே
இருவருடலுமொரு உருவாய்நயக்க முகமேலெழுந்த
அளகமவிழவளை கலுமேகலிக்க நயனாரவிந்த
லகரிபெருகவத ரமுமேயருத்தி முறையேயருந்த
உரையெழுப் பரிவாலே
புருவநிமிர விரு||கணவாளிமைக்க உபசாரமிஞ்ச
அவசகவசமள வியலேதரிக்க அநிலேயனந்த
புதுமைவிளையவநு பரமாபரிக்க இணைதோளுமொன்றி
அநிசுகக் கலையாலே

* கேதகை - தாழை, † இமராஜன் - சந்திரன். ‡ இசலி — வாதாடி.
§ புபரிதலீலை - மதனநூல்முறை. ||கணவாள் - வாள்போன்ற கண்கள்.

புளகமுதிரவிர கமென்வாரிதத்த வரைநாண்மழுங்க
மனமுமனமுமுரு கியெயா தரிக்க உயிர்போலுகந்து
பொருளதளவுமரு வுறுமாயவித்தை விலைமாதர்சிங்கி
விடவருட் புரிவாயே
பரவுமகரமுக ரமுமேவலுற்ற சகாரம்விளைந்த
தமரதிமிரபிர பலமோகாந்த சலாசிகொண்ட
படியையுமுழுதுமொரு நொடியேமதித்து வலமாகவந்து
சிவனிடத் தமர்சேயே
பழநிமிசையிலிசை இசையோகத்தில் திருவாவினன்கு
டியினில்பிரமபுர மதில்வாழ்திருத்த ணிகையூடுமண்டர்
பதியமுதியகதி அதுநாயெனுக்கு முறவாகிநின்று
கவிதையைப் புனைவோனே
அரியுமயனுமம ரருமாயசிட்ட பரிபாலனன்ப
ரடையுமிடரைமுடு கியெதூறதுட்ட கொலைகாரரென்ற
அசுரர்படையையடை யவும்வேரறுத்த அபிராமசெந்தில்
உரகவெற் புடையோனே
அருணகிரணகரு ணையபூரணச்ச ரணமேலெழுந்த
இரணகரணமுரா ணுறுசூரனுட்க மயிலேறுகந்த
அருணையிறையவர்பெ ரியகோபுரத்தில் வடபாலமர்ந்த
அறுமுகப் பெருமாளே. (௨௩௨)

தனதனனத் தனதான தனதனனத் தனதான.

461\. இரவுபகற் பலகாலும் இயலிசைமுத் தமிழ்கூறத்
திரமதனைத் தெளிவாகத் திருவருளைத் தருவாயே
பரகருணைப் பெருவாழ்வே பரசிவதத் துவஞான
அரனருள்சற் புதல்வோனே அருணகிரிப் பெருமாளே.

தனன தனனா தனன தனனா
தனன தனனா தனதானா.

462\. இருவர் மயலோ அமளி விகமோ
எனென செயலோ அணுகாத
இருடி அயன்மா லமர ரடியா
ரிசையு மொலிதான் இவைகேளா

தொருவ னடியே னலறு மொழிதா
ஞொருவர் பரிவாய் மொழிவாரோ
உனது பதத்தூள் புவன கிரிதா
னுனது கிருபா கரமேதோ
பரமகுருவா யணுவி லசைவாய்
பவன முதலா கியபூத
படையு முடையாய் சகல வடிவாய்
பழைய வடிவா கியவேலா
அரியு மயனோ டபய மெனவே
அயிலை அலைமேல் விடுவோனே
அடிமை கொடுநோய் பொடிகள் படவே
அருண கிரிவாழ் பெருமாளே. (உருரு)

தனதன தந்த தனதன தந்த
தனதன தந்த தனதான.

463\. இருவினை மங்க மலவகை மங்க
இருள்பிணி மங்க மயிலேறி
இனவரு ளன்பு மொழியக டம்பு
வினதக முங்கொ டளிபாடக்
கரிமுக னெம்பி முருகனெ னண்டர்
களிமலர் சிந்த அடியேன்முன்
கருணைபொ ழிந்து முகமும லர்ந்து
கடுகிந டங்கொ டருள்வாயே
திரிபுர மங்க மதனுடல் மங்க
திகழ்நகை கொண்ட விடையேறி
சிவவெளி அங்க ணருள்குடி கொண்டு
திகழுந டஞ்செய் தெமையீனும்
அரசியி டங்கொள் மழுவுடை எந்தை
அமலன்ம கிழ்ந்த குருநாதா
அருணைவி லங்கல் மகிழ்குற மங்கை
அமளிந லங்கொள் பெருமாளே. (உருச)

தனதன தாந்த தந்த தனதன தாந்த தந்த
தனதன தாந்த தந்த தனதான.

464. இருவினை ஊண்ப சும்பை கருவினூ கூன்கு டம்பை
இடரடை பாழ்ம்பொ தும்ப லிதவாரி

இடைதிரி சோங்கு கந்த மதுவது தேங்கு கும்ப
மிரவிடை தூங்கு கின்ற பிணநோவுக்

குருவியல் பாண்ட மஞ்சு மருவிய கூண்டு நெஞ்சொ
டுயிர்குடி போங்கு ரம்பை அழியாதென்

றுலகுட னேன்று கொண்ட கருமபி ராந்தொ ழிந்து
னுபயப தாம்பு யங்கள் அடைவேனோ

அருணையி லோங்கு துங்க சிகரக ராம்பு யங்கள்
அமரர்கு ழாங்கு விந்து தொழவாழும்

அடியவர் பாங்க பண்டு புகலகி லாண்ட முண்ட
அபிநவ சார்ங்க கண்டன் மருகோனே

கருணைமு குந்த்ர அன்ப ருடனுரா கேந்த்ரர் கண்ட
கடவுள்ம டேந்த்ரர் மைந்த வரைசாடும்

கலபக கேந்த்ர தந்த்ர அரசநி சேந்த்ர கந்த
காகுலி சேந்த்ரர் தங்கள் பெருமாளே. (௨௩௫)

தனதனன தனதனன தான தத்த தந்த
தனதனன தனதனன தான தத்த தந்த
தனதனன தனதனன தான தத்த தந்த தனதான.

465. இருளளக மவிழமதி போத முத்த ரும்ப
இலகுகயல் புரளவிரு பார பொற்றனங்கள்
இளகவிடை துவளவளை பூச லிட்டி ரங்க எவராலும்

எழுதரிய கலைநெகிழ ஆசை மெத்த உந்தி
இனியசுழி மடுவினிடை மூழ்கி நட்பொ டந்த
இதழமுது பருகியுயிர் தேக மொத்தி ருந்து முனிவாறி

முருகுகமழ் மலரமளி மீதி னிற்பு குந்து
முகவனச மலர்குவிய மோக முற்ற ழிந்து
மொழிபதற வசமளிய ஆசையிற்க விழ்ந்து விடுபோதும்

முழுதுணர உடையமுது மாதவத்து யர்ந்த
பழுதில்மறை பயிலுமவ ரோதரித்து நின்று
முநிவர்சுரர்தொழுதருகு பாதபத்ம மென்று மறவேனே

ஒருசிறுவன் மணமதுசெய் போதி லெய்த்து வந்து
கிழவடிவு கொடுமுடுகி வாச லிற்பு குந்து
உலகறிய இவனடிமை யாமெனக்கொ ணர்ந்து சபையூடே

ஒருபழைய சருகுமடி $ஆவ ணத்தை அன்று
உரமொடவ னதுவலிய வேகி ழிக்க நின்று
உதறிமுறைஇடுபழைய வேத வித்தர் தந்த சிறியோனே

அரியவுடு பதிகடவி ஆட கச்சி லம்பொ
டழகுவட மணிமுடிவி யாள மிட்ட மர்ந்த
அமரரொடு பலர்முடுகி ஆழி யைக்க டந்து அமுதாக

அருளுமரி திருமருக † வாரணத்தை அன்று
அறிவினுட னொருகொடியி லேத ரித்து கந்த
அருணகிரி நகரியெழு கோபு ரத்த மர்ந்த பெருமாளே.

தனன தனதன தனன தனதன
தனன தனதன தனதான.

466\. இறுகு மணிமுலை மருவு தாளமு
மெரியு மிழ்மதி நிலவாலே

இரவி யெனதுயிர் கவர வருகுழ
லிசையி லுறுகடல் அலையாலே

தறுகண் ரதிபதி மதனன் விடுகொடு
‡ சரமி லெளியெனும் அழியாதே

தருண மணிபொழி லருணை நகருறை
§ சயில மிசையினில் வரவேணும்

ஒருசிறுவன் - சுந்தரமூர்த்தி சுவாமிகள். $ ஆவணம் - உரிமைப்பத்திரம் † வாரணம் - கோழி. ‡ சரமில் - சரத்தில், § சயிலம் - மலை

முறுகு திரிபுர மறுகு கனலெழ
முறுவ லுடையவர் குருநாதா
முடிய கொடுமுடி அசுரர் பொடிபட
முடுகு மாகத மயில்வீரா
குறவர் மடமகள் அமிர்த கனதன
குவடு படுமொரு திருமார்பா
கொடிய சடாயில் நனையு மெழுகடல்
குறுக விடவல பெருமாளே. (௨௩௭)

தனதனன தத்த தனதனன தத்த
தனதனன தத்த தனதான.

467\. உலையிலன லொத்த உடலினனல் பற்றி
உடுபதியை முட்டி அமுதூற
உருகிவர விட்ட பரமசுக முற்று
உனதடியை நத்தி நினையாமல்
சிலைநுதலி விட்ட திலதமவிர் பொட்டு
திகழ்முகவர் முத்து நகையாலே
சிலுகுவலை இட்ட மயல்கவலை பட்டு
திருடனென வெட்கி அலைவேனோ
கலைகனக வட்ட திருமலைபறை கொட்ட
கனகமயில் விட்ட கதிர்வேலா
கருதலரின் முட்டி கருகிவரு துட்ட
கதவமுண ருற்ற குலகாலா
அலைகடலு டுத்த தலமதனில் வெற்றி
அருணைவளர் வெற்பில் உறைவோனே
அசுரர்களை வெட்டி அமரர்சிறை விட்டு
அரசுநிலை இட்ட பெருமாளே. (௨௩௮)

தனதனன தனந்த தானன தந்ததானு.

468\. கடல்பரவு தரங்க மீதெழு திங்களாலே
கருதிமிக மடந்தை மார்சொல்வ தந்தியாலே
வடவனலை முனிந்து வீசிய தென்றலாலே
வயலருணை யில்வஞ்சி போதந லங்கலாமோ
இடமுமையை மணந்த நாதரி றைஞ்சும்வீரா
எழுகிரிகள் பிளந்து வீழவெ றிந்தவேலா
அடலசுரர் கலங்கி யோடமு னிந்தகோவே
அரிபிரம புரந்த ராதியர் தம்பிரானே (௨௩௯)

தனதனனத் தனதனனத் தனதனனத் தனதனனத்
தனதனனத் தனதனனத் தனதான.

469\. கமலமுகப் பிறைநுதல்பொற் சிலையெனவச் சிரகணைநற்
கயலெனபொற் சுழலும்விழிக் குழல்கார்போல்
கதிர்*தரளொப் பிய†தசனக் கமுகுகளப் புயகழைபொற்
கரகமலத் துகிர்விரலிற் கிளிசேரும்
குமரிதனத் திதலைமலைக் கிகலியிணைக் கலசமெனக்
குவிமுலைசற் றசையமணிக் கலனாடக்
கொடியிடைபட் டுடைநடைபொற் சரணமயிற் கெமனமெனக்
குணகிபொருட் ‡பறிபவருக் குறவாமோ
திமிலையுடுக் குடன்முரசுப் பறைதிமிதித் திமிதிமெனட்
டிமிடிமிடிட் டிகுர்திமிதித் தொலிதாளம்
செககணசெக் கணகதறத் திடுதிடெனக் கொடிமுடியெட்
டிகைசிலைபட் டுவரிபடச் சிலை§கோலித்
||துமிலவுடற் றசுரர்முடிப் பொடிபடரத் தமுள்பெருகத்
தொகுதகைசெகாட் டலைகயுணத் தொடும்வேலா
¶துவனிதினைப் புனமருவிக் குறமகளைக் கலவுமயற்
சுகமொடணைத் தருணகிரிப் பெருமாளே. (௨௪௦)

---

* தரளொப்பிய - தாளம் ஒத்த. † தசனம் - பல். ‡ பறிபவர் - பறிப்பவர். § கோலி - வளைத்து || துமில - பேரொலியிட. ¶ துவனி-தொனி.

தனதனத் தத்தத் தனத்தத் தனதன
தனதனத் தத்தத் தனத்தத் தனதன
தனதனத் தத்தத் தனத்தத் தனதன தனதான.

470. கமலமொட் டைக்கட் டழித்துக் குமிழியை
நிலைகுலைத் துப்பொற் குடத்தைத் தமனிய
கலசவர்க் கத்தைத் தகர்த்துக் குலையற இளநீரைக்

கறுவிவட் டைப்பிற் றுரத்திப் பொருதப
சயம்விளைத் திச்செப் படித்துக் குலவிய
கரிமருப் பைப்புக் கொடித்துத் திறல்மதன் *அபிஷேகம்

அமலர்நெற் றிக்கட் டழற்குட் பொடிசெய்து
அதிகசக் ரப்புட் பறக்கக் கொடுமையி
னடல்படைத் தச்சப் படுத்திச் சபதமொ டுருதாளம்

அறைதல்கற் பித்துப் பொருப்பைப் பரவிய
சிறகறுப் பித்துக் கதிர்த்துப் புடைபடு
மபிநவச் சித்ரத் தனத்துக் கிருடிகள் உறவாமோ

தமரமிக் குத்திக் கதிர்க்கப் பலபறை
தொகுதொகுக் குத்தொத் தொகுக்குத் தொகுதொகு
திரிகடக் கத்தத் தரிக்கத் தரிகிட எனவோதிச்

†சவடுறப் பக்கப் பழொத்திப் புகையெழ
விழிகளுட் செக்கச் சிவத்துக் குறளிகள்
தசைகள்பட் சித்துக் களிக்கக் கழுதொடு கழுகாட

அமலையுற் றுக்கொக் கரித்துப் படுகள
அசுரரத் தத்திற் குளித்துத் திமியென
அடிநடித் திட்டிட் டிடித்துப் பொருதிடு மயிலோனே

அழகுமிக் கச்சித் ரபச்சைப் புரவியி
லுலவுமெய்ப் ப்ரத்ய க்ஷநற்சற் குருபர
அருணையிற் சித்தித் தெனக்குத் தெளிவருள் பெருமாளே

அபிஷேகம் கிரீடம். † சவடு உற பக்க பழு ஒத்தி பக்கத்துப்பழு வெலும்புகள் நெரிய முடக்கிய கைகளை ஒத்தித் துணங்கைக் கூத்தாடி.

தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத் தனதான.

471. கரிமுகக் கடகளிற் றதிகசற் பகமதக்
கஜமுகத் தவுணனைக் கடியானை
கடலைபொட் பயறுநற் கதலியிற் கனிபலக்
கனிவயிற் றினிலடக் கியவேழம்
அரிமுகத் தினனெதிர்த் திடுகளத் தினின்மிகுத்
தமர்புரிக் கணபதிக் கிளையோனே
அயிலெடுத் தசுரர்வெற் பலைவுறப் பொருதுவெற்
றியைமிகுத் தறுமுகக் குமரேசா
நரிமிகக் கிளைகளைப் பரியெனக் *கடிவளத்
தொடுபிடித் தெதிர்நடத் திடுமீசன்
நடனமிப் படியிடத் தினுமிசைத் தரையினிற்
கரியுரித் தணிபவற் கொருசேயே
†துரிபெறச் சரிபொழிற் கனவயற் கழகுளத்
‡தூரியமெய்த் தரளமொய்த் திட §வீறிச்
சுரர்துதித் திடமிகுத் தியல்தழைத் தருணையிற்
சுடரயிற் சரவணப் பெருமாளே. (௨௪௨)

தனன தந்தனந் தனதன தனதன
தனன தந்தனந் தனதன தனதன
தனன தந்தனந் தனதன தனதன தனதான.

472. கருதி றஞ்சிறந் தகல்வன புகல்வன
மதன தந்திரங் கடியன கொடியன
கனக குண்டலம் பொருவன வருவன ||பரிதாவும்
கடலு டன்படர்ந் தடர்வன தொடர்வன
விளையு நஞ்சளைந் தெளிர்வன ¶பிளிர்வன
கனையை நின்றுநின் றெதிர்வனமுதிர்வன இளையோர்முன்

*கடிவளம்-கடிவாளம். †துரி-(காய்கனிகளின் ஆகிய) சுமை. ‡தூரிய மெய்த்தரளம் - தூய்மையான முத்துக்கள். §வீறி-அதிகரித்து. ||பரி-வடவாமுகாக்கினி. ¶பிளிர்வன கொப்புளிப்பன.

*செருவை விண்டகஞ் சிறுவன உறுவன
களவு வஞ்சகஞ் சுழல்வன உழல்வன
தெனன தெந்தனந் தெனதென தெனதென எனநாதம்

தெரிசு ரும்பைவென் றிடுவன அடுவன
மருள்செய் கண்கள்கொண் டணைவர்த முயிரது
திருகு கின்றமங் கையர்வச மழிதலை ஒழிவேனோ

மருவு தண்டைகிண் கிணிபரி புரமிவை
கலக லன்கலின் கலினென இருசரண்
மலர்கள் நொந்துநொந் தடியிட வடிவமு மிகவேருய்

வலிய சிங்கமுங் கரடியு முழுவையு
முறைசெ ழும்புனந் தினைவிளை இதண்மிசை
மறவர் தங்கள்பெண் கொடிதனை ஒருதிரு வுளநாடி

அருகு சென்றடைந் தவள்சிறு பதயுக
சதத ளம்பணிந் ததிவித கலவியு
ளறம ருண்டுநெஞ் சவளுடன் மகிழ்வுற அணைவோனே

அமரர் சங்கமுங் குடிபுக நொடியினில்
நிருதர் சங்கமும் பொடிபட அமர்செய்து
அருணை வந்துதென் றிசைதனி லுறைதரு பெருமாளே.

தானன தான தானன தான
தானன தான தனந்ததான.

473. காணுத தூரம் நீணுத வாரி
காதார வார மதன்பிணுலே

காலாளும் வேளும் ஆலால நாதர்
காலால் நிலாவு †முனிந்து ‡பூமேல்

நாணுன தோகை நூலாடை சோர
நாடோர்க ளேச அழிந்துதானே

நாளுப வாத மேலாக ஆகம்
நாடோறும் வாடி மயங்கலாமோ

---

* செருவை விண்டு அகம் சிறுவன - போர் முயன்று அகங் கொண்டு சீறுவன. †முனிந்து-முனிய; எச்சத்திரிபு. ‡பூமேல்-பூமியின்மீது.

சோணாச லேச பூணார நீடு
தோளாறுமாறும் விளங்குநாதா
தோலாத வீர வேலால டாத
சூராளன் மாள வெகுண்டகோவே
சேணாடர் லோகம் வாழ்மாதி யானை
தீராத காதல் சிறந்தமார்பா
தேவாதி கூடு மூவாதி மூவர்
தேவாதி தேவர் கடம்பிரானே. (உசச)

தானா தத்தன தானா தத்தன
தந்த தனந்தன தான தந்தன
தானா தத்தன தானா தத்தன
தந்த தனந்தன தான தந்தன
தானா தத்தன தானா தத்தன
தந்த தனந்தன தான தந்தன தந்ததான.

474\. காரா டக்குழ லாலா லக்கணை
கண்கள் சுழன்றிட வேமு கங்களி
னூலா பச்சிலை யாலே *மெற்புசி
மஞ்சள் கலந்தணி வாளி கொந்தள
காதா டக்கடன் மேலா டக்குடி
இன்ப ரசங்குட மார்ப ளிங்கொளி கொங்கைமாதர்
காசா சைச்செய லாலே சொக்கிடு
விஞ்சையர் கொஞ்சிடு வாரி ளங்குயில்
போலே நற்றெரு ஊடா டித்†துயல்
தொங்கல் நெகிழ்ந்திடை பேது வண்டிட
கால்தா விச்சதி யோடே சித்திர
மென்ப நடம்புரி வாரு டன்செயல் மிஞ்சலாகிச்
சீரா டிச்சில நாள்போய் மெய்த்திரை
வந்து கலந்துயி ரோட வங்கமொ

---

*மெற்புசி-மேலேபூசி. † துயல்-அசைகின்ற.

டோ டிப்பல நோயோ டுத்தடி
  கொண்டு குரங்கென வேந டந்துசெல்
சியோ டிக்கிடை பாயோ டுக்கிய
  டங்கி அழிந்துயி ரோடு ளைஞ்சொளி யுங்கண்மாறிச்

சோரா மற்*பொறி கேளா மற்செவி
  துன்பமொ டின்பமு மேம றந்துபின்
ஊரார் சுற்றமு மாதோர் மக்களு
  மண்டியு மண்டையு டேகு விந்திறு
சீசி சிச்சிசி போகா நற்சனி
  யன்கட வென்றிட வேகி டந்துடல் மங்குவேனோ

மாரோன் முப்புர நீறு யுற்றிட
  அங்கி உமிழ்ந்திடு வோரி யம்புலி
தோல்சீ யத்தொடெ †ஏகா சர்ச்சடை
  கங்கை இளம்பிறை யாா ணிந்தவர்
மாடே றிக்கட லாலா லத்தையு
  முண்டவ ரெந்தை‡சி வானு பங்குறை என்றன்மாதா

மாலோ னுக்கிளை யாள்மா பத்தினி
  அம்பிகை சங்கரி மோக சுந்தரி
§வேதா மக்கலை ரூபாள் முக்கணி
  ரம்பிய கொங்கையி னுள்ப யந்தருள்
மானா னக்கும ராதோ கைப்பரி
  யின்பத வண்குரு வே||யெ னஞ்சுரர் தொண்டுபாடச்

சூரார் மக்கிட மாமே ருக்கிட
  அங்கட லெண்கிரி யோடி பங்கொடு
¶தீபே ழுற்றிட பாதா ளத்துறை
  நஞ்சா வின்$பண மாயி ரங்கெட

---

* பொறி-அறிவு †ஏகாசம்-போர்வை, ஏகாசர்-போர்வையை உடையவர். ‡சிவ அனுபங்கு உறை - சிவபெருமானோடு கூட (அவர் திருமேனியில்) பாதியாக உறையும். § வேதாம-வேதாகம. || எனஞ்சுரர் - என் அம்சுரர். ¶ தீபு ஏழ் - எழு தீவு $ பணம் - படமெடுத்தாடுஞ்சிரம்.

சூழ்வா ளக்கிரி தூளா கிப்பொடி
விண்கணி றைந்திட வேக டம்புரி நின்றவேலா
சோர்வே தத்தலை மேலா டிச்சுக
பங்கய செங்கர போட கம்பெற
வாகா னக்குற மாதோ டற்புத
* மங்குல ணங்குட னேம கிழ்ந்துநல்
† தூணே டிச்சுட ராகா சத்தைய
ணைந்துவி ளங்கரு ணாச லந்திகழ் தம்பிரானே. (௨௪௫)

தானதன தந்ததன தானதன தந்ததன
தானதன தந்ததன தந்த தனதான.

475. காருமரு வும்பெருகு சோலைமரு வுங்கொடிய
‡ காகளம டங்கவுமு ழுங்கு மதனாலே
காலடர வம்பமளி மேலடர வந்துபொரு
காமன்விடு விஞ்சுகணை அஞ்சு மலராலே
ஊருமுல கும்பழைய பேருகம்வி ளைந்ததென
வோரிரவு வந்ததல து சிந்தை அழியாதே
ஊடியிரு கொங்கைமிசை கூடிவரி வண்டினமு
லாவியக டம்பமலர் தந்த ருளுவாயே
ஆருமா வும்பிறையு நீருமணி யுஞ்சடைய
ராகிபர வும்படிநி னைந்த குருநாதா
ஆறுமுக முங்குரவு மேறுமயி லுங்குறவி
யாளுமுரா முந்திருவும் அன்பு முடையோனே
மேருமலை யும்பெரிய சூருமலை யுங்கரிய
வேலையலை யும்பகையும் அஞ்ச விடும்வேலா
மேதினியி றைஞ்சுமரு ணைபுரிவி ளங்குதிரு
வீதியிலெ ழுந்தருளி நின்ற பெருமானே. (௨௪௬)

மங்குல் அணங்கு - விண்ணுலகப் பெண், தெய்வானை † தூண்-சிவமாகிய அக்கினிஸ்தம்பம். ‡ காகளம்-குயிலினது எக்காள வோசை.

தானன தானதத்த தனதான
தானன தானதத்த தனதான.

476. கீதவி நோதமெச்சு குரலாலே
கீறுமை யார்முடித்த குழலாலே
நீதியி லாதழித்து முழலாதே
நீமயி லேறியுற்று வரவேணும்
சூதமர் சூருடக்க வருசூரா
சோணகி ரீயிலுற்ற குமரேசா
ஆதியர் காதொருச்சொ லருள்வோனே
ஆனைமு கார்கனிட்ட பெருமாளே. (உசஎ)

தனதனன தானதானன தனதனன தானதானன
தனதனன தானதானன தனதான.

477. குழவியுமாய் மோகமோகித குமரனுமாய் வீறுகாதலி
குலவனுமாய் நாடுகாடொடு தடுமாறிக்
குனிதலொடுகூ னீடுமாகிய கிழவனுமா யாவிபோய்விட
விறகுடனே தூளியாவதும் † அறியாதாய்
பழையசடா தாரமேனிகழ் கழியுடல்கா ணு‡ நிராதர
பரிவிலிவா §னாலைநாடொறு மடைமாறிப்
பலபலவாம் யோகசாதக உடல்கொடுமா யாதபோதக
பதியழியா வீடுபோயினி அடைவேனோ
எழுகடல்தீ மூளமேருவு மிடிபடவே தாவும்வேதமு
மிரவியும் ‖ வாய் பாறியோடிட முதுசேடன்
இருளறுபா தாளலோகமு மிமையமுநீ ளுகவாள்கிரி
இருபிளவாய் வீழமாதிர மலைசாய

நணில்-தடி † அறியா தாய்-அறிந்து தாவி. ‡நிராதர பரிவு இலி வான், நிராதரமாகிய அன்பமில்லாததான ஆகாயத்தில் §நாலை மடைமாறி-கழிந்துபோகும் நாலங்குலப்பிரமாண வாயுவைக்கழியாமல் திரும்பி ‖வாய்பாறி-இடம் பெயர்ந்து; பாறுதல்-அடியோடு பெயர்ந்து வீழுதல்.

அழகியமா பாகசாதன னமருமூர் பூதமாறுசெய்
அவுணர்தமா சேனைதூளெழ விளையாடி
அமரினைமே வாதசூரரை அமர்செயும்வே லாயுதாவுயர்
அருணையில்வாழ் வாகமேவிய பெருமாளே. (௨௪அ)

தானன தனதான தனதான.

478\. கோடான மடவார்கள் முலைமீதே
கூர்வேலை இணையான விழியூடே
ஊடாடி யவரோடும் உழலாதே
ஓர்போது திகழ்பாதம் அருள்வாயே
நீடாழி சுழல்தேசம் வலமாக
நீடோடி மயில்மீது வருவோனே
சூடான தொருசோதி மலைமேவு
சோணாடு புகழ்தேவர் பெருமாளே. (௨௪௯)

தனதன தத்தத் தனந்த தந்தன
தனதன தத்தத் தனந்த தந்தன
தனதன தத்தத் தனந்த தந்தன தனதான.

479\. சிலைநுதல் வைத்துச் சிறந்த குங்கும
திலதமு மிட்டுக் குளிர்ந்த பங்கய
திருமுக வட்டத் தமர்ந்த மென்குமிழ் தனிலேறிச்
செழுமணி ரத்னத் திலங்கு பைங்குழை
தனைமுனி வுற்றுச் சிவந்து நஞ்சணி
†செயலினை யொத்துத் தயங்கு வஞ்சக விழிசேரிப்
புலவிமி குத்திட் டிருந்த வஞ்சியர்
பதமல ருக்குட் பணிந்த ணிந்தணி
புரிவளை கைக்குட் கலின்க லென்றிட அநுராகம்
புகழ்நல மெத்தப் புரிந்து கொங்கையி
லுருகிய ணைத்துப் பெரும்ப்ரி யங்கொடு
புணரினும் நிற்பொற் பதங்கள் நெஞ்சினுள் மறவேனே

அமரினை மேவாத-அமைதியைப் பெறாத. †செயலினை-வித்தையை.

கலைமதி வைத்துப் புனைந்து செஞ்சடை
மலைமகள் புக்கத் தமர்ந்தி ருந்திட
கணகண கட்கட் கணின்க ணென்றிட நடமாடும்

கருணைய னுற்றத் ரியம்ப கன்தரு
முருகபு னத்திற் றிரிந்த மென்கொடி
கனதன வெற்பிற் கலந்த ணைந்தருள் புயவீரா

அலைகடல் புக்குப் பொரும்பெ ரும்படை
அவுணரை வெட்டிக் களைந்து வென்றுயர்
அமரர்தொ ழப்பொற் சதங்கை கொஞ்சிட வருவோனே

அடியவ ரச்சந் தழுங்கி டுந்துயர்
தனையொழி வித்துப் ரியங்கள் தந்திடும்
அருணகி ரிக்குட் சிறந்தமர்ந்தருள் பெருமாளே. (உ௫0)

தனனா தனனா தனனா தனனா
தனனா தனனா தனதான.

). சிவமா துடனே அனுபோ கமதாய்
சிவஞா னமுதே பசியாறி

திகழ்வோ டிருவோ ரொருரூ பமதாய்
திசைலோ கமெலாம் அநுபோகி

இவனே எனமா லயனோ டமரோ
ரிளையோ னெனவே மறையோத

இறையோ னிடமாய் விளையா டுகவே
யியல்வே லுடன்*மா அருள்வாயே

†தவலோ கமெலா முறையோ எனவே
தழல்வேல் கொடுபோ யசுரரைத்

தலைதூள் படவேழ் கடல்தூள் படமா
தவம்வாழ் வுறவே விடுவோனே

மா - (மயிலாகிய) குதிரை, † தவ-மிக,

கவர்பூ வடிவாழ் குறமா தடன்மால்
கடனு மெனவே அணைமார்பா

கடையேன் மிடிதூள் படநோய் விடவே
*கனல்மால் வரைசேர் பெருமாளே. (உ௬க)

தனதனன தனதனன தந்தனந் தந்தனந்
தனதனன தனதனன தந்தனந் தந்தனந்
தனதனன தனதனன தந்தனந் தந்தனந் தந்ததான.

481. சின†முடுவல் நரிகழுகு டன்பருந் தின்கணங்
கொடிகெருடன் அலகைபுழு வுண்டுகண் டின்புறுஞ்
செடமளறு மலசலமொ டென்புதுன் றுங்கலந் துன்புமேவு

சென்னவலை மாளவலை ரண்டுமுன் பின்தொடர்ந்
தனுகுமுட லினைகவடி விங்கடைந் தம்பரஞ்
சிறுமணலை அளவிடினு மங்குயர்ந் திங்குலந்தொன் றுநாயேன்

கனகபுவி நிழல்மருவி அன்புறுந் தொண்டர்பங்
குறுகவினி அருள்கிருபை வந்து‡தந் தென்றுமுன்
கடனெனது உடலுயிரு முன்பரந் தொண்டுகொண் டன்பரோடே

கலவிநல மருவிவடி வஞ்சிறந் தன்பதம்
புணர்கரண மயில்புறமொ டின்புகொண் டண்டருங்
கனகமலர் பொழியவுன தன்புகந் தின்றுமுன் சிந்தியாதே

தனனதன தனனதன தந்தனந் தந்தனம்
தகுகுகுகு குகுகுகுகு டங்குடங் குந்தடந்
தவில்முரசு பறைதிமிலை டிங்குடிங் குந்கடந் தண்டர்பேரி

தடுடுடுடு டுடுடுடுடு டுண்டுடுண் டுண்டுடுண்
டிமிடிமிட டகுர்திகுகு சங்கவெண் கொம்புதிண்
கடையுகமொ டொலியகட லஞ்சவஞ் சன்குலஞ் சிந்திமாளச்

சினமுடுகி அயிலருளி யுப்பரந் தம்பரந்
திகையுரகர் புவியுளது மந்தரம் பங்கயன்
செகமுழுது மகிழவரி அம்புயன் தொண்டுகொண் டஞ்சல்பாடத்

* கனல்மால் வரை - திருவண்ணுமலை, † முடுவல் - நாய், ‡ தந்து - தர.

திருமுருவ வருளியுய ரெங்கையின் பங்குறுங்
கவுரிமன முருகவொரு கங்கைகண் டன்புறுந்
திருவருண கிரிமருவு சங்கரன் கும்பிடுந் தம்பிரானே. (௨௯௨)

தத்த தத்ததன தத்த தத்ததன
தத்த தத்ததன தத்த தத்ததன
தத்த தத்ததன தத்த தத்ததன தந்ததான.

482. சுக்கி லச்*சுரோணி தத்தி லுற்றநளி
னத்தி லப்புவென ரத்த முற்றிசுக
சுக்கி லக்குளிகை யொத்து கெர்ப்பகுகை வந்துகோல
தொப்பை யிட்டவயி றிற்பெ ருத்துமிக
வட்ட மிட்டுடல வெப்ப முற்றுமதி
சொற்ற பத்தின்மறி யக்ஷ ரத்தினிடை விஞ்சையாலே
கக்க நற்புவியி லுற்ற ரற்றிமுலை
யைக்கொ டுக்கவமிர் தைப்பு சித்து†வளர்
கைக்க சத்தியொடு மைத்து தத்துநடை அந்தமேவி
கற்று வெற்றறிவு பெற்று பச்சைமயி
லொத்து மக்கள்மய லிற்கு லித்துநெறி
கட்டி யிப்படிபி றப்பி லுற்றுடல மங்குவேனோ
தெற்க ரக்கர்பவி ஷைக்கு லைத்து ‡விட
ணற்கு நத்தரச ளித்து முத்திகொடு
சித்தி ரக்கிருவு ரத்த சக்கிரம கிழ்ந்தவேளே
செக்க ரத்தின்மலை முப்பு ரத்தெரி
யிட்ட §சத்திசிவ னுற்று நத்தமிகு
சித்த னைத்தையும்வி ழித்த சத்தியுமை தந்தபாலா
தர்க்க மிட்டசுர ரைக்கெ லித்துமலை
யுக்கெ ழுக்கடல்கொ ளுத்தி அட்டதிசை
தட்ட முட்டையடை யக்கொ டிப்புகையின் மண்டும்வேலா

..ரோணி-சுரோணி; குறுக்கல்விகாரம். † வளர்கைக்கு அசத்தி யொடு எனப்பிரிக்க ‡ விடணற்கு-விபீஷணற்கு § சத்தி - வன்மை.

தத்தை வித்ருமதி றத்தி முத்தணிகு
றத்தி கற்பகவ னத்தி சித்தமவை
சக்கு ரத்தஅரு ணைக்கி ரிக்குள்மகிழ் தம்பிரானே. (௨௫௩)

தந்தத் தந்தத் தனதன தானன
தந்தத் தந்தத் தனதன தானன
தந்தத் தந்தத் தனதன தானன தனதான.

483. செஞ்சொற் பண்பெற் றிடுகுட மாமலை
கும்பத் தந்திக் குவடென வாலிய
தெந்தப் பந்தித் தரளம தாமென விடராவி
சிந்திக் கந்தித் திடுகளை யாமென
தங்கத் தம்பொற் பெறுமென வோதுவ
* திண்டுப் புந்தித் திடுகனி தானுமு னிதழாமோ
மஞ்சொக் குங்கொத் தளகமெ னுமிடை
கஞ்சத் தின்புற் றிடுதிரு வேயிள
வஞ்சிக் கொப்பொப் பெனுமயி லேயென முறையேய
வந்தித் திந்தப் படிமட வாரொடு
கொஞ்சிக் கெஞ்சித் தினமவர் தாடொழு
மந்தப் புத்திக் † கசடென நாளுந கடிசேர்வேன்
நஞ்சைக் கண்டத் திடுபவ ராரொடு
திங்கட் பிஞ்சக் கரவணி வேணியர்
நம்பர்ச் செப்பொற் பெயரசு ரேசனை யுகிராலே
நந்தக் கொந்திச் சொரிகுடல் சோர்வர
$ நந்திக் கம்பத் தெழுநர கேசரி
நஞ்சக் குண்டைக் கொருவழி யேதென மிகநாடி
வெஞ்சச் ¶ சிம்புட் சொருபம தானவர்
பங்கிற் பெண்கற் புடையபெ ணாயகி
விந்தைச் செங்கைப் பொலிசுத வேடுவர் புனமீதே

---

* திண்டுப் புந்தித்திடுகனிதானும் - திண்டுப்பும் தித்தித்திடு கனிதானும், துப்பு-பவளம். ‡ கசடனெநாள் - கசடன் × எந் + நாள். $ நந்தி-தோன்றி. ¶ சிம்புட் சொருபம்-சிங்கத்தினும் வலிய சரபப்பக்ஷிரூபம்.

வெண்டித் தங்கித் திரிகிழ வாஅதி
துங்கத் துங்கக் கிரி அருணைபுரி
வெங்கட் சிங்கத் தடிமயி லேறிய பெருமாளே. (௨௩௪)

தனதன தந்தனந் தானதத்த தந்த
தனதன தந்தனந் தானதத்த தந்த
தனதன தந்தனந் தானதத்த தந்த தனதனத் தனதான.

484. தமரகு ரங்களுங் காரிருட்பி ழம்பு
மெழுகிய அங்கமும் பார்வையிற்கொ ளுந்து
தழலுமிழ் கண்களுங் காளமொத்த கொம்பும் உளகதக்கடமாமேல்

தனிவரு மந்தகன் பாசம்விட்டெ றிந்து
அடவரு மென்றுசிந் தாகுலத்தி ருந்து
தமரழ மைந்தருஞ் சோகமுற்றி ரங்க மரணபக் குவமாநாள்

கமலமு கங்களுங் கோமளத்தி லங்கு
நகையுநெ டுங்கணுங் காதிலுற்றி லங்கு
கனககு தம்பையுந் தோடும்வஜ்ர-அங்க தமுமடற் சுடர்வேலும்

கடிதுல கெங்கணுந் † தாடியிட்டு வந்த
மயிலுமி லங்கலங் காரபொற்ச தங்கை
மூலொலி தண்டையங் காலுமொக்க வந்து வரமெனக் கருள்கூராய்

இமகிரி வந்தபொன் பாவைபச்சை வஞ்சி
அகிலத லம்பெறும் பூவைசத்தி யம்பை
இளமுலை யின்செழும் பால்குடித்தி லங்கு மியல்சிமிர்த் திடுவோனே

இறைவரி றைஞ்சநின் றுகமப்ர சங்க
முறைசெய்தி டுப்ரசண் டாவிசித்து நின்ற
ரணமுக துங்கவெஞ் சூருடற்பி ளந்த அயிலுடைக் கதிர்வேலா

அமணரு டங்களுங் கூடலிற்றி ரண்டு
கழுவிலு தைந்துதைந் தேறவிட்டு நின்ற
அபிநவ துங்கசங் காநதிக்கு மைந்த அடியவர்க் கெளியோனே

வெண்டி - வேண்டி; † தாடி - தாவடி, பிரயாணம்.

அமரர்வ ணங்குகந் தாகுறத்தி கொங்கை
தனில்முழு குங்கடம் பாமிகுத்த செஞ்சொ
லருணைநெ டுந்தடங் கோபுரத்த மர்ந்த அறுமுகப் பெருமாளே.

தனனதன தனனதன தாந்தன தாந்தனனம்
தனனதன தனனதன தாந்தன தாந்தனனம்
தனனதன தனனதன தாந்தன தாந்தனனம் தனதான.

485. தமிழோதிய குயிலோமயி லாண்டலை யாம்புறவங்
கிளிகாடையி *னணிலோளி யாங்குரல் வாய்ந்ததிசெந்
தருமாமிட றுலியாரித ழாஞ்சுளை தேன்கனியின் சுவைசேருந்
தனபாரமு மலையாமென வோங்கிட மாம் †பொறிசிந்
திடவேல்விழி நுதலோசிலை வான்பிறை மான்தளிரின்
‡சரிரார்குழ லிருளார்நகை யோங்கிய வான்கதிரின் சுடர்பாய
குமிழ்நாசியின் முகமோமதி யாங்குளிர் சேங்கமலஞ்
சரிதோடிணை செவியா §டுச லாங்கள பூங்கமுகங்
கொடிநூலிடையுடையாரன மாம்ப்ரியர் மாண்புரிமின் கொடிமாதர்
குணமோடம ளியினூடுறு மோங்கிய பூங்கமலஞ்
சரணூபுர குரலோசையு மேந்திடு மாண்டலையின்
கொடியோடெழுதரிதாம்வடிவோங்கியபாங்கையுமன் தகையேனே
திமிதோதிமி திமிதோதிமி தாங்கண திங்கணதொந்
தகுதோதகு தகுதோதகு டாங்குட திங்கடதொந்
திகுடோடிமி டிமிடோடிமி டாங்குட டந்தகமென் றியல்பேரி
திசைமூடுக டலேழ்பொடி யாம்படி யோங்கியவெங்
கரிதேர்பரி யசுரார்கள மாண்டிட நீண்டரவின்
சிரமீள்படகுவடோதுகள் வான்பெற வாங்கியவன் கதிர்வேலா
கமழ்மா ‖ விதழ் சடையாடி யேன்துயர் தீர்ந்திடவெண்
தழல்¶மாபொடியருள்வோரடல் மான்துடி தாங்கியவண்
கார் $மாடருளுமையாளமையீன் றவனீன் றருள்மென் குரவோனே

---

*அணில்-அன்றில் †பொறிசிந்திட-தேமல் சிதறிட. ‡சரிரார் குழல் சரிர ஆர்குழல் §உசலாம்-ஊசலாம் ‖இதழ்-இதழி, கொன்றை ¶மாபொடி திருநீறு. $ மாடு - பக்கம்.

கடையேனிரு வினைநோய்மல மாண்டிட தீண்டியவொண்
சுகமோகினி வளிநாயகி பாங்கனெ னும்பகர்மின்
கலைநூலுடை முருகா *அழ லோங்கியவோங்கலின்கண் பெருமாளே

தனன தனத்தத் தனந்த தனன தனத்தத் தனந்த
தனன தனத்தத் தனந்த தனதான.

486. தலையை மழித்துச் சிவந்த துணியை யரைக்குப் புனைந்து
சடையை வளர்த்துப் புரிந்து புலியாடை
சதிரொ டுவப்பப் புனைந்து விரகொ டுகெறகப் புகுந்து
தவமொ ருசத்தத் தறிந்து திருநீறு
கலையை மிகுத்திட் டணிந்து காண வலைக்குட் புகுந்து
கதறு நிலைக்கைக் கமர்ந்த எழிலோடே
கனக மியற்றித் திருந்து துவளு மெனைச்சற் றறிந்து
கவலை யொழித்தற் கிரங்கி யருள்வாயே
அலைக டலிற்கொக் கரிந்து மருவ ரையைப்பொட் டெறிந்து
மமரு லகத்திற் புகுந்து முயானை
அருளொ டுகைப்பற் றிவந்து மருண கிரிப்புக் கிருந்து
மறிவு ளபத்தர்க் கிரங்கு மினையோனே
மலையை வளைத்துப் பறந்து மருவு புரத்தைச் சிவந்து
வறிது நகைத்திட் டிருந்த சிவனார்தம்
மதலை புனத்திற் புகுந்து நரவ டிவுற்றுத் திரிந்து
மறமயி லைச்சுற் றிவந்த பெருமாளே. (௨௩௫)

தானன தான தத்த தானன தான தத்த
தானன தான தத்த தனதான.

487. தேதொகு வாச முற்ற கீதவி நோத மெச்சு
தேனளி சூழ மொய்த்த மலாலே
சீறும ராவெ யிற்றி லூறிய காளம் விட்ட
சீதநி லாவெ றிக்கு மனலாலே

*அழலோங்கிய வோங்கல் - திருவண்ணாமலை.

போதனை நீதி யற்ற வேதனை வாளி தொட்ட
 போர்மத ராஜ னுக்கும் அழியாதே
போகமெ லாநி றைத்து மோகவி டாய்மி குத்த
 பூவையை நீய ணைக்க வரவேணும்
மாதினை வேணி வைத்த நாதனு மோது பச்சை
 மாயனு மாத ரிக்கு மயில்வீரா
வானவர் சேனை முற்றும் வாழும ராப திக்குள்
 வாரண மான தத்தை மணவாளா
மேதினி யோர்த ழைக்க வேயரு ணைச லத்து
 வீதியில் மேவி நிற்கு முருகோனே
மேருவை நீறெ ழுப்பி நான்முக னூர்ப தத்தில்
 வேலடை யாள மிட்ட பெருமாளே. (உருஅ)

தான தத்த தந்த தான தத்த தந்த
தான தத்த தந்த தனதான.

488. தோத கப்பெ ரும்ப யோத ரத்தி யங்கு
 தோகை யர்க்கு நெஞ்சம் அழியாதே
சூலை வெப்ப டர்ந்த வாத பித்த மென்று
 சூழ்பி ணிக்க ணங்கள் அணுகாதே
பாத கச்ச மன்தன் மேதி யிற்பு குந்து
 பாசம் விட்டெ றிந்து பிடியாதே
* பாவ லற்கி ரங்கி நாவ லர்க்கி சைந்த
 பாடல் மிக்க செஞ்சொல் தரவேணும்
வேத மிக்க விந்து நாத மெய்க்க டம்ப
 வீர பத்ர கந்த முருகோனே
மேரு வைப்பி ளந்து சூரனைக்க டிந்து
 வேலை யிற்று ளைந்த கதிர்வேலா

---

* பாவலன் - நக்கீரர்.

கோதை பொற்கு றிஞ்சி மாது கச்ச ணிந்த
கோம ளக்கு ரும்பை புணர்வோனே
கோல முற்றி லங்கு சோண வெற்பு யர்ந்த
கோபு ரத்த மர்ந்த பெருமாளே. (௨௫௯)

தானதன தனதத்தந் தனதானா.

489. பாணமல ரதுதைக்கும் படியாலே
பாவியிள மதிகக்குங் கனலாலே
நாணமழி யவுரைக்குங் குயிலாலே
நானுமய லிலிளைக்குந் தரமோதான்
சேணிலரி வையணைக்குந் திருமார்பா
தேவர்மகு டமணங்குங் கழல்வீரா
காணஅரு ணையில்நிற்குங் கதிர்வேலா
காலன்முது கைவிரிக்கும் பெருமாளே. (௨௬௰)

தானா தானா தானா தானா தானா தானத் தனதான.

490. பாலாய்நூலாய்தேனாய் *நீளாய் பாகாய்வாய்சொற்கொடியார்தாம்
†பாடா வாடா வேடா வாலே பாடா யீடற் றிடைபீறும்
சேலா லேகா லாலே யூனே லேசூழ் பாசக் குடில்மாசு
தேயாமாயாவோயாநோயால்சோர்வாய்மாளக் கடவேனோ
ஞாலா மேலா வேதா போதா நாதா ‡சோதிக் கிரியோனே
ஞானாசாராவானாள்கோவே நானாவேதப் பொருளோனே
வேலா பாலா §சீலா காரா வேளே வேடக் கொடிகோவே
வீரா தாரா ஆறா தாரா வீரா வீரப் பெருமாளே. (௨௬௧)

தனதன தனந்த தான தனதன தனந்த தான
தனதன தனந்த தான தனதான.

491. புணர்முலை மடந்தை மாதர் மலையினி னுழன்ற நேக
பொறியுட லிறந்து போன தளவேதான்

---

*நீள் ஆய் பாகாய்-நீண்டு வருகின்ற ஆய்ந்த பாகாய்: †பாடா ஆடா வேள் தாவாலே-பாடி ஆடி விரும்புகின்றமையினாலே: வேள்-விருப்பம். ‡சோதிக்கிரி-திருஅண்ணாமலை. §சீல ஆகாரா-பரிசுத்த வடிவனே.

புகழ்மறை யறிந்து கூறு மினியென தகப்பொ ருளி
பொருளென நினைந்து நாயென் இடர்தீர

மணமுணர் மடந்தை மாரொ டொளிர்திரு முகங்க ளாறு
மணிமகு டமுங்கொள் பானு வெயிலாசை

வரைபா வனந்த கோடி முனிவர்கள் புகழ்ந்து போத
மயில்மிசை மகிழ்ந்து நாடி வரவேணும்

பனைமுலை யரம்பை மார்கள் குயில்கிளி யினங்கள் போல
பரிவுகொ டுகந்து வேத மதுகூறப்

பறைமுரசு சாந்தபேரி முறைமுறை ததும்ப நீசர்
படைகட லிறந்து போக விடும்வேலா

அணிசுக நரம்பு வீணை குயில்புற வினங்கள் போல
அமளியில் களங்கொ ளோசை வளர்மாது

அரிமகள் மணங்கொ டேகி யெனதிட ரெரிந்து போக
அருணையின் விலங்கல் மேவு பெருமாளே (உ௯உ)

தனன தான தானன தனன தான தானன
தனன தான தானன தனதான.

492\. புலைய னான மாவீணன் வினையி லேகு மாபாவி
பொரையி லாத கோபிகன் முழுமூடன்

புகழி லாத மாமுகன் அறிவிலாத [1] காபோதி
பொறிக ளோடு போய்வீழு மதிகேதன்

நிலையி லாத கோமாளி கொடையி லாத வீதாரி
நெறியி லாத வேமாளி குலபாதன்

நினது தாளை நாடோறு மனதி லாசை வீடாமல்
நினையு மாறு நீமேவி யருள்வாயே

சிலையில் வாளி தானேவி யெதிரி ராவ ணார்தோள்கள்
சிதையு மாறு போராடி ஒரு சீதை

சிறையி லாம லேகூடி யவனி மீதி லேவீறு
திறல னான மாமாயன் மருகோனே

[1] போதி-கபோதி, குருடன்.

அலைப மேரு மாசூரர் பொடிய தாக வேலேவி
அமர தாடி யேதோகை மயிலேறி

அதிக தேவ ரேசூழ உலக மீதி லேகூறும்
அருணை மீதி லேமேவு பெருமாளே. (௨௬௩)

தானனத் தத்ததனத் தானனத் தத்தனத்
தானனத் தத்ததனத் தத்த தனதான.

493. போககற் பக்கடவுட் பூருகத் தைப்புயலைப்
பாரியைப் பொற்குவையுச் சிப்பொ ழுதினீயும்

போதுடைப் புத்திரைப் போலவொப் பிட்டுலகத்
தோரைமெச் சிப்பிரியப் பட்டு மிடிபோகத்

த்யாகமெத் தத்தருதற் காசுநற் சித்திரவித்
தாரமுட் பட்டதிருட் டுக்க விகள்பாடித்

தேடியிட் டப்படுபொற் பாவையர்க் கிட்டவர்கட்
சேல்வலைப் பட்டடிமைப் பட்டு விடலாமோ

ஆகமப் பத்தருமற் றுரணச் சுத்தருமுற்
றுதரிக் கைக்கருணைத் தூப்பு மதில்சூழும்

ஆடகச் சித்ரமணிக் கோபுரத் துத்தரதிக்
காகவெற் றிக்†கலபக் கற்கி யமர்வோனே

தோகையைப் பெற்றஇடப் பாக‡ரொற் றைப்பகழித்
§தூணிமுட் டச்சுவறத் திக்கி லெழுபாரச்

சோதிவெற் பெட்டுமுதிர்த் தூளிதப் பட்டழிச்
சூரனைப் பட்டுருவத் தொட்ட பெருமாளே. (௨௬௪)

தான தனத்தத் தனத்த தத்தன
தான தனத்தத் தனத்த தத்தன
தான தனத்தத் தனத்த தத்தன தனதான.

494. மானை விடத்தைத் தடத்தி னிற்கயல்
மீனை நிரப்பிக் குனித்து விட்டணை
வாளி யைவட்டச் சமுத்தி ரத்தினை வடிவேலை

*போக கற்பக் கடவுட் பூருகம் - இஷ்டபோகத்தையளிக்கும்கற்பக மாகிய தெய்வ விருக்ஷம். † கலபகற்கி - மயிற்குதிரை. ‡ ஒற்றைப்பகழி- திரிபுரசம்மாரத்தில் அம்பாக உற்ற விஷ்ணு § தூணி - அந்த அம்பு தங் கும் கூடாகிய கடல்; விஷ்ணுபாற்கடலில் பள்ளிகொண்டார் என்றபடி.

வாளை *வனத்†துற் பலத்தி னைக்கயல்
மீனை விழிக்கொப் பெனப்பி டித்தவர்
மாய வலைப்பட் டிலைத் ‡துடக்§குழல் மணநாறும்

ஊன விடத்தைச் சடக்கெ னக்கொழு
ஆறு முபத்தக் கருத்த டத்தினை
யூது பிணத்தைக் குணத்ர யத்தொடு தடுமாறும்

ஊச லைதித்தத் த்வமற்ற செத்தையு
பாதி யையொப்பித் துணிப்ப வத்தற
வோகை செலுத்திப் ரமிக்கு மிப்ரமை தெளியாதோ

சான கிகற்புத் தனைச்சு டத்தன
சோக வனத்திற் சிறைப்ப டுத்திய
தானை யரக்கற் குலத்த ரத்தனை வருமாளச்

சாலை மரத்துப் புறத்தொ ளித்தடல்
வாலி யுரத்திற் சரத்தை விட்டொரு
தாரை தனைச்சுக் ரிவற்க ளித்தவன் மருகோனே

சோனை மிகுத்துத் திரட்பு னத்தினி
வானை மதத்துக் கிடக்கு மற்புத
சோணகிரிச்சுத் தர்பெற்ற கொற்றவ மணிநீபத்

தோள்கொ டுசக்ரப் பொருப்பி னைப்பொடி
யாகநெ ருக்கிச் செருக்க ளத்தெதிர்
சூரனைவெட்டித் துணித்த டக்கிய பெருமாளே. (உகரு)

தான தத்ததன தான தத்ததன
தான தத்ததன தான தத்ததன
தான தத்ததன தான தத்ததன தனதான.

495. மேக மொத்தகுழ லார்சி லைப்புருவ
வாளி யொத்தவிழி யார்மு கக்கமல
மீது பொட்டிடமு கார்க ளத்திலணி வடமாட

* வனம்-ஜலம். † உற்பலம் குவளைமலர். ‡ துடக்கு-மகளிர் சூதகம்.
§ உழல்-ஊழல், ஊழல் மணம்-துர்நாற்றம்.

மேரு வொத்தமுலை யார்ப ளப்பனென
மார்பு துத்திபுய வார்வ ளைக்கடகம்
வீறி டத்துவளு நூலொ டொத்தஇடை யுடைமாதர்

தோகை பக்ஷிநடை யார்ப தத்திலிடு
நூபு ரக்*குரல்கள் பாட கத்துகில்கள்
சோர நற்றெருவு டேந டித்துமுலை விலைகூறிச்

சூத கச்சரச மோடெ டெத்திவரு
வோரை நத்திவிழி யால்ம ருட்டிமயல்
தாள்†ம ருத்திலுயி ரேப றிப்பவர்கள் உறவாமோ

சேக ணச்செகண தோதி மித்திகுட
டாகு டுட்டமட டீகு தத்தொகுர்தி
தீத கத்திமித தோவு டுக்கைமணி முரசோதை

தேச முற்கவர ஆயி ரச்சிரமு
மூளிபட்டுமக மேரு வுக்கவுணர்
தீவு கெட்டுமுறை யோவெ னக்கதற விடும்வேலா

ஆக மத்திபல கார ணத்தியெனை
யீனு சத்திஅரி ஆச னத்திசிவ
ஞாக முற்றசிவ காமி பத்தினியின் முருகோனே

ஆர ணற்குமறை தேடி யிட்டதிரு
மால்ம கட்சிறுமி மோக சித்ரவளி
ஆசை பற்றிஅரு ணாச லத்தின்மகிழ் பெருமாளே. ()

தனதன தந்ததத்த தனதன தந்ததத்த
தனதன தந்ததத்த தனதான.

496. மொழியநி றங்கறுத்து மகாவி னங்கலக்கி
முடியவ ளைந்தாற்று கடலாலும்

முதிரவி டம்பரப்பி வடவைமு கந்தழற்குள்
முழுகியெ ழுந்திருக்கு நிலவாலும்

*குரல்கள் பாட—ஆகத் துகில்கள் சோர எனப்பிரிக்க, ஆகத் துகில்-மார்பு வஸ்திரம் †மருத்தில்-மருந்தினால்.

மழையள கந்தரித்த கொடியிடை வஞ்சியுற்ற
மயல்தணி யும்படிக்கு நினைவாயே
மரகத துங்கவெற்றி விகடந டங்கொள்சித்ர
மயிலினில் வந்துமுத்தி தரவேணும்
அழகிய மென்குறத்தி புளகித சந்தனத்தி
னமுதத னம்படைத்த திருமார்பா
அமரர்பு ரந்தனக்கு மழகிய செந்திலுக்கு
மருணைவ ளம்பதிக்கு மிறையோனே
எழுபுவ னம்பிழைக்க அசுரர்சி ரந்தெரிக்க
எழுசயி லந்துளைத்த சுடர்வேலா
இரவிக ளிந்த்ரர்த்தர் அரியர பங்கயத்தர்
இவர்கள்ப யந்தவிர்த்த பெருமாளே. (உகூஎ)

தனதனன தான தத்த தனதனன தான தத்த
தனதனன தான தத்த தனதான.

497. வடவயன லூடு புக்கு முழுகியெழு மாம திக்கு
மதுரமொழி யாழி சைக்கு மிருநாலு
வரதிசைவி டாது சுற்றி யலறுதிரை வாரி திக்கு
மடியவரு வேள்க ணைக்கு மறவாடி
நெடுகனக மேரு வொத்த புளகமுலை *மாத ருக்கு
நிறையுமிகு காத லுற்ற மயல்தீர
நினைவினொடு பீலி வெற்றி மரகதக லாப சித்ர
நிலவுமயி லேறி யுற்று வரவேணும்
மடலவிழு மாலை சுற்று புயமிருப தோடு பத்து
மவுலியற வாளி தொட்ட அரிராமன்
மருகபல வான வர்க்கு மரியசிவ ஞானப டிக்க
மவுனமறை யோது வித்த குருநாதா

மாதருக்கு-மாது அருக்கு, அருக்கு-அருமை.

இடையரியு லாவு மூக்ர அருணகிரி மாந கர்க்கு
இனியகுண கோபு ரத்தில் உறைவோனே
எழுபுவிய ளாவு வெற்பு முடலினொடு நாக மெட்டு
மிடையுருவ வேலை விட்ட பெருமாளே. (௨௬௮)

தனதன தானதன தனதன தானதன
தனதன தானதன தனதான.

498. விடமத வேள்வாளியின் விசைபெறு *மாலாகல
விழிகொடு வாபோவென உரையாடும்
விரகுட னூருயிர மனமுடை மாபாவிகள்
ம்ருகமத கோலாகல முலைதோய
அடையவு மாசாபர வசமுறு கோமாளியை
அவனியு மாகாசமும் வசைபேசும்
அசடவ நாசாரனை அவலனை ஆபாசனை
அடியவ ரோடாள்வதும் ஒருநாளே
வடகுல கோபாலர்த மொருபதி னாறாயிரம்
வனிதையர் தோள்தோய்தரும் அபிராம
மரகத நாராயணன் மருமக சோணாசல
மகிபச தா காலமும் இளையோனே
$ உடுபதி § சாயாபதி சுரபதி மாயாதர
உலகுய வாரார்கலி வறிதாக
உயரிய மாநாகமு நிருதரு நீறாய்விழ
ஒருதனி வேலேவிய பெருமாளே. (௨௬௯)

தனன தானன தனன தானன தனன தானனந் தனதான.

499. விதிய தாகவெ பருவ மாதரார் விரகி லேமனந் தடுமாறி
விவர மானதொ ரறிவு மாறியே வினையி லேஅலைந் திடுமுடன்
முதிய மாதமி ழிசையதாகவே மொழிசெய் தேநினைந் திடுமாறு
முறைமை யாகநி னடிகள் மேவவே முனிவு தீரவந் தருள்வாயே

* ஆலாகல - ஆலகால. $ உடுபதி - சந்திரன் § சாயாபதி - சூரியன்.

சதிய தாகிய அசுரர் மாமுடி தரணி மீதுகுஞ் சமாரடி
சகல லோகமும் வலம தாகியே தழைய வேவருங் குமரேசா
அதிக வானவர் கவரி வீசவே அரிய கோபுரந் தனில்மேவி
அருணை மீதினில் மயிலிலேறியே அழகதாய்வரும் பெருமாளே.

தந்தத் தனதன தந்தத் தனதன
தந்தத் தனதன தந்தத் தனதன
தனத்த தனதன தனத்த தனதன
தனத்த தனதன தனத்த தனதன தனதான.

500. விந்துப் புளகித இன்புற் றுருகிட
சிந்திக் கருவினி லுண்பச் சிறுதுளி
விரித்த * கமலமெல் தரித்து ளொரு ¶ சுழி
யிரத்த குளிகையொ டுதித்து வளர்மதி
விண்டுற் றருள்பதி கண்டுற் றருள்கொடு
† மிண்டிச் செயலினி ரம்பித் துருவொடு
மெழுக்கி லுருவென வலித்து எழுமதி
கழித்து ‡ வயிறுகு டமொப்ப வொருபதில்
விஞ்சைச் செயல்கொடு கஞ்சச் சலவழி
வந்துப் புவிமிசை பண்டைச் செயல்கொடு
விழுப்பொ டுடல்தலை அழுக்கு மலமொடு
கவிழ்த்து விழுதழு துகுப்ப அனைவரு மருளகூர
மென் § பற் றுருகிமு கந்துட் டனைமுலை
யுண்கத் தரகொடு துங்கிச் சுவைபெற
வளத்தொ டளமல சலத்தொ § டுழைகிடை
துடித்து தவழ்நடை வளர்த்தி யெனதகு
வெண்டைப் பரிபுர தண்டைச் சரவட
முங்கட் டியல்முடி பண்பித் தியல்கொடு

---

* கமலமெல் - கமலமேல ¶ சுழி - நாதம் † மிணடி - வலிகொண்டு
‡ வயிறு குடம் ஒப்ப எனப்பிரிக்க § பற்றுருகி - பாசத்தினலுருகி.
§ உழை கிடை - உழைத்துக்கிடந்து.

விதித்த முறைபடி படித்து மயல்கொள
தெருக்க ளினில்வரு விருப்ப இளமுலை

விந்தைக் கயல்விழி கொண்டற் குழல்மதி
துண்டக் காவலை கொஞ்சுக் குயில்மொழி

விடுப்ப * துதைகலை நெகிழ்த்தி மயிலென
நடித்த வர்கள் மயல் $ பிடித்தி டவர்வரு வழியேபோய்

சந்தித் துறவொடு பஞ்சிட் டணைமிசை
கொஞ்சிப் பலபல விஞ்சைச் சரசமொ

டணைத்து மலரிதழ் கடித்து இருகர
மடர்த்த குவிமுலை யழுத்தி § மிடறுறு

சங்குத் தொனியொடு பொங்கக் குழல்மலர்
சிந்தக் கொடியிடை தங்கிச் சுழலிட

சரத்தொ டிகள்வெயி லெறிப்ப மதிநுதல்
வியர்ப்ப பரிபுர மொலிப்ப எழுமத

சம்பத் திதுசெய லின்பத் திருள்கொடு
வம்பிற் பொருள்கள்வ ழங்கிற் றிதுபிணை

சலித்து வெகுதுய ரிளைப்பொ டுடல்பிணி
|| பிடித்தி டனைவரும் நகைப்ப கருமயிர் நரைமேவி

தன்னைத் தடிகொடு குந்திக் ¶ கவியென
உந்திக் கசனம றந்திட் டுளமிக

சலித்து வுடல்சல மிகுத்து மதிசெவி
விழிப்பு மறைபட கிடத்தி மனையவள்

சம்பத் துறைமுறை யண்டைக் கொளுகையில்
சண்டக் கருநம னண்டிக் கொளுகையி

றெடுத்து விசைகொடு பிடித்து வுயிர்தனை
பதைப்ப தனிவழி யடித்து கொடுசெல

சந்தித் தவரவர் பங்குக் கழுதுவி
ஈங்கப்பிணமெடு மென்றிட் டறைபறை

---

* துதை-நெருங்கிய $ பிடித்திட அவர்வரு எனப்பிரிக்க § மிடறு-கழுத்து || பிடித்திட அனைவரும் எனப்பிரிக்க ¶ கவி-குரங்கு.

தடிப்ப சுடலையி லிறக்கி விறகொடு
கொளுத்தி யொருபிடி பொடிக்கு மிலையெனு முடலாமோ

திந்தித் திமிதிமி திந்தித் திமிதிமி
திந்தித் திமிதிமி திந்தித் திமிதிமி

திமித்தி திமிதிமி திமித்தி திமிதிமி
திமித்தி திமிதிமி திமித்தி திமிதிமி

என்பத் துடிகள்த வுண்டைக் கிடுபிடி
பம்பைச் சலிகைகள் சங்கப் பறைவளை

திகுர்த்த திகுதிகு டுடுட்டு டுடுடுடு
டிடிக்கு திகவென வுடுக்கை முரசொடு

செம்பொற் குடமுழ வுந்தப் புடன்மணி
பொங்கச் சுரர்மலர் சிந்தப் பதமிசை

செழித்த மறைகிளர் துதிப்ப முனிவர்கள்
களித்து வகை * பணி முழக்க அசுரர்கள் களமீதே

சிந்திக் குருதிக ளண்டச் சுவாகம்
சம்பக் கிரியொடு பொங்கிப் பெருகியெ

சிவப்ப அதில்கரி மதர்த்த புரவிகள்
சிரத்தொ டரதமு மிதப்ப நிணமொடு

செம்புட் கழுகுக ளுண்பத் தலைகள்த
தும்பக் கருடன கங்†கொட் டிடகொடி

மறைப்ப நரிகண மிருப்ப குறளிகள்
நடிக்க இருள்மலை கொளுத்தி யலைகடல்

செம்பொற் பவளமு டங்கிக் கமர்விட
வெந்திட் ‡டிகமலை விண்டுத் துகள்பட

சுமக்கு முரகனு முழக்கி விடபட
மடைத்த சகமட நடுக்கி யலைபட விடும்வேலா

* மனி - மன்னி, பொருந்தி † கொட்டிட - கோட்டிட - வளைக்க வட்டமிட ‡ இகமலை - இங்குள்ள மலைகள்.

தொந்தத் தொகுகுட என்பக் கழலொலி
பொங்கப் பரியுர செம்பொற் பதமணி
சுழற்றி நடமிடு நிருத்த ரயன்முடி
கரத்த ரரிகரி உரித்த கடவுள்மெய்
தொண்டர்க் கருள்பவர் வெந்தத் *துகளணி
சங்கைப் பணிமதி கொன்றைச் சடையினர்
தொடுத்த மதனுரு பொடித்த விழியினர்
மிகுத்த புரமதை எரித்த நகையினர்
தும்பைத் தொடையினர் கண்டக் கறையினர்
தொந்திக் கடவுளை தந்திட் டவரிட
சுகத்தி மழுவுழை கரத்தி மரகத
நிறத்தி முயலக பதத்தி அருளிய முருகோனே
துண்டச் சசிநுதல் சம்பைக் கொடியிடை
ரம்பைக் கரசிய †னும்பற் றருமகள்
சுகிப்ப மணவறை களிக்க அணையறு
முகத்தொ டுறமயல் செழித்த திருபுய
செம்பொற் கரகம லம்பத் திருதல
மம்பொற் ‡சசியெழு சந்தப் பலபடை
செறித்த கதிர்முடி கடப்ப மலர்தொடை
சிறப்பொ டொருகுடில் மருத்து வனமகள்
தொந்தப் புணர்செயல் கண்டுற் றடியெனி
டைஞ்சற் பொடிபட முன்புற் றருளயில்
தொடுத்து மிளநகை பரப்பி மயில்மிசை
நடித்து §அழல்கிரி பதிக்குள் மருவிய பெருமாளே. (௩௭௧)

தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன தனதான.

501. வீறுபுழு கானபனி நீர்கள்மலர் தோயல்விடு
மேருகிரி யானகொடு தனபார

*துகள்-திருநீறு. †உம்பல் தருமகள்-தெய்வயானை யம்மை ‡சசியெழு-சந்திரனைப்போல் ஒளியெழு §அழல்கிரிபதி-திருவண்ணாமலை.

மீநுபுர ளாபரண சோதிவித மானநகை
மேகமனு காடுகடல் இருள்மேவி
நாறுமலர் வாசமயிர் நூலிடைய தேதுவள
நாணமழி வார்களுடன் உறவாடி
நாடியது வேகநியெ னுசுழலு மோடனைநின்
ஞானசிவ மானபதம் அருள்வாயே
கூறுமடி யார்கள்வினை நீறுபட வேவரிய
கோலமயி லானபதம் அருள்வோனே
கூடவரு ஞேடுநட மாடரிய காளியருள்
கூருசிவ காமியுமை அருள்பாலா
ஆறுமுக மானநதி பாலகுற மாதுதன
மாரவிளை யாடிமணம் உறுவோனே
ஆதிரகு ராமசெய மாலின்மரு காபெரிய
ஆதியரு ணுபுரியில் பெருமாளே. (உஎஉ)

தனதான தத்ததன தனதான தத்ததன
தனதான தத்ததன தனதான.

502. வலிவாத பித்தமொடு களமாலை விப்புருதி
வறள்சூலை குட்டமொடு குளிர்தாகம்
மலிநீரி ழிச்சல்பெரு வயிறீளை கக்குகனை
வருநீர டைப்பினுடன் வெகுகோடி
சிலைநோய டைத்தவுடல் புவிமீதெ டுத்துழல்கை
தெளியாவெ னக்குமினி முடியாதே
சிவமார்தி ருப்புகழை எனுநாவி னிற்புகழ
சிவஞான சித்திதனை அருள்வாயே
தொலையாத பத்தியுள திருமால்க ளிக்கவொரு
சுடர்வீசு சக்ரமதை அருள்ஞான
துவர்வேணி அப்பன்மிகு சிவகாமி கர்த்தன்மிகு
சுகவாரி சித்தனருள் முருகோனே

அலைசூரன் வெற்புமரி முகனுனை வத்திரனொ
　　டசுராரி றக்கவிடு　　　　மழல்வேலா
அமுதாச னத்திகுற மடவாள் ,,கரிப்பெண்ணொடும்
　　அருணாச லத்திலுறை　　　　பெருமாளே. (உஎங)

தானதன தானத்த தானதன தானத்த
தானதன தானத்த　　　　தனதான.

503. ஆனுமயில் போலுற்ற தோகையர்க ளேமெத்த
　　ஆரவட மேலிட்ட　　　　முலைமீதே
ஆனதுகி லேயிட்டு வீதிதனி லேநிற்க
　　ஆமவரை யேசற்று　　　　முறையாதே
வேலுமழ கார்கொற்ற நீலமயில் மேலுற்ற
　　வீறுமுன தார்பத்ம　　　　முகமாறு
மேவியிரு பாகத்தும் வாழுமனை மார்தக்க
　　மேதகவு நாளித்தம்　　　　உரையேனோ
நாலுமுக வேதற்கு மாலிலையில் மாலுக்கு
　　நாடவரி யார்பெற்ற　　　　ஒருபாலா
நாணமுடை யாள்வெற்றி வேடர்குல மீதொக்க
　　நாடுகுயில் பார்மிக்க　　　　எழில்மாது
வேலைவிழி வேடச்சி யோடமரா மாதொக்க
　　வீறருணை மால்வெற்பில்　　　　உறைவோனே
வீரமுட னேயுற்ற சூரனணி மார்பத்து
　　வேலைமிக வேவிட்ட　　　　பெருமாளே. (உஎச)

கரிப்பெண் - தெய்வயானையம்மை.

திருக்குற்றாலம்.

இது தென்காசி ஸ்டேஷனிலிருந்து மேற்கே 3½ மைல் தூலைவிலிருக்கிறது.

தானத்தத் தானத னதன
தானத்தத் தானத னதன
தானத்தத் தானத னதன தனதான.

504. ஏடுக்கொத் தாரலர் வார்குழ
லாடப்பட் டாடைநெ கிழ்விய
ஏதப்பொற் றோள்மிசை மூடிய காமாதர்

ஏதத்தைப் பேசுப ணிகள்
வீசத்துக் காசைகொ டாடிகள்
ஏறிட்டிட் டேணியை வீழ்விடு முழுமாயர்

மாடொக்கக் கூடிய காமுகர்
மூழ்குற்றுக் காயமொ டேவரு
வாயுப்புற் றூலைவி யாதிகள் இவைமேலாய்

மாசுற்றுப் பாசம்வி டாசம
னூர்புக்குப் பாழ்நர கேவிழு
மாயத்தைச் சீவியு னதா வருள்வாயே

தாடுட்டுட் டுடுடு டிமி
டுடுட்டுட் டுடுடு டாடமி
தானத்தத் தானத னவென வெகுபேரி

தாளொத்தப் பூதப சாசுகள்
*வாய்விட்டுச் சூர்கள் சேனைகள்
சாகப்பொற் றோகையி லேறிய சதுரோனே

கூடற்கச் சாலைசி ராமலை
காவைப்பொற் காழிவெ ணூர்திகழ்
கோடைக்கச் சூர்கரு வூரிலும் உயர்வான

கோதிற் † பத் தாரொடு மாதவ
சீலச்சித் தாதியர் சூழ்தரு
கோலக்குற் றாலமு வாவிய பெருமாளே. (உஎ௫)

* வாய்விட்டு - வாய்விட † பத்தர் - பத்தர்கள்.



திருக்குற்றாலம்.

505. வேதத்திற் கேள்வியி லாதது
போதகத்திற் காணவொ ணாதது
வீசத்திற் றூரமி லாதது கதியாளர்

விரித்துத் தேடரி தானது
ஆதித்தற் காய வொணாதது
வேகத்துத் தீயில்வெ காதது சுடர்கானம்

வாதத்துக் கேயவி யாதது
காதத்திற் பூவிய லானது
வாசத்திற் பேரொளி யானது மதமூறு

மாயத்திற் காயமு தாசல
தீதர்க்குத் தூரம தாகிய
வாழ்வைச்சற் காரம தாவினி அருள்வாயே

காதத்திற் காயம தாகும
தீதித்தித் தீதிது தீதென
காதற்பட் டோதியு மேவிடு கதிகாணேர்

காணப்பட் டேகொடு நோய்கொடு
வாதைப்பட் டேமதி தீதிக
லாமற்கெட் டேகடு மாறிட அடுவோனே

கோதைப்பித் தாயொரு வேடுவ
ருபைப்பெற் றேவன வேடுவர்
கூடத்துக் கேகுடி யாய்வரு முருகோனே

கோதிற்பத் தாரொடு மாதவ
சீலச்சித் தாதியர் சூழ்தரு
கோலக்குற் றாலமு லாவிய பெருமாளே. (உஎகூ)

தத்தான தனத்த தத்தன
தத்தான தனத்த தத்தன
தத்தான தனத்த தத்தன தனதான.

506. முத்தோலை தனைக்கி ழித்தயி
லைப்போரி கலிச்சி வத்தமு
கத்தாம ரையிற்செ ருக்கிடும் விழிமாணேர்

முற்றாதி லகிப்ப ணைத்தணி
கச்சார மறுத்த நித்தில
முத்தார மழுத்து கிர்க்குறி அதனாலே

வித்தார கவித்தி றத்தினர்
பட்டோலை நிகர்த்தி ணைத்தெழு
வெற்பான தனத்தில் நித்தலும் உழல்வேனோ

மெய்த்தேவர் துதித்தி டத்தரு
பொற்பார்க மலப்ப தத்தினை
மெய்ப்பாக வழுத்தி டக்ருபை புரிவாயே.

பத்தான முடித்த லைக்குவ
டிற்றுட அரக்க ருக்கிறை
பட்டாவி விடச்செ யித்தவன் மருகோனே

* பற்பாசன் மிகைச்சி ரத்தைய
றுத்தாத வனைச்சி னத்துறு
பற்போக உடைத்த தற்பரன் மகிழ்வோனே

கொத்தார்க தலிப்ப ழுக்குலை
வித்தார வருக்கை யிற்சுளை
கொத்தோடு திரக்கு தித்தெழு கயலாரும்

கொட்டாசு ழியிற்கொ ழித்தெறி
சிற்றாறு தனிற்க ளித்திடு
குற்றால ரிடத்தி லுற்றருள் பெருமாளே. (உ௭௭)

திருமலை.

இது திருக்குற்றாலத்துக்கு வடமேற்கே 12 மைல் தூலவிலிருக்கிறது.

தனதனத் தனனத் தனதானா தனதனத் தனனத் தனதானா.

507. வனசமொத் தபதக் குருநாதா மலைமடப் பிடியுத் தமிபாலா
அனகதத் துவமெய்ப் பொருளானே அடியனுக் குனபொற் கழல்தாராய்
எனதுயிர்க் குயிரொத் தவநீதா இபமுகப் பரமற் கிளையோனே
தினைவனத் தெரிவைக் குரியோனே திருமலைக் குமரப் பெருமாளே. ()

* பற்பாசன் - பத்மாசனன், பிரமன்.

தனதன தானதந்த தனதன தானதந்த
தனதன தானதந்த தனதான.

508. படுகொலை யேமிகுந்து ம்ருகமத பாளிதங்கொள்
பணைமுலை மாதர்தங்கள் மயலாலே
பழியொடு பாவமென்ப தறிவுகொ ளாதுயங்கு
பதகனை யாளவின்று வரவேணும்
*கடுவா வேயுளஞ்கி அடிதொழு தோருழும்பர்
கவலைகொ ளாதிருண்ட களநாதர்
கயிலையில் மேவுகின்ற பரமத யாளநப்பர்
கருதவொர் வாசகஞ்சொல் குருநாதா
கொடுமுடி மேருவஞ்சி அலறிட வேயொர் செண்டு
கொடுபுடை யாவெகுண்ட கர §மாறு
†குடநிரை வாடல்கண்டு குலகிரி யேவிரிந்த
குடையென மேவுகொண்டல் மருகோனே
திடுதிடெ னுமுழங்கும் அருவிக ளேமிகுந்த
திருமலை வாழ்வுகந்த முருகோனே
திறல்மிகு சூரனஞ்ச வடியயி லாலெறிந்து
செயவணி மார்பணிந்த பெருமானே. (உஎக)

தனதன தான தான தனதன தான தான
தனதன தான தான தனதான.

509. வரிவிழி பூச லாட இருகுழை ஊச லாட
வளர்முலை தாமு மாட வளையாட
மணிவட மாலை ஆட முருகவி ழோதி ஆட
மதுரமு தூறி வீழ அநுராகம்
இருவரு மேக போக மொருவர்த மாக மாக
இதமொடு கூடி மாயை படுபோதும்
இருகர மாறு மாறும் அறுமுக நீப மார்பும்
இருகழல் தானு நானு மறவேனே

*கடு-நஞ்சு. §மாறு-உக்கிரகுமார பாண்டியனே. †குடநிரை-பசுக்கூட்டம்.

திருநட மாடு காளி பயிரவி மோடி சூலி
திரிபுர நீற தாக அனல்மோதுஞ்
சிவைகயி லாச வாசி மலைமகள் நாரி பாரி
திரண்முலை யாயி தாயி அருள்பாலா
குருபர நாத ஞுகி அரனொரு காதி லோது
குணநிதி ஆசை நேச முருகோனே
குறமகள் பாச நேச திருமலை வாச ஈச
குலவிய ஞான மோன பெருமாளே. (உ௯0)

பழமுதிர்சோலை.

இது மதுரை ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே 12மைல் தூலைவிலிருக்கிறது. இது குமரக்கடவுளது ஆறுவது படைவீடு.

தனதன தானதான தனதன தானதான
தனதன தானதான தனதான.

510 இலகிதழ் கோதி *நேதி மதகலை ஆர வார
இளநகை ஆட வாடி மிகவாதுற்
றெதிர்பொரு கோர பார ம்ருகமத கோல கால
இணைமுலை மார்பி லேற மதராஜன்
கலவியி லோடி நீடு வெருவிர தாக போக
கரணப்ர தாப பாப மடமாதர்
கலவியின் மூழ்கி யாழு மிழிதொழி லேனு மீது
கருதிய ஞான போதம் அடைவேனோ
கொலைபுரி காளி சூலி வயிரவி நீலி மோடி
குலிசகு டாரி ஆயி மகமாயி
குமரிவ ராகி மோகி பகவதி ஆதி சோதி
குணவதி †ஆல வூணி அபிராமி
பலிகொள்க பாலி யோகி பரமகல் யாணி லோல
பதிவ்ரதை வேத ஞானி புதல்வோனே
படையொடு சூரன் மாள முடுகிய சூர தீர
பழமுதிர் சோலை மேவு பெருமாளே. (க)

*நேதி-நியாதி. †ஆலவூணி-விஷத்தையுண்டவள்.

தானதன தானதந்த தானதன தானதந்த
தானதன தானதந்த தனதான.

511. சீலமுள தாயர் தந்தை மாதுமனை யான மைந்தர்
சேருபொரு ளாசை நெஞ்சு தடுமாறித்
தீமையுறு மாயை கொண்டு வாழ்வுசத மாமி தென்று
தேடினது போகவென்று தெருவூடே
வாலவய தான கொங்கை மேருநுத லானதிங்கள்
மாதர்மய லோடு சிந்தை மெலியாமல்
வாழுமயில் மீது வந்து தாளிணைகள் தாழு மென்றன்
மாயவினை தீர அன்பு புரிவாயே
சேலவள நாட னங்கள் ஆரவயல் சூழு மிஞ்சி
சேணிலவு தாவு செம்பொன் மணிமேடை
சேருமம ரேசர் தங்கள் ஊரிதென வாழ்வு கந்த
தீரமிகு சூரை வென்ற திறல்வீரா
ஆலவிட மேவு கண்டர் கோலமுட னீடு மன்று
ளாடல்புரி யீசர் தந்தை களிகூர
ஆனமொழி யேப கர்ந்து சோலைமலை மேவு கந்த
ஆதிமுத லாக வந்த பெருமாளே. (௨)

---

512. வீரமத னூல்வி ளம்பு போகமட மாதர் தங்கள்
வேல்விழியி னூல்ம யங்கி நிலமீதே
வீசுகையி னூலி தங்கள் பேசுமவர் வாயி தஞ்சொல்
வேலைசெய்து மால்மி குந்து விரகாகிப்
† பாரவசு மான வங்க ணீடுபொருள் போன பின்பு
பாதகனு மாகி நின்று பதையாமல்
‡ பாகம்வர மேவ அன்பு நீபமலர் சூடு கின்ற
பாதமலர் நாடியென்று பணிவேனோ

இஞ்சி - மதில், † பாரவசம் - பரவசம், ‡ பாகம் - பரிகாரம்,

பூரணம தான திங்கள் சூடுமா ணரி டங்கொள்
பூவையரு ளால்வ ளர்ந்த முருகோனே
பூவுலகெ லாம டங்க ஓரடியி னால ளந்த
†பூவைவடி வானு கந்த மருகோனே
சூரர்கிளை யேத டிந்து பாரமுடி யேய ரிந்து
தூள்கள்பட நீறு கண்ட வடிவேலா
சோலைதனி லேப றந்து லாவுமயி லேறி வந்து
சோலைமலை மேல மர்ந்த பெருமாளே. (௩)

தானதன தந்த தந்த தானதன தந்த தந்த
தானதன தந்த தந்த தனதான.

513. வாரணமு கங்கி ழிந்து வீழவும ரும்ப லர்ந்து
மால்வரைய சைந்த னங்கன் முடிசாய
வாளகிரி அண்ட ரண்ட கோளமுற நின்றெ ழுந்து
மாதவம றந்து லைந்து நிலைபேறப்
பூரணகு டங்க டிந்து சீதகள பம்பு னைந்து
பூசலைவி ரும்பு கொங்கை மடவார்தம்
போகசய னந்த விர்ந்து ஞானகப தம்ப ணிந்து
பூசனைசெய் தொண்ட னென்ப தொருநாளே
ஆரணமு ழங்கு கின்ற ஆயிரம டந்த வங்கள்
ஆகுதியி டங்கள் பொங்கு நிறைவீதி
ஆயிரமு கங்கள் கொண்ட நூபுரமி ரங்கு கங்கை
யாரமர வந்த லம்பு துறைசேரத்
தோரணம லங்கு துங்க கோபுரநெ ருங்கு கின்ற
சூழ்மணிபொன் மண்ட பங்கள் ரவிபோலச்
சோதியின்மி குந்த செம்பொன் மாளிகைவி ளங்கு கின்ற
சோலைமலை வந்து கந்த பெருமாளே. (௪)

---

*பூரணமதான திங்கள் - என்றும் தேயாது வளராது ஒருதன்மையா யிருக்கும் திங்கள். † பூவை வடிவான்-காயாம்பூ வண்ணனாகிய திருமால்.

தானதன தத்த தானதன தத்த
தானதன தத்த தனதான.

514\. வார்குழையை எட்டி வேலினைம ருட்டி
மாயமன முக்கும் உறவாகி

மாதவம ழித்து லீலைகள் மிகுத்து
மாவடுவை ஒத்த விழிமாதர்

சீருடன ழைத்து வாய்கனிவு வைத்து
தேனிதழ ளித்து மனபோக

சேர்வைதனை உற்று மோசம்வினை வித்து
சீர்மைகெட வைப்பர் உறவாமோ

வாரினை அறுத்து மேருவை மறித்து
மாகனக மொத்த குடமாகி

வாரவணி வைத்து மாலளித முற்று
மாலைகளு மொய்த்த தனமாது

தோரணி புயத்தி யோகினி சமர்த்தி
தோகையுமை பெற்ற புதல்வோனே

சூரினை மடித்து வேல்கர மெடுத்து
சோலைமலை உற்ற பெருமாளே. (ரு)

தான தானதன தத்ததன தத்ததன
தான தானதன தத்ததன தத்ததன
தான தானதன தத்ததன தத்ததன தனதான.

515\. ஆசை † நாலுசது ரக்கமல முத்திமொளி
வீசி ஓடியிரு பக்கமொடு றச்செல் $ வளி
ஆவல் கூர ‡ மண்மு தற்சலச பொற்சபையும் § இந்துவாகு

ஆர ‖ முணுபதி யிறகொளங் றுத்திவெளி
யாரு சோதி ¶ நூறு பத்திஙுட னெட்டுவித
மூகி யேழுமள விட்டருண விற்பதியின் விந்துநாத

---

* தோரணி-ஒழுங்கு. தோர்-தோளெனக்கொண்டுஉரைப்பாருமுண்டு. † நாலு சதுரக் கமலம்-மூலாதாரக் கமலம். $ வளி-சுவாசம். ‡ மண்முதற் சலசம் - சுவாதிஷ்டமான முதல் ஆக்கினை ஈறுக உள்ள ஐவகைக் கமலம். § இந்துவாகு-சந்திரப் பிரபை ‖ மூணுபதி-அக்கினி முதலிய மூன்றுமண்டலம் ¶ நூறு-நூறு நூறுபத்தினுடன் எட்டுஇதழ்-ஆயிரதழுள்ள குருகமலம்.

ஓசை சாலுமொரு சத்தமதி கப்படிக
மோடு கூடியொரு மித் * தமுத சித்தியொடு
மோது வேத ¶சர சத்தியடி உற்றதிரு நந்தியூடே
ஊமை யோனையொளிர் வித்துனது முத்திபெற
†† மூல வாசல்வெளி விட்டுனது ரத்திலொளிர்
யோக பேதவகை எட்டுமிதி லொட்டும்வகை இன்றுதாராய்
வாசி வாணிகனெ னக்குதிரை விற்றுமகிழ்
வாத வூரனடி மைக்கொள்கிரு பைக்கடவுள்
மாழைரூபன்முக‡‡மத்திகைவி தத்தருண செங்கையாளி
வாகு பாதியுறை சத்திகவு ரிக்குதலை
வாயின் மாதுதுகிர் பச்சைவடி விச்சிவைபென்
மாசு சேரெழுபி றப்பையுமறுத்தவுமை தந்தவாழ்வே
காசி ராமெசுரம் ரத்நகிரி சர்ப்பகிரி
ஆரூர் வேலூர் $ தெவுர் கச்சிமது ரைப்பறியல்
காவை மூதாரு ணக்கிரிதி ருத்தணியல் செந்தில்நாகை
காழி வேளூர்பழ நிக்கிரிகு றுக்கைதிரு
நாவ லூர்திருவெ ணெய்ப்பதியின் மிக்கதிகழ்
காதல் சோலைவளர் வெற்பிலுறை முத்தர்புகழ் தம்பிரானே ()

தனதானன தானன தத்தன
தனதானன தானன தத்தன
தனதானன தானன தத்தன தனதான.

516\. கருவாகியெ தாயுத ரத்தினி
லுருவாகவெ கால்கையு றுப்பொடு
கனிவாய்விழி நாசியு டற்செவி † நரைமாதர்
கையிலேவிழ வேகிய ணைத்துயி
ரெனவேமிக மீதுது யிற்றிய
கருதாய்முலை ஆரமு தத்தினி லினிதாகித்

* அமுதசித்தி - மதிமண்டலத்தினின்றும் பெருகிப்பாயும் அமிர்தப் பேறு. ¶ சரசத்தி அடிஉற்ற திருநந்தி - வாசிசத்திக்கு ஆதாரமாக உள்ள ஸ்ரீநந்தி ஒளி †† மூல வாசல் - பிரமரந்திரம் ‡‡ மத்திகை - குதிரைச்சம் மட்டி. $ தெவுர் - தேவூர். † நரைமாதர் - மருத்துவச்சிகள்.

தருதாரமு மாகிய சுற்றமு
நலவாழ்வுமி லாதபொ ருட்பதி
சதமாமிது தானென உற்றுனை நினையாத

சதுராயுன தாளிணை யைத்தொழ
அறியாதநிர் மூடனை நிற்புகழ்
தனையோதுமெய் ஞானமு றச்செய்வ தொருநாளே

செருவாயெதி ராமசு ரத்திரள்
தலைமூளைக ளோடுநி ணத்தசை
திமிர்தாதுள பூதக ணத்தொடு வருபேய்கள்

*திருகாவுண ர வாயுதி ரத்தினை
பலநாய்நரி யோடுகு டித்திட
சிலகூளிகள் தாமுந டித்திட அடுதீரா

அருமாமறை யோர்கள்து தித்திடு
புசவாரண மாதுத னைத்திக
ழுளிசேர்குழல் மேவுகு றத்தியை அணைவோனே

அழகானசெம் பொன்மேடை யுயர்த்திடு
முகில்தாவிய சோலைவி யப்புறு
அலையாமலை மேவிய பத்தர்கள் பெருமாளே. (எ)

தானதன தான தந்த தனதான.

517. காரணம தாக வந்து புவிமீதே
காலனணு காதி சைந்து கதிகாண
நாரணனும் வேதன் முன்பு தெரியாத
ஞானநட மேபு ரிந்து வருவாயே
ஆரமுத மான †தந்தி மணவாளா
ஆறுமுக மாறி ரண்டு விழியோனே
சூரர்கிளை மாள வென்ற கதிர்வேலா
சோலைமலை மேவி நின்ற பெருமாளே. (அ)

*திருகாவுணர்-கூத்தாடிப் பலிபதார்த்தமுண்ண. †தந்தி-தெய்வயானை.

தான தத்த தான தனா தனதன
தான தத்த தான தனா தனதன
தான தத்த தான தனா தனதன தனதான.

518. சீர்சி றக்கு மேனி பசேல் பசேலென
நூபு ரத்தி னோசை கலீர் கலீரென
சேர விட்ட தாள்கள் செவேல் செ(வே)லென வருமாதர்

சேகரத்தின் *வாலை சிலோர் சிலோர்களு (ம்)
நூறு லக்ஷ கோடி மயால் மயால்கொ (டு)
தேடி ஒக்க வாடி ஐயோ ஐயோவென மடமாதர்

மார்ப டைத்த கோடு பளீர் பளீரென
†ஏம லித்தெ னாவி பகீர் பகீரென
மாம சக்கி லாசை உளோ மூளோமென நினைவோடி

வாடை பற்று வேளை அடா அடாவென
நீம யக்க மேது சொலாய் சொலாயென
வாரம் வைத்த பாத மிதோ இதோவென அருள்வாயே

பாரதத்தை மேரு வெளீ வெளீதிகழ்
கோடொ டித்த நாளில் வரை வரைபவர்
§பாணி றக்க ணேசர் குவா குவாகனர் இளையோனே

பாடல் முக்ய மாது தமீழ் தமீழிறை
மாமு நிக்கு காதி லுணர் உணர்விடு
பாச மற்ற வேத குரூ குரூபர குமரேசா

போர்மி குத்த சூரன் விடோம் விடோமென
நேரொ திர்க்க வேலை படா படாரென
போய றுத்த போது குபீர் குபீரென வெகுசேரி

பூமி $உக்க வீசு குகா குகா திகழ்
சோலை வெற்பின் மேவு தெய்வா தெய்வானை ‡தோள்
பூணி இச்சை ஆறு புயா புயாறுள பெருமாளே (௬)

---

*வாலை-இளமைப்பருவம் †ஏமலித்து-ஏமாந்து §பாணி (றம்)-பானு
நிறம், சூரியனைப்போல் சிவந்தநிறம் $உக்க-சிந்த ‡தோள்-தோள்.

தானத் தானன தத்தன தத்தன
தானத் தானன தத்தன தத்தன
தானத் தானன தத்தன தத்தன தனதான.

519. பாசத் தால்வலை கட்டிய பொட்டிகள்
நேசித் தாரவர் சித்தம ருட்டிகள்
பாரப் பூதர மொத்தத னத்திகள் மிகவேதான்

பாவத் தால்மெயெ டுத்திடு பட்டிகள்
சீவிக் கோதிமு டித்தள கத்திகள்
பார்வைக் கேமய லைத்தரு துட்டிகள் ஒழியாத்

மாசுற் றேறிய பித்தளை யிற்பணி
நீறிட் டேயொளி பற்றவி ளக்கிகள்
மார்பிற் காதினி லிட்டபி லுக்கிகள் அதிமோக

வாய்வித் தாரமு ரைக்குமப த்திகள்
நேசித் தாரையு மெத்திய டிப்பவர்
மாயைக் கேமனம் வைத்தத னுட்டினம் அலைவேனோ

தேசிக் கானக முற்றதி னைப்புன
மேவிக் காவல்*க வட்கல்சு ழற்றுவள்
சீதப் பாதகு றப்பெண்ம கிழ்ச்சிகொள் மணவாளா

தேடிப் பாடிய சொற்புல வர்க்கித
மாகத் தூதுசெ லத்தரில் கற்பக
தேவர்க் காதிதி ருப்புக லிப்பதி வருவோனே

ஆசித் தார்மன திற்புகு முத்தம
கூடற் கேவைகை யிற்கரை கட்டிட
ஆளாய்ப் பாயுதிர் பிட்டமு துக்கடி படுவோனே

டாரத் தோடகி லுற்றத ருக்குல
மேகத் தோடொரு மித்துநெ ருக்கிய
ஆதிச் சோலைம லைப்பதி யிற்றிகழ் பெருமாளே. (௰)

*கவட்கல் — கவண்கல்.

தனன தனதன தனத்தத் தாத்த
தனன தனதன தனத்தத் தாத்த
தனன தனதன தனத்தத் தாத்த தனதான.

520. அழகு தவழ் குழல் விரித்துக் காட்டி
விழிகள் கடையிணை புரட்டிக் காட்டி
அணிபொ னணிகுழை புரித்துக் காட்டி அநுராக

அவச இதமொழி படித்துக் காட்டி
அதர மளிதுவர் வெளுப்பைக் காட்டி
அமர்செய் நகநுதி அழுத்திக் காட்டி அணியாரம்

ஒழுகு மிருதன மசைத்துக் காட்டி
எழுத * அரியிடை வளைத்துக் காட்டி
உலவு முடைதனை நெகிழ்த்துக் காட்டி உறவாடி

உருகு மவயவ மொளித்துக் காட்டி
உபய பரிபுர பதத்தைக் காட்டி
உயிரை விலைகொளு மவர்க்குத் தேட்டம் ஒழிவேனோ

முழுகு மருமறை முகத்துப் † பாட்டி
கொழுநர் குடுமியை அறுத்துப் போட்ட
முதல்வ குகைபடு திருப்பொற் கோட்டு முனிநாடா

முடுகு முதலையை வரித்துக் கோட்டி
அடியர் தொழுமக வழைத்துக் கூட்டி
முறைசெய் தமிழினை விரித்துக் கேட்ட முதுநீதர்

பழைய கடதட முகத்துக் கோட்டு
வழுவை உரியணி மறைச்சொற் கூட்டு
பரமர் பகிரதி சடைக்குட் சூட்டு பரமேசர்

பணிய அருள்சிவ மயத்தைக் காட்டு
குமர ‡ குலமலை உயர்த்திக் காட்டு
பரிவொ டணிமயில் நடத்திக் காட்டு பெருமாளே. (கக)

* அரியிடை-அரிய இடை. † பாட்டி - சரசுவதி. ‡ குலமலை-சோலைமலை.

தனதன தத்தத் தத்தன தத்தத்
தனதன தத்தத் தத்தன தத்தத்
தனதன தத்தத் தத்தன தத்தத் தனதான.

521. தலைமயிர் கொக்குக் கொக்கந ரைத்துக்
கலகலெ னப்பற் கட்டது விட்டுத்
தளர்நடை பட்டுத் தத்தடி இட்டுத் தடுமாறித்
தடிகொடு தத்திக் கக்கல்பெ ருத்திட்
டசனமும் விக்கிச் * சத்தியெ டுத்துச்
சளியுமி குத்துப் பித்தமு முற்றிப் பலகாலும்
திலதயி லத்திட் டொக்கவெ ரிக்கத்
திரிபலை சுக்குத் திப்பிலி இட்டுத்
தெளியவ டித்துற் றுய்த்துடல் செத்துட் டுயிர்போமுன்
திகழ்தமிழ் கற்றுச் சொற்கள்ப யிற்றித்
திருவடி யைப்பற் றித்தொழு துற்றுச்
செனனம றுக்கைக் குப்பா முத்திக் கருள்தாராய்
‡ கலணைவி சித்துப் § பக்கரை இட்டுப்
புடவிசெ லுத்திக் || கைக்கொடு வெற்பைக்
கடுகந டத்திக் ¶ திட்டென எட்டிப் பொருசூரன்
கனபடை கெட்டுத் தட்டற விட்டுத்
திரைகட லுக்குட் புக்கிட எற்றிக்
களிமயி லைச்சித் ரத்தில்ந டத்திப் பொருகோவே
$ குலிசன்ம கட்குத் தப்பியு மற்றக்
குறவர்ம கட்குச் சித்தமும் வைத்துக்
குளிர்தினை மெத்தத் தத்துபு னத்திற் றிரிவோனே
கொடியபொ ருப்பைக் குத்திமு றித்துச்
சமரம்வி ளைத்துத் தற்பர முற்றுக்
குலகிரி யிற்புக் குற்றுறை உக்ரப் பெருமாளே. (கஉ)

---

* சத்தி - வாந்தி. ‡ கலணை - கல்லணை, குதிரைச்சேணம். § பக்கரை - அங்கவடி. || கைக்கொடுவெற்பை-கையையுடையகொடிய மலையை யொத்தயானையை. ¶ திட்டென-திடீரென ¶ குலிசன்மகள்-தெய்வயானை.

தனதன தனந்த தான தனதன தனந்த தான
தனதன தனந்த தான தனதான.

522. மலரணை ததும்ப மேக குழல்முடி சரிந்து வீழ
மணபரி மளங்கள் வேர்வை அதனோடே
வழிபட இடங்க ளூட பிறைநுதல் புரண்டு மாழ்க
வனகலை நெகிழ்ந்து போக இளநீரின்
முலையிணை ததும்ப நூலின் வகிரிடை சுழன்று வாட
முகமுக மொடொன்று பாயல் அதனாடே
முதுமயல் கலந்து மூழ்கி மகிழ்கினும் அலங்க லாடு
முடிவடி வொடங்கை வேலு மறவேனே
சிலைநுத லிளம்பெண் மோகி சடையள கியெந்தை பாதி
திகழ்மர கதம்பொன் மேனி உமைபாலா
சிறுநகை புரிந்து சூர் கிரிகட லெரிந்து போக
திகிழுயி லெறிந்த ஞான முருகோனே
கொலைமிகை பயின்ற வேடர் மகள்வளி மணந்த தோளா
குணவலர் கடம்ப மாலை அணிமார்பா
கொடியின லடைந்த சோதி மழகதிர் தவழ்ந்த ஞான
குலகிரி மகிழ்ந்து மேவு பெருமாளே. (கரு)

தானதன தந்த தானதன தந்த
தானதன தந்த தனதான.

523. வாதினைய டர்ந்த வேல்விழியர் தங்கள்
மாயமதொ ழிந்து தெளியேனே
மாமலர்கள் கொண்டு மாலைகள்பு னைந்து
மாபதம ணிந்து பணியேனே
ஆதியொடு மந்த மாகியந லங்கள்
ஆறுமுக மென்று தெரியேனே
ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட
தாடுமயி லென்ப தறியேனே

நாதமொடு விந்து வானவுடல் கொண்டு
நானிலம லைந்து — திரிவேனோ
நாகமணி கின்ற நாதநிலை கண்டு
நாடியதில் நின்று — தொழுகேனோ
சோதியுணர் கின்ற வாழ்வுசிவ மென்ற
*சோகமது தந்து — மெனையாள்வாய்
சூரர்குலம் வென்று வாகையொடு சென்று
சோலைமலை நின்ற — பெருமாளே. (௧௪)

தானதனத் தானதனத் தானதனத் தானதனத்
தானதனத் தானதனத் — தனதான.

524\. சோலையடர்த் தாலமிருக் தேயுழையைச் சீறிவிதிர்த்
தூறுசிவப் பேறுவிழிக் — கடையாலே
தே†னிரதத் தேமுழுகிப் பாகுசிகர்த் தாரமுதத்
தேறலெனக் கூறுமொழிச் — செயலாலே
ஆலிலையைப் போலும்வயிற் றாலளகத் தாலதரத்
தாலிரதத் தாலும்வளைப் — படுவோர்மேல்
ஆசையினைத் தூரவிடுத் தேபுகழ்வுற் றேபரியகற்
றாளிணையைச் சேரவெனக் — கருள்வாயே
காலனைமெய்ப் பாதமெடுத் தேயுதைபிட் டேமதனைக்
காயவெரித் தேவிதியிற் — றலையூடே
காசினியிற் காணவிரப் போன்மதியைச் சூடியெருத்
தேறிவிரித் தாருதிரைக் — கடல்மீதில்
ஆலமிடற் றானயிபத் தோலையுடுத் திமமதுற்
‡றாடியிடத் தேயுமைபெற் — றருள்வாழ்வே
ஆழியினைச் சூரனைவெற் பேழுயில்தொட் டாவிதுணித்
தாதிதிருச் சோலைமலைப் — பெருமாளே. (௧௫)

*சோகம்-(ஸோ + அகம்) அது நான். †இரதம்-இரசம். ‡ஆடி-சிவபிரான்.

தனனதந்த தத்தான தனனதந்த தத்தான
தனனதந்த தத்தான தனதான.

525. களவுகொண்டு கைக்காசி னளவறிந்து கர்ப்பூர
களபதுங்க வித்தார முலைமீதே
கலவியின்பம் விற்பார்க ளவயவங்க ளைப்பாடு
கவிதெரிந்து கற்பார்கள் சிலர்தாமே
உளநெகிழ்ந் † து சத்தான உரைமறந்து சத்தான
உனையுணர்ந்து கத்தூரி மணநாறும்
உபயபங்க யத்தாளி லபயமென்று னைப்பாடி
உருகிநெஞ்சு கற்றேதில் இழிவாமோ
அளவில்வன்க விச்சேனை பரவவந்த சுக்ரீவ
அரசுடன்க டற்றாளி எழவேபோய்
அடலிலங்கை சுட்டாடி நிசிசரன்த சக்ரீவ
மறவொரம்பு தொட்டார்த மருகோனே
வளருமந்த ரச்சோலை மலையுகந்த முற்பாலை
வனவர்கொம்பி னைத்தேடி ஒருவேட
வடிவுகொண்டு பித்தாகி உருகிவெந்து முற்கானில்
மறவர்குன்றி னிற்போன பெருமாளே. (கரு)

ஆறு திருப்பதி.

இது குமாரக்கடவுள் ஆறு படைவீடுகளுக்கும் பொது.

தனதன தனதானன தனதன தனதானன
தனதன தனதானன தனதான.

526. அலைகடல் நிகராகிய விழிகொடு வலைவீசிகள்
† அபகட மகபாவிகள் விரகாலே
அதிவித மதமா ‡ யத நிதமொழி பலகூறிகள்
அசடரொ டுறவாடிகள் அநியாயக்
கலைபகர் விலைமாதர்கள் இளைஞர்கள் குடிகேடிகள்
கருதிடு கொடியாருடன் இனிதாகக்

அசத்து இல்லாமை † அபகடம்-வஞ்சகம். ‡ அத நித-அத அநீத.



மதுரை பொற்றாமரைக்குளம்.

கனதன முலைமேல்விழு கபடனைநிருமூடனை
  கழலிணை பெறவேயினி அருள்வாயே
அலைபுனல் தலைசூடிய பசுபதி மகனாகிய
  அறுமுக வடிவேவருள் குருநாதா
அசுரர்கள் குடியேகெட அமரர்கள் பதியேபெற
  அதிரிடும் வடிவேல்விடும் அதிசூரா
தலையய னறியாவொரு சிவகுரு பரனேயென
  தரணியி லடியார்கணை நினைவாகா
*சகலமு முதலாகிய அறுபதி நிலைமேவிய
  தடமயில் தனிலேறிய பெருமாளே. (க)

தானதனத் தனதனன தனதான.

527. ஈனமிகுத் துளபிறவி அணுகாதே
  யானுமுனக் கடிமையென வகையாக
ஞானவருட் டனையருளி வினைதீர
  நாணமகற் றியகருணை புரிவாயே
†தானதவத் தினின்மிகுதி பெறுவோனே
  ‡சாரதியுத் தமிதுணைவ முருகோனே
ஆனதிருப் பதிகமருள் இளையோனே
  ஆறுதிருப் பதியில்வளர் பெருமாளே. (உ)

மதுரை.

இது பாண்டியநாட்டின் தலைநகரம் இங்கு ரயில்வே ஜங்ஷனிருக்கிறது.

தனதன தனனத் தந்த தானன
தனதன தனனத் தந்த தானன
தனதன தனனத் தந்த தானன தனதான.

528. அலகில வுணரைக் கொன்ற தோளென
  மலைதுளை உருவச் சென்ற வேலென
  அழகிய கனகத் தண்டை சூழ்வன புண்டரீக

---

* சகலமு முதலாகிய அறுபதி-சகல தலங்களுக்கும் முதன்மையாகவுள்ள ஆறுபடைவீடு † தானதவத்தினில்-தன்னைக்குறித்து அன்பர்கள் செய்யும் தானத்திலும் தவத்திலும். ‡ சாரதி உத்தமி துணைவன்-சரசுவதி துணைவன்.

அடியென முடியிற் கொண்ட கூதள
மெனவன சரியைக் கொண்ட மார்பென
அறுமுக மெனசெக் கென்ப லாமுரு கன்புருதோ

கலகல கலெனக் கண்டபேரொடு
சிலுகிடு சமயப் பங்க வாதிகள்
கதறிய வெகுசொற் பங்க மாகிய பொங்களாவும்

கலைகளு மொழியப் பஞ்ச பூதமு
மொழியுற மொழியிற் றுஞ்சு குதன
கரணமு மொழியத் தந்த ஞானமி ருந்தவாறென்

இலகுக டலைகற் கண்டு தேனொடு
மிரதமு றுதினைப் * பிண்டி பாகுடன்
இனிமையி னுகருற் றெம்பி ராளொரு கொம்பினாலே

எழுதென மொழியப் பண்டு பாரதம்
வடகன சிகரச் செம்பொன் மேருவில்
எழுதிய பவளக் குன்று தாதையை அன்றுசூழ

வலம்வரு மளவிற் சண்ட மாருத
விசையினும் விசையுற் றெண்டி சாமுக
மகிதல மடையக் கண்டு மாசுணம் உண்டுலாவு

மரகத கலபச் செம்புள் வாகன
மிசைவரு முருகச் சிம்பு ளேயென
மதுரையில் வழிபட் டும்ப ரார்தொழு தம்பிரானே. (க)

தனனதனந்தன தனனதனந்தன தனனதனந்தன தனதான.

529. பாவுகெடுங்கதி ருலகில்விரும்பிய † பவனிவரும்படி அதனாலே
பகரவளங்களு நிகரவிளங்கிய ‡ இருளைவிடிந்தது நிலவாலே

வரையினிலெங்கணு முலவிநிறைந்தது வரிசைதரும்படி அதுபாடி
வளமொடுசெந்தமி ழுரைசெயவன்பரு மகிழவரங்களும் அருள்வாயே

---

* பிண்டி - மா. † பவனிவரும்படியதனாலே - பவனிவரும் தரத்தையும் ‡ இருளைவிடிந்தது நிலவாலே - இருளைப்போக்கி உதயமாகும் சந்திரனையும் சிறப்பித்தது.

அரகரசுந்தர அறுமுகவென்றுனி அடியர்பணிந்திட மகிழ்வோனே
அசலநெடுங்கொடி உமையமைதன்சுத குறமகளிங்கித மணவாளா
கருதருதிண்புய சரவணகுங்கும களபமணிந்திடு மணிமார்பா
கனகமிகும்பதிமதுரைவளம்பதி அதனில்வளர்ந்தருள்பெருமாளே. (உ)

தனத்த தாத்தன தனதன தனதன
தனத்த தாத்தன தனதன தனதன
தனத்த தாத்தன தனதன தனதன தனதனத்தன தானை.

530. பழிப்பர் வாழ்த்துவர் சிலசில பெயர்தமை
ஒருத்தர் வாய்ச்சுரு ளொருவர்கை உதவுவர்
பணத்தை நோக்குவர் பிணமது தழுவுவர் அளவளப்பதனாலே
படுக்கை விட்டினு ளவுடத முதவுவர்
அணைப்பர் கார்த்திகை வருதென உறுபொருள்
பறிப்பர் மாத்தையி லொருவிசை வருகென அவரவர்க்குறவாயே
அழைப்ப ராஸ்திகள் கருதுவ ரொருவரை
முடுக்கி ஒட்டுவ ரழிகுடி அரிவையர்
அலட்டி னற்பிணை எருதென மயலெனு நரகினிற்சுழல்வேனை
அவத்த மாய்ச்சில படுகுழி தனில்விழும்
விபத்தை நீக்கியு னடியவ ருடனெனை
அமர்த்தி யாட்கொள மனதினி லருள்செய்துகதிதனைத்தருவாயே
தழைத்த சாத்திர மறைபொரு ளறிவள
குருக்கள் போற்சிவ நெறிதனை அடைவொடு
தகப்ப னார்க்கொரு செவிதனி லுரைசெய்த முருகவித்தகவேளே
சமர்த்தி னற்புகழ் சனகியை நலிவுசெய்
திருட்டு ராக்கத னுடலது துணிசெய்து
சயித்த யோத்தியில் வருபவ னரிதிரு மருமகப்பரிவோனே
செழித்த வேற்றனை அசுரர்க ளுடலது
பிளக்க ஒச்சிய பிறகம ரர்கள்பதி
செலுத்தி ஈட்டிய சுரபதி மகள்தனை மணமதுற்றிடுவோனே
திறத்தி னற்பல சமணரை எதிரெதிர்
கழுக்க ளேற்றிய புதுமையை இனிதொடு
திருத்தமாய்ப்புகழ் மதுரையி லுறைதரும் அறுமுகப்பெருமானே.()

தான தானதன தத்ததன தத்ததன
தான தானதன தத்ததன தத்ததன
தான தானதன தத்ததன தத்ததன தந்ததான.

531. சீத வாசனைம லர்க்குழல்பி னுக்கிமுக
மாய வேல்விழிபு ரட்டிநகை முத்தமெழ
தேமல் மார்பினிள பொற்கிரிப ளப்பளென தொங்கலாரம்

சேரு மோவியமெ னச்சடமி னுக்கிவெகு
வாசை நேசமும்வி ளைத்துவிடை உற்றவரி
சேலை காலில்விழ விட்டுநடை இட்டுமயி லின்கலாபச்

சாதி யாமெனவெ ருட்டிநட மிட்டுவலை
யான பேர்தமையி ரக்கவகை இட்டுகொடி
தாக நோய்பிணிகொ டுத்திடர்ப டுத்துவர்கள் பங்கினூடே

தாவி மூழ்கிமதி கெட்டவல முற்றவனை
பாவ மானபிற விக்கடலு ழப்பவனை
தாரு லாவுபத பத்தியிலி ருத்துவதும் எந்தநாளோ

வாத வூரனைம திக்கொருகு ருக்களென
ஞான பாதம்வெளி இட்டுநரி யிற்குழுவை
* வாசி யாமெனந டத்துவகை உற்றரசன் அன்புகாண

† மாடை ஆடைதர பற்றிமுன கைத்துவைகை
யாறின் மீதுநட மிட்டுமணெ டுத்துமகிழ்
மாது வாணிதரு பிட்டுநுகர் பித்தனருள் கந்தவேளே

வேத லோகர்பொனி லத்தர்தவ சித்ததி
பார சீலமுனி வர்க்கமுறை இட்டலற
வேலை ஏவியவு ணக்குலமி றக்கநகை கொண்டசீலா

வேத மீனுகம லக்கணர்மெய் பச்சைரகு
ராம ‡ ரீனுமயி லொக்கமது ரைப்பதியில்
மேவி வாழமரர் முத்தர்சிவ பத்தர்பணி தம்பிரானே. (ச)

---

* வாசி-குதிரை † மாடை-திரவியம். ‡ ஈனுமயில்-வள்ளிநாயகி.

தனனத் தந்தன தந்தன தனதன
தனனத் தந்தன தந்தன தனதன
தனனத் தந்தன தந்தன தனதன தனதான.

532. புருவச் செஞ்சிலை கொண்டிரு கணைவிழி
எறியக் கொங்கையி ரண்டெனு மதகரி
பொரமுத் தந்தரு மிங்கித நயவிதம் அதனாலே

புகலச் சங்கிசை கண்டம தனிலெழ
உருவச் செந்துவர் தந்தத ரமுமருள்
புதுமைத் தம்பல முஞ்சில தரவரு மதனாலே

பருகித் தின்றிட லஞ்சுக மெனமன
துருகிக் குங்கும சந்தன மதிவியர்
படியச் சம்ப்ரம ரஞ்சித மருள்கல வியினாலே

பலருக் குங்கடை என்றெனை இகழுவு
மயலைத் தந்தருள் மங்கையர் தமைவெகு
பலமிற் கொண்டிடு வண்டனு முனதடி பணிவேனோ

திருவைக் கொண்டொரு தண்டக வனமிசை
வரவச் சங்கொடு வந்திடு *முழையுடல்
சிதறக் கண்டக வெங்கர னொடுதிரி சிரனோடு

திறமிற் றங்கிய கும்பக னொருபது
தலைபெற் றும்பரை வென்றிடு மவனொடு
சிலையிற் கொன்றமு குந்தன வகமகிழ் மருகோனே

மருவைத் தூன்றிய பைங்குழ லுமையவள்
சிவனுக் கன்பரு ளம்பிகை கவுரிகை
மலையத் தன்தரு சங்கரி கருணைசெய் முருகோனே

வடவெற் பங்கய லன்றணி குகசர
வணையிற் றங்கிய பங்கய முகதமிழ்
மதுரைச் சங்கிலி மண்டப இமையவர் பெருமாளே. ()

* உழை - மானுருக்கொண்ட மாரீசன்.

தனதானன தானன தானன தனதானன தானன தானன
தனதானன தானன தானன தனதான.

533. முகிலாமெனும் வார்குழ லார்சிலை *புருவார்கயல் வேல்விழி யார்சசி
†முகவார்‡தர ளாமென வேநகை புரிமாதர்

முலைமாலினை கோபுர மாமென வடமாடிட வேகொடி நூலிடை
முதுபாளித சோலைகு லாவிய மயில்போல்வார்

§அகிசேர்குறி யார்துடை வாழையின் அழகார்கழ லார்தரவேய்தரு
அயிலார்கன நூபுர மாடிட நடைமேவி

அனமாமென யாரையு மால்கொள விழியால்சுழ லாவிடு பாவையர்
அவர்பாயலி லேயடி யேனுடல் அழிவேனோ

ககனார்பதி யோர்முறை யோவென இருள்காரசு ரார்படை தூள்பட
கடலேழ்கிரி நாகமு நூறிட விடும்வேலா

கமலாலய நாயகி வானவர் தொழுமீசுர னிட மேவிய
கருணாகர ஞானப ராபரை அருள்பாலா

மகிழ்மாலதி நாவல்ப லாகமு குடனுடனி லாமயில் கோகில
மகிழ்நாடுறை மால்வளி நாயகி மணவாளா

மதிமாமுக வாவடி யேனிரு வினைதூள்பட வேவயி லேவிய
மதுராபுரி மேவியு லாவிய பெருமாளே. (நா)

தனனதான தானத் தனந்த
தனனதான தானத் தனந்த
தனனதான தானத் தனந்த தனதான.

534 முகமெலா ||நெய் பூசித்த யங்கு
நுதலின்மீதி லேபொட் டணிந்து
முருகுமாலை ¶ஓதிக் கணிந்த மடமாதர்

முதிருமார பாரத் தனங்கள்
மிசையிலாவி யாய்நெக் கழிந்து
முடியமாலி லேபட் டலைந்து பொருள்தேடிச்

*புருவார்-புருவத்தினர். †முகவார்-முகத்தினர் ‡தரளாமென-தளர மாமென. §அகி - பாம்பு. ||நெய் - தயிலம். ¶ஓதி - கூந்தல்.

செகமெலாமு லாவிக் காந்து
திருடனாகி யேசற் றுழன்று
*திமிரனாகி யோடிப் பறந்து திரியாமல்

தெளியுஞான மோதிக் கரைந்து
சிவபுராண நூலிற் பயின்று
செறியுமாறு தாளைப் பரிந்து தரவேணும்

அகரமாதி யாமட் சரங்கள்
அவனிகால்வி ணூரப் பொடங்கி
அடையவேக ரூபத்தி லொன்றி முதலாகி

அமரர்காண வே†அத்த மன்றில்
அரிவையாட ஆடிக் கலந்த
அமலநாத னார்மூற் பயந்த முருகோனே

சகலவேத சாமுத் ரியங்கள்
சமயமாறு லோகத் ரயங்கள்
தருமநீதி சேர்தத் துவங்கள் தவயோகம்

தவறிலாம லாளப் பிறந்த
தமிழ்செய்மாறர் கூன்வெப் பொடன்று
தவிர ‡வால வாயிற் சிறந்த பெருமாளே. (எ)

தானத்தன தானன தானன தானத்தன தானன தானன
தானத்தன தானன தானன தனதான.

535. ஏலப்பனி நீரணி மாதர்கள் கானத்தினு மேயுற வாடிடு
மீரத்தினு மேவளை சேர்கர மதனாலும்

ஏமக்கிரி மீதினி லேகரு நீலக்கய மேறிய னேரொன
ஏதுற்றிடு மாதன மீதினு மயலாகிச்

சோலைக்குயில் போல்மொழி யாலுமெ னாசுற்றிடு நூலிடை யாலுமெ
§தோமிற்கத லீநிக ராகிய தொடையாலும்

சோமப்ரபை வீசிய மாமுக சாலத்தினு மாகடு வேல்விழி
சூதத்தினு நானவ மேதினம் உழல்வேனோ

---

*திமிரன்-மயக்கமுடையவன். †அத்தமன்று-கனகசபை. ‡ஆலவாய்-மதுரை. §தோமில் கதலி - குற்றமற்ற செவ்வாழை.

ஆலப்பணி மீதினில் மாசறு மாழிக்கிடை யேதுயில் மாதவ
ஞானக்கினி தாயுத வீயருள் நெடுமாயன்

ஆதித்திரு நேமியன் வாமன னீலப்புயல்நேர்தருமேனியன்
ஆரத்துள வார்திரு மார்பினன் மருகோனே

கோலக்கய மாவுரி போர்வையர் ஆலக்கடு வார்கள நாயகர்
*கோவிற்பொறி யால்வரு மாசுத குமரேசா

கூர்முத்தமிழ் வாணர்கள் வீறிய சீரற்புத மாநக ராகிய
† கூடற்பதி மீதினில் மேவிய பெருமாளே. (அ)

தனதான தானத் தனதான தனதான தானத் தனதான.

536. கலைமேவு ஞானப் பிரகாச கடலாடி ஆசைக் கடலேறிப்
பலமாய வாதிற் பிறழாதே பதிஞான வாழ்வைத் தருவாயே
மலைமேவு மாயக் குறமாதின் மனமேவு வாலக் குமரேசா
சிலைவேடசேவற்கொடியோனே திருவாலவாயிற் பெருமாளே.

தானத் தனதான தானத் தனதான.

537. நாதத் துவமாகி நேமத் துணையாகிப்
பூதத் தயவான போதைத் தருவாயே
நாதத் தொனிபோனே ஞானக் கடலோனே
கோதற் றமுதான கூடற் பெருமாளே. (ம)

தனதன தத்தந் தான தானன
தனதன தத்தந் தான தானன
தனதன தத்தந் தான தானன தனதான.

538. மனநினை சுத்தஞ் சூது காரிகள்
அமளிவி ளைக்குங் கூளி மூளிகள்
மதபல நித்தம் பாரி நாரிகள் அழகாக

---

*கோவிற்பொறி-கண்ணிலிருந்துண்டான அக்கினி. †கூடற்பதி-மதுரை.

வளைகுழை முத்தும் பூணும் வீணிகள்
விழலிகள் மெச்சுண் டாடி பாடிகள்
வரமிகு வெட்கம் போல ஓடிகள் தெருவூடே

குணகிகள் பட்சம் போல பேசிகள்
தனகிக ளிச்சம் பேசி கூசிகள்
குசலிகள் வர்க்கஞ் சூரை காரிகள் பொருளாசை

கொளுவிக ளிட்டம் பாறி வீழ்பட
அருளமு தத்தின் சேரு மோர்வழி
குறிதனி லுய்த்துன் பாத மேறிட அருள்தாராய்

தனதன தத்தந் தான தானன
டுடுடுடு டுட்டுண் டூடு டூடுடு
தகுதிகு தத்தந் தீத தோதக எனபேரி

தவில்முர சத்தந் தாரை பூரிகை
வளைதுடி பொற்கொம் பார சூரரை
சமர்தனில் முற்றும் பாறி நூறிட விடும்வேலா

தினைவன நித்தங் காவ லாளியள்
நகைமுறை முத்தின் பாவை மான்மகள்
திகழ்பெற நித்தங் கூடி ஆடிய முருகோனே

திரிபுர நக்கன் பாதி மாதுறை
அழகிய சொக்கன் காதி லோர்பொருள்
செலவரு ளித்தென் கூடல் மேவிய பெருமாளே. (௧௧)

தத்ததன தத்ததன தத்ததன தத்ததன
தத்ததன தத்ததன தனதான.

539. முத்துநவ ரத்நமணி பத்திநிறை சத்தியிட
மொய்த்தகிரி முத்திதரு எனவோதும்

முக்கணிறை வர்க்குமருள் வைத்தமுரு கக்கடவுள்
முப்பதுமு வர்க்கசுரர் அடிபேணிப்

பத்துமுடி தத்தும்வகை உற்றகணை விட்டவரி
*பற்குனனை வெற்றிபெற ரதமூரும்

பச்சைநிற முற்றபுயல் அச்சமற வைத்தபொருள்
பத்தர்மன துற்றசிவம் அருள்வாயே

தித்திமிதி தித்திமிதி திக்குகுகு திக்குகுகு
தெய்த்ததெதன தெய்த்ததெதன தெனதான

திக்குவென மத்தளமி டக்கைதுடி தத்ததகு
செச்சரிகை செச்சரிகை எனஆடும்

அத்தனுட னொத்தநட நித்ரிபுவ னத்திசிவ
சித்தியருள் சத்தியருள் புரிபாலா

†அற்பவிடை ‡தற்பமது முற்றுநிலை பெற்றுவளர்
§அற் ||கனக பத்மபுரி பெருமாளே. (கஉ)

தையதனத் தனதானா தனனதனத் தனதானா

540. வள்ளமுலைப் பொதுமானார் மயலதனிற் படியாதே
கள்ளம்விடுத் தனதாளே கருதவருட் பெறுவேனோ
உள்ளமறைப் பொருளோனே உமைமகிழ்நற் புதல்வோனே
தெள்ளுதமிழ்க் குரியோனே திருமதுரைப் பெருமாளே. ()

541. சைவமுதற் குருவாயே சமணர்களைத் தெறுவோனே
பொய்யருளத் தணுகானே புனிதவருட் புரிவாயே
கையின்மிசைக் கதிர்வேலா கடிகமழற் புதநீபா
தெய்வதசற் குருநாதா திருமதுரைப் பெருமாளே. (கச)

தானதன தத்த தானதன தத்த
தானதன தத்த தனதான.

542. ஆனைமுக வர்க்கு நேரிளைய கர்த்த
ஆறுமுக முற்ற அழகோனே

---

*பற்குனனை-பற்குனன் - அருச்சுனன். † அற்பவிடை - நுண்ணிய இடையுடைய மாதர்கள். ‡ தற்பம்-மெத்தைவீடு. § அல்-மதில், || கனக பத்மபுரி-ஸ்தலத்திலுள் பொற்றாமரையுள்ள மதுரை.

ஆதியா னுக்கும் வேதமு தல்வ ற்கும்
ஆரணமு ரைத்த குருநாதா

தானவர்கு லத்தை வேல்கொடுதொ ணித்த
சால்சதுர்வி துத்த திறல்வீரா

நாளிணைக ளுற்று மேவியப தத்தில்
வாழ்வொடுசி றக்க அருள்வாயே

வானெழுபு விக்கு மாலுமய னுக்கும்
யாவரொரு வர்க்கும் அறியாதாய்

மாமதுரை சொக்கர் மாதுமைக ளிக்க
மாமயில் நடத்து முருகோனே

தேனெழுபு னத்தில் மான்விழிகு றத்தி
சேரமரு வுற்ற திரடோளா

தேவர்கள்க ருத்தில் மேவியப யத்தை
நீவிமகிழ் வித்த பெருமாளே. (௧௫)

சீபுருடமங்கை:—நான்குநேரி.

இது திருநெல்வேலிக்குத் தெற்கே 20 மைல் துலைவிலிருக்கிறது.

தானதன தந்த தந்தன தானதன தந்த தந்தன
தானதன தந்த தந்தன தனதான.

543. ஆடல்மத னம்பின் மங்கைய ராலவிழி யின்பி றங்கொளி
டாரமத லம்பு கொங்கையின் மயலாகி

ஆதிகுரு வின்ப தங்களை நீதியுட னன்பு டன்பணி
யாமல்மன நைந்து நொந்துடல் அழியாதே

வேடரென நின்ற ஐம்புல னுலுகா ணங்க ளின்தொழில்
வேறுபட நின்று ணர்ந்தருள் பெருமாறென்

வேடைகெட வந்து சிந்தனை மாயையற வென்று துன்றிய
வேதமுடி வின்ப ரம்பொருள் அருள்வாயே

தாடகையு ரங்க டிந்தொளிர் மாமுனிம கஞ்சி றந்தொரு
தாழ்வறந டந்து திண்சிலை முறியாவொண்

சானகித னங்க லந்தபின் ஊரில்மகு டங்க டந்தொரு
தாயர்வச னஞ்சி றந்தவன் மருகோனே

நீவி - நீக்கி.

சேடன்முடி யுங்க லங்கிட ஆடைமுழு தும்ப ரந்தெழ
தேவர்கள்ம கிழ்ந்து பொங்கிட நடமாடும்
சீர்மயில மஞ்சு துஞ்சிய சோலைவளர் செம்பொ னுந்திய
சீபுருட மங்கை தங்கிய பெருமாளே. (க)

தானதன தந்ததந்த தானதன தந்ததந்த
தானதன தந்ததந்த தனதான.

544. கார்குழல்கு லைந்தலைந்து வார்குழையி சைந்தசைந்து
காதலுறு சிந்தையுந்து மடமாதர்
காமுகர கங்கலங்க போர்மருவ மூந்திவந்த
*காழ்கடிய கும்பதம்ப இருகோடார்
பேர்மருவும் அந்திதந்த வாரணவ னங்கள் அங்க
பேதையர்கள் தங்கள்கண்கள் வலையாலே
போதறிவு குந்துநொந்து காதலிலலைந்துசிந்தை
பீடையற வந்துநின்றன் அருள்தாராய்
ஏர்மருவு தண்டைகொண்ட தாளசைய வந்தகந்த
ஏகமயி லங்கதுங்க வடிவேலா
†ஏமனுமை மைந்தசந்தி சேவலணி கொண்டுவண்டர்
‡ஈடெறவி ருந்தசெந்தில் நகர்வாழ்வே
தேருகள்மி குந்தசந்தி வீதிகள ணிந்தகெந்த
சீரவர்கு லிர்ந்துயர்ந்த பொழிலோடே
சேரவெயி லங்குதுங்க வாவிகளி சைந்திருந்த
சீபுருட மங்கைதங்கு பெருமாளே. (உ)

தானதன தந்த தானதன தந்த
தானதன தந்த தனதான.

545. §வேனில்மத னைந்து பாணம்விட நொந்து
வீதிதொறு நின்ற மடவார்பால்
வேலையென வந்து தாளினில்வி ழுந்து
வேடைகெட நண்பு பலபேசித்
தேனினும ணந்த வாயமுத முண்டு
சீதள த னங்க ளினில்மூழ்கித்

* காழ்கடிய-கல்லினுங்கடுமையான. † ஏமன்-பொன்னிறமுள்ள சிவபிரான். ‡ ஈடெற-ஈடேற § வேனில்-வசந்த காலத்தில்.

தேடியதனங்கள் பாழ்படமுயன்று
சேர்கதியை நின்றி உழல்வேனோ

ஆனிரைபுரந்து மாநிலமளந்தொரா
லிலையில் வன்று துயில்மாயன்

ஆயர்மனை சென்று பால்தயிரளைந்த
ஆரணமுகுந்தன் மருகோனே

வானவர்புகழ்ந்த தானவர்பயந்த
மாநெடுவிளங்கு மணியார்பா

மாமறைமுழங்கு சீபுருடமங்கை
மாநகரமர்ந்த பெருமாளே. (௯)

இலஞ்சி.

இது திருக்குற்றலத்திலிருந்து வடக்கே 2 மைல் தூலவிலிருக்கிறது.

தனந்த தனதன தனந்த தனதன
தனந்த தனதன தனதான.

546. காங்கமலமின தாம்பவளம்வலை
களம்பகழிவிழி மொழிபாகு

கருப்பமுதுமுலை குரும்பைகுருகுப
கரும்பிடியினடை எயின்மாதோ

டாங்கநககன தனங்குதலையிசை
அலங்கிருதமுற மயில்மீதே

அமர்ந்துபவவினை களைந்துவருகொடி
யவந்தகனகல வருவாயே

தாங்கமுதியமகாட்பொருததிரை
தழங்குநதி†குமரெனவான

தலப்பரவமறை புலம்பவருசிறு
சதங்கைஅடிதொழு பவாழி

இரங்குநதிதிரு வரங்கர்மருகப
னிரண்டுபுயமலை கிழவோனே

இலங்குதாதமிழ் விளங்கவருதிரு
இலஞ்சிமருவிய பெருமாளே. (௧)

தழங்கு - முழங்குகின்ற. † குமரென - குமர என.

தந்தன தான தனந்தன தானத்
தந்தன தான தனந்தன தானத்
தந்தன தான தனந்தன தானத் தனதான.

547. கொந்தள ஓலை குலுங்கிட வாளிச்
சங்குட ஆழி கழன்றிட மேகக்
கொண்டைகள் மாலை பரிந்திடவாகப் பனிநீர்சேர்

கொங்கைகள் மார்பு குழைந்திட வாளிக்
கண்கயல் மேனி சிவந்திட கோவைக்
கொஞ்சிய வாயி ரசங்கொடு மோகக் கடலூடே

சந்திர ஆர மழிந்திட நூலிற்
பங்கிடை ஆடை துவண்டிட நேசத்
தந்திட மாலு ததும்பியு ழேழ்குற் றிடுபோதுன்

சந்திர மேனி முகங்களும் நீலச்
* சந்த்ரகி மாய்கொ டடர்ந்திடு பாதச்
† சந்திர வாகு சதங்கையு மேசற் றருள்வாயே

சுந்தரர் பாட லுகந்திரு நாளைக்
கொண்டுநல் தூது நடந்தவ ராகத்
‡ தொந்தமொ டாடி இருந்தவள் ஞானச் சிவகாமி

தொண்டர்க ளாக மமர்ந்தவள் நீலச்
சங்கரி யோக சவுந்தரி கோலச்
சுந்தரி காளி பயந்தரு ளாளைக் கிளையோனே

இந்திர தேவர் பயங்கெட சூரைச்
சிந்திட வேல்கொ டெறிந்துநல் தோகைக்
கின்புற மேவி இருந்திடு வேதப் பொருளோனே

எண்புன மேவி இருந்தவள் மோகப்
பெண்திரு வாளை மணந்திய வார்சொற்
கெஞ்சிய ளாவு மிலஞ்சியில் வாகப் பெருமாளே. (உ)

தனந்தன தந்த தனந்தன தந்த
தனந்தன தந்த தனதான.

548. கரும்பணி கொண்டல் நெடுங்குழல் கண்டு
துரந்தெதிர் கின்ற விழிவேலால்

* சந்த்ரகி - மயில். † சந்திர வாகு சதங்கை - சுகத்தைச் செய்கின்ற திரமான அழகையுடைய சதங்கை. ‡ தொந்தம் - சம்பந்தம்.

சுழன்று சுழன்று துவண்டு துவண்டு
சுருண்டு மயங்கி — மடவார்தோள்
விரும்பி வரம்பு கடந்து நடந்து
மெலிந்து தளர்ந்து — மடியாதே
விளங்கு கடம்பு விறைந்த விதண்டை
விதங்கொள் சதங்கை — அடிதாராய்
பொருந்த லமைந்து சிதம்பெ றுகின்ற
பொலங்கி ரிபொன்ற — எறிவோனே
புகழ்ந்து மகிழ்ந்து வணங்கு குணங்கொள்
* புரந்த ரன்வஞ்சி — மணவாளா
$ இருப்பு னமங்கை பெரும்பு ளகஞ்செய்
குரும்பை மணந்த — மணிமார்பா
§ இலஞ்சி யில்வந்த † இலஞ்சி யமென்று
இலஞ்சி யமர்ந்த — பெருமாளே. (ரு)

தானதனந்த தானதலந்த தானதனந்த தனதான.

549. மாலையில்வந்து மாலைவழங்கு மாலையனங்கன் — மலராலும்
வாடையெழுந்து வாடைசெறிந்து வாடையெறிந்த — அனலாலும்
கோலமழிந்து சாலமெலிந்து கோமளவஞ்சி — தளராமுன்
கூடியகொங்கை நீடியவன்பு கூரவுமின்று — வரவேணும்
காலனடுங்க வேலதுகொண்டு கானில்நடந்த — முருகோனே
கானமடந்தை நாணமொழிந்து காதலிரங்கு — குமரேசா
சோலைவளைந்து சாலிவிளைந்து சூழுமிலஞ்சி — மகிழ்வோனே
சூரியனஞ்ச வாரியில்வந்த சூரனைவென்ற — பெருமாளே. (ச)

திருப்பூவணம்.

இது மதுரைக்கு நேர்கிழக்கு 12 மைல் துலைவிலுள்ளரயில்வேஷ்டேஷன்

தனத்தான தத்தத் தனதான
தனத்தான தத்தத் தனதான.

550. அறப்பாவை அத்தற் — கருள்பாலா
அளித்தாது வெட்சித் — திருமார்பா

---

* புரந்தரன்வஞ்சி - தெய்வயானை $ இருப்புனமங்கை - வள்ளிநாயகி.
§ இலஞ்சி - புனம் † இலஞ்சியமென்று - இல் அஞ்சி அம் என்று, மனைவியாகிய வள்ளி நாயகிக்குப் பயந்து (அவள்) அழகை (வியந்து) கூறி.

குறப்பாவை அற்பிற் புணர்வோனே
குலத்தேவ வர்க்கப் பரிபாலா
மறப்பாத கத்துற் றழல்வேனோ
மலர்த்தாள்வ ழுத்தக் க்ருபையீவாய்
சிறப்பான முத்திக் கொருவாழ்வே
திருப்பூவ ணத்திற் பெருமாளே. (க)

தானனதான தானனதான தானனதான தனதான.

551\. வானவராதி யோர்சிறைமேவ மாவலியேசெய் திடுசூரன்
மார்பிருகூற தாய்விடவாரி வாய்விடவேலை விடுதீரா
கானவர்பாவை காதலனான காசணிபார தனமார்பா
காலனைமோது காலகபால * காளகளேசர் தருபாலா
தேனமர்நீப மாலைவிடாத சேவகஞான முதல்வோனே
தீயகுணூறி பாவிநினாது சேவடிகாண அருள்வாயே
† போனகசாலை யாதுலர்வாழ வீதிகடோறும் நனிமேவு
பூவணமான மாநகர்வாழு நாதகுகேச பெருமாளே. (உ)

தந்தத்தத் தானன தானன
தந்தத்தத் தானன தானன
தந்தத்தத் தானன தானன தனதான.

552\. பந்தப்பொற் பாரப யோதர
முந்தச்சிற் றுடைசெய் மேகலை
பண்புற்றுத் தாளொடு வீசிய துகிலோடே
பண்டைச்சிற் சேறியில் வீதியில்
கண்டிச்சித் தாரொடு மேவிடு
பங்குக்கைக் காசுகொள் வேசையர் பனிநீர்தோய்
கொந்துச்சிப் பூவணி தோகையர்
கந்தக்கைத் தாமரை யாலடி
கும்பிட்டுப் பாடிசை வீணையர் அநுராகங்
கொண்டுற்றுப் பாயலின் மூழ்கிய
சண்டிச்சிச் சீயென வாழ்துயர்
குன்றப்பொற் பாதக்ரு பாநிதி அருள்வாயே

* காளகளேசர்-விஷத்தைக்கண்டத்திலுடையவர். † போனகம்-அன்னம்.

அந்தத்துக் காதியு மாகியு
மந்திக்குட் டானவ னானவ
னண்டத்தப் பாலுற மாமணி ஒளிவீசும்
அங்கத்தைப் பாவைசெய் தேயுயர்
சங்கத்திற் றோர்தமி ழோதிட
அண்டிக்கிட் டார்கழு வேறினர் ஒருகோடி
சந்தத்திக் காஞநி சாசரர்
வெந்துட்கத் தூளிப டாவெழ
சண்டைச்சொற் றூர்பட வேவயில் விடுவோனே
தங்கச்சக் ராயுதர் வானவர்
வந்திக்கப் போரு ளோதிகழ்
தம்பப்பொற் பூவண மேவிய பெருமாளே. (௩)

திருக்கானப்பேர்.

இது மானுமதுரையிலிருந்து வடக்கே 22 மைல் தூலவிலிருக்கிறது.

தனத்தானத்தா தனதன தனதன தனதான.

553. அனத்தோடொப்பா மெனுநடை மடவியர் அநுராகம்
அதற்கேசிச்சி இனமென அயிர்கெடல் அழகாமோ
உனைப்பாடிப்பே றுறுமொரு வரமினி உதவாயோ
உவப்பாகத்தே வர்கள்சிறை விடவிடும் அயிலோனே
முனைப்பாடிக்கே திரிதரும் அரிதிரு மருகோனே
முகிற்கே †நத்தா விரிதரு கலபமன் மயிலோனே
நினைக்காவற்கே உரியவள் மனமகிழ் மணவாளா
திருக்கானப்பேர் நகர்தனி லினிதுறை பெருமாளே.(க)

தானத்தானத் தனதானா தானத்தானத் தனதானா.

554. கோலக்காதிற் குழையாலே கோதிச்சேர்மைக் குழலாலே
ஞாலத்தாரைத் துயரேசெய் ‡நாரிக்காசைப் படலாமோ
மேலைத்தேவர்க் கரியோனே வீரச்சேவற் கொடியோனே
காலப்பாசத் துயர்தீராய் கானப்பேரிற் பெருமாளே. (உ)

முனைப்பாடிக்கே-முன் ஆயர் பாடியில் †நத்தா விரும்பி ‡நாரி-பெண்.

திருவுத்தரகோசமங்கை.

இது ராமநாதபுரத்திலிருந்து தெற்கே 7 மைல் துலைவிலிருக்கிறது.

தத்தன தானதந்த தத்தன தானதந்த
தத்தன தானதந்த தனதான.

555. வெற்பென வேயெழுந்து செப்பென வேதிரண்டு
மெத்தன மோடிகொண்ட தனமாதர்
மெய்ப்படு கோலமுங்கண் மைப்படு சாலமுஞ்செய்
வித்தையு மேநினைந்து மயலாகி
*பற்பக லாவலைந்து கற்பதெ லாமுலைந்து
எற்பமு மானமின்றி அழிவேனோ
அக்கினி ரூபமைந்த கிர்த்திகை மாதர்தந்த
அற்புத பாலையுண்ட குமரேசா
பொற்பதி காவலிந்தி ரற்குற வேலெறிந்து
பொய்ப்படு சூர்பிளந்த அதிதீரா
† புட்பதி ஏறுகொண்ட அச்சுத னார்மகிழ்ந்த
புத்தமிர் தானசெஞ்சொல் மருகோனே
‡ உற்பல மோகொடுங்க ணைக்கிணை யோவெனுங்கண்
உத்தமி தேவதந்தி புணர்மார்பா
உத்தம மாவளங்கொள் உத்தரகோசமங்கை
உற்றினி தாவிருந்த பெருமாளே. (க)

திருப்புத்தூர்.

இது மதுரையிலிருந்து வடகிழக்கே 32 மைல் துலைவிலிருக்கிறது.

தனத்தத் தான தனன தனதன
தனத்தத் தான தனன தனதன
தனத்தத் தான தனன தனதன தனதான.

556, § கருப்புச் சாப னனைய இளைஞர்கள்
ப்ரமிக்கக் காத லுறவு நெடுகிய
கடைக்கட் பார்வை இனிய வனிதையர் தனபாரங்
களிற்றுக் கோடு கலச மலிநவ
மணிச்செப் போடை வனச நறுமலர்
கனத்துப் பாளை முறிய வருநிகர் இளநீர்போற்

---

*பகல் - இரவுபகல் † புட்பதி - பக்ஷிராஜனாகிய கருடன் ‡ உற்பலம் குவளைமலர் § கருப்புச்சாபன் - கரும்பை வில்லாக்கொண்ட மன்மதன்.

பொருப்பைச் சாடும் வலியை உடையன
அறச்சற் றுன இடையை நலிவன
புதுக்கச் சார வடமொ டடர்வன எனநாளும்
புகழ்ச்சிப் பாட லடிமை அவரவர்
ப்ரியப்பட் டாள உரைசெ யிழிதொழில்
* பொகட்டெப் போது சரியைகிரியைசெய் துயிர்வாழ்வேன்
இருட்டுப் பாரில் மறலி தனதுடல்
பதைக்கக் கால்கொ டுதைசெய் தவன்விழ
†எயிற்றுப் போலி அமர ருடலவர் தலைமாலை
எலுப்புக் கோவை அணியு மவர்மிக
அதிர்த்துக் காளி வெருவ நொடியினி
லெதிர்த்திட் டாடும் வயிர பயிரவர் நவநீத
திருட்டுப் பாணி இடப முதுகிடை
மிதித்திட் டேறி அதிர வருபவர்
செலுத்துப் பூத மலகை இலகிய படையாளி
‡ செடைக்குட் § பூளை மதிய ‖ மிதழிவெ
ளெருக்குச் சூடி குமர வயலியல்
திருப்புத் தூரில் மருவி உறைதரு பெருமாளே. (௧)

தான தாத்த தனத்தத் தானன
தான தாத்த தனத்தத் தானன
தான தாத்த தனத்தத் தானன தனதான.

557. வேலை தோற்க விழித்துக் காதினி
லோலை காட்டி நகைத்துப் போதரு
வீடு காட்டி உடுத்தப் போர்வையை நெகிழ்வாகி
மேனி காட்டி வளைத்துப் போர்முலை
யானை காட்டி மறைத்துத் தோதக
வீறு காட்டி எதிர்த்துப் போரெதிர் வருவார்மேல்
கால மேற்க உழப்பிக் கூறிய
காசு கேட்ட துகைப்பற் றுயிடை
காதி ஓட்டி வருத்தப் பாடுடன் வருவார்போல்

பொகட்டு-போகவிட்டு † எயில் துப்பு ஒலி-திரிபுரங்களின் வலி யைத்தொலைத்து ‡ செடை-சடை § பூளை-அறுகு. ‖ இதழி-கொன்றை.

காதல் போற்று மலர்ப்பொற் பாயலின்
மீத னைப்பு மசட்டுச் சூளைகள்
காம நோய்ப்ப டுசித்தத் தீவினை ஒழியேனோ

ஆல கோட்டு மிடற்றுச் சோதிக
பாலி பார்ப்ப திபட்சத் தால்நட
மாடி தாத்தி ரிபட்சித் தாவென உமிழ்வாளி

ஆடல் கோத்த சிலைக்கைச் சேவக
னோடை பூத்த தளக்கட் சானவி
யாறு தேக்கி யகற்றைச் சேகர சடதாரி

சீல மாப்ப திமத்தப் பாரிட
சேனை போற்றி டுமப்பர்க் கோதிய
சேத னார்த்த ப்ரசித்திக் கேவரு முருகோனே

சேல ருக்க யல்தத்தச் சூழ்வய
லூர மேற்க ரவிப்பார்க் காதா
தீர தீர்த்த திருப்புத் தூருறை பெருமாளே. (உ)

திருவாடானை.

இது மானாமதுரையிலிருந்து கிழக்கே 43 மைல் துலைவிலிருக்கிறது.

தானான தத்ததன தானான தத்ததன
தானான தத்ததன தனதான.

558. ஊனாறு முட்பிணியு மானாக வித்தவுட
லூதாரி பட்டொழிய உயிர்போனால்
ஊரார்கு வித்தவர ஆவாவெ னக்குறுகி
ஓயாமு ழக்கமெழ அழுதோய
நானாவி தச்சிவிகை மேலேறி டத்தியது
நாறாகெ டுத்தடவி எரியூடே
நாணாமல் வைத்துவிட நீறாமெ னிப்பிறவி
நாடாதெ னக்குனருள் புரிவாயே
மானாக * துத்திமுடி மீதேநி ருத்தமிடு
மாயோனு மட்டொழுகு மலர்மீதே
வாழ்வாயி ருக்குமொரு வேதாவு மெட்டிசையும்
வானோரு மட்டகுல கிரியாவும்

துத்தி - அரவின்படம்.

ஆறுவ ரக்கருடன் வானூர்பி ழைக்கவரு
மாலால முற்றவமு தயில்வோன்முன்
ஆசார பத்தியுடன் ஞானக மத்தையரு
ளாடானை நித்தமுறை பெருமாளே. (௩)

இராமேசுவரம்.

இது மண்டபம் ஸ்டேஷனிலிருந்து கிழக்கே 10 மைல் தூலவிலிருக்கிறது.

தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன தானதன தானதன தனதான.

559. வாலவய தாகியழ காகிமத னாகிபணி
வாணிபமொ டாடிமரு ளாடிவிளை யாடிவிழல்
வாழ்வுசத மாகிவலி வாகி* மட கூடமொடு பொருள்தேடி
வாசபுழு கோடுமல ரோடுமன மாகிகமழ்
வாசனைக ளாதியிட லாகிமய லாகிவிலை
மாதர்களை மேவியவ ராசைதனி லேசுழல சிலநாள்போய்த்
தோல்திரைக ளாகிநரை யாகிகுரு டாகியிரு
கால்கள்தடு மாறிசெவி மாறிபசு பாசபதி
சூழ்கதிகள் மாறிசுக மாறிதடி யோடுதிரி உறுநாளிற்
சூலைசொறி ஈளைவலி வாதமொடு நீரழிவு
சோகைகள மாலைசுர மோடுபிணி தூறிருமல்
சூழலுற மூலகசு மாலமென நாறியுடல் அழிவேனோ
நாலுமுக னாதியறி யோமென†வ தாரமுரை
யாதபிர மாவைவிழ மோதிபொரு ளோதுகென
நாலுசிர மோடுசிகை தூளிபட தாளமிடும் இளையோனே
நாறிதழி வேணிசிவ ரூபகலி யாணிமுத
லீனமக வானைமகிழ் தோழவன மீதுசெறி
ஞானகுரு மாதைதினை காவில்மண மேவுபுகழ் மயில்வீரா

*மட கூடம் - மாட கூடம். † அதாரம் - ஆதாரம்.

ஓலமிடு தாடகைசு வாகுவளா ரேழுமரம்
வாலியொடு நீலிபக ஞேடொருவி ராதனெழு
மோதகட லோடுவிறல் ராவணகு ழாமமரில் பொடியாக

ஓகைதழல் வாளியிடு மூரிதனு நேமிவளை
பாணிதிரு மார்பனரி கேசன்மரு காவெனவெ
ஓதமறை ராமெசுர மேவுகும ராவமரர் பெருமாளே. (க)

தானு தனத்ததன தானு தனத்ததன
தானு தனத்ததன தனதான.

560\. வானோர் வழுத்துனது பாதார பத்மமலர்
மீதே பணிக்கும்வகை அறியாதே

மானுர் வலைக்கணதி லேதூளி மெத்தையினி
லூடே அணைத்துதவு மதனுலே

தேனே கருப்பிலெழு பாகோ விதற்கிணைக
ளேதோ வெனக்கலவி பலகோடி

தீரா மயக்கிெனுடு நாகா படத்தி*லெழு
சேருடல் பெற்றதுயர் ஒழியேனோ

மேனு டுபெற்றுவளர் சூராதி பற்கெதிரி
னூடேகி நிற்குமிரு கழலோனே

† மேகா ரவுக்ரபரி தானேறி வெற்றிபுனை
வீராகு றச்சிறுமி மணவாளா

ஞானுப ரற்கினிய வேதா கமப்பொருளை
நானு துரைக்குமொரு பெரியோனே

நாரா யணற்குமரு காவீறு பெற்றிலகு
ராமே சுரத்திலுறை பெருமாளே. (உ)

எழுசேருடல்-சேறில்நட்டகம்பம்போலாடல். † மேகாரம்-மயில்.

இது கும்பகோணத்திலிருந்து தெற்கே 8 மைல் தூலவிலிருக்கிறது.

தனத்த தந்தன தானதனந்தத்
தனத்த தந்தன தானதனந்தத்
தனத்த தந்தன தானதனந்தத் தனதான.

561. இரத்த முஞ் * சியு மூளையெலும்புட்
டசைப்ப சுங்குடல் நாடி புனைந்திட்
டிறுக்கு மண்சல வீடுபுகுந்திட் டதில்மேவி

இசைத்து டன்புகல் சூதுமிகுந்திட்
டகைத்தி டும்பொரு ளாசையெனும்புட்
டெருட்ட வுந்தெளி யாதுபறந்திட் டிட † மாயா

பிரத்தம் வந்தடு வாதசு ரப்பித்
துளைப்பு டன்பல வாயுவு மிஞ்சிப்
பெலத்தை யுஞ்சில நாளுளொ டுங்கித் தடிமேலாய்ப்

பிடித்தி டும்பல நாள்கொடு மந்திக்
குலத்தெ னும்படி கூனிய டங்கிப்
பிசக்கு வந்திடு போதுபி னஞ்சிச் சடமாமோ

தரித்த னந்தன தானன தந்தத்
திமித்தி மிந்திமி தீதக திந்தத்
தடுட்டு டுண்டுடு டுடுடி மிண்டிட் டியல்தாளம்

தனத்த குந்தகு தானன தந்தக்
கொதித்து வந்திடு சூருடல் சிந்தச்
சலத்து டன்கிரி தூள்படெ றிந்திட் டிடும்வேலா

சிரத்து டன்கா மேடுபொ ழிந்திட்
டிரைத்து வந்தம ரோர்கள்ப டிந்துச்
சிரத்தி னுங்கமழ் மாலைம ணப்பொற் சரணோனே

செகத்தி னின்குரு வாகிய தந்தைக்
களித்தி டுங்குரு ஞானப்ர சங்கத்
திருப்பெ ருந்துறை மேவிய கந்தப் பெருமாளே. (க)

---

* சியம் = சீயம். † மாயாபிரத்தம் - மயக்கமதிகரித்தல்.

தனத்தனந் தனதன தனத்தனந் தனதன
தனத்தனந் தனதன தனதான.

562. வரித்தகுங் குமமணி முலைக்குரும் பையர்மன்
மகிழ்ச்சிகொண் டிடவதி விதமான
வளைக்கரங் களினொடு வளைத்திதம் படவுடன்
மயக்கவந் ததிலறி வழியாத
கருத்தழிந் திடவிரு கயற்கணும் புரள்தர
களிப்புடன் களிதரு மடமாதர்
கருப்பெருங் கடலது கடக்கவுன் திருவடி
களைத்தருந் திருவுளம் இனியாமோ
பொருப்பகம் பொடிபட அரக்கர்தம் பதியொடு
புகைப்பரந் தெரியெழ விடும்வேலா
புகழ்ப்பெருங் கடவுளர் களித்திடும் படிபுவி
பொறுத்தமந் தரகிரி * கடலூடே
திரித்தகொண் டலுமொரு மறுப்பெறுஞ் † சதுமுக
திருட்டியெண் கணன்முதல் அடிபேணத்
திருக்குருந் தடியமர் குருத்வசங் கரரொடு
திருப்பெருந் துறையுறை பெருமாளே. (உ)

தனத்தனந் தனதன தனதான
தனத்தனந் தனதன தனதான.

563. தவப்ரியங் கொளுமுனி வரர்வானோர்
தழைக்கவந் தருள்புரி முருகோனே
உவப்புறுங் குறமகள் மணவாளா
‡ ஒருத்தலின் சுதைபுணர் திருமார்பா
அவத்தனென் றெனைவிட லழகாமோ
அசட்டுமங் கையர்மயல் தவிராயோ
சிவப்பரம் பொருளுத வியபாலா
திருப்பெருந் துறையுறை பெருமாளே. (ங)

* கடலூடே திரித்த கொண்டல்-விஷ்ணு. † சதுமுகதிருட்டி யெண்கணன் - பிரமன். ‡ ஒருத்தல் இன்சுதை - தெய்வயானையம்மை.



இராமேஸ்வரம் (கோவில் பிரகாரம்.)

இது ஐயம்பேட்டையிலிருந்து கிழக்கே 36 மைல் துலைவிலிருக்கிறது.

தந்ததன தான தந்ததன தான தந்ததன தான தனதான.

564. அஞ்சுவித பூத முங்கரண நாலு மந்திபகல் யாதும் அறியாத
அந்தநடு வாதி ஒன்றுமில தான அந்தவொருவீடு பெறுமாறு
மஞ்சுதவழ் சார லஞ்சயில வேடர் மங்கைதனை நாடி வனமீது
வந்தசா ணார விந்தமது பாட வண்டமிழ்விநோதம் அருள்வாயே
குஞ்சரக லாப வஞ்சியபி ராம குங்குமப டீர வதிரேகக்
கும்பதன மீது சென்றணையு மார்ப குன்றுதடு மாற இகல்கோப
வெஞ்சமர சூர னெஞ்சுபக வீர வென்றிவடி வேலை விடுவோனே
விம்பமதில் சூழு †நிம்பபுர வான விண்டலம கீபர் பெருமாளே.

தனதன தனதன தனதன
தாந்த தாத்தான தந்த தனதான.

565. குரைகட லுலகினில் உயிர்கொடு
போந்து கூத்தாடு கின்ற குடில்பேணிக்
குகையிட மருவிய கருவிழி
மாந்தர் ‡ கோட்டாலை இன்றி யவிரோதம்
வரவிரு வினையற உணர்வொடு
தூங்கு வார்க்கேவி ளங்கு மநுபூதி
வடிவினை உனதழ கியதிரு
வார்த்த வாக்கால்மொ ழிந்த ருளவேணும்
திரள்வரை பகமிகு குருகுல
வேந்து தேர்ப்பாகன் மைந்தன் மறையோடு
§ தெருமர ||நிசிசரர் மனைவியர்
சேர்ந்து தீப்பாய இந்த்ர புரிவாழ
விரிதிரை எரியெழ முதலுற
வாங்கு வேற்கார கந்த புவியேழும்
மிடிகெட விளைவன மளவயல்
சூழ்ந்த வேப்பூர மர்ந்த பெருமாளே. (௨)

குஞ்சரகலாபவஞ்சி - தெய்வயானை. † நிம்பபுரம் - வேப்பூர்.
‡ கோட்டாலை - துன்பம். § தெருமர - சுழல. || நிசிசரர் - ராக்ஷதர்.

தாத்தந் தந்தத் தந்தத் தனனத் தனதான.

566. நாட்டந் தங்கிக் கொங்கைக் குவடிற் படியாதே
நாட்டுந் தொண்டர்க் கண்டக் கமலப் பதமீவாய்
வாட்டங் கண்டுற் றண்டத் தமரப் படைமீதே
மாற்றந் தந்துப் பந்திச் சமருக் கெதிரானோர்
கூட்டங் கந்திச் சிந்திச் சிதறப் பொருவோனே
கூற்றன் பந்திச் சிந்தைக் குணமொத் தொளிர்வேலா
வேட்டந் தொங்கித் தந்திப் பரனுக் கிளையோனே
வேப்பஞ் சந்திக் கந்தக் குமரப் பெருமாளே. (ரு)

ஆய்க்குடி.

இது பழநியிலிருந்து கிழக்கே 4 மைல் தூலவிலிருக்கிறது.

தாத்தனத் தானதன தாத்தனத் தானதன
தாத்தனத் தானதன தனதான.

567. வாட்படச் சேனைபட வோட்டியொட் டாரையிறு
மாப்புடைத் தாரரசர் பெருவாழ்வும்
மாத்திரைப் போதிலிடு காட்டினிற் போமெனவில்
வாழ்க்கைவிட் டேறுமடி யவர்போலக்
கோட்படப் பாதமலர் பார்த்திளைப் பாறவினை
கோத்தமெய்க் கோலமுடன் வெகுரூபக்
கோப்புடைத் தாகியல மாப்பினிற் பாரிவரு
கூத்தினிப் * பூரையிட அமையாதோ
தாட்படக் கோபமிட பாப்பினிற் † பாலன்மிசை
தாக்குமப் போதிலொரு கழல்தாவிச்
சாற்றுமக் கோரபிரு கூற்றுதைத் தார்மவுலி
தாழ்க்கவச் சாயுதனும் இமையோரும்
ஆட்படச் சாமபா மேட்டியைக் காவலிடு
மாய்க்குடிக் காவலவு ததிமீதே
ஆர்க்குமத் தானவரை வேற்காத் தால்வரையை
ஆர்ப்பெழச் சாடவல பெருமாளே. (க)

* பூரையிட-தள்ள. † பாலன்-மார்க்கண்டன.

இது பனரிஸ் ஸ்டேஷனிலிருந்து வடக்கே 7 மைல் தூலவிலிருக்கிறது.

தானதத்தன தானதானன தானதத்தன தானதானன
தானதத்தன தானதானன தனதான.

568. தாரணிக்கதி பாவியாய்வெகு சூதுமெத்திய மூடனாய்மன
சாதனைக்கள வாணியாயுறும் அதிமோக
தாபமிக்குள வினைனுயிரு வேல்விழிச்சிய ராகுமாதர்கள்
தாழுயச்செயு மேதுதேடிய நினைவாகிப்
பூரணச்சிவ ஞானகாவிய மோதுதற்புணர் வானநேயர்கள்
பூசுமெய்த்திரு நீறிடாவிரு வினையேனைப்
பூசிமெய்ப்பத மானசேவடி காணவைத்தருள் ஞானமாகிய
போதகத்தினை யேயுமாறருள் புரிவாயே
வாரணத்தினை யே * காராவுமு னேவளைத்திடு போதுமேவிய
மாயவற்கித மாகவீறிய மருகோனே
வாழுமுப்புர வீறதானது நீறெழுப்புகை யாகவேசெய்த
மாமதிப்பிறை வேணியாரருள் புதல்வோனே
காரணக்குறி யானநீதிய ரானவர்க்குமு னாகவேநெறி
காவியச்சிவ நூலையோதிய கதிர்வேலா
கானகக்குற மாதைமேவிய ஞானசொற்கும ராபராபர
காசியிற்பிர தாபமாயுறை பெருமாளே. (௧)

தந்தத் தனதன தானன தானன
தந்தத் தனதன தானன தானன
தந்தத் தனதன தானன தானன தனதான.

569. மங்கைக் கணவனும் வாழ் † சிவ ணுமயல்
பங்கப் படமிசை யேபணி போல் ‡ மதம்
வந்துற் பெருகிட வேவிதி யானவன் அருள்மேவி
வண்டுத் தடிகைபொ லாகியெ நாள்பல
பந்துப் பனைபழ மோடிள நீர்குட
மண்டிப் பலபல வாய்வினை கோலும வழியாலே

---

* காரா - முதலை. † சிவணு - ஒன்றுகூடி ‡ மதம் - வீரியம்.

திங்கட் பதுசெல வேதலை கீழுற
வந்திப் புவிதனி லேமத லாயென
சிந்தைக் குழவியெ னுவனை தாதையும் அருள்கூரச்

செம்பொற் றடமுலை பால்குடி நாள்பல
பண்புத் தவழ்நடை போய்வித மாய்பல
சிங்கிப் பெருவிழி யாரவ மாயதில் அழிவேனோ

அங்கைத் தரியென வேயொரு ‖ பாலக
னின்பக் கிருபைய தாயொரு தூண்மிசை
அம்பற் கொடு ¶ வரி யாயிரண் யாசுரன் உடல்பீறி

அண்டர்க் கருள்பெரு மான்முதி ராவணி
சங்குத் திகிரி † க ரோனரி ‡ நாரவ
ரங்கத் திருவணை மேல்துயில் நாரணன் மருகோனே

கங்கைச் சடைமுடி யோனிட மேவிய
தங்கப் பவளொளி பால்மதி போல்முக
கங்குற் றரிகுழ லாள்பர மேஸ்வரி அருள்பாலா

கந்துப் பரிமயில் வாகன மீதிரு
கொங்கைக் குறமக ளாசையொ டேமகிழ்
கங்கைப் பதிநதி காசியில் மேவிய பெருமாளே. (உ)

தானதந்த தனதன தனதான.

570\. வேழமுண்ட விளாங்கனி அதுபோல
மேனிகொண்டு வியாபக மயலூறி

நாளுமிண்டர் கள்போல்மிக அயர்வாகி
நானுநைந்து விடாதருள் புரிவாயே

மாளவன்ற மணீசர்கள் கழுவேற
வாதில்வென்ற சிகாமணி மயில்வீரா

காளகண்ட னுமாபதி தருபாலா
காசிகங்கை யில்மேவிய பெருமாளே. (ந)

திங்கட்பது-பத்துமாதம் ‖ பாலகன்-பிரகலாதன ¶ அரி-நரசிங்க கம். † கரோன்-கையையுடையவன், ‡ நார-ஜலம்பொருந்திய,

தனதனதனத்த தான தனதன தனத்ததான
தனதன தனத்த தான தனதான.

571\. அருவரை எடுத்த வீர னெரிபட விரற்க ளூணு
மானிட மிருக்கு மாயி அருள்வோனே
அலைகட லடைத்த ராமன் மிகமன மகிழ்ச்சி கூரு
மணிமயில் நடத்து மாசை மருகோனே
பருதியி னொளிக்கண் வீறும் அறுமுக நிரைத்த தோள்ப
ணிருகர மிகுத்த பார முருகாநின்
பதமல ருளத்தி னூலும் நினைவுறு கருத்தர் தாள்கள்
பணியவு மெனக்கு ஞான மருள்வாயே
சுருதிக ளுரைத்த வேத னுரைமொழி தனக்கு ளாதி
சொலுவென உரைத்த ஞான குருநாதா
சுரர்பதி தழைத்துவாழ அமர்சிறை அனைத்துமீள
துணிபட அரக்கர்மாள விடும்வேலா
மருமலர் மணக்கும் வாச நிறைதரு தருக்கள்சூழும்
வயல்புடை கிடக்குநீல மலர்வாவி
வளமுறு தடத்தினோடு சரஸ்வதி நதிக்கண்வீறு
வயிரவி வனத்தில்மேவு பெருமாளே. (க)

அத்திப்பட்டு.

இது திருக்காரூரிலிருந்து கிழக்கே 2மைல் தூலைவிலிருக்கிறது.

தனதனன தனதனன தத்தத் தத்தனன
தனதனன தனதனன தத்தத் தத்தனன
தனதனன தனதனன தத்தத் தத்தனன தனதான.

572 கருகியறி வகலவுயிர் விட்டுக் கிக்கிளைஞர்
கதறியழ விரவுபறை முட்டக் கொட்டியிட
கனகமணிசிவிகையிலமர்த்திக் கட்டையினில்இடைபோடாக்
கரமலர்கொ டரிசியினை இட்டுச் சித்ரமிகு
கலையையுரி கொடுமறைகள் பற்றுப் பற்றுகனல்
கணகணென எரியவுடல் கட்டுக் *கஷியவர் வழியேபோம்

* கூஷி-பக்கம்

மருவுபுனல் முழுகியனை புக்குத் துக்கமறு
மனிதர்தமை உறவுநிலை கட்டிச் சுட்டியுற
மகிழ்வுசெய்து அழுதுபட வைத்தத் துட்டன்மதன் மலராலே
மயல்விளைய அரிவையர்கள் கைப்பட் டெய்த்துமிக
மனமழியு மடிமையைநி னைத்துச் சொர்க்கபதி
வழியையிது வழியெனவு ரைத்தப்பொற் கழல்கள் தருவாயே
பொருவின்மலை யரையனருள் பச்சைச் சித்ரமயில்
புரமெரிய *இரணியத னுக்கைப் பற்றியியல்
புதியமுடு கரியதவம் உற்றுக் கச்சியினில் உறமேவும்
புகழ்வனிதை தருபுதல்வ பத்துக் கொத்துமுடி
புயமிருப தறவுமெய்த சக்ரக் கைக்கடவுள்
பொறியரவின் மிசைதுயிலு சுத்தப் பச்சைமுகில் முருகோனே
அரியமர கதமயிலி லுற்றுக் கத்துகட
லதுசுவற அசுரர்கிளை கெட்டுக் கட்டையற
அமரர்பதி இனியகுடி வைத்துற் குற்றுமிகும் இளையோனே
அருணமணி வெயில்பரவு பத்துத் திக்குமிகு
மழகுபொதி மதர்மகுட தத்தித் தத்திவளர்
அணியகய லுகளும்வயல் அத்திப்பட்டி லுறை பெருமாளே.

திருவொற்றியூர்.

இது இந்த ஸ்டேஷனிலிருந்து கிழக்கே அரைமைல் தூலவிலிருக்கிறது.

தனனதன தான தனனதன தான
தனனதன தான தனதான.

573. கரியமுகில் போலு மிருளளக பார
கயல்பொருத வேலின் விழிமாதர்
கலவிகளில் மூழ்கி ம்ருகமதப டீர
களபமுலை தோய அணையூடே
விரகமது வான மதனகலை யோது
வெறியனென நாளு முலகோர்கள்
விதரணம தான வகைநகைகள் கூறி
விடுவதன்முன் ஞான அருள்தாராய்

* இரணிய தனு-பொன்மலை வில்.

அரிபிரமர் தேவர் முனிவர்சிவ யோகர்
அவர்கள்புக ழோத நிலமீதே
அதிகவட ராஜர் பவுருரு ராஜ
அமரர்குல நேச குமரேசா
சிரகரக பாலர் அரிவையொரு பாகர்
திகழ்கனக மேனி உடையாளர்
திருவளரு * மாதி புரியதனில் மேவு
செயமுருக தேவர் பெருமாளே. (௧)

தனதத்தன தானதன தனதத்தன தானதன
தனதத்தன தானதன தனதான.

574\. சொருபப்பிர காசவிசு வருபப்பிர மாகநிச
சுகவிப்பிர தேசரச சுபமாயா
துலியப்பிர காசமுத சொலியற்றற சாசவித
தொகைவிக்ரம மாதர்வயி றிடையூறு
கருவிற்பிற வாதபடி புருவிற் † பிர மோதவடி
கனா ‡ எத்திடி ராகவகை அதின்மீறிக்
கருணைப்பிர காசவுன தருளுற்றிட ஆநில்சிவ
கதிபெற்றிட ஞானவழியை ஒழிவேனோ
குருகுக்குட வாரகொடி செருவுக்கிர § ஆதபயில்
பிடிகைத்தல ஆதியரி மருகோனே
குமரப்பிர தாபகுக சிவசுப்பிர மாமணிய
|| குணமுட்டர வாவசுரர் குலகாலா
¶ திருவொற்றியு ருமருவு நகரொற்றியுர் வாரிதிரை
அருகுற்றிடு மாதிசிவன் அருள்பாலா
திகழுற்றிடு யோகதவ மிகுமுக்கிய மாதவர்க
ளிதயத்திட மேமருவு பெருமாளே. (௨)

ஆதிபுரியென்பது - திருவொற்றியூர். † பிரமோத-விரும்பத்தக்க. ‡ எத்திடு - ஏத்திடு. § ஆதபயில் - ஆதப அயில், ஒளிவிடும்வேல் || குணமுட்டர்-குணமற்றவர். ¶ திருவொற்றியுருமருவு - லக்ஷ்மி உற்றிருக்கும்.

திருவேற்காடு.

இது ஆவடி ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கு 2 மைல் தூலைவிலிருக்கிறது.

தானந் தானன தான தானந் தானன தான
தானந் தானன தான் தனதான.

575. ஆலம் போலெழு நீல மேலங் காய்வரு கோல
ஆழம் போர்செயு மாய விழியாலே
ஆரம் பால்தொடை சால ஆலுங் கோபுர வார
ஆடன் பார்குவி நேய முலையாலே
சாலந் தாழ்வுறு மால ஏலங் கோர்பிடி ஆய
வேலங் கார்துடி போலும் இடையாலே
சாரஞ் சார்விலனுய நேகங் காயமன் மீறு
காலந் தாமெனுழி வேது உரையாயோ
பாலம் பால்மண நாறு காலங் கே‡யிறி லாத
† மாதம் பாதரு சேய வயலூரா
பாடம் பார்திரி சூல நீடந் தாகர வீர
பாசந் தாதிரு மாலின் மருகோனே
வேலம் பார்குற மாது மே||லும் பார்தரு மாது
வீறங் கேயிரு பாலு முறவீறு
வேதந் தாவபி ராம நாதந் தாவருள் பாவு
வேலங் காடுறை சீல பெருமாளே. (க)

தாத்தாதன தானன தானன
தாத்தாதன தானன தானன
தாத்தாதன தானன தானன தனதான.

576. கார்ச்சார்குழ லார்விழி யாரயி
லார்ப்பால்மொழி யாரிடை நூலெழு
வார்ச்சாரில நீர்முலை மாதர்கள் மயலாலே

*ஆழம்-கடல். ‡இறிலாத ஈறிலாத. †மாதப்பா மாதுஅம்பா. ||உம்பர்.

காழ்க்காதல தாமன மேமிக
வார்க்காமுக னுயுறு சாதக
பாப்பாதக னுமடி பேனினின் அருளாலே

பார்ப்பாயலே யோவடி யாரொடு
சேர்ப்பாயலே யோவுன தாருள்
கூர்ப்பாயலே யோவுமை யாள்தரு குமரேசா

பார்ப்பாவல ரோதுசொ லால்முது
நீர்ப்பாரினில் மீறிய கிரணை
யார்ப்பாரின தாமரு ளாலொர்சொல் அருள்வாயே

வார்ப்போரு ளேபொழி காரண
நேர்ப்†பாவச காரண மாமத
‡ஏற்பாடிக ளேயழி வேயுற அறைகோப

§வாக்காசிவ மாமத மேமிக
‖ஊக்காதிப யோகம தேயுறும்
¶ ஆத்தாசிவ பாலகு காவடி யர்கள்வாழ்வே

வேற்காடவல் வேடர்கள் மாமக
ளார்க்கார்வமன் மாமகி ழுதிரு
வேற்காடுறை வேதபுரீசுரர் தருசேயே

வேட்டார்மக வான்மக ளானவள்
ஏட்டார்திரு மாமண வாபொனி
நாட்டார்பெரு வாழ்வெனவேவரு பெருமாளே. (௨)

பாக்கம்.

இது திருவேற்காட்டிலிருந்து தென்கிழக்கே 6 மைல் துலைவிலிருக்கிறது.

தாத்தத்த தானதன தாத்தத்த தானதன
தாத்தத்த தானதன தனதான.

577. கார்க்கொத்த மேனிகடல் போற்சுற்ற மானவழி
காய்த்தொட்டொ ணுதவுரு ஒருகோடி

காக்கைக்கு நாய்கழுகு பேய்க்$கக்க மானவுடல்
காட்டத்தி னீளெரியில் உறவானிற்

காழ்-குற்றம். †பாவசகாரணமாம்-பாவத்துக்குத் துணைக்காரண
மாகிய. ‡ஏற்பாடிகள்-ஏற்பாடு செய்தவர்கள். §வாக்கா-வாக்குள்ளவனே.
‖ ஊக்காதிப-ஊக்கு ஆகிய ¶ ஆத்தா-கடவுளே. $ அக்கமான-கண்ணான.

கூர்ப்பித்த சூலனத ஞற்குத்தி யாவிகொடு
*போய்த்துக்க மானகுறை உடையோனைக்
கூப்பிட் †டு சாவருளி வாக்கிட்டு நாமமொழி
கோக்கைக்கு நூலறிவு தருவாயே
போர்க்கெய்த்தி டாமறலி போற்குத்தி மேவசுரர்
போய்த்திக்கெ லாமடிய வடிவேலாற்
பூச்சித்தர் தேவர்மழை போற்‡றூர்க்க வேபொருது
போற்றிச்செய் வார்சிறையை விடுவோனே
பார்க்கொற்ற நீறுபுனை வார்க்கொக்க ஞானபர
ஞய்ப்பத்தி கூர்மொழிகள் பகர்வாழ்வே
§பாக்கொத்தி ஞலியலர் நோக்கைக்கு வேல்கொடுயர்
பாக்கத்தில் மேவவல பெருமாளே. (க)

தாத்தத் தனந்ததந்த தாத்தத் தனந்ததந்த
தாத்தத் தனந்ததந்த தனதான.

578\. பாற்றுக் கணங்கள்தின்று தேக்கிட் டிடுங்குரம்பை
நோக்கிச் சுமந்துகொண்டு பதிதோறும்
பார்த்துத் திரிந்துழன்று ஆக்கத் தையுந்தெரிந்து
ஏக்கற் றுநின்றுநின்று தளராதே
வேற்றுப் புலன்களைந்து மோட்டிப் புகழ்ந்துகொண்டு
கீர்த்தித் துநின்பதங்கள் அடியேனும்
வேட்டுக் கலந்திருந்து ஈட்டைக் கடந்துநின்ற
வீட்டிற் புகுந்திருந்து மகிழ்வேனே
மாற்றற் றபொன்றுலங்கு வாட்சக் கரந்தெரிந்து
வாய்ப்புற் றமைந்தசங்கு ‖தடிசாப
மாற்பொற் கலந்துலங்க ¶ நாட்டச் சுதன்பணிந்துய்
வார்க்கத் தன்முன்புசென்று திரைமோதும்
$பாற்சொற் றடம்புகுந்து வேற்கட் சினம்பொருந்து
** பாய்க்குட் டுயின்றவன்தன் மருகோனே.

---

* போய்-போக. † உசா - ஆராய்ச்சி. ‡ தூர்க்க-தூர்க்க, பொழிய. § பாக்கொத்து - பாமாலை ‖ தடிசாபம்-தண்டம், வில். ¶ நாட்டச்சுதன் - நாட்டு அச்சுதன். $ பாற்சொற்றடம்-பாற்கடல் ** பாய் சர்ப்பசயனம்.

பாக்குக் கருப்பைகொண்டை தாக்கிற் றடம்படிந்த
பாக்கத் தமர்ந்திருந்த பெருமாளே. (௨)

கோசைநகர்.

இது சென்னையிலிருந்து மேற்கே 6 மைல் துலைவிலிருக்கிறது.

தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன தனதான.

579. ஆதவித பாரமுலை மாதரிடை நூல்வயிற
தாலிலையெ னுமதன கலைலீலை
ஆயவினை வானகுழி ஆனதிரி கோணமதி
லாசைமிக வாயடியன் அலையாமல்
நாதசத கோடிமறை யோலமிடு நூபுரமு
ஞனபத மாமலரை நலமாக
நானுனிதி னுதினமு மேநினைய வேகிருபை
நாடியரு ளேயருள வருவாயே
சீதமதி யாடரவு பேராறு மாவிறகு
சீதசல மாசடில பரமேசர்
சீர்மைபெற வேயுதவு கூர்மைதரு வேலசிவ
சீறிவரு மாவசுரர் குலகாலா
கோதைகுற மாதுகுண தேவமட மாதுமிரு
பாலுமுற வீறிவரு குமரேசா
கோசைநகர் வாழவரு மீசபவ நாசசரு
வேசமுரு காவமரர் பெருமாளே. (௧)

திருவலிதாயம்.

இது அம்பத்தூர் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கு 1 மைல் துலைவிலுள்ளது.

தனதைய தானதன தனதான.

580. மருமல்லி யார்குழலின் மடமாதர்
மருளுள்ளி நாயடியன் அலையாமல்
இருநல்ல வாகுமுன தடிபேண
இனவல்ல மானமன தருளாயோ

கருநெல்லி மேனியரி மருகோனே
கனவள்ளி யார்கணவ முருகேசா
திருவல்லி தாயமதில் உறைவோனே
திகழ்வல்ல மாதவர்கள் பெருமாளே. (க)

குறட்டி.

இது திருவல்லிதாயத்திலிருந்து கிழக்கே ½ மைல் தூலவிலிருக்கிறது.

தானதன தத்ததான தானதன தத்ததான
தானதன தத்ததான தனதான.

581. நீரிழிவு குட்டமீளை வாதமொடு பித்தமூல
நீள்குளிர்வெ துப்புவேறு முளநோய்கள்
நேருறுபு ழுக்கள்கூடு நான்முகனெ டுத்தவீடு
நீடியவி ரத்தமூளை தசைதோல்சீ
பாரியந வத்துவார நாறுமும லத்திலாரு
பாயப்பிணியி யற்றுபாவை நரிநாய்பேய்
† பாறெருடுக ழுக்கள்கூகை நாமிலைவு சிப்பதான
பாழுடலெ டுத்துவீணில் உழல்வேனோ
நாரணிய றத்திநாரி ஆறுசம யத்திபூத
நாயகரி டத்துவாமி மகமாயி
நாடகந டத்திகோல நீலவரு ணத்திவேத
நாயகியு மைச்சிநீல திரிசூலி
வாரணிமு கைச்சிஞான பூரணிக லைச்சிநாக
வாணுதல ளித்தவீர மயிலோனே
மாடமதில் முத்துமேடை கோபுரம ணத்தசோலை
வாகுளகு றட்டிமேவு பெருமாளே. (உ)

திருவடமுல்லைவாயில்.

இது ஆவடி ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கு 3 மைல் தூலவிலிருக்கிறது.

தனதைய தானனதானன தனதைய தானனதானன
தனதைய தானனதானன தனதான.

582. அணிசெவ்வி யார்திரைசூழ்புவி தன ‡ நிவ்வியேகரை யேறிட
அறிவில்லி யாமடியேனிட ரதுதீரா

† பாறு - பருந்து. ‡ நிவ்வி - நீங்கி.

அருள்வல்லை யோநெடுநாளினு மிருளில்லை விடுவோவுன
அருளில்லை யோவினமானவை அறியேனே

குணவில்ல தாமகபேரினை அணிசெல்வி யாயருணசல
குருவல்ல மாதவமேபெறு *குணசாத

குடிலில்ல மேதருநாளெது மொழிநல்ல யோகவரோபணி
குணவல்ல வாசிவனேசிவ குருநாதா

பணிகொள்ளி மாகணபூதமொ டமர்கள்ளி கானகநாடக
பரமெல்லி யார்பரமேஸ்வரி தருகோவே

படரல்லி மாமலர்பாணம துடைவில்லி மாமதனாரை
பரிசெல்லி யார்மருகாசுர முருகேசா

மணமொல்லை யாகிநகாகந தனவல்லி மோகனமோடமர்
மகிழ்தில்லை மாநடமாடினர் அருள்பாலா

மருமல்லி மாவனநீடிய பொழில்மெல்லி காவனமாடமை
வடமுல்லை வாயிலில்மேவிய பெருமாளே. (௧)

தையதன தானதந்தன தையதன தானதந்தன
தையதன தானதந்தன தனதான.

583. மின்னிடைக லாபதொங்கலொ டன்னமயில் நாணவிஞ்சியர்
மெல்லியர்கு ழாமிசைந்தொரு தெருமீதே

பெள்ளவுமு லாவிபிங்கித சொல்குயில்கு லாவிநண்பொடு
வில்லியல்†பு ரூரகண்கணை தொடுமோக

கன்னியர்கள் போலிதம்பெறு மின்னணிக லாரகொங்கையர்
கண்ணியில்வி ழாமலன்பொடு பதஞான

கண்ணியிலு ளாக சுந்தர பொன்னியல்‡ப தாரமுங்கொடு
§கண்ணுறுவ ராமலின்பமொ டெனையாள்வாய்

சென்னியிலு டாடிளம்பிறை வன்னியும ராவுகொன்றையர்
செய்மணிகு லாவுமெந்தையர் குருநாதா

*குணசாதகுடில்-குணம் பிறக்குமிடம். †புரூரம்-புருவம் ‡பதாரம்-பாதத்திற் சாத்தியமாலை. § கண்ணுறு-கண்ணூறு, திருஷ்டிதோஷம்.

செம்முகவி ராவணன் தலை விண்ணுறவில் வாளியுந்தொடு
தெய்விகபொ ளுழிவண்கையன் மருகோனே
துன்னியெதிர் சூரர்மங்கிட சண்முகம தாகிவன்கிரி
துள்ளிடவெ லாயுதந்தனை விடுவோனே
சொல்லுமுனி வோர்தவம்புரி முல்லைவட வாயில்வந்தருள்
துல்யபர ஞானவும்பர்கள் பெருமாளே. (உ)

திருவாலங்காடு.

இது மனலூர் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே 3 மைல் தூலைவிலுள்ளது.

தனதானந் தானன தானன தனதானந் தானன தானன
தனதானந் தானன தானன தனதான.

584\. கனவாலங் கூர்விழி மாதர்கள் மனசாலஞ் சால்பழி காரிகள்
கனமாரம் போருக மாமிணை முலைமீதே
கசிவாருங் *கிறுகி ளாலுறு வசைகாணுங் †காளிம வீணிகள்
களிகூரும் பேயமு தாணிடு கசுமாலர்
மனமோசங் கூர்மக பாவிகள் மதுவார்சங் கீதவி னோதிகள்
மருளாருங் காதலர் மேல்விழு மகளீர்வில்
மதிமடஞ் சேர்பவர் காதலில் மகிழ்கூருர் பாழ்மனம்வாரிச
மலர்பேணுன் தாளுன வேயருள் அருளாயோ
தனதானந் தானன தானன எனவேதங் கூறுசொல் மீறளி
ததைசேர்தண் பூமண மாலிகை அணிமார்பா
தகரேறங் காரச மேவிய குகவீரம் பாகும ராமிகு
தகைசாலன் பாரடி யார்மகிழ் பெருவாழ்வே
தினமாயன் பாபுன மேவிய தனிமானின் தோளுட னாடிய
தினைமாவின் பாவுயர் தேவர்கள் தலைவாமா
திகழ்வேடங் காளியொ டாடிய செகதீசங் கேசந டேசுரர்
திருவாலங் காடினில் வீறிய பெருமாளே. (க)

*கிறுகளால்-கிறுக்ன்ற கின்றுகளால். †காளிமம்-கறுப்பு.

தந்தானந் தாத்தந் தனதன
தந்தானந் தாத்தந் தனதன
தந்தானந் தாத்தந் தனதன தனதான.

585. பொன்றாமன் றாக்கும் புதல்வரும்
நன்றாமன் றார்க்கின் றுறுதுணை
பொன்றானென் றாட்டம் பெருகிய புவியூடே

பொங்காவெங் கூற்றம் பொதிதரு
சிங்காரஞ் சேர்த்திங் குயரிய
புன்கூடொன் றாய்க்கொண் டுறைதரு முயிர்கோல

நின்றாணின் றேத்தும் படிநினை
வுந்தானும் போச்சென் றயர்வற
*நிந்தாகும் பேச்சென் பதுபட நிகழாமுன்

நெஞ்சாலஞ் சாற்பொங் கியவினை
விஞ்சாதன் பாற்சென் றகலிட
நின்தாள்தந் தாட்கொண் டருள்தர நினைவாயே

குன்றால்விண் டாழ்க்குங் குடைகொடு
கன்றான்முன் காத்துங் குவலைய
முண்டார்கொண் டாட்டம் பெருகிய மருகோனே

கொந்தார்பைந் தார்த்திண் குயகுற
மின்தாள்சிந் தாச்சிந் தையில்மயல்
கொண்டேசென் றாட்கொண் டருளென மொழிவோனே

அன்றாலங் காட்டண் டருமுய
நின்றாடுங் கூத்தன் திருவருள்
அங்காகும் பாட்டின் பயனினை அருள்வாழ்வே

அன்பால்நின் தாட்கும் பிடுபவர்
தம்பாவம் தீர்த்தம் புவியிடை
அஞ்சாநெஞ் சாக்கந் தரவல பெருமாளே. (௨)

* நிந்தாகும்-நிந்தையாகும்.

தனதன தானந் தாத்த தனதன தானந் தாத்த
தனதன தானந் தாத்த தனதான.

586. வடிவது நீலங் காட்டி முடிவுள காலன் கூட்டி
வரவிடு தூதன் கோட்டி விடுபாசம்
மகவொடு மாமன் பாட்டி முதலுற வோருங் கேட்டு
மதிகெட மாயந் தீட்டி உயிர்போமுன்
படிமிசை தாளுங் காட்டி உடலுறு நோய்பண் டேற்ற
பழவினை பாவந் தீர்த்துன் அடியேனைப்
பரிவொடு நாளுங் காத்து விரிதமி ழாலங் கூர்த்த
பரபுகழ் பாடென் றாட்கொ டருள்வாயே
முடிமிசை சோமன் சூட்டி வடிவுள ஆலங் காட்டில்
முதிர்நட மாடுங் கூத்தர் புதல்வோனே
முருகவிழ் தாருஞ் சூட்டி ஒருதனி வேழங் கூட்டி
முதல்மற மானின் சேர்க்கை மயல்கூர்வாய்
இடியென வேகங் காட்டி நெடிதரு சூலந் தீட்டி
எதிர்பொரு சூரன் தாக்க வரவேகி
இலகிய வேல்கொண் டார்த்து உடலிரு கூறன் றாக்கி
இமையவ ரேதந் தீர்த்த பெருமாளே. (௩)

வெள்ளிகரம்.

இது வேப் பண்டாபிலிருந்து வடக்கே 12 மைல் தூலவிலிருக்கிறது.

தனதன தனன தனதன தனன
தையன தத்தந்த தனதான.

587. அடலரி மகவு விதிவழி ஒழுகு
மைவரு மொய்க்குரம்பை உடனாளும்
அலைகட லுலகி லலம்வரு கலக
ஐவர்த மக்குடைந்து தடுமாறி
இடர்படு மடமை உளமுறை உடலொ
டெல்லைவி டப்ரபஞ்ச மயல்தீர
எனதற நினது கழல்பெற மவுன
எல்லைகு றிப்பதொன்று புகல்வாயே

வடமணி முலையு மழகிய முகமும்
வள்ளையெ னத்தயங்கும் இருகாதும்

மரகத வடிவு மடலிடை எழுதி
வள்ளிபு னத்தில் நின்ற மயில்வீரா

விடதர திருண ரசபிதர் நிமலர்
வெள்ளிம லைச்சயம்பு குருநாதா

விகசித கமல பரிபுர முளரி
வெள்ளிக ரத்தமர்ந்த பெருமாளே.

தனதன தைய தனதன தைய
தனதன தைய தனதான.

588. குவலய மல்கு †தவலிகள் முல்லை
குளிர்நகை சொல்லு முதுபாகு

குழையிள வள்ளை இடைசிறு வல்லி
குயமுலை கொள்ளை ‡விழைமேவி

கவலைசெய் வல்ல தவலரு முள்ள
§கலவியில் தெள்ளு கவிமாலை

கடிமல ரைய அணிவன செய்ய
கழலிணை பைய அருள்வாயே

தவநெறி உள்ளு சிவமுனி துள்ளு
தனியுழை புள்ளி உடனாடி

தருபுன வள்ளி மலைமற வள்ளி
தருதினை மெள்ள நுகர்வோனே

அவநெறி சொல்லு மவரவை கொல்லு
மழகிய வெள்ளி நகர்வாழ்வே

அடையலர் செல்வ மளறிடை செல்ல
அமர்செய வல்ல பெருமாளே. (உ)

†தவலிகள்-குறைவானவர்கள். ‡விழைமேவி-விரும்பிமேவி. §கலவியிலும்

589. பொருவன கள்ள இருகயல் வள்ளை
புரிகுழை தள்ளி விளையாடும்
புளகித வல்லி இளகித வல்லி
புரியிள முல்லை நகைமீதே
உருகிட உள்ள விரகுடை உள்ள
முலகுயி ருள்ள பொழுதேகின்
றுமைதரு செல்வ னெனமிகு கல்வி
உணர்வொடு சொல்ல உணராதே
மருவலர் வள்ளி புமுள வள்ளி
மலைமற வள்ளி மணவாளா
வளர்புவி எல்லை அளவிடு தொல்லை
மரகத நல்ல மயில்வீரா
அருவரை விள்ள அயல்விடு மள்ள
அணிவயல் வெள்ளி நகர்வாழ்வே
அடையலர் செல்வ *மளறிடை செல்ல
அமர்செய வல்ல பெருமாளே. (௩)

தைய தைய தைய தைய தைய தைய தனதான.

590. கள்ள முள்ள வல்ல வல்லி கையி னள்ளி நிதியீய
†கல்லு நெல்லு வெள்ளி தெள்ளு கல்வி செல்வர் கிளைமாய
அள்ளல் துள்ளி ஐவர் செல்லு மல்லல் சொல்ல முடியாதே
‡ஐய ரைய மெய்யர் மெய்ய ஐய செய்ய கழல்தாராய்
வள்ளல் புள்ளி நவ்வி நல்கு வள்ளி கிள்ளை மொழியாலே
மைய லெய்து மைய செய்யில் வையில் வெள்வ ளைகளேற
மெள்ள மள்ளர் கொய்யு நெல்லின் §வெள்ள வெள்ளி நகர்வாழ்வே
வெய்ய ||சைய வில்லிசொல்லை வெல்ல வல்ல பெருமாளே. (௪)

---

*அளறு-நரகம். †கல்லு-நவமணிகள். ‡ஐயர்ஐய.முனிவர்க்கு முனிவனே. §வெள்ளம்.மிகுதி. ||சையவில்லி-மலையாகிய வில்லையுடையவர்.

591. தொய்யில் செய்யில் *நொய்யர் கையர் தொய்யுமைய இடையாலும்
துள்ளி வள்ளை தள்ளி உள்ளல் சொல்லு கள்ள விழியாலும்
மைய செவ்வி மவ்வல் முல்லை மல்கு நல்ல குழலாலும்
மையல் கொள்ள எள்ளல் செய்யும் வல்லி சொல்லை மகிழ்வேனே
செய்ய துய்ய புள்ளி நவ்வி செல்வி கல்வ ரையிலேனல்
தெய்வவள்ளி மையல்கொள்ளி செல்வ பிள்ளை முருகோனே
மெய்யர் மெய்ய பொய்யர் பொய்ய வெள்ளை வெள்ளி நகர்வாழ்வே
வெய்ய சைய வில்லி சொல்லை வெல்ல வல்ல பெருமாளே. ()

தையதன தான தையதன தான
தையதன தானந் தனதான.

592. இல்லையென நாணி உள்ள தின்மரும
வெள்ளினள வேனும் பகிராதை
எவ்வமென நாடி உய்வகையி லேனை
எவ்வகையு நாமங் கவியாகச்
சொல்லவறி யேனை எல்லைதெரி யாத
தொல்லைமுத லேதென் றுணரேனைத்
தொய்யுமுடல் பேணு பொய்யனைவி டாதுன்
துய்யகழ லாளுந் திறமேதோ
வல்லசுரர் மாள நல்லசுரர் வாழ
மையவரை பாகம் படமோது
மையுலவு சோலை செய்யகுளிர் சாரல்
வள்ளிமலை வாழுங் கொடிகோவே
வெல்லுமயி லேறு வல்லகும ரேச
வெள்ளிலுட னீபம் புனைவோனே
வெள்ளிமணி மாட மல்குதிரு வீதி
வெள்ளிநகர் மேவும் பெருமாளே. (௫)

நொய்யர் - தளருந்தன்மை யுடையோர்.

593. பையரவு போலு நொய்யவிடை மாதர்
பையவரு கோலந் தனைநாடிப்

பையலென ஓடி மையல்மிகு மோக
பவ்வமிசை வீழுந் தனிநாயேன்

உய்யவொரு கால மையவுப தேச
மூனருக நாடும் படிபேசி

உள்ளதுமி லாதும் அல்லதவி ரோதம்
*ஒவ்வுறுவி னோதந் தருவாயே

வையமுழு தாளு மையருமரேச
வள்ளிபடர் கானம் புடைசூழும்

வள்ளிமலை வாழும் வள்ளிமண வாள
மையுததி ஏழுங் கனல்மூள

வெய்யநிரு தேசர் சையமுடன் வீழ
வெல்லயிலி னூல்முன் புரிவோனே

வெள்ளிமணி மாட மல்குதிரு வீதி
வெள்ளிநகர் மேவும் பெருமாளே. (எ)

தனனதனுதன தனனதனுதன தன்னதனத்ததந்த
தானுதன தானந்தானன தந்ததான.

594. வதனசரோருக நயனசிலீமுக வள்ளிபுனத்தில்நின்று
வாராய்பதி நீயிங்கேதனி என்செய்வாயோ

மதசரமாகொடி தெனவொருகாவிடை வல்லபமற்றழிந்து
மாலாய்மட லேறுங்காமுக எம்பிரானே

†இதவியகாணிவை ‡சுதையென §வேடுவ னெய்திடுமெச்சில்தின்று
||லீலாசல மாடுந்தூயவன் மைந்தநாளும்

ஒவ்வுறு-ஒத்த. †இதவிய-இதமுள்ளன. ‡சுதையென-அமுதொத்தன வென்று § வேடுவன்-கண்ணப்பர். ||லீலாசலம்-அருள்விளையாடற் கடல்,

இளையவழுதுரை மலைகிழவோ னென * வெள்ளமெனக்கலந்து
நூறுயிர பேதந் † சாத ‡ மொ ழிந்தவாமா

கதைகன § சாபதி கிரிவளைவாளொடு கைவசிவித்தநந்த
கோபாலம பென்தேவிம கிழ்ந்துவாழக்

கயிறொ || டுலூகல முருளவுலாவிய கள்வன றப்பயந்து
ஆகாயக பாலம்பிறநி மிர்ந்துநீள

விதரணமாவலி வெருவவொரேபடி $ வெள்ளவெளுக்கநின்ற
நாராயண ¶ மாமன் சேயைமு னிந்தகோவே

விளைவயலூடிடை வளைவிளையாடிய வெள்ளிநகர்க்கமர்ந்த
வேலாயுத மேவுந்தேவர்கள் தம்பிரானே. (அ)

திருவல்லம்.

இது வேலூரிலிருந்து கிழக்கே 8 மைல் தூலவிலிருக்கிறது.

தனதனதானந் தனதனதானந் தனதனதானந் தனதான.

595. நசைபொடுதோலுந் தசைதுருநீரும் நடுநடுவேயென் புறுசீலும்
நலமுறவேயொன் றிடவிருகால்நன் றுறநடையாருங் குடிலூடே

விசையுறுகாலம் புலனெறியேவெங் கனலுயிர்வேழந் திரியாதே
விழுமடியார்முன் பழுதறவேள்கந் தனுமெனவோதும் விரல்தாராய்

இசையுறவேயன் றசைவறவூதும் எழிலரிவேழம் எனையாளென்
றிடர்கொடுமூலந் தொடர்வுடனோதும் இடமிமையாமுன் வருமாயன்

திசைமுகனுருந் திசைபுவிவானுந் திரிதரவாழுஞ் சிவன்மூதூர்
தெரிவையர் தாம்வந் தருநடமாடுந் திருவலமேவும் பெருமாளே.

---

*வெள்ளமெனக்கலந்து நீரும்நீரும்சேர்ந்தாற்போலக்கலப்புற்று. †சாதம்-பிறவி. ‡ஒழிந்தவா-ஒழித்தவா §சாபதிகிரி-வில் சக்கரம். ||உலூகலம்-உரல் $வெள்ளவெளுக்க-வெள்ளொளிபரவ ¶மாமன் சேயை-பிரமனை;

வேலூர்.

இது திருவல்லம் ஸ்டேஷனிலிருந்து மேற்கே 8 மைல் தூலவிலிருக்கிறது.

தனன தாத்தன தானு தானன
தனன தாத்தன தானு தானன
தனன தாத்தன தானு தானன தந்ததான.

596. அதிக ராய்ப்பொரு ளீவார் நேர்படில்
*ரசனை காட்டிக ளியார் கூடினும்
அகல வோட்டிகள் மாயா ரூபிகள் நண்புபோலே
அசட ராக்கிகள் மார்மே லேபடு
முலைகள் காட்டிகள் கூசாதே விழும்
அழகு காட்டிக ளாரோ டாகினும் அன்புபோலே
சதிர தாய்த்திரி மாயா வேசிகள்
கருணை நோக்கமி லாமா பாவிகள்
கரு†மு பேட்சைசெய் தோஷா தோஷிகள் நட்பொழுத
சரச வார்த்தியி னாலே வாதுசெய்
விகா மாக்கிவி டாமூ தேவிகள்
தகைமை நீத்துன தாளே சேர்வது எந்தநாளோ
மதுரை நாட்டினி லேவாழ் வாகிய
§அருகர் வாக்கினி லேசார் வாகிய
$வழுதி பேற்றிரு நீறே பூசிநி மிர்ந்துகூனும்
மருவுமாற் றெதிர் வீறே டேறிட
¶அழகி போற்றிய சீரூலாகிய
மகிமை யாற்சமண் வேரோ டேகெட வென்றகோவே
புதிய மாக்கனி வீழ்தே னூறல்கள்
பகலி ராத்திரி ஓயா ஆலைகள்
புரள மேற்செல வூரூர் பாயவ ணைந்துபோதும்
புகழி னூற்கடல் சூழ்பார் மீதினி
லளகை போற்பல வாழ்வால் வீறிய
புலவர் போற்றிய வேலூர் மேவிய தம்பிரானே. (க)

---

*ரசனை-இலங்காரம் ‡உபேட்சை-அசட்டை. §வழுதி-பாண்டியன். $அருகர்-சமணர். ¶அழகிபோற்றிய-மங்கைக்கரசியார் போற்ற.

தானனதந்ததந்த தானனதந்ததந்த
தானனதந்ததந்த தனதான.

597\. சேலாலமொன்றுசெங்கண் வேலாலும்வென்றுமைந்தர்
சீர்வாழ்வுசிந்தைகொன்ற *முதல்நாடி
தேன்மேவு செஞ்சொலின்சொல் தானேநிவந்தணைந்து
தீராததுன்பவின்பம் உறுமாதர்
கோலாகலங்கள்கண்டு மாலாகிநின்றனன்பு
கூராமல்மங்கியங்கம் அழியாதே
கோள்கோடி பொன்றவென்று நாடோறுநின்றியங்கு
கூர்வாய்மைகொண்டிறைஞ்ச அருள்தாராய்
மாலானுமுன்றணங்கை யார்மாமதன்கரும்பின்
வாகோடழிந்தொடுங்க செயல்நாடி
வாழ்வானகந்தமுந்த மாறாகிவந்தடர்ந்த
மாசூர்குன்றவென்றி மயிலேறி
மேலாகுமொன்றமைந்த மேனாடர்நின்றிரங்க
வேலாலெறிந்துகுன்றை மலைவோனே
வேய்போலவுந்திரண்ட தோள்மாதர்வந்திறைஞ்சு
வேலூர்விளங்கவந்த பெருமாளே. (௨)

விரிஞ்சிபுரம்.

இது வேலூரிலிருந்து மேற்கே 8 மைல் தூலவிலிருக்கிறது.

தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத் தனதனத் தனதனத் தனதான.

598\. ஒருவரைச் சிறுமனைச் சயனமெத் தையினில்வைத்
தொருவரைத் தமதலைக் கடையினிற் சுழலவிட்
டொருவரைப்பரபரப்பொடுதெருத் திரியவிட் டதனாலே
ஒருவருக் கொருவர் ‡சக் களமையிற் சருவவிட்
டுருவுபத் திரமெடுத் தறையின்மற் புரியவிட்
டுயிர்பிழைப் பதுகருத் தளவினுச் சிதமெனச் செயுமாதர்

*முதல் நாடி-பண அவா கொண்டு. ‡சக்களமை-மனவிரோதம்.

தருமயற் ப்ரமை.தனிற் றவநெறிக் கயலெனச்
சரியையிற் கிரியையிற் றவமுமற் றெனதுகைத்
தனமவத் தினிலிறைத் தெவருமுற் றிகழ்வுறத் திரிவேனைச்

சகலதுக் கமுமறச் சகலசற் குணம்வரத்
தரணியிற் புகழ்பெறத் தகைமைபெற் றுனதுபொற்
சரணமெப் பொழுதுநட் பொடுநினைத் திடவருட் டருவாயே

குருமொழித் தவமுடைப் * புலவரைச் சிறையில்வைத்
தறவுமுக் கிரட்விளைத் திடுமரக் கரைமுழுக்
கொடியதுர்க் குணவவத் தரைமுதற் றுரிசறுத் திடும்வேலா

குயில்மொழிக் கயல்விழிக் துகிரிதழ்ச் சிலைநுதற்
சசிமுகத் திளநகைக் கனகுழற் றனகிரிக்
கொடியிடைப் பிடிநடைக் குறமகட் டிருவிணைப் புணர்வோனே

கருதுசட் சமயிகட் கமைவுறக் ‡ கிறியுடைப்
பறிதலைச் சமணரைக் குலமுதற் பொடிபடக்
கலகமிட் டுடனுயிர்க் கழுவினுச் சியினில்வைத் திடுவோனே

கமுகினிற் குலையறக் கதலியிற் கனியுகக்
கழையின்முத் தமுதிரக் கயல்குதித் துலவுநற்
கனவயற் றிகழ்திருக் † கரபுரத் தறுமுகப் பெருமாளே. (௧)

தனதனன தான தனதனன தான
தனதனன தான தனதான.

599. குலையமயி ரோதி குவியவிழி வீறு
குருகினிசை பாடி முகமீதே
குறுவியர்வு லாவ அமுதினினி தான
குதலையுமொ ராறு படவேதான்
பலவிதவி னோத முடனுபய பாத
பரிபுரமு மாட அணைமீதே
பரிவுதரு மாசை விடமனமொ வாத
பதகனையு மாள நினைவாயே

புலவர்-தேவர். ‡கிறி-பொய். † கரபுரம் என்பது விரிஞ்சிபுரம்.

சிலைமலைய தான பரமர் தரு பால
*சிகிபரிய தான குமரேசா
திருமதுரை மேவு மமணர் குல மான
திருடர் கழு வேற வருவோனே
கலின் வடிவ மான அகலிகைபெ ணான
கமலபத மாயன் மருகோனே
கழனிநெடு வாழை கமுகொடிய மோது
காபுரியில் வீறு பெருமாளே. (௨)

600. அழகுபெறு மோலை மருவுமிரு காதை
அடருமய லான விழியாலே
அவனியிட ராகு மனதுதடு மாறி
அலையவிடு மாதர் மயலாலே
உழலைபடு நாளு மழலில்மெழு காக
உருகிவிடொ ணாத படிதானே
உனதுபத மான கமலமலர் நாளு
முறையுமிட மாக அருள்வாயே
பொழியுமழை யாக மனமுருகு வார்கள்
புகழ்கவிதை மாலை புனைவோனே
புரதகன ராதி கயிலைமலை வாணர்
புதல்வகும ரேச வடிவேலா
கழையினிசை ஊது மரிமருக மேனி
கதிரனைய சோதி உடையோனே
கழனிநெடு வாளை கமுகொடிய மோது
காபுரியில் வீறு பெருமாளே. (௩)

தனனதந்த தானன தனனதந்த தானன
தனனதந்த தானன தனதான.

601. நிகரில்பஞ்ச பூதமு நினையுநெஞ்சு மாவியு
நெகிழவந்து நேர்படு †மவிரோதம்
நிகழ்தரும்ப்ர பாகர நிரவயம்ப ராபர
நிருபவங்கு மாரக னனவேதம்

*சிகிபரி-மயிற்குதிரை. †அவிரோதம்-விரோதமின்மை.

சகாசங்க சாகர மெனமுழங்கு வாதிகள்
சமயபஞ்ச பாதகர் அறியாத

தனிமைகண்ட தானகின் கினியதண்டை சூழ்வன
சரணபுண்ட ரீகம தருள்வாயே

மகாவிம்ப சீகர முகரவங்க வாரிதி
மறுகிவெந்து வாய்விட நெடுவான

வழிதிறந்து சேனையு மெதிர்மலைந்த சூரனு
மடியவிந்தி ராதிபர் குடியேறச்

சிகரதுங்க மால்வரை தகரவென்றி வேல்விடு
சிறுவசந்த்ர சேகரர் பெருவாழ்வே

திசைதொறும்ப்ர பூபதி திசைமுகன்ப ராவிய
திருவிரிஞ்சை மேவிய பெருமாளே (ச)

தனன தனனதத் தனன தனனதத்
தனன தனனதத் தனன தனனதத்
தனன தனனதத் தனன தனனதத் தனதான.

602. பரவி உனதுபொற் கரமு முகமுமுத்
தணியு முரமுமெய்ப் ரபையு மருமலர்ப்
பதமும் விரவுகுக் குடமு மயிலுமுட் பரிவாலே

படிய மனதில்வைத் துறுதி சிவமிகுத்
தெவரு மகிழ்வுறத் தரும நெறியின்மெய்ப்
பசியில் வருமவர்க் *கசன மொருபிடிப் படையாதே

சருவி இனியநட் புறவு சொலிமுதற்
பழகு மவரெனப் பதறி அருகினிற் ·
சரச விதமளித் தரிய பொருள்பறித் திடுமோனர்

தமது மருகமதக் களப புளகிதச்
சயில நிகர்தனத் திணையின் மகிழ்வுறத்
தழுவி அவசமுற் றுருகி மருளெனத் திரிவேனோ

கரிய நிறமுடைக் கொடிய அசுரரைக்
கெருவ மதமொழித் துடல்கள் துணிபடக்
கழுகு பசிகெடக் கடுகி அயில்விடுத் திடுதீரா

*அசனம்-அன்னம்.

கமல அயனுமச் சுதனும் வருணனைக்
கினியு நமனுமக் *கரியினுறையு †மெய்க்
கணனு மமரரத் தனையு நிலைபெறப் புரிவோனே

இரையு ‡முததியிற் கடுவை மிடறமைத்
தழுவை §அதளுடுத் தரவு பணிதரித்
திலகு பெறநடிப் பவர்மு னருளுமுத் தமவேளே

இசையு மருமறைப் பொருள்கள் தினமுரைத்
தவனி தனிலெழிற் கரும முனிவருக்
கினிய கரபுரப் பதியி லறுமுகப் பெருமாளே. (ரு)

தனனதந்த தான தனனதந்த தான
தனனதந்த தான தனதான.

603. மருவுமஞ்சு பூத முரிமைவந்தி டாது
மலமிதென்று போட அறியாது

மயல்கொளிந்த வாழ்வு அமையுமெந்த நாளும்
வகையில்வந்தி ராத அடியேனும்

உருகியன்பி னோடு உனைநினைந்து நாளும்
உலகமென்று பேச அறியாத

உருவமொன்றி லாத பருவம்வந்து சேர
உபயதுங்க பாத மருள்வாயே

அரி ||விரிஞ்சர் தேட அரியதம்பி ரானும்
அடி பணிந்து பேசி மறைமூலம்

அருளுகென்ற போது பொருளிதென்று காண
அருளுமைந்த ஆதி குருநாதா

தரியுமும்பர் நீடு கிரிபிளந்து சூரர்
செருவடங்க வேலை விடுவோனே

செயலமைந்த வேத தொனிமுழங்கு வீதி
திருவிரிஞ்சை மேவு பெருமாளே (௬)

*கரி வெள்ளையானை. †மெய்க்கணன் - அங்கமெல்லாங் கண்ணுள்ள இந்திரன். ‡உததி-கடல் §அதள் தோல். ||விரிஞ்சன்-பிரமன்.

திருவோத்தூர்.

இது காஞ்சீபுரத்திலிருந்து மேற்கே 20 மைல் தூலையிலிருக்கிறது

தனனத் தானனதானந் தனனத் தானனதானந்
தனனத் தானனதானந் தனதான.

604. *தவர்வாட் ||டோமரசூலந் தரியாக் காதியசூரும்
தனியாச் சாகரமேழுங் கிரியேழும்
சருகாக் காய்கதிர்வேலும் பொருகாற் சேவலுநீலந்
தரிகூத் தாடியமாவுந் தினைகாவல்
துவர்வாய்க் கானவர்மானுஞ் சுரநாட் டாளொருதேனும்
துணையாத் தாழ்வறவாழும் பெரியோனே
துணையாய்க் காவல்செய்வாயென் றுணராப் பாவிகள்பாலும்
தொலையாப் பாடலையானும் புகழ்வேனோ
§பவமாய்த் தாணதுவாகும் பனைகாய்த் தேயனைநாறும்
பழமாய்ப் பார்மிசைவீழும் படிவேதம்
படியாப் பாதகர்பாயன் றியுடாப் பேதைகள்கேசம்
பறிகோப் பாளிகள்யாருங் கழுவேறச்
சிவமாய்த் தேனமுதூறுந் திருவாக் காலொளிசேர்வெண்
டிருநீற் றாலமராடுஞ் சிறியோனே
செழுநீர்ச் †சேய்நதி யாரங் கொழியாக் கோமளம் வீசுந்
திருவோத் தூர்தனில்மேவும் பெருமாளே (க)

திருமயிலை

இது திருவோத்தூரிலிருந்து கிழக்கே 8 மைல் தூலையிலிருக்கிறது.

தனன தனனதன தனன தனனதன
தனன தனனதன தனதான.

605. அமரு மமரரினி லதிக னயனுமரி
அவரும் வெருவவரும் அதிகாளம்
அதனை அதகரண விதன பரிபுரண
மமைய னவர்கரண அதிவேச

---

*தவர்-வில். || தோமரம்-இருப்புத்தண்டம். § பவமாய்த்து ஆணதுவாகும் எனப்பிரிக்க. †சேய்நதி சேயாறு. ‡ஆரங்கொழியா-முத்துக்கொழித்து.

நிமிர அருள்சரண நிபிட மதெனவுன
நிமிர சமிரமய நியமாய

நிமிட மதனிலுண வலசி லசுதவா
நினது பதவிதா வருவாயே

* சமர சமரசுர † அசுர விதரபா
‡ சரத விரதவயில் விடுவோனே

தகுர்த தகுர்தகிகு திகுர்த திகுர்தகிகு
தார ரரரரிரி தர்குதாத

எமர நடனவித மயிலின் முதுகில்வரு
மிமைய மகள்குமர எமதீச

இயலி னியல்மயிலை நகரி லினிதுறையு
மெமது பரகுரவ பெருமாளே. (௧)

தனனத் தனதன தனதான.

606\. அயிலொத் தெழுமிரு விழியாலே
அமுதொத் திடுமரு மொழியாலே

சயிலத் தெழுதுணை முலையாலே
தடையுற் றடியனு மடிவேனோ

கயிலைப் பதியரன் முருகோனே
கடலக் கரைதிரை அருகேசூழ்

மயிலைப் பதிதனில் உறைவோனே
மகிமைக் கடியவர் பெருமாளே. (௨)

தனதனதன தானனதந்தத் தனதான.

607\. அறமிலாவதி பாதகவஞ்சத் தொழிலாலே
அடியனேன்மெலி வாகிமனஞ்சற் றிளையாதே

திறல்குலாவிய சேவடி வந்தித் தருள்கூடத்
தினமுமேமிக வாழ்வுறு மின்பைத் தருவாயே

*சமரசமரசுர-பெருந்தன்மையுடைய தேவர்களுக்கு ஒற்றுமையான.
† அசுர இதரபர-பகைவராகிய கீழான அசுரர்மேல் ‡சரத-மெய்யனே.

59

விறல்நிசாசரர் சேனைகளஞ்சப் பொரும்வேலா
விமலமாதபி ராமிதருஞ்சற் புதல்வோனே
மறவர்வாணுதல் வேடைகொளும்பொற் புயவீரா
மயிலைமாநகர் மேவியகந்தப் பெருமாளே. (ரு)

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன தனதான.

608. இகல வருதிரை பெருகிய சலநிதி
நிலவு முலகினி லிகமுறு பிறவியி
னினிமை பெறவரு மிடருறு மிருவினை அதுதீர

இசையு முனதிரு பதமலர் தனைமன
மிசைய நினைகிலி இதமுற உனதரு
ளிவர உருகிலி அயர்கிலி தொழுகிலி உமைபாகர்

மகிழு மகவென அறைகிலி நிறைகிலி
மடமை குறைகிலி மதியுணர் வறிகிலி
வசன மறவுறு மவுனமொ டுறைகிலி மடமாதர்

மயம தடரிட இடருறு மடியனு
மிருமை தருமுன தடியவ ருடனுற
மருவ அருள்தரு கிருபையின் மகிழுவ தொருநாளே

சிகர தனகிரி குறமக ளினிதுற
சிலத நலமுறு சிலபல வசனமு
திறைய அறைபயி லறுமுக நிறைதரும் அருணீத

சிரண புரணவி தரணவி சிரவண
சரண சரவண பவகுக சயவெளி
திரவ பரவதி சிரமறை முடிவுறு பொருணீத

அகர உகரதி மகரதி சிகரதி
யகர அருளதி தெருளதி வலவல
அரண முரணுறு மசுரர்கள் கெடவயில் விடுவோனே

அழகு மிலகிய புலமையு மகிமையும்
வளமு முறைதிரு மயிலையி லுறைதின
மமரு மரகர சிவசுத அடியவர் பெருமாளே. (சு)

தனதனன தானதந்த தனதனன தானதந்த
தனதனன தானதந்த தனதான.

609. இணையதில தாமிரண்டு கயல்கனென வேபுரண்டு
இருகுழையின் மீதடர்ந்து அமராடி
இலகுசிலை வேள்துரந்த கணையதினு மேசிறந்த
இருநயனர் வாரிணங்கு மதிபார
பணைமுலையின் மீதணிந்த தரளமணி யார்துலங்கு
பருவரதி போலவந்த விலைமாதர்
பயிலுநடை யாலுழன்று அவர்களிட மோகமென்ற
படுகுழியி லேமயங்கி விழலாமோ
கணகனென வீரதண்டை சரணமதி லேவிளங்க
கலபமயில் மேலுகந்த குமரேசா
கறுவிவரு சூரனங்க மிருபிளவ தாகவின்று
கதறிவிழ வேலெறிந்த முருகோனே
மணிமகுட வேணிகொன்றை அறுகுமதி யாறணிந்த
மலையமிலி னாயகன்றன் ஒருபாக
மலையரையன் மாதுதந்த சிறுவனென வேவளர்ந்து
மயிலைநகர் வாழவந்த பெருமாளே. (ரு)

தனதனன தானதத்த தனதனன தானதத்த
தனதனன தானதத்த தனதான.

610. களபமணி யாரமுற்ற வனசமுலை மீதுகொற்ற
கலகமத வேள்தொடுத்த கணையாலும்
கனிமொழிமி னார்கள்முற்றி மிசைவகைகள் பேசவுற்ற
கனலெனவு லாவுபட்ட மதியாலும்
வளமையணி நீடுபுட்ப சயனவணை மீதுருக்கு
வனிதைமயல் நாடிநித்தம் நலியாதே
வரியளியு லாவதுற்ற இருடியம ளாவிவெற்றி
மலரணையில் நீயணைக்க வரவேணும்
துளபமணி மார்பசக்ர தரனிமு ராரிசர்ப்ப
துயிலதர னாதரித்த மருகோனே
சுருதிமறை வேள்விமிக்க மயிலைநகர் மேவுமுக்ர
தூரகதக லாபபச்சை மயில்வீரா

அளகைவணி கோர்குலத்தில் வனிதையுயிர் மீளழைப்ப
† அருள்பரவு பாடல்சொற்ற குமரேசா
அருவரையை நீறெழுப்பி நிருதர்தமை வேரறுத்து
அமரர்பதி வாழவைத்த பெருமாளே. (௬)

தனனதான தானன தனனதான தானன
தனனதான தானன தனதான.

611. கடியவேக மாருத விரதரூத ராபாதர்
கலகமேசெய் பாழ்மூடர் வினைவேடர்
கபடவீன ராகாத இயல்புநாடி யேநீடு
கனவிகார மேபேசி நெறிபேணுக்
கொடியனேது மோராது விரகசால மேமூடு
குடிலின்மேவி யேநாளு மடியாதே
குலவுதோகை மீதாறு முகமும்வேலு மீராறு
குவளைவாகும் நேர்காண வருவாயே
படியிலேடு மாமேரு அதிரவீசி யேசேட
பணமுமாட வேநீடு வரைசாடிப்
பரவையாழி நீர்மோத நிருதர்மாள வாளோடு
புதியதாக வேலேவு மயில்வீரா
வடிவுலாவி ஆகாச மிளிர்பலாவி னீள்சோலை
வனசவாவி பூவோடை வயலோடே
மணிசெய்மாட மாமேடை சிகரமோடு வாகான
மயிலைமேவி வாழ்தேவர் பெருமாளே. (எ)

தனனா தனதானன தனனா தனதானன
தனனா தனதானன தனதான.

612. திரைவார் கடல்சூழ்புவி தனிலே உலகோரொடு
திரிவே னுனையோதுதல் திகழாமே

மீளழைப்ப-மீள அழைப்ப. † இது திருமயிலாப்பூரில் எலும்பைப் பெண்ணாக்கிய திருஞானசம்பந்தசுவாமிகள் சரித்திரத்தைக் குறிப்பது.

தினநா ளுமுனேதுதி மனதா ரபினேசிவ
சுதனே ¹ திரிதேவர்கள் தலைவாமால்

வரைமா துமையாள்தரு மணியே குகனேயென
அறையா அடியேனுமுன் அடியாராய்

வழிபா டுறுவாரொடு அருளா தரமாயிடு
மகநா ளுளதோசொல அருள்வாயே

இறை † வா ரணதேவனு மிமையோரவ ரேவரு
மிழிவா கிமுனேயியல் இலராகி

இருளா மனதேயுற அசுரே சர்களேமிக
இடரே செயவேயவர் இடர்தீர

மறமா அயிலேகொடு உடலே இருகூறெழ
மதமா மிகுசூரனை மடிவாக

வதையே செயுமாவலி உடையா யழகாகிய
மயிலா புரிமேவிய பெருமாளே. (அ)

தனதன தனதன தாந்ததானன
தனதன தனதன தாந்ததானன
தனதன தனதன தாந்ததானன தனதான.

613. நிரைதரு மணியணி ஆர்ந்தபூரித
ம்ருகமத களபகில் சாந்துசேரிய
இளமுலை உரமிசை தோய்ந்து மாமலர் அணைமீதே

நெகிழ்தர அரைதுகில் வீழ்ந்து மாமதி
முகம்வெயர் வெழவிழி பாய்ந்து வார்குழை
ஓடுபொர இருகர மேந்து நீள்வளை ஒலிகூர

விரைமலர் செறிகுழல் சாய்ந்து நூபுர
மிசைதர இலவிதழ் மோந்து வாயமு
தியல்பொடு பெருகிய வாஞ்சை யேதக வியனோடும்

வினையனை இருவினை ஈண்டு மாழ்கட
லிடர்படு சுழியிடை தாழ்ந்து போமதி
இருகதி பெறவருள் சேர்ந்து வாழ்வது மொருநாளே

¹ திரிதேவர்கள்-மும்மூர்த்திகள். † வாரணதேவன்-இந்திரன்.

பரையபி னவைரிவை சாம்ப வியுமை
அகிலமு மருளரு ளேய்ந்த கோமளி
பயிரவி திரிபுரை ஆய்ந்த நூல்மறை சதகோடி
பகவதி இருசுட ரேந்து காரணி
மலைமகள் கவுரி * வி தார்ந்த மோகினி
படர்சடை யவனிட நீங்கு ருதவள் தருகோவே
குரைகடல் மறுகிட மூண்ட சூரக
ளணிகெட நெடுவரை சாய்ந்து தூளெழ
முடுகிட மயில்மிசை யூர்ந்து வேல்விடு முருகோனே
குலநறை மலரளி சூழ்ந்து லாவிய
மயிலையி லுறைதரு சேந்த சேவக
குகசர வணபவ வாய்ந்த தேவர்கள் பெருமாளே. (கூ)

தனதன தத்தன தானு தானன
தனதன தத்தன தானு தானன
தனதன தத்தன தானு தானன தனதான.

614. வருமயி லொத்தவ ரீவார் மாமுக
மதியென வைத்தவர் தாவா காமிகள்
வரிசையின் முற்றிய வாகா ரமியல் மடமாதர்
மயல்வினி லுற்றவர் மோகா வாரிதி
அதனிடை புக்கவ ராளாய் நீணிதி
மருவிய லுத்தர்கள் † மாடா மாமதி மிக ‡ மூழ்கி
மருபர உத்தம வேளே சீருறை
அறுமுக நற்றவ சீலா கூருடை
அயிலுறை கைத்தல சீலா பூரண பரயோக
சரவண வெற்றிவி னோதா மாமணி
தருமா வைக்கடி § நீதா வாமணி
மயிலுறை உத்தம நாதா நீடருள் பெறுவேனோ
திரிரிரி தித்திதி தீதி தீதிதி
தொகுதொகு தொகுதொகு தோதோ தோதிகு
திமிதிமி தித்திமி ஜேஜே தீதிமி தொதிதீதோ

* விதார்ந்த - விது ஆர்ந்த, சந்திரனைத்தரித்த. † மாடா-மாடுபோல் உழைக்குந்தன்மையில் ‡ மூழ்கி- மூழ்குகிறவன். § நீதாவா - நீதா அவா.

தெனவரி மத்தள மீதார் தேமுழ
திடுவென மிக்கியல் வேதா வேதொழு
திருநட மிட்டவர் காதே மூதிய குருபோதம்
உரைசெயு முத்தம வீரா நாரணி
உமையவ ளுத்தர பூர்வா காரணி
உறுசக ரட்சணி நீரா வாரணி தருசேயே
உயர்வா முற்றிய கோவே ஆரண
மறைமுடி வித்தக தேவே காரண
ஒருமயி லேப்பதி வாழ்வே தேவர்கள் பெருமாளே. (ம)

திருவான்மியூர்.

இது சென்னையிலிருந்து தென்கிழக்கே 8 மைல் தூலவிலிருக்கிறது.

தனதான தானதன தனதான தானதன
தனதான தானதன தனதான.

615. குசமாகி ஆருமலை மரைமாது னூலினிடை
குடிலான ஆல்வயிறு குழையூடே
குறிபோகு மீனவிழி மதிமாமு காருமலர்
குழல்கார *தானகுண மிலிமாதர்
புசவாசை யால்மனது னைநாடி டாதபடி
புலையேனு லாவிமிகு புணர்வாகிப்
புகழான பூமிமிசை மடிவா யிருதவகை
பொலிவான பாதமலர் அருள்வாயே
நிசநார ணுதிதிரு மருகாவு லாசமிகு
நிகழ்போத மானபர முருகோனே
நிதிஞான போதமா ணிருகாதி லேயுதவு
நிபுணுதி சாசரர்கள் குலகாலா
†திசைமாமு காழியரி மகவான்மு னோர்கள்பணி
சிவநாத ராலமயில் அமுதேசர்
திகழ்பால மாகமுற மணிமாட மேடையுயர்
திருவான்மி யூர்மருவு பெருமாளே.

---

*தானகுணம்-இரக்கம். †திசைமாமுகன், ஆழியரி எனப்பிரிக்க.

மாடம்பாக்கம்.

இது வெண்டலூர் ஸ்டேஷனிலிருந்து கிழக்கே 7 மைல் துலைவிலுள்ளது.

தானதந்தன தானதானன தானதந்தன தானதானன
தானதந்தன தானதானன தனதான.

616. தோடுறுங்*குழை யாலேகோல்வளை சூடுசெங்கைக ளாலேயாழ்தரு
கீதமென்குர லாலேதூமணி நகையாலே

தூமமென்குழ லாலேயூறிய தேனிலங்கித ழாலேயாலவி
லோசனங்களி னாலேசோபித அழகாலே

பாடகம்புனை தாளாலேமிக வீசுதண்டைய னீராலேவளர்
பாரகொங்கைக ளாலே †கோலிய விலைமாதர்

பாவகங்களி னாலேயான்மயல் மூழ்கிநின்றய ராதேநூபுர
பாதபங்கய மீதேயாள்வது கருதாயோ

‡நாடருஞ்சுடர் தானேவோதுசி வாகமங்களி னாலேபேதவ
நாததந்த்ரக லாமாபோதக வடிவாகி

நால்விதந்தரு வேதாவேதமும் நாடிநின்றதொர் மாயாதீதம
னோலயந்தரு நாதா ஆறிரு புயவேளே

§வாடயங்கிய வேலாலேபொரு சூர்கடிந்தருள் வீராமாயி
லேறுகந்தவி னோதாகூறென அரனார்முன்

வாசகம்பிற வாதோர்ஞானசு கோதயம்புகல் ||வாசாதேசிக
$மாடையம்பதி வாழ்வேதேவர்கள் பெருமாளே. (க)

திருப்போரூர்.

இது ஐயன்பேட்டைக்கு வடகிழக்கு 5 மைல் துலைவிலிருக்கிறது.

தனத்தா தானன தானா தானன
தனத்தா தானன தானா தானன
தனத்தா தானன தானா தானன தனதான.

617. ¶அனுத்தே னேர்மொழி யாலே மாமய
லுடைத்தார் போலவு மோர்நா ளானதி
லடுத்தே தூதுகள் நூறு றுனதும் விடுவார்கள்

---

*குழை - காது. † கோலிய - வளைத்த ‡ நாடருஞ்சுடர் — சிவபெருமான். § வாடயங்கிய - வாள் × தயங்கிய, ஒளிபொருந்திய. ||வாசாதேசிகன் - உபதேசகுரு $ மாடையம்பதி என்பது-மாடம் பாக்கம். ¶ அனு-அற்பம்.

அழைத்தே வீடினி லேதா னேகுவர்
நகைத்தே யோடிக ளாவார் காதலொ
டடுத்தே மாமுலை மீதே மார்புற அணைவார்பின்

குனித்தே பாகிலை ஈவார் பாதியில்
கடிப்பார் வாயிதழ் வாய்நீ ரானது
குடிப்பார் தேனென நாணு லீலைகள் புரிவார்கள்

குறித்தே மாமய லாலே நீள்பொருள்
பறிப்பா ராசைகள் சூழ்மா பாதக
குணத்தார் மாதர்கள் மே*லா சாவிட அருள்வாயே

வனத்தே வேடுவர் மாதா மோர்மினை
எடுத்தே தான்வர வேதான் யாவரும்
வியத்தே சூழவு மோர்வா ளால்வெனும் விறல்வீரா

மலர்த்தே ரேடையி லோர்மா வானதை
பிடித்தே நீள்கர † வாதா டாழியை
மனத்தா லேவிய மாமா வானவர் மருகோனே

சினத்தே சூரர்கள் போராய் மாளவு
மெடுத்தோர் வேல்விடு தீரா தாரணி
திருத்தோ ளாவிரு ‡ பாதா தாமரை முருகோனே

திருத்தேர் சூழ்மதி ளோரார் தூபிக
ளடுக்கார் மாளிகை யேநீ ளேருள
திருப்போ ரூருறை தேவா தேவர்கள் பெருமாளே. (௧)

தனத்தா தானதந்த தனத்தா தானதந்த
தனத்தா தானந்த தனதான.

618\. உருக்கார் வாளிகண்கள் பொருப்பார் வார்தனங்கள்
உகப்பார் வாலசந்த்ர னுதனூலாம்

உருச்சேர் நீண்மருங்குல் பணைத்தோ ளோதிகொண்ட
லுவப்பா மேல்விழுந்து திரிவோர்கள்

ஆசா-ஆசை. † வாதாடாழியை-வாதாட ஆழியை. ‡ பாததாமரை,

அருக்கா மாதர் தங்கள் வரைக்கே ஓடியின்ப
வலைக்கே பூணுநெஞ்சன் அதிபாவி
அசட்டால் மூடுகின்ற மசக்கால் மாயுமிந்த
அவத்தா வீனமின்றி அருள்வாயே
எருக்கார் தாளிதும்பை மருச்சேர் போதுகங்கை
யினைச்சூ டாதிநம்பர் புதல்வோனே
இருக்கா லேநினைந்து துதிப்பார் நாவினெஞ்சி
லிருப்பா யானைதங்கு மணிமார்பா
செருக்கா லேமிகுந்த கடற்சூர் மாளவென்ற
திறற்சேர் வேல்கைகொண்ட முருகோனே
தினைக்கோர் காவல்கொண்ட குறத்தேன் மாதுபங்க
திருப்போ ரூரமர்ந்த பெருமாளே. (உ)

தானதானன தானன தானதானன தானன
தானதானன தானன தனதான.

619\. சீருலாவிய வோதிம மானமாநடை மாமயில்
சேயசாயல்க லாமதி முகமானார்
தேனுலாவிய மாமொழி மேருநேரிள மாமுலை
சேலுலாவிய கூர்விழி குமிழ்நாசி
தாருலாவிய நீள்குழல் வேயளாவிய தோளியர்
சார்பிலேதிரி வேனைநின் அருளாலே
சாமவேதியர் வானவ ரோதிநாண்மலர் தூவிய
தாளில்வீழுகி னுதருள் புரிவாயே
காருலாவிய நீள்புன வேடர்மால்வரை மீதுறை
காவல்மாதினொ டாவல்செய் தணைவோனே
காணவாகம வேதபு ராணநூல்பல ஓதிய
காரணாகரு ணாகர முருகோனே
போருலாவிய சூரனை வாரிசேறெழ வேல்விடு
பூபசேவக மாமயில் மிசையோனே
போதன் மாதவன் மாதுமை பாதியாதியு மேதொழு
போரிமாநகர் மேவிய பெருமாளே. (௩)

தனனதானன தானன தனனதானன தானன
தனனதானன தானன தனதான.

620. திமிரமாமன மாமட மடமையேனிட ராணவ
திமிரமே யரி சூரிய திரிலோக
தினகராசிவ காரண பனகபூஷண ஆரண
சிவசுதாவரி நாரணன் மருகோனே
குமரிசாமளை மாதுமை அமலியாமளை பூரணி
குணகலாநிதி நாரணி தருகோவே
குருகுகாகும ரேசுர சரவணாசக ளேசுர
குறவர்மாமக ளாசைகொள் மணிநேசம்
பமரபாரப்ர பாருண படலதாரக மாசுக
† பசுரபாடன பாளித பகளேச
பசிதபாரண வாரண துவசவேகட மாமயில்
பரவுபாணித பாவல பரயோக
சமபராமத சாதல சமயமாற்று தேவத
சமயநாயக மாமயில் முதுவீர
சகலலோகமு மாசறு சகலவேதமு மேதொழு
சமரமாபுரி மேவிய பெருமாளே. (௪)

உத்தரமேரூர்.

இதில் ரயில்வே ஸ்டேஷன் இருக்கிறது.

தனனதனன தனதான தனனதனன தனதான
தனனதனன தனதான தனதான.

621. சுருதிமறைக ளிருநாலு திசையிலதிபர் முனிவோர்கள்
துகளிலிருடி எழுபேர்கள் சுடர்மூவர்
சொலவில்முடிவில் வெகுரூப ‡ பகுதிபுருடர் நவநாதர்
தொலைவிலுடுவி னுலகோர்கள் மறையோர்கள்
அரியசமய மொருகோடி அமரர் சரணர் சதகோடி
அரியுமயனு மொருகோடி இவர்கூடி

அரி-கொடுக்கின்ற † பசுரம்-பாசுரம் ‡ பகுதிபுருடர் பிரகிருதிபுருஷர்.

அறியவறிய அறியாத அடிகளறிய அடி
அறிவுளறியு மறிவூற அருள்வாயே
வரைகள் தவிடு பொடியாக நிருதர்பதியும் அழிவாக
மகரசலதி அளறுக முதுசூரும்
மடியவலகை நடமாட விஜயவனிதை மகிழ்வாக
மவுலிசிதறி இரைதேடி வருநாய்கள்
நரிகள்கொடிகள் பசியாற உதிரநதிக ளலைமோத
நமனும்வெருவி அடிபேண மயிலேறி
நளினவுபய கரவேலை முடுகுமுருக *வடமேரு
நகரியுறைபு மிமையோர்கள் பெருமாளே. (க)

தானதந்த தானதந்த தானதந்த தானதந்த
தானதந்த தானதந்த தனதான.

622. தோலெலும்பு சீநரம்பு பீளைதுன்ற கோழைபொங்கு
சோரிபிண்ட மாயுருண்டு வடிவான
தூலபங்க காயம்வம்பி லேசுமந்து நான்மெலிந்து
சோருமிந்த நோயகன்று துயராற
ஆலமுண்ட கோனகண்ட லோகமுண்ட மால்விரிஞ்ச
னாரணங்க ளாகமங்கள் புகழ்தாளும்
ஆனனங்கள் மூவிரண்டு மாறிரண்டு தோளுமங்கை
ஆடல்வென்றி வேலுமென்று நினைவேனோ
வாலசந்த்ர சூடிசந்த வேதமந்த்ர ரூபியம்பை
வாணி † பஞ்ச பாணிதந்த முருகோனே
மாயையைந்து வேதமைந்து பூதமைந்து நாதமைந்து
வாழ்பெருஞ்ச ராசாங்கள் உறைவோனே
வேலையன்பு கூரவந்த ஏகதந்த யானைகண்டு
வேடர்மங்கை ஓடியஞ்ச அணைவோனே
வீரமங்கை வாரிமங்கை பாரின்மங்கை மேவுகின்ற
மேருமங்கை ஆளவந்த பெருமாளே. (உ)

---

*வடமேருநகரி-உத்தரமேரூர். † பஞ்சபாணி-பார்வதிதேவி.

தானதத் தனதான தானதத் தனதான
தானதத் தனதான தனதான.

23. நீள்புயற் குழல்மாதர் பேரினிற் க்ருபையாகி
நேசமுற்றடியேனும் நெறிகேடாய்
நேமியிற் பொருள்தேடி ஓடியெய்த் தளம்வாடி
நீதியிற் சிலவாழ்வை நினையாதே
பாழினுக் கிரையாய நாமம்வைத் தொருகோடி
பாடலுற் றிடவேசெய் திடுமோச
பாவியைப் படிவாழ்வ னேயர்கட் குளதான
பார்வைசற் றருளோடு பணியாயோ
ஆழியிற் றுயில்வோனு மாமலர்ப் பிரமாவு
மாகமப் பொருளோனும் அனைவோரும்
ஆனமத் தகவோனும் ஞானமுற் றியல்வோரும்
ஆயிரத் திருநூறு மறையோரும்
வாழுமுத் தரமேரூர் மேவியற் புதமாக
வாகுசித் திரதோகை மயிலேறீ
மாறெனப் பொருசூர னீறெழப் பொரும்வேல
மான்மகட் குளனான பெருமாளே. (ரு)

தானதந்தன தத்தானத்தன
தானதந்தன தத்தானத்தன
தானதந்தன தத்தானத்தன தனதான.

24. மாதர்கொங்கையில் வித்தாரத்திரு
மார்பிலங்கிய முத்தாரத்தினில்
வாசமென்குழ லிற்சேலைப்பொரும் விழிவேலில்
மாமையொன்றும லர்த்தாள்வைப்பினில்
வாகுவஞ்சியில் மெய்த்தாமத்தினில்
வானிளம்பிறை யைப்போல்நெற்றியில் மயலாகி
ஆதரங்கொடு கெட்டேயிப்படி
ஆசையின்கட லுக்கேமெத்தவும்
ஆகிநின்றுத வித்தேநித்தலும் அலைவேனோ

ஆறிரண்டுப ணைத்தோ ளற்புத
ஆயிரங்கலை கத்தா மத்திப
ஞாயுமுன் றலை கிற்பே னுக்கருள் புரிவாயே

சாதனங்கொடு தத்தா மெத்தன
வேகடந்துபொய் பித்தா உத்தர
மேதெனும்படி தற்காய் நிற்பவர் சபையூடே

தாழ்வில்சுந்தர னைத்தா ஞெற்றிகொள்
நீதிதந்திர நற்சார் புற்றருள்
சாலநின்றுச மர்த்தா வெற்றிகொள் அரன்வாழ்வே

வேதமுங்கிரி யைச்சூழ் நித்தமும்
வேள்வியுட்புவி யிற்று பித்தருள்
வேர்விழும்படி செய்த்தோர் மெய்த்தமிழ் மறையோர்வாழ்

மேருமங்கையி லத்தா வித்தக
வேலொடும்படை குத்தா வொற்றிய
வேடர்மங்கைகொள் சித்தா பக்தர்கள் பெருமாளே. (ச)

மதுராந்தகம்.

இதில் ரயில்வே ஸ்டேஷன் இருக்கிறது.

தனதாந்த தத்த தன்தனத்தத்
தந்தனத் தனந்த தனதான.

625. குதிபாய்ந்தி ரத்தம் வடிதுளைத்தொக்
கிந்த்ரியக் குரம்பை விளைகூர் தூர்

குணபாண்ட முற்ற கிலமெனக்கைக்
கொண்டிளைத் தயர்ந்து சுழலாதே

உதிதாம்ப ரத்தை * உயிர்கெடப்பொற்
கிண்கிணிச் சதங்கை விதகீத

உபயாம்பு யப்பு ணையையிணிப்பற்
றுங்கருத் தைஎன்று தருவாயோ

கதைசார்ங்க கட்கம் வளையடற்சக்
ரந்தரித் துகொண்டல் மருகோனே

---

* உயிர்கெட - சத்துவம் நீங்க.

கருணைஞ்ச னக்க மலவிழிப்பொற்
பைம்புனக் கரும்பின் மணவாளா
மதனுந்த கர்க்கு மகவெனப்பத்
மந்தனிற் பிறந்த குமரேசா
மதுராந்த கத்து வடதிருச்சிற்
றம்பலத் தமர்ந்த பெருமாளே. (௧)

626. சயிலாங்க னைக்கு ருகியிடப்பக்
கங்கொடுத் தகம்பர் வெகுசாரி
சதிதாண்ட வத்தர் சடையிடத்துக்
கங்கைவைத் தகம்பர் உமைமாளச்
செயல்மாண்டு சித்த மவிழுநித்தத்
த்வம்பெறப் பகர்ந்த உபதேசம்
சிறியேன்த னக்கு முரைசெயிற்சற்
றுங்குருத் துவங்கு றையுமோதான்
அயில்வாங்கி எற்றி உததியிற் * கொக்
கன்றனைப் பிளந்து சுரர்வாழ
அகிலாண்ட முற்று நொடியினிற்சுற்
றுந்திறற் ப்ரசண்ட புயநீல
மயல்தாண்ட விட்டு முறைகுலப்பொற்
குன்றிடித் தசங்க்ய மகிமோதா
மதுராந்த கத்து வடதிருச்சிற்
றம்பலத் தமர்ந்த பெருமாளே. (௨)

தனதாந்தன தானதனந்தன
தனதாந்தன தானதனந்தன
தனதாந்தன தானதனந்தன தனதான.

627. மனைமாண்சுத ரானசுணங்கரு
மனம்வேந்திணை ஆனதனங்களு
மடிவேன்றனை ஈன அணங்குறு வம்பாதி

* கொக்கன் - மாமரமாகிய சூரன்.

மயமாம்பல வானகணங்குல
மெனப்ராந்தியும் யானெனதென்றற
வனவாம்பிர மாதகுணங்குறி — இன்பசார
இனவாம்பரி தான்யதனம்பதி
விடவேன்றெனை மோனதடம்பர
மிகுதாம்பதி காணகணங்கன — உம்பரேசா
இடவார்ந்தன சானுநயம்பெறு
கடகாங்கர சோணவிம்பர
இடமாங்கன தாலருளும்படி — என்றுதானே
தனதாந்தன தானதனந்தன
தெனதோங்கிட தோனதுனங்கிட
தெனவாம்பர மானநடம்பயில் — எம்பிரானே
தமதாஞ்சுத தாபரசங்கம
மெனவோம்புறு தாவனவம்படர்
தருதாம்பிர சேவித ரஞ்சித — உம்பர்வாழ்வே
முனவாம்பத முடிகவந்தன
முயல்வான்பிடி மாடிமையைங்கரர்
* மூகதாம்பின மேவுறுசம்ப்ரம — † சங்கணுறு
முககாம்பிர மோடமர்சம்பன
மதுராந்தக மாநகராந்திகழ்
‡ முருகாந்திர மோடமரும்பர்கள் — தம்பிரானே. (௩)

பேறைநகர்.

இது அச்சிறுபாக்கத்திலிருந்து வடக்கே 3 மைல் தூலவிலிருக்கிறது.

தானதன தானதந்த தானதன தானதந்த
தானதன தானதந்த தனதான.

628. நீலமயில் சேருமந்தி மாலிங்க ராகியந்த
காரமிக வேகிறைந்த — குழலாலும்
நீடுமதி ரேகவின்ப மாகியகலாபசந்த்ர
னேர்தருமு சாரவிந்த — மதனாலும்

* முகதா ஆம் பின்ன - எதிரில் தோற்றிய தம்பி. † சம் கண - அழகு செய்கின்ற கூட்டமாகிய. ‡ முருக அம் திரமொடு அமர் எனப்பிரிக்க.

ஆலினிக ரானவுந்தி யாலுமட வார்கள் தங்கள்
ஆசைவலை வீசுகெண்டை விழியாலும்
ஆரமணி பூணணிந்த மார்பின்முலை யாலுநெஞ்சு
ளாகிமயல் நாலுமுன்று திரிவேனோ
கோலவுரு வாயெழுந்து பாரதனை *யேயிடந்து
கூவிடுமு ராரிவிண்டு திருமார்பன்
கூடமுறை நீடுசெம்பொன் மா†மதலை யூடெழுந்த
கோபவரி நாரசிங்கன் மருகோனே
பீலிமயில் மீதுறைந்து சூரர்தமை யேசெயங்கொள்
பேர்பெரிய வேல்கொள் செங்கை முருகோனே
பேடைமட வோதிமங்கள் கூடிவிளை யாடுகின்ற
பேறைநகர் வாழவந்த பெருமாளே. (க)

திருவக்கரை.

இதுபுதுச்சேரி ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே 14 மைல் தூலைவிலுள்ளது.

தத்தன தத்தன தத்தன தத்தன
தத்தன தத்தன தத்தன தத்தன
தத்தன தத்தன தத்தன தத்தன தனதான.

629. பச்சிலை இட்டுமு கத்தைமி னுக்கிகள்
குத்திர வித்தைமி குத்தச மர்த்திகள்
பப்பர மட்டைகள் கைப்பொருள் பற்றிட நினைவோர்கள்
பத்திநி ரைத்தவ ளத்தர ளத்தினை
ஒத்தந கைப்பில்வி ழிப்பில்ம யக்கிகள்
பட்சமி குத்திட முக்கனி சர்க்கரை இதழூறல்
எச்சி லளிப்பவர் கச்சணி மெத்தையில்
இச்சக மெத்தவு ரைத்துந யத்தொடும்
எத்திய ழைத்து வணைத்தும யக்கிடு மடமாதர்
இச்சையி லிப்படி நித்தம னத்துயர்
பெற்றுல கத்தவர் சிச்சியெ னத்திரி
இத்தொழி லிக்குணம் விட்டிட நற்பதம் அருள்வாயே

இடந்து-இடம்விடப்பிளந்து. † மதலை-தூண்.

நச்சர விற்றுயில் பச்சைமு கிற்கரு
ணைக்கடல் பத்மம லர்த்திரு வைப்புணர்
நத்துத ரித்தக ரத்தர்தி ருத்துள வணிமார்பர்

நட்டந டுக்கட லிற்பெரு வெற்பினை
நட்டர வப்பணி சுற்றிம தித்தளம்
நத்தமு தத்தையெ டுப்பிய ளித்தவர் மருகோனே

கொச்சைமொ ழிச்சிக றுத்தவி ழிச்சிசி
றுத்தவி டைச்சிபெ ருத்தத னத்திகு
றத்தித னக்கும னப்பிரி யமுற்றிடு குமரேசா

கொத்தவிழ் பத்மம லர்ப்பழ னத்தொடு
குற்றம றக்கடி கைப்புனல் சுற்றிய
கொட்பள நற்றிரு வக்கரையுற்றுறை பெருமாளே. (க)

திருவாமாத்தூர்.

இது விழுப்புரம்ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே 3மைல்துலைவிலிருக்கிறது.

தனதனதான தானன தனதனதான தானன
தனதனதான தானன தனதான.

630. அடல்வடிவேல்கள் வாளிக ளவைவிடமோடல் நேர்படு
மயில்விழியாலு மாலெனு மதவேழத்

தளவியகோடு போல்வினை அளவளவான கூர்முலை
அதின்முகமூடு மாடையின் அழகாலும்

துடியிடையாலும் வாலர்கள் துயர்வுறமாய மாயொரு
துணிவுடனூடு மாதர்கள் துணையாகத்

தொழுதவர்பாத மோதியுன் வழிவழியானெ னுவுயர்
துலையலைமாறு போலுயிர் சுழல்வேனோ

அடவியினூடு வேடர்க ளரிவையொடாசை பேசியு
மடிதொழுதாடு மாண்மையு முடையோனே

அழகியதோளி ராறுடை அறுமுகவேளெ னுவினை
அறிவுடனோது மாதவர் பெருவாழ்வே

விடையெறுமீசர் நேசமு மிகநினைவார்கள் தீவினை
உகநெடிதோட மேலணை பவர்மூதூர்

விரைசெறிதோகை மாதர்கள் விருகூடனுடு மாதையில்
விறல்மயில்மீது மேவிய பெருமாளே. (க)

தந்ததத்தன தானதன தந்ததத்தன தானதன
தந்ததத்தன தானதன தனதான.

631. கண்கயற்பிணை மானேடுற உண்டெனக்கழை தோளானது
நன்*கமைக்கின மாமாமென மூலையான
கஞ்சமொத்தெழு கூர்மாமூலை குஞ்சரத்திரு கோடோடுற
விஞ்சுமைப்பொரு கார்கோதைகொ டுயர்காலன்
பெண்டனக்குள கோலாகல மின்றெடுத்தினை யோராவிகள்
†மண்பிடிப்பது போல்நீள்வடி வுடைமாதர்
பின்பொழித்திடு மாமாயையி லன்புவைத்தழி யாதேயுறு
கிஞ்சிலத்தனை தாள்பேணிட அருள்தாராய்
விண்டனக்குற வானேனுடல் கண்படைத்தவன் வேதாவொடு
விண்டுவித்தகன் வீழ்தாளினர் விடையேறி
‡வெந்தனத்துமை யாள்மேவிய சந்தனப்புய மாதீசுரர்
வெங்கயத்துரி யார்போர்வையர் மிகுவாழ்வே
தண்புடைப்பொழில் சூழ்மாதையில் நண்புவைத்தருள் தாராதல
மூங்கிளைத்திட வானீள்திசை ஒடுதாவித்
தண்டரக்கர்கள் கோகோவென விண்டிடத்தட மாமீமிசை
சண்டவிக்ரம வேலேவிய பெருமாளே. (உ)

தன்தனதானத் தானன தனதனதானத் தானன
தனதனதானத் தானன தனதான.

632. கருமுகில்போல்மட்டாகிய அளகிகள்தேனிற் பாகொடு
கனியமுதூறித்தேறிய மொழிமாதர்
கலவிகள்நேரொப் பாகிகள் மதனிகள்காமக் ரோதிகள்
கனதனபாரக் காரிகள் செயலோடே
பொருகயல்வாளைத் தாவிய விழியினர்சூறைக் காரிகள்
பொருளளவாசைப் பாடிகள் புவிமீதே

அமைமூங்கில். † மன்-மிக. ‡ வெம்-விருப்பம்.

பொதுவிகள்போகப் பாவிகள் வசமழிவேனுக் கோசருள்
புரிவதுதானெப் போதது புகல்வாயே
தருவடுதீரச் சூரர்கள் அவர்கிளைமாளத் தூளெழ
சமனிலையேறப் பாருடு கொடிவிழத்
தனதனதானத் தானன எனவிசைபாடிப் பேய்பல
தசையுணவேல்விட் டேவிய தனிவீரா
அரிதிருமால்சக் ராயுத னவனிளையாள்முத் தார்நகை
அழகுடையாள்மெய்ப் பாலுமை அருள்பாலா
அரவொடுபூளைத் தார்மதி அறுகொடுவேணிச் சூடிய
அழகர்தென்மாதைக் கேயுறை பெருமாளே. (ரு)

தான தனதன தனதனதனதன
தான தனதன தனதனதனதன
தான தனதன தனதனதனதன தனதான.

633. கால முகிலென நினைவுகொ டுருவிலி
காதி அமர்பொரு கணையென வடுவகிர்
காண முதுவென இளைஞர்கள் *விதவிடு கயலாலும்
கான மமர்குழ லரிவையர் சிலுகொடு
காசி னளவொரு தலையணு மனதினர்
காம மிவர்சில கபடிகள் படிறுசொல் கலையாலும்
சால மயல்கொடு புளகித கனதன
பார முறவணை முருகவிழ் மலரணை
சாயல் தனின்மிகு கலவியி லழிவுறும் அடியேனை
சாதி குலமுறு படியினின் முழுகிய
தாழ்வ தறவிடை தருவன வெளியுயர்
தான தடைவது தவமிக நினைவது தருவாயே
வேலை தனில்விழி துயில்பவ னரவணை
வேயி னிசையது நிரைதனி லருள்பவன்
வீர துரகத நரபதி வனிதையர் காமீதே

* விதவிடல்-விசேடித்துரைத்தல்.

வேறு வடிவுகொ டுறிவெணெய் தயிரது
வேடை கெடவமு தருளிய பொழுதினில்
வீசு கயிறுட னடிபடு சிறியவன் அதிகோட

வாலி யுடனெழு மாமர நிசிசரன்
வாகு முடியொரு பதுகர மிருபது
மாள வொருசரம் விடுமொரு கரியவன் மருகோனே

வாச முறுமலர் விசிறிய பரிமள
மாதை நகர்தனி லுறையுமொ ராறுமுக
வானி லடியவ ரிடர்கெட அருளிய பெருமாளே (௪)

தச்சூர்.

இது விழுப்புரத்திலிருந்து 4 மைல் தூலவிலிருக்கிறது.

தத்தாதனத்தான தாத்தத் தனந்த
தத்தாதனத்தான தாத்தத் தனந்த
தத்தாதனத்தான தாத்தத் தனந்த தனதான.

634. அச்சா யிறுக்காணி காட்டிக் கடைந்த
செப்பார் முலைக்கோடு நீட்டிச் சாங்க
ளைப்போல் விழிக்கூர்மை நோக்கிக் குழைந்து உறவாடி

அத்தானெ னக்காசை கூட்டித் தயங்க
வைத்தா யெனப்பேசி மூக்கைச் சொறிந்து
அக்கா லொருக்கால மேக்கற் றிருந்தி ரிலையாசை

வைச்சா யெடுப்பான பேச்சுக் கிடங்க
ளொப்பா ருனக்கீடு பார்க்கிற் கடம்பன்
மட்டோ எனப்பாரின் மூர்க்கத் தனங்கள் அதனாலே

மைப்பா கெனக்கூறி வீட்டிற் கொணர்ந்து
புற்பாய லிற்காலம் வீற்றுக் கலந்து
வைப்பார் தமக்காசை யாற்பித் தளைந்து திரிவேனோ

எச்சாய் மருட்பாடு மேற்பட் டிருந்த
பிச்சா சருக்கோதி கோட்டைக் கிலங்க
மிக்கா நினைப்போர்கள் வீக்கிற் பொருந்தி நிலையாதே

எட்டா மெழுத்தேழை யேற்குப் பகர்ந்த
முத்தா வனுப்பான போர்க்குட் டொடங்கி
எக்கா லுமக்காத சூர்க்கொத் தரிந்த சினவேல

தச்சா மயிற்சேவ லாக்கிப் பிளந்த
சித்தா குறப்பாவை தாட்குட் படிந்து
சக்கா கியப்பேடை யாட்குட் புகுந்து மணமாகி

தப்பா மலிப்பூர்வ மேற்குத் தரங்கள்
தெற்கா குமிப்பாரில் கீர்த்திக் கிசைந்த
தச்சூர் வடக்காகு மார்க்கத் தமர்ந்த பெருமாளே. (க

பொது.

தனதன தானன தனன தான தனதன
தனதன தானன தனன தான தனதன
தனதன தானன தனன தான தனதன தனதான.

635. மருவுமு கிலான வளக நீடு வலையிலே
புருவவி லாலான விழிக ளாடு மலையிலே
மதிமுக மாலான இணைய கோடு முலையிலே தடுமாறி

*வதனம தாயாடை நொடிவ தான இடையிலே
விதவித மாபேடை அனமு†நாண நடையிலே
வனிதய ராமோடை உறவ தான கடையிலே மயலாகி

கருவினி லாபாச சனன மான நரகிலே
உருவெடு யானீச மனைய ரீன விரகிலே
கவலையி னுசை வடிமை மான மாயிலே உழல்வேனோ

கலைமக ளாதார கருணை யான நிலையிலே
நிலையக மாதார வருண ஞான வழியிலே
கவிபுனை ஆதார திறமை பானு மொழியிலே அருள்வாயே

*வதனமதாயாடை - முகம்பார்க்கக்கூடிய வேலைப்பாடமைந்த ஜருகைச்சேலை. † நாணநடை - நாண் அ நடை, நாணுகின்ற அந்த நடை.

009671

பிரமனை ஓதாத வகையி லொரு சிறையிலே
இடுபவ னேதாத ரிவனு *மோரு நிறையிலே
பிரணவ மேதாத குருவ தாரு முறையிலே புகல்வோனே

பிணையுற மாமோடி குறவி ஈயு தினையிலே
துணைபெற நீ ரோடி அருவி பாயு சுனையிலே
பெருமையி லேகூடி மருவு பூய நினைவிலே வரவேணும்

தருமமு மேசில மலியு மாயர் மாபினே
ரொருமனு வா†ஏல மிலகு சேயர் கயமுனே
தயைபுரி கோபால தனத மாயர் மருகனே மயில்வீரா

தகுமென வேநீடி வளரு மாறு முககுகா
மிகுவடி யாராடி மகிமை கூறு மாகரா
தமிழுட னேகோடி வரைகடோறு முறைபவாபெருமாளே.

தானான தனன தான
தானான தனன தான
தானான தனன தான தனதான.

636. ஓயாத பிறவி யாய
மாயாத கடல தாய
ஓரோரு சனன மாய கருவூடே

ஓடோடி அலைவ தான
கேடாவல் பெறுவ தான
ஓராத முகுட னான எனையாள

சேயாகி மயூர மேற
நாயேனெ னடிமை மாற
தேமாரு கருணை கூற வரவேணும்

தேவாதி அமரர் வாழ
மூவாதி முனிவர் சூழ
தீயாதி அசுரர் தாழ முனிவோனே

*ஓரும் - உணரும். †ஏல அம - உகந்த அழகு.

தாயான மதுரை மீன
ளாயாட லமுத பான
தாராடு சமர ஞான குமரேசா

தானான பிரமனான
வானான வடிவு மான
தாதாவெ னொருவ னான பானான

கோயாத வகுல ஞானி
வேயூதி முகில மேனி
கோபால சகல தானி மருகோனே

கோலாக லவம யூர
வேலாயு தவவ தார
கூ*றூறு வரைய கார பெருமாளே. (உ)

காப்பு உள்பட ஆகச் செய்யுள் 642.

குமாரக் கடவுள் திருவடிகளே சரணம்.

திருப்புகழ் முதற்பாகம்

முற்றிற்று.

ஆறுவரையகாரம் - ஆறுபடை வீடு.